بسم الله الرحمن الرحيم

74

# சான்றோர் பாடசாலை

## பாகம் 2

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் رحمه الله
அவர்கள் எழுதிய அஸ்ஸுஹ்து என்ற நூலிலிருந்து...
இமாம் ஹசன் பஸரி رحمه الله அவர்களின் ஐம்பது கூற்றுகளின்
தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் விரிவுரை


அரபியில்
**இமாம் அஹ்மது இப்னு ஹன்பல்**
(ரஹிமஹுல்லாஹ்)

பொருள் மற்றும் கருத்துரை
**உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்**
குர்ஆன், சுன்னா பணியாளர்




ABOUT THIS BOOK

Name of the Book : **SAANTROR PAADA SAALAI**
**(**Saying of Pious Predecessor **- Imam Hasan Basari** Rahimahullah**) Part -2**

Author : Imam Ahmad Ibnu Hanbal (Rahimahullah)

Translator : Mufti **A. Omar Sheriff** Qasimi

Proof Readers : Abdul Qadir Rabbani, Imamudeen Hasani,
: Mansoor Ahamed Umari, Z.Saifuddin

Language : Tamil

Edition : 1st Edition Feb, 2023

No. of Copies : 2000

Total Pages : 448

Price : **Rs. 200/-**

Reference Code : DH-TML-2074

Printed by : Patel Graphics, Chennai - 06.

Published by:

DARUL HUDA

QUALITY ISLAMIC BOOK PUBLISHERS

# 211 (102), 1st Floor, Linghi Street, Mannady, Chennai-600001.

Phone : +91-44-25247866,
Mobile: +91-98401 74121

darulhuda.chennai@gmail.com
www.darulhuda.net

# உள்ளே...


பதிப்புரை 6

நுழையும்முன்... 9

1. உண்மையில் பார்வை அற்றவர், வழிகாட்டி அற்றவர் யார்? 17
2. உண்மையான மார்க்க அறிஞர் யார்? 23
3. உண்மையான இறையச்சம் எது? 29
4. அல்லாஹ் மக்களை பயமுறுத்த அனுப்பும் அத்தாட்சி எது? 36
5. அல்லாஹ்வின் பக்கம் ஒதுங்குவது என்றால் என்ன? 46
6. கல்வி கற்க ஆர்வப்படுவதும், அதை கற்பிக்கிற பொறுப்பை சுமப்பதும்! 54
7. இறைக்கல்வியின் மகத்தான மேன்மை! 61
8. நேர்வழியில் நடக்கிற அறிஞருக்கு அல்லாஹ்வின் பாதுகாப்பு நிச்சயம் உண்டு! 66
9. சான்றோர் உணவு பழக்கம்! 72
10. தர்மத்தின் ஒழுக்கம்! 76
11. போட்டி, எதில் இருக்க வேண்டும்? 84
12. தோலை உருகச் செய்யும் நரக நெருப்பு! 100
13. பாவம், உண்மை முஃமினை வருத்தும்! 111
14. மரண நினைவின் நன்மையும் நீண்ட ஆசையின் விபரீதமும் 119
15. மரண செய்திகளும் அமல்களில் தீவிரம் காட்டுதலும்! 128
16. உபரியான நோன்பும் அதனால் கிடைக்கும் இறை நெருக்கமும் மனப்பக்குவமும்! 137

17. அன்பும் வெறுப்பும் மிதமாக இருக்க வேண்டும்! மிதமிஞ்சிய அன்பும் வெறுப்பும் அழிவில் தள்ளிவிடும்! 145
18. அன்பு யார் மீது, எவ்வளவு இருக்க வேண்டும்? 153
19. அவசியப்பட்டால் அளவோடு வெறுத்துக்கொள்! 164
20. அல்லாஹ்விற்காகவா, அல்லது மக்களுக்காகவா! 171
21. நரகத்தில் விலங்கு சங்கிலிகள் எதற்காக? 179
22. மரணத்தின் கோரக் காட்சி 193
23. படைத்தோனை வணங்காமல் கழிந்த இரவு கெட்ட இரவே 202
24. காசை கண்ணியப்படுத்தி அல்லாஹ்விடம் கண்ணியத்தை இழந்தோர்! 210
25. ஒவ்வொரு செயலும் ஒரு காரணத்திற்காகத்தான் 217
26. சுகபோக வாழ்க்கை வாழ்வதற்காக அல்ல செல்வம்!! 228
27. உண்மைக்கு உரைகல் ஆதாரமே தவிர பெரும்பான்மை அல்ல 234
28. உள்ளத்தை கேட்டு பேசு! 240
29. உன்னோடு எந்நேரமும் இருக்கும் வானவர்களை மறந்து விடாதே! மறுமையின் தயாரிப்பில் சோர்ந்து விடாதே! 246
30. நீ யாருக்காக அமல் செய்கிறாய்? 254
31. இறை வணக்கத்திற்காக வாழ்வோம்! 261
32. ஈமானுக்கான உரைகல் 269
33. வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்!! 280
34. ஆலிம்களின் அடையாளம் வழிபாடும் பேணுதலும் 289
35. சிந்தனை ஞானத்தின் திறவுகோல் 299
36. நல்லமல்களின் எல்லை இறுதி மூச்சு வரை 308
37. இங்கு தற்காலிக தங்குதல்தான்! நிரந்தரம் இல்லை! 317
38. நம்பிக்கையாளரும் நயவஞ்சகரும் 325
39. அறிவை விட மார்க்கமே மேலானது! 335

40. ஹலாலான உழைப்பே நிம்மதியான வாழ்க்கை! 351

41. தேவைக்கு அதிகமான எதுவும் ஆபத்தானதே! 362

42. செல்வம், ஆபத்துகள் நிறைந்தது! 372

43. நம்பிக்கையாளர் உலகத்திற்காக அலட்டிக் கொள்ள மாட்டார் 381

44. நயவஞ்சகனின் போலியான தோற்றத்தின் உண்மை நிலை 389

45. ஸஹாபாக்களின் சிறப்பும் தகுதியும் 399

46. பகட்டு அழுகை வேண்டாம் 407

47. சொல்லை விட செயலைக் கொண்டு உபதேசம் செய்யுங்கள்! 413

48. சிக்கனமான செலவே சீரான வாழ்க்கை! 419

49. நபித்தோழர்களின் ஈகை குணம்! 425

50. உண்மையாளனை நண்பனாக்கு! 435

# பதிப்புரை

பேரருளாளன் பேரன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...

கண்ணியத்திற்குரிய நபித்தோழர்களும் அவர்களை பின்பற்றிய தாபியீன்களும் சிறந்த முன்மாதிரி ஆவார்கள்; நாம் பின்பற்ற தகுந்த உயர்ந்த சான்றோர் ஆவார்கள். அந்த நல்லோர் தங்கள் வாழ்வை அல்லாஹ்வின் வணக்க வழிபாட்டிலும் மார்க்கப் பணிகளிலும் பிற மக்களுக்கு நன்மைகளை எடுத்துச் சொல்வதிலும் தீமைகளிலிருந்து அவர்களை தடுப்பதிலும் கழித்தனர். அல்லாஹ்விற்காகவே வாழ்ந்தனர். உலக மோகத்தை வெறுத்தனர். உலக இன்பத்தைத் துறந்தனர். எப்போதும் மறுமையை முன்னிறுத்தினர்.

இப்படிப்பட்ட நல்லோரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களின் உபதேசங்களையும் நபிமொழி நூல்கள் பலவற்றில் நாம் பார்ப்பது போன்று ‘ஆசார்’ آثار என்று குறிப்பிட்டு தனி நூல்களிலும் அவற்றை நாம் பார்க்கலாம்.

உள்ளத்தை மறுமை சிந்தனையிலும் உலக பற்றின்மையிலும் பண்படுத்துவதற்காக ‘الزهد’ ‘அஸ் ஸுஹ்து’ (உலக பற்றின்மை) என்று தலைப்பிட்டு பல நூல்களை நமது சான்றோர் எழுதியுள்ளனர். அவற்றில் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் அவர்கள் எழுதிய “அஸ்ஸுஹ்து” என்ற நூல் பிரபலமான ஒன்றாகும்.

அவர்களின் இந்நூலில் முன்னோர் பலரின் உபதேசங்கள் எழுதப்பட்டுள்ளன. அந்த வரிசையில் இமாம் ஹசன் பஸரி அவர்களின் பொன்மொழிகள் பலவற்றை இமாம் அஹ்மது அவர்கள் அதிகம் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றில் ஒவ்வொன்றும் குர்ஆன், ஹதீஸின் ஆழ்ந்த தத்துவங்களாக விளங்குகின்றன; உள்ளத்தை பண்படுத்துகின்றன; ஈமானை அதிகப்படுத்துகின்றன; முன்னோரின் தியாக வாழ்க்கையை நமக்கு நினைவூட்டுகின்றன; மறுமையின் பக்கம் நமது கவனத்தைத் திருப்புகின்றன; உலக மோகத்தை நமது உள்ளங்களை விட்டும் சுத்தப்படுத்துகின்றன. அல்லாஹ்வின் பக்கம் நமது ஆசையையும் ஆர்வத்தையும் அதிகப்படுத்துகின்றன.

இமாம் ஹசன் பஸரியை பொறுத்தவரை எல்லாத் தரப்பு அறிஞர்களும் அவர்களை மதிப்பார்கள். தஃப்சீர் (குர்ஆன் விரிவுரை), ஹதீஸ் (நபிமொழி), ஃபிக்ஹு (மார்க்கச் சட்டம்), உசூல் (சட்ட அடிப்படைகள்), தாரீக் (வரலாறு), நஹ்வு (இலக்கணம்), பலாகா (இலக்கியம்), ஷிஅர் (கவிதை) என பல கலைகளிலும் தேர்ச்சி பெற்ற ஒரு மாபெரும் அறிஞர் ஆவார் அவர்.

இமாம் அவர்கள் நபித்தோழர்களிடம் கல்வி படித்தவர். அன்னை உம்மு ஸலமா அவர்களிடம் வளர்ந்தவர்.

இவர்களின் கருத்துக்களும் உபதேசங்களும் நல்லோரிடம் பெரும் மதிப்புமிக்கவை, அறிஞர்களிடம் மிகவும் போற்றப்படுபவை ஆகும்.

இமாம் அஹ்மது உடைய “அஸ்ஸுஹ்து” என்ற நூலில் பதிவு செய்யப்பட்ட இமாம் ஹசன் பஸரியின் கூற்றுகளில் அறுபதை மொழிபெயர்த்து, அவற்றுக்கு சுருக்கமான விளக்கங்களை எழுதி சான்றோர் பாடசாலை முதல் பாகத்தை வெளியிட்டோம். அல்ஹம்து லில்லாஹ்.

முதல் பாகத்தை படித்த என் தந்தை அப்துஸ் ஸலாம் அவர்கள், அதை பிறருக்கு அதிகம் அன்பளிப்பு செய்து வந்தார்கள். தாமும் அதை அதிகம் படிக்கிற வழக்கம் உள்ளவர்களாக இருந்தார்கள். மேலும் இது போன்ற நூல்களை அதிகம் எழுதும்படியும், இதன் அடுத்த பாகத்தை விரைவாக எழுதும்படியும் என்னை அதிகம் ஆர்வமூட்டி வந்தார்கள். அந்த அடிப்படையில் இமாம் ஹஸன் அவர்களின் கூற்றுகளில் அடுத்த ஐம்பதை மொழிபெயர்த்து அவற்றுக்கு விளக்கம் எழுதி இந்த இரண்டாம் பாகத்தை வெளியிடுகிறோம்.

ஆனால், இன்று இந்த இரண்டாம் பாகம் வருகிறபோது அவர்கள் இவ்வுலகில் எங்களோடு இல்லை. அவர்களின் மண்ணறை வாழ்க்கையையும், மறுமை வாழ்க்கையையும் அல்லாஹ் சிறப்பாக்குவானாக! அவர்களை மன்னித்து நல்லோரில் சேர்த்துவைப்பானாக! இந்த நூலின் நன்மைகளில் அவர்களையும் சேர்த்துக்கொள்வானாக! தாருல்ஹுதாவிற்கு உதவிய, உதவக்கூடிய எல்லா சகோதர சகோதரிகளுக்கும் தாருல்ஹுதாவின் மூலம் நடைபெறுகிற நல்ல பணிகளின் நன்மைகளின் முழுமையான பங்குகளை வழங்கி அருள்புரிவானாக! நிச்சயமாக அவன் மகா கருணையாளன், மகா மன்னிப்பாளன். ஆமீன்.

இந்நூலில் ஏதும் பிழைகள் இருப்பின் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்! அடுத்த பதிப்பில் திருத்தம் செய்து வெளியிடுகிறோம் இன் ஷா அல்லாஹ்! அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

இந்நூலை அல்லாஹ் ஏற்பானாக! இதன் மூலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் காலங்காலமாக பயன்பெறும்படி செய்வானாக!! ஆமீன். தாருல்ஹுதாவின் தஅவா பணிகளும் எழுத்துப் பணிகளும் தொடர்ந்து மறுமை நாள் வரை நடைபெற அல்லாஹ் உதவி செய்வானாக! தாருல் ஹுதாவையும் அதன் பணியாளர்களையும் அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக! எங்கள் குறைகளை மன்னித்து அருள் புரிவானாக! அல்லாஹ்வின் மார்க்கத்தை பரப்புவதற்கும் கற்பிப்பதற்கும் உதவக்கூடிய சகோதர சகோதரிகள் எல்லோருக்கும் அல்லாஹ் சிறந்த கூலியை ஈருலகிலும் வழங்குவானாக! அவர்களுக்கு உயர்வான பிரதிபலனை வழங்குவானாக! அவர்களுக்கு சொர்க்கத்தை தருவானாக! நிச்சயமாக அவன் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன், கண்ணியமானவன், மகா ஞானமிக்கவன் ஆவான்.

**அ. உமர் ஷரீஃப்**
**குர்ஆன், சுன்னா பணியாளர் - தாருல் ஹுதா**

# நுழையும்முன்...

நமது மார்க்கத்தில் குர்ஆன், சுன்னாவிலிருந்து அதிகமான விஷயங்களை நாம் படிக்கின்றோம். ஈமான், தக்வா, ஃபிக்ஹ் இன்னும் இதுபோன்ற பல கல்விகளைக் கற்கின்றோம். ஆனால் நாம் படித்த, கேட்ட விஷயங்களிலிருந்து சிறிதளவே பின்பற்றுகின்றோம். ஆர்வத்துடன் அதிகமான விஷயங்களை படிக்கின்ற, கேட்கின்ற நாம் அதை பின்பற்றுவதில் மிகவும் அலட்சியம் செய்கின்றோம்.

நாம் பின்பற்ற முடியாத விஷயங்களை அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கு கற்றுத்தரவில்லை. அப்படியென்றால் குறை நம்மிடம்தான் இருக்கிறது.

ஏனெனில், அந்த விஷயங்களை தமது வாழ்க்கையில் முழுமையாகப் பின்பற்றி நடந்தவர்களை நாம் முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ளவில்லை. அப்படிப்பட்ட நல்லவர்களுடன் நாம் வாழவும் இல்லை.

ஒவ்வொன்றுக்கும் ஒரு வழிகாட்டி தேவைப்படுகிறது. ஒரு விஷயத்தை சொல்லிப் புரியவைப்பதைவிட செய்துகாட்டி புரியவைப்பது மிக இலகுவானதாகும்.

கண்ணியமிக்க ஸஹாபாக்களுக்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் புறத்திலிருந்து சொல்வழியான வழிகாட்டுதல், செயல்வழியான வழிகாட்டுதல் இரண்டும் ஒரு சேரக்கிடைத்தன.

எனவே, மார்க்கத்தை நூறு சதவிகிதம் பின்பற்றுவது அந்த நபித் தோழர்களுக்கு மிக எளிதாக இருந்தது.

அதன் பிறகு, கண்ணியத்திற்குரிய தாபியீன்களுக்கு ஸஹாபாக்கள் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். எதை ஸஹாபாக்களிடமிருந்து சொல்வழியாக தாபியீன்கள் கேட்டார்களோ அதை ஸஹாபாக்களிடம் செயல் வடிவிலும் பார்த்தார்கள். எனவே, தங்கள் வாழ்க்கையில் மார்க்கத்தை முழுமையாகப் பின்பற்றி நடப்பது தாபியீன்களுக்கு மிக எளிதாக இருந்தது.

அதன் பிறகு காலங்கள் செல்லச் செல்ல மார்க்கத்தை சொல்பவர்கள் அவர்களுடைய வாழ்க்கையில் அதன் படி செயல்படுவது குறைந்து

கொண்டே வர, அவர்களுடைய சொற்களைக் கேட்கின்ற மக்களிடத்திலும் அதை பின்பற்றி வாழக்கூடிய உறுதியும் உற்சாகமும் குறைந்து கொண்டே வந்தது.

எனவேதான், நமது சிறப்பிற்குரிய முன்னோரைப் பற்றி அவர்கள் இந்த தீனின்படி எப்படி வாழ்ந்தார்கள்; அல்லாஹ்வையும் மறுமையையும் எப்படி புரிந்துணர்ந்தார்கள் என்பதை அதிகமாக நாம் படிக்கும்போதும் பேசும்போதும் கண்டிப்பாக இந்த குர்ஆனும் சுன்னாவும் பின்பற்றப்படுவதற்கு மிக இலகுவானதே, நாமும் அதை பின்பற்ற முடியும், நமக்கும் இந்த மார்க்கம் மிக எளிதானதுதான் என்ற உணர்வு நமக்குள் வரும். அத்துடன் அவர்களைப் போன்று நாமும் முடிந்தளவு நமது வாழ்க்கையை மார்க்கத்திற்கு ஏற்ப மாற்றுவதும் இலகுவாக இருக்கும்.

இன்று நமக்கும் அந்த சிறப்பிற்குரிய முன்னோர்களுக்கும் இடையில் ஒரு பெரும் இடைவெளி இருக்கின்றது.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!

நாம் அன்றாடம் செய்தித் தாள்களைப் படிப்பதற்கும் அல்லது செய்திகளைக் கேட்பதற்கும் அல்லது வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கும் கேட்பதற்கும் எந்த அளவு நேரங்களை ஒதுக்குகின்றோம்!

ஆனால், நமது சிறந்த முன்னோர்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு நாம் இதுவரை எவ்வளவு நேரத்தை செலவழித்து இருக்கின்றோம்.

எத்தனை ஸஹாபாக்களைப் பற்றி, எத்தனை தாபியீன்களைப் பற்றி, எத்தனை தபவுத் தாபியீன்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும் என நம்மிடம் கேட்கப்பட்டால் நாம் என்ன பதில் கூறமுடியும்?

அதிகமான நல்ல கல்விகளையும் நமது சான்றோரின் வரலாறு களையும் கொண்டு நமது அறிவை நிரப்புவதற்குப் பதிலாக குப்பைக் கூளங்களையும் அற்ப உலக விஷயங்களையும் கொண்டுதான் நமது சிந்தனைகளை நிரப்பி இருக்கின்றோம். அதன் காரணத்தினால்தான் இந்த மார்க்கம் நமது உள்ளத்தில் இறங்காமல் இருக்கிறது.

நல்லவர்களைப் பற்றிய அறிவு, சான்றோர்களைப் பற்றிய சிந்தனை நமது உள்ளத்தில் இருந்திருக்குமேயானால் குர்ஆனின் வசனங்கள் நமக்கு ஓதிக் காட்டப்படும்போது நபி ﷺ அவர்களின் பொன்மொழிகள் நமக்கு சொல்லிக் காட்டப்படும்போது அது நமது உள்ளத்தை பண்படுத்தியிருக்கும்; நமது வாழ்க்கையை மாற்றியிருக்கும்.

ஆனால், நாம் நமது உள்ளத்தில் வைத்திருப்பதோ அல்லாஹ்வின் எதிரிகளை; பாவிகளை; அல்லாஹ்வால் சபிக்கப்பட்டவர்களை; அல்லாஹ்வின் மார்க்கத்தை விட்டு வெகுதூரம் விலகியவர்களைத் தான். அவர்களைப் பற்றி நாம் அறிந்திருப்பது நல்லவர்களைப் பற்றி நாம் அறிந்திருப்பதைவிட அதிகமாக இருக்கிறது.

நல்லவர்களைப் பற்றிய அறிவும் அவர்களின் வரலாறுகளைப் படிக்கும்போது நமக்குள் ஏற்படக்கூடிய நல்ல உணர்வும் அதிகமாகும்போதுதான் குர்ஆன், ஹதீஸ்கள் நமக்குள் நல்ல மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் உண்டாக்கும், எப்படி உழப்பட்ட விளைநிலத்தில் பெய்யக்கூடிய மழை நல்ல விளைச்சலை உண்டாக்குகிறதோ அதுபோன்று...

நல்லவர்களைப் பற்றிக் கேட்கும்போதும் அவர்களின் வரலாறுகளைப் படிக்கும்போதும் அவர்களில் ஒருவரைப் போன்று நாமும் ஆகவேண்டுமே என்ற நல்ல உணர்வு நமக்குள் ஏற்படும்.

அதன் பிறகு, திருகுர்ஆனை நாம் ஓதினால், ஹதீஸ்களை படித்தால் அவை உள்ளங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும். அந்த மாற்றங்கள் செயல் வடிவத்திலும் வரும்.

எனவே, இன்றைய காலகட்டத்தில் அந்த நல்லவர்களான சான்றோர்களைப் பற்றி நாம் அதிகம் அதிகம் தெரிந்து கொள்வது மிக அவசியம்.

அந்த வரிசையில் சிறந்த நல்லோர்களில் ஒருவரான, எல்லோராலும் அறியப்பட்ட மார்க்க மேதையான இமாம் ஹசன் அல்பஸரி ﵀ அவர்களைப் பற்றி நாம் படிக்க இருக்கின்றோம்.

இமாம் அவர்கள் நபித்தோழர்களின் காலத்தில் அதாவது கலீஃபா உமர் ﵁ அவர்களின் ஆட்சியின் இறுதி காலத்தில் (ஆட்சியின் முடிவு இரண்டாண்டு காலம் இருக்கும் நிலையில்) பிறந்த ஓர் அறிஞர்.

இவருடைய தந்தை இராக் உடைய பகுதியிலிருந்து அடிமையாக மதினாவுக்கு கொண்டு வரப்பட்டவர்.

அவர் மதினாவில் ஓர் அன்சாரி குலப் பெண்ணைத் திருமணம் செய்கிறார். அந்த இருவருக்கும் பிறந்தவர்தான் இமாம் ஹசன் அல்பஸரி ﵀ ஆவார்.

இமாம் அவர்களின் தாயார் அன்னை உம்மு ஸலமா ﵂ அவர்களிடம் பணிப்பெண்ணாக இருந்தார்கள். பல நேரம் அந்தத் தாய் தன் எஜமானியின் வேலை நிமித்தமாக வெளியே செல்லும்போது கைக்குழந்தையான இமாம்

அவர்கள் அழுவார்கள். அந்த நேரத்தில் அன்னை உம்மு ஸலமா ﵂ அவர்கள் தமது மடியைக் கொடுத்து அக்குழந்தையின் அழுகையை நிறுத்துவார்கள்.

சில சமயம், அன்னை உம்மு ஸலமா ﵂ அவர்கள் இமாம் அவர்களை மூத்த ஸஹாபாக்களிடம் பணிவிடைக்காக அனுப்பி வைப்பார்கள். அப்போது அந்த மூத்த ஸஹாபிகள் இமாம் அவர்களுக்காக துஆ செய்வார்கள். கலீஃபா உமர் ﵁ அவர்களின் நாவினாலும் இமாமவர்கள் துஆவைப் பெற்றார்கள்.

ஒரு நாள் பணிவிடை செய்து கொண்டிருந்த சிறிய குழந்தையான ஹசன் பஸரியைப் பார்த்து, உமர் ﵁ அவர்கள், யா அல்லாஹ்! இவருக்கு கல்வி ஞானத்தை வழங்குவாயாக! மக்களிடத்தில் இவரை விருப்பமானவராக ஆக்குவாயாக! என துஆ செய்வார்கள்.

கலீஃபா உமர் ﵁ அவர்களின் இந்தப் பிரார்த்தனை இமாம் அவர்களின் வாழ்க்கையில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திய தெனில், பிற்காலத்தில் மார்க்க அறிஞர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடியாகத் திகழும் அளவிற்கு அல்லாஹு தஆலா இவருடைய விஷயத்தில் அந்த பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான்.

இவ்வாறு, இமாம் அவர்கள் அதிகமாக ஸஹாபாக்களின் அரவணைப் பிலேயே வாழ்ந்திருக்கிறார்கள். வாலிபத்தின் ஒரு பெரும் பகுதியை ஜிஹாதில் கழித்தார்கள். அதன் பிறகுதான் மார்க்கக் கல்வியைக் கற்பதிலும் அதைத் தேடுவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டார்கள்.

இவர்களுடைய காலத்தில் மார்க்கம் சம்பந்தமான அனைத்து விஷயங்களிலும் இவர்களுக்கு நிகராக வேறு யாருமில்லை என்று அன்றைய அறிஞர்களால் போற்றப்படக்கூடிய அளவிற்கும் மேலும் இவர்களிடத்தில் மாணவராகச் சேர்ந்து கல்வி கற்பதை அன்றைய அறிஞர்கள் விரும்பக்கூடிய அளவிற்கும் அல்லாஹு தஆலா இவர்களை உயர்த்தினான்.

கண்ணியத்திற்குரிய ஸஹாபாக்களுக்கு இவர்கள் ஆற்றிய பணிவிடையும் ஸஹாபாக்கள் இவர்களுக்கு செய்த துஆவும் இவர்களை இந்த அந்தஸ்திற்கு உயர்த்தியது.

இவர்களின் கல்வி ஞானத்தையும் இறையச்சத்தையும் மறுமை பயத்தையும் பற்றற்ற வாழ்க்கையையும் அன்றைய மார்க்க அறிஞர்களும் மன்னர்களும் பாராட்டிக் கூறியதை வரலாற்று நூல்களில் நாம் காண முடிகிறது.

இமாம் முஹம்மது இப்னு ஸஅத் ﵀ கூறுகிறார்: “இமாம் ஹசன் பஸரி

﵀ அவர்கள் அனைத்து கலைகளையும் கற்று நன்கு தேர்ச்சி பெற்ற ஓர் அறிஞராகவும் மிக உயர்ந்தவராகவும் மார்க்க சட்டத் துறையின் வல்லுநராகவும் மிக அழகிய தோற்றமுடையவராகவும் இருந்தார்."

தாபியீன்களில் பலர் கூறுகிறார்கள்: "நாங்கள் நபித்தோழர்களுக்கு இணையாக இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களைத் தவிர வேறு ஒருவரையும் பார்த்ததில்லை."

தாபியீன்களில் மிகப்பெரும் கல்விமானாகிய அபூ கதாதா ﵀ அவர்கள் சொல்கிறார்கள்: "மக்களே! இந்த அறிஞரை நீங்கள் விட்டுவிடாதீர்கள். இந்த அறிஞரோடு எப்போதும் இருங்கள். இவரை விட வேறு எவரையும் உமர் ﵁ அவர்களின் அறிவுக்கு நிகராக இருப்பதை நான் பார்த்ததில்லை."

நபி ﷺ அவர்களின் பணியாளரான அனஸ் இப்னு மாலிக் ﵁ அவர்களின் மிக விசேஷமான மாணவர்தான் இமாம் அவர்கள்.

அனஸ் இப்னு மாலிக் ﵁ அவர்களின் இறுதி காலத்தில் மார்க்க விஷயமாக சந்தேகம் கேட்டு அவர்களிடத்தில் மக்கள் வந்தால் "நீங்கள் ஹசன் பஸரியிடம் சென்று கேளுங்கள், அவர் நிறைய விஷயங்களை மனனம் செய்து வைத்திருக்கிறார், வயது முதிர்வின் காரணமாக பல விஷயங்களை நான் மறந்திருக்கலாம். எனவே நீங்கள் அவரிடத்தில் செல்லுங்கள்" என்று கூறுவார்கள்.

தாபியீன்களில் ஒருவர் சொல்கிறார்: "இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் மறுமையைப் பற்றி எங்களிடம் பேசினால் அந்த மறுமையை நேராகப் பார்த்து வந்தவரைப் போன்று அவருடைய பேச்சு இருக்கும்."

இன்று, பேசுபவர்களுக்கும் அந்த உணர்வு வருவதில்லை, கேட்பவர்களுக்கும் அதைப் பற்றிய பயம் ஏற்படுவதில்லை.

ஆனால், இமாம் அவர்கள் மறுமையைப் பற்றிப் பேசும்போது அங்கே இருக்கக்கூடியவர்களின் உள்ளங்கள் அச்சத்தால் நடுங்கியதை வரலாறுகளில் படிக்கின்றோம்.

தாபியீன்களில் இமாம் ஸயீது இப்னு முஸய்யிப், உர்வா, காசிம் ﵏ போன்றோர் மிகப்பெரிய அறிஞர்களாவர். இமாம் அவர்களைப் பற்றி இந்த தாபியீன்கள் கூறுகின்றார்கள்: "இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களைப் போன்று ஒருவரை நாங்கள் பார்த்ததில்லை. இவர்

நபித்தோழர்களின் காலத்தில் வாழ்ந்திருந்து இவருடைய வயதும் நபித்தோழர்களுடைய வயதும் சமமாக இருந்திருக்குமானால் கல்வி விஷயத்தில் ஹசன் பஸரியை முந்தி அவர்கள் பேசியிருக்க மாட்டார்கள்.”

இராக் உடைய கவர்னர்களில் ஒருவர் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களைப் பற்றி அவருடைய மாணவர்களில் ஒருவரிடம் பஸராவைச் சேர்ந்த இமாம் ஹசன் பஸரி அவர்களின் சிறப்பைப் பற்றி கூறுங்களேன் என்றார். அம்மாணவர், அமீர் அவர்களே! அல்லாஹ் உங்களை சீர்திருத்தம் செய்யட்டும். கண்டிப்பாக நான் அவரைப் பற்றி சொல்கின்றேன்.

“நான் அவருக்கு மிக நெருக்கமான மாணவர்களில் ஒருவன். அவருடைய சபையில் எப்போதும் அமர்ந்திருப்பேன். மற்றவர்களை விட அவரை நான் நன்கு அறிந்தவன். அவருடைய வெளிரங்கப் பேச்சு எப்படி இருக்குமோ அப்படித்தான் அவரின் உள்ரங்கமும் இருந்தது. அவருடைய சொல் எப்படியோ அதன்படிதான் அவரின் செயல்கள் இருக்கும். ஒரு விஷயத்தை மிகத் தெளிவாக, துல்லியமாக செய்து முடிப்பவர். மக்களுக்கு அவர் ஒரு விஷயத்தை ஏவினால் மக்களைவிட அவர்தான் அந்த விஷயத்தை விரைந்து செயல்படுத்துபவராக இருப்பார். மக்களை ஒரு விஷயத்திலிருந்து தடுத்தால் மக்களைவிட அவர்தான் அந்த விஷயத்தைவிட்டு முதலில் விலகுபவராக இருப்பார். மக்களைவிட்டு எப்போதும் ஒதுங்கி, அவர்களின் பக்கம் தேவையாகாமல் இருப்பார். ஆனால், மக்களோ இமாம் அவர்களின் பக்கம் தேவையுள்ளவர்களாக இருந்தனர்.”

இவ்வாறு அந்த மாணவர் கூறியபோது, போதும்! போதும்! இத்தகைய ஒரு மனிதர் ஒரு கூட்டத்திலிருக்கும்போது அந்தக் கூட்டத்தினர் வழிகெட மாட்டார்கள் என்று அமீர் கூறினார்.

இமாம் அஸ்வத் ﵀ அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் துஆ செய்ததை நாங்கள் பார்த்தோம். அல்லாஹ்வே! ஹசன் பஸரி உடைய உலகப் பற்றின்மையை எனக்குத் தா! அல்லாஹ்வே! முஹம்மது இப்னு சிரீன் உடைய பேணுதலை எனக்குத் தா! அல்லாஹ்வே! ஆமிர் இப்னு அப்து கைஸ் உடைய இபாதத்தை எனக்குத் தா! அல்லாஹ்வே! ஸயீது இப்னு முஸய்யிப் உடைய அறிவு ஞானத்தை எனக்குத் தா!

அல்லாஹ்வே! முதர்ரிப் இப்னு சிஹ்ஹி உடைய இறை நினைவை எனக்குத் தா!

இவ்வாறு அந்த மனிதர் கேட்டபோது இமாம் அஸ்வதும் அவருடன் இருந்தவர்களும் கூறினார்கள்: “இவருடைய இந்த துஆவில் எந்தெந்த அறிஞர்களுடன் என்னென்ன சிறப்புகளைப் பற்றி இணைத்துச் சொன்னாரோ அந்த எல்லா சிறப்பு அம்சங்களும் இமாம் ஹசன் பஸரியிடம் முழுமையாக இருப்பதை நாங்கள் பார்த்தோம்.”

இமாம் அவர்களின் மாணவர்களில் ஒருவர் சொல்கிறார்: “இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் ஒவ்வொரு மாதமும் அய்யாமுல் பீழ்” என்று சொல்லக்கூடிய மூன்று நாட்களிலும் இஸ்லாமிய மாதங்களில் அல்அஷ்ஹுருல் ஹுரும் என்று சொல்லக்கூடிய புனித நான்கு மாதங்களிலும் ஒவ்வொரு வாரம் திங்கள் மற்றும் வியாழக்கிழமைகளிலும் நோன்பு நோற்பதை வழமையாக்கிக் கொண்டிருந்தார்கள்.

இதிலிருந்து, இமாம் அவர்கள் தமது வாழ்க்கையில் பெரும் பகுதி நோன்பு நோற்றிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

இமாம் ஹசன் பஸரியைப் பற்றி அறிஞர் அல்கமா ﵀ அவர்கள் கூறுகிறார்கள்: “அதிகமாக கவலையில் இருந்த ஒரு மனிதரை நாங்கள் ஹசன் பஸரியைவிட வேறு எவரையும் பார்த்ததில்லை. அவரை நாங்கள் எப்போது பார்த்தாலும் ஏதோ பெரிய முஸீபத்திலிருந்து இப்போதுதான் திரும்பி வந்தவரைப் போன்று அவருடைய கவலை முகத்தில் தெரியும்.”

எனவேதான் அக்காலத்தில் இவர்களின் சபையில் அறிஞர்களும் மன்னர்களும் மந்திரிகளும் அமர்ந்து கல்வி பயின்று இருக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புகளைப் பெற்ற சான்றோரான இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களுடைய அறிவுரைகளையும் விளக்கவுரைகளையும் ஞானக் கருத்துக்களையும் இனி வரக்கூடிய பக்கங்களில் நாம் படிப்போம்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் அந்த சான்றோர்களின் ஞானத்தையும் கல்வியையும் விளங்கச் செய்வானாக!

அதன்படி அமல் செய்யக்கூடிய நேர்வழியையும் நற்பாக்கியத்தையும் தந்தருள்வானாக! ஆமீன்.

• • •

بسم الله الرحمن الرحيم

# أَخْبَارُ الْـحَسَنِ بْنِ أَبِي الْـحَسَنِ ﵀

## இமாம் ஹசன் இப்னு அபில் ஹசன் ﵀ அவர்களின் கூற்றுகள்

சான்றோர் பாடசாலை அமர்வு 1, கூற்று 1485

## உண்மையில் பார்வை அற்றவர், வழிகாட்டி அற்றவர் யார்?

عَنْ ثَابِتٍ الْبُنَانِيِّ قَالَ كُنْتُ عِنْدَ الْـحَسَنِ ﵀ فَقَامَ إِلَيْهِ سَائِلٌ ضَرِيرُ الْبَصَرِ فَقَالَ تَصَدَّقُوا عَلَىٰ مَنْ لَا قَائِدَ لَهُ يَقُودُهُ وَلَا بَصَرَ يَهْدِيهِ فَقَالَ الْـحَسَنُ ذَاكَ صَاحِبُ هٰذِهِ الدَّارِ وَأَشَارَ بِهِ إِلَىٰ جَارِهِ خَلْفَهُ يَعْنِي عَبْدَ اللهِ بْنَ زِيَادٍ مَا كَانَ مِنْ جَمِيعِ حَشَمِهِ قَائِدٌ يَقُودُهُ إِلَىٰ خَيْرٍ وَلَا يُشِيرُ عَلَيْهِ بِهِ وَلَا كَانَ مِنْ قِبَلِ نَفْسِهِ لَهُ بَصَرٌ يُبْصِرُ بِهِ وَيَنْتَفِعُ بِهِ

ஸாபித் அல்புனானி ﵀ அறிவிக்கிறார்: நான் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம் இருந்தேன். அப்போது, கண்தெரியாத யாசகம் கேட்கின்ற ஒருவர் இமாம் ஹசனை நோக்கி எழுந்து இவ்வாறு கூறினார்: தனக்கு வழிகாண்பித்து அழைத்து செல்பவர் இல்லாத, இன்னும், பாதையை காட்டுகின்ற கண்பார்வையும் இல்லாத ஒருவருக்கு நீங்கள் தர்மம் செய்து உதவுங்கள்! அதற்கு இமாம் ஹசன் கூறினார்கள்: அப்படிப்பட்டவர் இந்த மாளிகையில் உள்ளவர்தான். இப்படி கூறும்போது இமாம் அவர்கள் தனக்கு பின்னால் தனது அண்டை வீட்டாராக இருந்த அப்துல்லாஹ் இப்னு சியாதை நோக்கி சாடை செய்தார்கள். (இப்னு சியாத் அப்போது பஸ்ரா நகரத்தின் ஆளுநராக இருந்தார்.) அவருடைய (இப்னு சியாதுடைய) சபையோரில் நன்மையின் பக்கம் அவரை அழைத்து செல்கின்ற ஒருவரும் அவருக்கு இல்லை. இன்னும், நன்மையை அவருக்கு சுட்டிக் காண்பித்து அதற்கு ஆலோசனை கூறும் ஒருவரும் அவருக்கு இல்லை. அவருக்குள் அகப்பார்வை இருக்கின்றதா என்றால் அதுவும் இல்லை. அப்படி இருந்திருந்தால் அவர் அதைக் கொண்டு (நன்மை, தீமையை பிரித்துப்) பார்த்திருப்பார்; அதன் மூலம் நற்பலன் அடைந்திருப்பார்.

**விளக்கம்:** அல்லாஹ் இமாம் ஹசனுக்கு அருள் புரியட்டும்.

அவர்களின் கவலைதான் என்ன!?

அவர்கள் சதா எதைப் பற்றி சிந்தித்தார்கள்!?

அவர்கள் எந்த நேரத்திலும் மார்க்கத்தையும் மறுமையையும் நினைவு கூர்ந்துகொண்டே இருந்தார்கள். மக்களுக்கு அவ்விரண்டையும் நினைவூட்டிக்கொண்டே இருந்தார்கள்.

கண் தெரியாத ஒரு நபர் தனது உடல் சார்ந்த பலவீனத்தை சபையில் கூற, இமாம் அவர்கள் உடனே உடல் சார்ந்த குறை உண்மையில் அது ஒரு குறை அல்ல. உண்மையான குறை, உண்மையான பலவீனம் உள்ளம் குறையுள்ளதாக இருப்பதுதான் என்று அங்கு சபையோருக்கு புரிய வைக்கிறார்கள்.

உண்மையான குருடன் புறக்கண் தெரியாதவன் அல்ல. உண்மையான குருடன் அகக்கண் இல்லாதவன்தான்.

புறக்கண் இல்லை என்றால் இவ்வுலகில் உள்ள பாதை இன்னும் பொருள்கள் தெரியாது. அகக்கண் தெரியவில்லை என்றால் மனிதனுக்கு மறுமையின் பாதை தெரியாது. அவனால் நன்மை தீமையை பிரித்தறிய முடியாது. அவனால் பாவத்தை விட்டு விலக முடியாது. அவனால் இறையச்சத்தின் பாதையில் பயணம் செய்ய இயலாது. அவனால் உலக மோகத்தை விட்டு விடுதலை பெற முடியாது. அவனால் நீதமாக, நேர்மையாக, உண்மையாக நடந்துகொள்ள முடியாது.

ஒருவனுக்கு கண் பார்வை இல்லை என்றால் அவனுக்கு இவ்வுலகில் வாழ்வது சிரமமாக இருக்கும். நினைத்த இடங்களுக்கு உடனே செல்ல முடியாது. ஏன் சுய தேவையை நிறைவேற்றுவது கூட அவனுக்கு சிரமமாகவே இருக்கும். அவன் நடந்து செல்லும்போது அவனை அழைத்து செல்பவர் இல்லை என்றால் வழியில் அவன் அநேக இன்னல்களை சந்திக்க வேண்டி வரும்.

அப்படித்தான் ஒருவருக்கு அகப்பார்வை. அதாவது, இறை அச்சம், மார்க்கக் கல்வி, மறுமை பயம் இல்லை என்றால் அவரால் இந்த உலகில் நேரிய பாதையில் நடக்க முடியாது. சத்திய வழியில் அவரால் பயணிக்க முடியாது. உலகத்தின் செல்வம், பதவி, அற்ப ஆசைகளை அடிப்படையாக வைத்தே அவனது அசைவும் அமைதியும் இருக்கும்.

கண் தெரியாத நபருக்கு ஒரு வழிகாட்டி கண்டிப்பாக தேவை. அதை விட

ஓர் அதிகாரிக்கு, ஓர் அரசருக்கு, ஓர் ஆளுநருக்கு உண்மையான மார்க்க வழிகாட்டி மிக தேவை.

அந்த வழிகாட்டி அவரை சரி செய்வார் அவர் கோணலாக சென்றால்.

அவரை ஒழுங்குபடுத்துவார் அவர் ஒழுங்கற்று நடந்தால்.

அவரை எச்சரிப்பார் அவர் மக்களுக்கு அநீதி இழைத்தால்.

அவருக்கு மறுமையையும் அதன் விசாரணையையும் நினைவூட்டுவார் அவர் உலக மோகத்தில் மூழ்கும்போது.

அவருக்கு நீதத்தை கற்பிப்பார் அவர் மக்கள் மீது அநீதி இழைக்கும்போது.

அவருக்கு அல்லாஹ்வின் பிடியை பற்றி பயமுறுத்துவார் அவர் அல்லாஹ்வின் அடியார்கள் மீது கடுமை காட்டும்போது, அல்லது அவர்களின் உரிமைகள் விஷயத்தில் அலட்சியம் செய்யும்போது.

அவருக்கு பணிவையும் அடக்கத்தையும் நினைவூட்டுவார் அவர் பதவி இன்னும் அதிகார பெருமையில் விழுந்து ஆணவம் கொள்ளும்போது.

மாட மாளிகைகளை கட்டுவதிலும் அற்ப உலக இன்பங்களிலும் அவர் ஆர்வம் காட்டும்போது அவருக்கு அவர் சொர்க்கத்தையும் அதன் முடிவற்ற இன்பங்களையும் நினைவூட்டி, நல்லமல்கள் இன்னும் நல்லறங்கள் பக்கம் வழிகாட்டுவார்.

ஆம், இவ்வுலகில் நல்ல மன்னர்கள், உயர்வான அரசர்கள், நேர்மையான ஆளுநர்கள், நீதமான அதிகாரிகள், சிறந்த நீதிபதிகள் பலர் வந்து சென்றுள்ளனர். அவர்கள் எல்லோரிடமும் இருந்த ஒரு கூட்டுப் பண்பு என்னவென்றால் அவர்களுக்கு நல்ல நண்பர்கள், நல்ல மந்திரிகள், நல்ல ஆலோசகர்கள், நல்ல வழிகாட்டிகள் இருந்தார்கள்.

அந்த வழிகாட்டிகளின் உபதேசங்களை விட்டும் அவர்கள் ஒருபோதும் தேவையற்றவர்களாக ஆகவில்லை. தமக்கு அறிவுரை கூறுவோரை சபையில் நெருக்கமாக அவர்கள் வைத்திருந்தார்கள். தமக்கு அடியார்கள் விஷயத்தில் நேர்மையையும் நீதத்தையும் சத்தியத்தையும் போதிக்கின்ற உண்மையான ஆசிரியர்களையும் அறிஞர்களையும் தம்முடன் வைத்திருந்தார்கள். அவர்கள் செய்கின்ற உபதேசங்களை, நல்வழிகாட்டல்களை ஏற்று அதன் படி ஆட்சி செய்தார்கள். அத்துடன் அந்த ஆட்சியாளர்களுக்குள்ளும் மனசாட்சி, இறை பயம், தக்வா இருந்தது. நேரிய, சீரிய இயற்கை சுபாவம் இருந்தது. நல்ல முன்னோரின் சிறந்த வழித்தோன்றல்களாக இருந்தார்கள்.

இத்தகைய நற்பேறுகளை பெறுவதுதான் உண்மையில் இவ்வுலகில் பிறந்த பலனை அடையப்பெறுவதாகும்.

செல்வம் இருந்து என்ன பலன் தான தர்மம் இல்லை என்றால்!

ஆட்சி இருந்து என்ன பலன் நீதி நேர்மை இல்லை என்றால்!

அதிகாரம் இருந்து என்ன பலன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தினால்! அல்லது பாதிக்கப்பட்டவருக்கு உதவவில்லை என்றால்! அல்லது குற்றவாளியை தடுக்கவில்லை என்றால்! எல்லை மீறியவர்களை தண்டிக்கவில்லை என்றால்!

செல்வாக்கு இருந்து என்ன பலன் அது பிறருக்கு பயன்படவில்லை என்றால்!

வசதி வாய்ப்பு இருந்து என்ன பலன் ஏழை எளியோருக்கு அதன் மூலம் நன்மை செய்யவில்லை என்றால்!

மனிதன் வாழ்ந்துதான் என்ன பலன் அவனால் அவனுக்கும் நன்மை இல்லை, பிறருக்கும் நன்மை இல்லை என்றால்!

ஆம்! ஒருவர், தான் குருடராக இருப்பதைப் பற்றி வருந்த வேண்டாம்! காரணம் அவர் மறுமையிலும் குருடராக இருக்க மாட்டார். உலக வாழ்க்கை சொற்பமானது. பல்லாயிரம் ஆண்டுகளை முழுங்கிவிட்ட இந்த உலகத்தில் நாம் வாழ்வதோ சில தசாப்தங்கள்தான்.

ஒருவர் ஏழையாக இருப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். காரணம் அவர் மறுமையிலும் ஏழையாக இருக்க மாட்டார்.

ஒருவர் நோய் நொடியில், வறுமையில், நெருக்கடியான வாழ்க்கையில் இருப்பதைப் பற்றி சஞ்சலப்பட வேண்டாம். காரணம் மறுமையில் சொர்க்க வாழ்க்கை கிடைக்கப்பெற்றால் அங்கு இன்பமோ இன்பம், சுகமோ சுகம், வசதியோ வசதி, கணக்கற்ற வர்ணிக்க முடியாத செல்வ செழிப்பு, ஆடம்பரத்தின் உச்சம், இப்படியான இன்பங்களை அவர் அனுபவிக்கப் போகிறார். பிறகு ஏன் முடிவுறும் வாழ்க்கையின் சோதனைகளைக் கண்டு மனம் தளர வேண்டும்!

இவ்வுலகில் தனது மறுமையை நாசமாக்கிக் கொண்டவன்தான் கவலைப்பட வேண்டும்!

இவ்வுலகில் மூழ்கி அல்லாஹ்வின் மார்க்கத்தை மறந்தவன்தான் கவலைப்பட வேண்டும்!

மறுமையையும் விசாரணை நாளையும் மறந்து விட்டு, அல்லாஹ்வின்

சட்டங்களை புறக்கணித்து வாழ்பவன்தான் கவலைப்பட வேண்டும்!

நல்லமல்களை சேகரிக்காமல் ஹராமான செல்வத்தை சேகரித்து வைத்திருப்பவன்தான் கவலைப்பட வேண்டும்!

அடியார்களுக்கு மத்தியில் நீதி செலுத்தி, உரிமையாளருக்கு உரிமைகளை பெற்றுக் கொடுத்து, அநீதி இழைக்கப்பட்டவருக்கு உதவிக்கரம் நீட்டி, அநீதி இழைத்தவனை தண்டித்து, குற்றவாளிகளை கண்டித்து, தண்டித்து ஆட்சி செய் என்று அல்லாஹ் கொடுத்த ஆட்சியை பாழாக்கி மனம்போன போக்கில் ஆட்சி செய்பவனை விட ஒரு குருடன் மேலானவன். குருடனுக்கு பிறவியில் கண்கள் இல்லை. இவனுக்கோ ஆட்சி அதிகாரம் எல்லாம் இருந்தும் நல்லறிவு கூறுவோர் இல்லை. அவனை எச்சரிக்கும் மனசாட்சி அவனுக்குள் இல்லை. இது எவ்வளவு பெரிய கைசேதம்!!

இமாம் அவர்கள் இந்த நிகழ்வில் நமக்கு புரியவைக்க விரும்புவது இதைத்தான்!!

உடல் குறைகள் இவ்வுலகத்தோடு முடிந்து விடும்! ஆன்மாவில் குறைகள் இருந்தால் அது மறுமையில் நீண்ட நெடிய முடிவற்ற வாழ்க்கையில் பெரும் நஷ்டத்தை உண்டாக்கி விடும்.

தனது உடல் ஊனத்தை நினைத்து கவலைப்படுவதை விட்டு விடு மனிதனே! உனது அமல்களில், உனது குணங்களில், உனது கொடுக்கல் வாங்கலில் உள்ள குறைகளை நினைத்து கவலை கொள்! நாளை மறுமை நாளில் அல்லாஹ்வின் சமூகத்தில் இவை உன்னை தலைகுனிய வைத்துவிடும்! உனது நன்மைகளை எல்லாம் நீ இழக்கும்படி செய்து விடும்! பிறர் பாவத்தை எல்லாம் நீ தலையில் சுமக்கும்படி செய்துவிடும்!

அல்லாஹ் பாதுகாப்பானாக!

இமாம் அவர்களின் இந்தக் கூற்று ஆட்சி அதிகாரம் கிடைக்கப் பெற்றவர்களுக்கு, வசதி வாய்ப்பு கிடைக்கப் பெற்றவர்களுக்கு, பதவியும் செல்வாக்கும் கிடைக்கப் பெற்றவர்களுக்கு மிகப் பெரிய அறிவுரையாகும். அதே நேரத்தில் பொதுவாக எல்லோருக்கும் ஒரு நல்லுபதேசமாகும்.

வெளிரங்கத்தைப் பார்க்காதே! உள்ரங்கத்தைப் பார்! தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடாதே! குணத்தைப் பார்! வெளிப்படையான பேச்சை கேட்டு மயங்கி விடாதே! செயலைப் பார்! ஒரு மனிதனின் குலத்தை, நிறத்தை, உடலமைப்பை பார்க்காதே! அவனுக்கு அவற்றில் என்ன உரிமை இருக்கிறது? அவனின்

கல்வியைப் பார்! அவனின் பண்புகளைப் பார்! அவனின் ஒழுக்கத்தைப் பார்! அவனின் நற்குணங்களைப் பார்! அவனின் நல்லமல்களைப் பார்! அப்படியே நீ உன்னை மறந்துவிடாதே! உனது அமல்களை மறந்துவிடாதே! உனது மறுமையை வீணாக்கி விடாதே! உனது சொர்க்கத்தை இந்த உலகத்தை விட்டு நீ பிரிவதற்கு முன்பே தேடிக்கொள்! அதற்கான ஈமானையும் அமல்களையும் நற்குணங்களையும் தேடிக்கொள்!

அல்லாஹ்வே! எங்களுக்கு சத்தியத்தை கற்பிக்கும் மனசாட்சியை தா! எங்கள் உள்ளங்களில் ஒளியைத் தா! எங்களுக்கு நல்லறிவு கூறும் நண்பர்களைத் தா! எங்களுக்கு நல்வழிகாட்டும் அறிஞர்களைத் தா! எங்களுக்கு இறை அச்சத்தை எடுத்துக் கூறும் ஞானிகளைத் தா! உன் பக்கம் எங்கள் பாதையை மாற்றி விடு! எங்கள் தேடலை மறுமை வெற்றியாக ஆக்கிவிடு! எங்கள் செயல்கள், குணங்கள் கெடுவதை விட்டும் எங்களை பாதுகாத்துக் கொள்! ஆமீன்!

• • •

**சான்றோர் பாடசாலை அமர்வு 2, கூற்று 1516**

## உண்மையான மார்க்க அறிஞர் யார்?

عَنْ عِمْرَانَ الْقَصِيرِ قَالَ جَاءَ رَجُلٌ إِلَى الْـحَسَنِ ﵀ فَسَأَلَهُ عَنْ مَسَائِلَ فَأَجَابَهُ فَقَالَ الرَّجُلُ يَا أَبَا سَعِيدٍ إِنَّ الْفُقَهَاءَ يَقُولُونَ كَذَا وَكَذَا فَقَالَ لَهُ الْـحَسَنُ وَهَلْ رَأَيْتَ بِعَيْنِكَ فَقِيهًا إِنَّمَا الْفَقِيهُ الزَّاهِدُ فِي الدُّنْيَا الرَّاغِبُ فِي الْآخِرَةِ الْبَصِيرُ بِذَنْبِهِ الْمُدَاوِمُ عَلَى عِبَادَةِ رَبِّهِ

இம்ரானுல் கஸீர் அறிவிக்கிறார்: ஒரு மனிதர் இமாம் ஹசன் ﵀ அவர்களிடம் வந்து சில சட்டங்களைப் பற்றி கேள்வி கேட்டார். அவருக்கு இமாம் அவர்கள் பதில் கூறினார்கள். அதற்கு அந்த மனிதர் கூறினார்: அபூ ஸயீது அவர்களே! நிச்சயமாக ஃபகீஹ் - மார்க்க சட்ட அறிஞர்கள் இவ்வாறு, இவ்வாறு கூறுகிறார்களே! அதற்கு இமாம் ஹசன் அவர்கள் அவரிடம் கூறினார்கள்: நீ உனது கண்ணால் ஃபகீஹ் - மார்க்க சட்ட அறிஞரை பார்த்திருக்கிறாயா? நிச்சயமாக மார்க்க சட்ட அறிஞர் யாரென்றால் அவர் இந்த உலக வாழ்க்கையில் பற்றில்லாமல் இருப்பவர், மறுமை வாழ்க்கையில் ஆர்வம் உள்ளவர், தனது பாவங்களை உற்று நோக்கக் கூடியவர், தனது இறைவனை வணங்குவதில் முழுமையாக நிரந்தரமாக ஈடுபட்டிருப்பவர் ஆவார்.

**விளக்கம்:** இமாம் ஹசன் ﵀ அவர்களின் நிகழ்வுகளும் கூற்றுகளும் மிகவும் வித்தியாசமானவை ஆகும். பொதுவாக மனிதர்கள் ஒரு கண்ணோட்டத்தில் ஒரு செய்தியை பார்த்தால் இமாம் அவர்கள் அதே செய்தியை வேறு ஒரு கண்ணோட்டத்தில் பார்ப்பார்கள். அதுதான் அந்த செய்தியின் உள்ரங்கமாக, உண்மை நிலையாக இருக்கும்.

பொதுவாக மார்க்க கல்விகளை பலர் கற்கிறார்கள். மார்க்க கல்வியை கற்கின்ற எல்லோருக்கும் ஒரே நோக்கம் இருப்பதில்லை. இந்த கல்வியை

கற்பவர்கள் ஒவ்வொருவரும் ஒரு நோக்கத்திற்காக இந்த கல்வியை தேர்ந்தெடுக்கின்றார்கள்.

யார் இந்த கல்வியை மறுமைக்காக தேர்ந்தெடுத்தாரோ அவருக்குதான் இந்த கல்வி நற்பலன் கொடுக்கும். யார் இந்த கல்வியை அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக தேடுவாரோ அவருக்கு அவரில் இந்த கல்வி நல்ல மாற்றத்தை கொடுக்கும்.

நானும் ஓர் அறிஞன் என்று கூறுவதற்காக ஒருவர் இந்த கல்வியை கற்கிறார். இன்னொருவரோ நான் ஒரு பிரசங்கியாக ஆக வேண்டும் என்பதற்காக கற்கிறார். இன்னொருவரோ நல்ல பதவிகள் கிடைக்க வேண்டும், நீதி மன்றங்களில் சட்டத் துறையில் வேலை கிடைக்க வேண்டும் என்று கற்கிறார்.

இப்படியாக மார்க்க கல்வியை மறுமையின் நோக்கமில்லாமல் உலகாதாயத்திற்காக கற்பவர் தான் கற்ற கல்வியை விலை பேசுவார். சட்டங்களை திரித்துக் கூறி மக்களை திருப்திப்படுத்தி அவர்களின் நன்மதிப்பை பெற முயற்சிப்பார். பிறகு அவர்களிடமிருந்து உலக செல்வத்தை அடைய ஆசைப்படுவார்.

ஆகவே, ஹராமை - தடுக்கப்பட்ட ஒன்றை ஹலால் - அனுமதிக்கப்பட்டதாக மாற்ற முயற்சிப்பார். அடியான் மீது அல்லாஹ் கடமையாக்கியதை நீக்கிவிட முயற்சிப்பார். ஆட்சியாளர்களுக்கு ஏற்ப தீர்ப்புகளை வளைத்து எழுதுவார்.

செல்வந்தருக்கு ஏற்ப சட்டங்களை முன் பின் ஆக்குவார். ஹராமை செய்ய தந்திரங்களை சொல்லித் தருவார். கடமையை தவிர்க்க கள்ளத்தனமான யோசனைகளை கற்பித்து கொடுப்பார்.

இத்தகைய ஆலிம்களுக்கு மறுமையைப் பற்றி கவலை இருக்காது. இவர்களின் உள்ளங்களில் அல்லாஹ்வின் பயம் இருக்காது. சத்தியத்தின் மீது உறுதியாக இவர்கள் இருக்க மாட்டார்கள். கடமைகளை பாழாக்கி சலுகைகளை தூக்கிப் பிடிப்பார்கள். ஹராமின் வாசல்களை மக்களுக்கு அகல திறந்து விடுவார்கள். வணக்க வழிபாடுகளின் மதிப்பை, முக்கியத்துவத்தை குறைத்து விடுவார்கள்.

அல்லாஹ் கருணையாளன், மன்னிப்பாளன் என்று கூறி மக்களுக்கு பாவத்திலும் மார்க்கத்தை மீறுவதிலும் துணிவூட்டுவார்கள். அல்லாஹ்வின் தண்டனையைப் பற்றி பேசினால் மக்களை நரகத்தை கூறி வெறுப்படைய

வைக்காதீர்கள் என்று கூறுவார்கள். அல்லாஹ்வின் பிடியை கூறி மக்களை அச்சமூட்டினால் மக்களை ஏன் அல்லாஹ்வை விட்டு துரத்துகிறீர்கள்; அல்லாஹ்வின் அன்பை கூறி மக்களை நெருக்கமாக்குங்கள் என்று கூறுவார்கள்.

இந்த உண்மையான கூற்றை பொய்யான நோக்கத்திற்காக பயன்படுத்துவார்கள். அதாவது அல்லாஹ்வின் அன்பை பேசி அல்லாஹ்வின் தண்டனையை மறக்க செய்வார்கள். பாவம் செய்யும்போது உள்ளத்தில் வருகின்ற பயத்தை போக்கி, அல்லாஹ் மன்னித்துவிடுவான் என்று பாவத்தின் மீது துணிவு கொள்ள வைப்பார்கள்.

மக்களுக்கு வணக்க வழிபாடுகளை சடங்குகளாக ஆக்கிவிடுவார்கள். வணக்க வழிபாடுகளில் உள்ள உயிரோட்டத்தை ஆன்மிக உணர்வுகளை அடியோடு வேரறுத்து விடுவார்கள். சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் செய்வதில் மக்களுக்கு பக்தி பரவசத்தை உண்டாக்குவார்கள். சடங்குகளை செய்வதில் மக்களுக்கு அலாதியான அக்கறையை உருவாக்குவார்கள்.

உண்மையான முன்னோரின் பாதையை மறைத்துவிட்டு வழிகேடர்களின் அல்லது கல்வியறிவு இல்லாத மூதாதையர்களின் பாதையை அலங்கரித்து காட்டுவார்கள். இல்லாத வணக்கத்திற்கு ஆயிரம் ஹதீஸ்களை கூறுவார்கள். அவர்கள் கூறுகின்ற அத்தனை ஹதீஸ்களும் பலவீனமாக இருக்கும். ஆனால், அவற்றை ஆதாரமாக காண்பித்து மக்களை ஏமாற்றுவார்கள்.

அதே வேளையில் குர்ஆனும் ஸஹீஹான ஹதீஸ்களும் போதிக்கின்ற கொள்கைகளை ஒருபோதும் ஏற்க மாட்டார்கள். மக்களுக்கு சொல்ல மாட்டார்கள். வறட்டு வாதங்களை செய்வதிலும் விவாதங்கள் நடத்துவதிலும் இருக்கின்ற ஆர்வத்தை ஹதீஸ்களை கற்பதிலும் கற்பிப்பதிலும் காட்ட மாட்டார்கள்.

ஹலாலில் என்ன தப்பிருக்கிறது என்று கூறி உலக மோகத்திலும் வீண் விளையாட்டிலும் அடியார்களை தள்ளுவார்கள்.

உண்மையான முஸ்லிம் அறிஞர்களை பகைப்பார்கள், எதிர்ப்பார்கள், அவர்களுக்கு தீங்கை எதிர்பார்ப்பார்கள். அதே சமயம் சமய நல்லிணக்கம் என்று கூறி பிற மத பண்டிதர்களை நேசிப்பார்கள், அவர்களுக்கு மரியாதை செய்வார்கள், அவர்களை வரவேற்பார்கள், அவர்களுக்கு விருந்துபசரணை செய்து கௌரவிப்பார்கள். உண்மையான மார்க்க கல்விமான்களை மக்களுக்கு

முன்னிலையிலும் அரசுக்கு முன்னிலையிலும் தவறாக சித்தரிப்பார்கள். ஃபர்ழுகளை கணக்கின்றி வீணடிப்பார்கள். தலைப்பாகை கட்டுவது போன்ற உபரியான காரியத்தை மிகப் பெரிய வணக்கமாக தோற்றப்படுத்துவார்கள்.

கற்பனையான போலியான பெயர்களை தங்களுக்குத் தாங்களே சூட்டிக்கொண்டு இந்த மார்க்கத்தின் பெரிய இமாம்களாக தங்களை மக்களிடம் அடையாளப்படுத்த முயற்சிப்பார்கள். சில போலி அடிவருடிகளை வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றி மார்க்கத்தை அழகிய லாபகரமான வியாபாரமாக ஆக்கி, மக்களின் செல்வங்களை சுருட்டுவார்கள்.

இத்தகைய வழிகேடர்கள், போலிகள் ஆன்மிகத்தின் பெயரிலும் மக்களுக்கு மத்தியில் இருக்கின்றார்கள். அல்லது நாங்கள் உண்மையான மார்க்கத்தை சரியாக பின்பற்றுகிறோம் என்று வார்த்தை ஜாலங்களால் மக்களை ஏமாற்றுகின்ற கூட்டத்திலும் இருக்கின்றனர்.

பாமர மக்கள் அதிகம் ஏமாறுவது மார்க்க அறிஞர்கள் என்ற போர்வையில் இருப்பவர்களிடம்தான். இந்த உலகாதாய அறிஞர்கள் மக்களுக்கு உலக பற்றின்மையை போதிக்க மாட்டார்கள். காரணம், இவர்களே இந்த உலகத்தின் மீது யூத அறிஞர்களைப் போல் பெரும் பேராசைப் பிடித்தவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் மக்களுக்கு மறுமையை குறித்து அச்சுறுத்த மாட்டார்கள். காரணம், இவர்களுக்கு மறுமையின் பயம் இருக்காது. மறுமையின் உயர் பதவிகள் குறித்து ஆசையூட்ட மாட்டார்கள். காரணம், இவர்களுக்கே உலக செல்வத்தின் மீது மோகம் கடுமையாக இருக்கும். மறுமையை நம்பாத காஃபிர்களைப் போல சதா உலகாதாயத்தை தேடுவதிலும் செல்வ செழிப்பை பெருக்குவதிலும் அதைக் கொண்டு பெருமை அடிப்பதிலும் இவர்கள் ஈடுபட்டிருப்பார்கள். அவர்களிடம், மறுமையைப் பற்றி பேசுங்கள் என்றால், அதற்கு இப்போது என்ன அவசரம் என்பார்கள். உலகம் தேவை இல்லையா என்று கத்திக் கூவிவிட்டு, குர்ஆன் வசனங்களை திரித்து ஆதாரம் கூறுவார்கள்.

இத்தகைய போலி அறிஞர்களால் சமுதாயம் படும் அவலத்தை யாரிடம் சொல்வது!? இத்தகைய ஏமாற்றுப் பேர்வழிகளால் மக்கள் சந்திக்கின்ற நஷ்டத்தை யாரிடம் முறையிடுவது!?

மார்க்க கல்வியை கற்று, சான்றிதழ் வைத்திருந்தால் மட்டும் போதாது, நாம் அவரிடம் மார்க்க விளக்கம் கேட்பதற்கு.

என்னிடமும் பொருள் இருக்கிறது என்று சந்தையில் கூவுகின்றவனைப் போல், நானும் அறிஞன்; என்னிடமும் பட்டம் இருக்கிறது என்று கூவுகின்றவர்களா நமக்கு இறையச்சத்தை போதிக்கப் போகிறார்கள்!?

உலகத்துக்காக மறுமையை விற்ற யூத, கிறிஸ்துவ பாதிரிகளைப் போல் வாயால் மார்க்கத்தை பேசிவிட்டு செயலால் உலக மோகம் உடையவர்களா மக்களுக்கு சத்தியத்தை போதிப்பார்கள்!?

ஆம், இவ்வுலகத்தில் உண்மையானவர்களும் இருப்பார்கள். போலிகளும் இருப்பார்கள். சத்தியவாதிகளும் இருப்பார்கள். அசத்திய வியாபாரிகளும் இருப்பார்கள். வியாபாரி அனுதினமும் கடையை திறந்து வைத்து, பொருளை பற்றி வாய்க் கிழிய பேசி வாடிக்கையாளர்களை மயக்கி ஏமாற்றுவதைப் போல் மார்க்கத்தின் பெயரைக் கூறி, தங்களின் பொய் புகழ்ச்சிகளை விளம்பரப்படுத்தி அப்பாவி மக்களை ஏமாற்றுபவர்களும் இருப்பார்கள்.

நாம்தான் நிதானிக்க வேண்டும். யாரிடம் செல்கிறோம்? அவரின் ஆசிரியர் யார்? அவரிடம் கல்வி மட்டும் இருக்கின்றதா அல்லது கற்ற கல்வியின் படி அமலும் இருக்கின்றதா? உலக செல்வத்தில் மூழ்கிவிடாமல் சான்றோரின் எளிய, பற்றற்ற வாழ்க்கையை மேற்கொள்கிறாரா? மறுமையில் கவனம் கொண்டவராக இருக்கிறாரா? மறுமைக்காக உலகத்தை தியாகம் செய்கிறாரா!? அல்லது உலகத்துக்காக மறுமையை விட்டுக்கொடுக்கிறாரா!? இறை வழிபாடுகளில் எந்தளவு ஆர்வம் உள்ளவராக இருக்கிறார்!? தனது குறைகளையும் பாவங்களையும் அறிந்து வைத்து அவற்றை மறந்துவிடாமல் சதா தான் செய்ததை எண்ணி வருந்தி பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டே இருக்கிறாரா?! தனது நேரங்களை அதிகமாக இபாதத்துகளில் - இறை வழிபாடுகளில் கழிக்க ஆர்வம் உள்ளவரா?

இப்படியாக உள்ள அறிஞரை தேடிச் சென்று அவரிடம் நாம் மார்க்கத்தை கற்க வேண்டும். அவரிடம் நமது சந்தேகங்களை கேட்டுத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆம், உண்மையில் கல்வி என்பது சட்டங்களை மனப்பாடம் செய்வதில் இல்லை. சட்டங்களை புட்டு புட்டு வைப்பதில் இல்லை. கல்வி என்பது கல்லூரி பட்டங்களில் இல்லை. மாறாக, மார்க்க சட்டங்களையும் மார்க்க ஒழுக்கங்களையும் கற்று தானும் நேர்வழி நடந்து மக்களையும் நேர்வழி நடத்துகின்றவர்தான் மார்க்க சட்ட அறிஞர் - ஃபகீஹ் ஆவார்.

அவருக்கு உலகாசை குறைவாக இருக்கும். மறுமையாசை மிக அதிகமாக இருக்கும். படிப்பது படித்து கொடுப்பதில் மட்டும் கவனம் செலுத்தாமல் வணக்க வழிபாடுகளில் கவனம் செலுத்துவார். வகை வகையான வணக்க வழிபாடுகளில் தன்னால் முடிந்தளவு பங்குகொள்வார். கடந்த கால தனது பாவங்களை எண்ணி, வருத்தப்பட்டு தவ்பா செய்துகொண்டே இருப்பார்.

இப்படிப்பட்ட அறிஞர்தான் நமக்கு இறையச்சத்தை கற்பிப்பார். உண்மையான சட்டங்களை மறைக்காமல், மாற்றாமல், அல்லாஹ்வைத் தவிர யாரையும் அஞ்சாமல், உலக வஸ்துக்கள் எதற்கும் ஆசைப்படாமல் கற்றுக் கொடுப்பார். மக்களை வணக்க வழிபாடுகளின் பக்கம் திருப்பி, தானும் அல்லாஹ்வை வணங்குவதில் திளைத்திருப்பார்.

நமது சிறப்பிற்குரிய சான்றோர் இதற்கு சிறந்த முன்னுதாரணமாக விளங்கினார்கள். அவர்களின் வாழ்க்கை வரலாறுகளை அதிகமதிகம் படிக்கும்போது அல்லாஹ்வும் ரஸூலும் புகழ்கின்ற அறிஞர்களாக அவர்கள் வாழ்ந்ததை நாம் அறிய முடியும். சத்தியத்தை கூறியதால், உண்மையை உறுதியாக எடுத்தியம்பியதால் எத்தனை துன்பங்களை அவர்கள் சந்தித்தார்கள். உலகம் அவர்களை நோக்கி வந்த போதிலும் அவர்களோ அதன் பக்கம் ஏறிட்டும் பார்க்கவில்லை. செல்வங்கள் அவர்கள் காலடியில் கொட்டப்பட்டாலும் அவற்றின் மீது அவர்களின் மனங்கள் செல்லவில்லை. எளிமையான, ஏழ்மையான வாழ்க்கையை தேர்ந்தெடுத்தார்கள். மறுமைக்காக வாழ்ந்து சென்றார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவர் மீதும் கருணை காட்டுவானாக! அவர்களை பொருந்திக் கொள்வானாக! ஆமீன்!

அல்லாஹ்வே! எங்களை ஏமாற்றத்திலிருந்து காப்பாற்று! எங்களுக்கு நல்ல கல்வியை தா! உண்மையான, உள்ளச்சமிக்க கல்வியாளர்களுடன் எங்களை சேர்த்து வை! உலக மோகத்தை விட்டு எங்களை பாதுகாத்துக் கொள்! மறுமையின் மீது எங்களுக்கு ஆசையை அதிகப்படுத்து! எங்கள் பாவங்களை மன்னித்தருள்! ஆமீன்!

## உண்மையான இறையச்சம் எது?

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي رَوْحُ بْنُ عَبْدِ الْمُؤْمِنِ أَبُو الْـحَسَنِ الْمُقْرِي حَدَّثَنَا خَالِدُ بْنُ شَوْذَبٍ قَالَ رَأَيْتُ فَرْقَدًا السِّنْجِيَّ وَعَلَيْهِ جُبَّةُ صُوفٍ فَأَخَذَ الْـحَسَنُ بِجُبَّتِهِ ثُمَّ قَالَ يَا ابْنَ فَرْقَدٍ مَرَّتَيْنِ أَوْ ثَلَاثَةً إِنَّ التَّقْوَىٰ لَيْسَ فِي هٰذَا الْكِسَاءِ إِنَّمَا التَّقْوَىٰ مَا وَقَرَ فِي الْقَلْبِ وَصَدَّقَهُ الْعَمَلُ وَالْفِعْلُ

காலித் இப்னு ஷவ்தப் கூறுகிறார்: நான் ஃபர்கத் அஸ்ஸின்ஜியை பார்த்தேன். அவர் மீது தோலில் செய்யப்பட்ட ஜுப்பா ஆடை இருந்தது. அப்போது இமாம் ஹசன் ﵀ அவர்கள் அவரின் ஜுப்பாவை பிடித்து, ஃபர்கதே! என்று இரண்டு அல்லது மூன்று முறை அழைத்து விட்டு, பிறகு கூறினார்கள்: நிச்சயமாக தக்வா - இறையச்சம் என்பது இந்த போர்வையில் இல்லை. நிச்சயமாக தக்வா என்பது உள்ளத்தில் உறுதியாக பதிந்து இருந்து, பிறகு அதை அமல்களும் செயல்களும் உண்மைப்படுத்தி இருக்க வேண்டும்.

**விளக்கம்:** இமாம் ஹசன் ﵀ அவர்கள் உலக பற்றின்மையில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த அதே வேளையில் வீண் பகட்டு செயல்களை விட்டும் முகஸ்துதியை உண்டாக்கும் செயல்களை விட்டும் தூரமாக இருந்தார்கள்.

இமாம் ஹசன் ﵀ அவர்கள் நபித்தோழர்களிடமிருந்து கல்வியை சரியாக கற்று மார்க்கத்தை சரியாக புரிந்து வைத்திருந்ததால் உலக பற்றின்மையை பேசி பெருமை அடிக்கும் வறட்டு சூஃபி கூட்டத்திலிருந்து முற்றிலும் விலகி இருந்தார்கள்.

அக்காலத்தில் பிற மத துறவிகள் பலரும் அவர்களை சார்ந்தவர்களும் இஸ்லாமை ஏற்று இந்த மார்க்கத்திற்குள் வந்தபோது தங்களது பழைய

கொள்கை கோட்பாடுகளையும் இந்த மார்க்கத்திற்குள் புகுத்த பார்த்தனர். இன்னும் சிலர் அங்கு தாங்கள் பேணி வந்த துறவறத்தை நுழைக்க முயற்சித்தனர். இன்னும் சிலர் ஆன்மிகம் என்ற பெயரில் மஜூஸி தத்துவங்களையும் இந்திய துறவிகளின் சித்தாந்தங்களையும் இஸ்லாமாக ஆக்க முயற்சித்தனர்.

மார்க்க கல்வியறிவு அற்ற பலர் அவர்களின் பின்னால் ஓடினர்.

பகட்டற்ற மார்க்கத்தை, கலப்படமில்லா இஸ்லாமை, எளிமையான தீனை பகட்டு செயல்பாடுகளுடன் வெளிப்படுத்தினர்; பல கலப்படங்களை கலந்தனர்; சடங்குகளைக் கொண்டு சிரமப்படுத்திக் கொண்டனர்.

தங்களை சூஃபிகள் என்று அழைத்துக் கொண்டனர். தங்கள் அடையாளமாக முரட்டு தோலாடைகளை அணிந்து உலக ஆசை இல்லாதவர்கள் என்று அடையாளப் படுத்திக்கொண்டனர்.

ஆன்மிகம் என்ற பெயரைக் கூறி மக்களுக்கு புரியாத, மார்க்கத்தில் இல்லாத கற்பனைகளை பாமரர்களிடம் கூறி அவர்களை தங்கள் வழிகெட்ட, அனாச்சாரமான சிந்தனைகளுக்கு மூளைச்சலவை செய்தனர்.

நாங்கள்தான் உண்மையான மார்க்கத்தை பின்பற்றுகிறோம் என்று கூறினர். ஆனால், முற்றிலும் மார்க்கம் கூறாத, கற்பிக்காத வழிபாடுகளை செய்து அனாச்சாரங்களின் மொத்த கிடங்காக இருந்தனர். சுன்னா கூறாத வழிபாடுகள் குப்பைகள் ஆகும். குப்பைகள் எவ்வளவு அதிகம் இருந்து என்ன பலன்?

நாங்கள் ஆன்மிக வாதிகள், நாங்கள் அகக்கண் உடையவர்கள் என்று பெருமை பேசினர். உங்களுக்கு தெரியாத கல்விகள் எங்களுக்கு தெரியும் என்று வாதம் செய்தனர். ஆனால், முற்றிலும் இஸ்லாமிய அடிப்படைகளுக்கு முரணான கொள்கைகளை பரப்பி தாங்களும் இஸ்லாமை விட்டு வெளியேறி, தங்களை நம்பியவர்களையும் இஸ்லாமை விட்டு வெளியேற்றினர்.

இத்தகைய வழிகேடுகள் அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அல்லாஹ் பாதுகாத்தவர்களைத் தவிர இவர்களின் மயக்கும் பேச்சுகளில் மயங்கி மதியை இழந்து தங்கள் மார்க்கத்தை கெடுத்தவர்கள் பலர் இருக்கின்றனர்.

சிலை வணக்கத்தை நேரடியாக இஸ்லாமிய மார்க்கத்தில் புகுத்த முடியாத ஷைத்தான் சிலை வணக்க சிந்தனைகளையும் சிலை வணக்க கொள்கைகளையும் சிலை வணக்கத்திற்கு ஒப்பான சடங்குகளையும் இந்த

சூஃபிகளின் வழியாக இந்த உம்மத்துக்குள் புகுத்தினான்.

இவர்களில் சிலர் நமது அஹ்லுஸ் ஸுன்னாவின் அறிஞர்களின் வழிகாட்டலை ஏற்று அவர்களிடம் கல்வி கற்று இந்த சூஃபி கொள்கையில் உள்ள வழிகேடுகளை விட்டு விலகி மறுமை சிந்தனையையும் உலக பற்றின்மையும் நற்குணங்களையும் மட்டும் மக்களுக்கு குர்ஆன், சுன்னாவின் வெளிச்சத்தில் போதித்தனர். ஆனால், அத்தகையவர்கள் மிகக் குறைவானவர்கள்தான். ஆனால், அவர்களிடமும் பல வழிகேடுகள், பித்அத்தான அமல்கள் நாளடைவில் குடிக்கொண்டன. அவர்கள் பிற்காலத்தில் அவற்றை சரிகாண தொடங்கினர். அதற்கு வக்காலத்தும் வாங்கினர்.

பெரும்பாலான சூஃபிகள் இந்த வழிகெட்ட கொள்கையில் ஊறிப்போய் தங்களைத் தாங்களே அல்லாஹ் என்று சொல்லும் அளவு புத்தி கெட்டுப் போனார்கள். ஜத்ப் - பரவசம் என்று கூறி மொத்த பைத்தியக்காரர்களாக மாறினர்.

பரட்டை தலை, தடித்த ஆடை, துர்நாற்றம் பிடித்த உடல் இப்படியாக இணைவைப்பாளர்களில் உள்ள துறவிகளை விட அசிங்கமான தோற்றத்தில் மக்களுக்கு முன்னர் தோன்றினர். இவர்கள் மீது ஏறி இருந்த ஷைத்தான் இவர்கள் வாயிலாக சில அற்புதங்களை வெளிப்படுத்த, அப்பாவி பாமர மக்களோ அவற்றைப் பார்த்து ஏமாந்து இவை எல்லாம் எங்கள் அவ்லியாக்களின் கராமாத்துகள் என்று தம்பட்டம் அடித்தனர். இது இன்னும் அந்த சூஃபிகளுக்கு தலைக்கனத்தை அதிகப்படுத்தியதுடன் வழிகேட்டின் எல்லைக்கே அவர்களை அழைத்து சென்றது.

இன்றும் இந்த சூஃபிகளின் ஆட்டம் குறையவில்லை. நல்லோர் பலருடைய கப்ருகளை தங்கள் இருப்பிடமாக, வழிகெட்ட கொள்கையின் வியாபார ஸ்தலமாக மாற்றிக் கொண்டனர். இன்னும் பலர் மத்ரசாக்களையும் கான்காஹ் என்ற மடங்களையும் ஏற்படுத்திக் கொண்டு மக்களை தங்களுக்கு அடிமைகளாக ஆக்கினர். அதற்கு அவர்கள் வைத்துக்கொண்ட பெயர் இவர்கள் எல்லாம் எங்கள் முரீதுகள் என்று.

ஆன்மிகம் என்று மக்களுக்கு பாடம் எடுப்பார்கள். அவர்கள் கூறுகின்ற எதுவும் குர்ஆனிலும், ஸுன்னாவிலும் இல்லாத கற்பனை கதையாக இருக்கும். நபித்தோழர்கள் அறியாத சைகைகளையும் அங்க அசைவுகளையும் ஆன்மிக பயிற்சி என்ற பெயரில் செய்வார்கள். ஆடலையும் பாடலையும் இசையையும் தங்களுக்கு ஆகுமாக்கிக் கொள்வார்கள்.

குர்ஆனை மதிக்க மாட்டார்கள். தங்கள் குருநாதரின் கவிதைகளை கேட்டால் பரவசம் அடைந்து துள்ளி குதிப்பார்கள். நபி ﷺ அவர்கள் கற்பித்த திக்ருகளை செய்ய மாட்டார்கள். எந்தளவு திக்ருகளை கடித்துக் குதற முடியுமோ அந்தளவு அவற்றை குதறுவார்கள்.

லா இலாஹ இல்லல்லாஹ் என்பதை முதலில் இல்லல்லாஹ் என்று கூறி மண்டையை ஒரு பக்கமாக ஆட்டுவார்கள். பிறகு அல்லாஹு என்று கூறி மண்டையை ஆட்டுவார்கள். பிறகு ஹு ஹு ஹு என்று கூறி பேய் - ஷைத்தான் பிடித்தவன் போல் மண்டையை ஆட்டுவார்கள். இவர்களில் பல கூட்டம் துள்ளிக் குதிப்பார்கள். ஒருவர் மீது ஒருவர் கட்டிப்பிடித்து உருளுவார்கள்.

கிறிஸ்த்துவர்களின் மாந்திரிக சபைகளை விட இவர்களின் சபைகள் மோசமாக, கேவலமாக இருக்கும். காண்பதற்கு கன்றாவியான காட்சிகளாக மாறிவிடும் இவர்களின் சேட்டைகள். இந்த மார்க்கத்தில் மக்களை வழிகெடுப்பதற்கு இவர்கள்தான் ஷைத்தானின் மொத்த ஏஜண்டுகள் என்று கூறினால் அது மிகை அல்ல.

இந்த முட்டாள்களிடமிருந்து அல்லாஹ் நம்மையும் நமது சமுதாயத்தையும் காப்பாற்றுவானாக!

சரி, இப்போது இமாம் ஹசன் ﵀ அவர்கள் அவருக்கு கூறிய கூற்றின் கருத்தாழத்தை கவனிப்போம்.

இப்படி முரட்டு ஆடையை அணிந்து கொண்டு, ஆன்மிகவாதி, உலக பற்றில்லாத ஞானி என்று தன்னை அடையாளப்படுத்தி வந்த ஒருவரை இமாம் ஹசன் ﵀ பார்த்துவிட்டு அவரை பிடித்து அதட்டி விட்டு அவருக்கு இப்படி அறிவுரை கூறினார்கள்.

இந்த ஆடையை ஈமானின் அடையாளமாக நீர் எப்படி ஆக்கினீர்? தக்வாவின் வெளிப்பாடு இந்த உடையில் வெளிப்பட்டு விடுமா? இந்த போர்வையை போர்த்திக் கொண்டால் இறையச்சம் வந்துவிடுமா? இது என்ன முட்டாள்தனமான பேச்சு!! கல்வி இல்லாமல், குர்ஆன், ஸுன்னாவின் ஞானம் இல்லாமல், மார்க்கம் போதித்த நம்பிக்கையும் அமல்களும் செயல்களும் நற்குணங்களும் இல்லாமல் ஓர் குறிப்பிட்ட ஆடையை மட்டும் அணிந்துவிட்டால் உடனே தக்வா வந்துவிடும் என்று கூறுவதும், ஆன்மிகவாதியாக ஆகிவிடுவோம், உலக பற்றின்மை நமக்குள் வந்துவிடும் என்று பிதற்றுவதும் என்ன அபத்தமான பேச்சு!

நபித்தோழர்கள் படித்த ஈமான் உள்ளத்தில் இருந்தது. உள்ளத்தின் ஆழத்தில் வேரிட்டு, உள்ளத்தின் எல்லா பகுதிகளிலும் பரவி கிளைவிட்டிருந்தது. அதன் பின்னர் அந்த மனிதரின் சொல்கள், செயல்கள், அவர் செய்கின்ற நல்லமல்கள் அனைத்தும் அந்த ஈமானுக்கு ஏற்ப அமைந்திருந்தன.

அவரின் உள்ளத்தில் ஈமான் ஊறிவிட்டதால் உள்ளம் சுத்தமடைந்திருந்தது. தூய்மையான ஊற்றுக்கண்ணிலிருந்து தூய்மையான நீர் பீறிடுவதைப் போல அந்த உள்ளத்தில் ஊறிய ஈமானின் காரணமாக அந்த மனிதரின் சொல், செயல், அமல் எல்லாம் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப, நபியவர்களின் ஸுன்னாவிற்கு ஏற்ப அமைந்திருந்தது. அவருடைய அமல்கள் அவருக்கு ஈமானை அதிகப்படுத்தின. அவரின் ஈமான் அவரின் அமல்களை இக்லாசைக் கொண்டு பரிசுத்தப்படுத்தின.

இப்படியாக இரு இறக்கைகளும் சரியாக இருக்கும் பறவை ஆகாயத்தில் உயர பறந்து வட்டமிடுவதைப் போல் அவர்களின் ஈமானும் அமல்களும் சரியாக இருந்த காரணத்தால் அந்த நல்லோர் இறை அன்பிலும் இறை அச்சத்திலும் மறுமையின் தேடலிலும் மிக உயரத்தில் பறந்துகொண்டே இருப்பார்கள். அவர்களின் ஆகாயம் எல்லை அற்றது. அந்த ஆகாயத்தில் உண்மையான இறை அன்பு, உண்மையான இறை அச்சம், மறுமைக்கான உண்மையான அமல்கள், மனத்தூய்மை, அனாச்சாரமற்ற அமல்கள், சடங்குகள் இல்லாத வழிபாடுகள், பகட்டில்லாத ஒழுக்கங்கள் இடம் பெற்றிருக்கும்.

இவற்றைத்தான் இமாம் ஹசன் ﵀ அவர்கள் இங்கு குறிப்பிடுகிறார்கள். அதாவது, ஆடையில், வெளிரங்கமான தோற்றத்தில் ஆன்மிகத்தை சுருக்கி விட்டவரே! தடித்த ஆடைதான் தக்வாவின் அடையாளம் என்று நிர்ணயித்தவரே! இப்படி இருந்தால்தான் உலக பற்றின்மை வரும் என்று முடிவு செய்தவரே! நீர் அறிந்துகொள், தக்வா உள்ளத்தில் இருக்க வேண்டும். அதன் வெளிப்பாடு நமது சொல், செயல், இன்னும் அமலில் இருக்க வேண்டும்.

அதாவது, அல்லாஹ்வின் கட்டளையை மீறக் கூடாது. நபியவர்களின் ஸுன்னாவை புறக்கணிக்கக் கூடாது. அல்லாஹ் தடுத்ததை செய்யக் கூடாது நபியவர்கள் எச்சரித்த பாவங்களை விட்டு விலகி இருக்க வேண்டும். குர்ஆனும் ஸுன்னாவும் கூறுகின்ற வணக்க வழிபாடுகள் இருக்க வேண்டும். மனித கற்பனையில் உதிக்கின்ற சடங்குகள், அனாச்சாரங்கள் இருக்கக் கூடாது. அல்லாஹ்வின் மீது உண்மையான அன்பு இருக்க வேண்டும்.

பைத்தியமாக்கும் காதல் இருக்கக் கூடாது. உலகாசை உள்ளத்தில் இருக்கக் கூடாது. அதற்காக உலகத்தை வெறுத்து, குடும்பத்தை துறந்து, உழைப்பையும் தொழிலையும் விட்டுவிட்டு துறவியாக ஆகிவிடக் கூடாது.

உனது ஈமானை, உனது தக்வாவை உனது மனத்தூய்மையை உனது உள்ளத்தில் உனக்கும் உனது ரப்புக்கும் இடையில் மறைத்து வைத்துக் கொள்! அதை வெளிப்படுத்தி, பெருமை அடித்து, முகஸ்துதியை ஏற்படுத்தி உனது மறுமையை நாசமாக்கிவிடாதே! முஸ்லிம்களில் ஒருவராக, சாதாரணமாக இரு! உன்னை தனிமைப்படுத்தி காட்டாதே! மார்க்கம் கூறாத ஒன்றை உன் மீது விதித்துக் கொண்டு அதை உனக்கு பெருமையாக கருதாதே! அல்லாஹ்வின் பயத்தை உள்ளத்தில் கொண்டுவா! ஓர் ஆடையில் அல்லாஹ்வின் பயத்தை சுருக்கி விடாதே!

தக்வாவின் உண்மையான அடையாளம் நல்லமல்கள், நல்ல பண்பாடுகள், நற்குணங்கள், நல்ல செயல்கள் ஆகும். பாவிகள் அணியும் ஆடை உனக்கு வேண்டாம். மன்னர்கள் அணியும் பகட்டு ஆடம்பர ஆடை உனக்கு வேண்டாம். அதற்காக நீ கற்பனை செய்த ஓர் ஆடையில் உன்னை சுருட்டிக் கொண்டு உன்னை ஆன்மிகவாதி, இறைஞானி, இறைநேசர், உலக பற்றற்ற உத்தமர் என்று முடிவு செய்யாதே! இது நமது மார்க்கம் சொல்லித் தராத செயல். நபியோ, நபித்தோழர்களோ இப்படி இருக்கவில்லையே! கண்ணியமிக்க தாபியீன்களும் மதிப்பு மிக்க நான்கு இமாம்களும் இதை செய்யவில்லையே!

சிந்திப்பாயாக! குர்ஆன், ஸுன்னா கூறுகின்ற உண்மையான ஆன்மிகத்திற்கு வா! அந்த ஆன்மிகம் பகட்டில்லாதது, பரிசுத்தமானது, அனாச்சாரமற்றது, எல்லோராலும் பின்பற்ற எளிதானது. உடலை வருத்தி, தன்னைத் தானே தனிமைப் படுத்தி, ஹலாலை ஹராமாக்கி, முரட்டு ஆடை அணிந்து, வறட்டு ரொட்டியை சாப்பிட்டு, உன்னை நீயே கொன்றுக் கொள்வது அல்ல அந்த ஆன்மிகம்.

அதுபோன்று தர்காக்களில் மடங்களை அமைத்துக் கொண்டு சிலைவணக்க வழிபாடுகளை சமாதிகளுக்கு செய்து, ஆடலையும் பாடலையும் கண்டு களித்துக்கொண்டு, தொழுகைகளை வீணடித்து விட்டு, நாங்கள் உள்ளத்தால் தொழுவோம், உடலால் அல்ல என்று கூறுகின்ற மூடர்களின் தரீக்காவும் அல்ல குர்ஆனும் ஸுன்னாவும் கூறுகின்ற ஆன்மிகம் என்பது.

நபித்தோழர்களை உனக்கு முன்மாதிரியாக ஆக்கிக்கொள்! அவர்களின்

எளிமையைப் பார்! அவர்களின் அமல்களைப் பார்! அவர்களின் வழிபாடுகளைப் பார்! அவர்களின் வாழ்க்கை முறையைப் பார்! அவர்களிடம் இல்லாத ஒன்றைக் கொண்டு அல்லாஹ்வின் திருப்தியை நீ எப்படி அடைய முடியும்? அவர்களுக்கு மார்க்கத்தில் தெரியாத ஒன்று உனக்கு தெரிந்து விட்டதா! குர்ஆனிலும் ஸுன்னாவிலும் அவர்களுக்கு புரியாத ஆன்மிகம் உனக்கு புரிந்து விட்டதா! உன்னை ஏமாற்றிக் கொள்ளாதே! ஷைத்தானின் சதி வலையில் சிக்கி சீரழிந்து விடாதே!

நபி ﷺ அவர்கள் இஸ்லாமை போதித்தார்கள். சூஃபிசத்தை அல்ல. நபி அவர்கள் முஸ்லிமாக வாழ்ந்தார்கள், சூஃபியாக அல்ல. நபி ﷺ அவர்கள் நம்மை முஸ்லிமாக வாழ சொன்னார்கள், சூஃபிகளாக அல்ல. நபி ﷺ அவர்கள் நமக்கு குர்ஆனையும் ஸுன்னாவையும் படிக்க சொன்னார்கள். வீணர்களின் போதை ஆசாமிகளின் காதல் கவிதைகளை அல்ல. நபி ﷺ அவர்கள் நமக்கு தனிமையில் அல்லாஹ்வின் அச்சத்தால் அழ சொன்னார்கள். காதல் கவிதைகளை கேட்டுவிட்டு சபைகளுக்கு நடுவில் துள்ளிக் குதித்து ஆடைகளை கிழித்து கொண்டு கூத்தாடுவதை அல்ல.

அல்லாஹ்வே! எங்களை நேரான வழியில் நிலைத்திருக்க செய்! வழிகேடுகளை விட்டு எங்களை பாதுகாத்துக் கொள்! நபி ﷺ அவர்கள் இன்னும் அவர்களின் தோழர்கள் எந்த மார்க்கத்தில், எந்த வழிமுறையில் மரணித்தார்களோ அதே மார்க்கத்தில், அதே வழிமுறையில் எங்களின் உயிர்களை கைப்பற்றுவாயாக! ஆமீன்!

• • •

## அல்லாஹ் மக்களை பயமுறுத்த அனுப்பும் அத்தாட்சி எது?

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا نَصْرُ بْنُ عَلِيٍّ الْأَزْدِيُّ حَدَّثَنَا نُوحُ بْنُ قَيْسٍ عَنْ أَبِي رَجَاءٍ عَنِ الْـحَسَنِ وَمَا نُرْسِلُ بِالْآيَاتِ إِلَّا تَخْوِيفًا قَالَ الْمَوْتُ الذَّرِيعُ

وَمَا نُرْسِلُ بِالْآيَاتِ إِلَّا تَخْوِيفًا۝

நாம் பயமுறுத்துவதற்காகவே தவிர அத்தாட்சிகளை அனுப்ப மாட்டோம். (அல்குர்ஆன் 17 : 59)

என்ற வசனத்தில் உள்ள ஆயாத் - அத்தாட்சிகள் என்பதற்கு இமாம் ஹசன் ؒ அவர்கள் அதிக எண்ணிக்கையில் மக்களை அள்ளி செல்கின்ற மரணம் என்று விளக்கம் கூறினார்கள்.

**விளக்கம்:** இமாம் ஹசன் ؒ அவர்கள் அல்குர்ஆன் விரிவுரையாளராக விளங்கினார்கள். அல்குர்ஆனுக்கு மொழி ரீதியாகவும் நபித்தோழர்களிடமிருந்து செவியுற்ற ஆசார் - ரீதியாகவும் ஆழ்ந்த விளக்கங்களை இமாம் அவர்கள் அல்குர்ஆனுக்கு கூறி வந்தார்கள்.

பல முஃபஸ்ஸிர்கள் - குர்ஆன் விரிவுரையாளர்கள் இமாம் ஹசன் ؒ அவர்கள் கூறிய விளக்கத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பார்கள். இமாம் தபரி, இமாம் புகாரி போன்றவர்கள் ஹசன் பஸரி ؒ அவர்களின் விளக்கத்தை முன்னிலைப் படுத்துவதை அவர்களின் நூல்களில் நாம் பார்க்க முடியும்.

இப்போது குர்ஆன் வசனத்திற்குள் செல்வோம்.

மக்களை அச்சுறுத்துவதற்காக அல்லாஹ் பல அத்தாட்சிகளை அனுப்புவதாக கூறுகின்றான்.

இந்த வசனத்தில் நாம் கவனிக்க வேண்டியவை:

1. இந்த உலகத்தில் எது நிகழ்ந்தாலும் அது அல்லாஹ்வின் நாட்டமின்றி நிகழ முடியாது.

2. அல்லாஹ்தான் உண்மையான காரண கர்த்தாவாக இருக்கின்றான்.

3. அல்லாஹ் தனது அடியார்களின் அமல்களுக்கு ஏற்ப இந்த பூமியில் அவனது தீர்ப்பை எழுதுகிறான்.

4. மக்கள் ஈமானுடனும் தக்வாவுடனும் வாழும்போது அவர்களுக்கு இவ்வுலகிலும் செழிப்பான வாழ்க்கையை தருவேன் என்றும் அவர்கள் பாவம் செய்தால் அவர்களை திருத்துவதற்காக தண்டிப்பேன் என்றும் அல்லாஹ் கூறுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَوْ أَنَّ أَهْلَ الْقُرَىٰ آمَنُوا وَاتَّقَوْا لَفَتَحْنَا عَلَيْهِمْ بَرَكَاتٍ مِنَ السَّمَاءِ
وَالْأَرْضِ وَلَٰكِنْ كَذَّبُوا فَأَخَذْنَاهُمْ بِمَا كَانُوا يَكْسِبُونَ○

ஊர்வாசிகள் நம்பிக்கை கொண்டு (அல்லாஹ்வை) அஞ்சி இருந்தால், அவர்கள் மீது வானம் இன்னும் பூமியிலிருந்து அருள்வளங்களை திறந்திருப்போம். எனினும், (அவர்களோ இறைத் தூதர்களைப்) பொய்ப்பித்தனர். ஆகவே, அவர்கள் செய்துகொண்டிருந்ததன் காரணமாக (வேதனையால்) அவர்களைப் பிடித்தோம். (அல்குர்ஆன் 7 : 96)

இன்னும் அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَلَنُذِيقَنَّهُمْ مِنَ الْعَذَابِ الْأَدْنَىٰ دُونَ الْعَذَابِ الْأَكْبَرِ لَعَلَّهُمْ يَرْجِعُونَ○

அவர்கள் (நேர்வழியின் பக்கம்) திரும்புவதற்காக மிகப் பெரிய வேதனைக்கு முன்னர் சிறிய வேதனையை அவர்களுக்கு நிச்சயமாக நாம் சுவைக்க வைப்போம். (அல்குர்ஆன் 32 : 21)

இந்த உலகில் அல்லாஹ் உடைய தண்டனை பலவிதமாக இருக்கும். அடியார்களை தண்டிப்பதற்கு அல்லாஹ்வின் ஞானத்தில் பல வழிகள்

இருக்கின்றன. அவற்றில் எதைக் கொண்டும் அல்லாஹ் தனது அடியார்களை சோதிப்பான்.

நல்லவர்களுக்கு அந்த சோதனை அவர்களின் பாவங்களுக்கு பரிகாரமாக ஆகிவிடும். அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் மீண்டுவிடுவார்கள். தங்கள் பாவங்களை நினைத்து வருந்தி பாவமன்னிப்பு கேட்பார்கள். அல்லாஹ் அவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்வான். பாவிகளுக்கும் சோதனை வரும். அப்போது அவர்கள் திருந்தி நேர்வழிக்கு வராமல், தங்கள் குற்ற செயல்களில் முரண்டு பிடித்தால் திடீரென அல்லாஹ் அவர்களை தனது பெரிய தண்டனையால் அழித்து விடுவான்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

وَلَقَدْ أَرْسَلْنَا إِلَىٰ أُمَمٍ مِنْ قَبْلِكَ فَأَخَذْنَاهُمْ بِالْبَأْسَاءِ وَالضَّرَّاءِ لَعَلَّهُمْ يَتَضَرَّعُونَ ○ فَلَوْلَا إِذْ جَاءَهُمْ بَأْسُنَا تَضَرَّعُوا وَلَٰكِنْ قَسَتْ قُلُوبُهُمْ وَزَيَّنَ لَهُمُ الشَّيْطَانُ مَا كَانُوا يَعْمَلُونَ ○ فَلَمَّا نَسُوا مَا ذُكِّرُوا بِهِ فَتَحْنَا عَلَيْهِمْ أَبْوَابَ كُلِّ شَيْءٍ حَتَّىٰ إِذَا فَرِحُوا بِمَا أُوتُوا أَخَذْنَاهُمْ بَغْتَةً فَإِذَا هُمْ مُبْلِسُونَ ○

(நபியே!) உமக்கு முன்னர் பல சமுதாயங்களுக்கு (தூதர்களை) திட்டவட்டமாக அனுப்பினோம். (அவர்கள் நிராகரித்து விடவே) அவர்கள் பணிவதற்காக வறுமை இன்னும் நோயைக் கொண்டு அவர்களைப் பிடித்தோம். நம் வேதனை அவர்களுக்கு வந்தபோது அவர்கள் பணிந்திருக்க வேண்டாமா? எனினும் அவர்களுடைய உள்ளங்கள் இறுகின. அவர்கள் செய்து கொண்டிருந்ததை ஷைத்தான் அவர்களுக்கு அலங்கரித்தான். தாங்கள் உபதேசிக்கப்பட்டதை அவர்கள் மறந்தபோது (செல்வங்கள்) எல்லாவற்றின் வாசல்களை அவர்களுக்குத் திறந்தோம். முடிவாக, தாங்கள் கொடுக்கப்பட்டதைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடைந்தபோது அவர்களைத் திடீரென பிடித்தோம். அப்போது, அவர்கள் நம்பிக்கையிழந்து விடுகிறார்கள். (அல்குர்ஆன் 6 : 42-44)

அல்லாஹ்வின் எச்சரிக்கைகளில் ஒன்று இந்த உலகில் மனிதர்கள் அல்லாஹ்வை மறக்கும்போது, அவர்கள் பாவத்தில் அதிகம் மூழ்கும்போது,

அநியாயம் அக்கிரமத்தில் எல்லைக் கடக்கும்போது அவர்கள் மீது அகால மரணத்தை அல்லாஹ் சாட்டிவிடுவான். மக்களை கொத்து கொத்தாக அள்ளி செல்லும் மரணத்தை மக்கள் மீது அல்லாஹ் எழுதிவிடுவான். அப்போது காரணம் அறியாமலேயே மக்கள் செத்துவிடுவார்கள். எந்த மருந்தை உண்பது, எந்த மருத்துவரை அணுகுவது என்று சிந்திக்க நேரம் அவர்களிடம் இருக்காது.

மரணம் அல்லாஹ்வின் பிடிகளில் ஒன்றாகும்.

மரணம் அல்லாஹ்வின் எச்சரிக்கைகளில் மிகவும் வலிமையானதாகும்.

யாரும் மரணத்தை வெல்ல முடியாது. மரணம் எல்லோரையும் வென்று விடும்.

இந்த உலகில் யார் யாரையோ வென்று வெற்றிவாகை சூடிய வல்லரசர்களை பார்த்திருக்கிறோம்.

ஆனால், மரணத்தை வென்று நிரந்தரமாக வாழ்கின்ற ஒருவரை கூட இந்த உலகம் தோன்றியதிலிருந்து இன்று வரை யாரும் கண்டதில்லை. இனியும் காண முடியாது.

மரணம் அல்லாஹ்வின் பிடிகளில் ஒன்றாகும்.

அந்த பிடியிலிருந்து தப்பித்தவர் இன்று வரை யாரும் இல்லை. இனியும் யாரும் தப்பிக்க முடியாது.

நிரந்தரம், அல்லாஹ் ஒருவனுக்கே!

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ وَنَبْلُوكُمْ بِالشَّرِّ وَالْخَيْرِ فِتْنَةً وَإِلَيْنَا تُرْجَعُونَ○

ஒவ்வோர் ஆன்மாவும் மரணத்தை சுவைக்கக் கூடியதாகும். சோதிப்பதற்காக துன்பத்தைக் கொண்டும் இன்பத்தைக் கொண்டும் உங்களை நாம் சோதிப்போம். நம்மிடமே திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்.

(அல்குர்ஆன் 21 : 35)

மனிதன் தனக்கு முடிவு செய்யப்பட்ட மரணத்தை மறந்துவிட்டு இந்த உலகில் தான் நிரந்தரமாக இருப்பவனைப் போல் செல்வ செருக்கில், ஆட்சி அதிகார போதையில், உலக இன்பங்களின் மோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

தனது மூதாதையர் எங்கே! தனக்கு முன்னால் இதே ஆட்சி கட்டிலில் அமர்ந்தவர் எங்கே! இதற்கு முன்னால் இந்த சொத்துக்கு சொந்தக்காரனாக இருந்தவன் எங்கே! சிறிது காலத்திற்கு முன்னர் இந்த தோட்டங்களுக்கு, மாட மாளிகைகளுக்கு உரிமையாளராக இருந்தவர் எங்கே! தன் பாட்டன் எங்கே! தன் தகப்பன் எங்கே! என்று மனிதன் சிந்திப்பதில்லை. இந்த உலகம் எனக்கு நிரந்தரம், நான் இங்கு நிரந்தரம் என்பதைப் போல் உலக இன்பங்களில் மூழ்கி மதி மயங்கியவனாக வாழ்கின்றான்.

உலகில் பலர், இப்படித்தான் வாழ்கின்றனர். படைத்த இறைவனை மறந்துவிட்டனர். அவனை வணங்க அவர்களுக்கு நேரம் இல்லை. அவனை நினைக்க அவர்களிடம் அவகாசம் இல்லை.

தன்னை படைத்த ஓர் இறைவன் தனக்கு இல்லவே இல்லை என்பது போல்....

தனக்கு இந்த உலக வாழ்க்கைதான் எல்லாம் என்பது போல்....

இதற்கு பிறகு ஒரு வாழ்க்கை... மறுமை வாழ்க்கை என்று ஏதும் இல்லை என்பது போல்.....

அனுபவிக்க முடிந்தளவு அனுபவி, சேர்க்க முடிந்தளவு சேர்த்துக் கொள், தேட முடிந்தளவு தேடிக்கொள், எல்லாம் எனக்கே, நான்தான் பெரியவன், நான் வயோதிகத்தை வெல்ல வேண்டும், பலவீனத்தை வெல்ல வேண்டும், மரணத்தை வென்று பல நூறு ஆண்டுகள் வாழ வேண்டும் என்று வெறிப் பிடித்து மனிதன் வாழ்வதை நாம் பார்க்கிறோம்.

இன்று மறுமையை மறந்தவர்களின் வாழ்க்கை இப்படித்தான் கழிகின்றது.

குடி, கூத்து, கும்மாளம், ஆட்டம், பாட்டம், கேளிக்கை, ஆடம்பரம், எல்லை மீறிய சுகம், மது, மாது, சூது என்று தனது வாழ்க்கையை முழுமையாக தான் அனுபவித்து முடிக்க வேண்டும் என்ற வெறியில் பலர் வாழ்வதை பார்க்கிறோம்.

இத்தகையவர்களைப் பார்த்து அல்லாஹ் கேட்கின்றான்:

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ۝

நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணாகத்தான் என்றும், நிச்சயமாக நீங்கள் நம்மிடம் திரும்பக் கொண்டு வரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா? (அல்குர்ஆன் 23 : 115)

அல்லாஹ்வின் மார்க்கமாகிய இஸ்லாமை உண்மையாக பின்பற்றுகின்ற சிலரைத் தவிர பிற மக்கள் எல்லோரும் மரணத்தையும் மறுமையையும் அங்கு தான் விசாரிக்கப்படுவோம் என்பதையும் மறந்து வீண் விளையாட்டுகளில், கேளிக்கைகளில், உலக இன்பங்களில் மூழ்கி கிடப்பதை பார்க்கிறோம்.

இப்படி மக்கள் மறதியில் இருக்கின்றபோது இறைவன் தனது நியதியை இந்த உலகில் நடத்துகிறான். மரணம் என்ற சாட்டையை சுழற்றுகிறான். நோய் என்ற தனது படையை ஏவுகிறான்.

ஆம், உலகில் ஒரு மூலையில் தோன்றி, பிறகு, காற்று செல்லும் இடங்களில் எல்லாம் சென்று மனிதனின் நிம்மதியை, ஆட்டம் பாட்டத்தை அந்த நோய் பறித்து விடுகிறது.

படைத்த இறைவனை பயப்படவில்லை. ஆனால், அவன் படைத்த மரணத்தை பயப்படுகிறான்.

எப்படியும் தான் தப்பிக்க வேண்டும் என்று திட்டம் போடுகிறான். தேவையான எல்லா பாதுகாப்புகளையும் செய்து கொள்கிறான். சத்தான உணவுகளை வாங்கி வைத்துக் கொள்கிறான். மருந்து மாத்திரைகளை கேட்டு வாங்கி பத்திரப்படுத்தி கொள்கிறான். தன்னை நோக்கி திறந்திருக்கும் மரணத்தின் வாசல்களை எல்லாம் அடைத்துவிட்டு நிம்மதியாக தூங்க வேண்டும் என்று ஐடியா செய்கிறான்.

ஆனால், இவனுக்கு மேல் உள்ள இறைவனோ இவன் சுவாசிக்கின்ற காற்றில் மரணத்தின் விஷத்தை கலந்து ஏவி விட்டுவிடுகிறான். அதில் அவன் யார் யாரை நீ என்னிடம் கொண்டு வர வேண்டும் என்று அவர்களின் பெயர்களை, இடங்களை அதற்கு தெரிவித்து விடுகிறான். உயிர் பறிக்கின்ற வானவர் அதை சரியாக செய்துவிடுவார்.

ஒரே குடும்பத்தில், ஒரே நோயில் இருவர், மூவர், நால்வர் நோயுற ஆனால், மரணிப்பதோ அல்லாஹ் யாரை நாடுகிறானோ அவர் மட்டும்தான். மனிதனே இதிலிருந்து உனக்கு புரியவில்லையா, “இந்த நோய் மரணத்தை கொடுக்கவில்லை; உனக்குள் உயிரை படைத்து உனக்கு இந்த வாழ்க்கையை கொடுத்த இறைவன்தான் உனக்கு மரணத்தை கொடுத்து, இந்த வாழ்க்கையை உன்னை விட்டு பறிக்கிறான்” என்று! நோய் ஒரு காரணம், அவ்வளவுதான். அந்த இறைவனிடம் உன்னை மரணிக்க வைக்க பல காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று இந்த நோய்.

உலகில் ஒவ்வொரு கால கட்டத்திலும் கொள்ளை நோய்கள் பரவி பல்லாயிரக்கணக்கான உயிர்கள் மரணத்தை சந்திப்பதை இந்த உலகம் தொடர்ந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

நூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை, ஐம்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை, பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று பல விதமான நோய்கள் மனிதனை கொத்து கொத்தாக வெட்டி சாய்க்கின்றன.

இறைவனை அஞ்சாத மனிதனை இதன் மூலம் இறைவன் அச்சுறுத்துகின்றான். நீ என்னை பயப்படாமல் வாழ்கிறாயா? உனக்கு உலகில் யாருடைய பயமும் இல்லை என்ற துணிவில் வாழ்கிறாயா? உனக்குத்தான் அனைவரும் பயப்பட வேண்டும் என்ற இறுமாப்போடு வாழ்கிறாயா?

உன்னை சுற்றி படை, பலம், பணம், பதவி, ஆட்சி, அதிகாரம் எல்லாம் இருக்கிறது, எனக்கென்ன கவலை என்ற எண்ணமா உனக்கு!?

இதோ இப்போது உன் மீது ஒரு பயத்தை சாட்டப் போகிறேன். நீ பயந்தே ஆக வேண்டும், நீ ஓடி ஒளிந்தே ஆக வேண்டும், உன்னை நீ மறைத்தே ஆக வேண்டும், நீ பதுங்க வேண்டும், உன்னை நீ பாதுகாக்க இரவு பகலாக மிக கவனமாக இருக்க வேண்டும். ஆனாலும் உனது எல்லா தந்திரங்களும், பாதுகாப்பு அரண்களும், உன்னை சுற்றி நீ போட்டுக்கொண்ட தற்காப்பு வளையங்களும் என் காற்றுக்கு முன் ஒன்றுமில்லை.

அவற்றை எல்லாம் தாண்டி நான் மரணத்தை கலந்துவிட்ட சுவாசக்காற்றை நீ சுவாசித்தே ஆக வேண்டுமே! இப்போது நீ அதை சுவாசிக்க மாட்டேன் என்றாலும் மரணித்துவிடுவாய், இல்லை சுவாசிப்பேன் என்றாலும் மரணிப்பாய்.

உன் பக்கம் மரணத்தை கொண்டுவந்து சேர்க்க இறைவனிடம் கோடி வழிகள் இருக்கின்றன. நீ எத்தனை வழிகளை அடைப்பாய்? உனது வீட்டு ஓட்டைகளை உன்னால் அடைக்க முடியவில்லை. உனது கண்ணுக்கு தெரிந்த வழிகள் சில. உன் அறிவுக்கே புலப்படாத ஆயிரம் வழிகள் உனது இறைவனிடம் இருக்கின்றன உன் பக்கம் மரணத்தை அவன் கொண்டுவந்து சேர்க்க.

மனிதனே! நீ இப்போது ஓட நினைக்கிறாயா? ஒளிய நினைக்கிறாயா? தப்பிக்க நினைக்கிறாயா? இதோ.... உன் இறைவன்.... அவன் பக்கம் ஓடு... அவனிடம் ஒளிந்து கொள்! அவனிடம் உனக்கு தப்பிக்கும் இடம் உள்ளது... அவனை நோக்கி ஓடி வா! அவனை சந்திக்க உன்னை தயார் செய்து கொள்! பாவத்தை

விடு! அவனது கட்டளைகளை நிறைவேற்று! அவன் தடுத்ததை விட்டு விலகு! மரணம் நிச்சயம் வரும் என்ற நம்பிக்கை கொள்! மரணத்தை கண்டு அஞ்சாதே! மறுமையை நினைத்து அஞ்சு! உனது தங்குமிடம் சொர்க்கமாக அல்லது நரகமாக இருக்குமா என்று கவலைப்படு! மரணத்தை நினைத்து கவலைப்படாதே!

நல்லோருக்கு மரணம் இறைவனின் சன்மானம்.

நல்லோருக்கு மரணம் இறைவனை சந்திக்கின்ற சந்தர்ப்பம்.

நல்லோருக்கு மரணம் சொர்க்க பிரவேசத்தின் தொடக்கம்.

நல்லோருக்கு மரணம் உலக இன்னல்களில் இருந்து விடுபடுவதற்கான வாய்ப்பு.

நல்லோருக்கு மரணம் அவர்கள் செய்த நன்மைகளின் வெகுமதிகளை பெறுகின்ற நேரம்.

பாவிகளுக்கோ! மரணம், இறைவனின் கோபத்தை பார்க்க போகிற தருணம்.

தங்கள் தீய செயல்களுக்கான தண்டனையை அனுபவிக்கப் போகிற நேரம்.

இறைக்கட்டளைகளை வீணடித்தார்களே, அதன் வேதனையை சுவைக்கப்போகிற சமயம்;

நரக நெருப்புக்குண்டத்தில் தங்கள் குற்ற செயல்களுக்கு தண்டனையை நிரந்தரமாக அனுபவிக்கப்போகிற காலம்.

மனிதனே! கவனி! கொஞ்சம் நிதானி!

மரணம் எல்லோருக்கும் உண்டு! நோய் எல்லோருக்கும் வரும்!

பாவிகள்தான் மரணிப்பார்கள் என்றால் பிறகு, மரணத்திலிருந்து தப்பிக்க எல்லோரும் நல்லவர்களாக ஆகிவிடுவார்களே!

பாவிகளுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் மட்டுமே நோய் வருமென்றால் உடனே எல்லோரும் நல்லவர்களாகவும் நம்பிக்கையாளர்களாகவும் மாறிவிடுவார்களே!

இறைவன் மகா ஞானவான், நன்கறிந்தவன். அவனது திட்டம் வேறு! அவனது ஏற்பாடு வேறு! புரிந்து கொள்!

பாவிகளும் மரணத்தை பயப்படுகிறார்கள். நல்லவர்களும் மரணத்தை பயப்படுகிறார்கள்.

இருவரின் பயத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன?

பாவி தான் சாகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும், மரணத்தை தடுக்க என்ன வழி என்று யோசிக்கின்றான்.

நல்லவனோ நான் மரணித்துவிட்டால் நரகத்தில் சென்று விடக்கூடாது, நான் சொர்க்கம் செல்ல வேண்டும், இறை திருப்தியை பெற்று, அவனின் அன்பை பெற்று, அவனின் மன்னிப்பை பெற்று மரணிக்க வேண்டும் என்று யோசிக்கிறான். உடனே நன்மைகளை அதிகப்படுத்துகிறான். தனது பாவங்களுக்கு பாவமன்னிப்பு தேடுகிறான். இறை கட்டளைப்படி, மருத்துவர்களின் யோசனைப்படி தற்காப்புகள் செய்து கொண்டாலும் மரணம் வந்தால் அதை எப்படி மகிழ்வோடு சந்திக்க வேண்டும் என்ற பிரார்த்தனையில் ஈடுபடுகிறான்.

என்னை நோக்கி இறை அழைப்பு இப்படி வர வேண்டும் என்ற வேண்டுதலில் அவன் இருக்கிறான்.

يَا أَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ○ ارْجِعِي إِلَىٰ رَبِّكِ رَاضِيَةً مَرْضِيَّةً○فَادْخُلِي فِي عِبَادِي○ وَادْخُلِي جَنَّتِي○

நிம்மதியடைந்த ஆன்மாவே! திருப்தி பெற்றதாக, திருப்தி கொள்ளப்பட்டதாக உன் இறைவன் பக்கம் திரும்பு! இன்னும் என் அடியார்களில் சேர்ந்து விடு! இன்னும் என் சொர்க்கத்தில் நுழைந்து விடு. (அல்குர்ஆன் 89 : 27-30)

மனிதனே! மரணத்தை பயப்படாமல் இந்த அழைப்புக்காக ஏங்கு! இந்த நிலையில் உனக்கு மரணம் வந்துவிட்டால் நீ பிறந்த புண்ணியத்தை நீ அடைந்துவிட்டாய்! நீ வாழ்ந்த வாழ்க்கையில் நீ வெற்றி பெற்றுவிட்டாய்!

இன்னொரு வகையான மரணம் இருக்கிறது. இதோ இறைவன் அதைப் பற்றி கூறுகிறான்:

وَأَنْفِقُوا مِنْ مَا رَزَقْنَاكُمْ مِنْ قَبْلِ أَنْ يَأْتِيَ أَحَدَكُمُ الْمَوْتُ فَيَقُولَ رَبِّ لَوْلَا أَخَّرْتَنِي إِلَىٰ أَجَلٍ قَرِيبٍ فَأَصَّدَّقَ وَأَكُنْ مِنَ الصَّالِحِينَ○ وَلَنْ يُؤَخِّرَ اللَّهُ نَفْسًا إِذَا جَاءَ أَجَلُهَا وَاللَّهُ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ○

உங்களில் ஒருவருக்கு மரணம் வருவதற்கு முன்னர் நாம் உங்களுக்கு கொடுத்தவற்றில் இருந்து (நல்ல வழிகளில்) தர்மம் செய்யுங்கள். (ஒருவருக்கு மரணம் வந்துவிட்டால்) அவர் கூறுவார்: “என் இறைவா! நீ என்னை (என் மரணத்தை) கொஞ்சம் சமீபமான தவணை வரை (இவ்வுலகில்) பிற்படுத்தி வைக்கமாட்டாயா! (இன்னும் சிறிது காலம் வாழவைக்க மாட்டாயா!). நான் தர்மம் செய்வேனே, நல்லவர்களில் ஆகிவிடுவேனே.” ஓர் உயிரை (வாங்குவதை) அல்லாஹ் தாமதப்படுத்தவே மாட்டான் - அதற்குரிய தவணை வந்துவிட்டால். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் ஆழ்ந்தறிபவன் ஆவான். (அல்குர்ஆன் 63 : 10-11)

அல்லாஹ்வே! எங்கள் மீது கிருபை செய்! எங்கள் மீது கருணை காட்டு! நல்லோரில் எங்களை சேர்த்து வை! நல்ல மரணத்தை, கண்ணியமான மரணத்தை எங்களுக்கு கொடு! உன்னை வணங்கி வழிபட்ட நிலையில், உன்னை நினைத்த நிலையில், உன் மீது அன்புகொண்ட நிலையில், உன்னை ஆதரவு வைத்த நிலையில், உனது அன்பையும் மன்னிப்பையும் பெற்ற நிலையில் எங்கள் உயிரை கைப்பற்றுவாயாக! வெற்றியாளர்களில் எங்களை ஆக்குவாயாக! ஆமீன்!

• • •

## அல்லாஹ்வின் பக்கம் ஒதுங்குவது என்றால் என்ன?

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا نَصْرُ بْنُ عَلِيٍّ أَخْبَرَنِي مُسْلِمُ بْنُ قُتَيْبَةَ حَدَّثَنَا سَهْلٌ السَّرَّاجُ عَنِ الْحَسَنِ وَتَبَتَّلْ إِلَيْهِ تَبْتِيلًا قَالَ أَخْلِصْ إِلَيْهِ إِخْلَاصًا

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَتَبَتَّلْ إِلَيْهِ تَبْتِيلًا

அவன் பக்கம் வணக்க வழிபாட்டில் முற்றிலும் ஒதுங்கி விடுவீராக! (அல்குர்ஆன் 73 : 8)

இந்த வசனத்திற்கு இமாம் ஹசன் ﵀ விளக்கம் கூறினார்கள்: அல்லாஹ்விற்காக (உம்மை) பரிசுத்தப்படுத்துவீராக!

**விளக்கம்:** இமாம் ஹசன் ﵀ அவர்கள் இந்த வசனத்திற்கு என்ன விளக்கம் கூற வருகிறார்கள்?

சூரா அல்முஸ்ஸம்மிலில் எட்டிலிருந்து பத்து வரை உள்ள வசனங்களில் ஐந்து கட்டளைகளை அல்லாஹ் நபி ﷺ அவர்களுக்கு கூறுகிறான்.

1. அல்லாஹ்வை திக்ரு செய்ய வேண்டும்.

2. அல்லாஹ்வை வணங்க நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. அவனை எல்லா காரியங்களுக்கும் பொறுப்பாளனாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. நிராகரிப்பாளர்கள் தரும் தொந்தரவை சகித்திருக்க வேண்டும்.

5. அவர்களை அழகிய முறையில் புறக்கணித்து விட்டுவிட வேண்டும்.

இதில் இரண்டாவது கட்டளைக்கு இமாம் அவர்கள் விளக்கம் கூறினார்கள். அல்லாஹ்விற்காக உம்மை பரிசுத்தப்படுத்திக் கொள்வீராக!

அதாவது, நபியே! உங்களை நீங்கள் விசேஷமாக அல்லாஹ்விற்காக ஆக்கிக் கொள்ளுங்கள்! அவனை மனத்தூய்மையுடன் வணங்குங்கள்! அவனை வணங்குவதை உங்கள் முக்கிய வேலையாக, கடமையாக, இலட்சியமாக ஆக்கிக் கொள்ளுங்கள்! உங்களை அந்த அல்லாஹ்விற்கு என்று ஆக்கிக் கொள்ளுங்கள்!

அவனுக்கு உங்கள் தேவை இல்லை. அவனுக்கு யாருடைய தேவையும் இல்லை. ஆனால், உங்களுக்கு அல்லாஹ்வின் பக்கம் தேவை உள்ளது. உங்களுக்கு அல்லாஹ் வேண்டும். அவனது அருள் வேண்டும். நீங்கள் அல்லாஹ்விடம் மிக விசேஷமானவர்கள். நீங்கள் மற்ற சாதாரண மக்களைப் போன்று அல்லர். உங்கள் மீது அல்லாஹ்வின் அருள் மிக அதிகமாக இருக்கிறது.

உங்களை அல்லாஹ் தேர்ந்தெடுத்திருக்கிறான். நீங்கள் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அல்லாஹ் உங்களை தனது நேசராக, தனது உற்ற நண்பராக ஆக்க விரும்புகிறான். ஆகவே, நீங்களும் உங்களை அல்லாஹ்விற்கு என்று சிறப்பாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு மனைவிகள் இருக்கலாம், உங்களுக்கு பிள்ளைகள் இருக்கலாம். உங்களுக்கு உலக தேவைகள் ஆயிரம் இருக்கலாம். உங்களுக்கு இவ்வுலகில் ஆயிரம் உறவுகள், ஆயிரம் தோழர்கள் இருக்கலாம். அவர்கள் எல்லோரையும் நீங்கள் நேசிக்கலாம். அவர்களை நீங்கள் விரும்பலாம். அவர்களின் தேவைகளுக்காக நீங்கள் நேரம் ஒதுக்கலாம்.

ஆனால், அவர்கள் எல்லோரையும் விட உங்கள் உள்ளம் அல்லாஹ்வின் தேடலில் இருக்க வேண்டும். உங்கள் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீது அன்பும் பாசமும் பிரியமும் அதிகமாக இருக்க வேண்டும். மனைவிகளிடம் நீங்கள் இருப்பதை விட, நண்பர்களிடம் பழகுவதை விட, தோழர்களிடம் பேசுவதை விட, பிள்ளைகளை கொஞ்சுவதை விட அல்லாஹ்விடம் தனிமையில் ஆகி, அவனிடம் பேசுவது, அவனை தொழுவது, அவனை துதிப்பது, அவனை புகழ்வது, அவனிடம் பிரார்த்தனை செய்வது, அவனுக்கு முன்னால் நிற்பது, அவனுக்கு முன்னால் குனிவது, அவனுக்கு முன்னால் சிரம் பணிவது உங்களுக்கு மிக விருப்பமாக, மிக இன்பமாக இருக்க வேண்டும்.

அவனுக்கு முன்னால் இந்த உலகை நீங்கள் மறந்துவிட வேண்டும். அவனை மறந்து இந்த உலகத்தில் மூழ்கிவிடக் கூடாது. உங்களது எண்ணம் அவனுக்காக தூய்மையாகிவிட வேண்டும். உங்கள் அமல்கள் அவனுக்காக தூய்மையாகிவிட வேண்டும். நீங்கள் மற்ற எல்லோரையும் விட்டு தன்னை விடுவித்துக் கொண்டு, அல்லாஹ்விற்காக உங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் அல்லாஹ்விற்கு மட்டும் கலப்பற்றவராக ஆகிவிட வேண்டும்.

நீங்கள் எதை செய்தாலும் அல்லாஹ்வின் விருப்பத்திற்காக மட்டுமே செய்ய வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்காக மட்டுமே செய்ய வேண்டும். அல்லாஹ்வை வணங்குவதில், அவனது கலாமை ஓதுவதில், அவனை திக்ரு செய்வதில், அவனைப் போற்றி புகழ்வதில், அவனை பெருமைப்படுத்தி தக்பீர் கூறுவதில், அவனது வல்லமையை அவனுடைய அடியார்களுக்கு எடுத்துக் கூறுவதில், அவனை வணங்குவதின் பக்கம் அவனுடைய அடியார்களை அழைப்பதில் நீங்கள் திளைத்துவிட வேண்டும்.

அல்லாஹ் ஆகுமாக்கிய இன்பங்களையும் அளவுக்கு அதிகமாக நீங்கள் அனுபவிக்க ஆசைப்படக் கூடாது. நிலையான இன்பம் மறுமையில் இருக்கிறது. சொர்க்கம் உங்களுக்காக காத்திருக்கிறது. சொர்க்க இன்பங்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன. இங்கு சில காலம் குறிப்பிட்ட பணிகளுக்காக, வேலைகளுக்காக, பொறுப்புகளுக்காக, கடமைகளுக்காக நீங்கள் அனுப்பப்பட்டுள்ளீர்கள்.

இங்கு ஓய்வெடுக்க அல்ல, நீண்ட சுகத்தை தேட அல்ல, இந்த அற்ப இன்பத்தில், சொற்ப சுகத்தில் மனதை பறிகொடுக்க அல்ல. அறிவையும், ஆற்றலையும், நேரத்தையும் செல்வத்தையும் வீண் விளையாட்டில் கழிக்க அல்ல, சுகபோக வாழ்க்கையை தேடுவதற்காக அல்ல.

ஆகவே, நீங்கள் உங்களை தயார் செய்யுங்கள்! உங்களை உருவாக்குங்கள்! மீதம் எத்தனை காலம் என்பதை அறிய முடியாத உலகத்தில் ஒவ்வொரு நாளும் அந்த இறைவனை அதிகம் நெருங்க முயற்சி செய்யுங்கள்!

நேற்றைய தினத்தை விட இன்று வணக்க வழிபாடுகள், இறை அன்பு உங்களிடம் அதிகமாக ஆகியிருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் முந்திய நாளை விட இறை நெருக்கம் பெற்றதாக இருக்க வேண்டும். அழைப்பு பணியினால், தொடர் போர்களால் களைப்பு, உடல் சோர்வு, உடல் அசதி, உடல் வலி எல்லாம் உங்களுக்கு இருக்கத்தான் செய்யும்.

ஆனால், அதன் காரணமாக ஓய்வைத் தேடி வணக்க வழிபாட்டை குறைத்து விடாதீர். உமது சுகத்தை, மன நிம்மதியை இறைவனுக்கு முன்னால் நின்று வணங்குவதில் ஆக்கிக் கொள்வீராக! சலிப்புத்தட்டாமல் வணங்குவீராக! களைப்பறியாமல் வணங்குவீராக! வணக்கத்தில் இன்பத்தை உணருகின்ற வரை வணங்குவீராக! வணக்கம்தான் வாழ்க்கை, ஆகவே, வணங்கி கொண்டே இருப்பீராக!

இதோ நபியை நோக்கி ரப்பு விசேஷமாக கூறுவதை கவனியுங்கள்!

فَاعْبُدْهُ وَاصْطَبِرْ لِعِبَادَتِهِ ○

ஆகவே, (நபியே!) அவனை வணங்குவீராக! அவனை வணங்குவதில் பொறுமையாக இருப்பீராக! (அல்குர்ஆன் 19 : 65)

وَاعْبُدْ رَبَّكَ حَتّٰى يَأْتِيَكَ الْيَقِينُ ○

(நபியே!) உங்களுக்கு 'யகீன்' (நம்பிக்கை எனும் மரணம்) வரும் வரை உம் இறைவனை வணங்குவீராக! (அல்குர்ஆன் 15 : 99)

بَلِ اللّٰهَ فَاعْبُدْ وَكُنْ مِنَ الشَّاكِرِينَ ○

மாறாக, (நபியே!) அல்லாஹ்வை (மட்டுமே) நீர் வணங்குவீராக! இன்னும், நன்றி செலுத்துவோரில் நீர் ஆகிவிடுவீராக! (அல்குர்ஆன் 39 : 66)

فَاعْبُدِ اللّٰهَ مُخْلِصًا لَهُ الدِّينَ ○

ஆகவே, (நபியே!) அல்லாஹ்வை வணங்குவீராக, வழிபாட்டை - தீனை அவனுக்கு தூய்மைப்படுத்தியவராக! (அல்குர்ஆன் 39 : 2)

قُلْ إِنَّمَا أُمِرْتُ أَنْ أَعْبُدَ اللّٰهَ وَلَا أُشْرِكَ بِهِ إِلَيْهِ أَدْعُو وَإِلَيْهِ مَآبِ ○

நான் கட்டளையிடப்பட்டதெல்லாம் அல்லாஹ்வை நான் வணங்குவதற்கும் அவனுக்கு நான் இணைவைக்காமல் இருக்கவும்தான்; அவன் பக்கமே அழைக்கிறேன்; அவன் பக்கமே என் திரும்புதல் இருக்கிறது என்று (நபியே!) கூறுவீராக! (அல்குர்ஆன் 13 : 36)

இறைக் கட்டளைகளை எல்லாம் நிறைவேற்றுவது வணக்கம்தான். ஆனால்,

விசேஷமாக உங்களை நீங்கள் தனிமைப்படுத்திக் கொண்டு நின்று, குனிந்து, சிரம் தாழ்த்தி உமதிறைவனை தொழுவீராக! அவனை தியானம் செய்வீராக! அவனது வேதத்தை ஓதுவீராக! பகலில் உலகம் சார்ந்த அல்லது மார்க்கம் சார்ந்த பல வேலைகளுக்கு நடுவில் கடமையான வணக்க வழிபாடுகள் உள்ளன. அவற்றுக்கு முன்னும் பின்னும் உபரியான வணக்க வழிபாடுகள் உள்ளன.

இருப்பினும் உமதிறைவனை தனித்து நீர் விசேஷமாக வணங்க இரவின் சில பகுதிகளை அவனுக்காக ஒதுக்கி கொள்வீராக! எல்லோரும் அயர்ந்த நித்திரையில் இருக்கும்போது நீர் எழுந்து வணங்கி, நீண்ட நெடிய நேரம் அவனுக்கு முன்னால் நின்று அவனது வேதத்தை ஓதி, பின்னர் குனிந்து நீண்ட நேரம் அவனை துதி செய்து, புகழ்ந்துவிட்டு, பிறகு சிரம் பணிந்து அவனுக்கு முன்னால் நெற்றியை மண்ணில் வைத்து மொத்த பணிவையும் அடிமைத்தனத்தையும் வெளிப்படுத்தி, அவனை புகழ்ந்து துதி செய்து கொண்டே இருப்பீராக! இப்படியாக அதிகாலை வரை வணங்கி விட்டு பிறகு பாவமன்னிப்பு தேடுவதில் திளைப்பீராக! ரப்பு தனது அடியாருக்கும் தூதருக்கும் கூறுவதை கவனியுங்கள்!

أَقِمِ الصَّلَاةَ لِدُلُوكِ الشَّمْسِ إِلَىٰ غَسَقِ اللَّيْلِ وَقُرْآنَ الْفَجْرِ إِنَّ قُرْآنَ الْفَجْرِ كَانَ مَشْهُودًا ۝ وَمِنَ اللَّيْلِ فَتَهَجَّدْ بِهِ نَافِلَةً لَكَ عَسَىٰ أَنْ يَبْعَثَكَ رَبُّكَ مَقَامًا مَحْمُودًا ۝

(நபியே!) சூரியன் சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் வரை உள்ள தொழுகைகளையும் ஃபஜ்ருடைய தொழுகையையும் நிலை நிறுத்துங்கள். ஏனென்றால், நிச்சயமாக ஃபஜ்ர் தொழுகை வானவர்கள் கலந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இரவில் (கொஞ்சம்) உறங்கி எழுந்து உமக்கு (மட்டும்) உபரியா(ன கடமையா)க அதை (குர்ஆனை) ஓதி தொழுவீராக! மகாம் மஹ்மூது எனும் புகழப்பட்ட இடத்தில் உம்மை உம் இறைவன் எழுப்புவான். (அல்குர்ஆன் 17 : 78, 79)

يَا أَيُّهَا الْمُزَّمِّلُ ۝ قُمِ اللَّيْلَ إِلَّا قَلِيلًا ۝ نِصْفَهُ أَوِ انْقُصْ مِنْهُ قَلِيلًا ۝ أَوْ زِدْ عَلَيْهِ وَرَتِّلِ الْقُرْآنَ تَرْتِيلًا ۝

போர்வை போர்த்தியவரே! இரவில் எழு(ந்து தொழு)வீராக! அதன் (-இரவின்) பாதிப் பகுதியில் (தொழுவீராக!) அல்லது, அதில் கொஞ்சம் குறைப்பீராக! (-இரவின் மூன்றில் ஒரு பகுதி வணங்குவீராக!) அல்லது அதற்கு மேல் அதிகப்படுத்துவீராக! (இரவில் மூன்றில் இரு பகுதி வணங்குவீராக!) இன்னும் குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக! (அல்குர்ஆன் 73 : 1-4)

وَاذْكُرِ اسْمَ رَبِّكَ بُكْرَةً وَأَصِيلًا ۝ وَمِنَ اللَّيْلِ فَاسْجُدْ لَهُ وَسَبِّحْهُ لَيْلًا طَوِيلًا ۝

உமது இறைவனின் பெயரை காலையி(ல் ஃபஜ்ர் தொழுகையி)லும் மாலையி(ல் ளுஹ்ர், அஸ்ர் தொழுகைகளி)லும் நினைவு கூர்வீராக! இரவில் (மஃரிபு இன்னும் இஷா தொழுகைகளை) அவனுக்காக சிரம் பணிந்து தொழுவீராக! இன்னும் நீண்ட நேரம் (உபரியான இரவுத் தொழுகைகளை) அவனை தொழுது வணங்குவீராக! (அல்குர்ஆன் 76 : 25, 26)

இப்படித்தான் நமது நபி ﷺ தம்மை அல்லாஹ்விற்காக பரிசுத்தமாக, கலப்படமில்லாமல் ஆக்கிக் கொண்டார்கள். அல்லாஹ்வின் பக்கம் இரவு நேரங்களில் தம்மை முழுமையாக ஒதுக்கிக் கொண்டார்கள். அங்கு எல்லா சிந்தனைகளையும் எண்ணங்களையும் விட்டு விலகி தன் ரப்புக்காக தன்னை பரிசுத்தமாக்கிக் கொண்டு அவனை நின்று, குனிந்து, சிரம் பணிந்து வணங்கினார்கள்.

தொழுகை, இறை தியானம், இறை மறை ஓதுதல் என்று நபி ﷺ அவர்களின் இரவு இறை அன்பில் மூழ்கி இருந்தது. பிறகு அது அதிகாலை தொழுகையைக் கொண்டு நிறைவுற்றது.

எல்லா படைப்புகளும் அல்லாஹ்வை வணங்குகின்றன. அவனை வணங்காத படைப்பு எதுவும் இவ்வுலகில் இல்லை.

تُسَبِّحُ لَهُ السَّمَاوَاتُ السَّبْعُ وَالْأَرْضُ وَمَنْ فِيهِنَّ وَإِنْ مِنْ شَيْءٍ إِلَّا يُسَبِّحُ بِحَمْدِهِ وَلَٰكِنْ لَا تَفْقَهُونَ تَسْبِيحَهُمْ إِنَّهُ كَانَ حَلِيمًا غَفُورًا ۝

ஏழு வானங்களும் பூமியும் இவற்றிலுள்ளவர்களும் அவனைத் துதித்து தொழுகின்றனர். அவனைப் புகழ்ந்து துதிக்காமல் எந்த ஒரு பொருளும் இல்லை. எனினும், அவர்களின் துதியை, தொழுகையை (மனிதர்களே)

நீங்கள் அறிய மாட்டீர்கள். நிச்சயமாக அவன் மகா சகிப்பாளனாக, மகா மன்னிப்பாளனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 17 : 44)

இப்படி இருக்க இதில் மனிதர்களையும் ஜின்களையும் தன்னை வணங்குவதற்காகவே விசேஷமாக படைத்தான்.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ○

ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்கே தவிர (வேறு எதற்கும்) நான் படைக்கவில்லை. (அல்குர்ஆன் 51 : 56)

நம்மை நோக்கி நமது ரப்பு கூறுவதை சற்று உன்னிப்பாக கேளுங்கள்!

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا وَاعْبُدُوا رَبَّكُمْ وَافْعَلُوا الْخَيْرَ
لَعَلَّكُمْ تُفْلِحُونَ○

நம்பிக்கையாளர்களே! குனியுங்கள்! சிரம்பணியுங்கள்! உங்கள் இறைவனை வணங்குங்கள்! நன்மை செய்யுங்கள். நீங்கள் (அவற்றின் மூலம்) வெற்றி அடைவதற்காக. (அல்குர்ஆன் 22 : 77)

இவ்வுலகில் படைத்தோன் அல்லாஹ்வை வணங்குவதுதான் நமக்கு கிடைத்த மாபெரும் நற்பாக்கியம்.

உலக செல்வம் கிடைத்தால் பெருமைப்படுகின்றனர் மக்கள். ஆனால், உலகமும் அதன் செல்வமும் நிலையற்றது, தற்காலிகமானது, அழிந்துவிடக்கூடியது, ஆபத்துகளால் சூழப்பட்டது. மறுமையோ நிரந்தரமானது, அதற்காக செய்யப்படுகின்ற நன்மைகள் நிரந்தரமானவை, பாதுகாப்பானவை, அழியாதவை, ஆபத்துகளில் இருந்து அவற்றை செய்த நல்லவர்களை பாதுகாக்கக் கூடியவை ஆகும்.

அல்லாஹ் சொல்வதை நீ செவியுறவில்லையா?

مَا عِنْدَكُمْ يَنْفَدُ وَمَا عِنْدَ اللهِ بَاقٍ○

உங்களிடம் உள்ளவை தீர்ந்துவிடும்; அல்லாஹ்விடத்தில் உள்ளவை நிரந்தரமானவை. (அல்குர்ஆன் 16 : 96)

الْمَالُ وَالْبَنُونَ زِينَةُ الْحَيَاةِ الدُّنْيَا وَالْبَاقِيَاتُ الصَّالِحَاتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ
ثَوَابًا وَخَيْرٌ أَمَلًا○

செல்வமும் ஆண்பிள்ளைகளும் உலக வாழ்க்கையின் அலங்காரமாகும். என்றும் நிலையாக இருக்கும் நற்செயல்கள் உம் இறைவனிடம் நன்மையிலும் சிறந்தவை, ஆசையிலும் சிறந்தவை. (அல்குர்ஆன் 18 : 46)

ஆகவே, அல்லாஹ்வை வணங்குவதற்கு நமக்கு நபி ﷺ அவர்கள் சிறந்த முன்மாதிரி ஆவார்கள். நாமும் அவர்களது வழியில் அல்லாஹ்வை வணங்குவதில் நம்மை ஈடுபடுத்தி, நம்மை அல்லாஹ்விற்காக பரிசுத்தப்படுத்தி, அல்லாஹ்விற்கு முன்னால் நமது அடிமைத்தனத்தையும், அவன் மீது உண்மையான அன்பையும், ஆசையையும் வெளிப்படுத்துவோமாக!

அல்லாஹு தஆலா அவனது அடியார்களை வர்ணிக்கின்ற வசனங்களில் ஒன்றுதான் இது. அதற்கேற்ப நாம் நம்மை மாற்றுவோமாக!

அல்லாஹு தஆலா கூறுகின்றான்:

التَّائِبُونَ الْعَابِدُونَ الْـحَامِدُونَ السَّائِحُونَ الرَّاكِعُونَ السَّاجِدُونَ
الْآمِرُونَ بِالْمَعْرُوفِ وَالنَّاهُونَ عَنِ الْمُنْكَرِ وَالْـحَافِظُونَ لِـحُدُودِ اللهِ
وَبَشِّرِ الْمُؤْمِنِينَ ۝

(அவர்கள் பாவத்திலிருந்து) திருந்தியவர்கள்; வணக்கசாலிகள்; (அல்லாஹ்வை) புகழ்பவர்கள்; நோன்பு நோற்பவர்கள்; (தொழுகையில்) குனிபவர்கள், சிரம் பணிபவர்கள்; நன்மையை ஏவக் கூடியவர்கள்; பாவத்தை விட்டுத் தடுக்கக்கூடியவர்கள்; அல்லாஹ்வுடைய சட்டங்களைப் பாதுகாப்பவர்கள் ஆவர். (இத்தகைய) நம்பிக்கையாளர்களுக்கு (சொர்க்கத்தின்) நற்செய்தி கூறுவீராக! (அல்குர்ஆன் 9 : 112)

அல்லாஹ்வே! உன்னை வணங்க எங்களுக்கு வாய்ப்பை கொடு! உன்னை வணங்கிக்கொண்டே இருக்க எங்களுக்கு ஆசையையும் உடல் ஆற்றலையும் மனப்பக்குவத்தையும் தா! உன்னை வணங்குவதில் எங்களுக்கு இன்பத்தை, சுகத்தை, நிம்மதியை தா! உன்னை தியானம் செய்வதற்கும் உனக்கு நன்றி செலுத்துவதற்கும் உன்னை அழகிய முறையில் வணங்குவதற்கும் எங்களுக்கு நீ உதவி செய்! ஆமீன்!

• • •

## கல்வி கற்க ஆர்வப்படுவதும், அதை கற்பிக்கிற பொறுப்பை சுமப்பதும்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبُو مُوسَى الْأَنْصَارِيُّ حَدَّثَنَا الْوَلِيدُ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا شَيْبَانُ أَنَّهُ سَمِعَ الْحَسَنَ يَقُولُ لِأَحَدِ بَنِي الشِّخِّيرِ حَدِّثْنَا يَا غُلَامُ فَقَالَ إِنَّا لَمْ نَبْلُغْ هٰذَا يَا أَبَا سَعِيدٍ فَقَالَ الْحَسَنُ ﷺ وَأَيُّنَا بَلَغَ هٰذَا وَدَّ الشَّيْطَانُ لَوْ تَمَكَّنَ مِنْ هٰذِهِ وَاللهِ لَوْلَا مَا أَعْقَدَ اللهُ عَلَى الْعُلَمَاءِ لَمْ نَنْطِقْ

இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் **الشِّخِّيرِ** ஷிக்கீர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை நோக்கி வாலிபரே! எங்களுக்கு சில ஹதீஸ்களை அறிவித்து தருவீராக! என்று கூறினார்கள். அதற்கவர் அபூ சயீது அவர்களே! நிச்சயம் நாம் இந்த தகுதியை இன்னும் அடையவில்லை என்று கூறினார்.

அதற்கு இமாம் ஹசன் ﵀ அவர்கள் கூறினார்கள்: நம்மில் யார்தான் இந்த தகுதியை அடைந்துவிட்டார்? ஷைத்தான் விரும்புவதெல்லாம் அவன் இந்த எண்ணத்தை (நமக்குள்) ஏற்படுத்த வேண்டும் என்பதையே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உலமாக்களிடம் அவர்கள் மார்க்கத்தை எடுத்து சொல்ல வேண்டும் என்ற உடன்படிக்கையை வாங்கியிருக்கவில்லை என்றால் நாம் அறவே (மார்க்கத்தைப் பற்றி) பேசியிருக்கவே மாட்டோம்.

**விளக்கம்:** அல்லாஹ்வின் கருணை ஹசன் ﵀ அவர்கள் மீதும் அவர்களைப் போன்ற சான்றோர் எல்லோர் மீதும் நிலவட்டும்! அவர்களிடம்தான் எத்துனை பணிவும் அடக்கமும் ஹதீஸின் மீது ஆர்வமும் உள்ளன.

இந்த நிகழ்விலிருந்து பல படிப்பினைகளை நாம் பெற இருக்கின்றோம். பிறகு இந்த நிகழ்வின் உள் கருத்துக்கு நாம் செல்வோம்.

படிப்பினைகள்:

1. شِخِّير ஷிக்கீர் குடும்பத்தார் கல்வியிலும் தக்வாவிலும் மிகவும் எல்லோராலும் அறியப்பட்டவர்களாக இருந்தார்கள். அப்துல்லாஹ் இப்னு ஷிக்கீர் ﷺ என்பவர் நபித்தோழர்களில் ஒருவர் ஆவார். அவரின் பிள்ளைகளில் முதர்ரிஃப் ﷺ என்பவர் ஹதீஸ் கலையில் பெரிய அறிஞராக திகழ்ந்தார். இவரிடமிருந்து இமாம் ஹசன் ﷺ அவர்கள் ஹதீஸை கற்று அறிவித்திருக்கிறார்கள். முதர்ரிஃப் ﷺ அவர்கள் ஹிஜ்ரி 95-ல் இறப்பெய்தினார்கள்.

2. அநேகமாக இமாம் அவர்கள் முதர்ரிஃப் உடைய மகனார் அல்லது சகோதரர் ஒருவரிடம் ஹதீஸை கூறும்படி சொல்லி இருக்கலாம்.

3. இமாம் ஹசன் ﷺ அவர்கள் வயதில் கல்வியில் பெரியவராக இருந்தும் தனது ஆசிரியரின் மகனாரிடமும் அல்லது சகோதரரிடமும் ஹதீஸை செவியுற விரும்பினார்கள்.

4. அந்த வாலிபர் தன்னடக்கத்தோடு உங்களுக்கு நான் எப்படி ஹதீஸ் அறிவிப்பது என்றும், தனக்கு இன்னும் அந்த தகுதி வரவில்லை, நானும் ஒரு மாணவனாகவே இருக்கிறேன் என்றும் கருத்துப்பட பதில் கூறினார்.

5. இமாம் ஹசன் ﷺ அவர்கள் கூறிய பதில் மிகவும் மகத்தானது. அதாவது தகுதி வந்தால்தான் மார்க்கத்தை எடுத்து சொல்ல வேண்டும் என்றால் எந்த அறிஞரும் மார்க்கத்தை எடுத்து கூறி இருக்க மாட்டார். ஏனெனில், எந்த அறிஞரும் தான் ஆசிரியர் ஆகும் தகுதியை அடைந்துவிட்டேன் என்று அறவே எண்ண மாட்டார். கல்வி கற்பிக்க எனக்கு தகுதி இருக்கிறது என்ற எண்ணம் வருவதே ஒருவித பெருமை ஆகும். மார்க்க ஆலிம்கள் எப்படி பெருமை அடிக்க முடியும்.

6. உண்மையான மார்க்க அறிஞர்கள், மார்க்கத்தை தெரிந்தவர்கள் அதை கற்பிக்க வேண்டும் என்பது அல்லாஹ்வின் கட்டளை என்பதற்காக மார்க்கத்தை கற்பிக்கின்ற பணியில் ஈடுபடுவார்கள். தங்களுக்கு அந்த தகுதி இருக்கிறது என்ற எண்ணத்தில் இல்லை.

7. உண்மையான அறிஞர்கள் எப்போதும் பணிவும் அடக்கமும் உடையவர்களாகவும் தம்மைவிட பிறரை மதிப்பவர்களாகவும் இருந்தார்கள்.

8. கல்வி எங்கு கிடைத்தாலும் இன்னும் கல்வியாளர் தம்மை விட வயதில் சிறியவராக இருந்தாலும் அவரிடமும் கல்வியை கேட்டறிய சான்றோர் தயக்கம் காட்டியதில்லை.

9. கல்வி கற்றவர் அதை பிறருக்கு கற்பிக்க வேண்டும், பிறருக்கு தான் கற்றதை போதிக்க வேண்டும் என்ற கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

10. தாம் கல்வியில் பெரிய தகுதியை அடைந்துவிட்டோம், தாம் ஆசிரியராகும் தகுதியை பெற்று விட்டோம் என்ற எண்ணம் கல்விமான்களிடம் ஒருபோதும் வரக்கூடாது. அல்லாஹ் பாதுகாப்பானாக!

11. ஷைத்தான் பொதுமக்களை வழிகெடுப்பதில் கவனம் செலுத்துவதை விட ஆலிம்களை வழிகெடுப்பதில் அதிகம் கவனம் உள்ளவனாக இருப்பான். ஏனெனில், ஆலிம், ஷைத்தான் உடைய வழிகெடுக்கின்ற முயற்சியை முறியடித்து விடுவார். இன்னும் மக்களுக்கு அவர் உபதேசம் செய்து வருவதால் ஷைத்தானால் அந்த மக்களை இலகுவாக வழிகெடுக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, ஒரு ஆலிமை வழிகெடுத்து விட்டால் அவரை வைத்து பல நூறு பேரை வழிகெடுக்கலாம் என்பது ஷைத்தானின் திட்டம்.

12. கல்வியாளர்களை வழிகெடுக்க ஷைத்தான் பயன்படுத்துகிற பெரிய ஆயுதம் அவர்களிடம் பெருமையை புகுத்துவதாகும். பெருமை வந்துவிட்டால் அதை தொடர்ந்து முகஸ்துதி வந்து விடும். பிறகு, உலகாசை வந்து விடும். பிறகு, மக்களின் செல்வங்கள் மீது ஆசைப்படுவார். பெருமை, முகஸ்துதி, உலகாசை இவை எல்லாம் உளநோய்களின் மொத்த பிறப்பிடமாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

அல்லாஹ்வின் மாபெரும் அருள் நமக்கு இந்த இஸ்லாமிய மார்க்கம் கிடைத்திருப்பது. பிறகு, ஒருவருக்கு மார்க்க கல்வியின் பாக்கியமும் கிடைத்துவிட்டால் அவருக்கு உதாரணம் இந்த உலகத்தில் ஒருவருக்கு செல்வமும் கிடைத்து, பிறகு ஆட்சி அதிகாரமும் கிடைத்தால் எப்படியோ அவ்வாறுதான் மார்க்கமும் கிடைத்து மார்க்க கல்வியும் கிடைப்பது. அல்ஹம்து லில்லாஹ்.

மார்க்க கல்விகள் - குர்ஆனின் கல்வி, ஹதீஸின் கல்வி, சட்டக் கல்வி என ஏதாவது ஒரு துறையில் ஒருவர் மார்க்க அறிவை கற்றவராக இருப்பது அல்லாஹ் அவருக்கு செய்த இரண்டாவது மாபெரும் நற்பாக்கியம். இதை மக்களில் பெரும்பாலானவர்கள் உணர்வதில்லை, புரிவதில்லை.

தேனை ருசித்தவனுக்குத்தான் தெரியும் தேனின் சுவை. இப்படித்தான் கல்வியை அல்லாஹ்விற்காக கற்று, அதன் ஒளியை பெற்றவருக்கு மட்டுமே தெரியும் அந்த கல்வியின் அருமை.

உலகில் பல சுகம் இருக்கலாம். மனிதர்கள் பல இன்பங்களைப் பற்றி தெரிந்திருக்கலாம். பலவகையான உணவுகளின் ருசியை அறிந்திருக்கலாம். உலகத்தில் உயர்வான பல பொருள்களைப் பற்றி செல்வந்தர்கள் சிலாகித்து கூறலாம். ஆடம்பர பிரியர்கள் வாழ்க்கை வசதிகளைப் பற்றி பிரஸ்தாபித்து பேசலாம். இன்னும் இப்படி பல விஷயங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆனால், உண்மையில் ஒரு கல்விமானிடம் கேளுங்கள்! ஒரு அறிஞரிடம் விசாரியுங்கள்! அதுவும் இஸ்லாமிய மார்க்க அறிஞர்களிடம் கேளுங்கள்! குர்ஆனையும் சுன்னாவையும் கற்ற கல்வியாளரிடம் கேளுங்கள்! இந்த கல்வியை கிடைக்கப் பெற்றவர் இதற்குள் தான் இன்னும் ஆழமாக சென்று கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார். தன்னையும் விற்றால்தான் இந்த கல்வி கிடைக்கும் என்றால் அதற்கும் அவர் தயாராக இருப்பார். கல்விக்காக தான் அடிமையாகுவதையும் விரும்புகின்ற அளவிற்கு இந்த கல்வியின் அருமை, அதன் சுகம், அதன் மேன்மை, அதன் கண்ணியம், அதன் இன்பம் அதை கற்றுப் புரிந்தவருக்கு மட்டுமே தெரியும்.

இமாம் ஹசன் ﵀ அவர்களும் இத்தகைய கல்வி முன்னோடிகளில் ஒருவராக விளங்கினார். பல காலம் இஸ்லாமிய இராணுவத்தில் பணி செய்துவிட்டு, பிறகு தன்னை முழுமையாக மார்க்க கல்விக்காக ஒதுக்கிக் கொண்டார். இவரின் தந்தை உமர் ﵁ அவர்களின் காலத்தில் இஸ்லாமை ஏற்று பிறகு முஸ்லிம்களின் இராணுவத்தில் பணி செய்தார்.

ஹசன் ﵀ அவர்கள் சிறு பிள்ளையாக இருந்த போது அவருக்காக உமர் ﵁ அவர்கள் துஆ செய்தார்கள் என்று நாம் வரலாறுகளில் படிக்கிறோம். இவரின் தாய் நமது அன்னை உம்மு சலமாவிடம் ﵂ பணிவிடை செய்தார்கள். ஹசன் ﵀ அவர்கள் குழந்தையாக இருந்தபோது அவர் அழுதால் அவரின் அன்னை இல்லாத நேரத்தில் உம்மு சலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தமது மடியை ஹசனுக்கு கொடுப்பார்கள் என்று வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

இமாம் ஹசன் ﵀ அவர்களின் கல்வி தேடல் மிக ஆழமாகவும் உறுதியாகவும் இருந்தது. ஸஹாபாக்கள், பெரிய தாபியீன்கள் உள்பட அறுபத்தி மூன்று நபர்களிடம் கல்வி படித்துள்ளதாக வரலாற்று குறிப்பு உள்ளது.

பல நபித்தோழர்களிடம் கல்வி கற்றது மட்டுமல்லாமல் அவர்களிடமிருந்து ஒழுக்கம், பண்பாடு, இறையச்சம், மனத்தூய்மை, ஈமானிய உறுதி, மறுமை

பயம், அல்லாஹ்வின் ஞானம் ஆகியவற்றையும் இமாமவர்கள் கற்றுக் கொண்டார்கள்.

மன்னர்கள், அதிகாரிகள், அறிஞர்கள், பொதுமக்கள் என அனைவரும் இமாம் ஹசனை கண்ணியப்படுத்தி வந்தனர். இமாம் ஹசனுக்கு சமமாக வேறு அறிஞர் யாரும் அவர்களின் காலத்தில் இல்லை என்று அறிஞர்கள் கூறுகின்ற அளவிற்கு இமாமின் கல்வி மதிப்பு இருந்தது.

ஹிஜ்ரி இருபத்தி ஒன்றில் பிறந்து ஹஜ்ரி நூற்றி பத்தில் இந்த உலகத்தை விட்டு பிரிந்தார்கள். இந்த உம்மத்திற்கு மிகப் பெரிய கல்வியையும் இறை ஞானத்தையும் விட்டு சென்றார்கள்.

இறை பயமும் மனத்தூய்மையும் உலக பற்றின்மையும் அவர்களிடம் ஆழமாக இருந்த காரணத்தால் கல்வி ஞானம் அவர்களின் உள்ளத்திலிருந்து ஊற்றாக பீறிட்டு கொட்டியது.

இந்த நிகழ்வில் கல்வி கற்க ஆசிரியரிடம் வந்து, ஒன்று அவரிடம் படித்துவிட்டு அவரின் மகனாரை அல்லது அவரின் சகோதரரை கண்டவுடன் அவரிடமும் ஏதும் ஹதீஸ் இருந்தால், உள்ளத்தை உருக்கும் நல்ல செய்தி இருந்தால், மார்க்கம் குறித்த ஞானம் இருந்தால் அதையும் அறிந்து கொள்வோம் என்று இமாம் ஆர்வப்பட்டார்கள் போலும். அல்லது ஆசிரியர் வர தாமதமாகும் போது ஆசிரியரின் மகனும் அல்லது சகோதரரும் அந்த வகுப்பில் மாணவராக இருக்க, எதிர்பார்த்து இருக்கும் இந்த நேரத்தை வீணாக்காமல் ஆசிரியரின் மகனாரிடம் அல்லது சகோதரரிடம் இருக்கும் கல்வியை கற்றுக் கொள்ளலாம் என்று இமாம் அவர்கள் நினைத்திருக்கலாம்.

உண்மையில் இமாம் அவர்களின் வாழ்க்கையிலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடம் நிறைய இருக்கிறது.

இமாம் ஹசனுக்கும் இமாம் முதர்ரிஃபுக்கும் அதிக வயது வித்தியாசம் இல்லை. இருவரும் தாபியீன்கள்தான். இருப்பினும் அவர் தன்னை விட வயதில் சிறிது மூத்தவர். அவரிடம் தன்னிடம் இல்லாத ஹதீஸ்கள் இருக்கின்றன என்று அறிந்து அவரிடம் கல்வி படிப்பதில் இமாம் அவர்கள் எவ்வித தாழ்மையையும் உணரவில்லை.

மாறாக அவரின் வகுப்பில் இருக்கும் ஆசிரியரின் மகன் அல்லது சகோதரன் தமது சக வகுப்பு தோழனாக இருந்தும் கூட கொஞ்சமும் தயக்கம் இல்லாமல் வாலிபரே எனக்கு ஹதீஸை கற்பித்து கொடுங்கள் என்று இமாம் ஹசன் ﵀ அவர்கள் அவரிடம் கூறினார்கள். இதற்கு எத்தகைய பெரிய மனம் தேவை, எவ்வளவு உறுதியான உள்ளம் தேவை.!!

பணிவும் அடக்கமும் ஈமானின் மிகப்பெரிய நற்பண்புகள். ஒருவரிடம் உண்மையான கல்வியும் அவர் அந்த கல்வியைக் கொண்டு அல்லாஹ்வின் பொருத்தத்தை மட்டும், மறுமையின் நற்பாக்கியத்தை மட்டும் நாடி இருக்கிறார் என்பதற்கு மிகப் பெரிய அடையாளம் அவர் தான் கற்ற கல்வியைக் கொண்டு பெருமை அடிக்க மாட்டார், அதை வைத்து பெயர் புகழை, பிரபல்யத்தை, உலகாதாயத்தை தேட மாட்டார் என்பதாகும்.

தன்னை மக்கள் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று விரும்ப மாட்டார். தன்னை மக்கள் அறிய வேண்டும், கண்ணியப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட மாட்டார். மக்களுக்கு முன்பாக தான் கல்விமான் என்று காண்பித்துக் கொண்டு பெருமையாக நடக்க மாட்டார். தனது கல்வியை பற்றி மக்களிடம் பெருமையாக பேச மாட்டார்.

பிற கல்விமான்களை, கல்வியாளர்களை அதிகம் மதிப்பார். அவர்களை சந்திப்பார். அவர்களின் சபையில் அமர்வார். அவர்களிடம் இருக்கும் கல்வியைக் கொண்டு பலன் பெறுவார். தனக்கு தெரியாத கல்வி அவர்களுக்கு தெரியும் என்று நல்லெண்ணம் வைப்பார். என்னை விட அவர்களுக்கு தெரியுமா என்று ஆணவம் பேச மாட்டார்.

கல்விமான்கள் தன்னிடம் இருக்கும் குறைகளை சுட்டிக் காட்டினால் உடனே நன்றியுடன் அதை திருத்திக் கொள்வார். ஒருபோதும் தான் குறையற்றவன், கல்வியில் முழுமையானவன் என்று நினைக்க மாட்டார்.

எப்போதும் கல்வியை தேடுவதிலும் கற்பதிலும் ஈடுபட்டிருப்பார். தன்னை விட வயதில் குறைவானவரிடம் கற்பதில் வெட்கப்பட மாட்டார்.

கல்விக்கு சமமாக உலக செல்வங்களை, உலக சுகங்களை மதிக்க மாட்டார். தான் கற்ற கல்வியை பாதுகாப்பார், அதை பரப்புவார். இப்படிப்பட்ட உயர்ந்த நற்குணங்கள் நமது சான்றோரிடம் மிகுந்து இருந்தன. இன்றோ இவை மிக குறைந்துவிட்டன.

கல்வி குறைவாக இருந்தாலும் என்னை விட அதிகம் யாருக்கு தெரியும் என்று வெட்கமில்லாமல் பெருமை பேசும் காலமாக இன்று இருக்கிறது.

ஒரு சில மணிநேரம் படித்து விட்டு, அதை வைத்து மக்களுக்கு முன்னர் உரையாற்றிவிட்டு என்னை விட சிறந்த சிந்தனையாளர் யார் இருக்க முடியும் என்று பெருமை பட்டுக்கொள்ளும் பேச்சாளர்கள் பெருகிவிட்ட காலமாக இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பு படித்ததைக் கூட சரியாக ஞாபகத்தில் வைக்க முடியாமல் திணறிக்கொண்டு இருக்க, பேசுவதோ இமாம் புகாரி, இமாம் முஸ்லிம் போன்ற பெரிய முஹத்திஸ் ஆக தான் ஆகிவிட்டதைப் போல.

ஃபிக்ஹ் கலையில் பேசினால், தான் இமாம் அபூ ஹனீஃபா, இமாம் ஷாஃபியி தகுதியை அடைந்துவிட்டது போல் பேசுகிறார்கள்.

குர்ஆன் மனனமில்லை, ஹதீஸ்கள் மனனமில்லை, உஸூல் மனனமில்லை. அரபி ஞானத்தின் திறமை இல்லை. படித்ததை சரியாக புரிகின்ற புத்திக் கூர்மை இல்லை. ஆனால் பேசுகிற பேச்சோ மக்கள் தன்னையும் ஒரு அல்பானியாக, இப்னு பாஸாக மதிக்க வேண்டும் என்று.

இன்று மக்களுக்கு முன்னர் தான் வர வேண்டும், தன்னை மக்கள் அறிய வேண்டும், எல்லாவற்றிலும் மக்கள் என்னை முன்னிலைப்படுத்த வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் அதிகம் ஆகிவிட்டனர்.

அன்றோ நமது முன்னோர் கல்வி, ஞானம், ஒழுக்கம் என்று முழுமைகளை தங்களுக்குள் கொண்டுவருவதில் மட்டும் கவனம் செலுத்தினர். அப்போது மக்கள் அந்த கல்வியாளர்களை தேடி வந்தனர். அவர்களை நேசித்தனர். அவர்களை முன்னிலைப் படுத்தினர்.

இன்று கல்வியின் ஆரம்ப நிலையில் இருந்துகொண்டு இமாம் அஹ்மது ﵀ போன்று தானும் மக்களால் மதிக்கப்பட வேண்டும் என்று பேராசைப்படும் தத்துக் குட்டிகளை சமுதாயம் காண்கிறது.

இன்னும் பல வித்தியாசங்களை நாம் கூறிக்கொண்டே போகலாம். நமக்கும் நமது சான்றோருக்கும் எத்துனை வேறுபாடுகள்! நாம் எங்கே! அவர்கள் எங்கே!!

அல்லாஹ்வே! எங்களை மன்னித்துவிடு! பெருமையை விட்டும் முகஸ்துதியை விட்டும் பெயர், புகழை விரும்புவதை விட்டும் எங்களை பாதுகாத்துக்கொள்! மனத்தூய்மையை தா! நல்ல இல்மையும் உண்மையான ஆலிம்களின் நற்பண்புகளையும் நற்குணங்களையும் எங்களுக்கு தா!! ஆமீன்!

• • •

## இறைக்கல்வியின் மகத்தான மேன்மை!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ حَكِيمٍ الْأَوْدِيُّ حَدَّثَنَا فُضَيْلُ بْنُ عِيَاضٍ عَنْ هِشَامٍ عَنِ الْـحَسَنِ قَالَ لَبَابٌ وَاحِدٌ مِنَ الْعِلْمِ أَتَعَلَّمُهُ أَحَبُّ إِلَيَّ مِنَ الدُّنْيَا وَمَا فِيهَا

இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: கல்வியில் இருந்து ஒரு பாடத்தை நான் கற்பது எனக்கு உலகம் இன்னும் அதில் உள்ளதை விட மிக விருப்பமானதாகும்.

**விளக்கம்:** கல்வியின் அருமையை, மதிப்பை, உயர்வை இமாம் அவர்கள் மிக அழகாக ஒரே வாக்கியத்தில் இங்கு தெளிவுபடுத்தி விட்டார்கள்.

உலகில் உள்ள செல்வங்கள் எல்லாம் கிடைப்பதை விட கல்வியின் ஒரு சிறிய பகுதி கிடைத்தால் அதுவே மிகப் பெரிய பாக்கியம்.

உலகில் உள்ள செல்வங்களை பல வகைப்படுத்தலாம்.

அதிக வசதி, செல்வ செழிப்பு, பதவி, ஆட்சி அதிகாரம், உடல் ஆரோக்கியம், நற்சுகம், அழகு, உடல் உறுப்புகள் எல்லாம் சரியாக அமைந்திருப்பது, பெயர், புகழ் கிடைக்கப் பெறுவது இப்படியாக இந்த உலக செல்வங்களை வரிசைப் படுத்திக்கொண்டே போகலாம்.

இங்கு நாம் உலக செல்வங்களைப் பற்றி தெரிய வேண்டிய அநேக விஷயங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றைக் கூறுகிறோம்.

1. உலக செல்வம் அல்லாஹ்வின் பார்வையில் மதிப்பற்றது.

2. உலக செல்வம் நபி ﷺ அவர்களின் பார்வையில் மதிப்பற்றது.

3. உலக செல்வம் மனிதனை பெருமையிலும், ஆணவத்திலும், பகட்டிலும், ஆடம்பரத்திலும் தள்ளிவிடும்.

4. மனிதன் முதலில் நிம்மதிக்காக உலக செல்வத்தை தேடுவான். பிறகு அந்த செல்வமே அவனது நிம்மதியின்மைக்கு காரணமாக ஆகிவிடும்.

5. மனிதன் தனது பாதுகாப்பு, சமூக அந்தஸ்துக்காக செல்வத்தை தேடுவான். பிறகு அவன் அந்த செல்வத்தை பாதுகாப்பதில் தன்னை இழந்துவிடுவான்.

6. மனிதன் செல்வத்தை அதிகம் சேகரிக்க சேகரிக்க பொறாமைக்காரர்களையும் அது அவனுக்கு அதிகப்படுத்தும்.

7. செல்வம், அதை செலவழிக்க செலவழிக்க குறைந்துகொண்டே போகும்.

8. செல்வம் அதன் இறுதியில் பல ஆபத்துகளை உண்டாக்கும்.

9. செல்வத்தால் மனிதன் ஒருவித தனிமைக்கு ஆளாகிவிடுகிறான். எல்லோருடனும் பழகுவது, உறவுகளுடன் சகஜமாக கலந்துறவாடுவது, பாமர மக்களுடன் அமர்வது, எளிய மக்களுக்கு நெருக்கமாக இருப்பது இப்படியாக வாழ்க்கையின் பல யதார்த்தங்களை விட்டு மனிதன் தூரமாகிவிடுகிறான்.

10. செல்வம் உடையவன் அதற்கு பணிவிடை செய்துகொண்டிருப்பான்.

11. செல்வம், பல சோதனைகளுக்கு காரணமாக அமைந்துவிடும்.

இப்படி இன்னும் பல பிரச்சனைகளை செல்வம் குறித்து நாம் கூறலாம்.

ஆனால், கல்வி செல்வத்திலிருந்து இந்த எல்லா விஷயங்களிலும் வேறுபட்டு இருக்கிறது.

கல்வி அல்லாஹ்விற்கு மிக விருப்பமானது. நபி ﷺ அவர்களுக்கு மிக விருப்பமானது. கல்வி அல்லாஹ்விடம் மிக கண்ணியமானது. கல்வியையும் கல்வியாளர்களையும் அல்லாஹ் நேசிக்கின்றான்.

கல்வி, நபிமார்களுக்கு அல்லாஹ் கொடுத்த நற்பாக்கியங்களில் மிகப் பெரிய பாக்கியமாகும். அல்லாஹ் யாரை அதிகம் நேசிக்கிறானோ அவர்களுக்கு செல்வத்தை விட கல்வியைத்தான் கொடுக்கிறான். கல்வி நபிமார்களின் சொத்தாகும்.

கல்விமானை கண்ணியம் தேடி வரும். செல்வம் உள்ளவன் தனக்கு அவன் கண்ணியத்தை தேடுவான். கல்வி, அதை உடையவர்களை உயர்த்தும், பாதுகாக்கும், அவருக்கு பணிவிடை செய்வதில் மக்களை ஈடுபடுத்தும்.

கல்வியாளர் பணிவானவராக, தன்னடக்கத்துடன், அமைதியாக, சகிப்புடன், பொறுமையாக இருப்பார். மக்கள் எல்லோராலும் எளிதில் அணுகும்படி எளிமையாக இருப்பார். தனெக்கென ஒரு மதிப்பை அவராக தேடிக்கொண்டு மக்களை விட்டு விலகி இருக்க மாட்டார்.

கல்வி, அதை கற்றவர்களுக்கு நேசர்களையும், அன்பர்களையும், நல்ல நண்பர்களையும், உண்மையான ஆதரவாளர்களையும், அவருக்காக நல்ல துஆக்கள் செய்வோரையும் அதிகப்படுத்தும்.

கல்வியை பாதுகாப்பதற்கு கல்வியாளருக்கு சிரமமோ, செலவோ ஏதும் ஆகப்போவதில்லை. கல்வியை செலவழிப்பதால் அது குறைந்து விடும் என்ற பயமில்லை.

கல்வி, அதை செலவழிக்க செலவழிக்க அது அதிகமாகிக்கொண்டே போகும். ஒருவர் கல்வியாளர் என்று அறியப்பட்டாலே அவருடைய மதிப்பும் கண்ணியமும் அன்பும் மக்களின் உள்ளத்தில் வந்துவிடும். ஆனால், செல்வந்தருக்கு அப்படி இல்லை. அவர் அந்த செல்வத்தை தான தர்மம் செய்து, மக்களுக்கு, உறவுகளுக்கு, அறப் பணிகளுக்கு அள்ளிக் கொடுத்தால்தான் மக்கள் அவரை மதிப்பார்கள்.

கல்வியாளரை யாரும் பாதுகாக்க தேவை இல்லை. அவர் எங்கிருந்தாலும் பாதுகாப்பாக, நிம்மதியாக இருப்பார். செல்வந்தர் என்றும் பயத்துடன், ஒருவித பதட்டத்துடன் இருப்பார்.

கல்வியாளரிடம் மக்கள் கல்வியை கேட்டுப் பெறும்போது அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார். செல்வந்தரிடம் அவரின் செல்வத்தை கேட்டுப் பெறும்போது அவர் ஒருவித மன நெருக்கடிக்கு ஆளாகலாம்.

கல்வியாளரை உலகம் இருக்கின்ற வரை மக்கள் அவரின் கல்வியைக் கொண்டு நினைவு கூர்வார்கள். செல்வந்தர், நல்லவராக இருந்தாலும் அவரின் காலத்தில் உள்ள மக்கள் மட்டுமே நினைவு கூர்வார்கள். பிறகு மறந்துவிடுவார்கள்.

கல்வி கற்ற அறிஞர்கள் காலத்தால் மறக்கப்பட மாட்டார்கள். கல்வியாளர் அவர் எங்கிருந்தாலும் மக்களுக்கு வெளிச்சமாகவும், நன்மையாகவும், இறையருளாகவும், நன்மையை நாடுபவராகவும் இருப்பார்.

கல்வியை கற்க கற்க இறையன்பும், இறையறிவும், இறையச்சமும், உலகத்தைப் பற்றிய உண்மைகளும், மறுமை பற்றிய ஞானமும் அதிகமாகுவதுடன் உலகாசை, உலக மோகம் குறைந்து இல்லாமல் போய் விடும்.

கல்வியாளர் தன்னைச் சுற்றி மக்கள் இருந்தால் அவர்களுக்கு கற்றுக் கொடுப்பதில் பிசியாக இருப்பார். தனிமையில் இருந்தால் தனது புத்தகங்களுடன் பிசியாக இருப்பார். கல்வியாளருக்கு சடைவு, சோர்வு, வெறுமை, வெருட்சி என்பது அறவே இருக்காது. செல்வந்தன் அப்படி இருக்க மாட்டான்.

கல்வியாளருக்கு கல்வி அதிகமாக அதிகமாக மனநிம்மதியும், மன விசாலமும், உள்ளத்தில் விரிவும் ஏற்பட்டுக் கொண்டே போகும். செல்வந்தனுக்கு செல்வம் அதிகரிக்க அதிகரிக்க ஒருவித வெருட்சியும், மன நெருக்கடியும் ஏற்பட்டுக் கொண்டே போகும், அல்லாஹ் நாடிய நல்லவர்களுக்கே தவிர.

கல்வி, அடிமையையும் அரசனைப்போன்று கண்ணியமிக்கவனாக மாற்றிவிடும். கல்வியை ஒரு முறை நீ தேடி அடைந்துவிட்டால் பிறகு காலமெல்லாம் மக்கள் உன்னை தேடி வரும்படி அது செய்துவிடும். செல்வமோ அதை வாழ்நாளெல்லாம் நீ தேடி பெருக்கிக் கொண்டே இருக்க வேண்டும். நீ அதை அல்லாஹ்வின் பாதையில் செலவழித்தால் மட்டுமே மக்கள் உன்னை தேடி வருவார்கள்.

கல்வியாளர்களை அல்லாஹ் தன்னுடன் ஏகத்துவத்திற்கு சாட்சியாளர்களில் ஒருவராக ஆக்கி இருப்பதே அவர்களின் பெருமைக்கு போதுமானதாகும்.

உங்களுக்கு தெரியாததை கல்வியாளர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறி இருப்பதே அவர்களின் தேவை நமக்கு எவ்வளவு அதிகம் என்பதற்கு போதுமானதாகும்.

அறிஞர்கள்தான் அல்லாஹ்வை உண்மையில் அஞ்சுவார்கள் என்று அல்லாஹ் அவர்களை புகழ்ந்திருப்பதே அவர்கள் அல்லாஹ்விற்கு எவ்வளவு விருப்பமானவர்கள் என்பதற்கு போதுமானதாகும்.

கல்வியாளர்களின் பதவிகளை அதிகம் தான் உயர்த்துவேன் என்று அல்லாஹ் கூறி இருப்பதே மறுமையில் அவர்கள் எந்த உயர்ந்த தகுதியில் இருப்பார்கள் என்பதற்கு போதுமானதாகும்.

அறிஞர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா? என்று அல்லாஹ் கேள்வி கேட்டிருப்பதே கல்விக்கு சமமாக அல்லாஹ்வின் பார்வையில் ஏதும் இல்லை என்பதற்கு போதுமானதாகும்.

நபியே கல்வியறிவு அற்றவர்களில் நீர் ஆகிவிடாதீர்! என்று அல்லாஹ் எச்சரித்திருப்பதே கல்வி கற்காமல் இருப்பது அல்லாஹ்விற்கு மிகக் கோபமானது என்பதற்கு போதுமானதாகும்.

நபி ﷺ அவர்கள் கல்விக்கும் கல்வியாளர்களுக்கும் கூறி இருக்கின்ற சிறப்புகளோ, உயர்வுகளோ, மதிப்பு மரியாதைகளோ இந்த சிறு கட்டுரையில் கூறி முடிக்க முடியாத ஒன்றாகும்.

ஆகவேதான், இமாம் ஹசன் رحمه الله அவர்கள் எனக்கு உலகமும் உலக செல்வமும் கிடைப்பதை விட கல்வி கிடைப்பதே மிக விருப்பமானது, மிக பிடித்தமானது என்று தனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து கூறினார்கள்.

ஆம், அந்த முன்னோர் கல்வியை உண்மையாக நேசித்தார்கள், கல்வியை மதித்தார்கள், கல்விக்காக வாழ்ந்தார்கள், கல்விக்காக தங்களை அர்ப்பணம் செய்தார்கள், கல்வி கற்பது, கற்றபடி அமல் செய்வது, அதை பிறருக்கு அல்லாஹ்வின் பொருத்தம் நாடி கற்பித்து கொடுப்பது அந்த சான்றோரின் வாழ்க்கைப் பயணமாக இருந்தது.

கல்வியைத் தேடி பயணம் செய்வது, அதற்காக சிரமம் எடுப்பது, ஆசிரியருக்கு பணிவிடை செய்வது, ஆசிரியரின் கோப தாபங்களை சகித்துக் கொள்வது, ஆசிரியருடன் நேரம் கழிப்பது இதுவெல்லாம் அந்த நல்லோரின் நற்பண்பாக இருந்தன.

இன்றோ மிக சுகமாக கல்வியை தேடுகிறார்கள். கல்வி கற்பதில் மிக அலட்சியம் காட்டுகிறார்கள். கல்வி கற்பதை விட செல்வத்தை தேடுவது அவர்களுக்கு பிடித்தமாக இருக்கிறது. கல்விக்காக சிரமம் எடுக்க அவர்கள் தயாராக இல்லை. கல்வி மிக இலகுவாக கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

ஆசிரியரோடு அழகிய நட்பு இல்லை. ஆசிரியரை மதிப்பதில்லை. ஆசிரியருக்கு பணிவிடை செய்ய மனம் நாடுவதில்லை. ஆசிரியரின் கோபத்தை சகித்துக் கொள்ள மனதில் இடமில்லை. ஆசிரியர் மீது அவரின் கடின குணம் பற்றி ஆயிரம் குறை கூற முன் வருவார்கள். தமது சோம்பேறித்தனம், ஆர்வமின்மை, அலட்சியம், கடின உழைப்பின்மை குறித்து கவலைப்பட மாட்டார்கள்.

கல்விக்காக நீ உன்னை முழுமையாக கொடுக்காத வரை அது உனக்கு தன்னிலிருந்து சிறிதளவையும் கொடுக்காது என்று இமாம் ஷாஃபியி ﵀ எவ்வளவு அழகாக கூறினார்கள்.

அல்லாஹ்வே! எங்களை மன்னித்து விடு! எங்களுக்கு உனது குர்ஆன் மற்றும் நபியின் ஸுன்னாவின் கல்வி ஞானத்தைத் தா! மறுமையைப் பற்றிய அறிவை எங்களுக்குத் தா! கல்வியறிவு அற்ற வீணர்களில் எங்களை ஆக்கி விடாதே! எங்களை உனது மார்க்க கல்வியை கற்பதற்கும் அதை கற்பிப்பதற்கும் ஏற்றுக் கொள்! கற்ற கல்வியின் படி அமல் செய்ய எங்களுக்கு அருள் புரிவாயாக! ஆமீன்!

# நேர்வழியில் நடக்கிற அறிஞருக்கு அல்லாஹ்வின் பாதுகாப்பு நிச்சயம் உண்டு!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا الْـحَسَنُ بْنُ عَبْدِ الْعَزِيزِ الْمِصْرِيُّ حَدَّثَنَا أَيُّوبُ بْنُ سُوَيْدٍ الرَّمْلِيُّ حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَٰنِ بْنُ يَزِيدَ بْنِ جَابِرٍ عَنْ أَخِيهِ يَزِيدَ قَالَ لَقِيتُ وَهْبَ بْنَ مُنَبِّهٍ بِالْمَوْسِمِ فَقَالَ لِي أَلَكَ عَهْدٌ بِالْـحَسَنِ بْنِ أَبِي الْـحَسَنِ فَقُلْتُ لَهُ نَعَمْ فَقَالَ هَلْ أَنْكَرْتُمْ مِنْ عَقْلِهِ شَيْئًا فَقَالَ لَا فَقَالَ وَهْبٌ إِنَّا لَنُحَدَّثُ أَوْ قَالَ إِنَّا لَنَجِدُ فِي الْكُتُبِ أَنَّهُ مَا أُوتِيَ عَبْدٌ عِلْمًا فَسَلَكَهُ فِي سَبِيلِ هُدًى فَيَسْلُبُهُ اللهُ عَقْلَهُ أَبَدًا

யசீது ﵀ கூறுகிறார்: நான் ஹஜ்ஜுடைய காலத்தில் வஹ்ப் இப்னு முநப்பிஹ் ﵀ அவர்களை சந்தித்தேன். அவர் என்னிடம் கேட்டார்: நீங்கள் ஹசன் இப்னு அபுல் ஹசன் அவர்களை சந்தித்து பழகியதுண்டா? அதற்கு நான், ஆம் என்று பதில் கூறினேன். அவர் கேட்டார்: அவரின் அறிவில் எதுவும் நீங்கள் ஏற்க முடியாதளவு இருப்பதாக பார்த்திருக்கிறீர்களா? அதற்கு, இல்லை என்று நான் பதில் கூறினேன். பிறகு, எங்களுக்கு இப்படி ஒரு செய்தி அறிவிக்கப்படுகிறது என்று அல்லது முந்திய வேதங்களில் இவ்வாறு இருப்பதை நாங்கள் காண்கிறோம் என்று வஹ்ப் ﵀ கூறினார்: முந்திய வேதங்களில் நாங்கள் இவ்வாறு இருப்பதை காண்கிறோம்: அதாவது, ஓர் அடியானுக்கு கல்வி கொடுக்கப்பட்டு, பிறகு அவர் அதை நேர்வழியில் பயன்படுத்தினால் அல்லாஹ் அவரின் அறிவை ஒருபோதும் பறிக்க மாட்டான்.

**விளக்கம்:** வஹ்ப் இப்னு முநப்பிஹ் என்பவரைப் பற்றி முதலில் நாம் சிறிது அறிவது இங்கு பொருத்தமாக இருக்கும்.

வஹ்ப் அவர்களின் தந்தை யூத வமிசத்தைச் சேர்ந்தவர். பிறகு இஸ்லாமை ஏற்று சிறப்புற்றார். வஹ்ப் ﵀ அவர்கள் ஹிஜ்ரி 34-ல் பிறந்து ஹிஜ்ரி 110-ல் இறப்பெய்தினார்கள்.

இவரின் ஆழமான கல்வி ஞானத்தை இமாம் புகாரி, இமாம் முஸ்லிம், இமாம் அபூ தாவூத், இமாம் திர்மிதி, இமாம் நசாயி, இமாம் இப்னு மாஜா ﵏ தங்களது நூல்களில் பதிவு செய்துள்ளார்கள்.

இவர் தாபியீன்களில் மிகப் பிரபலமானவராக இருந்தார். ஹதீஸ் அறிவிப்பதில் குறைவான பங்களிப்பை செய்தாலும் குர்ஆன் விரிவுரை, முந்திய வேதங்களின் ஆழ்ந்த தத்துவங்களையும், ஞானங்களையும் எடுத்துக் கூறி மக்களுக்கு அறிவுரை வழங்குபவராக இருந்தார்.

இப்னு உமர், இப்னு அப்பாஸ் ﵃ இன்னும் சில ஸஹாபாக்களிடம் கல்வி கற்றார். வணக்க வழிபாட்டிலும் மக்களுக்கு நல்லுபதேசம் செய்வதிலும் தமது வாழ்நாளை கழித்தார். சில காலம் நீதிபதியாகவும் இருந்தார்.

ஹதீஸ் கலை அறிஞர்களிடம் நம்பிக்கைக்குரிய உறுதியான அறிவிப்பாளராக விளங்கினார்.

இமாம் வஹ்ப் அவர்கள் இமாம் ஹசன் ﵏ அவர்களைப் பற்றி விசாரித்துவிட்டு, பிறகு, தான் முந்தைய வேதங்களில் படித்ததை நினைவு கூர்ந்தார்கள். இமாம் ஹசன் அவர்கள் தங்கள் வாழ்நாளிலேயே கல்வி, ஞானம், உபதேசம் ஆகிவற்றில் மிகவும் பிரசித்திப் பெற்று இருந்தார்கள். ஆகவே, அவர்களை குறித்து விசாரித்து விட்டு பின்னர் கல்விமான்கள் பேணவேண்டிய ஒரு ஒழுக்கத்தை கூறினார்கள்.

அந்த செய்தி கல்வியாளரை அதிகம் அச்சுறுத்துகின்ற ஒன்றாகும்.

கல்வி கற்பது பெரிதல்ல. படித்து பட்டம் பெறுவது பெரிதல்ல. நூல்களை மனனம் செய்வது பெரிதல்ல.

எது பெரிது? கற்ற கல்வியை அல்லாஹ்விற்கு பயந்து நேர்வழிக்காக பயன்படுத்த வேண்டும். அந்த கல்வியில் அல்லாஹ்வை அஞ்ச வேண்டும்.

தான் எதை கற்றோமோ அதை நேரான வழியில் பயன்படுத்த வேண்டும். தான் எதை கற்றோமோ அதைக் கொண்டு அல்லாஹ்வின் அன்பையும் நெருக்கத்தையும் பொருத்தத்தையும் அடைய முயற்சிக்க வேண்டும்.

தான் எதை பயின்றோமோ அதைக் கொண்டு அல்லாஹ்வின் அடியார்களுக்கு நற்பலனளிக்க வேண்டும். அல்லாஹ்வின் அடியார்களுக்கு அல்லாஹ்வின் அச்சத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்களை அல்லாஹ்வின்

பக்கம் நெருங்குவதற்கு ஆர்வமூட்ட வேண்டும். அல்லாஹ்விடமிருந்து அவர்களை நிராசைப்படுத்தக் கூடாது. மார்க்க கட்டளைகளை பேணுவதில் அவர்களுக்கு உறுதியை ஏற்படுத்த வேண்டும். பாவங்கள் மீது வெறுப்பை ஏற்படுத்த வேண்டும்.

அல்லாஹ் மகா மன்னிப்பாளன் என்று கூறி அல்லாஹ்விற்கு மாறு செய்வதில் துணிவை ஏற்படுத்தக் கூடாது. அல்லாஹ் பெரும் மன்னிப்பாளன் என்று கூறுவது அல்லாஹ்விடம் அடியார்கள் பாவமன்னிப்பு தேடுவதற்கு தூண்ட வேண்டும். அல்லாஹ் கடுமையான தண்டனை அளிப்பவன் என்று கூறுவது அவர்கள் பாவங்களை விட்டு விலகி தவ்பா செய்வதற்கு தூண்ட வேண்டும். அல்லாஹ்வை விட்டு அவர்கள் வெருண்டு ஓடுவதற்கு வழிவகுத்துவிடக் கூடாது.

மார்க்க அறிஞரின் உபதேசங்கள் மக்களுக்கு ஹலாலான வாழ்க்கையின் மீது ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். ஹராமை விட்டு விலகி இருக்க வேண்டும் என்ற மார்க்கப்பற்றையும் பேணுதலையும் உண்டாக்க வேண்டும்.

மார்க்க கல்வி கற்று மார்க்கத்தை பிரச்சாரம் செய்பவர் மக்களுக்கு மறுமையை நினைவூட்டுபவராக இருக்க வேண்டும். மவ்த்தையும் (-மரணத்தையும்) கப்ரையும் (-மண்ணறையையும்) நினைவூட்ட வேண்டும். மார்க்க அறிஞர் மக்களுக்கு மறுமை வாழ்க்கையை நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். மறுமையின் மீது ஆசையை ஏற்படுத்த வேண்டும். சொர்க்க வாழ்க்கையை எடுத்துச் சொல்லி அதன் மீது தேடலை அதிகப்படுத்த வேண்டும். நரகத்தை குறித்து சதா பயமுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

மார்க்க அறிஞர் மக்களுக்கு உலக பற்றின்மையை தூண்ட வேண்டும். நபிமார்கள், நல்லோரின் ஆதாரப்பூர்வமான வரலாறுகளை எடுத்துக் கூறி எளிமையான, ஹலாலான, பகட்டற்ற வாழ்க்கை மீது ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

மார்க்க அறிஞர் குர்ஆன் வசனங்களுக்கு சுய விளக்கம் கொடுப்பதை தவிர்க்க வேண்டும். முன்னோர் கூறிய சரியான விளக்கத்தை எடுத்துக் கூற வேண்டும். பலவீனமான, பொய்யான ஹதீஸ்களை, பொய்யான கதைகளை, ஆதாரமற்ற வரலாறுகளை மக்களுக்கு முன்னால் கூறக் கூடாது.

தனக்கு புரியாத செய்திகளை மக்களுக்கு முன் கூறி குழப்பக் கூடாது. மக்களின் அறிவுக்கு எட்டாத செய்திகளை அவர்களிடம் பேசக் கூடாது.

தான் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அவனது தீனை எடுத்துச் சொல்கிற பணியை செய்கிறோம், நபிமார்கள் செய்த அழைப்புப் பணியை செய்கிறோம்

என்பதை உணர்ந்து, பயந்து, அடக்கத்துடன் பிரச்சாரம் செய்ய வேண்டும், மனத்தூய்மையை கண்காணித்துக்கொண்டே இருக்க வேண்டும். பெயர், புகழை, மக்களின் பாராட்டை, விளம்பரமாகுவதை, பிரபல்யமடைவதை விரும்பக்கூடாது, ஆசைப்படக் கூடாது, எதிர்பார்க்கக்கூடாது.

மார்க்க அறிஞர் எப்போதும் மக்களுக்கு அவர்களின் ஈமானை பலப்படுத்தக்கூடிய, யக்கீனை உறுதிப்படுத்தக்கூடிய, மார்க்கப்பற்றை அதிகப்படுத்தக்கூடிய அறிவுரைகளை வழங்க வேண்டும்.

அறிஞரின் அறிவுரை, மக்கள் தங்களுக்குள் பரஸ்பர அன்பை பரிமாறிக்கொள்ள தூண்ட வேண்டும். மக்கள் தங்களுக்குள் நற்குணங்களை கடைப்பிடிக்க ஆர்வமூட்ட வேண்டும். நல்ல சமூக அமைப்பை, உறுதியான சமுதாயத்தை, நம்பிக்கை, நேர்மை, ஒழுக்கம், மன்னித்தல், விட்டுக்கொடுத்தல், ஒருவருக்கொருவர் உதவுதல் என்ற உயர்ந்த பண்பாடுகளை கட்டி எழுப்ப தூண்ட வேண்டும்.

அறிஞரின் போதனைகள் மக்களுக்குள் வெறுப்பை விதைக்க கூடாது. அவர்களுக்குள் பகைமை நெருப்பை மூட்டக் கூடாது. காழ்ப்புணர்ச்சிகளை உண்டாக்கக் கூடாது.

மார்க்க அறிஞர் பிடிவாதம் பிடிப்பவராக, பெருமையடிப்பவராக, தற்புகழ்ச்சி பேசுபவராக, முகஸ்துதிக்காரராக, பொய்பேசுபவராக, ஏமாற்றுபவராக, பொறாமைப்படுபவராக அறவே இருக்கக் கூடாது.

தனது தவறை யாரும் சுட்டிக்காட்டினால் உடனே அதை ஏற்று திருத்திக் கொள்பவராக இருக்க வேண்டும். தான் ஒரு சபையில் இருக்கும்போது அந்த சபையில் வேறு அறிஞர்களும் இருந்தால் அவர்களை மதித்து நடக்க வேண்டும். அவர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும். அவர்களைப் பார்க்கிலும் தன்னை சிறப்புப்படுத்தி காட்டக் கூடாது. பிற அறிஞர்களின் குறையை அவர்களிடம் கூறும்போது அடக்கத்துடன் அவர்களின் மனம் கஷ்டப்படாதவாறு எடுத்துக் கூற வேண்டும்.

மக்களுக்கு சடைவு ஏற்படும் அளவிற்கு நீண்ட நெடிய உரையும் ஆற்றக் கூடாது. அல்லது கருத்தை சரியாக புரிய வைக்க முடியாத அளவிற்கு சுருக்கமாகவும் அவரின் உரை இருக்கக் கூடாது.

உலகாதாயத்தை ஆசைப்பட்டு, பெயர் புகழை விரும்பி மார்க்க பிரச்சாரம் செய்வதில் ஈடுபடக் கூடாது.

அழைப்புப் பணி, பிரச்சாரப் பணி, கல்வி கற்பித்தல், தனி நபருக்கு ஒழுக்கம் போதித்தல் என அறிஞர் தனது துறையில் நன்கு தேர்ச்சி பெற்றவராக, அது

குறித்து அனுபவம் உள்ளவராக, அது குறித்து கல்வி ஞானம் உள்ளவராக இருக்க வேண்டும்.

தனக்கு தகுதி இல்லாததை பேசக் கூடாது. ஆதாரமில்லாததை பரப்பக் கூடாது. யார் மீதும் பழி சுமத்தக் கூடாது. பாவங்களை எடுத்துக் கூறும்போது அல்லாஹ் தன்னை அந்த பாவத்தில் சோதித்துவிடக் கூடாது என்ற பயம் இருக்க வேண்டும்.

கல்வியாளர் அல்லாஹ்வின் அடியார்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்கும் அவனது மார்க்கத்தை போதிப்பதற்கும் இருக்கிறார். அதற்கு மாற்றமாக கல்வியாளர் மக்களை தனது அறிவின் பக்கம், தனது சிந்தனையின் பக்கம், தனது கொள்கையின் பக்கம் அழைப்பவராக, தன் பக்கம் அழைப்பவராக, தனக்கு கூட்டத்தை சேர்ப்பவராக இருக்கக் கூடாது.

மார்க்க அறிஞர் வணக்க வழிபாட்டில் தானும் ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும். மக்களுக்கும் அதன் மீது ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். தொழுகை, நோன்பு, தர்மம், ஹஜ், உம்ரா, குர்ஆன் ஓதுதல், இறை தியானம் செய்தல் ஆகியவற்றை மக்களுக்கு கற்றுக்கொடுத்து அவற்றின் ஆசையை ஏற்படுத்தி, மக்கள் அதிகமதிகம் அவற்றில் ஈடுபடும்படி மக்களை தூண்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

மக்களிடம் மார்க்க விஷயத்தில் அலட்சியத்தை காணும்போதெல்லாம் மக்களுக்கு மறுமையை எடுத்துக் கூறி மார்க்கத்தில் பற்றை அதிகரிக்க செய்ய வேண்டும்.

மக்களிடம் பேசும்போது அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து அது பற்றி குர்ஆன், ஸுன்னாவிலிருந்து ஆதாரத்துடன் பேச வேண்டும். ஆதாரமற்றதை ஒருபோதும் பரப்பக் கூடாது, பேசக் கூடாது.

எப்போதும் நன்மையை நாட வேண்டும், மக்களிடம் கூலியை எதிர்பார்க்கக் கூடாது. அல்லாஹ் தனக்கு கொடுத்ததைக் கொண்டு திருப்திபட வேண்டும். எப்பொழுதும் அல்லாஹ்வை புகழ்ந்துகொண்டே இருக்க வேண்டும். தானும் அதிகம் துஆவில் ஈடுபடுவதுடன் மக்களையும் அல்லாஹ்விடம் துஆ கேட்பதில் அதிகம் ஈடுபடும்படி தூண்ட வேண்டும்.

இன்னும் இதுபோன்ற பல நன்மையான, உண்மையான, நேர்வழி உடைய விஷயங்களில் ஆலிம் - கல்வியாளர் தனது கல்வியை பயன்படுத்தினால் அல்லாஹ் அவரின் அறிவில் அவருக்கு பரகத் செய்வான். அவரது அறிவை அதிகப்படுத்துவான். அவரின் புத்தி பேதலிக்காதபடி, அவரின் மூளை குழம்பாதபடி, அவர் முன்னுக்குப்பின் முரணாக பேசாதபடி அல்லாஹ்

அவரை பாதுகாத்துக் கொள்வான். அவரை எப்போதும் தன் அரவணைப்பில், தனது பாதுகாவலில், தனது கருணையில் வைப்பான்.

இத்தகைய ஓர் ஆலிமாக - அறிஞராக இமாம் ஹசன் ﷺ அவர்கள் திகழ்ந்தார்கள். அல்லாஹ் அன்னாரை பொருந்திக் கொள்வானாக! அவர்களை அல்லாஹ் மன்னித்து நல்லோருடன் சேர்த்து வைப்பானாக! அவர்களுடனும் அவர்களைப் போன்ற சான்றோர் உடனும் நம்மையும் அல்லாஹ் சேர்த்து வைப்பானாக!

அவர்கள் நடந்த அதே பாதையில் அல்லாஹ் நம்மையும் நடக்க வைப்பானாக! அவர்கள் சென்ற அதே நேர்வழியில் நம்மையும் அல்லாஹ் வழிநடத்துவானாக! ஆமீன். தானும் நேர்வழிபெற்று பிறமக்களும் நேர்வழிபெற காரணமாக இருக்கும் ஆலிம்களின் கூட்டத்தில் அல்லாஹ் என்னையும் உங்களையும் ஆக்குவானாக!

இதற்கு மாற்றமாக ஒருவர் தான் கற்ற கல்வியை தவறான வழியில், ஷைத்தானுக்கு பிடித்தமான வழியில், தனது மன இச்சைக்கு ஏற்ப, மக்களை வழிகெடுக்க, மார்க்கத்தை தனது சுய ஆதாயத்திற்காக பயன்படுத்தினால் அல்லாஹ் அவரை கண்டிப்பாக இஸ்ரவேலர்களில் இருந்த கெட்ட ஆலிம்களை தண்டித்தது போன்று தண்டிப்பான், கேவலப்படுத்துவான். இம்மையை விட மறுமையின் தண்டனை மிக பயங்கரமானது, கடுமையானது. அல்லாஹ் பாதுகாப்பானாக!

அல்லாஹ்வே! எங்களுக்கு நற்பலனை தருகிற கல்வியை கொடு! பலன் தராத கல்வியிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக! நேர்வழியின் கல்வியை எங்களுக்கு கொடு! வழிகேட்டை உண்டாக்குகிற கல்வியிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக. மார்க்க கல்வியை கற்று, அதன்படி அமல் செய்து, அதை பிற மக்களுக்கும் எடுத்துரைக்கிற நற்பாக்கியத்தை எங்களுக்கு தா! இறையச்சமும் நல்லமலும் பெற்ற அறிஞர்களில் எங்களை ஆக்குவாயாக. உலகாசை பிடித்த, உலகத்திற்காக மார்க்கத்தை விற்கிற அறிஞர்களில் எங்களை ஆக்கிவிடாதே! கல்வியை கொண்டு புகழை, பிரபலமாகுவதை, மக்களை கவர்வதை விரும்புகிற ஆலிம்களில் எங்களை ஆக்கிவிடாதே! எங்களை மன்னிப்பாயாக! நீ மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன். ஆமீன்!

# சான்றோர் உணவு பழக்கம்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ عُمَرَ حَدَّثَنَا الْمِنْهَالُ يَعْنِي ابْنَ عِيسَىٰ عَنْ عُقْبَةَ الرَّاسِبِيِّ قَالَ دَخَلْتُ عَلَى الْحَسَنِ فَوَافَيْتُهُ يَتَغَذَّىٰ خُبْزًا وَلَحْمًا فَقَالَ هَلُمَّ إِلَىٰ طَعَامِ الْأَحْرَارِ فَقُلْتُ أَكَلْتُ لَا أَسْتَطِيعُ أَنْ آكُلَ فَقَالَ سُبْحَانَ اللهِ وَيَأْكُلُ الْمُسْلِمُ حَتَّىٰ لَا يَسْتَطِيعَ أَنْ يَأْكُلَ

உக்பா ராசிபி ﵀ கூறுகிறார்: நான் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம் சென்றேன். அவர்கள் ரொட்டி இன்னும் கறி சாப்பிட்டுக் கொண்டிருக்க அவர்களை கண்டேன். அவர்கள் கூறினார்கள்: சுதந்திரமானவர்களின் உணவை உண்ண வருவீராக! நான் கூறினேன்: நான் சாப்பிட்டு விட்டேன். இனி, என்னால் (இப்போது) சாப்பிடவே முடியாது. அதற்கு இமாம் கூறினார்கள்: சுப்ஹானல்லாஹ்! அடுத்து சாப்பிடவே முடியாதளவு (முழு வயிறு நிரம்பவா) முஸ்லிம் சாப்பிடுவார்?

**விளக்கம்:** இமாம் ஹசன் ﵀ அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வும் மிகுந்த படிப்பினையுடன் இருப்பதை பார்க்கிறோம். இந்த நிகழ்வில் உள்ள பாடங்களையும் படிப்பினைகளையும் இப்போது பார்ப்போம்:

1. இமாம் ஹசன் ﵀ அவர்கள் நபி ﷺ அவர்கள் இன்னும் நபித்தோழர்களின் வழிமுறையை அழகிய முறையில் பின்பற்றி வாழ்ந்தார்கள்.

2. எந்த உணவு கிடைக்குதோ அதை அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தி உண்பவர்களாக இருந்தார்கள்.

3. போலி சூஃபிசம், பகட்டு துறவறம் பேசிக்கொண்டு அல்லாஹ் ஹலால் ஆக்கியதை ஹராமாக ஆக்குகின்ற மார்க்கம் வெறுக்கின்ற பழக்கத்தை விட்டு இமாம் அவர்கள் தூரமாக இருந்தார்கள்.

4. பசிக்கு உணவு வேண்டும். அந்த உணவு ஹலாலாக இருக்க வேண்டும். இதுதான் இறை நேசர்களின் பண்பாடாகும். நான் இதைத்தான் சாப்பிடுவேன், இதை சாப்பிட மாட்டேன் என்று தங்களுக்கென ஒரு விதியை அவர்கள் வகுத்துக் கொள்ள மாட்டார்கள்.

5. ஆடம்பரமான உணவை, பல வகையான உணவை தேடவும் மாட்டார்கள். நான் எளிமையானவன், அல்லது நான் ஒரு உலக பற்று இல்லாதவன், நான் ஒரு சூஃபி என்று கூறிக்கொண்டு தனக்கு முன் வரும் உணவை புறக்கணிக்கவோ ஒதுக்கவோ மாட்டார்கள்.

6. மக்களோடு மக்களாக, அவர்களில் ஒருவராக, தனக்கென தனி இடத்தை ஒதுக்காமல், எல்லோருடனும் கலந்து சகஜமாக உண்பது, பழகுவது, அவர்களுடன் பேசுவது, அவர்களின் சுக துக்கங்களில் பங்கெடுப்பது இமாம் அவர்களின் பழக்கமாக இருந்தன. இதுதான் நபி ﷺ அவர்கள் கற்றுத் தந்த பண்பாகும்.

7. தன்னை சந்திக்க வருபவர்களை தடுக்காமல், அவர்களை முக மலர்ச்சியுடன் வரவேற்று தான் உண்ணும் உணவில் அவர்களையும் கலந்துகொள்ள அழைத்தார்கள்.

8. உண்மையான முஸ்லிம் உணவின் அளவின் மீது நம்பிக்கை வைக்க மாட்டார். அல்லாஹ்வின் பரகத்தை நம்புவார். உணவு குறைவாக இருந்தாலும் அல்லாஹ் அதில் பரகத் செய்வான் என்று அல்லாஹ்வின் அருள் மீது நம்பிக்கை வைப்பார்.

9. வருபவரை முக மலர்ச்சியுடன் வரவேற்பதும் அவரை தன்னுடன் உணவில் சேர்த்துக் கொள்வதும் உண்மை முஃமின்களின் பண்பாகும்.

10. மேலும் வெறும் பகட்டுக்காக, அல்லது பெயருக்காக, முகஸ்துதிக்காக யாரையும் விருந்துக்கு அழைக்க மாட்டார். உண்மையான உள்ளத்துடன், மனப்பூர்வமாக அழைப்பார்.

11. வெறும் வாய்வழியாக அழைத்துவிட்டு, உள்ளத்தால் சங்கடப்படுபவராக உண்மை முஸ்லிம் இருக்க மாட்டார்.

12. அடிமைகளுக்கும், கைதிகளுக்கும், ஏழைகளுக்கும் ரொட்டியும் மாமிசமும் அதிகமான நேரங்களில் கிடைப்பது கிடையாது. எனவேதான் அந்த உணவின் பக்கம் அழைக்கும்போது அஹ்ரார் - சுதந்திரமானவர்களின் உணவை உண்ண வா என்று மகிழ்வோடு இமாம் அழைக்கிறார்கள்.

13. தனக்கு பிரியமானதை பிறருக்கு கொடுப்பது, மற்றவருடன் அதை பகிர்ந்து உண்ணுவது மிக உயர்ந்த பண்பாகும்.

14. அதனால் தனக்கு குறைந்து விடும், தனக்கு இல்லாமல் போய்விடும் என்று ஒருபோதும் உண்மை முஸ்லிம் கருத மாட்டார்.

15. வயிறு புடைக்க உண்பது, தொண்டைக் குழி வரை சாப்பிடுவது, வயிற்றில் இடமில்லாத அளவு வயிற்றை நிரப்புவது, மூச்சு முட்டுமளவு தின்பது இறை நேசர்களின் பண்பல்ல. அது நபி ﷺ அவர்கள் கற்றுக் கொடுத்த ஒழுக்கமுமல்ல.

16. உணவு எவ்வளவுதான் விருப்பமானதாக இருந்தாலும், பசி எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும், உணவின் மீது ஆசை எவ்வளவு அதிகம் இருந்தாலும் நபி ﷺ அவர்கள் கற்றுக் கொடுத்த ஒழுக்கத்தின் பிரகாரம் முஸ்லிம்களாகிய நாம் உணவு உண்ண வேண்டும். அதாவது, முதுகை நிமிர்த்த சில கவளங்கள், அல்லது வயிற்றில் மூன்றில் ஒரு பகுதி உணவிற்கு, இன்னொரு பகுதி தண்ணீருக்கு, இன்னொரு பகுதி காற்றுக்கு. இவ்வாறு தனது உணவின் பழக்கத்தை நாம் வைத்துக் கொள்ள வேண்டும். இதுவே ஆரோக்கியமான உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லதாகும்.

17. ஓர் அளவோடு சாப்பிட்டு பழகுவது மனதில் உணவின் மீது பேராசை ஏற்படுவதை விட்டும் பாதுகாக்கும். இன்னும் மிருகங்கள் உணவை கண்டால் அதன் மீது சண்டையிட்டுக் கொண்டு விழுவதைப் போல் மனிதன் மாறுவதை விட்டும் அவனை பாதுகாக்கும்.

18. உணவு மனிதனுக்கு தேவை, மனிதனுக்கு ருசியான உணவின் மீது பிரியம் வருவது இயல்பு, மணமான ருசியான உணவைக் கண்டால் நாவில் எச்சில் ஊறுவது இயல்பு. ஆனால், அதற்காக மிருகங்களைப் போல் மனிதன் வயிறு புடைக்க உண்ணக் கூடாது, தின்றுவிட்டு திக்குமுக்காடும் அளவிற்கு தின்னக் கூடாது.

19. உணவைப் பார்த்தவுடன் பேராசையுடன் ஹவா நஃப்சுடன் அதன் பக்கம் கைகளை நீட்டக் கூடாது.

20. நிதானமாக அமர்ந்து, அமைதியாக, சிறுசிறு கவளமாக, விரல்களின் முன் பகுதிகளைக் கொண்டு எடுத்து உண்ண வேண்டும். வயிற்றில் பசி இன்னும் மீதம் இருக்கும் போது அந்த உணவை விட்டு எழுந்து விட வேண்டும்.

இப்படியாக பல பாடங்களை நாம் இந்த நிகழ்வில் அறிகிறோம்.

அல்லாஹ்வே! நல்லோர் உடைய ஒழுக்கங்களை பின்பற்றுபவர்களாக எங்களை ஆக்குவாயாக. பேராசையிலிருந்தும் தீய பழக்கங்களிலிருந்தும் கெட்ட குணங்களிலிருந்தும் எங்களை பாதுகாப்பாயாக. உயர்ந்த பண்பாடுகளை உடையவர்களாக எங்களை ஆக்குவாயாக. ஆமீன்!

• • •

# தர்மத்தின் ஒழுக்கம்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ عُمَرَ حَدَّثَنَا حَمَّادُ بْنُ زَيْدٍ عَنْ أَيُّوبَ قَالَ سَمِعْتُ الْـحَسَنَ يَقُولُ إِنَّ الْمُؤْمِنَ أَخَذَ عَنِ اللهِ أَدَبًا حَسَنًا إِذَا وَسَّعَ عَلَيْهِ أَوْسَعَ وَإِذَا أَمْسَكَ عَلَيْهِ أَمْسَكَ

இமாம் ஹசன் பஸரி ﵀ கூற நான் செவியுற்றேன் என்று அய்யூப் ﵀ கூறுகிறார்: நிச்சயமாக முஃமின் - நம்பிக்கையாளர், அல்லாஹ்விடமிருந்து அழகிய ஒழுக்கத்தை கற்றிருக்கிறார். அல்லாஹ் அவருக்கு வசதி கொடுத்தால் அவரும் விசாலமாக தர்மம் செய்கிறார். அல்லாஹ் அவருக்கு தடுத்தால் அவரும் தடுத்துவிடுகிறார். (-குறைவாக கொடுத்தால் அவரும் குறைவாக கொடுக்கிறார்.)

**விளக்கம்:** இமாம் அவர்களின் இந்தக் கூற்றை மிகவும் நுணுக்கமாக நாம் கவனிக்க வேண்டும்.

இமாம் அவர்கள் இந்தக் கூற்றில் தர்மம் செய்வதைப் பற்றி அழகிய ஒழுக்கத்தை கற்றுத் தருகிறார்கள்.

அதாவது, அடியான் அல்லாஹ்வின் பக்கம் எப்போதும் தேவையுள்ளவன். அல்லாஹ்வின் அருளை அடியான் எப்போதும் எதிர்பார்த்தவனாக இருக்கிறான்.

அல்லாஹ் தனக்கு அருள்களை அதிகப்படுத்தும்போது, செல்வத்தின் வாசல்களை திறக்கும்போது அடியானும் தர்மம் செய்வதில் விசாலத்தை கடைப்பிடிக்க வேண்டும். கடமையான தான தர்மம் போக உபரியான தான தர்மங்களிலும் தனது பங்களிப்பை செய்ய வேண்டும்.

தன்னை நாடி வருபவர்களுக்கு வாரி வழங்க வேண்டும். உறவுகளுக்கு தேடிச் சென்று உதவ வேண்டும். நண்பர்களையும் அவர்களின் தேவைகளையும்

அறிய வேண்டும். அவர்களின் கடன்கள் நீங்க உதவ வேண்டும். அல்லாஹ்வின் மார்க்கம் பரவுவதற்கு தேவையான வழிகளில் செலவு செய்ய வேண்டும்.

அழைப்புப் பணியில் பெரும் பங்களிப்பு செய்ய வேண்டும். புதிதாக இஸ்லாமிய மார்க்கத்தை தழுவிய சகோதர சகோதரிகள் தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்டிருப்பார்கள். ஆகவே, அவர்களை அரவணைக்க வேண்டும். அவர்களின் கல்வி, மருத்துவ தேவைகளுக்கு உதவ வேண்டும். அவர்களின் திருமண செலவுகள், கடன்கள் போன்றவற்றை அறிந்து அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

ஏழை மாணவர்களின் கல்வி செலவுகளுக்கு தாராள மனதுடன் கொடுத்து உதவ வேண்டும். கஷ்டப்படுகிற அண்டை வீட்டார்களுக்கு உதவ வேண்டும்.

அல்லாஹ் கொடுத்த செல்வம் என்பது, தான் சுகமாக வசதியாக வாழ மட்டுமல்ல. மாறாக, அல்லாஹ் இந்த செல்வத்தை கொடுத்து என்னை சோதிக்கிறான் என்பதை புரிந்து, அதன் படி அல்லாஹ்வை பயந்து, செல்வத்தை எப்படி செலவு செய்ய வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகிறானோ அப்படி செலவு செய்ய வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَسْأَلُونَكَ مَاذَا يُنْفِقُونَ قُلْ مَا أَنْفَقْتُمْ مِنْ خَيْرٍ فَلِلْوَالِدَيْنِ وَالْأَقْرَبِينَ وَالْيَتَامَىٰ وَالْمَسَاكِينِ وَابْنِ السَّبِيلِ وَمَا تَفْعَلُوا مِنْ خَيْرٍ فَإِنَّ اللَّهَ بِهِ عَلِيمٌ ○

அவர்கள் "எதைத் தர்மம் புரியவேண்டும்?" என்று உம்மிடம் கேட்கிறார்கள். நபியே! கூறுவீராக: "செல்வத்திலிருந்து நீங்கள் எதைத் தர்மம் செய்தாலும் (அது) பெற்றோர், உறவினர்கள், அநாதைகள், ஏழைகள், வழிப்போக்கர்களுக்கு (செய்யவேண்டும்). நன்மையிலிருந்து நீங்கள் எதைச் செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை மிக அறிபவன் ஆவான்." (அல்குர்ஆன் 2 : 215)

الَّذِينَ يُنْفِقُونَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ○

தங்கள் செல்வங்களை இரவிலும், பகலிலும் இரகசியமாகவும், வெளிப்படையாகவும் தர்மம் புரிபவர்கள், அவர்களுக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு; அவர்கள் மீது பயமில்லை; அவர்கள் துக்கப்பட மாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 274)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَلَا اقْتَحَمَ الْعَقَبَةَ۝ وَمَا أَدْرَاكَ مَا الْعَقَبَةُ۝ فَكُّ رَقَبَةٍ۝ أَوْ إِطْعَامٌ فِي يَوْمٍ ذِي مَسْغَبَةٍ۝ يَتِيمًا ذَا مَقْرَبَةٍ۝ أَوْ مِسْكِينًا ذَا مَتْرَبَةٍ۝ ثُمَّ كَانَ مِنَ الَّذِينَ آمَنُوا وَتَوَاصَوْا بِالصَّبْرِ وَتَوَاصَوْا بِالْمَرْحَمَةِ۝ أُولَٰئِكَ أَصْحَابُ الْمَيْمَنَةِ۝

அவன் ‘அகபா’வைக் கடக்கவில்லை. (நபியே!) ‘அகபா’ என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது? (அது) ஓர் அடிமையை விடுதலை செய்தல், அல்லது கடும் பசியுடைய நாளில் உணவளிப்பது, உறவினரான ஓர் அனாதைக்கு, அல்லது வறியவரான ஓர் ஏழைக்கு (உணவளிப்பதாகும்). பிறகு, நம்பிக்கையைக் கொண்டவர்களிலும், பொறுமையைக் கொண்டு உபதேசித்துக் கொண்டவர்களிலும், கருணையைக் கொண்டு உபதேசித்துக் கொண்டவர்களிலும் அவர் ஆகிவிட வேண்டும். (அல்குர்ஆன் 90 : 11-18)

இன்னும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ الَّذِينَ يَتْلُونَ كِتَابَ اللَّهِ وَأَقَامُوا الصَّلَاةَ وَأَنْفَقُوا مِمَّا رَزَقْنَاهُمْ سِرًّا وَعَلَانِيَةً يَرْجُونَ تِجَارَةً لَنْ تَبُورَ۝

நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஓதுகின்றார்களோ, இன்னும் தொழுகையை நிலைநிறுத்தி, நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து இரகசியமாகவும் வெளிப்படையாகவும் தர்மம் செய்தார்களோ அவர்கள் அறவே அழிந்து போகாத வியாபாரத்தை ஆதரவு வைக்கின்றனர் (அல்குர்ஆன் 35 : 29)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَآتِ ذَا الْقُرْبَىٰ حَقَّهُ وَالْمِسْكِينَ وَابْنَ السَّبِيلِ ذَٰلِكَ خَيْرٌ لِلَّذِينَ يُرِيدُونَ وَجْهَ اللَّهِ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ۝

ஆகவே, உறவினருக்கு அவருடைய உரிமையையும் வறியவருக்கும் வழிப்போக்கருக்கும் (அவரவர்களுடைய உரிமைகளையும்) கொடுப்பீராக! அல்லாஹ்வின் முகத்தை நாடுவோருக்கு இதுதான் சிறந்ததாகும். இவர்கள்தான் வெற்றியாளர்கள். (அல்குர்ஆன் 30 : 38)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا آتَيْتُمْ مِنْ رِبًا لِيَرْبُوَ فِي أَمْوَالِ النَّاسِ فَلَا يَرْبُو عِنْدَ اللهِ وَمَا آتَيْتُمْ مِنْ زَكَاةٍ تُرِيدُونَ وَجْهَ اللهِ فَأُولَٰئِكَ هُمُ الْمُضْعِفُونَ○

மக்களின் செல்வங்களில் வளர்ச்சி காணுவதற்காக (பிரதிபலனை எதிர்பார்த்து) அன்பளிப்புகளிலிருந்து எதை நீங்கள் கொடுத்தீர்களோ அது அல்லாஹ்விடம் வளர்ச்சி காணாது. அல்லாஹ்வின் முகத்தை நீங்கள் நாடியவர்களாக தர்மங்களிலிருந்து எதை நீங்கள் கொடுத்தீர்களோ (அதுதான் வளர்ச்சி அடையும். அப்படி கொடுக்கின்ற) அவர்கள்தான் (தங்கள் செல்வங்களையும் நன்மைகளையும்) பன்மடங்காக்கிக் கொள்பவர்கள். (அல்குர்ஆன் 30 : 39)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَثَلُ الَّذِينَ يُنْفِقُونَ أَمْوَالَهُمُ ابْتِغَاءَ مَرْضَاتِ اللهِ وَتَثْبِيتًا مِنْ أَنْفُسِهِمْ كَمَثَلِ جَنَّةٍ بِرَبْوَةٍ أَصَابَهَا وَابِلٌ فَآتَتْ أُكُلَهَا ضِعْفَيْنِ فَإِنْ لَمْ يُصِبْهَا وَابِلٌ فَطَلٌّ وَاللهُ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ○

தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் திருப்தியைத் தேடியும் தங்கள் உள்ளங்களில் (இறை நம்பிக்கையை) உறுதிப்படுத்துவதற்காகவும் தர்மம் புரிகிறவர்களின் (தர்மத்திற்கு) உதாரணம், உயர்ந்த பூமி(யாகிய மலை)யிலுள்ள ஒரு தோட்டத்தின் உதாரணத்தைப் போன்றாகும். அதை அடைமழை அடைந்தது. ஆகவே, அது இரு மடங்குகளாக தன் பலனைத் தந்தது. அதைப் பெருமழை அடையாவிட்டாலும் சிறு தூறல் (அடைவது போதும்). அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை உற்று நோக்குபவன்.

(அல்குர்ஆன் 2 : 265)

இந்த உலகத்தில் அடியான் எதை அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்கிறானோ அதை அவன் மறுமையில் அல்லாஹ்விடம் முழுமையாக பெற்றுக்கொள்ளப் போகிறான். அடியானின் தர்மங்களில் ஏதும் வீணாகிவிடாது.

அடியான் கொடுக்கின்ற தர்மம் இவ்வுலகிலும் அதன் நன்மையை அவன் கண்டிப்பாக அடையப் பெறுவான். மறுமையிலோ அதன் கூலியை மிக மகத்தான நன்மையாக அவன் அடைவான்.

ஆகவே, அடியான் எப்போதும் தர்மம் செய்வதில் கவனமுள்ளவனாகவும் ஆர்வமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். தனது தேவைக்கு மேல் அதிகமாக இருப்பதை அல்லாஹ்வின் பாதையில் செலவழித்து தனது மறுமையை சிறப்பாக்கி கொள்ள வேண்டும். அடியான் எதை அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்தானோ அதுதான் அவனது உண்மையான செல்வம் என்பதை அவன் புரிய வேண்டும்.

சில நேரங்களில் தனது வாழ்வாதாரம் குறைவாக இருக்கும் போது, அதற்கேற்ப அவன் தர்மத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். முற்றிலுமாக தர்மத்தை நிறுத்தியும் விடக் கூடாது, அதுபோன்று வசதியான காலத்தில் செலவழித்தது போன்று செலவழித்துவிட்டு பிறகு கைசேதப்படக் கூடாது. நாளை இவனுக்கு தேவை ஏற்படும்போது இவன் பிறரிடம் கையேந்தும் நிலை வந்துவிடக் கூடாது.

இது குறித்து அழகிய வழிகாட்டலை அல்லாஹு தஆலா கூறுகிறான்

وَلَا تَجْعَلْ يَدَكَ مَغْلُولَةً إِلَىٰ عُنُقِكَ وَلَا تَبْسُطْهَا كُلَّ الْبَسْطِ فَتَقْعُدَ مَلُومًا مَّحْسُورًا ○

உனது கரத்தை உனது கழுத்துடன் கட்டப்பட்டதாக ஆக்கிவிடாதே! இன்னும் அதை முற்றிலும் விரித்துவிடாதே! அப்படி நீ செய்துவிட்டால் பழிக்கப்பட்டவனாகவும் கைசேதப்பட்டவனாகவும் உட்கார்ந்துவிடுவாய்! (அல்குர்ஆன் 17 : 29)

அல்லாஹ்வுடைய நல்லடியார்கள் எல்லா காலங்களிலும் தமது செல்வத்தை அல்லாஹ்வின் பாதையில் ஏழை எளிய மக்களுக்கு தான தர்மம் செய்து கொண்டே இருப்பார்கள். தாங்கள் வறுமையில் இருந்தாலும் முடிந்ததை தர்மம் செய்வார்கள். அறவே அவர்கள் தர்மத்தை நிறுத்திவிட மாட்டார்கள்.

அல்லாஹ் அடியார்களை கொடுத்தும் சோதிப்பான். சில நேரம் தடுத்தும் சோதிப்பான். வறுமை, நெருக்கடி ஏற்பட்டாலும் ஓர் உண்மை முஸ்லிம் தன்னால் முடிந்ததை அவர் தானமாக கொடுப்பார்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَسَارِعُوا إِلَىٰ مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمَاوَاتُ وَالْأَرْضُ أُعِدَّتْ لِلْمُتَّقِينَ ۝ الَّذِينَ يُنْفِقُونَ فِي السَّرَّاءِ وَالضَّرَّاءِ وَالْكَاظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ عَنِ النَّاسِ وَاللَّهُ يُحِبُّ الْمُحْسِنِينَ ۝

உங்கள் இறைவனின் மன்னிப்பு இன்னும், சொர்க்கத்தின் பக்கம் விரையுங்கள். அதன் அகலம் வானங்களும் பூமியுமாகும். (அது) அல்லாஹ்வை அஞ்சுபவர்களுக்கு தயார்படுத்தப்பட்டுள்ளது. (அவர்கள்) செல்வத்திலும், வறுமையிலும் தர்மம் புரிபவர்கள்; கோபத்தை மென்றுவிடுபவர்கள்; மக்களை மன்னித்து விடுபவர்கள். அல்லாஹ் (இத்தகைய) நல்லறம் புரிவோரை நேசிக்கிறான். (அல்குர்ஆன் 3 : 133, 134)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَالَّذِينَ تَبَوَّءُوا الدَّارَ وَالْإِيمَانَ مِنْ قَبْلِهِمْ يُحِبُّونَ مَنْ هَاجَرَ إِلَيْهِمْ وَلَا يَجِدُونَ فِي صُدُورِهِمْ حَاجَةً مِمَّا أُوتُوا وَيُؤْثِرُونَ عَلَىٰ أَنْفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ وَمَنْ يُوقَ شُحَّ نَفْسِهِ فَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ ۝

(மதீனாவில்) வீடுகளை அமைத்துக் கொண்டவர்கள் இன்னும் அவர்களுக்கு (-முஹாஜிர்களுக்கு) முன்னதாக ஈமானையும் ஏற்றுக்கொண்டவர்கள் தங்களிடம் ஹிஜ்ரா செய்து வந்தவர்களை நேசிக்கின்றார்கள். தங்களுக்கு கொடுக்கப்பட்டவற்றில் தங்கள் நெஞ்சங்களில் (தங்களுக்கு என்று) எந்தத் தேவையையும் அவர்கள் காணமாட்டார்கள். தங்களுக்கு (வறுமையும்) கடுமையான தேவை(யும்) இருந்தாலும் தங்களை விட (முஹாஜிர்களைத்தான்) தேர்ந்தெடுப்பார்கள். (-அவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுப்பார்கள்.) யார் தனது உள்ளத்தின் கருமித்தனத்தை விட்டும் பாதுகாக்கப்படுவாரோ அவர்கள்தான் வெற்றியாளர்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 59 : 9)

இந்த வசனத்தில் அல்லாஹு தஆலா அன்சாரிகளை புகழ்ந்து கூறுகிறான். தாங்கள் கஷ்டத்திலும், சிரமத்திலும், வறுமையிலும், பசிபட்டினியிலும் இருந்தபோதும் கூட தங்களை நோக்கி ஹிஜ்ரத் செய்துவந்த ஏழை எளிய அந்த முஹாஜிர்களை அவர்கள் முடிந்த அளவு அரவணைத்தார்கள்;

அவர்களுக்கு கொடுத்தார்கள். கருமித்தனம் காட்டவில்லை. இதுபோன்று தான் நாமும் இருக்க வேண்டும்.

தனது மரணம் எப்போது வருமோ, அந்நேரத்தில் இந்த செல்வம் எதுவும் நம்மோடு வராது, நாம் எதை முன்கூட்டியே தர்மம் செய்து வைத்தோமோ அதுதான் நம்முடன் வரும் என்பதை ஒரு முஸ்லிம் உணர்ந்திருக்க வேண்டும். திடீர் மரணம் வரும் முன்னர் அல்லாஹ் கொடுத்ததை அல்லாஹ்வின் பாதையில் செலவழித்து தனது மறுமையை செழிப்பாக்கிக் கொள்ள வேண்டும். பாவிகள் மரண நேரத்தில் கைசேதப்படுவார்கள். அந்த நிலைமைக்கு நாம் ஆளாகிவிடக்கூடாது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

حَتَّىٰ إِذَا جَاءَ أَحَدَهُمُ الْمَوْتُ قَالَ رَبِّ ارْجِعُونِ ○ لَعَلِّي أَعْمَلُ صَالِحًا فِيمَا تَرَكْتُ كَلَّا إِنَّهَا كَلِمَةٌ هُوَ قَائِلُهَا وَمِنْ وَرَائِهِمْ بَرْزَخٌ إِلَىٰ يَوْمِ يُبْعَثُونَ ○

இறுதியாக, மரணம் அவர்களில் ஒருவருக்கு வந்தால் அவர் கூறுகிறார்: என் இறைவா! என்னை (உலகத்திற்கு) திருப்(பி அனுப்)புங்கள் (என்று வானவர்களை நோக்கி அவர் கூறுவார்.) (இன்றைய தினத்திற்கு முன் அமல்களில்) நான் விட்டுவிட்டவற்றிலிருந்து (சில) நல்ல அமல்களை(யாவது) நான் செய்வதற்காக (என்னை மீண்டும் உலகத்திற்கு அனுப்புங்கள் என்று கூறுவார்). ஒரு போதும் அவ்வாறு அல்ல. (உலகத்திற்கு அவர் அனுப்பப்படவே மாட்டார். என்னை உலகிற்கு அனுப்புங்கள் என்ற) இது ஒரு வீண் பேச்சாகும். அவர் அதைக் கூறிக்கொண்டே இருப்பார். அவர்கள் எழுப்பப்படுகின்ற நாள்வரை அவர்களுக்கு முன் ஒரு தடை இருக்கிறது. (அவர்கள் உலகிற்கு திரும்புவதிலிருந்து அது அவர்களை தடுத்துவிடும்.)

(அல்குர்ஆன் 23 : 99, 100)

இப்படியாக தர்மத்தை வலியுறுத்தும் பல நூறு வசனங்களும் ஆயிரக்கணக்கான ஹதீஸ்களும் உள்ளன. அவற்றை நாம் படித்துணர வேண்டும். அல்லாஹ் நமக்கு கொடுத்ததற்கு ஏற்ப நாமும் அல்லாஹ்வின் அடியார்களுக்கு கொடுக்க வேண்டும்.

வசதியாக இருக்கும்போது தாராளமாக கொடுத்தால், வசதி குறைவாக இருக்கும்போது அதற்கேற்ப கொடுக்க வேண்டும். கொடுப்பதை நிறுத்திவிடக் கூடாது. அல்லாஹ் நமக்கு மறுமையில் நன்மையாகவும் இவ்வுலகில் பரகத்தாகவும் கண்டிப்பாக திருப்பிக் கொடுப்பான் என்ற நம்பிக்கையோடு நாம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அல்லாஹ்வே! எங்கள் உள்ளத்தை கருமித்தனத்தை விட்டு சுத்தப்படுத்துவாயாக! எங்கள் உள்ளங்களை தர்ம சிந்தனையைக் கொண்டு நிரப்புவாயாக! அதிகமதிகம் உன் பாதையில் தர்மம் செய்யவும், ஏழை எளிய மக்களுக்கு வாரி வழங்கவும், நற்காரியங்களுக்கு உதவவும் எங்களுக்கு அருள் புரிவாயாக! ஆமீன்!

• • •

## போட்டி, எதில் இருக்க வேண்டும்?

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عُبَيْدُ اللهِ بْنُ عُمَرَ حَدَّثَنَا حَمَّادٌ عَنْ أَيُّوبَ قَالَ كَانَ الْـحَسَنُ يَقُولُ إِذَا رَأَيْتَ الرَّجُلَ يُنَافِسُ فِي الدُّنْيَا فَنَافِسْهُ فِي الْآخِرَةِ

இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுவார்கள்: ஒருவர் உலக வஸ்துக்களில் போட்டி போடுவதை நீ பார்த்தால் அவரிடம் மறுமை விஷயத்தில் நீ போட்டி போடு!

**விளக்கம்:** அல்லாஹு அக்பர்! இமாம் ஹசன் ﵀ அவர்கள் உலமாவுல் ஆகிரா - மறுமை அறிஞர்களில் ஒருவராக விளங்கினார்கள். தான் எப்போதும் மறுமை குறித்து சிந்தனையுள்ளவராக இருந்ததுடன் மக்களுக்கும் மறுமை பற்றிய சிந்தனையை உண்டாக்கினார்கள்.

தானும் மறுமை குறித்து அச்சமும் கவலையும் பட்டதுடன் மக்களுக்கும் மறுமை பற்றிய அச்சத்தையும் கவலையையும் ஏற்படுத்தினார்கள். தானும் உலகப் பற்று இல்லாதவர்களாக இருந்ததுடன் மக்களுக்கும் உலக பற்றின்மை குறித்து எப்போதும் உபதேசம் செய்துகொண்டே இருந்தார்கள்.

ஓர் உண்மையான ஆலிம் அப்படித்தான் இருக்க வேண்டும். அவர் மக்களுக்கு மறுமையை பெரிதாக்கி காட்ட வேண்டும்; உலகத்தை சிறுமைப்படுத்தி காட்ட வேண்டும். உலகத்தின் போலித்தனத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்; மறுமையின் மகத்தான உண்மையை மக்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

அல்லாஹ், தானும் மக்களை மறுமையின் பக்கம் அழைத்ததுடன் மறுமையின் பக்கம் அழைப்பதற்காக நபிமார்களையும் அனுப்பினான்.

அல்லாஹ் நபிமார்களையும் ரஸூல்மார்களையும் அனுப்பியதே மக்களை இந்த மாய உலக வாழ்க்கையின் மோகத்திலிருந்து விடுவித்து மறுமையின் பக்கம் அழைப்பதற்காகத்தான். நபிமார்கள் மக்களுக்கு மறுமையைப் பற்றி சதா உணர்த்திக் கொண்டே இருந்தார்கள்.

இதற்கு சில வசனங்களை நாம் இங்கு நினைவுகூரலாம்:

يَا مَعْشَرَ الْجِنِّ وَالْإِنْسِ أَلَمْ يَأْتِكُمْ رُسُلٌ مِنْكُمْ يَقُصُّونَ عَلَيْكُمْ آيَاتِي وَيُنْذِرُونَكُمْ لِقَاءَ يَوْمِكُمْ هَٰذَا قَالُوا شَهِدْنَا عَلَىٰ أَنْفُسِنَا وَغَرَّتْهُمُ الْحَيَاةُ الدُّنْيَا وَشَهِدُوا عَلَىٰ أَنْفُسِهِمْ أَنَّهُمْ كَانُوا كَافِرِينَ ○

“ஜின்கள் மற்றும் மனிதர்களின் கூட்டமே! உங்களிலிருந்து தூதர்கள் என் வசனங்களை உங்களுக்கு விவரிப்பவர்களாக, உங்கள் இந்நாளை உங்களுக்கு எச்சரிப்பவர்களாக உங்களிடம் வரவில்லையா?” என்று கூறுவான். அதற்கவர்கள், “(எங்கள் இறைவனே!) எங்களுக்கு எதிராக சாட்சியளித்தோம்” என்று கூறுவார்கள். உலக வாழ்வு அவர்களை மயக்கி விட்டது; நிச்சயமாக அவர்கள் நிராகரிப்பாளர்களாக இருந்தார்கள் என்று அவர்கள் தங்களுக்கு எதிராகவே சாட்சி கூறுவார்கள்.

(அல்குர்ஆன் 6 : 130)

قُلْ إِنَّمَا أَنَا بَشَرٌ مِثْلُكُمْ يُوحَىٰ إِلَيَّ أَنَّمَا إِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ فَمَنْ كَانَ يَرْجُوا لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا ○

(நபியே) கூறுவீராக!: “நிச்சயமாக நானெல்லாம் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான், உங்கள் கடவுள் (நீங்கள் வணங்குவதற்கு தகுதியானவன்) எல்லாம் ஒரே ஒரு கடவுள்தான் என்று எனக்கு வஹ்யி அறிவிக்கப்படுகிறது. ஆகவே, எவர் தன் இறைவனின் சந்திப்பை ஆதரவு வைப்பாரோ அவர் நல்ல செயலைச் செய்யட்டும்! தன் இறைவனை வணங்குவதில் ஒருவரையும் (அவனுக்கு) இணையாக்க வேண்டாம்!” (அல்குர்ஆன் 18 : 110)

وَسِيقَ الَّذِينَ كَفَرُوا إِلَىٰ جَهَنَّمَ زُمَرًا حَتَّىٰ إِذَا جَاءُوهَا فُتِحَتْ أَبْوَابُهَا وَقَالَ لَهُمْ خَزَنَتُهَا أَلَمْ يَأْتِكُمْ رُسُلٌ مِنْكُمْ يَتْلُونَ عَلَيْكُمْ آيَاتِ رَبِّكُمْ وَيُنْذِرُونَكُمْ لِقَاءَ يَوْمِكُمْ هَٰذَا قَالُوا بَلَىٰ وَلَٰكِنْ حَقَّتْ كَلِمَةُ الْعَذَابِ عَلَى الْكَافِرِينَ ○

நிராகரித்தவர்கள் கூட்டம் கூட்டமாக நரகத்தின் பக்கம் ஓட்டிக் கொண்டு வரப்படுவார்கள். இறுதியாக, அதற்கு (-அந்த நரகத்திற்கு அருகில்) வந்தவுடன் அதன் வாசல்கள் திறக்கப்படும். இன்னும், அதன் காவலாளிகள் அவர்களுக்குக் கூறுவார்கள்: "உங்களில் இருந்தே உங்களுக்கு தூதர்கள் வரவில்லையா? அவர்கள் உங்களுக்கு உங்கள் இறைவனின் வசனங்களை ஓதிக் காட்டினார்களே. நீங்கள் சந்திக்கவேண்டிய இந்த நாளைப் பற்றி உங்களை எச்சரித்தார்களே." அவர்கள் கூறுவார்கள்: "ஏன் வரவில்லை." எனினும், நிராகரிப்பவர்கள் மீது வேதனையின் வாக்கு உறுதியாகி விட்டது.

(அல்குர்ஆன் 39 : 71)

ஆயிரக்கணக்கான குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் நமக்கு இவ்வுலக வாழ்க்கையின் அற்பத்தைப் பற்றியும் மறுமை வாழ்க்கையின் மகத்துவத்தைப் பற்றியும் எடுத்துக் கூறுகின்றன.

உலகம் எவ்வளவு தாழ்ந்தது, மறுமையோ எவ்வளவு உயர்ந்தது!

உலகம் அற்பமானது, மறுமை மிகவும் கண்ணியமானது!

உலகம் மிகவும் தற்காலிகமானது, மறுமையோ என்றும் நிலையானது!

உலகம் போலியானது, மறுமையோ முற்றிலும் உண்மையானது!

உலகம் அழியக்கூடியது, மறுமையோ என்றும் நிரந்தரமானது!

உலக வாழ்க்கையில் எல்லோருக்கும் மரணம் உண்டு, மறுமையில் யாருக்கும் மரணம் இல்லை.

உலக இன்பங்கள் குறுகிய காலம் மட்டும் அனுபவிக்க முடிந்தவை. மறுமை இன்பமோ அதை முடிவில்லாமல் அனுபவித்துக்கொண்டே இருக்கலாம்.

உலகம் அமலுக்காக படைக்கப்பட்டது, மறுமை கூலிகொடுப்பதற்காக படைக்கப்பட்டது.

உலகத்தில் விதைக்க வேண்டும். மறுமையில் அறுவடை செய்ய வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுவதை கேளுங்கள்!

بَلْ تُؤْثِرُونَ الْحَيَاةَ الدُّنْيَا ۝ وَالْآخِرَةُ خَيْرٌ وَأَبْقَىٰ ۝

மாறாக, (அற்ப) உலக வாழ்வைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். மறுமையோ மிகச் சிறந்தது; என்றும் நிலையானது. (அல்குர்ஆன் 87 : 16, 17)

فَمَا أُوتِيتُمْ مِنْ شَيْءٍ فَمَتَاعُ الْحَيَاةِ الدُّنْيَا وَمَا عِنْدَ اللهِ خَيْرٌ وَأَبْقَىٰ لِلَّذِينَ آمَنُوا وَعَلَىٰ رَبِّهِمْ يَتَوَكَّلُونَ○

நீங்கள் கொடுக்கப்பட்டுள்ள பொருள்கள் எல்லாம் இவ்வுலக வாழ்க்கையின் இன்பமாகும். நம்பிக்கை கொண்டு, தங்கள் இறைவனையே சார்ந்திருப்பவர்களுக்கு அல்லாஹ்விடம் (மறுமையில்) எது உள்ளதோ அதுதான் மிகச் சிறந்ததும் மிக நிரந்தரமானதும் ஆகும்.

(அல்குர்ஆன் 42 : 36)

وَمَا أُوتِيتُمْ مِنْ شَيْءٍ فَمَتَاعُ الْحَيَاةِ الدُّنْيَا وَزِينَتُهَا وَمَا عِنْدَ اللهِ خَيْرٌ وَأَبْقَىٰ أَفَلَا تَعْقِلُونَ○

நீங்கள் (உலக) பொருளில் எது கொடுக்கப்பட்டீர்களோ அது உலக வாழ்க்கையின் இன்பமும் அதன் அலங்காரமும் ஆகும். அல்லாஹ்விடம் உள்ளதுதான் சிறந்ததும் நிலையானதும் ஆகும். நீங்கள் சிந்தித்து புரியமாட்டீர்களா? (அல்குர்ஆன் 28 : 60)

وَمَا الْحَيَاةُ الدُّنْيَا إِلَّا لَعِبٌ وَلَهْوٌ وَلَلدَّارُ الْآخِرَةُ خَيْرٌ لِلَّذِينَ يَتَّقُونَ أَفَلَا تَعْقِلُونَ○

உலக வாழ்வு விளையாட்டும் கேளிக்கையும் தவிர வேறில்லை! (அல்லாஹ்வை) அஞ்சுபவர்களுக்கு மறுமை வீடுதான் மிக மேலானது. நீங்கள் (சிந்தித்துப்) புரியவேண்டாமா? (அல்குர்ஆன் 6 : 32)

أَرَضِيتُمْ بِالْحَيَاةِ الدُّنْيَا مِنَ الْآخِرَةِ فَمَا مَتَاعُ الْحَيَاةِ الدُّنْيَا فِي الْآخِرَةِ إِلَّا قَلِيلٌ○

மறுமையைவிட உலக வாழ்க்கையைக் கொண்டு திருப்தியடைந்தீர்களா? உலக வாழ்க்கையின் இன்பம் மறுமையில் அற்பமானதே தவிர வேறில்லை!

(அல்குர்ஆன் 9 : 38)

اللهُ يَبْسُطُ الرِّزْقَ لِمَنْ يَشَاءُ وَيَقْدِرُ وَفَرِحُوا بِالْحَيَاةِ الدُّنْيَا وَمَا الْحَيَاةُ الدُّنْيَا فِي الْآخِرَةِ إِلَّا مَتَاعٌ○

அல்லாஹ், தான் நாடுகின்றவர்களுக்கு வாழ்க்கை வசதியை விரிவுபடுத்துகிறான். (தான் நாடுகின்றவர்களுக்கு அதை) சுருக்குகிறான். (நிராகரிப்பவர்கள்) உலக வாழ்வைக் கொண்டு மகிழ்கின்றனர். உலக வாழ்வு மறுமையில் (கிடைக்கும் சுகத்தோடு ஒப்பிடப்படும் போது) ஒரு (சொற்ப) சுகமே தவிர வேறில்லை. (அல்குர்ஆன் 13 : 26)

وَلَدَارُ الْآخِرَةِ خَيْرٌ وَلَنِعْمَ دَارُ الْمُتَّقِينَ○

மறுமையின் வீடுதான் (இம்மையை விட அவர்களுக்கு) மிக மேலானது. (அல்லாஹ்வை) அஞ்சுபவர்களின் (மறுமை) வீடு மிகச் சிறந்தது. (அல்குர்ஆன் 16 : 30)

وَمَا هٰذِهِ الْحَيَاةُ الدُّنْيَا إِلَّا لَهْوٌ وَلَعِبٌ وَإِنَّ الدَّارَ الْآخِرَةَ لَهِيَ الْحَيَوَانُ لَوْ كَانُوا يَعْلَمُونَ○

இவ்வுலக வாழ்க்கை வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் தவிர இல்லை. நிச்சயமாக மறுமை வீடு -அதுதான் நிரந்தரமான (வாழ்க்கை உடைய)து. அவர்கள் அறிந்து கொள்ளவேண்டுமே! (அல்குர்ஆன் 29 : 64)

وَإِنْ كُلُّ ذٰلِكَ لَمَّا مَتَاعُ الْحَيَاةِ الدُّنْيَا وَالْآخِرَةُ عِنْدَ رَبِّكَ لِلْمُتَّقِينَ○

தங்கத்தையும் (நாம் அவர்களுக்கு சொந்தமாக்கி இருப்போம்). இவை எல்லாம் உலக வாழ்க்கையின் இன்பங்களே தவிர வேறு இல்லை. உமது இறைவனிடம் உள்ள மறுமை (-சொர்க்க வாழ்க்கை) இறையச்சமுள்ளவர்களுக்குத்தான். (அல்குர்ஆன் 43 : 35)

உலகத்தில் மனிதர்கள் செல்வத்தைக் கொண்டு, பதவியைக் கொண்டு, பரம்பரையைக் கொண்டு, பகட்டு அழகைக் கொண்டு பெருமை அடிப்பார்கள்; உயர்வு தாழ்வு காட்டுவார்கள்; பாகுபாடு பாராட்டுவார்கள்; மனிதர்களை தரம் பிரிப்பார்கள். ஆனால், மறுமையிலோ இவற்றில் ஏதும் அங்கு பலன் தராது. அங்கு ஈமான், அமல் மட்டுமே பலனளிக்கும்.

உலகத்தில் சிபாரிசுகள் உண்டு, உலகத்தில் இலஞ்சம் உண்டு, உலகத்தில் உதவிக்கு வர ஆயிரம் பேர் உண்டு, உலகத்தில் பிணைக் கொடுத்து தப்பிக்கலாம், உலகத்தில் குடும்ப புகழைக் கூறி தப்பிக்கலாம். உதவிக்கு உற்றார் உறவினரை அழைக்கலாம். துன்பங்களில் நண்பர்கள் ஓடி வரலாம். அல்லது நமது பேச்சு திறமையால் பேசி தப்பிக்கலாம். உண்மையை பொய்யாக மாற்றிவிடலாம். பொய்யை உண்மையாக திரித்து விடலாம். ஆனால், மறுமையில் இவை எல்லாம் பலிக்காது!

இங்கு மறைவானவற்றை அறிய சக்தியில்லாத மனிதர்கள் தீர்ப்பளிப்பவர்களாக இருப்பார்கள். அங்கோ எல்லா இரகசியங்களையும் அறிந்த, வெளிப்படையானவை, மறைவானவை என அனைத்தையும் நன்கறிந்த அகிலங்களின் பேரரசன் அல்லாஹ் தீர்ப்பளிப்பவனாக இருப்பான்.

இங்கு தப்பிக்க பல்லாயிரம் வழிகள் இருக்கும். அங்கு அல்லாஹ்விடமிருந்து தப்பிக்க எந்த வழியையும் பாவிகள் காணமாட்டார்கள். இங்கு பொய் சாட்சிகளை உருவாக்கலாம். அங்கோ மனிதனின் உடல் உறுப்புகளே அவனுக்கு எதிராக உண்மையான சாட்சியத்தை கூறும்.

அல்லாஹு தஆலா கூறுவதை கேளுங்கள்:

وَاتَّقُوا يَوْمًا لَا تَجْزِي نَفْسٌ عَنْ نَفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا شَفَاعَةٌ وَلَا يُؤْخَذُ مِنْهَا عَدْلٌ وَلَا هُمْ يُنْصَرُونَ○

ஒரு நாளை அஞ்சுங்கள்: (அதில்) ஓர் ஆன்மா (வேறு) ஓர் ஆன்மாவுக்கு ஒன்றையும் பலனளிக்காது; அதனிடமிருந்து பரிந்துரை ஏற்கப்படாது; அதனிடமிருந்து பரிகாரம் (பிணைத் தொகை) வாங்கப்படாது; அவர்கள் (எவராலும்) உதவி செய்யப்பட மாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 48)

وَاتَّقُوا يَوْمًا لَا تَجْزِي نَفْسٌ عَنْ نَفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا عَدْلٌ وَلَا تَنْفَعُهَا شَفَاعَةٌ وَلَا هُمْ يُنْصَرُونَ○

இன்னும், ஒரு நாளை அஞ்சுங்கள்; (அந்நாளில்) ஓர் ஆன்மா மற்றோர் ஆன்மாவிற்கு எதையும் பலனளிக்காது; அதனிடமிருந்து பரிகாரம் ஏற்கப்படாது; பரிந்துரை அதற்குப் பலனளிக்காது; அவர்கள் உதவி செய்யப்பட மாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 123)

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمْ وَاخْشَوْا يَوْمًا لَا يَجْزِي وَالِدٌ عَنْ وَلَدِهِ وَلَا مَوْلُودٌ هُوَ جَازٍ عَنْ وَالِدِهِ شَيْئًا إِنَّ وَعْدَ اللهِ حَقٌّ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيَاةُ الدُّنْيَا وَلَا يَغُرَّنَّكُمْ بِاللهِ الْغَرُورُ

மக்களே! உங்கள் இறைவனை பயந்து கொள்ளுங்கள்! இன்னும், ஒரு நாளை பயந்துகொள்ளுங்கள்! (அந்நாளில்) தந்தை தன் மகனை விட்டும் (வேதனையை) தடுக்கமாட்டார். பிள்ளையும் தனது தகப்பனை விட்டும் (வேதனையை) தடுக்கக் கூடியவராக இல்லை. நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்கு உண்மையானது. ஆகவே, உலக வாழ்க்கை உங்களை ஏமாற்றிவிட வேண்டாம். ஏமாற்றக் கூடியவன் அல்லாஹ்வின் விஷயத்தில் உங்களை ஏமாற்றி விடவேண்டாம். (அல்குர்ஆன் 31 : 33)

يَوْمَ لَا يَنْفَعُ مَالٌ وَلَا بَنُونَ إِلَّا مَنْ أَتَى اللهَ بِقَلْبٍ سَلِيمٍ

செல்வமும் ஆண் பிள்ளைகளும் பலனளிக்காத (அந்த மறுமை) நாளில்... எனினும், யார் சந்தேகப்படாத (உன்னை மட்டும் வணங்குவதிலும் மறுமையை நம்புவதிலும் ஐயமில்லாத, சுத்தமான) உள்ளத்தோடு அல்லாஹ்விடம் வந்தாரோ (அவருக்கு அவரது உள்ளம் பயன்தரும்).

(அல்குர்ஆன் 26 : 88, 89)

فَيَوْمَئِذٍ لَا يَنْفَعُ الَّذِينَ ظَلَمُوا مَعْذِرَتُهُمْ وَلَا هُمْ يُسْتَعْتَبُونَ

அந்நாளில் அநியாயக்காரர்களுக்கு அவர்களின் மன்னிப்புக் கோருதல் பலனளிக்காது. இன்னும், (அல்லாஹ்வை) திருப்திபடுத்துகின்ற செயல்களை செய்யுங்கள் என்றும் அவர்களிடம் கூறப்படாது. (அல்குர்ஆன் 30 : 57)

يَوْمَ لَا يَنْفَعُ الظَّالِمِينَ مَعْذِرَتُهُمْ وَلَهُمُ اللَّعْنَةُ وَلَهُمْ سُوءُ الدَّارِ

அந்நாளில் அநியாயக்காரர்களுக்கு அவர்களின் சாக்குபோக்குகள் பலனளிக்காது. அவர்களுக்கு சாபம்தான் மிஞ்சும். இன்னும் அவர்களுக்கு கெட்ட வீடும் (கடுமையான தண்டனை உள்ள நரகமும்தான்) உண்டு.

(அல்குர்ஆன் 40 : 52)

உலகத்தில் மனிதன் எதைக் கொண்டு பெருமை அடிக்க முடியும்? எதை

வைத்து அவன் பெருமை பேச முடியும்? இந்த உலகமே அழியக்கூடியது என்று இருக்கும் போது இதில் எதை வைத்து மனிதன் பெருமையடிக்க?

அல்லஹு தஆலா கூறுகிறான்:

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ○

அதன் மீது இருக்கின்ற எல்லோரும் அழிபவர்கள்தான்.

(அல்குர்ஆன் 55 : 26)

كُلُّ شَيْءٍ هَالِكٌ إِلَّا وَجْهَهُ لَهُ الْحُكْمُ وَإِلَيْهِ تُرْجَعُونَ○

எல்லாப் பொருள்களும் அழியக்கூடியவையே அவனது முகத்தைத் தவிர (-அவனைத் தவிர). அதிகாரம் அவனுக்கே உரியது. அவனிடமே நீங்கள் திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள். (அல்குர்ஆன் 28 : 88)

وَمَا هٰذِهِ الْحَيَاةُ الدُّنْيَا إِلَّا لَهْوٌ وَلَعِبٌ وَإِنَّ الدَّارَ الْآخِرَةَ لَهِيَ الْـحَيَوَانُ لَوْ كَانُوا يَعْلَمُونَ○

இவ்வுலக வாழ்க்கை வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் தவிர இல்லை. நிச்சயமாக மறுமை வீடு -அதுதான் நிரந்தரமான (வாழ்க்கை உடைய)து. அவர்கள் அறிந்து கொள்ளவேண்டுமே! (அல்குர்ஆன் 29 : 64)

மனிதன் தனது ஆட்சியைக் கொண்டு பெருமை பேசுகிறானா? அவனுக்கு முன்னர் அவனது இடத்தில் ஆட்சி செய்தவரை அவன் சிந்திக்க வேண்டாமா அவர் இப்போது எங்கே என்று? இவனுக்கு பிறகு வேறு ஒருவர்... இப்படித்தான் இந்த ஆட்சி கட்டில், அதில் அமர்பவர் மாறிக்கொண்டே இருப்பார். இறுதியில் ஆட்சி எல்லாம் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உரியதாக ஆகிவிடும்.

மனிதன் தனது செல்வத்தைக் கொண்டு பெருமை அடிக்கிறானா? அவன் சிந்திக்க வேண்டாமா, இந்த செல்வம் இவனுக்கு முன்னர் யார் கையில் இருந்தது? இப்போது இவனிடம், நாளை இன்னொருவரிடம். இந்த செல்வம் ஒரு கையிலிருந்து இன்னொரு கைக்கு சென்று கொண்டே இருக்கும்.

ஏழையாகுவதும் செல்வந்தனாகுவதும் அல்லாஹ்வின் கையில். அவன்

நாடியவருக்கு செல்வத்தை விசாலமாக கொடுக்கிறான். அவன் நாடியவருக்கு வாழ்வாதாரத்தை சுருக்கி விடுகிறான். இந்த செல்வம் உனது கையைவிட்டு சென்றால்தான் நீ இதைக் கொண்டு பலன் பெறமுடியும்!

ஆட்சியைக் கொண்டும் செல்வத்தைக் கொண்டும் பெருமை பேசியவர்கள் எத்தனை ஆயிரம் பேர். அவர்களில் பலரை அந்த ஆட்சியே கொன்றிருக்கிறது. அவர்களின் செல்வமே அவர்களின் சாவுக்கு காரணமாக இருந்திருக்கிறது.

உனது வாலிபம், அழகு, உடல் வலிமை இதைக் கொண்டு பெருமை அடிக்கப் போகிறாயா? ஏன், உனக்கு வயோதிகம் வராதா? நீ முதுமையடைய மாட்டாயா? உனக்கு நோய் வராதா? உன் உடலுக்கு சோர்வும் பலவீனமும் வராதா? உன் கண் பார்வை மங்காதா? உன் செவி அதன் திறனை இழக்காதா? உன் கையும் காலும் அவற்றின் வலிமையை இழக்காதா? உன் முதுகு கோணலாகாதா? நீ என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறாய்?

உன்னிடம் உள்ள ஆடம்பர வீட்டைக்கொண்டு பெருமை அடிக்கப் போகிறாயா? உன்னிடம் இருக்கும் விலையுயர்ந்த பொருள்களைக் கொண்டு பெருமை பேசப் போகிறாயா? இவற்றில் நீ எதை உனது கப்ருக்கு கொண்டு போகப் போகிறாய்?

நீ செத்துவிட்டால் இவற்றை உனது மண்ணறையில் மக்கள் வைப்பார்களா? அப்படியே அவர்கள் வைத்தாலும் உனக்கு அவற்றின் மூலம் பலன் பெற முடியுமா? நீ உன் கண்ணை மூடிவிட்டால் இவை எல்லாம் யாருக்கு என்பதை சிந்திக்க மாட்டாயா?

உலகத்தில் நீ எதைக் கொண்டு பெருமை பேசினாலும் அது உனது ஏமாற்றம், உனது புத்தியின்மை, உனது அறிவிலித்தனம், உனது மடமை என்பதை புரிந்துகொள்!

உனக்கு முன் குர்ஆனின் இரு வசனங்களை வைக்கிறேன்:

زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوَاتِ مِنَ النِّسَاءِ وَالْبَنِينَ وَالْقَنَاطِيرِ الْمُقَنْطَرَةِ
مِنَ الذَّهَبِ وَالْفِضَّةِ وَالْخَيْلِ الْمُسَوَّمَةِ وَالْأَنْعَامِ وَالْحَرْثِ ذٰلِكَ مَتَاعُ
الْحَيَاةِ الدُّنْيَا وَاللّٰهُ عِنْدَهُ حُسْنُ الْمَآبِ ○

பெண்கள், ஆண் பிள்ளைகள், தங்கம், வெள்ளியின் குவிக்கப்பட்ட (பெரும்) குவியல்கள், அடையாளமிடப்பட்ட (அழகிய) குதிரைகள், கால்நடைகள், விளைநிலம் ஆகிய விருப்பங்களை நேசிப்பது மக்களுக்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவை (அனைத்தும் அற்ப) உலக வாழ்வின் (சொற்ப) இன்பமாகும்! அல்லாஹ், அவனிடம்தான் (நிலையான) அழகிய தங்குமிடமுண்டு. (அல்குர்ஆன் 3 : 14)

اِعْلَمُوا أَنَّمَا الْحَيَاةُ الدُّنْيَا لَعِبٌ وَلَهْوٌ وَزِينَةٌ وَتَفَاخُرٌ بَيْنَكُمْ وَتَكَاثُرٌ فِي الْأَمْوَالِ وَالْأَوْلَادِ كَمَثَلِ غَيْثٍ أَعْجَبَ الْكُفَّارَ نَبَاتُهُ ثُمَّ يَهِيجُ فَتَرَاهُ مُصْفَرًّا ثُمَّ يَكُونُ حُطَامًا وَفِي الْآخِرَةِ عَذَابٌ شَدِيدٌ وَمَغْفِرَةٌ مِنَ اللَّهِ وَرِضْوَانٌ وَمَا الْحَيَاةُ الدُّنْيَا إِلَّا مَتَاعُ الْغُرُورِ ○

உலக வாழ்க்கை எல்லாம் விளையாட்டும் வேடிக்கையும் அலங்காரமும் உங்களுக்கு மத்தியில் பெருமை அடிப்பதும் செல்வங்களிலும் பிள்ளைகளிலும் அதிகத்தின் போட்டியும்தான். (இவ்வாழ்க்கை) ஒரு மழையைப் போல்தான், அதன் விளைச்சல் விவசாயிகளை கவர்ந்தது. பிறகு, அது காய்ந்து விடுகிறது. அதை நீர் மஞ்சளாக பார்க்கிறீர். பிறகு, அது குப்பையாக ஆகிவிடுகிறது. மறுமையில் (நிராகரிப்பாளர்களுக்கு) கடுமையான வேதனையும் (நம்பிக்கையாளர்களுக்கு) அல்லாஹ்வின் புறத்தில் இருந்து மன்னிப்பும் திருப்பொருத்தமும் உண்டு. உலக வாழ்க்கை மயக்கக்கூடிய இன்பமே தவிர வேறில்லை. (அல்குர்ஆன் 57 : 20)

இந்த வசனங்களை சிந்துத்துப் பார்.

உலகத்தில் பெருமைப்பட ஒன்றுமே இல்லை. இங்கு நாம் மறுமைக்காக அமல் செய்ய அனுப்பப்பட்டுள்ளோம். உண்மையான இன்பம், சுகம், மகிழ்ச்சி, வெற்றி சொர்க்க வாழ்க்கையில்தான் இருக்கிறது. அதுதான் நாம் பெருமைப்பட தகுதியானது. அதற்காக நாம் இங்கு சிரமப்பட வேண்டும், நல்லமல்கள் அதிகமதிகம் செய்ய வேண்டும். இந்த உலக வாழ்க்கையும் அதன் செல்வத்தையும் மறுமைக்காக அர்ப்பணிக்க வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لِمِثْلِ هٰذَا فَلْيَعْمَلِ الْعَامِلُونَ○

அமல் செய்பவர்கள் இது போன்றதற்காக (-இதுபோன்ற நன்மைகளை பெறுவதற்காக) அமல் செய்யட்டும். (அல்குர்ஆன் 37 : 61)

وَفِي ذٰلِكَ فَلْيَتَنَافَسِ الْمُتَنَافِسُونَ○

ஆகவே, ஆசை வைத்து போட்டிபோடுபவர் அதில் ஆசை வைக்கவும். (அல்குர்ஆன் 83 : 26)

ஆகவேதான் இமாம் ஹசன் ﵀ அவர்கள் தமது மாணவருக்கு இப்படி அறிவுரை வழங்கினார்கள்:

தோழரே! உன்னிடம் ஒருவன் உலக இன்பங்களைப் பற்றி சிலாகித்து பேசினால் அவனுக்கு முன் சொர்க்கத்தின் உண்மையான நிரந்தரமான இன்பங்களைப் பற்றி பேசு!

தோழரே! உன்னிடம் ஒருவன் உலகத்தின் வசதிகளையும் ஆடம்பரங்களையும் விலை உயர்ந்த பொருள்களையும் பற்றி பெருமையாக பேசினால் நீ அவனுக்கு முன் சொர்க்கத்தின் ஆடம்பரமான, விசாலமான, உயரமான மாட மாளிகைகளைப் பற்றியும் அங்குள்ள மாணிக்க மரகதங்கள், முத்துப் பவளம் பற்றி பேசு! அங்குள்ள விலை மதிக்க முடியாத ஆடைகளையும் ஆபரணங்களையும் பற்றி பேசு!

அல்லாஹ் கூறுகிறான்:

أُولٰئِكَ لَهُمْ جَنَّاتُ عَدْنٍ تَجْرِي مِنْ تَحْتِهِمُ الْأَنْهَارُ يُحَلَّوْنَ فِيهَا مِنْ أَسَاوِرَ مِنْ ذَهَبٍ وَيَلْبَسُونَ ثِيَابًا خُضْرًا مِنْ سُنْدُسٍ وَإِسْتَبْرَقٍ مُتَّكِئِينَ فِيهَا عَلَى الْأَرَائِكِ نِعْمَ الثَّوَابُ وَحَسُنَتْ مُرْتَفَقًا○

அவர்கள், ‘அத்ன்’ சொர்க்கங்கள் அவர்களுக்கு உண்டு. அவர்களின் கீழ் நதிகள் ஓடும். அவற்றில் தங்க வளையல்களினால் அலங்காரம் செய்யப்படுவார்கள். இன்னும் மென்மையான, தடிப்பமான பட்டுகளிலிருந்து (விரும்பிய) பச்சை நிற ஆடைகளை அணிவார்கள். அவற்றில் கட்டில்கள் மீது(ள்ள தலையணைகளில்) சாய்ந்தவர்களாக (ஒருவர் மற்றவரிடம் பேசுவார்கள்). இதுவே சிறந்த கூலி. இதுவே அழகிய ஓய்விடம். (அல்குர்ஆன் 18 : 31)

جَنَّاتُ عَدْنٍ يَدْخُلُونَهَا يُحَلَّوْنَ فِيهَا مِنْ أَسَاوِرَ مِنْ ذَهَبٍ وَلُؤْلُؤًا وَلِبَاسُهُمْ فِيهَا حَرِيرٌ ۝ وَقَالُوا الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَذْهَبَ عَنَّا الْحَزَنَ إِنَّ رَبَّنَا لَغَفُورٌ شَكُورٌ ۝ الَّذِي أَحَلَّنَا دَارَ الْمُقَامَةِ مِنْ فَضْلِهِ لَا يَمَسُّنَا فِيهَا نَصَبٌ وَلَا يَمَسُّنَا فِيهَا لُغُوبٌ ۝

“அத்ன்” சொர்க்கங்கள் - அவர்கள் அவற்றில் நுழைவார்கள்; அவற்றில் தங்கத்தினாலான காப்புகளிலிருந்தும் (-வளையல்களிலிருந்தும்) முத்து (ஆபரணங்களு)ம் அவர்கள் அணிவிக்கப்படுவார்கள். இன்னும் அவர்களின் ஆடைகள் அவற்றில் பட்டுத் துணியாகும். அவர்கள் கூறுவார்கள்: எங்களை விட்டு கவலையைப் போக்கிய அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். நிச்சயமாக எங்கள் இறைவன் மகா மன்னிப்பாளன், நன்றியுடையவன் ஆவான். அவன் தனது அருளினால் எங்களை நிரந்தர இல்லத்தில் தங்க வைத்தான். அதில் எங்களுக்கு சோர்வும் ஏற்படாது. அதில் எங்களுக்கு களைப்பும் ஏற்படாது. (அல்குர்ஆன் 35 : 33-35)

إِنَّ اللَّهَ يُدْخِلُ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ جَنَّاتٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ يُحَلَّوْنَ فِيهَا مِنْ أَسَاوِرَ مِنْ ذَهَبٍ وَلُؤْلُؤًا وَلِبَاسُهُمْ فِيهَا حَرِيرٌ ۝

நிச்சயமாக நம்பிக்கை கொண்டு நன்மைகள் செய்தவர்களை அல்லாஹ் சொர்க்கங்களில் நுழைவிப்பான். அவற்றின் (மரங்களுக்கு) கீழ் நதிகள் ஓடும். அவற்றில் (-அந்த சொர்க்கங்களில்) தங்கத்தினாலான வளையல்களும் முத்து (ஆபரணமு)ம் அவர்கள் அணிவிக்கப்படுவார்கள். இன்னும் அவற்றில் அவர்களது ஆடை பட்டாகும். (அல்குர்ஆன் 22 : 23)

தோழரே! யாராவது உன்னிடம் உலக கன்னிகளைப் பற்றி மோகமூட்டினால், அழகு வாலிப பெண்களைப் பற்றி இச்சையூட்டினால், வெள்ளை நிற உடலும், சிவந்த உதடும், அகன்ற நெற்றியும், மெல்லிய கழுத்தும், முத்துப் பற்களும், கருத்த கூந்தலையும் உடைய உலக அழகிகளைப் பற்றி பேசினால் அவர்களுக்கு முன் சொர்க்கத்து கண்ணழகிகளைப் பற்றி உன் இறைவன் கூறியதைக் கூறு!

وَلَهُمْ فِيهَا أَزْوَاجٌ مُطَهَّرَةٌ وَهُمْ فِيهَا خَالِدُونَ○

தூய்மையான மனைவிகளும் அவற்றில் அவர்களுக்கு உண்டு. அவர்கள் அவற்றில் நிரந்தரமானவர்கள். (அல்குர்ஆன் 2 : 25)

إِنَّ الْمُتَّقِينَ فِي مَقَامٍ أَمِينٍ○ فِي جَنَّاتٍ وَعُيُونٍ○ يَلْبَسُونَ مِنْ سُنْدُسٍ وَإِسْتَبْرَقٍ مُتَقَابِلِينَ○ كَذٰلِكَ وَزَوَّجْنَاهُمْ بِحُورٍ عِينٍ○

நிச்சயமாக இறையச்சமுள்ளவர்கள் பாதுகாப்பான இடத்தில் இருப்பார்கள். சொர்க்கங்களில், ஊற்றுகளி(ன் அருகி)ல் இருப்பார்கள். அவர்கள் மென்மையான, இன்னும் தடிப்பமான பட்டு ஆடைகளை அணிவார்கள்; ஒருவரை ஒருவர் பார்த்தவர்களாக இருப்பார்கள். இவ்வாறுதான், இன்னும் நாம் அவர்களுக்கு கண்ணழகிகளான வெண்மையான கன்னிகளை மணமுடித்து வைப்போம். (அல்குர்ஆன் 44 : 51-54)

فِيهِنَّ قَاصِرَاتُ الطَّرْفِ لَمْ يَطْمِثْهُنَّ إِنْسٌ قَبْلَهُمْ وَلَا جَانٌّ○ فَبِأَيِّ آلَاءِ رَبِّكُمَا تُكَذِّبَانِ○ كَأَنَّهُنَّ الْيَاقُوتُ وَالْمَرْجَانُ○

அவற்றில் (அந்த விரிப்புகளில் கணவனைத் தவிர மற்ற ஆண்களை விட்டும்) பார்வைகளைத் தாழ்த்திய பெண்கள் இருப்பார்கள். இவர்களுக்கு முன்னர் எந்த ஒரு மனிதரும் எந்த ஒரு ஜின்னும் அவர்களை தொட்டு இருக்க மாட்டார்கள். (மனித, ஜின் வர்க்கமே!) உங்கள் (இருவரின்) இறைவனின் அருட்கொடைகளில் எதை நீங்கள் (இரு சாராரும்) பொய்ப்பிக்கின்றீர்கள்? அவர்கள் மாணிக்கத்தைப் போலும் பவளத்தைப் போலும் இருப்பார்கள். (அல்குர்ஆன் 55 : 56-58)

فِيهِنَّ خَيْرَاتٌ حِسَانٌ○ فَبِأَيِّ آلَاءِ رَبِّكُمَا تُكَذِّبَانِ○ حُورٌ مَقْصُورَاتٌ فِي الْخِيَامِ○

அவற்றில் (குணத்தால்) சிறந்த பெண்கள், (முகத்தால்) பேரழகிகள் இருப்பார்கள். (மனித, ஜின் வர்க்கமே!) உங்கள் (இருவரின்) இறைவனின் அருட்கொடைகளில் எதை நீங்கள் (இரு சாராரும்) பொய்ப்பிக்கின்றீர்கள்?

(அந்த பெண்கள்) வெள்ளைநிற அழகிகள், (அவர்களுக்குரிய) இல்லங்களில் (அவர்களின் கணவன்மார்களுக்காக மட்டும் அவர்கள்) ஒதுக்கப்பட்டவர்கள். (கணவனைத் தவிர வேறு யாரையும் அவர்கள் நாட மாட்டார்கள்.) (அல்குர்ஆன் 55 : 70-72)

وَحُورٌ عِينٌ۝ كَأَمْثَالِ اللُّؤْلُؤِ الْمَكْنُونِ۝

வெண்மையான கண்ணழகிகளான பெண்கள் (அவர்களுக்கு மனைவிகளாக இருப்பார்கள்). அவர்கள் பாதுகாக்கப்பட்ட முத்துக்களைப் போல் இருப்பார்கள். (அல்குர்ஆன் 56 : 22, 23)

إِنَّا أَنْشَأْنَاهُنَّ إِنْشَاءً۝ فَجَعَلْنَاهُنَّ أَبْكَارًا۝ عُرُبًا أَتْرَابًا۝

அவர்களை (-சொர்க்க கன்னிகளை) நிச்சயமாக நாம் முற்றிலும் புதிதாகவே உருவாக்குவோம். அவர்களை நாம் (எப்போதும்) கன்னிப் பெண்களாக ஆக்குவோம். கணவனை நேசிப்பவர்களாக, சம வயதுடையவர்களாக ஆக்குவோம். (அல்குர்ஆன் 56 : 35-37)

وَعِنْدَهُمْ قَاصِرَاتُ الطَّرْفِ عِينٌ۝ كَأَنَّهُنَّ بَيْضٌ مَكْنُونٌ۝

அவர்களிடம் பார்வைகளை தாழ்த்திய கண்ணழகிகள் இருப்பார்கள். அவர்கள் பாதுகாக்கப்பட்ட (-மறைக்கப்பட்ட தீக்கோழியின்) முட்டையைப் போன்று (-அதன் நிறத்தில்) இருப்பார்கள். (அல்குர்ஆன் 37 : 48, 49)

إِنَّ لِلْمُتَّقِينَ مَفَازًا۝ حَدَائِقَ وَأَعْنَابًا۝ وَكَوَاعِبَ أَتْرَابًا۝

அல்லாஹ்வை அஞ்சுபவர்களுக்கு நிச்சயமாக வெற்றி(யும்) உண்டு. தோட்டங்களும் திராட்சைகளும் (அவர்களுக்கு) உண்டு. இன்னும் சம வயதுடைய, மார்பு நிமிர்ந்த கன்னிகளும் உண்டு. (அல்குர்ஆன் 78 : 31-33)

இன்னும் எவ்வளவோ உள்ளன குர்ஆனிலும் சுன்னாவிலும் அந்த கண்ணழகிகளின் வர்ணிப்புகள். ஹதீஸ்களைப் புரட்டிப் பாருங்கள்! அவள் அணியும் ஆடையைப் பற்றி, அவளின் முந்தானையைப் பற்றி, அவளின் நறுமணத்தைப் பற்றி, அவளின் உடல் அழகைப் பற்றி, அவள் பாடும் பாட்டைப் பற்றி, அவளின் முகப் பிரகாசம் பற்றி இப்படியாக சொர்க்கத்தை கண்ணுற்ற நமது நபி ﷺ அவர்கள் கூறியதோ ஏராளம், ஏராளம்.

அந்த சொர்க்க கன்னிகள் எங்கே, இவ்வுலக பெண்டீர் எங்கே!

இவளோ குளிக்கவில்லை என்றால், பல் துலக்கவில்லை என்றால், துர்நாற்றம் வீசுவாள். தலை வாரி நறுமணம் பூசவில்லை என்றால் நீ கனவில் பார்க்கும் பூதம் போன்று இருப்பாள். இவளின் முடி நரைத்து விடும், உதிர்ந்து விடும். இவளின் உடல் தளர்ந்து, தாழ்ந்து விடும். தோல் சுருங்கி, உடல் கூனி குறுகி, பற்கள் உதிர்ந்து, கண்கள் குழியுண்டு, பார்க்கவே சகிக்க முடியாதளவு மாறிவிடுவாள்.

இவள் அடிக்கடி சிணுங்குவாள். அவள் எப்போதும் சிரித்துக் கொண்டே இருப்பாள்.

இவள் மாறிவிடுவாள், அவள் மாற மாட்டாள்.

இவள் உன்னை கவலையடைய வைப்பாள். அவள் உன்னை களிப்படைய வைப்பாள்.

இவள் உனக்கு தலைவலியை உண்டாக்குவாள். அவள் உனக்கு மன நிம்மதியை தருவாள்.

இவள், இவளுக்கு பின்னால் நீ சுற்ற வேண்டும் என்று விரும்புவாள். அவளோ, உனக்கு பின்னால் அவள் சுற்றுவதை விரும்புவாள்.

இவளோ, இவள் ஆதிக்கத்தில் நீ இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவாள். அவள், உனது அதிகாரத்தின் கீழ் அடக்கமாக, பணிவாக, பாசமாக, பண்பாக, பிரியமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவாள்.

இவள் ஏமாற்றுவாள், அவள் ஏமாற்ற மாட்டாள்.

இவள் முதுமை அடைவாள், அவள் என்றும் வாலிபமாக இருப்பாள்.

இவள் கன்னி கழிந்து விடுவாள். அவள் என்றும் கன்னியாகவே இருப்பாள்.

இவள் ஏசுவாள், கோபப்படுவாள், சபிப்பாள், உன்னை விட்டு பிரியவும் நினைக்கலாம். ஆனால், அவள் உன்னை கொஞ்சுவாள், உன்னைப் புகழ்வாள், என்றும் உன்னோடு சொர்க்கத்தில் பிரியாமல் இருப்பாள்.

இவளுக்கு அசுத்தம் வரும், அவளுக்கு அசுத்தம் எதுவுமே வராது.

இவளின் நறுமணம் செயற்கையானது. அவளின் நறுமணம் அவளின் உடலிலிருந்தே உருவாகும். அது இயற்கையானது.

இவள் பொறாமைக்காரி, கோபக்காரி, விட்டுக்கொடுக்காதவள். அவளோ மிகவும் கொடை வள்ளல், விசாலமான உள்ளம் உள்ளவள், பெருந்தன்மையுடையவள். நீ ஆயிரம் ஹூரோடு விளையாடிவிட்டு வந்தாலும் உன்னை வரவேற்று இன்புற செய்வாள். உன்னை குத்திப் பேச மாட்டாள். குறை பேச மாட்டாள். உன்னை தடுக்க மாட்டாள். உன்னை கட்டுப்படுத்த மாட்டாள்.

தோழரே! குர்ஆனையும் சுன்னாவையும் படித்து மறுமையை அறிந்து அதன் பதவிகளில் உயர நீ போட்டி போடு. நிலையற்ற வாழ்க்கையின் மோகத்தை, பிரியத்தை குறைத்துக்கொண்டு நிலையான வாழ்க்கையின் மீது தேடல் கொள்! அதை நோக்கி விரைந்து செல்! அதில் நீ மற்றவர்களை முந்தி செல்ல முயற்சி செய்!

அல்லாஹ் கூறுவதை கேள் !

وَسَارِعُوا إِلَىٰ مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمَاوَاتُ وَالْأَرْضُ أُعِدَّتْ لِلْمُتَّقِينَ○

உங்கள் இறைவனின் மன்னிப்பு இன்னும், சொர்க்கத்தின் பக்கம் விரையுங்கள். அதன் அகலம் வானங்களும் பூமியுமாகும். (அது) அல்லாஹ்வை அஞ்சுபவர்களுக்கு தயார்படுத்தப்பட்டுள்ளது. (அல்குர்ஆன் 3 : 133)

سَابِقُوا إِلَىٰ مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَاءِ وَالْأَرْضِ أُعِدَّتْ لِلَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرُسُلِهِ ذَٰلِكَ فَضْلُ اللَّهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ وَاللَّهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ○

உங்கள் இறைவனின் மன்னிப்பின் பக்கமும் சொர்க்கத்தின் பக்கமும் முந்துங்கள். அதன் அகலம் வானம், பூமியின் அகலத்தைப் போலாகும். அது அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கை கொண்டவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது அல்லாஹ்வின் சிறப்பா(ன அருளா)கும். அவன் நாடுகின்றவர்களுக்கு அதை அவன் கொடுக்கின்றான். அல்லாஹ் மகத்தான சிறப்புடையவன் ஆவான். (அல்குர்ஆன் 57 : 21)

அல்லாஹ்வே! எங்களை மறுமையின் புருஷர்களில் ஆக்குவாயாக! எங்களை சொர்க்கவாசிகளில் ஆக்குவாயாக! எங்களை உலக மோகத்தை விட்டும் பாதுகாப்பாயாக! எங்களை உலக இன்பங்களில் மனதை பறிகொடுத்து, உலக சுகங்களில் மூழ்கி மறுமையை மறந்தவர்களில் ஆக்கி விடாதே! எங்களின் மறுமையை மிக சிறப்பாக ஆக்கிவை! எங்கள் தங்குமிடத்தை சொர்க்கத்தில் ஆக்கிவை! உனக்கருகில் எங்களுக்கு இடமளிப்பாயாக! ஆமீன்!

## தோலை உருகச் செய்யும் நரக நெருப்பு!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَبَّادٍ الْمَكِّيُّ قَالَ سَمِعْتُ فُضَيْلَ بْنَ عِيَاضٍ وَسُئِلَ عَنْ قَوْلِهِ عَزَّ وَجَلَّ كُلَّمَا نَضِجَتْ جُلُودُهُمْ بَدَّلْنَاهُمْ جُلُودًا غَيْرَهَا قَالَ هِشَامٌ عَنِ الْحَسَنِ تَأْكُلُهُ النَّارُ كُلَّ يَوْمٍ سَبْعِينَ أَلْفَ مَرَّةٍ كُلَّمَا أَكَلَتْهُمْ وَأَنْضَجَتْهُمْ قِيلَ لَهُمْ عُودُوا فَيَعُودُونَ كَمَا كَانُوا

كُلَّمَا نَضِجَتْ جُلُودُهُمْ بَدَّلْنَاهُمْ جُلُودًا غَيْرَهَا

பொருள்: அவர்களுடைய தோல்கள் கருகி விடும்போதெல்லாம் வேறு புதிய தோல்களை மாற்றிக்கொண்டே இருப்போம். (அல்குர்ஆன் 4 : 56)

கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்குமுரிய அல்லாஹ்வின் இந்த கூற்றைப் பற்றி அறிஞர் ஃபுழைல் இப்னு இயாழ் ﵀ அவர்களிடம் கேட்கப்பட்டது.

அப்போது அதற்கு விளக்கம் ஹசன் பஸரி ﵀ கூறியதாக ஹிஷாம் கூறினார்: நரக நெருப்பு ஒவ்வொரு நாளும் எழுபதினாயிரம் முறை நரகவாசியின் உடலை தின்றுவிடும். அந்த நெருப்பு அவனின் உடலையும் தோலையும் ஒவ்வொரு முறை தின்று உருக்கிவிடும்போதெல்லாம் அவர்களை நோக்கி, நீங்கள் மீண்டும் (பழைய நிலைமைக்கு) திரும்புங்கள் என்று கூறப்படும். உடனே அவர்கள் பழைய நிலைக்கு திரும்பிவிடுவார்கள்.

**விளக்கம்:** அல்லாஹ் நம் அனைவரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பானாக! ஆமீன். யாரால் அந்த நரக நெருப்பை தாங்க முடியும்? அந்த நரகத்தின் சூடு என்ன, சாதாரணமானதா? இந்த உலகத்தின் நெருப்பை விட பல மடங்கு கடுமையானது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

نَارُكُمْ جُزْءٌ مِن سَبْعِينَ جُزْءًا مِن نَارِ جَهَنَّمَ قيلَ يا رَسولَ اللهِ إنْ كَانَتْ لَكَافِيَةً قالَ فُضِّلَتْ عَلَيْهِنَّ بِتِسْعَةٍ وسِتِّينَ جُزْءًا كُلُّهُنَّ مِثْلُ حَرِّهَا

உங்களது இந்த நெருப்பு நரகத்தின் நெருப்பிலிருந்து எழுபதில் ஒரு பகுதியாகும். அல்லாஹ்வின் தூதரே! (நரகவாசிகளை தண்டிக்க) இதுவே போதுமானதாக இருக்குமே என்று கூறப்பட்டது. அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அந்த நெருப்பு இதை விட அறுபத்தி ஒன்பது மடங்கு அதிகமாக்கப்பட்டது. அவை எல்லாம் அதன் சூட்டைப் போன்றுதான் இருக்கும்.[1]

இத்தகைய ஆபத்தான, கடின சூடுள்ள நெருப்பில் மனிதன் போடப்பட்டால் அவனின் நிலை என்னவாகும்? மனிதன் என்ன! இரும்பையும் கடின உலோகங்களையும் அதில் போடப்பட்டாலே தண்ணீர் போல அவை உருகி ஓடிவிடும். அப்படி இருக்க மென்மையான தோலாலும் சதையாலும் உண்டான மனிதன் அந்த நெருப்பில் போடப்பட்டால் அவனின் நிலை என்னவாகும் என்பதை சிந்தித்தால் பல நாள்களுக்கு உணவு உண்ண மனம் நாடாது.

ஒரு நிமிடம் மனிதன் நெருப்பில் நிம்மதியாக இருக்க முடியுமா? அது என்ன ஏசி ரூமா? அது அல்லாஹ் மூட்டிய நெருப்பாயிற்றே! மனிதன் அந்த நெருப்புக்கு முன்னால் வந்தால் அவனது நெஞ்சத்தை பொசுக்கி விடும். அதன் ஜுவாலை மனிதனை கருமையாக்கி மூச்சு திணற வைத்து விடும். அதன் சூடு மனிதனின் முகத்தை பொசுக்கி விடும்.

அந்த நரகத்தின் படைப்பாளன் கூறுவதைக் கேளுங்கள்!

وَمَا أَدْرَاكَ مَا الْحُطَمَةُ ○ نَارُ اللهِ الْمُوقَدَةُ ○ الَّتِي تَطَّلِعُ عَلَى الْأَفْئِدَةِ ○ إِنَّهَا عَلَيْهِمْ مُؤْصَدَةٌ ○

(நபியே!) ஹுதமா என்றால் என்னவென்று உமக்கு எது அறிவித்தது? (அது) அல்லாஹ்வுடைய (கட்டளையால்) எரிக்கப்பட்ட நெருப்பாகும். (அது உடல்களில் பட்டவுடன்) உள்ளங்களில் எட்டிப் பார்க்கும். நிச்சயமாக அது (-நரகம்) அவர்கள் மீது மூடப்படும். (அதிலிருந்து அவர்கள் வெளியேறவே முடியாது.) (அல்குர்ஆன் 104 : 5-8)

1. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 3265.

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

تَلْفَحُ وُجُوهَهُمُ النَّارُ وَهُمْ فِيهَا كَالِحُونَ۝

நெருப்பு அவர்களது முகத்தை பொசுக்கிவிடும். அவர்கள் அதில் உதடுகள் பொசுங்கி பற்கள் வெளிப்பட்டவர்களாக இருப்பார்கள்.

(அல்குர்ஆன் 23 : 104)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِذَا الْجَحِيمُ سُعِّرَتْ۝

இன்னும் நரகம் கடுமையாக எரிக்கப்படும் போது.

(அல்குர்ஆன் 82 : 12)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

انْطَلِقُوا إِلَىٰ ظِلٍّ ذِي ثَلَاثِ شُعَبٍ۝ لَا ظَلِيلٍ وَلَا يُغْنِي مِنَ اللَّهَبِ ۝
إِنَّهَا تَرْمِي بِشَرَرٍ كَالْقَصْرِ۝ كَأَنَّهُ جِمَالَتٌ صُفْرٌ۝

மூன்று கிளைகளை உடைய (நெருப்பு) புகையின் பக்கம் நீங்கள் செல்லுங்கள்! அது நிழல்தரக்கூடியது அல்ல, அது (நெருப்பின்) ஜுவாலையை தடுக்காது. நிச்சயமாக அது (-நரகம்) மாளிகையைப் போல் உள்ள நெருப்பு கங்குகளை எறியும்! அவையோ கரு மஞ்சள் நிற ஒட்டகைகளைப் போல் இருக்கும்!

(அல்குர்ஆன் 77 : 30-33)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَأَصْحَابُ الشِّمَالِ مَا أَصْحَابُ الشِّمَالِ۝ فِي سَمُومٍ وَحَمِيمٍ۝ وَظِلٍّ مِنْ
يَحْمُومٍ۝ لَا بَارِدٍ وَلَا كَرِيمٍ۝

இடப்பக்கமுடையவர்கள்! இடப்பக்கமுடையவர்கள் யார்? கடுமையான வெப்பக் காற்றிலும் நன்கு கொதிக்கின்ற சுடு நீரிலும், கரும் புகையின் நிழலிலும் (அவர்கள் இருப்பார்கள்). (இளைப்பாறுவதற்கு ஏதுவாக அந்த புகை) குளிர்ந்திருக்காது, (நுகர்வதற்குத் தோதுவாக) நறுமணம் உடையதாகவும் இருக்காது.

(அல்குர்ஆன் 56 : 41-44)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

سَأُصْلِيهِ سَقَرَ ○ وَمَا أَدْرَاكَ مَا سَقَرُ ○ لَا تُبْقِي وَلَا تَذَرُ ○ لَوَّاحَةٌ لِلْبَشَرِ ○

“சகர்” நரகத்தில் அவனை நான் விரைவில் பொசுக்குவேன். சகர் என்றால் என்ன என்று உமக்குத் தெரியுமா?அது (தன்னில் யாரையும்) வாழவைக்காது, (செத்துவிடுவதற்கும் யாரையும்) விட்டுவிடாது. அது தோல்களை கரித்துவிடும்.

(அல்குர்ஆன் 74 : 26-29)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَقُلِ الْحَقُّ مِنْ رَبِّكُمْ فَمَنْ شَاءَ فَلْيُؤْمِنْ وَمَنْ شَاءَ فَلْيَكْفُرْ إِنَّا أَعْتَدْنَا لِلظَّالِمِينَ نَارًا أَحَاطَ بِهِمْ سُرَادِقُهَا وَإِنْ يَسْتَغِيثُوا يُغَاثُوا بِمَاءٍ كَالْمُهْلِ يَشْوِي الْوُجُوهَ بِئْسَ الشَّرَابُ وَسَاءَتْ مُرْتَفَقًا ○

(நபியே!) உங்கள் இறைவனிடமிருந்து உண்மை(யான இந்த வேதம்) வந்துவிட்டது. விரும்பியவர்கள் (இதை) நம்பிக்கை கொள்ளலாம். விரும்பியவர்கள் (இதை) நிராகரித்து விடலாம். நிச்சயமாக நாம் (இதை நிராகரிக்கின்ற) தீயவர்களுக்கு நரக நெருப்பை ஏற்படுத்தியுள்ளோம். அதன் சுவர் அவர்களை சூழ்ந்துள்ளது. அவர்கள் உதவி தேடினால் முகங்களை பொசுக்கக்கூடிய முற்றிலும் சூடேறி உருகிப்போன உலோக திரவத்தைப் போன்ற நீரைக் கொண்டே உதவப்படுவார்கள். (அது ஒரு) மகா கெட்ட பானம். அது ஒரு தீய ஓய்விடம் (சாயுமிடம்) ஆகும்.

(அல்குர்ஆன் 18 : 29)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

كَلَّا إِنَّهَا لَظَىٰ ○ نَزَّاعَةً لِلشَّوَىٰ ○ تَدْعُو مَنْ أَدْبَرَ وَتَوَلَّىٰ ○ وَجَمَعَ فَأَوْعَىٰ ○

அவ்வாறல்ல. நிச்சயமாக அது கொழுந்து விட்டெரியும் நெருப்பாகும். (தலை இன்னும் உடலின்) தோலை கழற்றிவிடக்கூடியது அது. புறக்கணித்து, விலகி சென்றவர்களை அது அழைக்கும். இன்னும், (செல்வங்களை) சேகரித்து,

(அவற்றை தர்மம் செய்யாமல்) பாதுகாத்து வைத்தவர்களை அது அழைக்கும். (அல்குர்ஆன் 70 : 15-18)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

فَأَنْذَرْتُكُمْ نَارًا تَلَظَّىٰ ۝

ஆகவே, கொழுந்துவிட்டெரிகின்ற நெருப்பை உங்களுக்கு அச்சமூட்டி எச்சரித்தேன். (அல்குர்ஆன் 92 : 14)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

هٰذَا وَإِنَّ لِلطَّاغِينَ لَشَرَّ مَآبٍ ۝ جَهَنَّمَ يَصْلَوْنَهَا فَبِئْسَ الْمِهَادُ ۝ هٰذَا فَلْيَذُوقُوهُ حَمِيمٌ وَغَسَّاقٌ ۝ وَآخَرُ مِنْ شَكْلِهِ أَزْوَاجٌ ۝ هٰذَا فَوْجٌ مُقْتَحِمٌ مَعَكُمْ لَا مَرْحَبًا بِهِمْ إِنَّهُمْ صَالُوا النَّارِ ۝

(மேற்கூறப்பட்ட) இவை (நல்லவர்களுக்கு உரியதாகும்). நிச்சயமாக வரம்பு மீறிகளுக்கு மிகக் கெட்ட மீளுமிடம்தான் உண்டு. அதுதான் நரகம்- அதில் அவர்கள் எரிந்து பொசுங்குவார்கள். அது விரிப்புகளில் மிகக் கெட்ட விரிப்பாகும். (நெருப்பாலான விரிப்புகள் நரகவாசிகளுக்கு விரிக்கப்பட்டு அதில் அவர்கள் சுருட்டப்படுவார்கள்.) இவை கொதி நீரும் சீழ் சலமும் ஆகும். இவற்றை அவர்கள் சுவைக்கட்டும். இன்னும் தோற்றத்தில் பல வகையான மற்ற வேதனைகளும் (அவர்களுக்கு) உண்டு. இது உங்களுடன் (நரகத்தில்) நுழையக்கூடிய (இன்னொரு) கூட்டமாகும் (என்று பாவிகளின் தலைவர்களுக்கு கூறப்படும். அப்போது அவர்கள் பதில் கூறுவார்கள்:) அவர்களுக்கு (இங்கு) வசதி உண்டாகாமல் இருக்கட்டும். நிச்சயமாக அவர்கள் நரகத்தில் எரிந்து பொசுங்குவார்கள். (அல்குர்ஆன் 38 : 55-59)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّا جَعَلْنَاهَا فِتْنَةً لِلظَّالِمِينَ ۝ إِنَّهَا شَجَرَةٌ تَخْرُجُ فِي أَصْلِ الْجَحِيمِ ۝ طَلْعُهَا كَأَنَّهُ رُءُوسُ الشَّيَاطِينِ ۝ فَإِنَّهُمْ لَآكِلُونَ مِنْهَا فَمَالِئُونَ مِنْهَا الْبُطُونَ ۝ ثُمَّ إِنَّ لَهُمْ عَلَيْهَا لَشَوْبًا مِنْ حَمِيمٍ ۝ ثُمَّ إِنَّ مَرْجِعَهُمْ لَإِلَى الْجَحِيمِ ۝

நிச்சயமாக நாம் இணைவைப்பவர்களுக்கு அதை ஒரு சோதனையாக (தண்டனையாக) ஆக்கினோம். நிச்சயமாக அது நரகத்தின் அடியில் முளைக்கின்ற ஒரு மரமாகும். அதன் கனிகள் ஷைத்தான்களின் (-பாம்புகளின்) தலைகளைப் போல் (மிக விகாரமாக) இருக்கும். நிச்சயமாக அவர்கள் அதிலிருந்து சாப்பிடுவார்கள். இன்னும் அதிலிருந்து (தங்கள்) வயிறுகளை நிரப்புவார்கள். பின்னர் நிச்சயமாக அவர்களுக்கு அதற்கு மேல் கொதி நீரில் இருந்து கலக்கப்படும். (அவர்கள் உண்ணுகின்ற கள்ளிமர பழத்துடன் கடுமையான உஷ்ணமுள்ள நீரும் கலந்து கொடுக்கப்படும்.) (கள்ளிப்பழத்தை உண்டு கொதி நீரைக் குடித்த) பிறகு நிச்சயமாக அவர்களின் மீளுமிடம் நரக நெருப்பின் பக்கம்தான் இருக்கும். (அல்குர்ஆன் 37 : 63-68)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

هَٰذَانِ خَصْمَانِ اخْتَصَمُوا فِي رَبِّهِمْ فَالَّذِينَ كَفَرُوا قُطِّعَتْ لَهُمْ ثِيَابٌ مِنْ نَارٍ يُصَبُّ مِنْ فَوْقِ رُءُوسِهِمُ الْحَمِيمُ ○ يُصْهَرُ بِهِ مَا فِي بُطُونِهِمْ وَالْجُلُودُ ○ وَلَهُمْ مَقَامِعُ مِنْ حَدِيدٍ ○ كُلَّمَا أَرَادُوا أَنْ يَخْرُجُوا مِنْهَا مِنْ غَمٍّ أُعِيدُوا فِيهَا وَذُوقُوا عَذَابَ الْحَرِيقِ ○

இவ்விருவரும் (-அல்லாஹ்வின் நம்பிக்கை கொண்டவரும், அவனை நிராகரித்தவரும்) தங்கள் இறைவனின் (மார்க்க) விஷயத்தில் தர்க்கிக்கின்றனர். ஆக, எவர்கள் நிராகரித்தார்களோ அவர்களுக்கு நரக நெருப்பில் (பழுக்க சூடுகாட்டப்பட்ட செம்பிலிருந்து) ஆடைகள் வெட்டப்படும். அவர்களின் தலைகளுக்கு மேலிருந்து நன்கு கொதிக்கின்ற சுடுநீர் ஊற்றப்படும். அதன்மூலம் (அந்த கொதித்த நீரின் மூலம்) அவர்களுடைய வயிறுகளில் உள்ளவை உருக்கப்படும். இன்னும் (அவர்களுடைய) தோல்கள் (பொசுக்கப்படும்). அவர்களுக்கு (அவர்களை அடிப்பதற்கு வானவர்களிடம்) இரும்பு சம்மட்டிகள் இருக்கும். (அவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தின்) துக்கத்தால் அதிலிருந்து (நரகத்திலிருந்து) அவர்கள் வெளியேறுவதற்கு நாடும்போதெல்லாம் அதில் (-நரகத்தில்) திரும்பக் கொண்டு வரப்படுவார்கள். இன்னும் (அவர்களுக்குச் சொல்லப்படும்:) பொசுக்கக்கூடிய வேதனையை சுவையுங்கள். (அல்குர்ஆன் 22 : 19-22)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَذَرِ الَّذِينَ اتَّخَذُوا دِينَهُمْ لَعِبًا وَلَهْوًا وَغَرَّتْهُمُ الْحَيَاةُ الدُّنْيَا وَذَكِّرْ بِهِ أَنْ تُبْسَلَ نَفْسٌ بِمَا كَسَبَتْ لَيْسَ لَهَا مِنْ دُونِ اللَّهِ وَلِيٌّ وَلَا شَفِيعٌ وَإِنْ تَعْدِلْ كُلَّ عَدْلٍ لَا يُؤْخَذْ مِنْهَا أُولَٰئِكَ الَّذِينَ أُبْسِلُوا بِمَا كَسَبُوا لَهُمْ شَرَابٌ مِنْ حَمِيمٍ وَعَذَابٌ أَلِيمٌ بِمَا كَانُوا يَكْفُرُونَ ○

(நபியே!) உலக வாழ்க்கை அவர்களை மயக்கி, தங்கள் மார்க்கத்தை விளையாட்டாகவும் கேளிக்கையாகவும் எடுத்துக் கொண்டவர்களை (விட்டு) விடுவீராக. ஓர் ஆன்மா, தான் செய்ததன் காரணமாக (மறுமையில்) ஆபத்திற்குள்ளாகும் என்பதை இதன் மூலம் நினைவூட்டுவீராக. (அந்நாளில்) பாதுகாவலரோ பரிந்துரையாளரோ, அல்லாஹ்வைத் தவிர அதற்கு இருக்கமாட்டார். அது எவ்வளவு ஈடு கொடுத்தாலும் அதனிடமிருந்து அது ஏற்கப்படாது. இவர்கள் தாங்கள் செய்ததன் காரணமாகவே ஆபத்திற்குள்ளானவர்கள். இவர்கள் நிராகரித்துக் கொண்டிருந்த காரணத்தால் கடுமையான கொதி நீரிலிருந்து குடிபானமும் துன்புறுத்தும் வேதனையும் இவர்களுக்கு உண்டு. (அல்குர்ஆன் 6 : 70)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَنْ يَهْدِ اللَّهُ فَهُوَ الْمُهْتَدِ وَمَنْ يُضْلِلْ فَلَنْ تَجِدَ لَهُمْ أَوْلِيَاءَ مِنْ دُونِهِ وَنَحْشُرُهُمْ يَوْمَ الْقِيَامَةِ عَلَىٰ وُجُوهِهِمْ عُمْيًا وَبُكْمًا وَصُمًّا مَأْوَاهُمْ جَهَنَّمُ كُلَّمَا خَبَتْ زِدْنَاهُمْ سَعِيرًا ○

அல்லாஹ் எவரை நேர்வழி செலுத்துவானோ அவர்தான் நேர்வழி பெற்றவர். (அல்லாஹ்) எவரை வழி கெடுப்பானோ அவர்களுக்கு அவனையன்றி உதவியாளர்களை நீர் அறவே காணமாட்டீர். மறுமைநாளில் அவர்களைக் குருடர்களாகவும், ஊமையர்களாகவும், செவிடர்களாகவும் (ஆக்கி அவர்கள்) தங்கள் முகங்கள் மீது (நடந்து வரும்படி செய்து) ஒன்று சேர்ப்போம். அவர்களுடைய தங்குமிடம் நரகம்தான். அது அனல் தணியும் போதெல்லாம் அவர்களுக்கு கொழுந்து விட்டெரியும் நெருப்பை அதிகப்படுத்துவோம். (அல்குர்ஆன் 17 : 97)

இப்படியாக நரக நெருப்பின் உஷ்ணத்தைப் பற்றி பல நூறு வசனங்கள் உள்ளன.

நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களோ பல்லாயிரக் கணக்கில் உள்ளன. நபி ﷺ அவர்கள் எப்போதும் நரகத்தைக் குறித்து பயந்ததுடன் தங்கள் தோழர்களுக்கு நரகத்தைக் குறித்து பயத்தை ஏற்படுத்திக் கொண்டு இருந்தார்கள்.

எப்படி அவர்கள் அதை செய்யாமல் இருப்பார்கள்? அல்லாஹு தஆலா அவனது அடியார்களுக்கு நரகத்தைப் பயந்து கொள்ளுங்கள் என்று பல வசனங்களில் எச்சரித்துக் கொண்டே இருக்க, நபியே! நீங்களும் அந்த தண்டனையைப் பயப்படுவதாக மக்களுக்கு சொல்லுங்கள் என்று அல்லாஹ் கட்டளையிட்டிருக்க நபி ﷺ அவர்கள் எப்படி அமைதியாக இருப்பார்கள்.

அல்லாஹ்வின் எச்சரிக்கையை கவனியுங்கள்!

وَاتَّقُوا النَّارَ الَّتِي أُعِدَّتْ لِلْكَافِرِينَ ○

நிராகரிப்பாளர்களுக்காக தயார்படுத்தப்பட்ட (நரக)நெருப்பை அஞ்சுங்கள்.
(அல்குர்ஆன் 3 : 131)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلْ إِنِّي أَخَافُ إِنْ عَصَيْتُ رَبِّي عَذَابَ يَوْمٍ عَظِيمٍ ○ مَنْ يُصْرَفْ عَنْهُ يَوْمَئِذٍ فَقَدْ رَحِمَهُ وَذَٰلِكَ الْفَوْزُ الْمُبِينُ ○

(நபியே!) கூறுவீராக: "என் இறைவனுக்கு நான் மாறு செய்தால், மகத்தான ஒரு நாளின் வேதனையை நிச்சயமாக நான் பயப்படுகிறேன்."அந்நாளில் எவரை விட்டும் (வேதனை) தடுக்கப்படுகிறதோ அவருக்கு நிச்சயமாக (அல்லாஹ்) அருள்புரிந்து விட்டான். இதுதான் தெளிவான வெற்றியாகும்.
(அல்குர்ஆன் 6 : 15, 16)

நரகத்தின் வேதனைகள் சொல்லி மாளாதவை. வர்ணித்து முடிக்க முடியாதவை. வகை வகையான வேதனை தொடர்ந்து கொண்டே இருக்கும். வேதனையின் கடினம் கூடிக்கொண்டே போகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَالَّذِينَ كَفَرُوا لَهُمْ نَارُ جَهَنَّمَ لَا يُقْضَىٰ عَلَيْهِمْ فَيَمُوتُوا وَلَا يُخَفَّفُ عَنْهُمْ مِنْ عَذَابِهَا كَذَٰلِكَ نَجْزِي كُلَّ كَفُورٍ ○

நிராகரித்தவர்கள் அவர்களுக்கு நரக நெருப்புதான் உண்டு. அவர்களுக்கு (மரணம் நிகழும் என) தீர்ப்பளிக்கப்படாது. ஆகவே, அவர்கள் மரணிக்க மாட்டார்கள். அதன் தண்டனை அவர்களை விட்டும் இலேசாக்கப்படாது. இப்படித்தான் எல்லா நிராகரிப்பாளர்களுக்கும் நாம் கூலிகொடுப்போம்.
(அல்குர்ஆன் 35 : 36)

ஒரு நாளாவது வேதனையை சிறிது குறைக்கும்படி அவர்கள் கதறுவார்கள். ஆனால், அந்த கதறல் அங்கே பலனளிக்காது. அழுவார்கள். ஆனால், அழுகை கண்டுக்கொள்ளப்படாது.

وَقَالَ الَّذِينَ فِي النَّارِ لِخَزَنَةِ جَهَنَّمَ ادْعُوا رَبَّكُمْ يُخَفِّفْ عَنَّا يَوْمًا مِنَ الْعَذَابِ○

நரகத்தில் உள்ளவர்கள் நரகத்தின் காவலாளிகளுக்கு கூறுவார்கள்: உங்கள் இறைவனை அழையுங்கள்! அவன் எங்களை விட்டும் ஒரு நாளாவது வேதனையை இலகுவாக்குவான். (அல்குர்ஆன் 40 : 49)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِذَا أُلْقُوا مِنْهَا مَكَانًا ضَيِّقًا مُقَرَّنِينَ دَعَوْا هُنَالِكَ ثُبُورًا○ لَا تَدْعُوا الْيَوْمَ ثُبُورًا وَاحِدًا وَادْعُوا ثُبُورًا كَثِيرًا○

அவர்கள் அதில் நெருக்கமான இடத்தில் (சங்கிலிகளால் கைகள் கழுத்துகளுடன்) கட்டப்பட்டவர்களாக போடப்பட்டால் அங்கு (எங்கள்) கைசேதமே என்று (தங்களின் அழிவையும் நாசத்தையும்) அழைப்பார்கள். (உலகிற்கு திரும்ப செல்ல வேண்டுமே என்று கதறுவார்கள். தாங்கள் அழிந்து விடவேண்டுமே என்று சப்தமிடுவார்கள்.) இன்று கைசேதமே என ஒரு முறை அழைக்காதீர்கள். பல முறை கைசேதமே என்று அழையுங்கள்.
(அல்குர்ஆன் 25 : 13, 14)

ஹதீஸில் வருகிற வர்ணனைகளை இங்கு கூறுவது இந்த சிறு கட்டுரையை நீளமாக்கி விடும். அல்லாஹ்வின் அச்சம் உள்ளவர்களுக்கு இந்த இறைவசனங்கள் கண்டிப்பாக அச்சத்தை உண்டாக்கி, அவர்களின் மனதை மென்மையாக்கி, மறுமையை ஞாபகப்படுத்தும்.

நரகத்தின் பயம் நல்லோரின் தூக்கத்தை பறித்தது, சான்றோரின் கவலைகளை அதிகப்படுத்தியது, அவர்கள் உலகத்தை மறக்கும்படி, அல்லது உலகத்தேவைகளை குறைக்கும்படி செய்தது. அற்ப இன்பங்களின் பின்னால் அலைவதை விட்டும் அவர்களை பாதுகாத்தது. உலக சுகங்களில் மனதை பறிகொடுப்பதை விட்டும், தங்கம் வெள்ளியின் மின்னலில் மயங்கிவிடுவதை விட்டும் அவர்களை தூரமாக்கியது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

تَتَجَافَىٰ جُنُوبُهُمْ عَنِ الْمَضَاجِعِ يَدْعُونَ رَبَّهُمْ خَوْفًا وَطَمَعًا وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ○

அவர்களின் விலாக்கள் படுக்கைகளை விட்டு தூரமாக இருக்கும். அவர்கள் தங்கள் இறைவனை பயத்துடனும் ஆசையுடனும் வணங்குவார்கள். நாம் அவர்களுக்கு கொடுத்தவற்றிலிருந்து தர்மம் செய்வார்கள்.

(அல்குர்ஆன் 32 : 16)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أُولَٰئِكَ الَّذِينَ يَدْعُونَ يَبْتَغُونَ إِلَىٰ رَبِّهِمُ الْوَسِيلَةَ أَيُّهُمْ أَقْرَبُ وَيَرْجُونَ رَحْمَتَهُ وَيَخَافُونَ عَذَابَهُ إِنَّ عَذَابَ رَبِّكَ كَانَ مَحْذُورًا○

(தூதர்கள், இறைநேசர்கள், இன்னும் வானவர்களில்) எவர்களை இவர்கள் பிரார்த்தனையில் அழைக்கின்றார்களோ அவர்கள் தங்கள் இறைவன் பக்கம் தங்களில் மிக நெருங்கியவராக யார் ஆகுவது என்று நன்மையை (அதிகம் செய்ய வழிகளை)த் தேடுகின்றனர்; அவனுடைய அருளை ஆதரவு வைக்கின்றனர்; அவனுடைய வேதனையைப் பயப்படுகின்றனர். நிச்சயமாக உம் இறைவனின் வேதனை பயப்படவேண்டியதாக இருக்கின்றது! (ஆகவே, அவர்களிடம் எப்படி இவர்கள் இரட்சிப்பைத் தேடமுடியும்)

(அல்குர்ஆன் 17 : 57)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يُوفُونَ بِالنَّذْرِ وَيَخَافُونَ يَوْمًا كَانَ شَرُّهُ مُسْتَطِيرًا○

அவர்கள் நேர்ச்சையை (-தங்கள் மீதுள்ள கடமையான வணக்கங்களை) நிறைவேற்றுவார்கள். இன்னும் ஒரு நாளை பயப்படுவார்கள், அதன் தீமை (அல்லாஹ் கருணை புரிந்தவர்களைத் தவிர மற்ற எல்லோரையும்) சூழ்ந்ததாக, (அவர்கள் மீது) பரவியதாக, கடுமையானதாக இருக்கும்.

(அல்குர்ஆன் 76 : 7)

அல்லாஹ்வே! எங்களை பாதுகாப்பாயாக! உன்னை நாங்கள் வணங்குகிறோம்! உன்னையே நாங்கள் அழைக்கிறோம்! நாளை மறுமை நாளில் எங்கள் மீது கோபப்பட்டுவிடாதே! பாவிகளின் கூட்டத்தில் எங்களை சேர்த்து விடாதே! நரக வேதனையை எங்களை விட்டும் திருப்பிவிடுவாயாக! நீ மகா கருணையாளன், பெரும் இரக்கமுள்ளவன். ஆமீன்!

• • •

சான்றோர் பாடசாலை அமர்வு 13, கூற்று 1527

## பாவம், உண்மை முஃமினை வருத்தும்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَبَّادٍ حَدَّثَنَا سُفْيَانُ عَنْ أَبِي مُوسَىٰ قَالَ سَمِعْتُ الْحَسَنَ يَقُولُ إِنَّ الْمُؤْمِنَ لَيُذْنِبُ الذَّنْبَ فَمَا يَزَالُ كَئِيبًا حَتَّىٰ يَدْخُلَ الْجَنَّةَ

இமாம் ஹசன் பஸரி ؒ கூறுகிறார்கள்: நிச்சயமாக முஃமின் - இறை நம்பிக்கையாளர் பாவம் செய்துவிடுகிறார். ஆகவே, அவர் சொர்க்கம் செல்கின்ற வரை அதன் காரணமாக அவர் என்றென்றும் மன நெருக்கடியில் இருப்பார்.

**விளக்கம்:** ஆம், நல்லோர் அப்படித்தான் இருப்பார்கள். நமது தந்தை ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் சொர்க்கத்தில் தான் செய்த தவறுக்காக உலக வாழ்க்கையில் பாவமன்னிப்புத் தேடிக்கொண்டே இருந்தார்கள். அல்லாஹ்வும் அவர்களை மன்னித்துவிட்டேன் என்று கூறிவிட்டான். பிறகு மறுமையில் வரும்போது அல்லாஹ்விற்கு முன் வர அச்சம் கொள்கிறார்கள். தான் செய்த தவறை நினைத்துவிட்டு மக்களுக்கு சிபாரிசு செய்ய தனக்கு தகுதி இல்லை என்று கூறுகிறார்கள்.

இப்படித்தான், நூஹ் நபியும் இப்ராஹீம் நபியும் மூசா நபியும் தாங்கள் செய்த சிறிய சிறிய தவறுகளை நினைத்து மறுமையிலும் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தார்கள். அல்லாஹ்விற்கு முன்னர் வந்து மக்களுக்காக சிபாரிசு செய்ய தகுதி இல்லை என்று மறுத்துவிட்டார்கள். அந்த சிறு தவறுகளும் அவர்களின் உள்ளங்களில் கவலையை, சங்கடத்தை, துக்கத்தை, கைசேதத்தை உண்டாக்கிவிட்டன.

ஆம், முஃமின்கள் அப்படித்தான் இருப்பார்கள். மறுமையை அறிந்தவர்கள் அப்படித்தான் அஞ்சுவார்கள். நரகத்தை நம்பிக்கை கொண்டவர்கள்,

மறுமையின் விசாரணையை நம்பிக்கை கொண்டவர்கள், உள்ளத்தில் உண்மையான ஈமான் உள்ளவர்கள் தங்கள் பாவத்தையும் தவறையும் நினைத்து வருத்தப்படுவார்கள். அல்லாஹ் அவர்களை மன்னித்து சொர்க்கம் செல்ல அனுமதிக்கும் வரை அவர்களின் கவலை நீங்காது.

அல்லாஹ்வே! எங்களை மன்னிப்பாயாக! ஆமீன். நாங்கள் கொஞ்ச நஞ்சமா பாவம் செய்திருக்கிறோம். எங்களிடம் என்ன நல்லமல் இருக்கிறது? எங்கள் வாழ்க்கையை திரும்பி பார்த்தால், எங்கள் பதிவேட்டை நாங்கள் படித்துப் பார்த்தால் அதில் பாவங்கள் கோடிகளின் எண்ணிக்கையிலும் நன்மைகள் சில பத்துகளின் எண்ணிக்கையிலும்தான் இருக்கும். அந்த நன்மைகளிலும் எத்தனை ஓட்டைகளோ?

அலட்சியம், மறதி, குற்றம், பாவம், தவறு, நல்லமல்கள் குறைவாக இருத்தல், எத்தனையோ கடமைகளை பாழாக்கியது, அனேக ஒழுக்கங்களை புறக்கணித்தல், பல நூறு சுன்னாக்களை விட்டிருத்தல், ஃபர்ழான அமல்கள் பலவற்றை செய்யாமல் இருத்தல்.. இவற்றை எல்லாம் உன்னிடம் நாங்கள் மறைக்க முடியுமா? அல்லது உனக்கு முன்னால் மறுக்க முடியுமா? அல்லது உன்னிடமிருந்து நாங்கள் வேறு எங்கும் தப்பிக்க முடியுமா?

உனது விசாரணை என்ன சாதாரணமானதா? அது எவ்வளவு துல்லியமானது! எவ்வளவு நீதமானது! நாங்கள் உனக்கு முன்னால் வெட்கித்தலை குனிவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? நாங்கள் ஏதாவது எங்கள் செயலுக்கு காரணம் கூறமுடியுமா? அங்கு உன்னிடம் பிணை கொடுத்து தப்பிக்க முடியுமா? உனக்கு முன்னால் எங்களுக்காக உனது அனுமதி இன்றி யாரும் வந்து சிபாரிசுதான் செய்ய முடியுமா?

அல்லது இவ்வுலகில் நாங்கள் சேர்த்த செல்வம் அங்கு எங்களிடம் இருக்குமா, அதை உன்னிடம் கொடுத்து தப்பிக்க! உலகமே தங்கமாக இருந்து அதை கொடுத்தாலும் நீ அதை ஏற்க மாட்டாயே? உனக்கு அது தேவையும் இல்லையே! மனிதன் மறுத்தால், நீ அவனது கைகளையும் கால்களையும் அவனுக்கு எதிராக சாட்சி கூற வைத்துவிடுவாயே!

அங்கு பெற்றோரும், பிள்ளைகளும், உடன் பிறப்புகளும், இரத்த உறவுகளும் கைகொடுக்க மாட்டார்களே! அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரை விட்டும் தலை தெறிக்க ஓடுவார்களே! செய்த அமல்கள் எல்லாம் அங்கு கண்ணுக்கு முன்னால் வந்து விடுமே! அங்கு ஆட்சி அதிகாரம் உனக்கு மட்டும் இருக்குமே! உன்னிடம் பேச மகா தூதர்கள் எல்லாம் அஞ்சும்போது

எங்களைப் போன்ற மனித பொடிசுகள் என்ன செய்வோம்? அல்லது நல்லமல் செய்ய, விட்ட செல்வத்தில் தான தர்மங்கள் செய்ய இந்த உலகத்திற்கு நாங்கள் திரும்பத்தான் வர முடியுமா?

உனது தீர்ப்பில் யாரும் குறுக்கிட முடியாதே! உன்னை எதிர்த்து ஜிப்ரீலும் பேச முடியாதே! அமல்கள் கோடி இருந்தாலும் உனது அருள் இல்லாமல் சொர்க்கம் செல்ல முடியாதே! பாவிகள் அங்கு உன்னைத் தவிர வேறு யாரையும் ஆதரவு வைக்க முடியாதே! எங்களுக்கு நாங்கள் செய்த தீமைகள் ஒரு புறம் இருக்க, பிறருக்கு நாங்கள் செய்த குற்றங்கள், பாதிப்புகள், தொந்தரவுகள், உரிமை பறிப்புகள் இவற்றுக்கெல்லாம் நியாயம் கோரப்பட்டு, எங்கள் நன்மைகள் தீர்ந்து போய், அவர்களின் பாவங்கள் எங்கள் தலை மீது சுமத்தப்பட்டுவிட்டால் எங்கள் கதி என்னாவாகுமோ! அந்தோ எங்கள் பரிதாபமே!

ரஹ்மானே! நீ எங்களை கைவிட்டுவிட்டால் வேறு யார் எங்களுக்கு கை கொடுப்பார்? நீ எங்களை மன்னிக்கவில்லை என்றால் எங்களை மன்னிப்பவர் வேறு யார் இருக்கிறார்? நீ எங்களை துரத்தினால் வேறு யாருடைய வாசலுக்கு நாங்கள் சென்று எங்கள் தேவைகளை கேட்க முடியும்? நீ எங்களுக்கு உனது மன்னிப்பு இன்னும் கருணையின் கொடை கொடுக்கவில்லை என்றால் உன்னைத் தவிர வேறு கொடைவள்ளல் யார் இருக்கிறார் எங்களை போன்ற பாவிகளுக்கு மன்னிப்பின் கொடையை கொட்டி கொடுப்பதற்கு!

உனது அருள்களுக்கு நாங்கள் என்ன நன்றி செலுத்தி இருக்கிறோம் என்று நீ எங்களிடம் கேள்வி கேட்டுவிட்டால் அவ்வளவுதான் முடிந்தது எங்கள் கதி!! உனது அருள்களை கணக்கில்லாமல் நீ எங்களுக்கு கொடுத்தாய்! கேட்டதையும் கொடுத்தாய்! கேட்காத செல்வங்களையும் எங்களுக்கு கொடுத்தாய்! உண்ண உணவளித்தாய்! இருக்க இடமளித்தாய்! மனைவி மக்களை கொடுத்தாய்! நீ படைத்த அற்புதமான உலகத்தை காண இரு கண்களை கொடுத்தாய்! சுவையான உணவுகளை உண்டு ருசிக்க, இனிப்பான பழங்களையும் மதுரமான பானங்களையும் பருகி இன்புற நாவை கொடுத்தாய்! விரும்பிய இடங்களுக்கு சென்றுவர கால்களை கொடுத்தாய்! உணவுகளை அள்ளி உண்ண கைகளை கொடுத்தாய்!

சூரியன், சந்திரன், நட்சத்திரம், மேகம், காற்று, மழை, கடல், நதி, வண்ண வண்ண பறவைகள், வன விலங்குகள் என எண்ணிலடங்கா அதிசயங்களை எங்களுக்காக படைத்து எங்களை கௌரவப்படுத்தினாய். இப்படி உனது

அருட்கொடைகள் எங்கள் மீது ஏராளம் உள்ளனவே! நாங்கள் எதற்குமே நன்றி சரியாக செலுத்தியதில்லையே! என்ன செய்யப் போகிறோம்! எங்களை இரட்சிக்க யார் இருக்கிறார் உன்னைத் தவிர.

எங்கள் கொடைவள்ளலே! எங்கள் அருளாளனே! எங்கள் அரசனே! எங்கள் இலாஹே! எங்கள் ரப்பே! நீ உனது வேதத்தில் எங்களுக்கு கூறி இருக்கிறாய்:

وَالَّذِينَ إِذَا فَعَلُوا فَاحِشَةً أَوْ ظَلَمُوا أَنْفُسَهُمْ ذَكَرُوا اللهَ فَاسْتَغْفَرُوا لِذُنُوبِهِمْ وَمَنْ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا اللهُ○

அவர்கள் மானக்கேடான செயலை செய்து விட்டால் அல்லது தங்களுக்குத் தாங்களே தீமை செய்துவிட்டால் அவர்கள் அல்லாஹ்வை நினைவுகூருவார்கள், இன்னும் அவனிடம் தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள். அல்லாஹ்வைத் தவிர பாவங்களை யார் மன்னிப்பார்? (அல்குர்ஆன் 3 : 135)

இன்னும் நீ கூறி இருக்கிறாய்:

قُلْ يَا عِبَادِيَ الَّذِينَ أَسْرَفُوا عَلَىٰ أَنْفُسِهِمْ لَا تَقْنَطُوا مِنْ رَحْمَةِ اللهِ إِنَّ اللهَ يَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا إِنَّهُ هُوَ الْغَفُورُ الرَّحِيمُ○

(நபியே!) கூறுவீராக! தங்கள் மீது வரம்புமீறி பாவம் செய்த என் அடியார்களே! (பாவங்கள் செய்து தங்களுக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டவர்களே!) அல்லாஹ்வின் கருணையில் இருந்து நிராசை ஆகாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னிப்பான் (அடியான் திருந்தி, மன்னிப்புக் கேட்டுவிட்டால்). நிச்சயமாக அவன் மகா மன்னிப்பாளன், பெரும் கருணையாளன். (அல்குர்ஆன் 39 : 53)

இன்னும் நீ கூறி இருக்கிறாய்:

وَتُوبُوا إِلَى اللهِ جَمِيعًا أَيُّهَ الْمُؤْمِنُونَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ○

இன்னும் நம்பிக்கையாளர்களே! நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள் அவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள். (அல்குர்ஆன் 24 : 31)

இன்னும் நீ கூறி இருக்கிறாய்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا تُوبُوا إِلَى اللهِ تَوْبَةً نَصُوحًا عَسَىٰ رَبُّكُمْ أَنْ يُكَفِّرَ عَنْكُمْ سَيِّئَاتِكُمْ وَيُدْخِلَكُمْ جَنَّاتٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ○

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வின் பக்கம் உண்மையாக பாவமன்னிப்புக் கேட்டு திரும்புங்கள்! உங்கள் இறைவன் உங்களை விட்டும் உங்கள் பாவங்களை போக்கக்கூடும் (-போக்குவான்). சொர்க்கங்களில் உங்களை பிரவேசிக்க வைப்பான். அவற்றின் கீழ் நதிகள் ஓடும். (அல்குர்ஆன் 66 : 8)

உனது நபி ﷺ அவர்களின் வாயிலாக நீ கூறி இருக்கிறாய்:

يَا عِبَادِي إِنَّكُمْ تُخْطِئُونَ بِاللَّيْلِ وَالنَّهَارِ وَأَنَا أَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا فَاسْتَغْفِرُونِي أَغْفِرْ لَكُمْ

என் அடியார்களே! நீங்கள் இரவிலும் பகலிலும் தவறுகள் செய்கிறீர்கள். நானோ எல்லா பாவங்களையும் மன்னிக்கிறேன். ஆகவே, என்னிடம் பாவமன்னிப்பு கேளுங்கள்! நான் உங்கள் பாவங்களை மன்னித்துவிடுகிறேன்.[2]

இன்னும் நீ கூறியதாக உனது நபி ﷺ அவர்கள் எங்களுக்கு கூறினார்கள்:

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رضي الله عنه قَالَ سَمِعْتُ رَسُولَ اللهِ ﷺ يَقُولُ قَالَ اللهُ تَبَارَكَ وَتَعَالَىٰ يَا ابْنَ آدَمَ إِنَّكَ مَا دَعَوْتَنِي وَرَجَوْتَنِي غَفَرْتُ لَكَ عَلَىٰ مَا كَانَ فِيكَ وَلَا أُبَالِي يَا ابْنَ آدَمَ لَوْ بَلَغَتْ ذُنُوبُكَ عَنَانَ السَّمَاءِ ثُمَّ اسْتَغْفَرْتَنِي غَفَرْتُ لَكَ وَلَا أُبَالِي يَا ابْنَ آدَمَ إِنَّكَ لَوْ أَتَيْتَنِي بِقُرَابِ الْأَرْضِ خَطَايَا ثُمَّ لَقِيتَنِي لَا تُشْرِكُ بِي شَيْئًا لَأَتَيْتُكَ بِقُرَابِهَا مَغْفِرَةً

அல்லாஹு தஆலா கூறுவதாக நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: ஆதமின் மகனே! நிச்சயமாக நீ என்னை அழைத்து, என் மீது நல்லாதரவு வைக்கிற வரை உன்னிடம் என்ன இருந்தாலும் நான் உன்னை மன்னித்துவிடுவேன். நான் எதையும் பொருட்படுத்த மாட்டேன். ஆதமின்

2. அறிவிப்பாளர்: அபூ தர் அல் கிஃபாரி رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 2577.

மகனே! உனது பாவங்கள் வானத்தின் மேகங்கள் வரை வந்துவிட்டாலும் நீ என்னிடம் மன்னிப்பு கேட்டால் உன்னை நான் மன்னித்துவிடுவேன். நான் எதையும் பொருட்படுத்த மாட்டேன். ஆதமின் மகனே! பூமி நிரம்ப நிச்சயமாக நீ பாவங்களை என்னிடம் கொண்டுவந்தாலும், பிறகு நீ எனக்கு எதையும் இணையாக்காத நிலையில் என்னை நீ சந்தித்தால் நானும் பூமி நிரம்ப உனக்கு பாவமன்னிப்பு வழங்குவேன்.[3]

உனது நபி ﷺ அவர்களின் வாயிலாக இத்தகைய உனது நல்ல வாக்குறுதிகளை நாங்கள் செவியுற்று உன்னை நல்லாதரவு வைத்தவர்களாக இருக்கிறோம்.

நீ எங்கள் தந்தையும் தாயும்,

قَالَا رَبَّنَا ظَلَمْنَا أَنْفُسَنَا وَإِنْ لَمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ ۝

எங்கள் இறைவா! எங்கள் ஆன்மாக்களுக்கு நாங்கள் தீங்கிழைத்தோம். நீ எங்களை மன்னிக்கவில்லையெனில்; நீ எங்களுக்கு கருணை புரியவில்லையெனில் நிச்சயமாக நஷ்டவாளிகளில் ஆகிவிடுவோம். (அல்குர்ஆன் 7 : 23)

என்று உன்னை அழைத்தபோது அவர்களை மன்னித்தாய் அல்லவா!

நீ கண்ணியமான நபி யூனுஸ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள்,

أَنْ لَا إِلٰهَ إِلَّا أَنْتَ سُبْحَانَكَ إِنِّي كُنْتُ مِنَ الظَّالِمِينَ ۝

நிச்சயமாக உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை. நீ மகா பரிசுத்தமானவன். நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் சேர்ந்து விட்டேன். (அல்குர்ஆன் 21 : 87)

என்று அழைத்தபோது அவர்களை மன்னித்தாய் அல்லவா!

நீ, உனக்கு பாசமான பிரியமான நபி மூஸா ﷺ அவர்கள்,

أَنْتَ وَلِيُّنَا فَاغْفِرْ لَنَا وَارْحَمْنَا وَأَنْتَ خَيْرُ الْغَافِرِينَ ۝

நீ எங்கள் பாதுகாவலன். ஆகவே, நீ எங்களுக்கு மன்னிப்பு வழங்கு! எங்களுக்கு கருணை புரி! மன்னிப்பவர்களில் நீ மிகச் சிறந்தவன். (அல்குர்ஆன் 7 : 155)

3. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 3463.

என்று உன்னிடம் கோரியபோது அவர்களை மன்னித்தாய் அல்லவா!

நீ, உனது முதல் ரஸூலும் அதிக காலம் அழைப்பு பணி செய்த நபியுமாகிய நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள்,

قَالَ رَبِّ إِنِّي أَعُوذُ بِكَ أَنْ أَسْأَلَكَ مَا لَيْسَ لِي بِهِ عِلْمٌ وَإِلَّا تَغْفِرْ لِي وَتَرْحَمْنِي أَكُنْ مِنَ الْخَاسِرِينَ○

என் இறைவா! எனக்கு ஞானமில்லாததை உன்னிடம் நான் கேட்பதை விட்டு உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ என்னை மன்னிக்கவில்லையெனில், எனக்கு கருணை காட்டவில்லையெனில் நஷ்டவாளிகளில் ஆகிவிடுவேன். (அல்குர்ஆன் 11 : 47)

என்று கெஞ்சியபோது அவர்களை மன்னித்து அருளினாய் அல்லவா!

உன்னிடம் திரும்பிய, உன்னிடம் மன்னிப்புக் கோரிய, பாவங்களை விட்டு தவ்பா செய்த உனது அடியார்கள் எல்லோரையும் நீ மன்னித்தாய் அல்லவா!

فَفِرُّوا إِلَى اللّٰهِ○

அல்லாஹ்வின் பக்கம் மிக வேகமாக ஓடி வாருங்கள்!(அல்குர்ஆன் 51 : 50)

என்று நீ அழைத்தாய் அல்லவா!

وَاللّٰهُ يَدْعُو إِلَى الْجَنَّةِ وَالْمَغْفِرَةِ بِإِذْنِهِ○

சொர்க்கத்தின் பக்கமும் மன்னிப்பின் பக்கமும் அல்லாஹ் தன் அனுமதி கொண்டு அழைக்கிறான். (அல்குர்ஆன் 2 : 221)

என்று நீ உன்னைப் பற்றி கூறினாய் அல்லவா!

يَا غَافِرُ يَا غَفُورُ يَا غَفَّارُ يَا غَافِرَ الذَّنْبِ يَا خَيْرَ الْغَافِرِينَ يَا مَنْ يَغْفِرُ الذُّنُوبَ جَمِيعًا يَا تَوَّابُ يَا رَحْمٰنُ يَا رَحِيمُ يَا عَفُوُّ يَا كَرِيمُ يَا رَبُّ

மன்னிப்பாளனே! பெரும் மன்னிப்பாளனே! மகா மன்னிப்பாளனே! எல்லா பாவங்களையும் மன்னிப்பவனே! மன்னிப்பவர்களில் மிகச் சிறந்தவனே! பாவிகளின் பிழை பொறுப்பை ஏற்பவனே! பேரருளாளனே! பேரன்பாளனே! பிழை பொறுப்பவனே! கண்ணியமானவனே! எங்கள் இறைவனே!

அல்லாஹ்வே! நாங்களும் உன்னிடம் கெஞ்சுகிறோம், உன்னிடம் மன்றாடுகிறோம், உன்னிடம் பணிகிறோம், உன்னை அழைக்கிறோம், உன்னை ஆதரவு வைக்கிறோம், உன்னை நோக்கி ஓடி வருகிறோம், உன்னை முன்னோக்கி நிற்கிறோம், எங்கள் முகங்களை உன் பக்கம் திருப்பி விட்டோம், உனக்கு முன்னால் உன்னை வணங்கி நிற்கிறோம், குனிகிறோம், சிரம் பணிகிறோம், கையேந்துகிறோம், உன் அழகிய பெயர்களைக் கொண்டும் உனது உயர்வான பண்புகளைக் கொண்டும் உன்னை புகழ்கிறோம், உன்னிடம் உன்னைக் கொண்டு சிபாரிசு தேடுகிறோம், எங்கள் பாவங்களை, குற்றங்களை, தவறுகளை, குறைகளை உனக்கு முன்னால் ஒப்புக்கொள்கிறோம், எங்களை இம்மையிலும் மன்னித்து விடு! மறுமையிலும் மன்னித்து விடு! மகா மன்னிப்பாளனே! மன்னிப்பவர்களில் எல்லாம் மிக சிறந்தவனே! ஆமீன்!

• • •

சான்றோர் பாடசாலை அமர்வு 14, கூற்று 1528

## மரண நினைவின் நன்மையும் நீண்ட ஆசையின் விபரீதமும்

حَدثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبُو الْوَلِيدِ بْنُ شُجَاعٍ حَدَّثَنَا مَخْلَدٌ يَعْنِي ابْنَ حُسَيْنٍ عَنْ هَاشِمٍ عَنِ الْـحَسَنِ قَالَ مَا أَكْثَرَ عَبْدٌ ذِكْرَ الْمَوْتِ إِلَّا رُئِيَ ذٰلِكَ فِي عَمَلِهِ وَلَا طَالَ أَمَلُ عَبْدٍ قَطُّ إِلَّا أَسَاءَ الْعَمَلَ

இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: ஓர் அடியான் மரணத்தை நினைவு கூர்வதை அதிகப்படுத்தினால் அதை அவனது அமலில் பார்க்கலாம். ஓர் அடியானுடைய ஆசைகள் நீண்டுகொண்டே போனால் அவன் அமலை கெடுத்துவிடுவான்.

**கருத்து:** ஒரு மனிதன் அதிகமாக மரணத்தை நினைக்க வேண்டும். அப்போதுதான் தனது ஆசைகளை அளவோடு நிறுத்திக்கொள்வான். பிறகு, தனது மரணத்திற்கு பின்னர் உள்ள வாழ்க்கைக்கு நன்மைகளை சேகரிப்பதில் அவன் கவனம் செலுத்துவான்.

ஒரு மனிதனுக்கு உலகாசை நீண்டுகொண்டே போனால் அவன் மறுமையை மறந்துவிட்டு, உலக தேடலில் மூழ்கிவிடுவான். மார்க்கம் விதித்த கடமைகளை செய்வதில் அலட்சியம் செய்வான். உலக ஆசைகள் அதிகமுடையவன் கண்டிப்பாக அல்லாஹ் தடுத்த பாவமான காரியங்களில் சிக்கிவிடுவான். தனது மறுமைக்கான அமல்களில் கவனம் செலுத்த மாட்டான்.

**விளக்கம்:** உலகம் மறுமைக்கான விளை நிலம், இங்கு நாம் அமல் செய்து நன்மைகளை சேகரிப்பதற்காக வந்துள்ளோம்.

உலகம் தற்காலிகமானது. இங்கு யாரும் நிலையாக இருக்க வரவில்லை. இங்கு வந்தவர் கண்டிப்பாக இங்கிருந்து வெளியேறியே ஆக வேண்டும்.

இந்த உலகத்தில் உள்ளே வந்தவர் கண்டிப்பாக வெளியே சென்றே ஆக வேண்டும்.

இன்று நீ ஒருவரை குளிப்பாட்டினால் நாளை உன்னை இன்னொருவர் குளிப்பாட்டுவார்.

இன்று நீ ஒருவரை சுமந்தால் நாளை இன்னொருவர் உன்னை சுமப்பார்.

இன்று நீ ஒருவருக்கு தொழுகிறாய். நாளை உன்னை முன்னால் வைத்து இன்னொருவர் உனக்காக தொழுவார்.

இன்று நீ ஒருவருக்கு மண்ணை அள்ளிப் போட்டால் உனக்கு நாளை இன்னொருவர் மண்ணை அள்ளிப் போடுவார்.

இன்று நீ ஒருவரின் இறப்பைப் பற்றி பேசுகிறாய். நாளை இன்னொருவர் உனது இறப்பைப் பற்றி பேசுவார்.

இன்று நீ உனது தந்தைக்கு வாரிசாகிறாய். நாளை உனது பிள்ளைகள் உனக்கு வாரிசாகுவார்கள்.

நீ ஒருவரின் செல்வத்தை, வீட்டை, தோட்டத்தை, நிலத்தை, உடமையை இன்று வாங்குகிறாய். நாளை இன்னொருவர் உன்னுடையதை வாங்குவார். உன்னுடையது என்று நீ சொல்லிக் கொள்வதற்கு உனக்கு என்ன இருக்கிறது?!

உன் உடலையே உன்னால் பாதுகாக்க முடியாது. உன்னை மண் திங்கும்போது உன்னால் அதை தடுக்க முடியுமா? நீ எவ்வளவு அக்கறையாய், கவனமாய், கண்ணும் கருத்துமாய் பேணி வந்த உனது உடல் மண்ணோடு மண்ணாய் மக்கி உருகுலைந்து போய்விடுமே! உன்னால் என்ன செய்ய முடியும்? உன்னால் தடுக்க முடியுமா? திமிற முடியுமா? தப்பிக்க முடியுமா? யாரிடமாவது சென்று முறையிட முடியுமா?

உனது நாவைக்கொண்டு நீ கத்தி யாரையும் உதவிக்கு அழைக்க முடியாது, உனது கைகளைக் கொண்டு நீ தடுக்க முடியாது, உனது கால்களைக் கொண்டு நீ எங்கும் ஓடி தப்பிக்க முடியாது, உனக்கு என்ன நடக்கிறது என்பதை நீ யாருக்கும் சொல்ல முடியாது, உனக்கு என்ன நடக்கிறது என்பதை உனக்கு அருகில் உள்ளவரும் உணர முடியாது.

இங்கே பார் நண்பா! முன்னோருக்கு பின்னர் இப்போது நாம். நமக்கு பின்னர் நமது சந்ததிகள். இப்படியாக இன்று இருப்பவர் நாளை இருக்க மாட்டார். முன்னோர் இங்கிருந்து சென்றது போன்று நாமும் இங்கிருந்து செல்ல இருக்கிறோம். இங்கு நாமும் நிரந்தரமானவர்கள் இல்லை. நம்மிடம் இருக்கும் உலகமும் நமக்கு நிரந்தரமானது இல்லை.

ஒருவரின் கையிலிருந்து இன்னொருவரின் கைக்கு, ஒருவரின் உரிமையிலிருந்து இன்னொருவரின் உரிமைக்கு இந்த உலகத்தில் உள்ள எல்லாம் மாறிக்கொண்டே இருக்கும்.

ஆட்சி மாறும், அதிகாரம் மாறும், உரிமைகள் மாறும், முழுமையாக இந்த உலகத்தின் வரைபடமே மாறும்.

மன்னன் படையை அடக்குவான். படை மக்களை அடக்குவார்கள்! பிறகு, படை மன்னனை மடக்கும், சிறையில் அடைக்கும்! பிறகு மக்கள் கலகம் செய்வார்கள், மக்களை படைக் கொல்ல, மக்கள் அவர்களைக் கொல்ல, எல்லாம் தலைகீழாக மாறிவிடும்.

அல்லாஹ் கால சக்கரத்தை சுழற்றுகிறான், கிணற்றின் வாளியாக கீழே சில நேரம், மேலே சில நேரம் என்று அனைத்தையும் மாற்றிக்கொண்டே இருப்பான்.

செல்வந்தனின் செல்வம் அவனுக்கு நிரந்தரமானது இல்லை.

ஆட்சியாளரின் ஆட்சி அவனுக்கு நிரந்தரமானது இல்லை.

வசதி படைத்தவனுக்கு அவனது வசதி நிரந்தரமானது இல்லை.

இந்த உலகத்தில் எதுவும் யாருக்கும் நிரந்தரமானது இல்லை.

இந்த உலகம் மாறிக்கொண்டே இருக்கும். தன்னில் உள்ளதை இந்த உலகம் மாற்றிக் கொண்டே இருக்கும்.

இந்த உலகம் இன்று உன்னை நேசித்தால் நாளை உன்னை வெறுக்கும்.

இன்று உன்னை போற்றினால் நாளை உன்னை தூற்றும்.

அரச கட்டிலில் அமர்ந்தவன் கம்பிகளுக்கு பின்னால் கைதியாகவும் ஆக்கப்படுவான்.

சிங்கார தோட்டங்களில், சிகை அலங்காரம் செய்துகொண்டு, சிரித்து குதூகலமாக இருந்தவன் சிறையில் அடைக்கப்பட்டு, உடைகள் மாற்றப்பட்டு, பரதேசியாக, அலங்கோலமாக பல அல்லல்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகலாம்.

ஏழையின் ஏழ்மையும் நிரந்தரமல்ல. கவலைப்படுவோரின் கவலையும் நிரந்தரமல்ல. நோயாளியின் நோயும் நிரந்தரமல்ல.

சரி! இப்படி நிரந்தரமற்ற, தற்காலிகமான, நிலையற்ற, எந்த நேரத்திலும் நம்மை உயிர்வாங்கிடும் ஆபத்துகள் சூழ்ந்துள்ள இந்த உலகத்தில் மனிதனின் ஆசைகளுக்கு அளவே இல்லை.

ஆகாயத்திற்கு அளவில்லை, வானத்திற்கு எல்லை இல்லை, கடல் ஆழத்திற்கு எல்லை இல்லை, இப்படி பலவற்றை நாம் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

ஆனால், உண்மையில் அவற்றுக்கெல்லாம் ஓர் எல்லை, ஓர் அளவு உண்டு. எல்லை அற்ற, அளவுகள் அற்ற ஒன்று இருக்கிறது என்றால் அது மனிதனின் ஆசைதான். அந்த ஆசைக்கு அளவில்லை, எல்லையில்லை.

அல்லாஹ் நாடினால் தவிர கட்டுப்படுத்த முடியாத ஒன்று இருக்கிறது என்றால் அது மனிதனின் ஆசையும் எதிர்பார்ப்பும், இன்னும் அது வேண்டும், இது வேண்டும் என்ற உலக தேடல்களுமாகும். இவற்றுக்கு ஓர் அளவே இல்லை.

"எனக்கு போதும், இனி எனக்கு தேவை இல்லை என்று சொல்லும் மனம் எத்தனை பேர்களுக்கு இருக்கிறது, அல்லாஹ் நாடியவர்களைத் தவிர."

உலகத்தில் எந்த பொருளாக இருந்தாலும் அது செல்வமாக இருந்தாலும் அல்லது வசதிகளாக இருந்தாலும் அல்லது ஆட்சி அதிகாரமாக இருந்தாலும் மனிதன் அவற்றில் தனக்கு இவ்வளவு போதும் என்று நிறுத்திக் கொள்கிறானா என்றால் அறவே இல்லை.

சிலருக்கு பொன்னாசை, சிலருக்கு பெண்ணாசை, சிலருக்கு மண்ணாசை, சிலருக்கு இவை எல்லாவற்றின் மீதும் ஆசை. இந்த மனித மனசு ஒரு மோசமான, வெறித்தனமான மிருகத்தைவிட கொடூரமானது.

உலகத்தில் நடக்கும் குற்றங்கள், இன்னும் பாவங்களுக்கு ஆணிவேராக இருப்பது அதிக ஆசை, பேராசைப்படுதல் ஆகும்.

போதும் என்ற திருப்தியான மன நிலைக்கு வரும்போது அவனது ஆன்மா அமைதியடைகிறது, அவன் மனதிற்குள் நிம்மதி நிலவுகிறது. மனம் விசாலமடைகிறது. கவலையும் சஞ்சலமும் சடைவும் அவனை விட்டு விலகிவிடுகின்றன.

மனிதனே உனக்கு இந்த உலகில் எது பிடிக்கும்! உனது ஆசை என்ன? நீ அதிகம் விரும்புவது எது? அதை கொஞ்சம் சொல்! உனக்கு நான் அதன் உண்மைத்தன்மையை மார்க்கத்தின் தொலை நோக்கி வழியாக விவரிக்கிறேன்.

ஓ! உனக்கு உணவு பிடிக்குமா! அந்த உணவை அளவோடு உண்டு உனது ஆரோக்கியத்தை தக்கவைத்துக்கொள்! இல்லை என்றால் அந்த உணவால் உனக்கு நோய்கள், பிணிகள் ஏராளம் வரலாம். அதுவே உனது மரணத்திற்கு காரணமாக அமையலாம்.

நண்பனே! உனக்கு ஜொலிக்கும் தங்கமும் பளபளக்கும் வெள்ளியும் பிடிக்குமா? எண்ணும்போது சலசலவென சப்தம் தரும் கரன்சி நோட்டுகள் பிடிக்குமா? இவற்றை எல்லாம் நீ எங்கே சேமித்து வைக்கப் போகிறாய்? ஆபத்துகளால் சூழ்ந்துள்ள இந்த உலகத்தில் இவற்றை எங்கு வைத்து பாதுகாக்கப் போகிறாய்? பொறாமைக்காரர்கள் நிறைந்த உலகத்தில் இவற்றை எங்கு வைத்து நீ மறைக்கப் போகிறாய்?

இவற்றை எல்லாம் நீ மார்க்கம் அனுமதித்த வழிகளில் சேகரித்து இருந்தால் அல்லாஹ்வின் இரு கேள்விகளில் ஒன்றுக்கு நீ தேறிவிட்டாய். அடுத்த கேள்வி, நீ உனது செல்வத்தை எப்படி செலவு செய்தாய்? அதில் அல்லாஹ்வின் கடமைகளை நிறைவேற்றினாயா? என்று. இது இரண்டாவது கேள்வி! இதற்கு உன்னிடம் என்ன பதில் இருக்கிறது என்று நன்கு சிந்தித்துக்கொள்!

உனது செல்வத்தில் ஹராம் கலந்துவிட்டால், நீ உனது செல்வத்தை மார்க்கம் அனுமதிக்காத வழியில் சேகரித்து இருந்தால் அல்லது செல்வம் ஹலாலாக இருந்து அதை அல்லாஹ்வின் கட்டளைப்படி செலவு செய்யவில்லை என்றால், அவற்றில் அல்லாஹ் விதித்த கடமைகளை நீ நிறைவேற்றவில்லை என்றால் உனது மறுமையை நீ நாசமாக்கிக் கொண்டாய். அங்கு உன்னை யாரும் காப்பாற்ற முடியாது. உனது செல்வத்தாலேயே உனக்கு சூடு போடப்படும். அது பெரும் விஷப் பாம்பாக மாற்றப்பட்டு உனது கழுத்தில் தொங்கவிடப்பட்டு உனது இரு தாடைகளும் கிழியும் அளவிற்கு அது உன்னை கடித்துக் குதறி விடும்.

இதோ பாவிகளின் நிலையை பற்றி குர்ஆன் வர்ணிப்பதை கவனி!

مَا أَغْنَىٰ عَنِّي مَالِيَهْ ۝

எனது செல்வம் எனக்கு பலனளிக்கவில்லை! (என்று இடது கையில் செயலேடு கொடுக்கப்பட்டவர் மறுமையில்) கூறுவார். (அல்குர்ஆன் 69 : 28)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَن آتَاهُ اللهُ مَالًا فَلَمْ يُؤَدِّ زَكَاتَهُ مُثِّلَ لَهُ مَالُهُ يومَ القِيَامَةِ شُجَاعًا أَقْرَعَ لَهُ زَبِيبَتَانِ يُطَوَّقُهُ يومَ القِيَامَةِ ثُمَّ يَأْخُذُ بِلِهْزِمَتَيْهِ يَعْنِي بِشِدْقَيْهِ ثُمَّ يَقُولُ أَنَا مَالُكَ أَنَا كَنْزُكَ ثُمَّ تَلَا لَا يَحْسَبَنَّ الَّذِينَ يَبْخَلُونَ الْآيَةَ

யாருக்கு அல்லாஹ் செல்வத்தை கொடுத்து அவர் அதனுடைய ஸகாத்தை கொடுக்கவில்லையோ அவருக்கு அவரின் செல்வம் மறுமை நாளில் வழுக்கை தலையுடைய கொடிய விஷப் பாம்பாக உருவம் கொடுக்கப்பட்டு மறுமை நாளில் அவனது கழுத்தை அது சுற்றிக் கொள்ளும். பிறகு அவனது இரு தாடைகளையும் அது கவ்விக் கொள்ளும். பிறகு அது கூறும், நான் உனது செல்வம், நான் உனது சேமிப்பு என்று. இதற்கு பிறகு நபி ﷺ அவர்கள் இந்த வசனத்தை ஓதிக்காட்டினார்கள்[4]:

وَلَا يَحْسَبَنَّ الَّذِينَ يَبْخَلُونَ بِمَا آتَاهُمُ اللَّهُ مِنْ فَضْلِهِ هُوَ خَيْرًا لَهُمْ بَلْ هُوَ شَرٌّ لَهُمْ سَيُطَوَّقُونَ مَا بَخِلُوا بِهِ يَوْمَ الْقِيَامَةِ ○

அல்லாஹ் தன் அருளிலிருந்து கொடுத்ததில் கஞ்சத்தனம் செய்பவர்கள் அது தங்களுக்கு நல்லதென்று எண்ண வேண்டாம். மாறாக, அது அவர்களுக்குத் தீமையாகும். அவர்கள் கஞ்சத்தனம் செய்ததை மறுமை நாளில் (கொடிய விஷப் பாம்பாக மாற்றப்பட்டு) அவர்களது கழுத்தில் மாட்டப்படுவார்கள். (அல்குர்ஆன் 3 : 180)

மேலும் அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَالَّذِينَ يَكْنِزُونَ الذَّهَبَ وَالْفِضَّةَ وَلَا يُنْفِقُونَهَا فِي سَبِيلِ اللَّهِ فَبَشِّرْهُمْ بِعَذَابٍ أَلِيمٍ ○ يَوْمَ يُحْمَىٰ عَلَيْهَا فِي نَارِ جَهَنَّمَ فَتُكْوَىٰ بِهَا جِبَاهُهُمْ وَجُنُوبُهُمْ وَظُهُورُهُمْ هَٰذَا مَا كَنَزْتُمْ لِأَنْفُسِكُمْ فَذُوقُوا مَا كُنْتُمْ تَكْنِزُونَ ○

இன்னும் எவர்கள் தங்கத்தையும், வெள்ளியையும் சேகரித்து வைத்துக்கொண்டு, அதை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்யாதிருக்கின்றனரோ அவர்களுக்கு (நபியே!) நீர் துன்புறுத்தும் வேதனையை நற்செய்தியாகக் கூறுவீராக. (தங்கம், வெள்ளியாகிய) அவற்றை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும், அவர்களுடைய விலாக்களிலும், அவர்களுடைய முதுகுகளிலும் சூடிட்டு "உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்தவை இவைதான். ஆகவே, நீங்கள் சேகரித்து

4. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 1403.

வைத்திருந்த இவற்றை சுவைத்துப் பாருங்கள்” என்று கூறப்படும் நாளை (நபியே! நீர் அவர்களுக்கு ஞாபகமூட்டுவீராக). (அல்குர்ஆன் 9 : 34, 35)

செல்வத்தை மனிதன் அளவின்றி ஆசைப்படுவதை குறித்து அல்லாஹ் இப்படி எச்சரிக்கிறான்:

أَلْهَاكُمُ التَّكَاثُرُ ۝ حَتَّىٰ زُرْتُمُ الْمَقَابِرَ ۝

அதிகம் வேண்டும் என்று போட்டிப்போடுவது உங்களை மறக்க செய்துவிட்டது, இறுதியாக நீங்கள் புதைகுழிகளை சந்தித்தும் விடுகிறீர்கள். (அல்குர்ஆன் 102 : 1, 2)

அல்லாஹ்வின் தூதர் அருமை நபி ﷺ அவர்கள் மனிதனின் ஆசையை எப்படி துல்லியமாக வர்ணிக்கிறார்கள் கேளுங்கள்!

لَوْ كَانَ لِابْنِ آدَمَ وَادِيَانِ مِنْ مَالٍ لَابْتَغَىٰ وَادِيًا ثَالِثًا وَلَا يَمْلَأُ جَوْفَ ابْنِ آدَمَ إِلَّا التُّرَابُ وَيَتُوبُ اللهُ عَلَىٰ مَنْ تَابَ

மனிதனுக்கு இரண்டு ஓடைகள் செல்வம் இருந்தால் மூன்றாவது ஓர் ஓடை வேண்டும் என்று ஆசைப்படுவான். மனிதனின் வயிறை மண்ணைத் தவிர வேறு ஏதும் நிரப்பாது. யார் திருந்தி அல்லாஹ்வின் பக்கம் வருகிறார்களோ அவர்களை அல்லாஹ் மன்னித்துவிடுகிறான்.[5]

சரி, இதை விடு வேறு என்ன உனக்கு பிடிக்கும் நண்பா!

ஓ நீ வாலிபனாயிற்றே! வெள்ளைத் தோலைப் பார்த்து, சிரிக்கும் பல்லைப் பார்த்து, வட்டமான முகத்தைப் பார்த்து, நீண்ட கருத்த விழிகளுடைய கண்ணைப் பார்த்து, பொன் நகைகளில் ஜொலிக்கும் பெண்ணைப் பார்த்து, வண்ண ஆடைகளை அணிந்து கொண்டு ஊர்வலம் வருகின்ற கன்னியைப் பார்த்து நீ ஆசைப்படுகிறாயா?

பெண் இருக்கிறாளே அவள் நம்மை மயக்கி, பிரச்சனையில் சிக்க வைக்கும் மாயவலை ஆவாள். உனது வாகனம் உனக்கு உரிமையாக இருக்கும் போதுதான் உனக்கு. அப்படித்தான் இந்த பெண்ணும். இன்று நீ இறந்து விட்டால், நாளை இன்னொருவன் அவளை ஹலாலாக்கிக் கொண்டால் அவள் உன்னை மறந்துவிடுவாள், உன் உபகாரத்தை மறந்துவிடுவாள்,

5. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 1048.

உன் பிள்ளைகளையும் மறந்துவிடுவாள், உனக்கு சுகமளித்தவள் இன்று இன்னொருவருக்கு சுகமளிப்பாள். இதுதான் உலகம், இதுதான் உண்மை, இதுதான் யதார்த்தம்!

இன்னும் இந்த உலகத்தைப் பற்றி சொல்ல நிறைய உள்ளன. இறுதியாக ரப்புடைய ஒரு வசனத்தை எனக்கும் உனக்கும் நினைவூட்டுகிறேன்:

وَلَا تَمُدَّنَّ عَيْنَيْكَ إِلَىٰ مَا مَتَّعْنَا بِهِ أَزْوَاجًا مِنْهُمْ زَهْرَةَ الْحَيَاةِ الدُّنْيَا لِنَفْتِنَهُمْ فِيهِ وَرِزْقُ رَبِّكَ خَيْرٌ وَأَبْقَىٰ ۝

இவர்களைப் போன்றவர்களுக்கு உலக வாழ்க்கையின் அலங்காரமாக நாம் இன்பமளித்தவற்றின் பக்கம் உமது கண்களை நீர் திருப்பாதீர். அதில் (-அந்த இன்பத்தில்) அவர்களை நாம் சோதிப்பதற்காக (அதைக் கொடுத்தோம்). உமது இறைவனின் அருட்கொடை (உமக்கு) சிறந்ததும் நிலையானதும் ஆகும். (அல்குர்ஆன் 20 : 131)

اَلْمَالُ وَالْبَنُونَ زِينَةُ الْحَيَاةِ الدُّنْيَا وَالْبَاقِيَاتُ الصَّالِحَاتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَخَيْرٌ أَمَلًا ۝

செல்வமும் ஆண்பிள்ளைகளும் உலக வாழ்க்கையின் அலங்காரமாகும். என்றும் நிலையாக இருக்கும் நற்செயல்கள் உம் இறைவனிடம் நன்மையிலும் சிறந்தவை, ஆசைவைக்கவும் சிறந்தவை. (அல்குர்ஆன் 18 : 46)

தோழரே! இமாம் ஹசன் ﵀ அவர்கள் நமக்கு கூறும் அறிவுரையை புரிந்துகொள்!

அதாவது, நீ உலகாசைகளை அதிகம் வளர்த்துக் கொண்டால், உனது தேவைகளை நீ பெரிதாக்கிக் கொண்டால், ஆடம்பரமான வாழ்க்கைக்கு நீ அடிமையாகிவிட்டால், சுகபோகமான வாழ்க்கைக்கு உன்னை நீ பழக்கப்படுத்திக் கொண்டால், உலக செல்வத்தில் நீ போட்டிப் போட ஆரம்பித்தால், பேராசை உன்னை பிடித்துக்கொண்டால் உன்னால் உன் ரப்பை சரியாக வணங்க முடியாமல் போய்விடும்; உனது மறுமைக்கு நீ சேகரிக்க முடியாமல் போய்விடும்; நாளை மறுமையில் நீ நஷ்டவாளிகளில் ஒருவனாக உன் இறைவன் முன்னர் வந்து நிற்பாய். சுதாரித்துக் கொள்!

நீ உன்னை மறுமைக்காக ஆக்கிக்கொண்டால், உனது மரணம் உன்னை எந்நேரத்திலும் சந்திக்கலாம் என்பதை நீ உணர்ந்துவிட்டால், உனக்கு முன்னர் மரணிப்பவர்களைப் பார்த்து நீ சுதாரித்துக் கொண்டால், மற்றவர்களின் மரண செய்திகளை நீ செவியுறும்போது உனக்குள் மரண பயம் வந்துவிட்டால், நீ இந்த உலகத்தில் மனதை பறிகொடுக்க மாட்டாய்; உன்னை நல்லமல்களில் ஈடுபடுத்துவாய்; நின்று வணங்குவதில், இறை வேதத்தை ஓதுவதில், பசித்திருந்து நோன்பிருப்பதில், தான தர்மங்கள் செய்வதில், இன்னும் உன் இறைவனை திருப்திப்படுத்த உன்னை நீ சிரமப்படுத்திக் கொள்வதில் இன்பம் காண்பாய், சுகத்தை உணர்வாய்.

அல்லாஹ்வே! எங்களுக்கு நேர்வழி காட்டு! உன் பக்கம் எங்களுக்கு வழிகாட்டு! நல்லமல்களில் எங்களை ஈடுபடுத்தி வை! பேராசைகளை விட்டும் எங்களை பாதுகாத்துக் கொள்! மறுமையின் மீது எங்களுக்கு ஆசையை அதிகப்படுத்து! எங்கள் உலகாசையை சுருக்கி விடு! எங்களை புத்திசாலிகளில் ஆக்குவாயாக! ஏமாளிகளில் எங்களை ஆக்கிவிடாதே! ஆமீன்!

## மரண செய்திகளும் அமல்களில் தீவிரம் காட்டுதலும்!

حَدَّثَنَا أَبُو عَبْدِ اللهِ الْأَزْدِيُّ حَدَّثَنَا سَعِيدُ بْنُ عَامِرٍ عَنْ جَدِّهِ أَسْمَاءَ بْنِ عَبْدٍ عَنِ الْـحَسَنِ قَالَ كَانَ رَجُلٌ مِنَ الْمُسْلِمِينَ يَبْلُغُهُ مَوْتُ أَخٍ مِنْ إِخْوَانِهِ فَيَقُولُ إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ كِدْتُ وَاللهِ أَنْ أَكُونَ أَنَا السَّوَادُ الْمُخْتَطَفُ فَيَزِيدُهُ اللهُ بِذٰلِكَ جِدًّا وَاجْتِهَادًا فَيَلْبَثُ بِذٰلِكَ مَا شَاءَ اللهُ ثُمَّ يَبْلُغُهُ مَوْتُ الْأَخِ مِنْ إِخْوَانِهِ فَيَقُولُ إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ كِدْتُ وَاللهِ أَنْ أَكُونَ أَنَا السَّوَادَ الْمُخْتَطَفَ فَيَزِيدُهُ اللهُ بِذٰلِكَ جِدًّا وَاجْتِهَادًا قَالَ فَرَدَّدَ الْـحَسَنُ هٰذَا الْكَلَامَ غَيْرَ مَرَّةٍ فَوَاللهِ مَا زَالَ كَذٰلِكَ حَتّٰى مَاتَ مَوْتًا كَيِّسًا

இமாம் ஹசன் ﵀ அவர்கள் கூறுகிறார்கள்: முஸ்லிம்களில் ஒருவருக்கு அவரின் சகோதரர்களில் ஒருவரின் மரண செய்தி வரும். அவர் இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறிவிட்டு, அல்லாஹ்வின் மீது ஆணையாக உயிர்வாங்கப்பட வேண்டியவர் நானாகத்தான் இருந்தேன் என்று கூறுவார். இதன் மூலம் அல்லாஹ் அவருக்கு நன்மைகளில் தீவிரம் காட்டுவதையும் கடின முயற்சி எடுத்து அமல் செய்வதையும் அதிகப்படுத்துவான். இப்படி அல்லாஹ் நாடிய சில காலம் அவர் கழிப்பார்.

பிறகு அவரின் சகோதரர்களில் ஒருவரின் மரண செய்தி அவருக்கு வந்து சேரும். அதற்கு அவர், இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறிவிட்டு, அல்லாஹ்வின் மீது ஆணையாக உயிர்வாங்கப்பட வேண்டியவர் நானாகத்தான் இருந்தேன் என்று கூறுவார். இதன் மூலம்

அல்லாஹ் அவருக்கு நன்மைகளில் தீவிரம் காட்டுவதையும் கடின முயற்சி எடுத்து அமல் செய்வதையும் அதிகப்படுத்துவான்.

பிறகு, இமாம் ஹசன் ﷺ அவர்கள் இந்த பேச்சை ஒன்றுக்கு பல முறை திரும்ப திரும்ப கூறிக்கொண்டே இருந்தார்கள். இந்த செய்தியை அறிவிக்கும் அஸ்மா இப்னு அப்து கூறுகிறார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக இமாம் ஹசன் அவர்கள் இதே நிலையில் இருந்தார். இறுதியாக புத்திசாலியான மரணம் எய்தினார்.

**விளக்கம்:** அல்லாஹ் இமாம் ஹசனுக்கும் நல்லோர் எல்லோருக்கும் கருணை காட்டுவானாக! அந்த நல்லோர் வழியில் வாழ எனக்கும் உங்களுக்கும் அருள் புரிவானாக! ஆமீன்.

இமாம் அவர்கள் சதா மரண சிந்தனை உள்ளவர்களாக, மறுமையைப் பற்றி கவலை உள்ளவர்களாக இருந்ததை இந்த நிகழ்வு சுட்டிக் காட்டுகிறது. ஒருவரின் மரண செய்தியை கேட்டவுடன், அதுவும் குறிப்பாக சம காலத்தில், சம வயதுடைய, நமக்கு அறிமுகமான ஒருவரின் மரண செய்தியை கேட்டவுடன், இந்த இடத்தில் நான் இருந்திருந்தால் என்ற எண்ணம் ஒருவருக்கு ஏற்பட வேண்டும். அப்படி ஏற்பட்டவுடன் அல்லாஹ் எனக்கு இன்னும் உயிர் வாழ வாய்ப்பளித்தானே என்று சுதாரித்துக் கொண்டு நல்லமல்களை அதிகப்படுத்த வேண்டும்.

ஏனெனில், எப்படியும் ஒரு நாள் அவருக்கு வந்த மரணம் எனக்கும் வரும் என்ற அறிவு வரவேண்டும். அத்தகைய அறிவும் ஈமானிய உணர்வும் இமாம் ஹசன் ﵀ அவர்களிடம் அல்லாஹ் அதிகமாக கொடுத்து இருந்தான். பிறரின் மரணத்தைப் பார்த்து படிப்பினைப் பெற்று நல்லமல்களை அதிகம் செய்து மரணத்திற்காக தயாரிப்பு செய்து கொண்டவர்தான் உண்மையான புத்திசாலி, அறிவாளி ஆவார். அப்படித்தான் இமாம் ஹசனும் அவர்களைப் போன்ற சான்றோரும் வாழ்ந்து மரணித்தார்கள். அல்லாஹ் அவர்கள் எல்லோரையும் தனது சொர்க்கத்தில் பிரவேசிக்க வைப்பானாக! ஆமீன்.

அல்லாஹ் படைத்த படைப்புகளில் மிக விசித்திரமான ஒன்று இந்த மரணம். இதை என்னவென்று சொல்வது! எப்படி வரும், என்ன காரணத்தால் வரும், எந்த வழியாக வரும், எந்த நேரத்தில் வரும், எந்த வயதில் வரும், எந்த நோயினால் வரும், காலையில் வருமா, மாலையில் வருமா, உள்ளூரில் வருமா, வெளியூரில் வருமா, சொல்லிவிட்டு வருமா, சொல்லாமல் வருமா, தூங்கும்போது வருமா, விழித்திருக்கும்போது வருமா, குடும்பத்தில் முதலில்

யாருக்கு வரும், இறுதியாக யாருக்கு வரும்? இப்படி மரணத்தை குறித்து பல கேள்விகள் நமக்குள் இருக்கலாம். மரணத்தைப் படைத்த அல்லாஹ்விற்கே தவிர வேறு யாருக்கும் இந்த கேள்விகளின் பதில் தெரியாது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ اللهَ عِنْدَهُ عِلْمُ السَّاعَةِ وَيُنَزِّلُ الْغَيْثَ وَيَعْلَمُ مَا فِي الْأَرْحَامِ وَمَا تَدْرِي نَفْسٌ مَاذَا تَكْسِبُ غَدًا وَمَا تَدْرِي نَفْسٌ بِأَيِّ أَرْضٍ تَمُوتُ إِنَّ اللهَ عَلِيمٌ خَبِيرٌ○

நிச்சயமாக அல்லாஹ் - அவனிடம்தான் மறுமை(யின்) அறிவு இருக்கின்றது. அவன்தான் மழையை இறக்குகின்றான். கர்ப்பப்பைகளில் உள்ளவற்றை அவன் அறிகின்றான். ஓர் ஆன்மா நாளை அது என்ன செய்யும் என்பதை அறியாது. ஓர் ஆன்மா அது எந்த பூமியில் மரணிக்கும் என்றும் அறியாது. நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவன், ஆழ்ந்தறிபவன் ஆவான். (அல்குர்ஆன் 31 : 34)

நாளை மரணம் அவனுக்கு அங்கு காத்திருப்பதை அறிந்திருந்தால் அங்கு சென்றிருப்பானா!?

தனது பயணத்தில் தனது மரணம் ஒளிந்திருப்பதை ஒருவன் அறிந்திருந்தால் அந்த பயணத்தை முன்னெடுப்பானா!?

இந்த மரணம் எங்கெல்லாம், எப்படியெல்லாம் ஒளிந்துகொண்டிருக்கிறது!! நமக்கு முன்னால் இருந்து வருமா, அல்லது பின்னால் இருந்து வருமா, கீழிருந்து வருமா, மேலிருந்து வருமா என்பது யாருக்கு தெரியும் அல்லாஹ்வைத் தவிர! ஆனால், யாரையும் விட்டு வைக்காது, அது மட்டும் நிச்சயம்!

அல்லாஹு தஆலா கூறுவதை கொஞ்சம் கவனமாக கேளுங்கள்!!

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ○

ஒவ்வோர் ஆன்மாவும் மரணத்தை சுவைக்கக் கூடியதே. (அல்குர்ஆன் 3 : 185)

நீ எங்கிருந்தாலும் உன்னிடம் நேரம் கேட்காமல், முன் அனுமதி பெறாமல்,

நீ விரும்பி வரவேற்றாலும், நீ வெறுத்து கதவை தாழிட்டுக் கொண்டாலும், பாதுகாப்பாக பதுங்கு குழியில் பதுங்கிக் கொண்டாலும், வானளாவிய கோபுரத்தில் ஏறி உன்னை பாதுகாக்க நினைத்தாலும் அது உன்னை விடாது.

உனது ரப்பு சொல்லும் எச்சரிக்கையை கேளும்!

أَيْنَمَا تَكُونُوا يُدْرِكْكُمُ الْمَوْتُ وَلَوْ كُنْتُمْ فِي بُرُوجٍ مُشَيَّدَةٍ○

நீங்கள் எங்கிருந்தாலும் மரணம் உங்களை அடையும்; பலமான கோபுரங்களில் நீங்கள் இருந்தாலும் சரியே! (அல்குர்ஆன் 4 : 78)

மரணம் என்ன மனித எதிரியா?! கண்ணில் மண்ணை தூவி விட்டு தப்பித்துவிடலாம் என்று எண்ணுவதற்கு! மரணம் என்ன பலவீனமான பகைவனா? அவனை நாம் வென்றுவிடுவதற்கு! அல்லது மரணம் என்ன அரசு அதிகாரியா, இலஞ்சம் கொடுத்து தப்பித்துவிடுவதற்கு!

அல்லாஹ் கூறுவது நமக்கு உரைக்கவில்லையா!?

قُلْ إِنَّ الْمَوْتَ الَّذِي تَفِرُّونَ مِنْهُ فَإِنَّهُ مُلَاقِيكُمْ○

(நபியே!) கூறுவீராக! நிச்சயமாக நீங்கள் அதை விட்டு விரண்டு ஓடுகின்ற அந்த மரணம் நிச்சயமாக அது உங்களை சந்திக்கும். (அல்குர்ஆன் 62 : 8)

உலகத்தில் பல காரியங்கள் உள்ளன. அவற்றில் ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் மட்டும் இருக்கும். ஆனால், இந்த மரணத்திற்கு மட்டும் எத்தனை ஆயிரம் காரணங்கள்.

மனிதனே! உன்னை சுற்றி மரண வலைகள் பின்னப்பட்டுள்ளன. நீ அதை விட்டு தப்பிக்க முடியாது, அதிலிருந்து நீ வெளியேறவும் முடியாது! அதை கிழித்துவிட்டு, அல்லது அதை வெட்டி அறுத்துவிட்டு உன்னால் ஓடிவிடவும் முடியாது!

மரணத்திலிருந்து தப்பிக்க நினைக்கும் மனிதனே! ஓடு, வேகமாக ஓடு, விரண்டு ஓடு! ஓடிக்கொண்டே இரு! நிற்காமல் ஓடு! ஓயாமல் ஓடு! திட்டமிட்டு ஓடு! அல்லது கண்ணுமுக்கு தெரியாமல் ஓடு! எட்டு திசைகளிலும் மூச்சிரைக்க ஓடு! நீ எங்கு ஓடினாலும் மரணத்தை நோக்கிதான் ஓடுகிறாய் என்பதை புரிந்து கொள்! உனது இறுதி ஸ்டாப் மரணம்தான். அதை நோக்கிதான் நீ

உன்னை அறியாமலேயே ஓடுகிறாய்!

மரணம் வைத்தியமில்லா நோய்!

மரணம் வெல்ல முடியா பகைவன்!

மரணம் வருகை அறிய முடியா விருந்தாளி!

மரணம் காரணம் கூறமுடியா நிகழ்வு!

மரணம் உலக முஸீபத்துகளில் மிகப் பெரியதும் இறுதியானதும் ஆகும்!

அந்தோ மனிதனின் பரிதாபம்! இல்லாமையில் இருந்து தான் வந்தோம் என்பதை மறந்துவிடுகிறானே! இன்னும் சில காலம் கழித்து இல்லாமல் போய்விடுவோம் என்பதையும் மறந்துவிடுகிறானே! தன் கண்ணுக்கு முன்னால் பிறர் மரணிப்பதை பார்த்த பின்னரும் தனது மரணத்தை நினைக்க மறுக்கிறானே! தனது உறவினர்களில் ஒருவரை அல்லது பலரை மலக்குல் மவ்த் அழைத்து சென்றதையும் பார்த்துவிட்டு, அவர்கள் அடக்கம் செய்யப்பட்டதையும் பார்த்துவிட்டு, இத்தனைக்கும் பிறகு தனது மரணத்தை மறந்துவிடுகிறானே!

மனிதன் மரணத்தை மறக்க மறக்க உலக இன்பங்களில் மூழ்கி விடுகிறான்!

மனிதன் பிறர் மரணத்தை மறந்து தனது மரணத்தை நினைவில் வைப்பதற்கு பதிலாக பிறர் மரணத்தை நினைவில் வைத்துவிடுகிறான், தான் மரணிப்போம் என்பதை மறந்துவிடுகிறான்.

நல்லோருக்கு மரணத்தை நினைவு கூர்வது மிகப் பிடித்தமான ஒன்றாகும்.

பாவிகளுக்கு மரணத்தை நினைவு கூர்வதை விட கசப்பான ஒன்று வேறு இருக்காது.

மரணத்தை நினைவு கூர்வது நல்லோருக்கு அவர்களின் உலக வாழ்க்கையை விசாலமாக்கிவிடும்! அதாவது, தங்களிடம் இருப்பதே இந்த குறுகிய கால வாழ்க்கைக்கு அதிகம் என்று எண்ணுவார்கள், இன்னும் எவ்வளவு காலம் வாழப்போகிறோம், நமக்கு ஏன் இவ்வளவு ஆசை என்று உலக தேவைகளை சுருக்கிக் கொண்டு தன்னிடம் இருப்பதைக் கொண்டே போதுமாக்கிக் கொள்வார்கள்.

பாவிகளுக்கோ மரணம் மிக தூரமாக தெரியும்! வாழ்க்கையை மிக பெரிதாக கற்பனை செய்வான், தனது வயோதிகத்திற்கு என்று சேகரிப்பான்,

சேகரிப்பான், சொத்துக்களை கணக்கின்றி சேகரிப்பான். பல நூற்றாண்டுகள் வாழ்வதற்கு தேவையான அளவை விட அதிகமாக சேகரிப்பான்.

உலகம், அது நமக்கு இந்தளவு போதும், சரி, தலை முடி நரைத்து விட்டது, தோலில் சுருக்கம் வந்து விட்டது, கண் பார்வைக்கு கண்ணாடி தேவைப்படுகிறது, வாலிபத்தை தாண்டி முதுமைக்குள் நுழைந்துவிட்டதால் உடலில் சீக்கிரம் சோர்வு வந்து விடுகிறது, இனி நாம் அமல்களில் கவனம் செலுத்துவோம், மறுமைக்காக நல்லமல்களை அதிகப்படுத்துவோம், சொர்க்கத்திற்காக புண்ணியங்களை தேடுவோம், அல்லாஹ்வின் விசாரணைக்காக தயாரிப்புகளை செய்துகொள்வோம் என்ற எண்ணம் வர மறுக்கிறது!. மீண்டும் மீண்டும் உலக சிக்கல்களில் சிக்கி தன்னை தொலைக்க பார்க்கிறான் இந்த மனிதன்.

முன்பொரு காலத்திலாவது சில நூறு ஆண்டுகள் மனிதர்கள் வாழ்ந்தார்கள். ஆனால் நாமோ ஒரு நூற்றாண்டு கூட முழுமையாக வாழ்வது மிக அரிது!

அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறினார்கள்:

أَعْمَارُ أُمَّتِي مَا بَيْنَ السِّتِّينَ إِلَى السَّبْعِينَ وَأَقَلُّهُمْ مَنْ يَجُوزُ ذَلِكَ

எனது சமுதாயத்தினரின் வயதுகள் அறுபதுக்கும் எழுபதுக்கும் இடையில் உள்ளதாகும். அவர்களில் மிகக் குறைவானவர்கள் மட்டுமே அதைத் தாண்டுவார்கள்.[6]

உனக்கு அல்லாஹ் இன்று வாழ வாழ்க்கை கொடுத்து இருந்தால் அதில் எந்தளவு நன்மை செய்ய முடியுமோ செய்து கொள்! ஏனெனில் நாளை அது உனக்கு கிடைக்கும் என்று நம்பிக்கையில் இருக்காதே! நாளையை நீ பார்க்காமலேயே இந்த உலகை விட்டு நீ பிரிந்துவிடலாம். சூரியன் விடிவதற்குள், அல்லது சூரியன் மறைவதற்குள் நீ மண்ணறைக்கு சென்று விடலாம்.

இதோ, இப்னு உமர் ؓ தனது மாணவனுக்கு நபி ﷺ அவர்களின் அறிவுரையை எடுத்துக் கூறிவிட்டு, பிறகு இவ்வுலகில் எப்படி வாழவேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார்கள் என்பதை கவனி! அந்த அறிவுரை உனக்கும் எனக்கும்தான்.

6. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 3550, தரம்: ஸஹீஹ் - அல்பானி.

أَخَذَ رَسُولُ اللهِ ﷺ بِمَنْكِبَيَّ فَقَالَ كُنْ فِي الدُّنْيَا كَأَنَّكَ غَرِيبٌ أَوْ كَعَابِرِ سَبِيلٍ وَكَانَ ابْنُ عُمَرَ رضِي اللهُ تَعَالَىٰ عَنْهُ يَقُولُ إِذَا أَصْبَحْتَ فَلَا تَنْتَظِرِ الْـمَسَاءَ وَإِذَا أَمْسَيْتَ فَلَا تَنْتَظِرِ الصَّباحَ وَخُذْ مِنْ صِحَّتِكَ لِـمَرَضِكَ وَفِي حَيَاتِكَ لِـمَوْتِكَ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் என் புஜத்தை பிடித்துக்கொண்டு, (என்னிடம்) கூறினார்கள்: நீ உலகத்தில் ஒரு பரதேசியைப் போன்று அல்லது வழிப்போக்கனைப் போன்று இரு! இதை அறிவித்த பின்னர் இப்னு உமர் ؓ அவர்கள் கூறுவார்கள்:

நீ காலையில் இருக்கும்போது மாலையை எதிர்பார்க்காதே! நீ மாலையில் இருக்கும்போது காலையை எதிர்பார்க்காதே! உனது ஆரோக்கியமான காலத்தில் இருந்து உனது நோய் காலத்திற்காக எடுத்துக் கொள்! உனது வாழ்நாளில் இருந்து உனது மரணத்திற்காக எடுத்துக் கொள்![7]

அதாவது, நோய் வந்து நீ பலவீனப்பட்டு அமல் செய்ய முடியாமல் போவதற்கு முன் உனது ஆரோக்கியமான நாள்களிலேயே நன்மைகளை அதிகம் செய்து வைத்துக் கொள்! திடீரென மரணம் வந்துவிடுவதற்கு முன்னர் உனது மறுமை வாழ்க்கைக்கு நீ சேர்த்து வைத்துக் கொள்!

படைத்தோன், உயர்ந்தோன் அல்லாஹ் தனது நபி ﷺ அவர்களுக்கு மரணத்தை நினைவூட்டுகிறான் என்றால் நாம் எந்தளவு மரணத்தை நினைவு கூர்ந்து கொண்டு இருக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்!

إِنَّكَ مَيِّتٌ وَإِنَّهُم مَّيِّتُونَ ۝

(நபியே!) நிச்சயமாக நீங்களும் மரணிப்பவர்தான், இன்னும் நிச்சயமாக அவர்களும் மரணிப்பவர்களே! (அல்குர்ஆன் 39 : 30)

முன்பெல்லாம் மரணம் முதுமையில் வரும். போரில் மக்கள் இறப்பார்கள். எப்போதாவது கொள்ளை நோய் வரும். சில நூறு அல்லது சில ஆயிரம் பேர் இறப்பார்கள். இன்றோ பல ஆயிரம் நோய்கள். மக்கள் தொகை எவ்வளவோ அத்தனை நோய்கள். இப்போது பரவி இருக்கும் கொரோனா பற்றி என்ன சொல்வதென்றே புரியவில்லை.

7. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6416.

ஆகவே, தோழரே! நீ மரணித்தால் உன்னோடு எது மறுமைக்கு வருமோ அதில் கவனம் செலுத்து! நீ எதை இந்த உலகத்தில் விட்டுவிட்டு போகப்போகிறாயோ அதில் மூழ்கி உன்னை மறந்துவிடாதே! உன் மண்ணறையை மறந்துவிடாதே! கப்ரில் நீ தனியாக இருக்கப் போகிறாய்! அல்லாஹ்விற்கு முன் நீ தனியாக நிற்கப்போகிறாய்! நீ தனியாக விசாரிக்கப்படுவாய்! உன் அமல்கள் மட்டும் உனக்கு பலனளிக்கும்! நீ செய்தது நன்மையோ தீமையோ அவற்றில் ஏதும் தவறிவிடாது.

ஆன்மிக கவிஞர் அபுல் அதாஹிய்யா[8] கூறும் கவிதை உனக்கும் எனக்கும் பொருத்தமாக இருக்கும்.

அபுல் அதாஹிய்யா கூறுகிறார்:

لا تَأْمَنِ الْـمَوتَ فِي طَرْفٍ وَفِي نَفَسٍ *** وَلَوْ تَمَنَّعْتَ بِالْحُجَّابِ والـحَـرَسِ

கண் சிமிட்டும் நேரம் கூட, ஒரு மூச்சு விடும் நேரம் கூட மரணத்தை நீ பயமற்று இருக்காதே! நீ காவலாளிகளைக்கொண்டும் உன்னை காக்கும் வீரர்களைக் கொண்டும் உன்னை பாதுகாத்துக் கொண்டாலும் சரி (உனக்கு மரணம் நிச்சயம் வரும்)!

فَمَا تَزَالُ سِهَامُ الْـمَـوْتِ نَـافِـذَةً *** فِي جَنبِ مُدَرَّعٍ مِنَّـا وَمُـتَرَّسِ

எங்களில் கவச ஆடை அணிந்து கேடயம் ஏந்தியவனின் விலாவிலும் மரணத்தின் அம்புகள் ஊடுருவி விடும்!

مَا بَالُ دِينِكَ تَرْضَىٰ أَنْ تُـدَنِّـسَـهُ *** وَثَوْبُكَ الدَّهْرَ مَغْسُولٌ مِنَ الدَّنَـسِ

உனது மார்க்கத்தின் நிலை ஏன் இப்படி இருக்கிறது? அதை நீ அழுக்காக்கிக் கொண்டே இருக்கிறாய்! ஆனால், உனது ஆடை அழுக்கை விட்டு காலமெல்லாம் கழுவப்படுகிறது!

تَرْجُو النَّجَاةَ وَلَمْ تَسْلُكْ مَسَالِـكَـهـا *** إِنَّ السَّفِينَةَ لَا تَـجْرِي عَلَـىٰ يَبَـسِ

வெற்றியை(யும் பாதுகாப்பையும்) நீ ஆதரவு வைக்கிறாய், ஆனால், அதற்குரிய பாதைகளில் நீ இன்னும் வழிநடக்கவில்லை! நிச்சயமாக கப்பல் காய்ந்த தரையில் ஓடாது.

இறுதியாக ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் நமது நேசத்திற்குரிய நபி ﷺ

8. பிறப்பு: ஹி 130, இறப்பு: ஹி 213.

அவர்களுக்கு கூறிய உபதேசத்தை எனக்கும் உனக்கும் நினைவுபடுத்தி இந்த அமர்வை நிறைவு செய்கிறேன்.

أَتَانِي جِبْرِيلُ فَقَالَ يَا مُـحَمَّدُ عِشْ مَا شِئْتَ فَإِنَّك مَيِّتٌ وَأَحْبِبْ مَنْ شِئْتَ فَإِنَّكَ مُفَارِقُهُ وَاعْمَلْ مَا شِئْتَ فَإِنَّكَ مَـجْزِيٌّ بِهِ وَاعْلَمْ أَنَّ شَرَفَ الْـمُؤْمِنِ قِيَامُهُ بِاللَّيلِ وعِزَّهُ اسْتِغْنَاؤُهُ عَنِ النَّاسِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: என்னிடம் ஜிப்ரீல் عليه السلام வந்தார். இன்னும் அவர் கூறினார்: முஹம்மதே! நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் வாழ்ந்து கொள்ளுங்கள்! ஆனால், நிச்சயமாக நீங்கள் (ஒரு நாள்) மரணிப்பீர்கள். நீங்கள் யாரை வேண்டுமானாலும் நேசித்துக் கொள்ளுங்கள்! ஆனால், நிச்சயமாக நீங்கள் (ஒரு நாள்) அவரை பிரிந்துவிடுவீர்கள். நீங்கள் எதைவேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்! ஆனால், அதற்கு உங்களுக்கு கூலி கொடுக்கப்படுவீர்கள். இன்னும் அறிந்து கொள்ளுங்கள்: முஃமினுடைய சிறப்பு அவர் இரவில் தொழுவதில் இருக்கிறது. இன்னும், அவரின் கண்ணியம் அவர் மக்களிடம் தேவையாகாமல் இருப்பதில் இருக்கிறது.[9]

அல்லாஹ்வே! எங்களை மறதியிலிருந்தும் மயக்கத்திலிருந்தும் அலட்சியத்திலிருந்தும் கவனக்குறைவிலிருந்தும் பாதுகாப்பாயாக! நீ எங்கள் மீது திருப்திகொண்ட நிலையில் எங்களுக்கு மரணம் வர அருள் புரிவாயாக! உன்னை வணங்கி கொண்டிருக்கும்போது எங்கள் உயிரை கைப்பற்றுவாயாக! இறந்துவிட்ட எங்கள் முஃமினான முன்னோரை மன்னித்து அவர்களுக்கு சொர்க்கத்தை அருள்வாயாக! மவ்த்தின் சிரமத்திலும் மயக்கத்திலும் எங்களுக்கு உதவுவாயாக! ஆமீன்!

• • •

9. அறிவிப்பாளர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் رضي الله عنه, நூல்: முஸ்தத்ரகுல் ஹாகிம், எண்: தரம்: ஹசன் - அல்பானி.

# உபரியான நோன்பும் அதனால் கிடைக்கும் இறை நெருக்கமும் மனப்பக்குவமும்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عُبَيْدُ اللهِ بْنُ عُمَرَ الْقَوَارِيرِيّ حَدَّثَنَا أَبُو أَحْمَدَ اللهِ حَدَّثَنِي أَحْمَدُ حَدَّثَنَا مُسْلِمٌ حَدَّثَنَا السَّرِيُّ بْنُ يَحْيَىٰ قَالَ كَانَ الْـحَسَنُ يَصُومُ مِنَ السَّنَةِ أَيَّامَ الْبِيضِ وَأَشْهُرَ الْحُرُمِ وَالِاثْنَيْنِ وَالْخَمِيسَ

இமாம் ஹசன் பஸரி ﷀ அவர்கள் ஆண்டு முழுவதிலும் பிறை 13, 14, 15 ஆகிய தினங்களிலும், (நான்கு) புனித மாதங்களிலும், திங்கள், வியாழன் ஆகிய தினங்களிலும் நோன்பு வைப்பார்கள்.

**விளக்கம்:** இந்த நோன்புகள் அனைத்தும் நபி ﷺ அவர்கள் கற்றுக்கொடுத்த நோன்புகளாகும். நபி ﷺ அவர்கள் தானும் இந்த நோன்புகளை நோற்று நம்மையும் இவற்றை நோற்க ஆர்வமூட்டியுள்ளார்கள்.

இமாம் ஹசன் ﷀ அவர்களும் இன்னும் நல்லோர் பலரும் இந்த சுன்னத்தை வழமையாக பின்பற்றி வந்தனர். இதில் இறை நெருக்கத்தை அவர்கள் தேடினார்கள். மனம் வலிமையடைவதையும் மனம் ஓர்மை அடைவதையும் உலக பற்றின்மையும் அந்த நோன்பில் சான்றோர்கள் கண்டார்கள். ஆகவே, அவர்கள் அவற்றை பேணுதலாக கடைப்பிடித்து வந்தார்கள்.

நோன்பு அல்லாஹ் கடமையாக்கிய வணக்க வழிபாடுகளில் மிகவும் பணிவான ஒரு வணக்கமாகும். இது அடியானுக்கு அடக்கத்தையும் பணிவையும் தருகிறது.

நோன்பு மிகவும் மறைவான வணக்கமாகும். அல்லாஹ் நோன்பாளியை அதிகம் நேசிக்கிறான்.

நோன்பு அடியானுக்கு சிரமமான வணக்கம், அல்லாஹ்விற்கு அடியானிடம் மிகவும் பிடித்தமான வணக்கம்.

அடியான் நோன்பில் தனக்கு இந்த உலகத்தில் விருப்பமான உணவு, நீர், மனைவியுடன் சேருதல் ஆகியவற்றை விட்டு விலகி தன்னை தன் ரப்புக்காக ஒதுக்கிக் கொள்கிறான். யாரும் தன்னை பார்க்கவில்லை என்றாலும் தனது ரப்பு பார்க்கிறான் என்பதை உண்மையில் உணர்ந்து அவற்றை விட்டு விலகி இருக்கிறான். மறந்து உண்டாலும் குடித்தாலும் கூட அதற்காக கவலைப்படுகிறான்.

ஆகவே, ரப்பும் இந்த அடியானுக்கு மிகவும் கருணைக் காட்டி பல வெகுமதிகளை விசேஷமாக தருகிறான். அடியானின் இத்தகைய உயர்ந்த நோன்பை தனக்காக மட்டும் என்று அவன் அங்கீகரிக்கிறான். இதோ நோன்பை குறித்து வரும் ஹதீஸை நாம் பார்த்தால் நமக்கு புரிய வரும்.

قَالَ اللهُ عَزَّ وَجَلَّ كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ لَهُ إِلَّا الصِّيَامَ هُوَ لِيَ وَأَنَا أَجْزِي بِهِ فَوَالَّذِي نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهِ لَخُلْفَةُ فَمِ الصَّائِمِ أَطْيَبُ عِنْدَ اللهِ مِن رِيحِ الْمِسْكِ

கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ் கூறுகிறான்: மனிதனின் அமல்கள் எல்லாம் அவனுக்கு, நோன்பைத் தவிர. அது எனக்குரியது. நான் அதற்கு கூலி கொடுப்பேன். முஹம்மதுடைய உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மீது சத்தியமாக நோன்பாளியின் வாயின் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையை விட மிகவும் நறுமணம் மிக்கதாகும்.[10]

قَالَ رَسُولُ اللهِ ﷺ قَالَ اللهُ كُلُّ عَمَلِ ابْنِ آدَمَ لَهُ إِلَّا الصِّيَامَ فَإِنَّهُ لِي وَأَنَا أَجْزِي بِهِ وَالصِّيَامُ جُنَّةٌ وَإِذَا كَانَ يَوْمُ صَوْمِ أَحَدِكُمْ فَلَا يَرْفُثْ وَلَا يَصْخَبْ فَإِنْ سَابَّهُ أَحَدٌ أَوْ قَاتَلَهُ فَلْيَقُلْ إِنِّي امْرُؤٌ صَائِمٌ وَالَّذِي نَفْسُ مُحَمَّدٍ بِيَدِهِ لَخُلُوفُ فَمِ الصَّائِمِ أَطْيَبُ عِنْدَ اللهِ مِنْ رِيحِ الْمِسْكِ لِلصَّائِمِ فَرْحَتَانِ يَفْرَحُهُمَا إِذَا أَفْطَرَ فَرِحَ وإِذَا لَقِيَ رَبَّهُ فَرِحَ بِصَوْمِهِ

10. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 1151.

அல்லாஹ் கூறுவதாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: மனிதனின் அமல்கள் எல்லாம் அவனுக்கு, நோன்பைத் தவிர. அது எனக்குரியது. நான் அதற்கு கூலி கொடுப்பேன். நோன்பு கேடயமாகும். உங்களில் ஒருவர் நோன்பு நோற்ற நாளாக இருந்தால் அவர் (மனைவியிடம்) இச்சையுடன் பேச வேண்டாம், இன்னும் அவர் கூச்சல் போட வேண்டாம். அவரை யாரும் ஏசினால் அல்லது அவரிடம் யாரும் சண்டையிட்டால் நிச்சயமாக நான் நோன்பு வைத்திருக்கிற மனிதன் ஆவேன் என்று அவர் கூறிவிடட்டும்.

முஹம்மதுடைய உயிர் எவன் கையில் உள்ளதோ அவன் மீது சத்தியமாக நோன்பாளியின் வாயின் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையை விட மிகவும் நறுமணம் மிக்கதாகும். நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சிகள் உள்ளன. அவர் அந்த இரு மகிழ்ச்சிகளையும் அடையப்பெறுவார். அவர் நோன்பு திறக்கும்போது மகிழ்ச்சி அடைவார். அவர் தனது ரப்பை சந்திக்கும்போது தனது நோன்பைக் கொண்டு மகிழ்வார்.[11]

இந்த இரண்டு ஹதீஸ்களை நாம் நன்கு கவனமாக சிந்தித்துப் பார்த்தால் அல்லாஹ்விடம் நோன்புக்குள்ள கண்ணியமும் நோன்பாளிக்குள்ள மதிப்பும் புரிய வரும்.

**ஹதீஸ்களின் படிப்பினைகள்:**

1. வெளிப்படையில் பார்க்கும்போது நோன்புகள் மூலம் அடியான் சிரமப்படுவதாக தெரிகிறது. அது உண்மையும் கூட. அதுவும் உழைப்பாளிகள், கூலி வேலை செய்பவர்கள், வெயிலில் அலைந்து தொழில் செய்பவர்கள், அதிக உடல் உழைப்பால் பொருள் ஈட்டுபவர்கள் இவர்கள் எல்லோரும் இன்னும் இவர்களைப் போன்றோரும் நோன்பினால் சிரமப்படுவது வெளிப்படையான விஷயம்தான். மற்ற வணக்க வழிபாடுகள் அப்படி இல்லை. அடியானுக்கு அவற்றில் சிரமம் சிறிது இருந்தாலும் நோன்பின் அளவிற்கு இருப்பதில்லை.

2. இந்தளவு சிரமத்தை அடியான் அல்லாஹ்வின் அன்பிற்காக மட்டுமே சகித்துக் கொள்கிறான். ஆகவே, நோன்பு அல்லாஹ்விற்கு மட்டும் என்று கூறப்படுகிறது.

3 அடியானின் சிரமத்திற்கு ஏற்ப அமல்களுக்கு அல்லாஹ் கூலி

11. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 1904.

வழங்குகிறான். அடியான் எந்தளவு வணக்க வழிபாட்டில் தன்னை வருத்திக் கொள்கிறானோ அந்தளவு அல்லாஹ்வும் அந்த அடியானை கண்ணியப்படுத்தி கௌரவிக்கிறான்.

4. ஒரு வணக்கம் செய்யும்போது அடியானுக்குள் ஏற்படும் நல்ல மாற்றங்கள் இன்னும் ஈமானிய உணர்வுகளுக்கு ஏற்ப அந்த வணக்கத்தின் கூலியும் அல்லாஹ்விடம் அமையப் பெறுகிறது. ஆகவே, நோன்பின் கூலியும் மற்ற வணக்க வழிபாடுகளின் கூலியை விட அல்லாஹ்விடம் மிக விசேஷமாகவே இருக்கும் என்பது தெளிவான விஷயமாகும்.

5. நோன்பை அடியான் பிறர் பார்வையிலிருந்து மறைப்பது மிக எளிது. ஆகவே, நோன்பில் இக்லாஸ் அதிகமாக இருக்கும். வணக்க வழிபாடுகள் அவற்றில் உள்ள இக்லாஸுக்கு ஏற்ப அல்லாஹ்விடம் மதிப்பையும் நன்மையையும் பெறுகின்றன.

6. மற்ற வணக்க வழிபாடுகளில் சில அமல் மட்டும் இருக்கும். சில இருக்காது. ஆனால், நோன்பில் எல்லா இபாதத்துகளும் உள்ளே வந்து விடலாம். நோன்பாளி தொழுகையில் ஈடுபடுகிறார், குர்ஆன் ஓதுவதில் ஈடுபடுகிறார், தர்மம் செய்ய வெளியில் செல்கிறார், இப்படி நோன்பு வைத்துக் கொண்டு பல இபாதத்துகளை செய்து கொண்டே இருக்கிறார். ஆகவே நோன்பு என்பது மல்டிபுள் இபாதத்தாக ஆகிவிடுகிறது.

7. ஒருவர் நோன்பாளியாக இருக்கும்போது அவர் நோன்பு திறக்கின்ற வரை இபாதத்தில் இருக்கிறார். இந்தளவு நீண்ட நேர வணக்கம் வேறு இல்லை, ஹஜ்ஜைத் தவிர, உம்ராவைத் தவிர. அதுவும் ஒருவர் ஹஜ்ஜிலும் உம்ராவிலும் நோன்பு வைத்துவிட்டால் அது நூருன் அலா நூர் - ஒளிக்கு மேல் ஒளி ஆகும்.

8. அடியான் நோன்பிருக்கும் போது அவன் அல்லாஹ்விற்கு மிக நெருக்கமான, இன்னும் மிக நேசமான படைப்பாகிய மலக்குகளுக்கு ஒப்பாகிவிடுகிறான். மலக்குகள் உண்ணுவதில்லை, குடிப்பதில்லை, இன்னும் அவர்களுக்கு இச்சைகள் இல்லை. ஆகவே அடியான் நோன்பிருக்கின்ற நிலையில் இருக்கும் போது அல்லாஹ்விற்கு மிகவும் நெருக்கமாக, மிகவும் நேசத்திற்குரியவனாக ஆகிவிடுகிறான்.

9. அடியான் நோன்பில் இருக்கும்போது அல்லாஹ்வின் இரக்கமும் கருணையும் அவன் மீது அதிகம் ஏற்படுகிறது. ஏனெனில், அடியான்

நோன்பிருக்கும் நேரத்தில் உண்ணாமல், பருகாமல் பலவீனமாக இருக்கிறான். அவனது உதடு காய்ந்து விடுகிறது, வயிறு ஒட்டி விடுகிறது, தொண்டை வறண்டு விடுகிறது, நேரம் ஆக ஆக அவனுக்கு உடல் சோர்வும் களைப்பும் ஏற்படுகிறது. அத்துடன் ஃபர்ழான தொழுகைக்கு சென்று வருவது, மற்ற பொருளாதார சுமைக்காக உழைப்பது, குடும்பத்தினரின் தேவைக்காக பாடுபடுவது இவையெல்லாம் அடியானுக்கு கண்டிப்பாக சோர்வையும் களைப்பையும் அசதியையும் தரும் என்பதில் சந்தேகமே இல்லை.

இத்தனை சிரமங்களை அடியான் அல்லாஹ்விற்காக தாங்கும்போது கண்டிப்பாக அல்லாஹ்வின் கருணையும் இரக்கமும் அடியான் மீது அதிகமாக இறங்குகிறது. அல்லாஹ் மிகவும் இரக்கமும் கருணையும் உள்ளவன். அடியானின் இம்மை, மறுமையின் நன்மைக்காகவே இந்த சிரமத்தை அல்லாஹ் கொடுக்கிறான். இல்லையென்றால் கண்டிப்பாக அல்லாஹ் இந்த சிரமத்தை அடியானுக்கு கொடுக்க மாட்டான். நோன்பின் வசனத்தின் இறுதியில் அல்லாஹ் கூறுகிறான்:

يُرِيدُ اللّٰهُ بِكُمُ الْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ الْعُسْرَ وَلِتُكْمِلُوا الْعِدَّةَ
وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلَىٰ مَا هَدَاكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ○

அல்லாஹ் உங்களுக்கு இலகுவை நாடுவான். சிரமத்தை நாடமாட்டான். (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் முழுமைப்படுத்துவதற்காகவும்; உங்களை நேர்வழி நடத்தியதற்காக அல்லாஹ்வை பெருமைப்படுத்துவதற்காகவும்; நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் (நோன்பிருங்கள்)!

(அல்குர்ஆன் 2 : 185)

10. நோன்பிருக்கின்ற நிலையில் அடியான் தன்னால் முடிந்தளவு பாவத்தைவிட்டு தூரமாக இருக்கிறான். பாவமான சிந்தனைகளை விட்டும் தன்னை சுத்தமாக வைக்கிறான். ஏதாவது தவறான எண்ணங்கள் மனதில் தோன்றினாலும் உடனே அடியான் அதிலிருந்து தன்னை சுத்தப்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறான். தனது பார்வைகளையும் செவியையும் தீமைகளைவிட்டு பாதுகாத்துக்கொள்கிறான். தன்னால் முடிந்தளவு மற்ற நேரத்தை விட நோன்பில் பேணுதலாக இருக்க முயற்சிக்கிறான்.

இந்த முயற்சியும் தனது நஃப்ஸுடன் அடியானின் இந்த போராட்டமும் அல்லாஹ்வின் அருளுக்கும் மன்னிப்புக்கும் அடியானை மிகவும்

நெருக்கமாக்கி விடுகிறது. ஆகவேதான் அல்லாஹ்வின் முன்னிலையில் அமல்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற வியாழக்கிழமை நோன்பிருப்பதை நபி ﷺ அவர்கள் அதிகம் விரும்பினார்கள்.

11. முன்பு குர்ஆன் வசனத்தில் கூறப்பட்டது போன்று அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துவதற்கு நோன்பு மிக சிறப்பான வணக்கமாகும். ஆகவேதான் திங்கள் கிழமை நோன்பைப் பற்றி நபி ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டபோது அந்த நாளில் நான் பிறந்தேன் என்று கூறினார்கள். அதாவது அல்லாஹ் தன்னை இவ்வுலகில் பிறக்க வைத்ததற்காக நன்றி செலுத்தும் விதமாக நபி ﷺ அவர்கள் நோன்பு நோற்றார்கள்.

ஆகவே அவர்களைப் பின்பற்றி அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமான இறுதி நபி நமக்கு கிடைக்கப்பெற்றதற்கு நன்றி செலுத்தி, நபி ﷺ அவர்களின் பிறப்பைக் கொண்டு சந்தோஷம் அடைந்தவர்களாகவும் அதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தியவர்களாகவும் திங்கள் கிழமை நாமும் நோன்பிருக்க வேண்டும்.

யார் தனது நபியை நேசித்து, அந்த நபி கிடைக்கப் பெற்றதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் விதமாக நோன்பிருப்பாரோ கண்டிப்பாக அவர் அல்லாஹ்வின் மகத்தான அருட்கொடைக்கு தகுதி உள்ளவராக ஆகிவிடுகிறார். அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துபவர்களுக்கு அல்லாஹ் அந்த அருளை அதிகப்படுத்தி தருகிறான்.

ஆகவே யார் திங்கள் அன்று இந்த ஈமானிய உணர்வுடன் நோன்பிருப்பாரோ அல்லாஹ் அவருக்கு ஈமான் உடைய நிஃமத்தை அதிகப்படுத்துகிறான். அல்லாஹ்வின் மீதும் நபியின் மீதும் அன்பையும் பாசத்தையும் அதிகப்படுத்துகிறான். இது எத்தகைய பெரும் பாக்கியமாகும்!!

12. பிறகு, மாதத்தில் மூன்று நாள்கள் நோன்பிருக்கும்போது ஒரு நல்லமலுக்கு பத்து மடங்கு நன்மை என்ற அல்லாஹ்வின் விதியின் அடிப்படையில் யார் மாதத்தில் மூன்று நாள்கள் நோன்பு வைப்பாரோ அவருக்கு அல்லாஹ் முப்பது நாள்கள் நோன்பு வைத்த நன்மைகளை வழங்குகிறான்.

பிறகு இதை அடியான் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் செய்யும் போது ஆண்டு முழுவதும் நோன்பு வைத்த நன்மையை அல்லாஹ் அடியானுக்கு வழங்கி விடுகிறான். பிறகு வாழ்நாள் முழுவதும் அடியான் இதை கடைப்பிடித்தால் தனது வாழ்க்கை அனைத்தையும் இபாதத்தில் கழித்ததாக, வாழ்நாள் முழுக்க நோன்பு வைத்ததாக ஆகிவிடுகிறது.

ஆகவே, இத்தகைய நல்லோரை அல்லாஹ் சொர்க்கத்தில் பிரவேசிக்க வைக்கும்போது அவர்களுக்கு மட்டும் என்று விசேஷமாக ரய்யான் என்ற வாசலை திறந்து கொடுத்து அதன் வழியாக சொர்க்கத்தில் பிரவேசிக்க வைக்கிறான். அந்த வாசல் வழியாக வேறு யாரும் செல்ல முடியாது. அது நோன்பாளிகளுக்கு என்று விசேஷமான வாசலாகும். அல்லாஹு அக்பர்! இது எத்தகைய கண்ணியம் அடியானுக்கு அல்லாஹ்விடம்!! இந்த நோன்பாளி மீது அல்லாஹ்விற்கு எவ்வளவு பிரியம்!

இந்த நன்மைகளையும் சிறப்புகளையும் புரிந்துகொண்ட நமது சான்றோர் ஆண்டு முழுவதும் ரமழானாக இருக்க வேண்டுமே என்று ஆசைப்பட்டார்கள். ரமழானுக்காக ஆறு மாதங்கள் துஆ செய்வார்கள்! ரமழான் முடிந்த பிறகு அந்த ரமழானில் செய்த நன்மைகளை அல்லாஹ் ஏற்றுக்கொள்ளும்படி அவனிடம் ஆறு மாதங்கள் துஆ செய்துகொண்டு இருப்பார்கள்!

தாவூத் நபி அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு வைப்பார்கள். நபி ﷺ அவர்கள் நோன்பு வைத்துக் கொண்டே இருப்பார்கள், மாதத்தின் பல நாள்கள் நோன்பு வைப்பார்கள், ஷஅபான் மாதம் முழுவதும் நோன்பு வைப்பார்கள். ஒரு நேர சஹரைக் கொண்டு இரண்டு அல்லது மூன்று நாள்கள் தொடர்ந்து நோன்பு வைப்பார்கள்.

ஸஹாபாக்கள் இன்னும் தாபியீன்களில் பலர் வாழ்நாள் முழுவதும் நோன்பு வைத்திருக்கிறார்கள்.

முஆத் ؓ கூறுகிறார்கள்: நான் உலக வாழ்க்கையை விரும்புவதே மூன்று காரணங்களுக்காகத்தான். ஒன்று, கடுமையான குளிர் காலத்தில் நீண்ட இரவில் அதிக நேரம் நின்று அல்லாஹ்வை வணங்குவதற்காக. இரண்டு, கடுமையான வெயில் காலத்தில் நீண்ட பகலில் நீண்ட நேரம் நோன்பு வைத்து அல்லாஹ்வை வணங்குவதற்காக. மூன்று, அறிஞர்களின் சபையில் அவர்களுடன் நெருக்கமாக அமர்ந்து கல்வி படிப்பதற்காக.

இத்தகைய மாபெரும் தன்மைக்கு சொந்தக்காரராக முஆத் ؓ இருந்தார்கள் என்பதை நாம் புரிய வேண்டுமென்றால் அவர்களைப் பார்த்து நபி ﷺ அவர்கள் கூறியதை கொஞ்சம் நினைவு கூருங்கள்! முஆதே, நான் உன்னை அல்லாஹ்விற்காக நேசிக்கிறேன். முஆத் நோன்பு என்ற வணக்கத்தினால் அல்லாஹ்விற்கு மிகப் பிரியமானவராக இருந்தார். ஆகவே நபி ﷺ அவர்களும் முஆத் ؓ மீது அலாதியான பிரியம் வைத்திருந்தார்கள்.

அன்னை ஹஃப்சாவை நபி ﷺ அவர்கள் தலாக் விட்டபோது அல்லாஹ் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களை அனுப்பி, மீண்டும் ஹஃப்சாவை நிகாஹில் சேர்த்துக்கொள்ளும்படி நபி ﷺ அவர்களுக்கு கட்டளையிட்டதற்கு காரணம், ஹஃப்சா அதிகம் நோன்பு வைப்பவர், இரவில் அதிகம் தொழுபவர் என்று அல்லாஹ் கூறினான்.

இந்தளவு அல்லாஹ்விற்கு பிரியமான அமலில் நாமும் கவனம் செலுத்துவோமாக!

அல்லாஹ்வே! உன்னை நினைவு கூர்வதற்கும், அழகிய முறையில் உன்னை வணங்குவதற்கும், உனக்கு நன்றி உள்ளவர்களாக இருப்பதற்கும் எங்களுக்கு உதவுவாயாக! ஆமீன்!

• • •

## அன்பும் வெறுப்பும் மிதமாக இருக்க வேண்டும்! மிதமிஞ்சிய அன்பும் வெறுப்பும் அழிவில் தள்ளிவிடும்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ بْنُ حُمَيْدٍ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ الْمُبَارَكِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنْ يَحْيَ بْنِ الْمُخْتَارِ عَنِ الْـحَسَنِ قَالَ أَحِبُّوا هَوْنًا وَأَبْغِضُوا هَوْنًا فَقَدْ أَفْرَطَ أَقْوَامٌ فِي حُبِّ أَقْوَامٍ فَهَلَكُوا وَأَفْرَطَ أَقْوَامٌ فِي بُغْضِ أَقْوَامٍ فَهَلَكُوا لَا تُفْرِطْ فِي حُبٍّ وَلَا تُفْرِطْ فِي بُغْضٍ

இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: மிதமாக நேசம் வையுங்கள்! மிதமாக வெறுப்பு காட்டுங்கள்! சில மக்கள், சில மக்களை நேசிப்பதில் மிதமிஞ் சினார்கள். ஆகவே, அவர்கள் நாசமானார்கள். சில மக்கள், சில மக்களை வெறுப்பதில் மிதமிஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் நாசமானார்கள். நேசம் பாராட்டுவதிலும் நீ மிதமிஞ்சாதே! வெறுப்பு காட்டுவதிலும் நீ மிதமிஞ்சாதே!

**விளக்கம்:** யாரையும் நேசிக்கும்போது அளவோடு நேசிக்க வேண்டும். யார் மீதும் அன்பு வைக்கும்போது அளவுகடந்து விடக் கூடாது. யாரை எவ்வளவு நேசிக்க வேண்டும் என்பதை அறிந்து அதற்கேற்ப நேசிக்க வேண்டும்.

அப்படித்தான் ஒருவரை பகைப்பதாக இருந்தாலும், ஒருவர் மீது வெறுப்பு வந்தாலும் அந்த பகைமைக்கு என்ன காரணம் என்பதை அறிந்து அதற்கேற்ப பகைமை காட்ட வேண்டும். அல்லது வெறுக்க வேண்டும்.

ஒருவரை எல்லை மீறி வெறுத்து ஒதுக்கிவிட்டு, பிறகு அவர் நல்லவராக ஆகும்போது நாம் வெட்கப்படும்படி ஆகிவிடக் கூடாது. ஆகவே, அன்பு வைப்பது, நேசிப்பது, பாசம் வைப்பது, நெருக்கம் காட்டுவது, பகைப்பது, வெறுப்பது, கோபிப்பது என அனைத்திலும் நடுநிலை, நிதானம் பேண வேண்டும்.

இமாம் ஹசன் ﷺ அவர்களின் அறிவுரை நம் எல்லோருக்கும் மிக அவசியமான ஒன்றாகும்.

நாம் இன்று இதில் அதிகம் தவறு செய்கிறோம். யாரை நேசிக்க வேண்டும், ஒருவரை நேசித்தால் எந்தளவு நேசிக்க வேண்டும், நேசத்தை எப்படி வெளிப்படுத்துவது என்பதை நம்மில் பலர் அறிந்திருப்பதில்லை.

அவ்வாறே, ஒருவரை வெறுத்தால் ஏன் அவரை வெறுக்கிறோம், அவரின் தவறு எந்தளவு பெரியது, நமது சுய வெறுப்புக்காக வெறுக்கிறோமா அல்லது அல்லாஹ்விற்காக வெறுக்கிறோமா என்பதை சுயபரிசோதனை செய்வதில்லை. மாறாக கண்மூடித்தனமாக வெறுத்துவிடுவதும் பகைமை காட்டுவதும் நம்மில் பலருடைய வழக்கமாக இருப்பதை நம் அன்றாட வாழ்வில் காணமுடிகிறது.

இங்கே நாம் நேசம், அன்பு, பாசம் ஆகியவைப் பற்றி சற்று விரிவாக அறிவது அவசியம் என்று கருதுகிறேன்.

அல்லாஹு தஆலா உள்ளத்தில் பல தன்மைகளை, பல பண்புகளை படைத்துள்ளான். அவற்றில் மிக முக்கியமானதும் சிறப்பானதும் இந்த அன்பு என்ற தன்மையாகும்.

அன்பு மனதிற்கு மிகப் பிடித்தமான ஒன்றாகும்.

அன்பு உள்ளத்தில் மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும்.

அன்பு உள்ளத்தையும் உடலையும் அடிமைப் படுத்திவிடும்.

அன்பு அது யார் மீது ஏற்படுமோ அவரை உள்ளத்திற்கு மிக நெருக்கமாக ஆக்கிவிடும்.

அன்பு அது யார் மீது ஏற்படுகிறதோ அவரின் நெருக்கத்தை உள்ளம் தேட ஆரம்பித்து விடும்.

அன்பு அது யார் மீது ஏற்படுகிறதோ அவரின் பிரிவு நமக்கு வருத்தத்தை, வலியை, கவலையை உண்டாக்குகிறது.

அன்பு வைத்தவர் நமக்கு அருகில் இருந்தால் அது பசியை, கவலையை, துக்கத்தை, துயரத்தை போக்கிவிடுகிறது, அல்லது குறைத்துவிடுகிறது.

அன்பினால் ஒருவரை படியவைத்து விடலாம், ஒருவரை கட்டுப்படுத்தி விடலாம், ஒருவரை நமக்குரியவராக மாற்றி விடலாம்.

அன்பான பயிற்சியால் ஒருவரின் முரட்டு குணத்தை மாற்றி விடலாம்.

அன்பினால் ஒருவரிடம் பிறர் அவரிடம் சாதிக்க முடியாததை நாம் சாதித்து விடலாம்.

கொடிய காட்டு மிருகங்களைக் கூட அன்பினால் மிக மென்மையான சாதுவான மிருகங்களாக மாற்றிவிடலாம்.

அன்பு இவ்வுலகில் எல்லோருக்கும் எல்லோரிடமிருந்து மிக மிக அதிகம் தேவைப்படுகிற ஒன்றாகும்.

பிள்ளைகளுக்கு பெற்றோரின் அன்பு அவசியம்.

அன்பு காட்டப்படாமல் வளர்க்கப்படுகிற பிள்ளைகள், பெற்றோர் உடைய அன்பும் பாசமும் கிடைக்காத பிள்ளைகள் பிற்காலத்தில் குற்ற செயல்களில் விரைவாக சிக்கி விடுவதாகவும் சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதாகவும் பல மனநல ஆய்வாளர்களின் ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

உடன் பிறப்புகள் ஒருவர் மற்றவர் மீது அன்பு வைக்க வேண்டும். தம்பிக்கு அண்ணனின் அன்பு தேவை, தங்கைக்கு அக்காவின் அன்பு தேவை. அதன் மூலம் குடும்பத்தில் பிள்ளைகளுக்கு இடையில் இரத்த உறவு பலமாகி உயிரோட்டமுள்ள உணர்வுப்பூர்வமான பாசம் நிலவுகிறது.

ஒருவர் மற்றவர் மீது அக்கறை காட்டுகின்றனர். ஒருவர் மற்றவரின் நலன்களில் கவனம் செலுத்துகின்றனர். தங்களுக்குள் விட்டுக்கொடுத்தல், மன்னித்தல், பெருந்தன்மையுடன் நடத்தல் ஆகிய உயர்வான பண்புகளை கடைப்பிடித்து முன்மாதிரி சகோதர சகோதரிகளாக வாழ்கின்றனர். இதன் மூலம் அல்லாஹ்வின் அருளுக்கும் கருணைக்கும் உரியவர்களாக ஆகுகின்றனர்.

நண்பர்களுக்குள் ஒருவர் மீது மற்றவருக்கு அன்பு இருப்பது மிக அவசியம். அது உண்மையான நட்பையும் உயிரோட்டமுள்ள நேசத்தையும் வளர்க்கிறது. இன்னும், சுயநலம், பகட்டு பாசம், உலகாதாய உறவு, நயவஞ்சகமான மகிழ்ச்சி, பொறாமை கலந்த வாழ்த்து, உள்நோக்கமுள்ள அன்பளிப்புகள், எதிர்பார்ப்புடன் கூடிய கொடுக்கல் வாங்கல் என அனைத்தையும் விட்டு நட்பை சுத்தப்படுத்தி, ஈமானிய இஸ்லாமிய நட்பாக இறை பொருத்தத்திற்குரிய நட்பாக நட்பை மாற்றிவிடுகிறது உண்மையான அன்பு!

இத்தகைய அன்பையே இஸ்லாம் போதிக்கிறது, இதைத்தான் இஸ்லாம் வரவேற்கிறது, இதன் பக்கமே உலக மக்களை அழைக்கிறது. இதுவே இம்மையில் மட்டுமல்லாமல் மறுமையிலும் நற்பலனுக்கும் நற்கூலிக்கும் உரிய நட்பாகும். இதை அல்லாஹ்விற்கான அன்பு என்று இஸ்லாம் வர்ணிக்கிறது.

அல்குர்ஆன் இந்த நட்பை இப்படி விவரிக்கிறது:

الْأَخِلَّاءُ يَوْمَئِذٍ بَعْضُهُمْ لِبَعْضٍ عَدُوٌّ إِلَّا الْمُتَّقِينَ ۝

அந்நாளில் நண்பர்கள் சிலர் சிலருக்கு எதிரியாகிவிடுவர். ஆனால், இறை அச்சமுடையவர்களைத் தவிர. (அல்குர்ஆன் 43 : 67)

நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில் இத்தகைய நட்புக்கு பல சிறப்புகளும் நன்மைகளும் கூறப்பட்டுள்ளன.

مَنْ عَادَ مَرِيضًا أَوْ زَارَ أَخًا لَهُ فِي اللهِ نَادَاهُ مُنَادٍ أَنْ طِبْتَ وَطَابَ مَمْشَاكَ وَتَبَوَّأْتَ مِنَ الْجَنَّةِ مَنْزِلًا

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் ஒரு நோயாளியை நலம் விசாரிக்க செல்வாரோ அல்லது தனது (மார்க்க சகோதரர்களில்) ஒரு சகோதரரை அல்லாஹ்விற்காக சந்திக்க செல்வாரோ அவரை (வானவர்களில் இருந்து) ஒரு அழைப்பாளர் அழைத்து, நீ நல்லவராக இருக்கிறீர், நீ செல்வதும் நல்லதாக இருக்கிறது, இன்னும் நீ சொர்க்கத்தில் ஒரு தங்குமிடத்தை உனக்காக அமைத்துக்கொண்டாய் என்று கூறுகிறார்.[12]

இன்னொரு ஹதீஸில் வருகிறது,

عَنْ أَبِي هُرَيْرَةَ رضي الله عنه عَنِ النَّبِيِّ ﷺ أَنَّ رَجُلًا زَارَ أَخًا لَهُ فِي قَرْيَةٍ أُخْرَى فَأَرْصَدَ اللهُ لَهُ عَلَى مَدْرَجَتِهِ مَلَكًا فَلَمَّا أَتَى عَلَيْهِ قَالَ أَيْنَ تُرِيدُ قَالَ أُرِيدُ أَخًا لِي فِي هَذِهِ الْقَرْيَةِ قَالَ هَلْ لَكَ عَلَيْهِ مِنْ نِعْمَةٍ تَرُبُّهَا قَالَ لَا غَيْرَ أَنِّي أَحْبَبْتُهُ فِي اللهِ عَزَّ وَجَلَّ قَالَ فَإِنِّي رَسُولُ اللهِ إِلَيْكَ بِأَنَّ اللهَ قَدْ أَحَبَّكَ كَمَا أَحْبَبْتَهُ فِيهِ

நபி ﷺ கூறினார்கள்: நிச்சயமாக ஒரு மனிதர் வேறு ஒரு கிராமத்தில் உள்ள தனது (மார்க்க சகோதரர்களில்) ஒரு சகோதரரை அல்லாஹ்விற்காக சந்திக்க சென்றார். அவருடைய வழியில் அவருக்காக ஒரு வானவரை அல்லாஹ்

12. அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 2008, தரம்: ஹஸன் - அல்பானி.

எதிர்பார்த்திருக்கும்படி செய்தான். அந்த மனிதர் அந்த வானவரை கடந்து சென்றபோது, நீ எங்கே செல்ல நாடுகிறாய் என்று அந்த வானவர் கேட்டார். அவர் கூறினார்: நான் இந்த ஊரில் உள்ள எனது (மார்க்க சகோதரர்களில்) ஒரு சகோதரரை சந்திக்க விரும்புகிறேன். அந்த வானவர் கேட்டார்: அவரிடம் உனக்கு ஏதும் செல்வம் இருந்து அதை கவனித்து வர நீ செல்கிறாயா?. அவர் கூறினார்: இல்லை, என்றாலும் நிச்சயமாக நான் அவரை கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்விற்காக நேசிக்கிறேன் (-அதனால் அவரை சந்திக்க செல்கிறேன்) என்று கூறினார். அதற்கு அந்த வானவர் கூறினார்: நிச்சயமாக நான் உன்னிடம் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதர் ஆவேன். நிச்சயமாக அல்லாஹ் உன்னை நேசித்துவிட்டான், நீ அவனை (-அந்த சகோதரனை) அவனுக்காக (-அல்லாஹ்விற்காக) நேசித்ததுபோன்று என்ற செய்தியை உன்னிடம் கூற நான் வந்தேன்.[13]

قَالَ اللهُ تَعَالَىٰ وَجَبَتْ مَحَبَّتِي لِلْمُتَحَابِّينَ فِيَّ وَالْمُتَجَالِسِينَ فِيَّ وَالْمُتَبَاذِلِينَ فِيَّ وَالْمُتَزَاوِرِينَ فِيَّ

நபி ﷺ அல்லாஹு தஆலா கூறுவதாக கூறினார்கள்: எனக்காக நேசிப்பவர்களுக்கும், எனக்காக ஒரு சபையில் ஒன்று சேர்ந்து உட்காருபவர்களுக்கும், எனக்காக ஒருவர் மற்றவருக்கு விட்டுக் கொடுத்து செலவு செய்பவர்களுக்கும், எனக்காக சந்தித்துக் கொள்பவர்களுக்கும் என் அன்பு கட்டாயமாகி விட்டது.[14]

இப்படி பல நூறு ஹதீஸ்கள் அல்லாஹ்விற்காக பேணப்படுகிற அன்பை சிறப்பித்து கூறுவதை நாம் காணலாம்.

இந்த அன்பு ஒருவருக்கு இந்த காலத்தில் கிடைக்கப் பெற்றால் அவருக்கு அல்லாஹ்வின் அன்பு கண்டிப்பாக கிடைத்துவிட்டது என்று சொல்லலாம்.

இக்காலத்தில் உறவுகளுக்குள், நண்பர்களுக்குள், நேசர்களுக்குள், சினேகிதர்களுக்குள் அன்பு இல்லை, நேசம் இல்லை, நெருக்கம் இல்லை, விட்டுக் கொடுத்தல் இல்லை, சந்திப்பு இல்லை, பாசம் இல்லை, பரிவு இல்லை, பரஸ்பர பரிமாற்றம் இல்லை.

எல்லாம் அழியும் உலக செல்வத்தை முன்வைத்து மாறிவிட்டன.

13. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 2567.
14. அறிவிப்பாளர்: முஆத் இப்னு ஜபல் ؓ, நூல்: ஸஹீஹுல் ஜாமிஃ, எண்: 4331.

தூய்மையான அன்புக்காக ஏங்கும் உள்ளங்களுக்குத்தான் தெரியும் அந்த அன்பின் அருமை!

சரி, இப்போது சில கேள்விகள்!! அவற்றுக்கு விடை காண்போம்.

அன்பு என்றால் என்ன?

அன்பின் இலக்கணம் என்ன?

அன்பின் அடையாளம் என்ன?

அன்பு வருவதற்கு காரணம் என்ன?

அன்பு இல்லாமல் போவதற்கு என்ன காரணம்?

அன்பை அதிகப்படுத்த என்ன வழிகள்!

அன்பு என்பது உள்ளம் சார்ந்த ஓர் ஈர்ப்பாகும். அன்பு உள்ளத்தில் ஏற்படும் ஒருவித மாற்றமாகும். அதன் மூலம் அது யார் மீது ஏற்பட்டதோ அவரை நாம் விரும்ப ஆரம்பித்து விடுகிறோம்; அவர் விஷயத்தில் அக்கறை காட்ட ஆரம்பித்து விடுகிறோம்; அவரது நலனில் நாம் கவனம் செலுத்த ஆரம்பித்து விடுகிறோம்; அவர் நம்மோடு எப்போதும் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட ஆரம்பித்து விடுகிறோம்; அவரின் பிரிவை நாம் சிரமமாக கருத ஆரம்பித்து விடுகிறோம்; அவரின் அன்பை நாம் எதிர்பார்க்க ஆரம்பித்து விடுகிறோம்; அவர் நம்மீது கோபிப்பதை நாம் தாங்க முடியாமல் சிரமப்பட ஆரம்பித்து விடுகிறோம். இப்படியாக பல மாற்றங்கள் நமக்குள் ஆரம்பமாகி விடுகின்றன.

ஒருவருக்கும் நமக்கும் இடையில் இரத்த உறவு இருப்பதால் அன்பு வரலாம்.

கணவன் மனைவி உறவு ஏற்படுவதால் அன்பு வரலாம்.

ஒருவரைக் கொண்டு அவரின் கல்வி, அவரின் செல்வம், அவரின் அறிவு அல்லது அவரிடம் இருக்கும் நல்ல ஒன்றின் மூலம் நமக்கு நற்பலன் கிடைக்கும்போது நாளடைவில் அவர் மீது நமக்கு அன்பு வரலாம்.

ஒருவரின் அழகினால் நமக்கு அவர் மீது அன்பு வரலாம்.

ஒருவரோடு அதிகம் பழகுவதால் அவர் மீது நமக்கு அன்பு வரலாம்.

இப்படியாக அன்புக்கு பல காரணங்கள் இருந்தாலும் அல்லாஹ்விற்காக அவனது மார்க்கத்திற்காக என்று உருவாகிற அன்புதான் மிக சிறந்த, மிக உயர்ந்த அன்பாகும்.

அன்பை அதிகப்படுத்த நாம் யார் மீது அன்பு வைக்கிறோமோ அவரிடம் கனிவாக பேசுவதிலும், அவருடன் பணிவாக நடந்து கொள்வதிலும், அவரின் தேவையை நிறைவேற்றுவதிலும், அவருக்கு உதவுவதிலும், அவரின் சுக துக்கங்களில் பங்கெடுப்பதிலும் முடிந்தளவு கவனம் செலுத்த வேண்டும்.

ஆகவேதான் அன்பளிப்புகளை பகிர்ந்து கொள்வதில் இஸ்லாம் அதிகம் ஆர்வமூட்டியுள்ளது. இது குறித்து சில ஹதீஸ்களை கவனிப்போம்:

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ تَهَادُوْا تَحَابُّوا

நபி ﷺ கூறினார்கள்: நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பளிப்பு கொடுத்துக் கொள்ளுங்கள்! உங்களுக்குள் அன்பு வரும். (நீங்கள் உங்களுக்குள் அன்பளிப்பு கொடுங்கள்! அதனால் உங்களுக்குள் ஒருவர் மற்றவர் மீது அன்பு பாராட்டுவீர்கள்.)[15]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ يَا نِسَاءَ الْمُسْلِمَاتِ لَا تَحْقِرَنَّ جَارَةٌ لِجَارَتِهَا وَلَوْ فِرْسِنَ شَاةٍ

நபி ﷺ கூறினார்கள்: முஸ்லிமான பெண்களே! தனது அண்டைவீட்டு பெண் கொடுக்கும் அன்பளிப்பை அற்பமாக கருதிவிட வேண்டாம், அது ஆட்டுக்காலாக இருந்தாலும் சரி![16]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ لَوْ دُعِيتُ إِلَى ذِرَاعٍ أَوْ كُرَاعٍ لَأَجَبْتُ وَلَوْ أُهْدِيَ إِلَيَّ ذِرَاعٌ أَوْ كُرَاعٌ لَقَبِلْتُ

நபி ﷺ கூறினார்கள்: ஒரு ஆட்டுக் காலை சமைத்து என்னை விருந்துக்கு அழைத்தாலும் நான் அந்த விருந்துக்கு செல்வேன். எனக்கு ஒரு ஆட்டுக் கால் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டாலும் நான் அதை ஏற்றுக் கொள்வேன்.[17]

இப்படியாக அன்பளிப்பு கொடுப்பதையும் அதை அன்போடு வாங்கிக் கொள்வதையும் ஆர்வமூட்டி நபி ﷺ அவர்கள் நமக்கு பல அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

15. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: அல்அதபுல் முஃப்ரத், எண்: 594, தரம்: ஹசன் - அல்பானி.

16. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2566.

17. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2568.

அன்பையும் அதன் சிறப்பையும் இன்று நாம் அறிந்துகொண்டது போன்று இன் ஷா அல்லாஹ் அடுத்த அமர்வில் அன்பு எப்படி, எந்தளவு இருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்!

அல்லாஹ்வே! எங்களுக்குள் உண்மையான அன்பை கொடு! உனக்காக நேசம் பாராட்டுகிறவர்களில் எங்களை ஆக்கு! உலகாதாயத்திற்காக நட்பு வைப்பவர்களாக எங்களை ஆக்கிவிடாதே! எங்கள் நட்பை ஷைத்தானின் தீங்கை விட்டும் நஃப்ஸின் கெடுதியை விட்டும் பாதுகாப்பாயாக! எங்கள் நட்பில் உண்மையையும் தக்வாவையும் ஏற்படுத்துவாயாக! ஆமீன்!

• • •

## அன்பு யார் மீது, எவ்வளவு இருக்க வேண்டும்?

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ بْنُ حُمَيْدٍ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ الْمُبَارَكِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنْ يَحْيَىٰ بْنِ الْمُخْتَارِ عَنِ الْحَسَنِ قَالَ أَحِبُّوا هَوْنًا وَأَبْغِضُوا هَوْنًا فَقَدْ أَفْرَطَ أَقْوَامٌ فِي حُبِّ أَقْوَامٍ فَهَلَكُوا وَأَفْرَطَ أَقْوَامٌ فِي بُغْضِ أَقْوَامٍ فَهَلَكُوا لَا تُفْرِطْ فِي حُبٍّ وَلَا تُفْرِطْ فِي بُغْضٍ

இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: மிதமாக நேசம் வையுங்கள்! மிதமாக வெறுப்பு காட்டுங்கள்! சில மக்கள், சில மக்களை நேசிப்பதில் மிதமிஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் நாசமானார்கள். சில மக்கள், சில மக்களை வெறுப்பதில் மிதமிஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் நாசமானார்கள். நேசம் பாராட்டுவதிலும் நீ மிதமிஞ்சாதே! வெறுப்பு காட்டுவதிலும் நீ மிதமிஞ்சாதே!

**விளக்கம்:** அன்பு முதலாவதாக நம்மை படைத்த ரப்பு மீது இருக்க வேண்டும். நமது அன்புக்கு அவனே முதலும் முழுமையுமாக தகுதியானவன். அவன் மீது அன்பு வைக்கும்போது இந்த உள்ளத்திற்கு எத்தகைய பேரின்பம் ஏற்படும் என்பதை அதை அடைந்தவர் மட்டுமே அறிவார்.

அவனை அறிந்து அவனை நம்பிக்கை கொண்டு, அவன் மீது இந்த உள்ளம் அன்பு வைத்தால் இந்த உள்ளமும் அது உடையவரும் மாபெரும் நற்பாக்கியம் பெற்றவர் ஆவார்.

அந்த அல்லாஹ் நம்மை படைத்தவன் ஆயிற்றே! நமக்கு இந்த உலக வாழ்க்கையை கொடுத்தவன் ஆயிற்றே! அவன்தான் நமது எஜமானன், அவன்தான் நமது பொறுப்பாளன், அவன்தான் நமக்கு ஆதரவும் நம்பிக்கையும்! அவன் நமக்கு கணக்கின்றி கொடுப்பவன் ஆயிற்றே! நாம் அவனிடம் கேட்க கேட்க அவன் மகிழ்கிறானே! எத்தனை முறை

கேட்டாலும், எவ்வளவு அதிகம் கேட்டாலும், நமக்கு மட்டுமல்லாமல், உலக மக்கள் எல்லோருக்கும் கேட்டாலும் அவன் உடனே கொடுக்க தயாராக இருக்கிறானே! கேட்டால் சந்தோஷப் படுகிறான். கேட்காவிட்டால் அவன் கோபிக்கிறான்.

ஆகவே! இந்த அன்பை அவனுக்கு மட்டுமே நாம் கலப்பற்ற முறையில் கொடுக்கும்போது அவனும் நமக்கு அவனது அன்பையும் பொருத்தத்தையும் தருகிறான்.

நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வின் அன்பில் அவனுக்கு இணையாக யாரையும் ஆக்க மாட்டார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَالَّذِينَ آمَنُوا أَشَدُّ حُبًّا لِلَّهِ○

நம்பிக்கைக் கொண்டவர்கள் அல்லாஹ்வை மிக அதிகம் நேசிப்பார்கள். (அல்குர்ஆன் 2 : 165)

அல்லாஹ், நாம் அவனை நேசிக்க வேண்டும், அவன் மீது அன்பு வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். நமது முகத்தையும் உள்ளத்தையும் அவனை முன்னோக்கி வைத்து நமது உள்ளத்தில் அவன் மீது அன்பையும் ஆர்வத்தையும் ஆசையையும் அளவில்லாமல் நாம் நிரப்ப வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு கட்டளை இடுகிறான்.

وَإِلَىٰ رَبِّكَ فَارْغَبْ○

உமது இறைவனை நீர் ஆசைப்படுவீராக! (அல்குர்ஆன் 94 : 8)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا مَنْ يَرْتَدَّ مِنْكُمْ عَنْ دِينِهِ فَسَوْفَ يَأْتِي اللَّهُ بِقَوْمٍ
يُحِبُّهُمْ وَيُحِبُّونَهُ○

நம்பிக்கையாளர்களே! உங்களில் யாரும் தனது தீனை விட்டும் மாறிவிட்டால் அல்லாஹ் வேறு மக்களை கொண்டுவருவான். அவன் அவர்களை நேசிப்பான், அவர்களும் அவனை நேசிப்பார்கள். (அல்குர்ஆன் 5 : 54)

அல்லாஹ்வை நேசிக்காமல், அவன் மீது அன்பு வைக்காமல் அந்த அன்பை

சிலைகள் மீதும் உலக வஸ்துக்கள் மீதும் வைப்போரை அல்லாஹ் இவ்வாறு பழிக்கிறான்:

وَمِنَ النَّاسِ مَنْ يَتَّخِذُ مِنْ دُونِ اللهِ أَنْدَادًا يُحِبُّونَهُمْ كَحُبِّ اللهِ ۝

மேலும், அல்லாஹ் அல்லாதவற்றை அவனுக்கு இணையாக எடுத்துக் கொண்டு, அல்லாஹ்வை நேசிப்பதுபோல அவற்றை நேசிப்பவர்களும் மனிதர்களில் பலர் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 2 : 165)

ஈமானின் தன்மைகளில் ஒன்று அல்லாஹ்வை அடியான் நேசிப்பது, அவன் மீது அன்பு வைப்பது. அல்லாஹ்வின் மீது அன்பு அதிகமாக அதிகமாக ஈமான் அதிகரிக்கும். அமல்களில் ஆர்வம் அதிகமாகும். அல்லாஹ்விற்கு பிடித்தமான நல்லமல்களை செய்வதில் அடியான் தீவிரம் காட்டுவான்; அவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்துவான்; அல்லாஹ்வின் அன்பு குறைந்துவிடும் என்ற பயத்தில் பாவங்களை விட்டும் குற்றங்களை விட்டும் விலகி தூரமாக இருப்பான். அல்லாஹ் நேசிக்கின்ற நல்லோருடன் நட்பு பாராட்டி அல்லாஹ் வெறுக்கிற பாவிகளை விட்டு விலகி இருப்பான்.

அல்லாஹ்வின் அன்பு நமக்கு கிடைக்க வேண்டும் என்று அவனிடம் துஆ கேட்பது மிகவும் அவசியம். ஆம், நமக்கு எது தேவையோ அதை அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். நமக்கு எவ்வளவு அவசியமோ அந்தளவு அதை அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். அல்லாஹ்வின் அன்பு நமக்கு எவ்வளவு தேவை என்பதற்கு ஓர் அளவு சொல்ல முடியுமா? அல்லது அதற்கு ஓர் எல்லையைத்தான் நிர்ணயிக்க முடியுமா?

நபிமார்கள், ரஸூல்மார்கள், நல்லோர், பெரியோர் அல்லாஹ்வின் அன்புக்காக தங்களை அழித்துக்கொண்டார்கள். அல்லாஹ்விடம் அவனது அன்பை வேண்டி அழுது மன்றாடி வேண்டினார்கள். அல்லாஹ்வின் அன்பு கிடைக்க வேண்டும் என்று ஏங்கினார்கள். அல்லாஹ்வின் அன்பில் எவ்வித குறைவும் ஏற்படாமல் மிக கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

ஒருவர் அல்லாஹ்விடம் எந்தளவு நெருக்கம் உள்ளவராக இருப்பாரோ அந்தளவு அவர் அல்லாஹ்வின் அன்பில் கவனம் செலுத்துவார். அந்த அன்பை அதிகரிக்கிற அமல்களை செய்து கொண்டே இருப்பார்.

நபி ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அன்பை வேண்டி அவனிடம் மன்றாடினார்கள் என்றால் அந்த அன்பின் மகத்துவத்தை நாம் என்னவென்று சொல்வது!!

كَانَ دَاوُدُ يَقُولُ اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ حُبَّكَ وَحُبَّ مَنْ يُـحِبُّكَ وَالْعَمَلَ الَّذِي يُبَلِّغُنِي حُبَّكَ اَللَّهُمَّ اجْعَلْ حُبَّكَ أَحَبَّ إِلَيَّ مِنْ نَفْسِي وَأَهْلِي وَمِنَ الْـمَاءِ الْبَارِدِ

தாவூத் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கூறுவார்கள்: அல்லாஹ்வே! நிச்சயமாக நான் உன்னிடம் உனது அன்பையும் உன்னை நேசிப்பவர்களின் அன்பையும் உனது அன்பின் பக்கம் என்னை சேர்த்து வைக்கும் அமலையும் உன்னிடம் கேட்கிறேன். அல்லாஹ்வே! உனது அன்பை எனக்கு என்னைவிடவும் எனது குடும்பத்தை விடவும் குளிர்ந்த நீரைவிடவும் மிக விருப்பமானதாக ஆக்கிவை!

இந்த ஹதீஸை இமாம் திர்மிதி, இன்னும் அபூ தாவூத் பதிவு செய்துள்ளார்கள். திர்மிதி அவர்கள் இதை ஹசன் என்றும் ஷைக் அல்பானி அவர்கள் இதை பலவீனமானது என்றும் தரம் பிரித்துள்ளார்கள்.

நபி ﷺ அவர்கள் தாயிஃப் நகரத்தில் செய்த துஆவும் இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

اَللَّهُمَّ إِلَيْكَ أَشْكُو ضَعْفَ قُوَّتِي وَقِلَّةَ حِيلَتِي وَهَوَانِي عَلَى النَّاسِ أَنْتَ أَرْحَمُ الرَّاحِمِينَ أَنْتَ رَبُّ الْـمُسْتَضْعَفِينَ وَأَنْتَ رَبِّي إِلَىٰ مَنْ تَكِلُنِي إِلَىٰ بَعِيدٍ يَتَجَهَّمُنِي أَمْ إِلَىٰ عَدُوٍّ مَلَّكْتَهُ أَمْرِي إِنْ لَمْ يَكُنْ بِكَ غَضَبٌ عَلَيَّ فَلَا أُبَالِي غَيرَ أَنَّ عَافِيَتَكَ هِيَ أَوْسعُ لِي أَعُوذُ بِنُورِ وَجْهِكَ الَّذِي أَشْرَقَتْ لَهُ الظُّلُمَاتُ وَصَلُحَ عَلَيْهِ أَمْرُ الدُّنْيَا وَالْآخِرةِ أَنْ يَـحِلَّ عَلَيَّ غَضَبُكَ أَوْ أَنْ يَنْزِلَ بِي سَخَطُكَ لَكَ الْعُتْبَىٰ حَتَّىٰ تَرْضَىٰ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِكَ

“அல்லாஹ்வே! எனது ஆற்றல் குறைவையும் எனது திறமைக் குறைவையும் மனிதர்களிடம் நான் மதிப்பின்றி இருப்பதையும் உன்னிடமே முறையிடுகிறேன். கருணையாளர்களிலெல்லாம் மிகப்பெரிய கருணையாளனே! நீதான் எளியோர்களைக் காப்பவன் நீதான் என்னைக் காப்பவன். நீ என்னை யாரிடம் ஒப்படைக்கிறாய்? என்னைக் கண்டு முகம் கடுகடுக்கும் அந்நியனிடமா?

அல்லது என்னுடைய காரியத்தை நீ உரிமையாக்கிக் கொடுத்திடும் பகைவனிடமா?

உனக்கு என்மீது கோபம் இல்லையானால் (இந்த கஷ்டங்களையெல்லாம்) நான் பொருட்படுத்தவே மாட்டேன். எனினும், நீ வழங்கும் சுகத்தையே நான் எதிர்பார்க்கிறேன். அதுவே எனக்கு மிக விசாலமானது. உனது திருமுகத்தின் ஒளியினால் இருள்கள் அனைத்தும் பிரகாசம் அடைந்தன. இம்மை மறுமையின் காரியங்கள் சீர்பெற்றன.

அத்தகைய உனது திருமுகத்தின் ஒளியின் பொருட்டால் உனது கோபம் என்மீது இறங்குவதிலிருந்தும் அல்லது உனது அதிருப்தி என்மீது இறங்குவதிலிருந்தும் நான் பாதுகாவல் கோருகிறேன். அல்லாஹ்வே! நீயே பொருத்தத்திற்குரியவன். நீ பொருந்திக் கொள்ளும்வரை உன் கோபத்திலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன். அல்லாஹ்வே! பாவத்திலிருந்து தப்பிப்பதும், நன்மை செய்ய ஆற்றல் பெறுவதும் உனது அருள் இல்லாமல் முடியாது."[18]

இப்படித்தான் நல்லோர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் இவ்வுலகத்தில் கலப்பற்ற, பரிசுத்தமான அன்பை அல்லாஹ்வின் மீது வைத்தார்கள். அல்லாஹ்வின் அன்பும் பொருத்தமும் கிடைக்கப் பெற பல சிரமங்களை, உலக இன்னல்களை முக மலர்ச்சியுடன் தாங்கிக்கொண்டார்கள்.

இதோ மூஸா ﵇ அவர்கள் அல்லாஹ்விடம் பேசிய அழகிய உரையாடலை இங்கு கவனிப்போம்:

وَمَا أَعْجَلَكَ عَنْ قَوْمِكَ يَا مُوسَىٰ ۝ قَالَ هُمْ أُولَاءِ عَلَىٰ أَثَرِي وَعَجِلْتُ إِلَيْكَ رَبِّ لِتَرْضَىٰ ۝

(மூஸா தூர் ஸீனாய் மலைக்கு வந்த சமயத்தில் அவரை நோக்கி இறைவன்) "மூஸாவே! நீங்கள் உங்களுடைய மக்களை விட்டுப் பிரிந்து இவ்வளவு அவசரமாக ஏன் வந்தீர்கள்?" (என்று கேட்டான்). அதற்கவர் "அவர்கள் இதோ என்னைப் பின்தொடர்ந்தே வருகின்றனர். என் இறைவனே! உன்னைத் திருப்திப்படுத்துவதற்காக அவசர அவசரமாக (முன்னதாகவே) உன்னிடம் வந்தேன்" என்று கூறினார். (அல்குர்ஆன் 20 : 83-84)

18. நூல்: அர்ரஹீக்குல் மக்தூம். இந்த அறிவிப்பு பலவீனமானது என ஷைக் அல்பானி தரம் பிரித்துள்ளார்கள்.

அல்லாஹ்வின் அன்புக்காக ஏங்குபவர்களுக்கு, அவனது அன்பை தேடுபவர்களுக்கு, அவனது அன்பை அடைய ஆர்வம் உள்ளவர்களுக்கு இந்த உலக வாழ்க்கையில் வேறு கவலை இருக்காது. சதா அதே நினைவில் இருப்பார்கள். ஒரு அமலிலிருந்து இன்னொரு அமலுக்கு செல்வார்கள். அல்லாஹ்வின் அன்பையும் பொருத்தத்தையும் உரித்தாக்குகிற அமல்களை தேடி தேடி செய்து கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கு உடல் சோர்வு, களைப்பு, வறுமை, பொருளாதார நெருக்கடி, நோயுற்று இருத்தல், அல்லது ஆட்சி அதிகாரம், பதவி, வசதியான வாழ்க்கை, செல்வ செழிப்பு என எதுவும் அவர்களுக்கு தடையாக இருக்காது. அல்லாஹ்வின் அன்புக்கு இடையூறாக இருக்கும் எதையும் அவர்கள் விட்டுவிட தயாராக இருப்பார்கள்.

இது குறித்து அல்லாஹ்வின் எச்சரிக்கை எப்போதும் அவர்களின் நினைவில் நிற்கும்:

قُلْ إِنْ كَانَ آبَاؤُكُمْ وَأَبْنَاؤُكُمْ وَإِخْوَانُكُمْ وَأَزْوَاجُكُمْ
وَعَشِيرَتُكُمْ وَأَمْوَالٌ اقْتَرَفْتُمُوهَا وَتِجَارَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَمَسَاكِنُ
تَرْضَوْنَهَا أَحَبَّ إِلَيْكُمْ مِنَ اللهِ وَرَسُولِهِ وَجِهَادٍ فِي سَبِيلِهِ فَتَرَبَّصُوا
حَتَّىٰ يَأْتِيَ اللهُ بِأَمْرِهِ وَاللهُ لَا يَهْدِي الْقَوْمَ الْفَاسِقِينَ ○

(நபியே! நம்பிக்கையாளர்களை நோக்கி) நீங்கள் கூறுங்கள்: உங்களுடைய தந்தைகளும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிகளும், உங்களுடைய குடும்பங்களும், நீங்கள் சம்பாதித்து வைத்திருக்கும் (உங்கள்) பொருள்களும், நஷ்டமாகிவிடுமோ என நீங்கள் பயந்து (மிக எச்சரிக்கையுடன்) செய்து வரும் வர்த்தகமும், உங்களுக்கு மிக்க விருப்பமுள்ள (உங்கள்) வீடுகளும் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் விடவும், அல்லாஹ்வுடைய பாதையில் போர் புரிவதைவிடவும் உங்களுக்கு மிக விருப்பமானவைகளாக இருந்தால் (நீங்கள் உண்மை நம்பிக்கையாளர்களல்ல. நீங்கள் அடைய வேண்டிய தண்டனையைப் பற்றிய) அல்லாஹ்வுடைய கட்டளை வரும் வரையில் நீங்கள் எதிர்பார்த்திருங்கள். (உங்களைப் போன்ற) பாவிகளை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துவதில்லை. (அல்குர்ஆன் 9 : 24)

மேலும், அல்லாஹ்வின் நேசத்திற்கு யாரெல்லாம் தகுதியானவர்களாக இல்லையோ, அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் பகைமை காட்டுபவர்களாக இருக்கிறார்களோ அவர்களிடம் முஃமின்கள் நட்பு வைப்பதோ அவர்கள் மீது அன்பு வைப்பதோ கூடாது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَا تَجِدُ قَوْمًا يُؤْمِنُونَ بِاللهِ وَالْيَوْمِ الْآخِرِ يُوَادُّونَ مَنْ حَادَّ اللهَ وَرَسُولَهُ وَلَوْ كَانُوا آبَاءَهُمْ أَوْ أَبْنَاءَهُمْ أَوْ إِخْوَانَهُمْ أَوْ عَشِيرَتَهُمْ أُولَٰئِكَ كَتَبَ فِي قُلُوبِهِمُ الْإِيمَانَ وَأَيَّدَهُمْ بِرُوحٍ مِنْهُ وَيُدْخِلُهُمْ جَنَّاتٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا رَضِيَ اللهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ أُولَٰئِكَ حِزْبُ اللهِ أَلَا إِنَّ حِزْبَ اللهِ هُمُ الْمُفْلِحُونَ○

(நபியே!) எந்த மக்கள் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் (மெய்யாகவே) நம்பிக்கை கொண்டிருக்கின்றார்களோ அவர்கள், எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்பவர்களாக இருக்கின்றார்களோ (அவர்களை நேசிக்க மாட்டார்கள்.) அவர்கள், தங்களுடைய பெற்றோர்களாக இருந்த போதிலும், அல்லது தங்களுடைய சந்ததிகளாக இருந்தபோதிலும், அல்லது தங்களுடைய சகோதரர்களாக இருந்தபோதிலும், அல்லது தங்களுடைய நெருங்கிய உறவினர்களாக இருந்தபோதிலும், அவர்களுடன் நேசம் கொண்டு உறவாடுவதை நீங்கள் காண மாட்டீர்கள். இவர்களுடைய உள்ளங்களில் அல்லாஹ் நம்பிக்கையை பதிய வைத்துத் தன்னுடைய அருளைக் கொண்டும் இவர்களைப் பலப்படுத்தி வைத்திருக்கின்றான். தொடர்ந்து நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதிகளிலும் இவர்களைப் புகுத்தி விடுவான். அதில் என்றென்றும் இவர்கள் தங்கிவிடுவார்கள். இவர்களைப் பற்றி அல்லாஹ் திருப்தியடைவான். அவர்களும் அல்லாஹ்வைப் பற்றித் திருப்தியடைவார்கள். இவர்கள்தாம் அல்லாஹ்வின் கூட்டத்தினர். நிச்சயமாக அல்லாஹ்வின் கூட்டத்தினர்தாம் வெற்றி அடைந்தவர்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். (அல்குர்ஆன் 58 : 22)

அல்லாஹ்வின் மார்க்கத்தில் அல்லாஹ்வின் அன்புக்கு அடுத்ததாக அவனது தூதரின் அன்பு இடம்பெறுகிறது. ஒருவர் அல்லாஹ்வை

நேசிப்பவராகவும் அவன் மீது அன்புள்ளவராகவும் இருந்தால் அவர் கண்டிப்பாக அல்லாஹ்வின் தூதர் மீது அன்பும் நேசமும் வைக்க வேண்டும். அந்த அன்பு உலகத்தில் யார் மீதும் வைக்கப்படுகிற அன்பை பார்க்கிலும் அதிகமாகவும் ஒப்பிட முடியாததாகவும் இருக்க வேண்டும்.

இது குறித்து சில ஹதீஸ்களை கவனிப்போம்:

ثَلَاثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلَاوَةَ الْإِيمَانِ أَنْ يَكُونَ اللهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لَا يُحِبُّهُ إِلَّا لِلهِ وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الْكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மூன்று தன்மைகள் யாரிடம் இருக்குமோ அவர் ஈமானின் சுவையை பெறுவார்: அல்லாஹ்வும் ரஸூலும் அவர்கள் அல்லாத அனைவரையும் விட அவருக்கு மிக விருப்பமானவர்களாக இருக்க வேண்டும்; அவர் யாரை நேசித்தாலும் அல்லாஹ்விற்காகவே நேசிக்க வேண்டும்; நெருப்பில் தான் போடப்படுவதை வெறுப்பது போன்று தான் குஃப்ரில் திரும்புவதை அவர் வெறுக்க வேண்டும்.[19]

பிறகு அல்லாஹ்வும் அவனது ரஸூலும் யாரை நேசிக்கிறார்களோ, எதை நேசிக்கிறார்களோ அவர்களை நேசிக்க வேண்டும்.

இப்படியாக ஒரு முஃமின் தனது இணையில்லா ஈமானிய அன்பை அல்லாஹ்வின் மீது வைத்து, அதை அடியான் அதிகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ்வின் அன்புக்காக அடியான் ஏங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் இப்போது நம்மோடு வாழவில்லை என்றாலும் நாம் அவர்களை நேசிக்க வேண்டும்; அவர்கள் மீது அன்பு வைக்க வேண்டும்; நமது பெற்றோர், பிள்ளைகளை விட நபியவர்கள் நமக்கு அதிகம் பிரியத்திற்குரியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ்விடம் அவனுடைய அன்பை கேட்டு துஆ செய்வது போன்று அவனுடைய தூதரின் அன்பு நமக்கு கிடைப்பதற்கு நாம் துஆ செய்ய வேண்டும்.

لَا يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّىٰ أَكُونَ أَحَبَّ إِلَيْهِ مِنْ وَالِدِهِ وَوَلَدِهِ وَالنَّاسِ أَجْمَعِينَ

19. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 16.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் யாரும் முஃமினாக ஆக முடியாது, நான் அவருக்கு அவரின் தந்தை, இன்னும் அவரின் பிள்ளைகள், இன்னும் மக்கள் எல்லோரையும் விட மிக பிரியத்திற்குரியவனாக ஆகின்ற வரை.[20]

இப்படியாக அல்லாஹ்வின் மீது அன்பு, அவனது தூதரின் மீது அன்பு, நபியின் தோழர்கள் மீது அன்பு, மார்க்கத்தின் மீது அன்பு, நல்லோர், சான்றோர் மீது அன்பு என்று அடியான் இந்த அன்புகளைக் கொண்டு தனது உள்ளத்தை நிரப்பி வைக்க வேண்டும்.

இதற்குப் பிறகு உலகத்தில் நமது அன்பை நாம் யார் மீது வைக்கிறோம், நாம் யாரை நேசிக்கிறோம் என்பதை அறிந்து செயல்பட வேண்டும். அன்பில், நட்பில் முதலாவதாக நமது இரத்த உறவுகள், சொந்தங்கள், தூரத்து உறவினர்கள் வருவார்கள்.

இப்படியாக நாம் யாரோடு பழகுகிறோம், யாரோடு நெருக்கமாக இருக்கிறோம் என்பதை கவனித்து அந்த அன்பை நாம் வைக்க வேண்டும்.

ஒருவர் மீது அன்பு வைக்கும் போது அந்த அன்பு அல்லாஹ்வின் சட்டங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். அல்லாஹ்வின் சட்டங்களை மீற அந்த அன்பு வழி ஏற்படுத்திவிடக் கூடாது. ஒருவர் மீது நாம் வைக்கும் அன்பு அவரையும் நம்மையும் அல்லாஹ்வின் மார்க்கத்தை பின்பற்ற தூண்டவேண்டுமே தவிர அல்லாஹ்வின் மார்க்கத்தை மீற தூண்டிவிடக் கூடாது.

அன்பு ஈமானின் அடிப்படையிலும் தக்வாவின் அடிப்படையிலும் இருக்க வேண்டும். ஒருவர் மீது கண்மூடித்தனமான அன்பு வைத்து அவர் செய்கிற பாவங்களுக்கு நாம் துணைப்போய் விடக் கூடாது. அல்லது அவரின் தவறான செயல்களால் நாம் பாதிக்கப்பட்டு, அந்த தவறான செயல்களுக்கு நாம் பழக்கமாகி விடக் கூடாது. ஒருவரின் அன்பு, அல்லது அவர் மீதுள்ள மரியாதை, பிரியம் நம்மை வழிகேட்டில் இழுத்துச் சென்று விடக் கூடாது.

அதுபோன்று ஒருவர் மீது அதிகம் அன்பு வைத்து சதா எப்போதும் அவரையே நினைத்துக்கொண்டு இருப்பது, அவரைப் பற்றியே யோசிப்பது, அவர் என்னிடம் பேசிக்கொண்டே இருக்க வேண்டும், நாம் அவரிடம் பேசிக்கொண்டே இருக்க வேண்டும், அவர் எனக்கு மட்டும்தான், நான்தான் அவருக்கு என்று அன்பு பைத்தியமாக மாறிவிடக் கூடாது.

20. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 15.

அன்பு, நமது மூளையை சிறைப்பிடித்து விடக் கூடாது.

அன்பு, நம்மை அடிமையாக்கி விடக் கூடாது.

அன்பு, நம்மை நாமே அதில் இழக்கும்படி செய்துவிடக் கூடாது.

அன்பு, நாம் நம்மையே அழித்துக் கொள்ளும்படி செய்து விடக் கூடாது.

அன்பு, நமக்குள் நல்ல மாற்றங்களை கொண்டு வரவேண்டுமே தவிர நம்மை பைத்தியமாய் அலையவிட்டு விடக் கூடாது.

உலகில் யார் மீதும் அன்பு அளவோடு இருக்க வேண்டுமே தவிர அளவு கடந்து போய்விடக் கூடாது. இனிப்பு சுவையாக இருந்தாலும் அளவோடுதான் இருக்க வேண்டும். இல்லையேல் திகட்டி விடும். பிறகு ஒரு கட்டத்தில் அதை நெருங்க முடியாமல் போய்விடும்.

நமது அன்பு ஒருவருக்கு தொல்லையாக மாறும் அளவிற்கு போய்விடக்கூடாது.

அன்பு, அறிவை மழுங்கச் செய்யும் அளவிற்கு எல்லை கடந்து போய்விடக் கூடாது.

அன்பை அழகாக, கண்ணியமாக, அடக்கமாக, நிதானமாக வெளிப்படுத்த வேண்டும். மிருகங்கள் போன்று வெளிப்படுத்தக் கூடாது. ஒரு நாய் தனது எஜமானர் மீது அன்பு வைக்கும்போது அவரை அது பார்த்துவிட்டால் எப்படி நடந்து கொள்கிறது என்பதை இங்கு இதற்கு உதாரணமாக சொல்லலாம்.

மனிதர்களின் அன்பு மிக வித்தியாசமானது. அதை பார்வையால் வெளிப்படுத்தலாம், அழகிய சொற்களால் வெளிப்படுத்தலாம், கண்ணியம் கலந்த சைகைகளால், பணிவுடன் கூடிய பணிவிடைகளால் அன்பை வெளிப்படுத்தலாம்.

உறவுக்கு ஏற்ப அன்பை வெளிப்படுத்த இலக்கணம் உண்டு.

பெற்றோர், பிள்ளைகள், கணவன், மனைவி, நண்பர்கள் என்று அன்பை வெளிப்படுத்தும் அடிப்படைகள் மாறுபடலாம்.

அல்லாஹ்வின் மார்க்கத்தை கற்று தெளிவடையும் போது அன்பை நமது கட்டுக்குள் வைப்பது எளிது.

பலர் அளவு கடந்து அன்பு வைத்து அழிந்து போனார்கள் என்பதை இமாம் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்.

இதற்கு பல விளக்கம் உள்ளது.

முற்காலத்தில் நமது சான்றோராகிய நான்கு இமாம்கள் மீது அன்பு வைத்து அதில் அளவு கடந்து சென்று சிலர் வழிகெட்டனர். அந்த இமாம்களை புகழ்ந்து பொய்யான ஹதீஸ்களை இட்டுக்கட்டினர். ஒரு மத்ஹபை சார்ந்தவர் பிற மத்ஹபுடைய இமாம்களை இகழ்ந்து ஹதீஸ்களை இட்டுக்கட்டினர். இன்னும் தங்கள் மத்ஹபுடைய சட்டங்களை வலுப்படுத்த பல பொய்யான ஹதீஸ்களை இட்டுக்கட்டினர்.

சூஃபி கொள்கையை சேர்ந்தவர்கள் இதில் அளவு கடந்து சென்றனர். வழிகெட்ட கொள்கையை சேர்ந்த ஒவ்வொரு பிரிவினரும் இதே பாணியில் இருந்தனர். தங்கள் குருமார்களை, இமாம்களை நேசிக்கிறோம் என்ற பெயரில் அவர்களை அளவு கடந்து புகழ்வது, அவர்களின் தவறுகளை சரி காணுவது; நபி ﷺ அவர்களை விட, அவர்களின் தோழர்களை விட தங்கள் இமாம்களை, ஷைகுமார்களை உயர்த்துவது; புகழ்வது; இன்னும் இதுபோன்ற வழிகேடுகளில் வீழ்ந்து நாசமாகினர்.

ஆகவே, இமாம் அவர்கள் கூறும் அறிவுரையின் சாராம்சம் இதுவே. அன்பு அறிவு கண்ணை மறைத்து விடக் கூடாது. அன்பு வழிகேட்டை அடிப்படையாக வைத்து இருக்கக்கூடாது. அன்பு மார்க்க சட்டங்களை அனுசரித்து இருக்க வேண்டும். ஒருவரை நேசித்துவிட்டோம் என்பதற்காக அவரின் தவறுகளை வழிகேடுகளை நாம் சரிகண்டுவிடக் கூடாது. அது எப்போது சாத்தியம் என்றால் அன்பு மிதமான அளவாக இருக்க வேண்டும். படைப்புகளை நேசிப்பதில், மனிதர்கள் மீது அன்பு வைப்பதில் அளவுகடக்கும்போது அது அழிவில் அல்லது வழிகேட்டில் தள்ளிவிடும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

அல்லாஹ்வே! யாருடைய அன்பிலும் நேசத்திலும் நாங்கள் வழிகெடும்படி செய்து விடாதே! எந்த அன்பு மறுமையின் வெற்றிக்கு காரணமாக இருக்குமோ அந்த அன்பை எங்களுக்கு தா! நேர்வழியின் அன்பை எங்களுக்கு கொடுப்பாயாக. வழிகேட்டின் அன்பிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக. ஆமீன்!

• • •

## அவசியப்பட்டால் அளவோடு வெறுத்துக்கொள்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَحْمَدُ بْنُ حُمَيْدٍ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ الْمُبَارَكِ حَدَّثَنَا مَعْمَرٌ عَنْ يَحْيَى بْنِ الْمُخْتَارِ عَنِ الْحَسَنِ قَالَ أَحِبُّوا هَوْنًا وَأَبْغِضُوا هَوْنًا فَقَدْ أَفْرَطَ أَقْوَامٌ فِي حُبِّ أَقْوَامٍ فَهَلَكُوا وَأَفْرَطَ أَقْوَامٌ فِي بُغْضِ أَقْوَامٍ فَهَلَكُوا لَا تُفْرِطْ فِي حُبٍّ وَلَا تُفْرِطْ فِي بُغْضٍ

இமாம் ஹஸன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: மிதமாக நேசம் வையுங்கள்! மிதமாக வெறுப்பு காட்டுங்கள்! சில மக்கள், சில மக்களை நேசிப்பதில் மிதமிஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் நாசமானார்கள். சில மக்கள், சில மக்களை வெறுப்பதில் மிதமிஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் நாசமானார்கள். நேசம் பாராட்டுவதிலும் நீ மிதமிஞ்சாதே! வெறுப்பு காட்டுவதிலும் நீ மிதமிஞ்சாதே!

**விளக்கம்:** இந்த கூற்றுக்கு நாம் முன் சென்ற இரு அமர்வுகளில் கூறிய விளக்கம் அன்பு தொடர்பானது. அன்பை பற்றி எழுத இன்னும் அதிகம் இருந்தாலும் இது வரை நாம் விளக்கியதில் போதுமான தெளிவு இன் ஷா அல்லாஹ் கிடைத்திருக்கும்.

ஆகவே, இப்போது இந்த அமர்வில் வெறுப்பைப் பற்றி சிறிது பார்ப்போம்.

அன்பு என்பது ஓர் குளிர்ந்த நீர் என்றால் வெறுப்பு என்பது அனல் கக்கும் நெருப்பாகும்.

அன்பு என்பது காலை அல்லது மாலை நேர தென்றல் என்றால் வெறுப்பு என்பது உக்கிரமான கோடைக் காலத்தில் மதிய நேர அனல் கலந்த புயல் என்று சொல்லலாம்.

அன்பு உள்ளத்திற்கும் உடலுக்கும் மருந்து என்றால் வெறுப்பு என்பது உள்ளத்தையும் உடலையும் கெடுக்கும் நோய் என்று சொல்லலாம்.

அன்பு அரவணைக்கக் கூடியது. வெறுப்பு உறவை வெட்டி துண்டாக்கி விடக்கூடியது.

அன்பு மருந்து என்றால் வெறுப்பை விஷம் என்று சொல்லலாம்.

அன்பினால் இலகுவாக எல்லோருடைய உள்ளத்தையும் வென்றுவிடலாம். வெறுப்பினால் நம்மவர்களைக் கூட இழந்துவிடுகிறோம்.

அன்புக்கு எல்லாம் அடிமையாகிவிடும். வெறுப்பினால் அடிமை கூட எதிரியாகிவிடுவான்.

அன்பைக் கொண்டு எல்லோரையும் வாங்கிவிடலாம். வெறுப்பினால் உடன் இருப்பவர்களையும் இழக்க நேரிடும்.

வெறுப்பு கணவன் மனைவியை பிரித்துவிடும்.

வெறுப்பு பெற்றோர் பிள்ளைகளை பிரித்துவிடும்.

வெறுப்பு உறவுகளை பகைவர்களாக மாற்றி விடும்.

வெறுப்பு சொந்தங்களை எதிரிகளாக ஆக்கிவிடும்.

வெறுப்பு உற்ற நண்பர்களின் நட்பை துண்டித்து விடும்.

வெறுப்பு சமுதாயங்களுக்குள் சண்டைத் தீயை மூட்டிவிடும்.

வெறுப்பு விஷச் செடிகளைப் போன்றாகும். அவற்றை சமுதாயம் என்ற சோலையிலிருந்து முற்றிலுமாக துடைத்தெறிய வேண்டும்.

வெறுப்பு சில சமயம் அவசியமாகிவிடுகிறது. ஆம், அந்த வெறுப்பு அல்லாஹ்விற்காக, மார்க்கத்திற்காக இருக்க வேண்டும். அப்போது அந்த வெறுப்புக்காகவும் அடியானுக்கு நன்மை கிடைக்கிறது.

சுய விருப்பத்திற்காக வெறுப்பு சில நேரங்களில் மனிதனிடம் அவனை அறியாமல், அவன் தன்னை கட்டுப்படுத்த முடியாமல் வந்துவிடுகிறது. அப்போது அந்த வெறுப்புக்கு மனிதன் அடிமையாகிவிடக் கூடாது. அந்த வெறுப்பில் சிக்கிய மனம், அது எதை எல்லாம் சொல்கிறதோ அதை மனிதன் செயல்படுத்தக் கூடாது.

வெறுப்பில் ஓர் எல்லையோடு நின்றுவிட வேண்டும்.

வெறுப்பு நமது உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சியை தூண்டும் அளவு வளர்ந்து விடக் கூடாது.

வெறுப்பினால் நமது சுய அறிவையும் சிந்தனையையும் நாம் இழந்து விடக் கூடாது.

வெறுப்பு அற்ப உணர்ச்சிகளுக்கு நம்மை அடிமையாக்கி விடக் கூடாது.

வெறுப்பு நல்லதையும் கெட்டதையும் நம்மால் பிரித்துப்பார்க்க முடியாத அளவிற்கு நம்மை நிதானம் இழக்க செய்யக் கூடாது.

வெறுப்பு ஒரு நல்லவரை நம்மை விட்டுப் பிரித்து விடக் கூடாது.

வெறுப்பு ஒருவரின் நன்மையை நமது கண்களை விட்டும் மறைத்து அவரின் குறைகளை மட்டும் நமக்கு வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது.

வெறுப்பு நன்மைக்காக இருக்க வேண்டும். நன்மையின் மீது இருக்கக் கூடாது.

வெறுப்பு அல்லாஹ்வின் மார்க்கச் சட்ட வரம்புக்குள் இருக்க வேண்டும்.

ஒருவரை வெறுக்கும்போது, அல்லது ஒன்றை நாம் வெறுக்கும்போது நமது நஃப்ஸுக்காக வெறுக்கிறோமா அல்லது அல்லாஹ்விற்காகவா என்று நாம் சுய பரிசோதனை செய்ய வேண்டும்.

மனிதர்களை நேசிப்பதில் நமது நஃப்ஸுக்கு நாம் கடிவாளம் இடுவது அவசியமாக இருப்பது போன்றே நஃப்ஸுடைய வெறுப்புக்கும் நாம் கடிவாளம் இட வேண்டும்.

ஒருவரை அவரின் தோற்றத்திற்காக, அவரின் ஊருக்காக, அவரின் நிறத்திற்காக, அவரின் மொழிக்காக, அவரின் வமிசத்திற்காக, இப்படி உலக விஷயங்களில் அவருக்கு உரிமை இல்லாத ஒன்றுக்காக வெறுப்பதை இஸ்லாம் வெறுக்கிறது.

ஒருவரின் கெட்ட குணம், ஒருவரின் பாவம், ஒருவரின் கெட்ட கொள்கை, ஒருவரின் தீய நடத்தை, ஒருவரின் மார்க்கப் பற்றின்மை, ஒருவரின் இஸ்லாமிய எதிர்ப்பு என மார்க்கம் சார்ந்த காரணங்கள்தான் உண்மையில் நியாயமானவையாகும் ஒருவரை வெறுப்பதற்கு.

அப்படி வெறுக்கும்போதும் நாம் அவர் மீது அத்துமீறி விடக் கூடாது. அவரின் உரிமைகளில் வரம்பு மீறி விடக் கூடாது. அவர் மீது அநியாயம் செய்து விடக் கூடாது.

இதை அல்குர்ஆன் அழகாக நமக்கு கற்றுத்தருகிறது:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ لِلَّهِ شُهَدَاءَ بِالْقِسْطِ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ قَوْمٍ عَلَىٰ أَلَّا تَعْدِلُوا اعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ وَاتَّقُوا اللَّهَ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ ○

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்காக நீதமாக (உண்மை) சாட்சி சொல்பவர்களாகவே இருங்கள். ஒரு வகுப்பார் மீது (உங்களுக்கு)ள்ள துவேஷம் அவர்களுக்கு அநியாயம் செய்யும்படி உங்களைத் தூண்டாதிருக்கட்டும். (எவ்வளவு குரோதமிருந்த போதிலும்) நீங்கள் நீதியே செலுத்துங்கள். அதுதான் பரிசுத்தத் தன்மைக்கு மிக நெருங்கியது. (எத்தகைய சந்தர்ப்பங்களிலும்) நீங்கள் அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 5 : 8)

இஸ்லாமிய மார்க்கம் நடுநிலைப் பேணுதல், நீதம் பேணுதல், மனிதம் பேணுதல், சகோதரத்துவம் பேணுதல் இன்னும் இதுபோன்ற சமூக நீதிகளையும் நெறிகளையும் அடிப்படைகளாக கொண்டதாகும். இந்த அடிப்படைகளுக்கு முரண்பட்ட ஏதும் இஸ்லாமிய மார்க்கத்தில் இல்லை. இந்த அடிப்படைகளுக்கு மாறுபடுபவர்கள் யாரும் இஸ்லாமிய மார்க்கத்தின் பிள்ளைகளாக இருக்க முடியாது. அவர் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பிக்கை கொள்வதில் மிகவும் பலவீனமானவர் அல்லது போலியானவர் ஆவார்.

இங்கே நபி ﷺ அவர்களின் நிகழ்வு நமக்கு மிகவும் படிப்பினை நிறைந்ததாகும்.

اسْتَأْذَنَ رَجُلٌ عَلَى رَسولِ اللهِ ﷺ فَقَالَ ائْذَنُوا لَهُ بِئْسَ أَخُو الْعَشِيرَةِ أَوِ ابْنُ الْعَشِيرَةِ فَلَمَّا دَخَلَ أَلَانَ لَهُ الْكَلَامَ قُلتُ يا رَسُولَ اللهِ قُلْتَ الَّذِي قُلْتَ ثُمَّ أَلَنْتَ لَهُ الْكَلَامَ قَالَ أَيْ عَائِشَةُ إِنَّ شَرَّ النَّاسِ مَنْ تَرَكَهُ النَّاسُ أَوْ وَدَعَهُ النَّاسُ اتِّقَاءَ فُحْشِهِ

ஒருவர் நபி ﷺ அவர்களிடம் உள்ளே வர அனுமதி கோரினார். அவருக்கு அனுமதி கொடுங்கள் - உள்ளே வர சொல்லுங்கள், அவர் அந்த குடும்பத்தில் கெட்டவர் என்று நபியவர்கள் கூறினார்கள். அவர் உள்ளே வந்தவுடன் அவருடன் மிக மென்மையாக பேசினார்கள். நான் கேட்டேன், அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிட்டு, பிறகு அவருடன் மென்மையாகவும் பேசினீர்களே! அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: ஆயிஷாவே! எந்த ஒரு மனிதனின் அசிங்கமான (-கெட்ட) செயலை பயந்து அவனை மக்கள் முற்றிலுமாக விட்டுவிடுகிறார்களோ அவன்தான் மக்களில் மிக தீயவன்.[21]

21. அறிவிப்பாளர்: ஆயிஷா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6054.

ஒருவரை வெறுப்பதற்கு பொருள் அவரிடம் சண்டை செய்ய வேண்டும் என்பதல்ல.

ஒருவரை வெறுப்பதற்கு அடையாளம் அவரிடம் கடினமாக, முரட்டுத்தனமாக பேச வேண்டும் என்பதல்ல.

ஒருவரை வெறுப்பது என்பது அவரை விட்டும் முற்றிலும் ஒதுங்கிவிடுவது என்பது அல்ல, அல்லது அவரை ஒதுக்கி வைப்பது என்பது அல்ல.

ஒருவரை வெறுப்பதால் அவரை பகைவராக்க வேண்டும் என்பதல்ல.

ஒருவரை வெறுப்பதால் அவரின் உண்மைகளை மறுக்க வேண்டும் என்பதல்ல.

ஒருவரை வெறுப்பதால் அவரிடம் உள்ள நன்மைகளைக் கொண்டு பலன் பெறுவது கூடாது என்பதல்ல.

ஒருவரை வெறுத்தால் அவரிடம் பேசவே கூடாது, அவரின் உறவை உடனே துண்டித்து விட வேண்டும் என்பதல்ல.

ஒருவரை வெறுப்பதால் அவர் மீது பழி போட வேண்டும், அவர் செய்யாத குற்றங்களை அவர் மீது சுமத்த வேண்டும் என்பதல்ல.

ஒருவரை வெறுப்பதால் அவர் மீது அவர் செய்யாத செயல்களை எறிய வேண்டும் என்பதல்ல.

ஒருவரை வெறுப்பதால் அவர் சார்ந்த சமூகத்தை, அவரின் இனத்தை, அவரின் சந்ததிகளை, அவரின் உறவினர்களை வெறுக்க வேண்டும் என்பது மடத்தனமாகும்.

இத்தகைய இழி பண்புகளுக்கு இஸ்லாமில் இடமில்லை.

இதைத்தான் இமாம் ஹசன் அவர்கள் இப்படி அழகாக நமக்கு கற்பிக்கிறார்கள்:

أَحِبُّوا هَوْنًا وَأَبْغِضُوا هَوْنًا فَقَدَ أَفْرَطَ أَقْوَامٌ فِي حُبِّ أَقْوَامٍ فَهَلَكُوا وَأَفْرَطَ أَقْوَامٌ فِي بُغْضِ أَقْوَامٍ فَهَلَكُوا لَا تُفْرِطْ فِي حُبٍّ وَلَا تُفْرِطْ فِي بُغْضٍ

இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: மிதமாக நேசம் வையுங்கள்! மிதமாக வெறுப்பு காட்டுங்கள்! சில மக்கள், சில மக்களை நேசிப்பதில் மிதமிஞ்

சினார்கள். ஆகவே, அவர்கள் நாசமானார்கள். சில மக்கள், சில மக்களை வெறுப்பதில் மிதமிஞ்சினார்கள். ஆகவே, அவர்கள் நாசமானார்கள். நேசம் பாராட்டுவதிலும் நீ மிதமிஞ்சாதே! வெறுப்பு காட்டுவதிலும் நீ மிதமிஞ்சாதே!

தங்களது இமாமை அளவு கடந்து நேசித்து, பிற மத்ஹபுகளின் இமாம்களை அளவு கடந்து வெறுத்து இந்த உம்மத்தில் பல ஆயிரம் பேர் சத்தியத்தை விட்டும், உண்மைகளை விட்டும், நேர்வழிகளை விட்டும் விலகி சென்றுவிட்டனர்.

கண்மூடித்தனமான வெறுப்பினால் எத்தனை தலைகள் வரலாற்றில் சீவப்பட்டுள்ளன.

மூர்க்கத்தனமான வெறுப்பினால். எத்தனை அப்பாவிகளின் உயிர்கள் வரலாற்றில் பறிக்கப்பட்டுள்ளன.

அர்த்தமற்ற வெறுப்பினால் எத்தனை இனங்கள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

அடிப்படையற்ற வெறுப்பினால் எத்தனை தகுதியானவர்கள் தங்கள் பணியை இழந்துள்ளனர்.

நேர்மையற்ற வெறுப்பினால் எத்தனை சமுதாயத்தின் உயிர்களும் உடமைகளும் பிற சமுதாயத்தால் சூறையாடப்பட்டுள்ளன.

இத்தகைய வெறுப்பு அரசனிடம் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் மிக ஆபத்தாக ஆகிவிடும்.

இத்தகைய வெறுப்பு ஒரு மந்திரியிடம் இருக்கக் கூடாது. அது அரசுக்கு மிகப் பெரிய அவமானத்தை ஏற்படுத்தி விடும்.

இத்தகைய வெறுப்பு ஒரு நீதிபதியிடம் இருக்கக் கூடாது. அப்படி இருந்து அது அவரின் அநீதியான தீர்ப்புக்கு காரணமாக ஆகிவிட்டால் அந்த நாட்டின் மீது இறைவனின் சாபம் இறங்க அதுவே போதுமானதாகும்.

இத்தகைய வெறுப்பு பெற்றோர், பிள்ளைகள், உடன் பிறப்புகள் என யாரிடமும் யார் மீதும் இருந்துவிடக் கூடாது.

இத்தகைய வெறுப்பு ஒரு சமுதாயத்திற்கு மற்ற சமுதாயத்தின் மீது வந்துவிடக் கூடாது. அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

இறுதியாக உமர் ﷺ அவர்களின் கூற்றை பதிவு செய்து நிறைவு செய்வோம்:

عَنْ عُمَرَ بْنِ الْـخَطَّابِ ﵁ قَالَ لَا يَكُنْ حُبُّكَ كَلَفًا وَلَا بُغضُكَ تَلَفًا فَقُلْتُ كَيْفَ ذَاكَ قَالَ إِذَا أَحْبَبْتَ كَلِفْتَ كَلَفَ الصَّبِيِّ وَإِذَا أَبْغَضْتَ أَحْبَبْتَ لِصَاحِبِكَ التَّلَفَ

உமர் ﵁ அவர்கள் கூறினார்கள்: உனது அன்பு ஒட்டிக்கொள்ளும் பாசமாக மாறிவிட வேண்டாம். உனது வெறுப்பு அழிவாக மாறிவிட வேண்டாம். இந்த செய்தியின் அறிவிப்பாளர் கூறுகிறார்: அது எப்படி என்று நான் கேட்டேன். அவர்கள் கூறினார்கள்: அதாவது, நீ (ஒருவர் மீது) அதிகம் அன்பு வைத்தால் சிறு குழந்தை பாசத்தால் ஒட்டிக்கொள்வதைப்போன்று அவரிடம் ஒட்டிக் கொள்வதாகும். (அவரை விட்டு நீ பிரிய முடியாமல் ஆகிவிடுவதாகும்.) நீ ஒருவரை வெறுத்தால் நீ வெறுப்பவருக்கு அழிவை விரும்புவதாகும். (அதாவது, நீ யாரை வெறுக்கிறாயோ அவர் அழிந்து விட வேண்டும், நாசமாகிவிட வேண்டும் என்று நீ விரும்புவதாகும்.)[22]

சுருக்கம்: நமது அன்பை அல்லாஹு தஆலாவின் மீதும் அவனது ரஸூல் ﷺ அவர்கள் மீதும் அதிகப்படுத்த வேண்டும். முன் சென்ற சான்றோர் மீது நமது அன்பு அதிகமாக வேண்டும். நமது உறவுகளை அவரவரின் உறவுமுறைக்கு ஏற்ப நேசிக்க வேண்டும். வெறுப்பை மார்க்கம் அனுமதித்த காரணங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். மார்க்கம் கூறிய வரையறைக்குள் வெறுப்பை அடக்கி வைக்க வேண்டும். வெறுப்பு காழ்ப்புணர்ச்சிக்கு காரணமாக மாறி விடக் கூடாது!

அல்லாஹ்வே! எங்கள் ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் எங்களுக்கு வழிகாட்டு! எங்களை உனக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களாக கட்டுப்பட்டவர்களாக பணிந்தவர்களாக ஆக்குவாயாக! எல்லா வகையான வழிகேடுகளை விட்டும் வரம்புமீறுதல்களை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்!

• • •

22. அறிவிப்பாளர்: அஸ்லம் அல்ஹபஷி ﵀, நூல்: அல்அதபுல் முஃப்ரத், தரம்: ஸஹீஹ் - அல்பானி.

## அல்லாஹ்விற்காகவா, அல்லது மக்களுக்காகவா!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا صَالِحُ بْنُ عَبْدِ اللهِ حَدَّثَنَا أَبُو أُسَامَةَ عَنِ الرَّبِيعِ بْنِ صُبَيْحٍ قَالَ كُنَّا عِنْدَ الْحَسَنِ جُلُوسًا فَوَعَظَ فَانْتَحَبَ رَجُلٌ فَقَالَ الْحَسَنُ أَمَا وَاللهِ لَيَسْأَلَنَّكَ اللهُ عَزَّ وَجَلَّ يَوْمَ الْقِيَامَةِ مَا أَرَدْتَ بِهٰذَا

நாங்கள் இமாம் ஹசன் ﵀ அவர்களிடம் அமர்ந்திருந்தோம். அவர்கள் (எங்களுக்கு) உபதேசம் செய்தார்கள். அப்போது ஒருவர் சப்தமாக கதறி அழுதார். உடனே இமாம் ஹசன் ﵀ அவர்கள் கூறினார்கள்: அறிந்து கொள்! அல்லாஹ்வின் மீது ஆணையாக கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ் உன்னிடம் மறுமையில் கேள்வி கேட்பான், நீ இந்த அழுகையைக் கொண்டு என்ன நாடினாய் என்று?

**விளக்கம்:** இமாம் ஹசன் ﵀ அவர்களுக்கும் நல்லோர் எல்லோருக்கும் அல்லாஹ் கருணை புரிவானாக! ஆமீன். அவர்களின் வாழ்க்கையில்தான் நமக்கு எத்தனை படிப்பினைகள், பாடங்கள்.

பொதுவாக இமாம் ஹசன் ﵀ அவர்களின் சபை மறுமை குறித்த கவலைகள், பேச்சுகள் நிறைந்ததாக இருக்கும். உள்ளம் பண்பட்டவர்களின் உபதேசங்களை கேட்பது பெரும் பாக்கியம் அல்லவா!? சொல் மட்டுமில்லாமல், செயலும் சேர்ந்து இருக்கின்ற ஓர் உபன்யாசி நமக்கு உபதேசம் வழங்கினால், வார்த்தைகளை மட்டும் அறிவிக்காமல், உள் கருத்துக்களையும் நமக்கு அவர் உணர வைத்தால், குர்ஆன், சுன்னாவிலிருந்து நமக்கு தேவையானதை, நமது உயிரையும் உள்ளத்தையும் உருக்கி நம்மை பண்படுத்தக்கூடியதைக் கொண்டு நமக்கு அறிவுரை வழங்கினால் கண்டிப்பாக அந்த அறிவுரை உள்ளங்களில் மாற்றத்தையும் வரவழைக்கும்; கண்களில் கண்ணீரை கொட்ட வைக்கும்.

நபியவர்களின் சபையில் நபித்தோழர்கள் நபியவர்களின் உபதேசங்களை கேட்டு அழுதார்கள். குர்ஆன் கூறும் உபதேசங்களை செவியுற்று அந்த சான்றோர் கண்ணீர் சிந்தினார்கள்.

உள்ளங்களை புரட்டிபோடும் உபதேசங்களை செய்வீராக என்று அல்குர்ஆன் நபி ﷺ அவர்களுக்கு பல இடங்களில் கட்டளை இடுவதை நாம் பார்க்க முடியும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَعِظْهُمْ وَقُلْ لَهُمْ فِي أَنْفُسِهِمْ قَوْلًا بَلِيغًا○

அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள். அன்றி, அவர்களுக்கு மனதில் படும்படித் தெளிவாக எடுத்துக் கூறுங்கள். (அல்குர்ஆன் 4 : 63)

فَذَكِّرْ بِالْقُرْآنِ مَنْ يَخَافُ وَعِيدِ○

எனது வேதனையைப் பயப்படுபவர்களுக்கு இந்தக் குர்ஆனைக் கொண்டு நீங்கள் நல்லுபதேசம் செய்வீர்களாக! (அல்குர்ஆன் 50 : 45)

وَأَنْذِرْ بِهِ الَّذِينَ يَخَافُونَ أَنْ يُحْشَرُوا إِلَىٰ رَبِّهِمْ○

(நபியே!) எவர்கள், "(மறுமையில்) தங்கள் இறைவனிடம் (விசாரணைக்காகக்) கொண்டு போகப்படுவோம்" என்று பயப்படுகின்றார்களோ அவர்களை நீங்கள் எச்சரிக்கை செய்யுங்கள். (அல்குர்ஆன் 6 : 51)

وَذَكِّرْ فَإِنَّ الذِّكْرَىٰ تَنْفَعُ الْمُؤْمِنِينَ○

(நபியே!) நீங்கள் நல்லுபதேசம் செய்யுங்கள். நிச்சயமாக நல்லுபதேசம் நம்பிக்கையாளர்களுக்குப் பயனளிக்கும். (அல்குர்ஆன் 51 : 55)

فَذَكِّرْ إِنْ نَفَعَتِ الذِّكْرَىٰ○

ஆகவே, நல்லுபதேசம் (மக்களுக்குப்) பயனளிக்கும் வரையில் நீங்கள் உபதேசித்துக் கொண்டே வாருங்கள். (அல்குர்ஆன் 87 : 9)

இப்படி பல வசனங்களை குர்ஆன் நெடுகிலும் நாம் காண முடியும்.

அல்லாஹ் நமக்கு அறிவுரை கூறுகிறான். அவனது அறிவுரைகளை செவியுற்று அழுபவர்களை அல்லாஹ் புகழ்ந்து நமக்கு அவர்களை முன்னுதாரணமாக கூறுகிறான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَإِذَا سَمِعُوا مَا أُنْزِلَ إِلَى الرَّسُولِ تَرَىٰ أَعْيُنَهُمْ تَفِيضُ مِنَ الدَّمْعِ مِمَّا عَرَفُوا مِنَ الْحَقِّ يَقُولُونَ رَبَّنَا آمَنَّا فَاكْتُبْنَا مَعَ الشَّاهِدِينَ ○

தவிர, (இத்தகையவர்களில் பலர் நம்முடைய) தூதர் மீது அருளப்பட்டவைகளை செவியுற்றால், உண்மையை அவர்கள் உணர்வதன் காரணமாக அவர்களின் கண்கள் (தாரை தாரையாக) கண்ணீர் வடிப்பதைக் காண்பீர்கள். அன்றி "எங்கள் இறைவனே! (இவ்வேதத்தை) நாங்கள் நம்பிக்கை கொண்டோம். ஆகவே, (இவ்வேதம் உண்மையானதென) சாட்சி கூறுபவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக!" என்றும் (பிரார்த்தித்துக்) கூறுகின்றனர். (அல்குர்ஆன் 5 : 83)

أُولَٰئِكَ الَّذِينَ أَنْعَمَ اللَّهُ عَلَيْهِمْ مِنَ النَّبِيِّينَ مِنْ ذُرِّيَّةِ آدَمَ وَمِمَّنْ حَمَلْنَا مَعَ نُوحٍ وَمِنْ ذُرِّيَّةِ إِبْرَاهِيمَ وَإِسْرَائِيلَ وَمِمَّنْ هَدَيْنَا وَاجْتَبَيْنَا إِذَا تُتْلَىٰ عَلَيْهِمْ آيَاتُ الرَّحْمَٰنِ خَرُّوا سُجَّدًا وَبُكِيًّا ○

(ஆகவே, மேற்கூறப்பட்ட) இவர்கள் அனைவரும் அல்லாஹ் அருள் புரிந்த நபிமார்களாவர். இவர்கள் ஆதமுடைய சந்ததியிலும், நூஹ்வுடன் நாம் (கப்பலில்) ஏற்றிக் கொண்டவர்களி(ன் சந்ததியி)லும், இப்ராஹீமுடைய சந்ததியிலும், இஸ்ராயீல் (என்னும் யஃகூப்) உடைய சந்ததியிலும் உள்ளவர்களாவர். அன்றி, நாம் தேர்ந்தெடுத்து நேரான வழியில் நடத்தியவர்களிலும் உள்ளவர்கள். அவர்கள் மீது ரஹ்மானுடைய வசனங்கள் ஓதப்பட்டால் (அதற்குப் பயந்து) அழுதவர்களாக (இறைவனுக்குச்) சிரம் பணிந்து தொழுவார்கள். (அல்குர்ஆன் 19 : 58)

إِنَّ الَّذِينَ أُوتُوا الْعِلْمَ مِنْ قَبْلِهِ إِذَا يُتْلَىٰ عَلَيْهِمْ يَخِرُّونَ لِلْأَذْقَانِ سُجَّدًا ○ وَيَقُولُونَ سُبْحَانَ رَبِّنَا إِنْ كَانَ وَعْدُ رَبِّنَا لَمَفْعُولًا ○ وَيَخِرُّونَ لِلْأَذْقَانِ يَبْكُونَ وَيَزِيدُهُمْ خُشُوعًا ○

நிச்சயமாக இதற்கு முன்னுள்ள (வேதங்களின்) மெய்யான ஞானம் எவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அவர்களிடம் (இவ்வேதம்) ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவர்கள் (இதனை நம்பிக்கை கொண்டு) முகங்குப்புற விழுந்து (எனக்கு) சிரம் பணிவார்கள். அன்றி, (அவர்கள்) "எங்கள் இறைவன் மிகப் பரிசுத்தமானவன். எங்கள் இறைவனின் வாக்குறுதி நிச்சயமாக நிறைவேறி விட்டது" என்றும் கூறுவார்கள். அன்றி, அவர்கள் முகங்குப்புற விழுந்து அழுவார்கள். அவர்களுடைய உள்ளச்சமும் அதிகரிக்கும். (அல்குர்ஆன் 17 : 107-109)

இவ்வாறு அல்லாஹ்வின் வசனங்களை ஓதியும் அவற்றை செவியுற்றும் அல்லாஹ்வை அஞ்சி அழுபவர்களை அல்லாஹ் புகழ்வதிலிருந்து அல்லாஹ்வின் பயத்தால் அழுவதை அல்லாஹ் எவ்வளவு நேசிக்கிறான் என்பதை நாம் புரிய முடியும்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும் அல்லாஹ்வின் அச்சத்தால் அழுவதை ஆர்வமூட்டி பல அறிவுரைகளை நமக்கு வழங்கி இருக்கிறார்கள். அல்லாஹ்வின் அச்சத்தால் அழாத கண்களை விட்டும் நபி ﷺ பாதுகாப்பு தேடியதிலிருந்து அல்லாஹ்வின் அச்சத்தால் அழாமல் இருப்பது நிராகரிப்பின் குணம் என்பதையும் அத்தகையவர்கள் அல்லாஹ்வின் பழிப்புக்கு உரியவர்கள் என்பதையும் நாம் புரிய முடிகிறது.

அல்லாஹ்வின் அச்சத்தால் அழாத மனிதர்களை உள்ளம் இறுகியவர்கள் என்று அல்லாஹ் கடிந்து பேசுகிறான்.

فَوَيْلٌ لِلْقَاسِيَةِ قُلُوبُهُمْ مِنْ ذِكْرِ اللهِ ۝

அல்லாஹ்வை ஞாபகம் செய்வதிலிருந்து விலகி, எவர்களுடைய உள்ளங்கள் கடினமாகி விட்டனவோ அவர்களுக்குக் கேடுதான். (அல்குர்ஆன் 39 : 22)

இது வரை நாம் படித்ததிலிருந்து அல்லாஹ்வின் அச்சத்தால் அழுவதின் சிறப்பை மிகத் தெளிவாக நாம் அறிய முடிகிறது.

அதே சமயத்தில் நாம் அழுவது நமக்கு முகஸ்துதியை ஏற்படுத்தும்படி இருந்து விடக் கூடாது. நம்மால் முடிந்தளவு நமது வணக்க வழிபாடுகளை மறைத்து செய்ய வேண்டும், குறிப்பிட்ட கடமையான சில வணக்க வழிபாடுகளைத் தவிர.

முடிந்தளவு தனிமையிலும், இரகசியமாகவும், மறைவாகவும், இரவின்

நடுநிசியிலும் அல்லாஹ்விற்கும் நமக்கும் மட்டும் தெரியும்படி அழுவது மிக ஏற்றமானதாகும்.

சபையில் அழும்போது முகஸ்துதி ஏற்பட்டுவிட்டால் அதுவே நமது அழிவுக்கு போதுமாகும். அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

ஒரு சபையில் எல்லோரும் அழும்போது நாமும் அழுதால் அங்கு முகஸ்துதி வருவதற்கு வாய்ப்பு குறைவாகும். அப்படி இல்லாமல் எல்லோரும் அமைதியாக இருக்கும்போது நாம் மட்டும் அழுதால், அதுவும் சப்தமாக, வீறிட்டு அழுதால் கண்டிப்பாக அது முகஸ்துதியை ஏற்படுத்தி விடும். பிறர் நம்மை தக்வா உள்ளவர்கள் என்று எண்ணுவார்கள், நம்மை அவர்கள் மதிப்பார்கள் என்ற எண்ணம், எதிர்பார்ப்பு ஏற்பட்டு விடும்.

முகஸ்துதி மிக ஆபத்தான ஒன்றாகும். நல்லோரை ஷைத்தான் வீழ்த்துவதற்கு இந்த முகஸ்துதி - ரியா என்ற ஆயுதத்தையே அதிகம் பயன்படுத்துகிறான்.

நாம் எப்போதும் நமது உள்ளத்தை சுய பரிசோதனை செய்துகொண்டே இருக்க வேண்டும். உள்ளத்தில் முகஸ்துதியின் வேர் முளைத்துவிடாமல் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு அமலை செய்யும்போதும் நாம் இந்த அமலை ஏன் செய்கிறோம், யாருக்காக செய்கிறோம், இந்த அமலைக் கொண்டு என்ன எதிர்பார்க்கிறோம் என்பதை நாம் சரி செய்துகொள்ள வேண்டும்.

இதுகுறித்த சில குர்ஆனிய வழிகாட்டலைப் பார்த்துவிட்டு இமாம் அவர்களின் கண்டிப்புக்குள் இருக்கும் விளக்கத்தைப் பார்ப்போம்.

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ ○

(அன்றி, நபியே!) நீங்கள் கூறுங்கள்: "நிச்சயமாக என்னுடைய தொழுகையும், என்னுடைய (மற்ற) வணக்கங்களும், என் வாழ்வும், என் மரணமும் உலகத்தாரை படைத்து வளர்த்து பரிபக்குவப்படுத்தும் அல்லாஹ்வுக்கே உரித்தானவை." (அல்குர்ஆன் 6 : 162)

مَنْ كَانَ يُرِيدُ الْعَاجِلَةَ عَجَّلْنَا لَهُ فِيهَا مَا نَشَاءُ لِمَنْ نُرِيدُ ثُمَّ جَعَلْنَا لَهُ
جَهَنَّمَ يَصْلَاهَا مَذْمُومًا مَدْحُورًا ○ وَمَنْ أَرَادَ الْآخِرَةَ وَسَعَىٰ لَهَا سَعْيَهَا
وَهُوَ مُؤْمِنٌ فَأُولَٰئِكَ كَانَ سَعْيُهُمْ مَشْكُورًا ○

எவர்கள், (மறுமையைப் புறக்கணித்து விட்டு) இம்மையை மட்டும் விரும்புகிறார்களோ அவர்களில் நாம் நாடியவர்களுக்கு நாம் நாடியதை இம்மையிலேயே கொடுத்து விடுகிறோம். பின்னர், மறுமையில் நரகத்தைத்தான் அவர்களுக்கு தயார்படுத்தி வைத்திருக்கிறோம். அவர்கள் நிந்திக்கப்பட்டவர்களாகவும், சபிக்கப்பட்டவர்களாகவும் அதில் நுழைவார்கள். எவர்கள் மறுமையை விரும்பி அதற்காகப் பெரும் முயற்சியையும் எடுத்துக்கொண்டு நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருக்கிறார்களோ, அத்தகையவர்களின் செயல்கள் (அல்லாஹ்விடத்தில் மிக்க அன்பாக) அங்கீகரிக்கப்படும். (அல்குர்ஆன் 17 : 18, 19)

إِلَّا ابْتِغَاءَ وَجْهِ رَبِّهِ الْأَعْلَىٰ ○

மிக்க மேலான தன் இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பியே (தானம் கொடுப்பார்). (அல்குர்ஆன் 92 : 20)

இன்னும் இதுபோன்ற பல வசனங்கள் நமக்கு உணர்த்துவது என்னவென்றால் நாம் அல்லாஹ்வின் திருமுகம் நாடி மட்டுமே நல்லமல் செய்ய வேண்டும். அல்லாஹ்விடம் மறுமையில் கிடைக்கும் நற்கூலியை விரும்பி மட்டுமே நாம் எந்த ஒரு அமலையும் செய்ய வேண்டும்.

உலகாதாயத்தை விரும்பி ஓர் அமலை செய்வது, மக்களிடம் பெயர் புகழை விரும்பி நல்லமலை செய்வது இது நயவஞ்சகர்களின் குணமாகும். அவர்கள் தொழுகை, தர்மம் போன்ற நல்லமல்களையும் கூட மக்கள் தங்களை புகழ வேண்டும் என்பதற்காகவே செய்வார்கள். இதோ குர்ஆன் அந்த நயவஞ்சகர்களை இப்படி வர்ணிக்கிறது.

إِنَّ الْمُنَافِقِينَ يُخَادِعُونَ اللَّهَ وَهُوَ خَادِعُهُمْ وَإِذَا قَامُوا إِلَى الصَّلَاةِ قَامُوا كُسَالَىٰ يُرَاءُونَ النَّاسَ ○

நிச்சயமாக (நிராகரிக்கும்) இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்(கக் கருது)கின்றனர். எனினும், அல்லாஹ்வோ அவர்களை வஞ்சித்து விடுகின்றான். அவர்கள் தொழுகையில் நின்றாலோ சோம்பேறிகளாக நின்று மனிதர்களுக்குக் காண்பிக்(க விரும்பு)கின்றார்கள். (அல்குர்ஆன் 4 : 142)

الَّذِينَ هُمْ يُرَاءُونَ ○

(மேலும், அவர்கள் தொழுதபோதிலும் மக்களுக்குக்) காண்பிக்கவே தொழுகிறார்கள். (அல்குர்ஆன் 107 : 6)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تُبْطِلُوا صَدَقَاتِكُمْ بِالْمَنِّ وَالْأَذَىٰ كَالَّذِي يُنْفِقُ مَالَهُ رِئَاءَ النَّاسِ وَلَا يُؤْمِنُ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ فَمَثَلُهُ كَمَثَلِ صَفْوَانٍ عَلَيْهِ تُرَابٌ فَأَصَابَهُ وَابِلٌ فَتَرَكَهُ صَلْدًا لَا يَقْدِرُونَ عَلَىٰ شَيْءٍ مِمَّا كَسَبُوا وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ الْكَافِرِينَ ○

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பாமல் மக்கள் காண்பதற்காக தன் பொருளை செலவு செய்(து வீணாக்கு)பவனைப் போல (நீங்கள் மனமுவந்து வழங்கும்) உங்கள் தர்மங்களை(ப் பெற்றவனுக்கு முன்னும் பின்னும்) சொல்லி காண்பிப்பதாலும் துன்புறுத்துவதாலும் (அதன் பலனை) பாழாக்கி விடாதீர்கள். இத்தகையவனின் உதாரணம், ஒரு வழுக்கு பாறையை ஒத்திருக்கின்றது. அதன் மீது மண்படிந்தது. எனினும், ஒரு பெரும் மழை பொழிந்து, அதை(க் கழுவி) வெறும் பாறையாக்கி விட்டது. (இவ்வாறே அவன் செய்த தானத்தை அவனுடைய பெருமை அழித்துவிடும்.) ஆகவே, அவர்கள் (தானம்) செய்ததில் இருந்து யாதொரு பலனையும் (மறுமையில்) அடையமாட்டார்கள். மேலும் அல்லாஹ் (தன்னை) நிராகரிக்கும் கூட்டத்திற்கு (அவர்களின் தீய செயல்களின் காரணமாக) நேரான வழியில் செலுத்தமாட்டான். (அல்குர்ஆன் 2 : 264)

ஆகவே, ஒரு முஸ்லிம் எப்போதும் தனது மனதை ரியாவில் பலிகொடுத்துவிடாமல் கவனமாக பாதுகாக்க வேண்டும். இதை அடிப்படையாக வைத்தே இமாம் அவர்கள் தனது சபையில் அழுத நபருக்கு அறிவுரை கூறி இறையச்சத்தை ஊட்டினார்கள். நீ இப்போது அழுதாயல்லவா, இந்த அழுகை அல்லாஹ்விற்காகவா அல்லது மக்களுக்காகவா, இந்த அழுகை இறையச்சத்தினால், மறுமையின் பயத்தினால், நரகத்தின் அச்சத்தினால் வந்ததா, அல்லது மக்களுக்கு மத்தியில் நல்லபெயர் எடுப்பதற்காகவா என்பதை நீ கவனித்துக்கொள்!

உனது இந்த அழுகையின் நோக்கம் அல்லாஹ்வா அல்லது மக்களா என்பதை அல்லாஹ் அறிவான். அவன் உன்னிடம் அதுபற்றி கண்டிப்பாக விசாரிப்பான், பிறகு அதற்கேற்ப அவன் உனக்கு கூலி வழங்குவான். பெயர்

புகழை விரும்பி குர்ஆனை மக்களுக்கு கற்பித்த அறிஞர், பெயர் புகழை விரும்பி தர்மம் செய்த கொடை வள்ளல், பெயர் புகழை விரும்பி தனது உயிரை அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணித்த தியாகி ஆகிய மூவரையும் அல்லாஹ் அழைத்து விசாரித்து விட்டு, அவர்கள் கூறிய பதிலையும் கேட்டு விட்டு, இல்லை! நீங்கள் பொய் கூறுகிறீர்கள், உங்கள் நோக்கம் மக்களிடம் புகழை விரும்பியதுதான் என்று கூறி அவர்களை முகம் குப்புற நரகத்தில் தள்ளும்படி கட்டளை இட்டுவிடுவான்.

இது எத்தகைய இழி நிலை! அல்லாஹ் பாதுகாப்பானாக!

தன்னை மக்களுக்கு முன் தக்வா உள்ளவனாக காட்டிக்கொள்ளவே இன்று மக்களில் பலர் விரும்புகின்றனர்.

மக்கள் தன்னை மதிக்க வேண்டும் என்பதற்காகவே பலர் இன்று நல்லமல்களை செய்கின்றனர்.

பலருடைய தர்மம், குர்ஆன் திலாவா, மார்க்கப் பிரச்சாரம், ஜூமுஆ குத்பா என பல காரியங்கள் மக்களுக்கு மத்தியில் பிரபலமடைதல், தனக்கு மக்களின் செல்வாக்கு அதிகமாகுதல், மக்கள் தன்னை மதிக்க வேண்டும், தன்னை பின்பற்றும் மக்கள் அதிகமாக வேண்டும் என்பதை அடிப்படையாக வைத்தே இருப்பதை காணமுடிகிறது. அல்லாஹ் பாதுகாப்பானாக! அல்லாஹ் பாதுகாத்தவர்களைத் தவிர இந்த சோதனையிலிருந்து யார்தான் தப்பிக்க முடியும்!

அல்லாஹ்வே! எங்கள் மீது கருணை காட்டு! எங்களை இழிவு படுத்தி விடாதே! எங்களை நஷ்டவாளிகளில் ஆக்கிவிடாதே! உன் முகத்தை நாடிய நல்லவர்களில் எங்களையும் ஆக்கி வை. ஆமீன்!

## நரகத்தில் விலங்கு சங்கிலிகள் எதற்காக?

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ حُمَيْدٍ حَدَّثَنَا نُعَيْمُ بْنُ مَيْسَرَةَ حَدَّثَنَا ابْنُ عُيَيْنَةَ بْنُ الْعَصْرِ قَالَ قَالَ الْـحَسَنُ ﵀ فِي قَوْلِهِ عَزَّ وَجَلَّ إِذِ الْأَغْلَالُ فِي أَعْنَاقِهِمْ وَالسَّلَاسِلُ يُسْحَبُونَ قَالَ أُنْبِئْنَا أَنَّ الْأَغْلَالَ لَمْ تُجْعَلْ فِي أَعْنَاقِ أَهْلِ النَّارِ أَنَّهُمْ أَعْجَزُوا الرَّبَّ تَبَارَكَ وَتَعَالَى وَلَكِنْ كُلَّمَا طَفَا بِهِمُ اللَّهَبُ أَرْسَتْهُمُ النَّارُ ثُمَّ حُمِلَ الْـحَسَنُ ﵀ مَغْشِيًّا عَلَيْهِ

إِذِ الْأَغْلَالُ فِي أَعْنَاقِهِمْ وَالسَّلَاسِلُ يُسْحَبُونَ ○

அவர்களின் கழுத்துகளில் விலங்குகள் (அரிகண்டங்கள்) இன்னும், சங்கிலிகள் இருக்கும். (அதன் மூலம் அவர்கள் நரகத்தில்) இழுக்கப்படுவார்கள். (அல்குர்ஆன் 40 : 71)

இந்த வசனத்திற்கு விளக்கம் இமாம் ஹசன் ﵀ அவர்கள் கூறினார்கள்: எங்களுக்கு அறிவிக்கப்பட்டதாவது: விலங்குகள் நரகவாசிகளின் கழுத்துகளில் போடப்பட்டதன் காரணம் அவர்கள் அல்லாஹ் தபாரக வதஆலாவை பலவீனப்படுத்திவிடுவார்கள் (-நரகத்திலிருந்து தப்பித்துவிடுவார்கள்) என்பதற்காக அல்ல. என்றாலும் நரக நெருப்பின் ஜுவாலை அவர்களை நரகத்திற்கும் மேல் உயர கொண்டுவரும்போதெல்லாம் நரக நெருப்பு அவர்களை மீண்டும் இழுத்துக்கொள்ளும். (இந்த விளக்கத்தை கூறிவிட்டு ஹசன் ﵀ அவர்கள் மயக்கமுற்றார்கள்.) பிறகு அவர்கள் மயக்கமுற்று இருக்கும் நிலையில் (தங்கள் இல்லத்திற்கு) தூக்கி செல்லப்பட்டார்கள்.

**விளக்கம்:** அல்லாஹு அக்பர்! அல்லாஹ்தான் போதுமானவன். அந்த

நரகத்திலிருந்து நம்மை காப்பாற்ற அவனைத்தவிர வேறு யாரும் நமக்கில்லை. மனிதன் தனது அமல்களைக் கொண்டுதான் அல்லாஹ்வின் முன்னிலையில் பேச முடியும். இந்த உலகத்தில் இருந்து மனிதன் அமல்களைத் தவிர வேறு எதையும் மறுமைக்கு கொண்டு செல்லவும் முடியாது.

மறுமையின் ஒரு காட்சியை நபிமொழி ஒன்று இவ்வாறு விவரிக்கிறது.

عَنْ عَدِيِّ بْنِ حَاتِمٍ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَا مِنْكُمْ أَحَدٌ إِلَّا سَيُكَلِّمُهُ رَبُّهُ لَيْسَ بَيْنَهُ وَبَيْنَهُ تُرْجُمَانٌ فَيَنْظُرُ أَيْمَنَ مِنْهُ فَلَا يَرَىٰ إِلَّا مَا قَدَّمَ مِنْ عَمَلِهِ وَيَنْظُرُ أَشْأَمَ مِنْهُ فَلَا يَرَىٰ إِلَّا مَا قَدَّمَ وَيَنْظُرُ بَيْنَ يَدَيْهِ فَلَا يَرَىٰ إِلَّا النَّارَ تِلْقَاءَ وَجْهِهِ فَاتَّقُوا النَّارَ وَلَوْ بِشِقِّ تَمْرَةٍ قَالَ الْأَعْمَشُ وَحَدَّثَنِي عَمْرُو بْنُ مُرَّةَ عَنْ خَيْثَمَةَ مِثْلَهُ وَزَادَ فِيهِ وَلَوْ بِكَلِمَةٍ طَيِّبَةٍ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒவ்வொருவரிடமும் கண்டிப்பாக அவருடைய இறைவன் பேசுவான். அவருக்கும் அவனுக்கும் இடையில் மொழிபெயர்ப்பாளர் இருக்க மாட்டார். அவர் தனது வலப்பக்கம் பார்ப்பார். அவர் தான் முற்படுத்திய அமலைத் தவிர வேறு எதையும் பார்க்க மாட்டார். இன்னும், அவர் தனது இடப்பக்கம் பார்ப்பார். தான் முற்படுத்திய அமலைத் தவிர வேறு எதையும் பார்க்க மாட்டார். தனக்கு முன்னால் பார்ப்பார். தனது முகத்திற்கு முன்னால் நரகத்தைத் தவிர வேறு எதையும் பார்க்க மாட்டார். ஆகவே, நரகத்தை நீங்கள் பயப்படுங்கள்! பேரீத்தம் பழத்தின் பகுதியைக் கொண்டாகிலும் சரி. இன்னுமொரு அறிவிப்பில், நல்ல வார்த்தையைக் கொண்டாகிலும் சரி என்று வந்துள்ளது.[23]

மனிதன் எங்கே ஓடி ஒளிவான், அல்லாஹ்வின் காவலாளிகள் மிகவும் பயங்கரமானவர்கள். நரக நெருப்பும் மிகவும் பயங்கரமானது. இவ்வுலக நெருப்பை போன்றல்ல. பாவிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அந்த நெருப்பு மிகவும் ஆபத்தானது.

முதலில் நரக காவலாளிகளைப் பற்றி சில வசனங்களைப் பார்ப்போம். அல்லாஹு தஆலா கூறுகிறான்:

23. அறிவிப்பாளர்: அதி இப்னு ஹாதிம் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 7512.

عَلَيْهَا مَلَائِكَةٌ غِلَاظٌ شِدَادٌ○

அதில் (நரகத்தில்) முரட்டு குணமுடைய மிகவும் பலசாலிகளான மலக்குகள் (பாவிகளை தண்டிக்க) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். (அல்குர்ஆன் 66 : 6)

அவர்களின் வலிமை எப்படி இருக்குமென்றால் ஒரு வானவர் எழுபதினாயிரம் நரகவாசிகளை ஒரே தள்ளில் தள்ளிவிடுவார் என்று இமாம் பகவி ﷫ தமது விரிவுரையில் குறிப்பிடுகிறார்கள்.

இந்த வசனத்திற்கு இமாம் குர்துபி ﷫ விளக்கம் கூறுகிறார்கள்: அந்த வானவர்களிடம் கருணை, இரக்கம் அறவே இருக்காது. அவர்கள் கோபத்தினால் படைக்கப்பட்டவர்கள். மனிதர்களுக்கு உண்பது, குடிப்பது பிரியமாக இருப்பதுபோல் அவர்களுக்கு படைப்புகளை வேதனை செய்வது பிரியமாக இருக்கும். இன்னும் இப்னு அப்பாஸ் ﵄ கூறுகிறார்கள்: நரகத்தின் காவலாளிகளில் இருவர் தனது கையில் உள்ள இரும்பு சம்மட்டியைக் கொண்டு எழுபதினாயிரம் நரகவாசிகளை ஒரே அடியில் அடித்து நரகத்தின் ஆழத்தில் வீசிவிடுவார்கள்.

عَلَيْهَا تِسْعَةَ عَشَرَ○

(அவனை வேதனை செய்ய) அதில் (வானவர்களில்) பத்தொன்பது பேர்கள் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 74 : 30)

يَا مَعْشَرَ الْجِنِّ وَالْإِنْسِ إِنِ اسْتَطَعْتُمْ أَنْ تَنْفُذُوا مِنْ أَقْطَارِ السَّمٰوَاتِ وَالْأَرْضِ فَانْفُذُوا لَا تَنْفُذُونَ إِلَّا بِسُلْطَانٍ○

மனித இன்னும் ஜின் கூட்டமே! வாருங்கள், இன்னும் பூமியின் ஓரங்களில் நீங்கள் ஊடுருவி தப்பித்து செல்ல முடிந்தால் ஊடுருவி சென்றுவிடுங்கள். (அல்லாஹ்வின்) அதிகாரம் இல்லாமல் நீங்கள் ஊடுருவி செல்ல முடியாது. (அல்குர்ஆன் 55 : 33)

يُرْسَلُ عَلَيْكُمَا شُوَاظٌ مِنْ نَارٍ وَنُحَاسٌ فَلَا تَنْتَصِرَانِ○

உங்கள் இருவர் மீது நரக நெருப்பின் கங்குகளும் நெருப்பு ஜுவாலைகளும் ஏவப்படும்! நீங்கள் அதை உங்களை விட்டும் தடுத்துக்கொள்ள முடியாது. (அல்குர்ஆன் 55 : 35)

மேற்கண்ட வசனத்திற்கு தாபியி ழஹ்ஹாக் ﷺ விளக்கம் கூறுகிறார்கள்: மறுமை நாள் நிகழும்போது அல்லாஹ் கட்டளையிடுவான். வானம் அதில் உள்ளவர்களுடன் சேர்ந்து பிளந்துவிடும். அதில் இருந்த வானவர்கள் இறங்கிவருவார்கள். அவர்கள் பூமியையும் அதில் உள்ளவர்களையும் சூழ்ந்துவிடுவார்கள்.

இப்படியாக இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது வானத்தின் வானவர்கள் இறங்கி வந்து ஒரு வரிசைக்கு கீழாக ஒரு வரிசை என்று அணிவகுத்து விடுவார்கள். பிறகு, மிக உயர்ந்தவனாகிய பேரரசன் இறங்குவான். அவனது இடப்பக்கம் நரகம் இருக்கும். பூமிவாசிகள் அந்த நரகத்தைப் பார்த்தவுடன் விரண்டடித்து ஓடுவார்கள். பூமியில் எந்த மூலைக்கும் அவர்கள் போனாலும் அங்கு வானவர்களின் ஏழு வரிசைகளை காண்பார்கள். பிறகு, அவர்கள் எந்த இடத்தில் இருந்தார்களோ அதே இடத்திற்கு திரும்ப வருவார்கள். இதுபற்றியே பின்வரும் வசனங்கள் பேசுகின்றன:

إِنِّي أَخَافُ عَلَيْكُمْ يَوْمَ التَّنَادِ ۝ يَوْمَ تُوَلُّونَ مُدْبِرِينَ ۝

நிச்சயமாக நான், (மக்கள் விசாரணைக்காக) அழைக்கப்படுகிற அந்த நாளை- (அதிலிருந்து தப்பிக்க) நீங்கள் புறமுதுகிட்டவர்களாக ஓடுவீர்களே அந்த நாளை உங்கள் விஷயத்தில் பயப்படுகிறேன்.

(அல்குர்ஆன் 40 : 32-33)

وَجَاءَ رَبُّكَ وَالْمَلَكُ صَفًّا صَفًّا ۝ وَجِيءَ يَوْمَئِذٍ بِجَهَنَّمَ ۝

உமது ரப்பு வருவான். இன்னும் வானவர்களும் அணி அணியாக வருவார்கள். இன்னும் நரகம் அந்த நாளில் கொண்டுவரப்படும். (அல்குர்ஆன் 89 : 22)

يَا مَعْشَرَ الْجِنِّ وَالْإِنْسِ إِنِ اسْتَطَعْتُمْ أَنْ تَنْفُذُوا مِنْ أَقْطَارِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ فَانْفُذُوا لَا تَنْفُذُونَ إِلَّا بِسُلْطَانٍ ۝

மனித இன்னும் ஜின் கூட்டமே! வாருங்கள், இன்னும் பூமியின் ஓரங்களில் நீங்கள் ஊடுருவி தப்பித்து செல்ல முடிந்தால் ஊடுருவி சென்றுவிடுங்கள். (அல்லாஹ்வின்) அதிகாரம் இல்லாமல் நீங்கள் ஊடுருவி செல்ல முடியாது. (அல்குர்ஆன் 55 : 33)

وَانْشَقَّتِ السَّمَاءُ فَهِيَ يَوْمَئِذٍ وَاهِيَةٌ ○ وَالْمَلَكُ عَلَىٰ أَرْجَائِهَا○

வானம் பிளந்துவிடும். அது அந்த நாளில் பலவீனமாகிவிடும். இன்னும் வானவர்கள் அதன் ஓரங்களில் நின்றிருப்பார்கள். (அல்குர்ஆன் 69 : 16-17)

இவ்வாறு தாபியி ழஹ்ஹாக் ﵀ விளக்கம் அளித்தார்கள்.

நரகத்தைப் பற்றி நபி ﷺ அவர்கள் கூறிய ஹதீஸ்களில் சிலவற்றைப் பார்த்துவிட்டு இந்த அமர்வை நிறைவு செய்வோம்.

يُؤْتَىٰ بِجَهَنَّمَ يَومَئِذٍ لَهَا سَبْعُونَ أَلْفَ زِمَامٍ مَعَ كُلِّ زِمَامٍ سَبعُونَ أَلْفَ مَلَكٍ يَجُرُّونَهَا

நாளை மறுமை நாளில் நரகம் கொண்டுவரப்படும். அதற்கு எழுபதினாயிரம் கடிவாளங்கள் இருக்கும். ஒவ்வொரு கடிவாளத்துடன் எழுபதினாயிரம் வானவர்கள் இருந்து அந்த நரகத்தை இழுத்து வருவார்கள்.[24]

لَوْ أَنَّ حَجَرًا قُذِفَ بِهِ فِي جَهَنَّمَ لَهَوَىٰ سَبْعِينَ خَرِيفًا قَبْلَ إِنْ يَبْلُغَ قَعْرَهَا

ஒரு கல் நரகத்தில் வீசி எறியப்பட்டால் அது நரகத்தின் ஆழத்தை சென்று சேர்வதற்குள் எழுபது ஆண்டுகள் அதில் கீழே விழுந்துகொண்டே இருக்கும்.[25]

இன்னும் நரகவாசிகளின் கோரமான தோற்றத்தைப் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள் நமது தூக்கத்தையும் உலக இன்பங்களையும் பறக்க செய்துவிடும்.

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنْ رَسُولِ اللهِ ﷺ قَالَ لَمَّا خَلَقَ اللهُ الْجَنَّةَ وَالنَّارَ أَرْسَلَ جِبْرِيلَ إِلَى الْجَنَّةِ فَفِيْهِ قَالَ اذْهَبْ إِلَى النَّارِ فَانْظُرْ إِلَيْهَا وَإِلَىٰ مَا أَعْدَدْتُ لِأَهْلِهَا فِيهَا فَإِذَا هِيَ يَرْكَبُ بَعْضُهَا بَعْضًا فَرَجَعَ إِلَيْهِ فَقَالَ وَعِزَّتِكَ لَا يَسْمَعُ بِهَا أَحَدٌ فَيَدْخُلَهَا فَأَمَرَ بِهَا فَحُفَّتْ بِالشَّهَوَاتِ فَقَالَ

24. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 2842.

25. அறிவிப்பாளர்: அபூ மூஸா அல் அஷ்அரி ﵁, நூல்: ஸஹீஹ் அத்தர்கீப், எண்: 3672, தரம்: ஸஹீஹ் லி கைரிஹி.

ارْجِعْ إِلَيْهَا فَرَجَعَ إِلَيْهَا فَقَالَ وَعِزَّتِكَ لَقَدْ خَشِيتُ أَنْ لَا يَنْجُوَ مِنْهَا أَحَدٌ إِلَّا دَخَلَهَا

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நரகத்தை படைத்தபோது அதனிடம் ஜிப்ரீலை அனுப்பி, நீர் சென்று, அதையும் நரகவாசிகளுக்கு அதில் நான் ஏற்பாடு செய்திருப்பதையும் பார்ப்பீராக என்று கூறினான். அவர் சென்று அதைப் பார்த்தார். அப்போது அந்த நரகம் அதில் சிலதின் மீது சில எகிறிக் கொண்டிருந்தது. (கடல் அலை ஒன்றின் மீது ஒன்று எகிறுவதைப் போல் நெருப்பின் அலைகள் ஒன்றின் மீது ஒன்று எகிறிக் கொண்டிருந்தது.) அவர் திரும்பி வந்தார். இன்னும் கூறினார்: உனது கண்ணியத்தின் மீது ஆணையாக அதை பற்றி செவியுறும் ஒருவரும் அதில் நுழைய மாட்டார். பிறகு, அல்லாஹ் கட்டளையிட நரகம் இச்சைகளைக் கொண்டு சூழப்பட்டது. பிறகு, அவருக்கு நீ சென்று அதில் நரகவாசிகளுக்காக நான் ஏற்பாடு செய்துவைத்திருப்பதை பார்ப்பீராக என்று அல்லாஹ் கூறினான். அவர் சென்று அதைப் பார்த்துவிட்டு திரும்ப வந்து கூறினார்: உனது கண்ணியத்தின் மீது ஆணையாக அதிலிருந்து யாரும் தப்ப முடியாது, எல்லோரும் அதில் நுழைந்துவிடுவார்கள் என்று நான் பயப்படுகிறேன்.[26]

إِذَا رَأَتْهُم مِّن مَّكَانٍ بَعِيدٍ سَمِعُوا لَهَا تَغَيُّظًا وَزَفِيرًا ۝

அது அவர்களை தூரமான இடத்திலிருந்து பார்த்தால் அதனுடைய (-நெருப்பு பற்றி எரியும் போது வெளிப்படும்) சத்தத்தையும் இரைச்சலையும் அவர்கள் செவியுறுவார்கள். (அல்குர்ஆன் 25 : 12)

عَنِ ابْنِ عَبَّاسٍ رضي الله عنه قَالَ إِنَّ الرَّجُلَ لَيُجَرُّ إِلَى النَّارِ فَتَنْزَوِي وَيَنْقَبِضُ بَعْضُهَا إِلَى بَعْضٍ فَيَقُولُ لَهَا الرَّحْمٰنُ مَالَكَ؟ فَتَقُولُ إِنَّهُ يَسْتَجِيرُ مِنِّي فَيَقُولُ أَرْسِلُوا عَبْدِي وَإِنَّ الرَّجُلَ لَيُجَرُّ إِلَى النَّارِ فَيُقُولُ يَا رَبِّ مَا كَانَ هٰذَا الظَّنُّ بِكَ فَيَقُولُ مَا كَانَ ظَنُّكَ؟ فَيَقُولُ أَنْ تَسَعَنِي رَحْمَتُكَ فَيَقُولُ:

26. அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 2483, தரம்: ஹசன் ஸஹீஹ் - அல்பானி.

أَرْسِلُوا عَبْدِي وَإِنَّ الرَّجُلَ لَيُجَرُّ إِلَى النَّارِ فَتَشْهَقُ إِلَيْهِ النَّارُ شُهُوقَ الْبَغْلَةِ إِلَى الشَّعِيرِ وَتَزْفِرُ زَفْرَةً لَا يَبْقَىٰ أَحَدٌ إِلَّا خَافَ رَوَاهُ الطَّبَرِيُّ وَقَالَ ابْنُ كَثِيرٍ فِي تَفْسِيرِهِ وَهٰذَا إِسْنَادٌ صَحِيحٌ

இப்னு அப்பாஸ் ﵁ கூறினார்கள்: நிச்சயமாக மனிதர்கள் நரகத்தின் பக்கம் இழுத்துவரப்படுவார்கள். அந்த நரகம் அப்போது ஒன்றுக்குள் ஒன்று சுருண்டு மடங்கிவிடும். உனக்கு என்ன நேர்ந்தது என்று அல்லாஹ் கேட்பான். அது கூறும், நிச்சயமாக இவன் என்னிடமிருந்து பாதுகாவல் தேடுகிறான். அல்லாஹ் கூறுவான், எனது அடியானை விட்டு விடுங்கள்! இன்னும், இன்னுமொரு மனிதனை நரகத்தின் பக்கம் இழுத்துவரப்படும். அவன் கூறுவான், என் ரப்பே! உன்னை நான் இப்படி நினைக்கவில்லை. அல்லாஹ் கேட்பான், நீ என்ன நினைத்தாய்? அவன் கூறுவான், உனது விசாலமான கருணை எனக்கு கிடைக்கும் என்று. அல்லாஹ் கூறுவான், என் அடியானை விட்டுவிடுங்கள்! இன்னும், இன்னொரு அடியானை நரகத்தின் பக்கம் இழுத்துவரப்படும். அவனைப் பார்த்து நரகம் பார்லி உணவை பார்த்த கழுதை கத்துவதைப் போல் கத்தும். இன்னும் இரைந்து இரைந்து கதறும். அப்போது ஒருவரும் பயப்படாமல் இருக்க முடியாது.[27]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ قَالَ كُنَّا مَعَ رَسُولِ اللهِ ﷺ إِذْ سَمِعَ وَجْبَةً فَقَالَ النَّبِيُّ ﷺ تَدْرُونَ مَا هٰذَا قَالَ قُلْنَا اللهُ وَرَسُولُهُ أَعْلَمُ قَالَ هٰذَا حَجَرٌ رُمِيَ بِهِ فِي النَّارِ مُنْذُ سَبْعِينَ خَرِيفًا فَهُوَ يَهْوِي فِي النَّارِ الْآنَ حَتَّىٰ انْتَهَىٰ إِلَىٰ قَعْرِهَا

நாங்கள் ஒரு நாள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் இருந்தோம். அப்போது ஒரு திடுக்கமான சப்தத்தை செவியுற்றார்கள். நபி ﷺ அவர்கள் கேட்டார்கள், இது என்ன என்று நீங்கள் அறிவீர்களா? நாங்கள் கூறினோம், அல்லாஹ் இன்னும் அவனது தூதர் இதை மிக அதிகம் அறிவார்கள். நபி ﷺ அவர்கள் கூறினார்கள், இது ஒரு கல் (உடைய சப்தம்) ஆகும், எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் இது நரகத்தில் வீசப்பட்டது. அது இந்த நேரம்வரை நரகத்திற்குள் சென்று இப்போதுதான் அதன் ஆழத்தை எட்டியது.[28]

27. நூல்: தஃப்ஸீருத் தபரி, தஃப்ஸீர் இப்னு கஸீர்.
28. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 5078.

நரகத்தின் விஷம்கலந்த கரும்புகைப் பற்றியும் அதன் நெருப்பு பற்றியும் அதன் வேதனைகளில் சிலவற்றைப் பற்றியும் சில வசனங்களையும் அவற்றின் சுருக்கமான விளக்கத்தையும் பார்த்துவிட்டு, பிறகு நல்லோரின் நரக அச்சம் குறித்த சில பதிவுகளை பார்ப்போம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

انْطَلِقُوا إِلَىٰ ظِلٍّ ذِي ثَلَاثِ شُعَبٍ ۝ لَا ظَلِيلٍ وَلَا يُغْنِي مِنَ اللَّهَبِ ۝ إِنَّهَا تَرْمِي بِشَرَرٍ كَالْقَصْرِ ۝ كَأَنَّهُ جِمَالَتٌ صُفْرٌ ۝ وَيْلٌ يَوْمَئِذٍ لِلْمُكَذِّبِينَ ۝

மூன்று கிளைகளையுடைய (நரகத்தின்) புகையின் நிழலின் பக்கம் நீங்கள் செல்லுங்கள் (என்றும் கூறப்படும்). அதில் (குளிர்ச்சிதரும்) நிழலுமிராது; உஷ்ணத்தைத் தணிக்கக்கூடிய எதுவுமிராது. (எனினும்,) பெரிய மாளிகைகளைப் போன்ற நெருப்புக் கங்குகளை அது கக்கிக்கொண்டே இருக்கும். அவை மஞ்சள் நிறமுள்ள (பெரிய) ஒட்டகங்களைப் போல் தோன்றும். (இவைகளைப்) பொய்யாக்குபவர்களுக்கு அந்நாளில் கேடுதான்! (அல்குர்ஆன் 77 : 30-34)

وَأَصْحَابُ الشِّمَالِ مَا أَصْحَابُ الشِّمَالِ ۝ فِي سَمُومٍ وَحَمِيمٍ ۝ وَظِلٍّ مِنْ يَحْمُومٍ ۝ لَا بَارِدٍ وَلَا كَرِيمٍ ۝

இடப்பக்கத்தில் உள்ளவர்களோ, இவர்களின் துர்ப்பாக்கியம் தான் என்னே! (அவர்கள்) கொடிய வெப்பத்திலும், முற்றிலும் கொதிக்கும் நீரிலும், அடர்ந்த இருண்ட புகையின் மத்தியிலும் இருப்பார்கள். (அங்குக்) குளிர்ச்சியான பானமும் இருக்காது; சங்கையான எதுவும் இருக்காது.
(அல்குர்ஆன் 56 : 41-44)

سَأُرْهِقُهُ صَعُودًا ۝

அதிசீக்கிரத்தில் அவனை ஒரு கஷ்டமான சிகரத்தில் ஏற்றி விடுவேன். (அல்குர்ஆன் 74 : 17)

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள ஸவூத் என்றால் என்ன?

இமாம் தபரி ﷺ இதன் விளக்கத்தில் சில அறிவிப்புகளை பதிவு செய்துள்ளார்கள்: ஸவூத் என்பது நெருப்பாலான மிக உயரமான ஒரு மலை. அதில் ஏறும்படி நரகவாசியை நிர்ப்பந்திக்கப்படும். அவன் அதில் கையை வைத்தவுடன் கை உருகிவிடும். கையை எடுத்தவுடன் கை மீண்டும் பழைய நிலைக்கு திரும்பிவிடும். காலை அதன் மீது வைத்தவுடன் கால் உருகிவிடும். காலை எடுத்தவுடன் கால் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பிவிடும்.

ஸவூத் என்பது நரகத்தில் உள்ள ஒரு நெருப்பு மலையாகும். அதில் நரகவாசியை ஏறும்படி கூறப்படும். அவன் அதில் எழுபது ஆண்டுகள் மிகவும் சிரமத்துடன் வேதனைகளை அனுபவித்தவனாக ஏறுவான். அவன் அதில் ஏறி உயரத்தை அடைந்தவுடன் அங்கிருந்து கீழே தள்ளிவிடப்படுவான். இத்தகைய கொடிய தண்டனை அவனுக்கு தொடர்ந்து நடைபெறும்.

إِنَّ لَدَيْنَا أَنْكَالًا وَجَحِيمًا ○ وَطَعَامًا ذَا غُصَّةٍ وَعَذَابًا أَلِيمًا○

நிச்சயமாக நம்மிடத்தில் (அவர்களுடைய கைகளிலும் கால்களிலும் கட்டுவதற்கு) விலங்குகள் இருக்கின்றன; இன்னும் நரகமும் இருக்கின்றது. (அவர்கள் உண்ணும்போது தொண்டையில்) விக்கிக் கொள்ளக்கூடிய உணவும் இருக்கின்றது; (அவர்களுக்கு) கடின துன்பத்தை தரும் வேதனையும் (அவர்களுக்காக நம்மிடம் தயாராக) இருக்கின்றது.(அல்குர்ஆன் 73 : 12, 13)

وَإِنَّ لِلطَّاغِينَ لَشَرَّ مَآبٍ○ جَهَنَّمَ يَصْلَوْنَهَا فَبِئْسَ الْمِهَادُ ○ هَٰذَا فَلْيَذُوقُوهُ حَمِيمٌ وَغَسَّاقٌ○ وَآخَرُ مِنْ شَكْلِهِ أَزْوَاجٌ○

வழிகெட்டவர்களின் தங்கும் இடம் நிச்சயமாக மகா கெட்டது. அது நரகம்தான். அதில்தான் அவர்கள் எரிந்துகொண்டே இருப்பார்கள். அது தங்குமிடங்களில் மகா கெட்டதாகும். (அவர்களை நோக்கி,) "இதோ! கொதித்த நீரும், சீழ் சலமும்! அதனை நீங்கள் சுவைத்துப் பாருங்கள்" (என்று கூறப்படும்). இதைப் போன்ற (துன்பம் நிறைந்த) விதவிதமான வேறு (வேதனைகளு)முண்டு. (அல்குர்ஆன் 38 : 55-58)

فَالَّذِينَ كَفَرُوا قُطِّعَتْ لَهُمْ ثِيَابٌ مِنْ نَارٍ يُصَبُّ مِنْ فَوْقِ رُءُوسِهِمُ الْحَمِيمُ○ يُصْهَرُ بِهِ مَا فِي بُطُونِهِمْ وَالْجُلُودُ○ وَلَهُمْ مَقَامِعُ مِنْ

حَدِيدٍ ۝ كُلَّمَا أَرَادُوا أَنْ يَـخْرُجُوا مِنْهَا مِنْ غَمٍّ أُعِيدُوا فِيهَا وَذُوقُوا عَذَابَ الْـحَرِيقِ ۝

ஆகவே, அவர்களில் எவர்கள் (உண்மையான இறைவனை) நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நெருப்பினால் ஆன ஆடை தயார் செய்யப்பட்டிருக்கிறது. (அக்கினியைப் போல்) கொதித்துக் கொண்டிருக்கும் தண்ணீர் அவர்களுடைய தலைகளின் மீது ஊற்றப்படும். அவர்களுடைய வயிற்றினுள் இருக்கும் குடல்களும் (தேகத்தின் மேல் இருக்கும்) தோல்களும் அதனால் உருகிவிடும். அவர்களுக்காக இரும்புச் சம்மட்டிகளுண்டு. (அதனைக் கொண்டு அவர்களை அடிக்கப்படும்.) இத்துயர(மான நரக) த்திலிருந்து அவர்கள் வெளிப்படக் கருதி முயற்சிக்கும்போதெல்லாம் அதில் அவர்கள் தள்ளப்பட்டு "எரிக்கும் (நெருப்பு) வேதனையைச் சுவைத்துக் கொண்டிருங்கள்" (எனவும் கூறப்படும்). (அல்குர்ஆன் 22 : 19-22)

وَتَرَى الْمُجْرِمِينَ يَوْمَئِذٍ مُقَرَّنِينَ فِي الْأَصْفَادِ ۝ سَرَابِيلُهُمْ مِنْ قَطِرَانٍ وَتَغْشَىٰ وُجُوهَهُمُ النَّارُ ۝

அன்றி, குற்றவாளிகள் அனைவரும், அந்நாளில் விலங்கிடப்பட்டிருப்பதையும் நீங்கள் காண்பீர்கள். அவர்களுடைய சட்டைகள் தாரால் செய்யப்பட்டிருக்கும். அவர்களுடைய முகத்தை நெருப்பு பொசுக்கும். (அல்குர்ஆன் 14 : 49, 50)

இன்னும் இதுபோல் பல நூறு வசனங்களில் நரகத்தின் பயங்கரத்தைப் பற்றி அல்லாஹ் வர்ணிக்கிறான். ஆகவே, நல்லோர் எப்போதும் நரகத்தைப் பற்றிய, அதில் உள்ள அல்லாஹ்வின் தண்டனையைப் பற்றிய பயத்தில் இருப்பார்கள் என்று அல்லாஹ் அந்த நல்லோரின் பண்பை நமக்கு அல்குர்ஆனில் விவரிக்கிறான்.

நல்லோரின் பயம், அல்லாஹ்வைப் பற்றி இருக்கும்.

நல்லோரின் பயம், அல்லாஹ்வின் தண்டனையைப் பற்றி இருக்கும்.

நல்லோரின் பயம், மறுமை நாளைப் பற்றி இருக்கும்.

நல்லோரின் பயம், மறுமையின் கடுமையான விசாரணையைப் பற்றி இருக்கும்.

நல்லோரின் பயம், நரகத்தைப் பற்றியும் அதில் இருக்கும் வேதனைகள் பற்றியும் இருக்கும்.

இதோ அல்குர்ஆன் நல்லோரின் பயத்தை வர்ணிப்பதை செவிமடுப்போம்.

وَيَخْشَوْنَ رَبَّهُمْ وَيَخَافُونَ سُوءَ الْحِسَابِ○

தங்கள் இறைவனுக்கு பயந்தும் நடப்பார்கள்; (மறுமையில்) கேட்கப்படும் கொடிய கேள்விகளைப் பற்றி (எந்நேரமும்) பயந்துகொண்டும் இருப்பார்கள். (அல்குர்ஆன் 13 : 21)

وَيَخَافُونَ يَوْمًا كَانَ شَرُّهُ مُسْتَطِيرًا○

நீண்ட வேதனையுடைய (மறுமை) நாளை பயந்துகொள்வார்கள். (அல்குர்ஆன் 76 : 7)

إِنَّا نَخَافُ مِنْ رَبِّنَا يَوْمًا عَبُوسًا قَمْطَرِيرًا○

நிச்சயமாக நாங்கள் எங்கள் இறைவனின் ஒரு நாளைப் பற்றிப் பயப்படுகின்றோம். அந்நாளில் முகம் கடுகடுத்துச் சுண்டி விடும் (என்று அவர்கள் கூறுவார்கள்). (அல்குர்ஆன் 76 : 10)

يَخَافُونَ يَوْمًا تَتَقَلَّبُ فِيهِ الْقُلُوبُ وَالْأَبْصَارُ○

உள்ளங்களும் பார்வைகளும் (பயத்தால் திடுக்கிட்டுத்) தடுமாறி விடக்கூடிய நாளைப் பற்றி அவர்கள் (எந்நேரமும்) பயந்து கொண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் 24 : 37)

وَأَنْذِرْ بِهِ الَّذِينَ يَخَافُونَ أَنْ يُحْشَرُوا إِلَىٰ رَبِّهِمْ لَيْسَ لَهُمْ مِنْ دُونِهِ وَلِيٌّ
وَلَا شَفِيعٌ لَعَلَّهُمْ يَتَّقُونَ○

(நபியே!) எவர்கள், "(மறுமையில்) தங்கள் இறைவனிடம் (விசாரணைக்காகக்) கொண்டு போகப்படுவோம், அங்கு அவனைத் தவிர தங்களுக்கு பாதுகாவலரோ பரிந்துரை செய்பவரோ இருக்க மாட்டார்" என்று பயப்படுகின்றார்களோ அவர்களை நீங்கள் எச்சரிக்கை செய்யுங்கள். அவர்கள் (பாவத்திலிருந்து விலகி) இறைவனை அஞ்சிக் கொள்வார்கள். (அல்குர்ஆன் 6 : 51)

وَيَرْجُونَ رَحْمَتَهُ وَيَخَافُونَ عَذَابَهُ إِنَّ عَذَابَ رَبِّكَ كَانَ مَحْذُورًا○

அவர்கள் அவனுடைய அருளையே எதிர்பார்க்கின்றனர்; இன்னும் அவனுடைய வேதனைக்குப் பயந்து கொண்டும் இருக்கிறார்கள். ஏனென்றால், நிச்சயமாக உமது இறைவனின் வேதனையோ, மிக மிக பயப்படக் கூடியதே! (அல்குர்ஆன் 17 : 57)

الَّذِينَ يَخْشَوْنَ رَبَّهُمْ بِالْغَيْبِ وَهُمْ مِنَ السَّاعَةِ مُشْفِقُونَ○

(இறை அச்சமுடையவர்கள்) தங்கள் இறைவனைத் தங்கள் கண்ணால் பார்க்காவிடினும் அவனுக்குப் பயப்படுவதுடன், மறுமையைப் பற்றியும் அவர்கள் (எந்நேரமும்) பயந்து நடுங்கிக் கொண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் 21 : 49)

وَالَّذِينَ هُمْ مِنْ عَذَابِ رَبِّهِمْ مُشْفِقُونَ○ إِنَّ عَذَابَ رَبِّهِمْ غَيْرُ مَأْمُونٍ○

(இவ்வாறிருந்தும்) அவர்கள் தங்கள் இறைவனின் வேதனைக்குப் பயந்துகொண்டே இருப்பார்கள். (ஏனென்றால்,) நிச்சயமாகத் தங்கள் இறைவனின் வேதனை அச்சமற்றிருக்கக் கூடியதன்று. (அல்குர்ஆன் 70 : 27, 28)

இது வரை அல்லாஹ்வின் தண்டனை பற்றியும் நல்லோரின் பயம் பற்றியும் சில வசனங்களை நாம் பார்த்தோம். இப்போது நல்லோரின் பயம் குறித்து அறிவிக்கப்பட்ட சில செய்திகளை பார்ப்போம்.

قَالَ عُمَرُ بْنُ الْخَطَّابِ ﵁ لَمَّا طُعِنَ وَاللهِ لَوْ أَنَّ لِي طِلَاعَ الْأَرْضِ ذَهَبًا لَافْتَدَيْتُ بِهِ مِنْ عَذَابِ اللهِ عَزَّ وَجَلَّ قَبْلَ أَنْ أَرَاهُ

உமர் இப்னுல் கத்தாப் ﵁ அவர்கள் ஈட்டியால் குத்தப்பட்டிருந்தபோது கூறினார்கள்: பூமி நிரம்ப தங்கம் என்னிடம் இருந்தாலும் அதை பிணையாக கொடுத்து அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து அதை நான் பார்ப்பதற்கு முன்பே என்னை விடுவித்துக் கொண்டிருப்பேன்.[29]

قَالَ عَبْدُ السَّلَامِ مَوْلَى مَسْلَمَةَ بْنِ عَبْدِ الْمَلِكِ ﵀ بَكَى عُمَرُ بْنُ عَبْدِ

29. அறிவிப்பாளர்: மிஸ்வர் இப்னு மக்ரமா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 3416.

الْعَزِيزِ فَبَكَتْ فَاطِمَةُ فَبَكَىٰ أَهْلُ الدَّارِ لَا يَدْرِي هَؤُلَاءِ مَا أَبْكَىٰ هَؤُلَاءِ فَلَمَّا تَجَلَّىٰ عَنْهُمْ الْعِبَرُ قَالَتْ لَهُ فَاطِمَةُ بِأَبِي أَنْتَ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ مِمَّ بَكَيتَ قَالَ ذَكَرْتُ يَا فَاطِمَةُ مُنْصَرِفَ الْقَوْمِ مِنْ بَيْنِ يَدَيِ اللهِ عَزَّ وَجَلَّ فَرِيقٌ فِي الْجَنَّةِ وَفَرِيقٌ فِي السَّعِيرِ قَالَ ثُمَّ صَرَخَ وَغُشِيَ عَلَيْهِ

உமர் இப்னு அப்துல் அஸீஸ் ﷺ அழுதார்கள். அவரின் மனைவி ஃபாத்திமாவும் அழுதார்கள். இப்படியாக வீட்டில் உள்ள எல்லோரும் அழுதார்கள். இவர்கள் எல்லோரும் ஏன் அழுகிறார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை. எல்லோரின் அழுகை நின்றவுடன் ஃபாத்திமா அவர்கள், அமீருல் முஃமினீன் அவர்களே! நீங்கள் எதனால் அழுதீர்கள் என்று கேட்டார்கள். அவர்கள் கூறினார்கள்: கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்வின் முன்னிலையில் மக்கள் திரும்ப வந்து நிற்க வேண்டும் என்பதையும் ஒரு கூட்டம் சொர்க்கத்திலும் ஒரு கூட்டம் நரகத்திலும் சென்றுவிடுவார்கள் என்பதையும் நான் நினைத்துப் பார்த்தேன். இவ்வாறு கூறிவிட்டு சப்தமிட்டு அழுதவர்கள் மயக்கமுற்றுவிட்டார்கள்.[30]

இப்படியாக பல ஆயிரம் நிகழ்வுகள் உள்ளன. இன் ஷா அல்லாஹ் அவற்றில் சிலவற்றை ஒரு தனி தலைப்பில் நாம் எழுதி, அவற்றிலிருந்து படிப்பினைகளை பெறுவோம்.

இமாம் ஹசன் ﷺ அவர்களின் மறுமை பயம் குறித்து அவர்களின் மாணவர்களில் சிலர் கூறியதை நினைவு கூர்ந்து இந்த அமர்வை நாம் நிறைவு செய்வோம்.

قَالَ بَعْضُ أَصْحَابِ الْحَسَنِ ﷺ كُنَّا نَدْخُلُ عَلَى الْحَسَنِ فَمَا هُوَ إِلَّا النَّارُ وَالْقِيَامَةُ وَالْآخِرَةُ وَذِكْرُ الْمَوْتِ

நாங்கள் இமாம் ஹசன் ﷺ அவர்களிடம் செல்வோம். அவர்களின் சபையில் பேசப்படும் பேச்சுகள் எல்லாம் நரகம், மறுமை, இன்னும் மரண நினைவுகள் தொடர்பாகவே இருக்கும்.

30. நூல்: ஹில்யத்துல் அவ்லியா 5/269.

قَالَ يَزِيدُ بْنُ حَوْشَبٍ ﵀ مَا رَأَيْتُ أَخْوَفَ مِنَ الْـحَسَنِ وَعُمَرَ بْنِ عَبْدِ الْعَزِيزِ كَأَنَّ النَّارَ لَمْ تُـخْلَقْ إِلَّا لَـهُمَا

யஸீத் இப்னு ஹவ்ஷப் ﵀ கூறுகிறார்: ஹசன் பஸரி ﵀ இன்னும் உமர் இப்னு அப்துல் அஸீஸ் ﵀ அவர்களைப் போன்று (நரகத்தை) அதிகம் பயப்படக்கூடியவர்களை நான் பார்த்ததே இல்லை. நரகம் அந்த இருவருக்காகவே தவிர வேறு யாருக்காகவும் படைக்கப்படவில்லை என்பது போன்று அவர்களுடைய பயம் இருந்தது.[31]

ஏன்? அல்லாஹ்வின் தூதரின் இதுபோன்ற ஹதீஸ்களை செவியுறும் உண்மை முஃமின் இப்படித்தான் இருப்பார்.

لَوْ تَعْلَمُونَ ما أَعْلَمُ لَضَحِكْتُمْ قَلِيلًا ولَبَكَيْتُمْ كَثِيرًا

நபி ﷺ கூறினார்கள்: நான் அறிவதை நீங்கள் அறிந்துகொண்டால் நீங்கள் மிகக் குறைவாக சிரித்திருப்பீர்கள், இன்னும் மிக அதிகம் அழுதிருப்பீர்கள்.[32]

அல்லாஹ்வே! எங்களுக்கு உன் பயத்தைக் கொடு! உன் அச்சத்தைக் கொடு! மறுமையின் பயத்தை எங்களுக்கு கொடு! நரகத்தைப் பற்றி பயத்தை எங்களுக்கு கொடு! விசாரணை நாளின் பயத்தை எங்களுக்கு கொடு! மறுமையில் எங்களை பயமற்றவர்களாக சொர்க்கத்தின் நற்பாக்கியம் பெற்றவர்களாக எங்களை ஆக்கி வை! நீயே எங்கள் ஆதரவு! நீயே எங்கள் நம்பிக்கை! நீயே எங்கள் இறைவன்! நீயே எங்கள் பாதுகாவலன். ஆமீன்!

• • •

31. நூல்: தாரீக் திமிஷ்க் 45/236.

32. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6486.

சான்றோர் பாடசாலை அமர்வு 22, கூற்று 1534

## மரணத்தின் கோரக் காட்சி

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا هِشَامٌ سَمِعْتُ الْحَسَنَ قَالَ عَادَ رَجُلٌ أَخًا لَهُ فَوَافَقَهُ الْمَوْتُ قَالَ فَرَأَىٰ مِنْ مَرْأَىٰ عَكَرِ الْمَوْتِ وَكَرْبِ الْمَوْتِ قَالَ فَرَجَعَ إِلَىٰ أَهْلِهِ وَجَاءُوا بِغَدَائِهِ فَقَالَ يَا أَهْلَاهُ عَلَيْكُمْ بِغَدَائِكُمْ قَالُوا يَا فُلَانُ الضَّيْعَةُ قَالَ يَا أَهْلَاهُ عَلَيْكُمْ ضَيْعَتُكُمْ فَوَاللهِ لَقَدْ رَأَيْتُ مَصْرَعًا لَا أَزَالُ أَعْمَلُ لَهُ حَتَّىٰ أَقْدَمَ عَلَيْهِ

ஹசன் பஸரி ﵀ கூற தான் செவியுற்றதாக ஹிஷாம் அறிவிக்கிறார்: ஒருவர் தனது (மார்க்க) சகோதரர் ஒருவரை நலம் விசாரிக்க சென்றார். அந்த சமயத்தில் (யாரை இவர் சந்திக்க சென்றாரோ) அவருக்கு மரணம் நிகழ்ந்து விட்டது. மரணத்தின் கலக்கம் இன்னும் மரணத்தின் துன்பமும் வேதனையும் நிறைந்த காட்சியை இவர் (அங்கே) பார்த்து விட்டார். பிறகு இவர் தனது குடும்பத்தாரிடம் திரும்ப வந்தார். அவர்கள் இவரின் மதிய உணவை கொண்டு வந்(து முன்னால் வைத்)தார்கள். இவர் கூறினார்: குடும்பத்தார்களே! உங்கள் மதிய உணவை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்! அவர்கள் கூறினார்கள்: இன்னவரே! இலாபம் தரும் வியாபாரம் இருக்கின்றதே! (அதை நீர் கவனிக்க உடல் வலிமை வேண்டுமே, அதற்காக நீர் உணவருந்த வேண்டுமே என்று கூறினார்கள்.) இவர் கூறினார்: எனது குடும்பத்தாரே உங்கள் வியாபாரத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் மீது ஆணையாக திட்டமாக நான் மரணத்தை பார்த்து விட்டேன். அதை நான் சந்திக்கின்ற வரை அதற்காக நான் அமல் செய்துகொண்டே இருப்பேன்.

**விளக்கம்:** இமாம் அவர்கள் எந்த நல்லடியாரைப் பற்றி கூறினார்களோ!? அல்லாஹ் மிக அறிந்தவன். அல்லாஹ் அந்த நல்லடியாருக்கும் இமாம் அவர்களுக்கும் நமக்கும் கருணையும் இரக்கமும் காட்டுவானாக!

ஆம், அக்கால நல்லோர் அப்படித்தான் வாழ்ந்து சென்றார்கள். மார்க்கப் பற்று, மறுமை பயம், அல்லாஹ்வின் அச்சம், கப்ர் - மண்ணறையின் திகில்கள் இவை எல்லாம் அவர்களுக்கு உலக வாழ்க்கையின் மீதுள்ள மோகத்தை அவர்களின் உள்ளங்களில் இருந்து பிடுங்கி தூர எறிந்து விட்டன.

நாமும்தான் அன்றாடம் மரணத்தை பார்க்கிறோம். மரணிப்பவருக்கு அருகில் இருக்கிறோம். மரணித்தவரை சுமந்து செல்கிறோம். அல்லது அவரை குளிப்பாட்டுகிறோம். அல்லது அவரை அடக்கம் செய்கிறோம். அவர் நமக்கு உறவினராக இருக்கலாம். அல்லது தூரத்து சொந்தமாக இருக்கலாம். அல்லது அன்னியராக இருக்கலாம். இப்படி நிகழ்வுகள் அன்றாடம் நடக்கத்தான் செய்கின்றன. ஆனால், நாம் படிப்பினை பெறுகிறோமா? அதுதான் இங்கே நாம் உணர வேண்டிய விஷயம்.

ஆம். அந்த ஒரு நிகழ்வுக்குப் பின்னர் இந்த உலகத்துடன் நமக்கிருந்த நீண்ட கால தொடர்புகள், உறவுகள், பந்தங்கள், சொந்தங்கள் என அனைத்தையும் விட்டு நாம் பிரிந்து விடுவோம். மீண்டும் இந்த உலகத்துக்குள் ஒரு நொடிக்குக் கூட பிரவேசிக்க முடியாது. நாம் விரும்பும் நபரை ஒரு பார்வை கூட பார்த்துக் கொள்ள முடியாது. நாம் நேசிக்கும் நபரிடம் ஒரு வார்த்தைக் கூட நம்மால் பேச முடியாது. எல்லாம் அவ்வளவுதான்.

அத்துடன் நம்மை பெயர் கூறி அழைக்க மாட்டார்கள். நாம் வாழ்நாளில் வாங்கி குவித்த பட்டம் பதவிகள் எல்லாம் அவ்வளவுதான். உடலை போர்த்துங்கள் என்று சிலர் கூறுவார்கள். வேறு சிலர் ஜனாஸாவை எப்போது குளிப்பாட்டுவோம் என்று கேட்பார்கள். இன்னும் சிலர் எந்த கப்ருஸ்தானில் மய்யித்தை அடக்கம் செய்யப் போகிறீர்கள் என்று விசாரிப்பார்கள். இன்னும் பலர் மய்யித்துக்கு கஃபன் துணி வாங்க நான் போகட்டுமா என்று அனுமதி கேட்பார்கள். எல்லாம் அவ்வளவுதான்!

என்னே உலகமிது!? ஒரு நொடியில் எல்லாம் மாறிவிட்டன. கட்டிய மனைவியை சொந்தம் கொண்டாட முடியுமா? அவள் என் மனைவி என்று வாதிட்டு அவளின் மறுமணத்தை தடுக்க முடியுமா? சொத்து நான் சேர்த்தது, வீடு நான் கட்டியது, வாகனம் நான் வாங்கியது, நீ அவற்றில் எதையும் விற்காதே மகனே! என்று கூற முடியுமா? என்னை இன்னும் சிறிது காலம் நான் கட்டிய மாளிகையில் எனது சொகுசு அறையில் வைத்திருங்கள் என்று

நாம் கூற முடியுமா? நாம் கூறவில்லை என்றாலும் நமது உறவுகளாவது நம்மீது கருணை காட்டி என் பாச தந்தை என்று நம்மை வைத்திருக்க முடியுமா? எல்லாம் அவ்வளவுதான்.

அழுகிவிடும் உடலல்லவா? துர்நாற்றம் வீசும் சதை அல்லவா? இதை சகித்துக் கொள்ளும் ஒரே பொறுமைசாலி மண்தான். அந்த மண்ணறை மட்டுமே இப்போது இவனை வரவேற்கும். சிவப்பு கம்பளம் விரித்து, படைகளின் மரியாதை அணிவகுப்புகள் கொடுக்கப்பட்டு, படோபகரமாக பவனிவந்த மன்னனாக இருந்தாலும் அவன் இறந்துவிட்டால் எந்த நாடும் அவனை மதிக்காது, வரவேற்காது. மண்ணறை மட்டுமே வரவேற்கும்!

வா மன்னா வா!

மாளிகையில் வாழ்ந்தவனே! இப்போது இந்த மண்ணறையில் வாழ வா!

பஞ்சு மெத்தையில் பட்டு விரிப்புகளில், பெரிய அறையில் ராணியுடன், அல்லது அடிமைப் பெண்ணுடன் சுகமாக துயில் கொள்பவனே வா! இப்போது விரிப்பே இல்லாத, அங்கும் இங்கும் அசைய முடியாத, காற்றே இல்லாத, கல்லும் மண்ணும் நிறைந்த கரடு முரடான எனக்குள் வா! இங்கு மனைவி இருக்க மாட்டாள் உனக்கு சுகம் கொடுக்க! பஞ்சு மெத்தை இருக்காது. பட்டு விரிப்பு இருக்காது. வா மன்னா வா! உன் கண் அசைவில் சகலமும் செய்துகொண்டிருந்தாயே மன்னா! அந்த கண்ணை இப்போது நீ திறக்க முடியுமா! அது இப்போது பார்க்குமா? ருசித்து சுவைத்து சாப்பிட நீ பயன்படுத்தினாயே உன் நாவு! அதை இன்று புழுக்கள் ருசிக்கப் போகின்றன.

உனது அறிவால், திறமையால், சிந்தனையால், புத்திக் கூர்மையால் என்று நீ தற்புகழ்ச்சி செய்தாயே உன் மூளை, அதை பூச்சிகள் மேயப் போகின்றன. மன்னா உன் படையினர், உன் காவலாளிகள் எங்கே? அவர்கள் இங்கு வருவார்களா? என்னிடமிருந்து உன்னை அவர்கள் காப்பார்களா? ஒரு கைத்தட்டலில் ஓடி வந்தவர்கள் இங்கு ஓடி வருவார்களா? ஆம், உன்னால் கைத்தட்ட முடியாதே! கண் சாடை காட்ட முடியாதே! அப்படி செய்தால்தானே அவர்கள் ஓடி வருவதற்கு? ஆம், மன்னா எல்லாம் அவ்வளவுதான்.

وَمِنْ وَرَائِهِمْ بَرْزَخٌ إِلَىٰ يَوْمِ يُبْعَثُونَ ○

அவர்களுக்கு முன்னால் ஒரு தடுப்பு இருக்கும், அவர்கள் உயிர்கொடுத்து எழுப்பப்படுகின்ற நாள் வரை (அங்குதான் அவர்கள் தங்கி இருக்க வேண்டும்). (அல்குர்ஆன் 23 : 100)

உலகை கட்டி ஆண்ட மன்னனுக்கே இந்த கதி என்றால் நமக்கெல்லாம் என்ன கதி!?

மரணத்தை நினைவூட்டி எத்தனை குர்ஆன் வசனங்கள் இருக்கின்றன. ஒன்றா இரண்டா?

قُلْ إِنَّ الْمَوْتَ الَّذِي تَفِرُّونَ مِنْهُ فَإِنَّهُ مُلَاقِيكُمْ ○

(நபியே!) கூறுவீராக! நிச்சயமாக நீங்கள் அதை விட்டு விரண்டு ஓடுகின்ற அந்த மரணம் நிச்சயமாக அது உங்களை சந்திக்கும். (அல்குர்ஆன் 62 : 8)

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ ○

ஒவ்வோர் ஆன்மாவும் மரணத்தை சுவைக்கக் கூடியதே.
(அல்குர்ஆன் 3 : 185, 29 : 57)

وَجَاءَتْ سَكْرَةُ الْمَوْتِ بِالْحَقِّ ذَٰلِكَ مَا كُنتَ مِنْهُ تَحِيدُ ○

மரணத்தின் மயக்கம் உண்மையாக வந்துவிட்டது. அது (-அந்த மரணம்) தான் (இது நாள் வரை) நீ அதை விட்டு விலகி ஓடுபவனாக இருந்தாய்.
(அல்குர்ஆன் 50 : 19)

نَحْنُ قَدَّرْنَا بَيْنَكُمُ الْمَوْتَ وَمَا نَحْنُ بِمَسْبُوقِينَ ○

நாம் தான் உங்களுக்கு மத்தியில் மரணத்தை (யார் யாருக்கு எப்போது மரணம் வரும் என்று) நிர்ணயித்தோம். நாங்கள் முடியாதவர்கள் (இயலாதவர்கள்) இல்லை. (அல்குர்ஆன் 56 : 60)

இப்படி மரணத்தை நினைவூட்டக்கூடிய முப்பதுக்கும் நெருக்கமான வசனங்கள் உள்ளன.

மரணத்தை நினைவூட்டக்கூடிய ஹதீஸ்களோ அவற்றை நம்மால் சூழ்ந்து அறிய முடியாது.

மரணத்தை குறித்து நபி ﷺ அவர்கள் இப்படி எச்சரித்தார்கள்:

أَكْثِرُوا ذِكْرَ هَاذِمِ اللَّذَّاتِ

இன்பங்களை விரைவாக துண்டித்துவிடும் மரணத்தை நினைப்பதை அதிகப்படுத்துங்கள்![33]

மரண வசனங்கள் சொல்லும் மொத்த கருத்துகள் என்ன? ஒன்றே ஒன்றுதான்.

மனிதா உனக்கு மரணம் என்ற முடிவு ஒன்று உண்டு. அது மயக்கமும் திடுக்கமும் நிறைந்தது, தப்பிக்க முடியாதது, மிகைக்க முடியாதது, ஓடி ஒளிய முடியாதது, எங்கும் மறைந்து கொள்ள முடியாதது, படை பலத்தால் வெல்ல முடியாதது, தந்திரம் செய்து தப்பிக்க முடியாதது, மருந்து மாத்திரைகள் சாப்பிட்டு பிழைக்க முடியாதது, செல்வத்தால் அவகாசம் வாங்க முடியாதது.

அது ஓர் அம்பு. எறியப்பட்டவனை நோக்கி சென்று தாக்கி விட்டுதான் நிற்கும். மனிதன் எறியும் அம்பிலிருந்து தப்பிக்கலாம், அந்த அம்பு குறி தவறலாம். குறுக்கே ஏதும் வந்து தடுத்துவிடலாம். ஆனால், மரணம் என்ற அம்பை அல்லாஹ் எறிகிறான்.

நிர்ணயிக்கப்பட்ட வானவர் விரைந்து, பாய்ந்து, பறந்து வருவார். அவருக்கு எல்லைகள் இல்லை. அவருக்கு சுவர்கள் இல்லை. கடல்கள், மலைகள், பாலைவனங்கள், பாதாள அறைகள், பதுங்கு குழிகள், கவச ஆடைகள் என எதுவும் அவருக்கு முன்னால் நிற்க முடியாது. அவர் அல்லாஹ்வைத் தவிர யாரையும் அஞ்சாதவர், யாரும் அவரை தடுக்க முடியாது. யாரும் அவரிடமிருந்து தப்பிக்க முடியாது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

قُلْ يَتَوَفَّاكُمْ مَلَكُ الْمَوْتِ الَّذِي وُكِّلَ بِكُمْ○

(நபியே) கூறுவீராக! உங்களுக்கு நியமிக்கப்பட்ட மலக்குல் மவ்த் (-உயிர் வாங்கும் வானவர்) உங்களை உயிர் கைப்பற்றுவார். (அல்குர்ஆன் 32 : 11)

أَيْنَمَا تَكُونُوا يُدْرِكْكُمُ الْمَوْتُ وَلَوْ كُنْتُمْ فِي بُرُوجٍ مُشَيَّدَةٍ○

நீங்கள் எங்கிருந்தாலும் மரணம் உங்களை அடையும்; பலமான கோபுரங்களில் நீங்கள் இருந்தாலும் சரியே! (அல்குர்ஆன் 4 : 78)

மனிதனே! மரணத்தை நினைக்க விடாமல் உன்னை எது தடுக்கிறது தெரியுமா? நீ உன்னைப் பற்றி சிந்தித்தது உண்டா? நீ உன்னைப் பற்றி

33. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹ் இப்னு ஹிப்பான், எண்: 2995.

சிந்திக்க நேரம் ஒதுக்கியது உண்டா? நீ எது எதையோ யார் யாரையோ பற்றி பேசுகிறாய். உன்னைப் பற்றி, உன் பிறப்புக்கு முன்னுள்ள நிலைமையைப் பற்றி, உன் இறப்பைப் பற்றி, உன் இறப்புக்கு முன்னுள்ள நிலைமையைப் பற்றி சிந்திக்க உனக்கு நேரமில்லையா? உனக்கென்ன புத்தி இல்லையா? அல்லது உனக்கென்ன பைத்தியமா? உன்னைப் பற்றி நீ அக்கறை கொள்ளவில்லை என்றால் வேறு யார் அக்கறை கொள்வார்கள்?!

ஆம், மனிதனே! உன் உலக மோகம் உன்னை தடுக்கிறது நீ மரணத்தை நினைப்பதிலிருந்து.

நீ செய்கின்ற பாவங்கள் உன்னை தடுக்கின்றன நீ மரணத்தை நினைப்பதிலிருந்து.

நீ சேர்த்த சொத்து சுகங்கள், ஆடம்பர பங்களாக்கள், விலை மதிக்க முடியாத ஆபரணங்கள் உன்னை தடுக்கின்றன நீ மரணத்தை நினைப்பதிலிருந்து.

காலை, மாலை, இரவு பகல் என்று பார்க்காமல் நீ செய்யும் அயோக்கியத்தனம் உன்னை தடுக்கிறது நீ மரணத்தை நினைப்பதிலிருந்து.

பகட்டு வாழ்க்கையில், மயக்கும் மாயக்கார உலகில் நீ ஒரு பரதேசி என்பதை மறந்து விட்டாய்!

மரணத்தை நினைத்திருந்தால் வானுயர கோபுரம் கட்டி இருப்பாயா?

மரணத்தை நினைத்திருந்தால் மண்ணறை வாழ்க்கைக்கு செலவழிக்க வேண்டிய நேரத்தை மாட மாளிகை கட்டுவதில் செலவழித்திருப்பாயா?

மரணத்தை நினைத்திருந்தால் உன் ஆசைகளை நீட்டி இருக்க மாட்டாய்; உன் தேவைகளை பெருக்கி இருக்க மாட்டாய்; உன் ஆடம்பரத்தை அதிகப்படுத்தி இருக்க மாட்டாய். உன் தற்பெருமையை நீ தடுத்திருப்பாய். உன் ஆணவத்தை நீயே குழி தோண்டி புதைத்திருப்பாய். உன் அகந்தையை நீயே வெட்டி சாய்த்திருப்பாய். உன் ஆசைகளை நீயே முடிவுக்கு கொண்டு வந்திருப்பாய். உன்னை நீ அடக்கி இருப்பாய். மார்க்க வரம்புக்குள், ஹலால் என்ற எல்லைக்குள் நீ அடங்கி இருப்பாய். வணக்க வழிபாட்டில், இறை தியானத்தில், மறுமைக்கான தயாரிப்பில், சொர்க்கத்தை அடைய வேண்டும் என்ற ஆசையில், அல்லாஹ்வின் திரு முகத்தை காண வேண்டும் என்ற தேடலில் நீ உன்னை இழந்திருப்பாய். இறை அன்பிலும் இறை பயத்திலும் பித்து பிடித்தவனாய் உன்னை நீ பறிகொடுத்திருப்பாயே! அதுதானே நல்லோரின் பண்பு.

உனது நிலையோ இதோ அல்லாஹ் யூதர்களை வர்ணிப்பது போன்றல்லவா இருக்கிறது!

قُلْ إِنْ كَانَتْ لَكُمُ الدَّارُ الْآخِرَةُ عِنْدَ اللهِ خَالِصَةً مِنْ دُونِ النَّاسِ
فَتَمَنَّوُا الْمَوْتَ إِنْ كُنْتُمْ صَادِقِينَ○وَلَنْ يَتَمَنَّوْهُ أَبَدًا بِمَا قَدَّمَتْ أَيْدِيهِمْ
وَاللهُ عَلِيمٌ بِالظَّالِمِينَ ○وَلَتَجِدَنَّهُمْ أَحْرَصَ النَّاسِ عَلَىٰ حَيَاةٍ وَمِنَ
الَّذِينَ أَشْرَكُوا يَوَدُّ أَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ أَلْفَ سَنَةٍ وَمَا هُوَ بِمُزَحْزِحِهِ مِنَ
الْعَذَابِ أَنْ يُعَمَّرَ وَاللهُ بَصِيرٌ بِمَا يَعْمَلُونَ○

“(யூதர்களே) அல்லாஹ்விடம் (சொர்க்கமெனும்) மறுமை வீடு (மற்ற) மக்களுக்கு அன்றி உங்களுக்கு மட்டும் என்றிருந்தால், நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் மரணத்தை விரும்புங்கள்” என (நபியே) கூறுவீராக. அவர்களின் கரங்கள் முற்படுத்திய (பாவங்களின்) காரணத்தால் அதை அவர்கள் ஒருபோதும் விரும்பவே மாட்டார்கள். அல்லாஹ் அநியாயக்காரர்களை நன்கறிந்தவன். (நபியே!) மக்களை விடவும் (குறிப்பாக) இணைவைப்பவர்களை விடவும் வாழ்க்கையின் மீது பேராசைக்காரர்களாக அவர்களை நிச்சயமாகக் காண்பீர்! அவர்களில் ஒருவர் “தான் ஆயிரம் ஆண்டு(கள்) வாழ்வு கொடுக்கப்பட வேண்டுமே?” என்று விரும்புவார். (நீண்ட நாள்) வாழ்வு கொடுக்கப்படுவது வேதனையிலிருந்து அவரைத் தப்பிக்க வைத்துவிடக்கூடியதில்லை. அல்லாஹ் அவர்கள் செய்வதை உற்று நோக்குபவன் ஆவான். (அல்குர்ஆன் 2 : 94-96)

மனிதனே! உனது பாவம், உனது உலக மோகம், உனது பேராசை உன்னை அல்லாஹ்வை விட்டு தூரமாக்குகிறது. உனக்கு உலகத்தின் மீது ஆசையை தூண்டுகிறது. உனக்கு மரணத்தை மறக்கடிக்கிறது. இந்த உலகமே கதி என்று உன்னை மயக்கி விடுகிறது.

يَا أَيُّهَا النَّاسُ إِنَّ وَعْدَ اللهِ حَقٌّ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيَاةُ الدُّنْيَا○

மக்களே! நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்கு உண்மையானதே! ஆகவே, உலக வாழ்க்கை உங்களை மயக்கிவிட வேண்டாம். (அல்குர்ஆன் 35 : 5)

இறந்து விட்ட உன் தந்தையை நினைத்துப் பார்! அல்லது உனது பாட்டனை நினைத்துப் பார்! அல்லது உனது முப்பாட்டனை நினைத்துப் பார்! உனக்கு முன்னால் உன் ஊரில் வசித்த முந்திய தலைமுறையை நினைத்துப் பார்!

அவர்கள் வசித்த இல்லங்கள் இருக்கின்றன. அவர்கள் எங்கே!? அவர்கள் பயன்படுத்திய பல பொருள்கள் உள்ளன. அவர்கள் எங்கே!? அவர்கள் விட்டு சென்ற சொத்துபத்துகள் இருக்கின்றன. அவர்கள் எங்கே!?

இதோ பஹ்லூல், மன்னர் ஹாரூனுக்கு கூறிய கவிதை:

هَبْ أَنَّكَ قَدْ مَلَكْتَ الْأَرْضَ يَوْمًا وَدَانَ لَكَ الْعِبَادُ فَكَانَ مَاذَا

أَلَسْتَ تَصِيرُ فِي قَبْرٍ وَيَحْثُو عَلَيْكَ تُرَابَهُ هَٰذَا وَهَٰذَا

நீ ஒரு நாள் இந்த பூமிக்கெல்லாம் மன்னனாக ஆகிவிட்டாய், மக்களெல்லாம் உனக்கு பணிந்து விட்டார்கள் என்று வைத்துக் கொள்! பிறகு என்ன ஆகப் போகிறது? (சிந்தித்தாயா?)

நீ மண்ணறைக்கு வர மாட்டாயா? இவரும் இவரும் மண்ணை உன் மீது அள்ளிப் போட மாட்டார்களா?

இதோ அபுல் அதாஹிய்யா உபதேசிக்கிறார், கேள்!

لَعَمرُكَ ما الدُنيا بِدارِ بَقاءِ *** كَفاكَ بِدارِ المَوتِ دارَ فَناءِ

فَلا تَعشَقِ الدُنيا أُخَيَّ فَإِنَّما *** تَرىٰ عاشِقَ الدُنيا بِجُهدِ بَلاءِ

حَلاوَتُها مَمزوجَةٌ بِمَرارَةٍ *** وَراحَتُها مَمزوجَةٌ بِعَناءِ

சத்தியமாக, உலகம் நிரந்தர இல்லமல்ல.

மரண இல்லம், அழிவின் இல்லத்தில் உனக்கு போதும்.

என் இளைய சகோதரனே! உலகத்தை நீ மோகம் கொள்ளாதே!

உலக மோகம் உடையவனை நீ பார்ப்பாய் சிரமத்திலும் சோதனையிலும்.

அதன் இனிப்பு கசப்புடன் பின்னிப் பிணைந்தது.

அதன் சுகம், சிக்கல் சிரமங்களோடு பின்னிப் பிணைந்தது.

இந்த உம்மத்தின் சித்தீக் ﵁ கூறும் கவிதையை கேள்!

كُلُّ امْرِئٍ مُصَبَّحٌ فِي أَهْلِهِ وَالْمَوْتُ أَدْنَىٰ مِنْ شِرَاكِ نَعْلِهِ

எல்லா மனிதர்களும் காலையில் தமது குடும்பத்துடன் இருக்கிறார்கள். ஆனால், மரணமோ அவர்களின் செருப்பு பட்டியை விட அவர்களுக்கு நெருக்கமாக இருக்கிறது.

மரணத்தை நினைவூட்டும் நமது முன்னோர் சான்றோர் அறிவுரைகள் கிரந்தங்களில் கொட்டிக் கிடக்கின்றன.

ஆம், அவர்கள் அப்படித்தான். தாங்களும் மரணத்தை நினைவு கூர்ந்தார்கள். தங்களை சுற்றி இருந்தவர்களுக்கும் மரணத்தை நினைவூட்டினார்கள்.

காரணம் என்ன? அவர்களது உள்ளங்கள் தூய்மையாக இருந்தன. நல்லமல்களில் அவர்கள் திளைத்திருந்தார்கள். சொர்க்க, நரகத்தை சதா நினைத்துக் கொண்டிருந்தார்கள். முன்கர் நகீருடைய விசாரணை அவர்களின் நினைவை விட்டும் நீங்கவில்லை. சிராத் - பாலம், அமல்களின் தராசு, கொழுந்துவிட்டு எரியும் நரக நெருப்பு என எதையும் அவர்கள் மறக்கவில்லை.

ஆகவே, உலகத்தை சுருக்கிக் கொண்டார்கள். மறுமைக்கான அமல்களை பெருக்கிக் கொண்டார்கள். உலக மாளிகைகளை பலமாக, அழகாக, ஆடம்பரமாக கட்டுவதற்கு பதிலாக கப்ர் குழியை விசாலமாக்க, பூங்காவாக்க, ஒளிமயமாக்க ஓயாது உழைத்தார்கள்; வணக்க வழிபாடுகளை செய்தார்கள். நோன்பு வைத்தார்கள்; இரவில் தொழுதார்கள்; இறை வேதத்தை ஓதுவார்கள்; இறை நினைவை முணுமுணுப்பார்கள்; செல்வத்தை அல்லாஹ்வின் பாதையில் வாரி இறைப்பார்கள்; அல்லாஹ்வின் கட்டளைகளை கண்ணும் கருத்துமாக நிறைவேற்றுவார்கள்; பாவங்கள் நிகழ்ந்துவிட்டால் ரப்பிடம் ஓடிச் சென்று பாவமன்னிப்புத் தேடி அழுவார்கள். மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பார்கள். நல்ல முடிவுக்காக பிரார்த்தனை செய்து கொண்டே இருப்பார்கள். உலகத்தில் அல்லாஹ்வை பயந்து, மறுமையை அஞ்சி வாழ்ந்த அவர்கள் மரணிக்கும்போது நீங்கள் பயப்பட வேண்டாம், கவலைப்பட வேண்டாம் என்று சுப செய்தி கூறப்பட்டு உயிர் வாங்கப்படுவார்கள்.

இவர்கள் அல்லவோ இந்த உலகத்தில் உண்மையான வெற்றியாளர்கள், நற்பாக்கியம் பெற்றவர்கள்.

அல்லாஹ்வே! உன்னிடமே திரும்புகிறோம், உன் பக்கமே மீளுகிறோம், உன்னையே ஆதரவு வைக்கிறோம்! மயக்கும் உலக ஃபித்னாக்களை விட்டும் எங்களை பாதுகாத்துக் கொள்! எங்கள் வாழ்நாளை உன்னை நாங்கள் வணங்கி வழிபட ஏற்றுக் கொள்! உலக ஆசாபாசங்களில் மூழ்கி நாசமானவர்களில் எங்களை ஆக்கிவிடாதே!! ஆமீன்!

• • •

## படைத்தோனை வணங்காமல் கழிந்த இரவு கெட்ட இரவே

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا أَبُو سَعِيدٍ سَكَنٌ صَاحِبُ الشَّاءِ قَالَ سَمِعْتُ الْحَسَنَ وَهُوَ فِي السُّوقِ فَرَأَىٰ لَغَطَ أَهْلِ الْأَسْوَاقِ فَقَالَ أَمَا يَقِيلُ هَؤُلَاءِ مَا أَظُنُّ لَيْلَ هَؤُلَاءِ إِلَّا لَيْلَ سُوءٍ

(ஒரு நாள்) ஹசன் பஸரி ﷀ அவர்கள் கடைத்தெருவுக்கு சென்றிருந்தார்கள். அங்கு கடைத்தெருவில் உள்ளவர்களுடைய கூச்சலை செவியுற்றார்கள். அப்போது கூறினார்கள் : இவர்கள் மதியம் (சிறிது) தூங்க மாட்டார்களா? இவர்களின் இரவை நான் கருதவில்லை, கெட்ட(வர்களின்) இரவாகவே தவிர.

**கருத்து:** பகலெல்லாம் இப்படி வியாபாரம், தொழில், வேலை என்று மும்முரமாக இருந்துவிட்டு இவர்கள் இரவில் ஓய்வெடுக்க சென்றால் பகலின் களைப்பினால் இரவு முழுக்க தூங்கி விடுவார்களே! இரவு தொழுகைக்கு இவர்களால் எழுந்திருக்க முடியாமல் போய்விடுமே! நல்லோர் இரவில் தங்கள் ரப்புக்காக சில பகுதிகளை ஓதுக்கி விடுவார்கள். கெட்டவர்களோ தங்கள் இறைவனை மறந்து இரவு முழுக்க தூக்கத்தில் கழித்து விடுவார்கள். கடைத்தெரு மக்கள் மீது இமாம் ஹசன் ﷀ அவர்களின் கவலை, அந்த மக்களின் இரவு வணக்கம் தவறுவதை குறித்து அந்தளவு ஆழமாக இருந்தது. அல்லாஹ்தான் போதுமானவன்.

**விளக்கம்:** அல்லாஹு தஆலா இமாம் ஹசன் மீதும் அவர்களைப் போன்ற சான்றோர் மீதும் அவர்களின் வழியில் தமது வாழ்க்கையை அமைத்த நல்லோர் மீதும் கருணை புரிவானாக! ஆமீன்.

அவர்கள் அல்லாஹ்வை பகலிலும் மறக்கவில்லை; இரவிலும் மறக்கவில்லை.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ۝

நான் ஜின்களையும் மனிதர்களையும் படைக்கவில்லை, அவர்கள் என்னை வணங்குவதற்கே தவிர. (அல்குர்ஆன் 51 : 56)

என்று அல்லாஹ் கூறியபடியே தமது வாழ்க்கையை தங்களை படைத்த ரப்பை வணங்கி வழிபட அவர்கள் ஆக்கினார்கள்.

ஃபர்ழான, வாஜிபான அமல்களை செவ்வனே செய்தார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் காண்பித்துக் கொடுத்த அழகிய வழிமுறை பிரகாரம் ஒவ்வொரு அமலையும் நீட்டி நிதானமாக அமைதியாக நிறைவேற்றினார்கள். பிறகு உபரியான வணக்க வழிபாடுகளையும் ஒன்றுவிடாமல் கண்ணும் கருத்துமாக நிறைவேற்றி வந்தார்கள். ஒவ்வொரு சிறிய பெரிய அமலையும் மறுமையின் வெற்றியைத் தேடி, சொர்க்கத்தை ஆசைவைத்து, நரகத்தை பயந்து, அல்லாஹ்வின் அன்பையும் பொருத்தத்தையும் வேண்டி நிறைவேற்றினார்கள்.

இவர்களின் வாழ்க்கை பின்வரும் ஹதீஸ் குதுசியை அப்படியே பிரதிபலிப்பதாக இருந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَآلِهِ وَسَلَّمَ إِنَّ اللهَ قَالَ مَنْ عَادَىٰ لِي وَلِيًّا فَقَدْ آذَنْتُهُ بِالْحَرْبِ وَمَا تَقَرَّبَ إِلَيَّ عَبْدِي بِشَيْءٍ أَحَبَّ إِلَيَّ مِمَّا افْتَرَضْتُ عَلَيْهِ وَمَا يَزَالُ عَبْدِي يَتَقَرَّبُ إِلَيَّ بِالنَّوَافِلِ حَتَّىٰ أُحِبَّهُ فَإِذَا أَحْبَبْتُهُ كُنْتُ سَمْعَهُ الَّذِي يَسْمَعُ بِهِ وَبَصَرَهُ الَّذِي يُبْصِرُ بِهِ وَيَدَهُ الَّتِي يَبْطِشُ بِهَا وَرِجْلَهُ الَّتِي يَمْشِي بِهَا وَإِنْ سَأَلَنِي لَأُعْطِيَنَّهُ وَلَئِنْ اسْتَعَاذَنِي لَأُعِيذَنَّهُ وَمَا تَرَدَّدْتُ عَنْ شَيْءٍ أَنَا فَاعِلُهُ تَرَدُّدِي عَنْ نَفْسِ الْمُؤْمِنِ يَكْرَهُ الْمَوْتَ وَأَنَا أَكْرَهُ مَسَاءَتَهُ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அல்லாஹ் கூறினான், யார் எனது நேசர் ஒருவரை பகைப்பாரோ நான் அவருக்கு போரை அறிவிக்கிறேன். அடியான் மீது நான் கடமையாக்கியதை விட எனக்கு மிக

விருப்பமான ஒன்றின் மூலம் எனது அடியான் என்னை நெருங்கி விட முடியாது. இன்னும் உபரியான அமல்கள் மூலம் அடியான் என் பக்கம் நெருங்கி வந்தவனாகவே இருப்பான். இறுதியாக, நான் அவன் மீது அன்பு வைப்பேன். நான் அவன் மீது அன்பு வைத்தால் அவன் செவியுறுகின்ற அவனது செவியாக, அவன் பார்க்கின்ற அவனது பார்வையாக, அவன் பிடிக்கின்ற கையாக, அவன் நடக்கின்ற காலாக நான் ஆகிவிடுகின்றேன். இன்னும் அவன் என்னிடம் கேட்டால் கண்டிப்பாக நான் அவனுக்கு கொடுப்பேன். அவன் என்னிடம் பாதுகாப்புத் தேடினால் நான் அவனை பாதுகாப்பேன். நான் எதை செய்தாலும் நான் அதில் தயங்குவது இல்லை, முஃமினுடைய உயிரை வாங்கும்போது தயங்குவது போன்று. அவன் மரணத்தை வெறுக்கிறான். நானோ அவனுக்கு விருப்பமில்லாததை செய்வதை வெறுக்கிறேன்.[34]

ஆம், இந்த உலகத்திலிருந்து நாம் செல்லும்போது நம்முடன் எதை உடன் எடுத்துச் செல்ல முடியும், இந்த நல்லமல்களைத் தவிர. ஆகவே, செல்வத்தை சேகரிப்பதில், தொழில்களை வளர்ப்பதில், வர்த்தகங்களை பெருக்குவதில், தொழிற்சாலைகளை உருவாக்குவதில், மாட மாளிகைகளை வானுயர கட்டி அழகு காண்பதில் மனிதன் தனது மனதை பறிகொடுத்து தனது அறிவையும் திறமையையும் உடல் சக்தியையும் செலவழிக்கிறான். ஆனால், மரணம் அவனுக்கு வந்துவிட்டால் இவை அனைத்தையும் அப்படியே விட்டுவிட்டு இந்த உலகத்தை பிரிந்து சென்றுவிடுகிறான். அவன் செய்த நல்லமல்கள், நற்காரியங்கள், பிறருக்கு உதவிய புண்ணியங்கள் மட்டுமே அவனுடன் மறுமைக்கு வரும்.

ஆகவே, அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை வைத்து வாழ்கின்ற முஸ்லிம்கள் தாம் எப்படி நேரத்தை செலவு செய்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக, இரவு வாழ்க்கை அல்லாஹ் கொடுத்த மிகப் பெரிய அருளாகும்.

பகலில் இந்த உடலுக்காக உழைத்த நாம் இரவில் இந்த உயிருக்காக உழைக்க வேண்டும்.

பகலில் இந்த உடலின் தேவைக்கு உழைத்த நாம் இரவில் இந்த உயிரின் தேவைக்காக உழைக்க வேண்டும்.

பகலில் உலகத் தேவைக்காக உழைத்த நாம் இரவில் மறுமையின் தேவைக்காக உழைக்க வேண்டும்.

34. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6021.

உலகில் வசதியாக சுகமாக வாழவேண்டும் என்பதற்காக பகலில் நாம் கடின உழைப்புகளை சகிக்கிறோம். உடல் படும் சோர்வுகளையும், வலிகளையும் தாங்குகிறோம். அப்படி என்றால் மறுமையின் சுகமான வசதியான வாழ்க்கைக்கு இரவில் அல்லாஹ்வை வணங்க வேண்டாமா? இரவில் சொர்க்க இன்பங்களுக்காக இந்த உடலை வருத்த வேண்டாமா? அல்லாஹ்விற்கு முன்னர் நிற்பதில் கால்களும், குனிவதில் முதுகும், விழித்திருப்பதில் கண்களும் வலியை உணர வேண்டாமா?

முழு இரவும் விழித்து வணங்கவில்லை என்றாலும் அதில் சில பகுதியாவது நாம் அல்லாஹ்வை வணங்குவதற்கு ஒதுக்க வேண்டாமா?

அப்படி என்ன சோம்பேறித்தனம்? அப்படி என்ன அலட்சியம்? சொர்க்கமும் மறுமையின் உயர்வான பதவிகளும் கிடைப்பது என்ன சாதாரணமான காரியமா?

மன்னர்கள் உலகில் பெரும் பகுதியை தாம் ஆளவேண்டும் என்பதற்காக எத்தனை திட்டம் தீட்டுகிறார்கள்? என்னென்ன பாடுபடுகிறார்கள்? எத்தனை போர்களை சந்திக்கிறார்கள்?

செல்வந்தர்கள் தங்கள் செல்வத்தை பாதுகாக்க, அவற்றை வளரச்செய்ய எத்தனை முயற்சிகளை செய்கிறார்கள்? எங்கெங்கே பயணம் செய்கிறார்கள்? எப்படியெல்லாம் இழப்புகளையும் இன்னல்களையும் சந்திக்கிறார்கள்?

இந்த எல்லோருடைய உழைப்புகளின் நன்மை இந்த உலகத்தோடு முடிந்து விடும். இந்த உழைப்புகளில் எதுவும் மறுமையில் கைக் கொடுக்காது. இந்த உலகத்திலிருந்து உனக்காக நீ மறுமைக்கு முற்படுத்திய நன்மைகள் மட்டுமே மறுமையில் உனக்கு பலன் தரும் என்பதை நீ மறந்து விடாதே!

சரி, இமாம் ஹசன் ﵀ அவர்கள் இரவு வணக்கத்தை அலட்சியம் செய்கின்ற மக்களின் இரவை இந்தளவு இழிவாக கூறுகிறார்களே அப்படி என்ன இரவு வணக்க வழிபாட்டுக்கு முக்கியத்துவம் என்று கேட்கிறாயா?

இதோ அதற்கான பதில்.

ஆம், இரவு வணக்கம் உபரியானதாக இருந்தாலும் அதுதான் மறுமையை முழுமையாக முன்னோக்கி வாழுகின்ற நல்லோரின் அடையாளம், அல்லாஹ்வை நெருங்க ஆசைப்படும் இறைநேசர்களின் தனித்தன்மை ஆகும்.

عَنْ سَالِمٍ عَنْ أَبِيهِ ﵁ قَالَ كَانَ الرَّجُلُ فِي حَيَاةِ النَّبِيِّ ﷺ إِذَا رَأَىٰ رُؤْيَا قَصَّهَا عَلَىٰ رَسُولِ اللهِ ﷺ فَتَمَنَّيْتُ أَنْ أَرَىٰ رُؤْيَا فَأَقُصَّهَا عَلَىٰ رَسُولِ اللهِ ﷺ وَكُنْتُ غُلَامًا شَابًّا وَكُنْتُ أَنَامُ فِي الْمَسْجِدِ عَلَىٰ عَهْدِ رَسُولِ اللهِ ﷺ فَرَأَيْتُ فِي النَّوْمِ كَأَنَّ مَلَكَيْنِ أَخَذَانِي فَذَهَبَا بِي إِلَى النَّارِ فَإِذَا هِيَ مَطْوِيَّةٌ كَطَيِّ الْبِئْرِ وَإِذَا لَهَا قَرْنَانِ وَإِذَا فِيهَا أُنَاسٌ قَدْ عَرَفْتُهُمْ فَجَعَلْتُ أَقُولُ أَعُوذُ بِاللهِ مِنْ النَّارِ قَالَ فَلَقِيَنَا مَلَكٌ آخَرُ فَقَالَ لِي لَمْ تُرَعْ فَقَصَصْتُهَا عَلَىٰ حَفْصَةَ فَقَصَّتْهَا حَفْصَةُ عَلَىٰ رَسُولِ اللهِ ﷺ فَقَالَ نِعْمَ الرَّجُلُ عَبْدُ اللهِ لَوْ كَانَ يُصَلِّي مِنْ اللَّيْلِ فَكَانَ بَعْدُ لَا يَنَامُ مِنْ اللَّيْلِ إِلَّا قَلِيلًا

அப்துல்லாஹ் இப்னு உமர் ﵁ அறிவிக்கிறார்:

நபி ﷺ அவர்களின் வாழ்நாளில் ஒருவர் கனவு ஏதேனும் பார்த்தால் அதை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கு முன் எடுத்துக் கூறுவார். நானும் ஒரு கனவு காணவேண்டும், அதை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கு முன் எடுத்துக் கூற வேண்டும் என்று ஆசை வைத்தேன். நான் அப்போது வாலிப பையனாக இருந்தேன். ரஸூலுல்லாஹ் ﷺ உடைய காலத்தில் மஸ்ஜிதில் இரவு தூங்கி வந்தேன். ஆக, நான் தூக்கத்தில் கனவு கண்டேன். இரண்டு வானவர்கள் என்னை பிடித்து நரகத்தின் பக்கம் அழைத்து சென்றார்கள். அதில் கிணற்றில் இருக்கும் மடிப்புகளைப் போல் மடிப்புகள் இருந்தன. இன்னும் அதற்கு இரண்டு கொம்புகள் இருந்தன. இன்னும் அதில் பல மனிதர்கள் இருந்தார்கள், அவர்களை நான் நன்றாக அறிவேன். உடனே, நான் நரகத்திலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று கூறத் தொடங்கினேன். அப்போது எங்களை இன்னொரு வானவர் சந்தித்தார். அவர் என்னை நோக்கி, நீ ஏன் பயப்படுகிறாய் என்று கூறினார். இந்த கனவை நான் ஹஃப்ஸாவிடம் கூறினேன். ஹஃப்ஸா ﵂ அதை ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடம் எடுத்துக் கூறினார். அதற்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அப்துல்லாஹ் நல்ல மனிதர். அவர் இரவில் எழுந்து தொழுபவராக இருக்க வேண்டுமே! இதன் அறிவிப்பாளர் கூறுகிறார்: இந்த நிகழ்வுக்குப் பிறகு

அப்துல்லாஹ் (இப்னு உமர்) அவர்கள் இரவில் மிகக் குறைவாகவே தவிர தூங்க மாட்டார்கள்.[35]

عَنْ أَبِي أُمَامَةَ ﵁ عَنْ رَسُولِ اللهِ ﷺ أَنَّهُ قَالَ عَلَيْكُمْ بِقِيَامِ اللَّيْلِ فَإِنَّهُ دَأَبُ الصَّالِحِينَ قَبْلَكُمْ وَهُوَ قُرْبَةٌ إِلَى رَبِّكُمْ وَمَكْفَرَةٌ لِلسَّيِّئَاتِ وَمَنْهَاةٌ لِلْإِثْمِ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இரவுத் தொழுகையை (உங்கள் மீது) அவசியமாக்குங்கள்! ஏனெனில், நிச்சயமாக அது உங்களுக்கு முன்னர் வாழ்ந்த நல்லோரின் வழக்கமாகும். இன்னும் அது உங்கள் ரப்புக்கு பிரியமான வணக்கமும், பாவங்களை போக்கக்கூடியதும், பாவங்களை விட்டுத் தடுக்கக்கூடியதும் ஆகும்.[36]

يَا أَيُّهَا النَّاسُ أَفْشُوا السَّلَامَ وَأَطْعِمُوا الطَّعَامَ وَصَلُّوا بِاللَّيْلِ وَالنَّاسُ نِيَامٌ تَدْخُلُوا الْجَنَّةَ بِسَلَامٍ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மக்களே! ஸலாமை பரப்புங்கள்! இன்னும் உணவளியுங்கள்! இன்னும் மக்கள் தூங்கியவர்களாக இருக்கும்போது இரவில் நீங்கள் தொழுகையில் ஈடுபடுங்கள்! சொர்க்கத்தில் நீங்கள் ஸலாமுடன் பிரவேசிப்பீர்கள்.[37]

عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ يَنْزِلُ رَبُّنَا تَبَارَكَ وَتَعَالَى كُلَّ لَيْلَةٍ إِلَى السَّمَاءِ الدُّنْيَا حِينَ يَبْقَى ثُلُثُ اللَّيْلِ الْآخِرُ يَقُولُ مَنْ يَدْعُونِي فَأَسْتَجِيبَ لَهُ مَنْ يَسْأَلُنِي فَأُعْطِيَهُ مَنْ يَسْتَغْفِرُنِي فَأَغْفِرَ لَهُ

ரஸூலுல்லாஹ் ﷺ கூறினார்கள்: ஒவ்வோர் இரவிலும் இரவின் மூன்று பகுதிகளில் மூன்றாவது பகுதி மீதம் இருக்கும்போது (ஸஹர் நேரத்தில்)

35. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 1054.
36. அறிவிப்பாளர்: அபூ உமாமா ﵁, நூல்: முஸ்தத்ரகுல் ஹாகிம், எண்: 1105, தரம்: ஹசன் - அல்பானி, நூல்: இர்வாவில் கலீல்.
37. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு சலாம் ﵁, நூல்: இப்னு மாஜா, எண்: 1324.

நமது ரப்பு தபாரக வ தஆலா முதல் வானத்திற்கு இறங்கி வருகிறான். (தனது அடியார்களை) அழைத்து பேசுகிறான், என்னிடம் பிரார்த்தனை செய்பவர் யார்? நான் அவரது பிரார்த்தனையை அங்கீகரிப்பேன். என்னிடம் தேவையை கேட்பவர் யார்? நான் அவரது தேவையை நிறைவேற்றுகிறேன். என்னிடம் மன்னிப்புத் தேடுபவர் யார்? நான் அவரை மன்னிக்கிறேன்.[38]

இந்த ஹதீஸ் மிகப் பிரபலமானதாகும்.

ஆம், இரவு வணக்கம் நபிமார்களின் பழக்கமாக, நல்லோரின் வழக்கமாக, ரப்பை தேடுவோரின் அமலாக இருந்தது.

அதை மறப்பது சாதாரணமான நஷ்டமல்ல. அந்த வணக்கத்தை இரவில் நிம்மதியாக நிறைவேற்ற பகலில் வேலைகளுக்கு நடுவில் முற்பகல் அல்லது பிற்பகலில் சிறிது கைலூலா - தூங்குவது பயனுள்ளதாக இருக்கும். இந்த சிறு ஓய்வு, இரவில் ஏதோ ஒரு பகுதியில் நாம் எழுந்து அல்லாஹ்வை வணங்க உதவியாக இருக்கும்.

இரவுத் தொழுகையின் சிறப்புகள் ஏராளம் உள்ளன. ஹதீஸ் நூல்களில் அதற்கென தனி பாடங்கள் உள்ளன. நமது முன்னோர் இந்த இரவுத் தொழுகைக்கு மிகுந்த முக்கியத்துவம் தந்தனர், அதில் ஆர்வம் காட்டினர். அல்குர்ஆனுடைய சில வசனங்களை இங்கே நாம் தருகிறோம். அவற்றில் சிந்தித்து நாம் படிப்பினை பெறுவோம்.

تَتَجَافَىٰ جُنُوبُهُمْ عَنِ الْمَضَاجِعِ يَدْعُونَ رَبَّهُمْ خَوْفًا وَطَمَعًا وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ۝

அவர்களின் விலாக்கள் படுக்கைகளை விட்டும் தூரமாக இருக்கும். அவர்கள் தங்கள் ரப்பை பயத்துடனும் ஆசையுடனும் அழைப்பார்கள். இன்னும் அவர்களுக்கு நாம் வழங்கியதிலிருந்து தர்மம் புரிவார்கள்.

(அல்குர்ஆன் 32 : 16)

وَالَّذِينَ يَبِيتُونَ لِرَبِّهِمْ سُجَّدًا وَقِيَامًا۝

அவர்கள் தங்கள் இறைவனை, நின்றவர்களாகவும் சிரம் பணிந்தவர்களாகவும் இரவெல்லாம் வணங்குவார்கள். (அல்குர்ஆன் 25 : 64)

38. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 1077.

كَانُوا قَلِيلًا مِنَ اللَّيْلِ مَا يَهْجَعُونَ ۝

அவர்கள் இரவில் மிகக் குறைவாகவே தூங்குபவர்களாக இருந்தார்கள். (அல்குர்ஆன் 51 : 16)

وَبِالْأَسْحَارِ هُمْ يَسْتَغْفِرُونَ ۝

இன்னும் அதிகாலை நேரங்களில் அவர்கள் பாவமன்னிப்புத் தேடுவார்கள். (அல்குர்ஆன் 51 : 17)

இப்படியாக பல வசனங்கள் இரவு வணக்கத்தை ஆர்வமூட்டுகின்றன. சூரா அல்முஸ்ஸம்மில் இந்த பாடத்தில் மிக முக்கியமானதாகும். கண்டிப்பாக நாம் அதை படித்து உணர வேண்டும்.

இரவு வணக்கத்தைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் அது போதாது. உண்மையில் நாம் அதன் ருசியை உணரும்போது, அந்த நேரத்தின் ஆன்மிக உணர்வுகளை சுவைக்கும்போது, அந்த நேர வணக்கத்திலும் துஆவிலும் நாம் அழுகின்ற அழுகையினால் நமக்குள் தக்வா அதிகரிக்கும்போது நமது ஈமான் அதிகமாகும்; அல்லாஹ்வுடன் நமக்கு நெருக்கம் கூடும்; இறையன்பு பீறிடும்; இறை பயம் மிகைக்கும். இந்த உயர்ந்த நிலை அடியானை அல்லாஹ்விடம் அவனது நேசர்களில் சேர்த்து விடும். பிறகு அவனது வாழ்க்கை அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு ஏற்ப அமைந்து விடும். உலக செல்வங்கள் அவனை மயக்கி விடாது. வறுமையும் சோதனைகளும் அவனை சோர்வடையச் செய்து விடாது.

அத்தகைய நல்லோரில் என்னையும் உங்களையும் அல்லாஹ் ஆக்குவானாக!

அல்லாஹ்வே! இரவை உன்னுடன் தனித்திருப்பதற்கு பயன்படுத்திய, தொழுகையிலும் பாவமன்னிப்புத் தேடுவதிலும் உன்னை தியானிப்பதிலும் பயன்படுத்திய வணக்கசாலிகளில் எங்களை ஆக்குவாயாக! அல்லாஹ்வே எங்கள் குறைகளையும் பாவங்களையும் மன்னிப்பாயாக! ஆமீன்!

• • •

# காசை கண்ணியப்படுத்தி அல்லாஹ்விடம் கண்ணியத்தை இழந்தோர்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيُّ بْنُ مُسْلِمٍ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا هِشَامٌ قَالَ سَمِعْتُ الْـحَسَنَ يَقُولُ يَحْلِفُ بِاللهِ مَا أَعَزَّ أَحَدٌ الدِّرْهَمَ إِلَّا أَذَلَّهُ اللهُ عَزَّ وَجَلَّ

ஹசன் பஸரி رحمه الله அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு கூறுவார்கள்: யார் ஒருவர் திர்ஹமை கண்ணியப்படுத்துவாரோ கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ் அவரை இழிவுபடுத்தாமல் இருக்க மாட்டான்.

**கருத்து:** செல்வம் மனிதனுக்கு உலக வாழ்க்கையில் மிக அவசியமான ஒன்று. அதற்காக அந்த செல்வத்தை தலையில் தூக்கிவைத்து ஆடக் கூடாது. செல்வம்தான் எல்லாம் என்று செல்வத்தை பெரிதாக்கிவிடக் கூடாது. மக்களை மதிக்க செல்வம் அளவுகோலாக ஆகிவிடக் கூடாது. ஒருவன் அளவுக்கு அதிகமாக செல்வமே எல்லாம் என்று இருந்தால் இறுதியில் அவன் அந்த செல்வத்தால் இழிவையே சந்திப்பான்.

**விளக்கம்:** அல்லாஹ் இமாம் ஹசனுக்கு கருணை காட்டுவானாக! அவர்களின் பார்வை மிகவும் ஆழமானதும் அர்த்தம் நிறைந்ததும் ஆகும். அல்லாஹ்வின் வேதத்தையும் நபியவர்களின் சுன்னாவையும் மனதிற்குள் பதியவைத்து அதன்படி வாழ்க்கையை அமைத்த சான்றோரில் இமாம் ஹசனும் ஒருவர் ஆவார்.

அல்லாஹு தஆலா இந்த உலகத்தை ஒரு குறிப்பிட்ட தவணைக்காக படைத்துள்ளான். அவ்வாறே நம்மையும் இந்த உலகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே வாழவைத்து பிறகு மரணத்தை கொடுத்து நம்மை தன் பக்கம் அழைத்துவிடுகிறான்.

உலகம் பிறந்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? அல்லாஹ்வே அறிந்தவன். இன்னும் உலகம் முடிய எத்தனை ஆண்டுகள் உள்ளன? அதையும் அல்லாஹ் ஒருவனே மிக அறிந்தவன்.

நமக்கு முன்னர் இந்த உலகத்தை கட்டி ஆண்ட அரசன் இப்போது எங்கே? அன்றாட சோற்றுக்கு அல்லல்பட்ட அந்த ஆண்டியும் எங்கே! கோட்டைகளில் வாழ்ந்த தனவந்தன் எங்கே? தெருக் கோடியில் வாழ்ந்த பரம ஏழை எங்கே? அடக்கி ஆண்டு அராஜகம் செய்த வம்பனும் கொம்பனும் எங்கே? வாயின்றி, உரிமையின்றி, சுயமாக எதையும் செய்ய இயலாத அடிமையும் எங்கே?

எல்லோரும் இந்த உலகத்தை பிரிந்தார்களே! மறுமையின் தொடர் வண்டியில் ஏறி பயணத்தை தொடர்ந்தனரே! அவர்கள் இங்கிருந்து எதையும் எடுத்து சென்றார்களா? கட்டிய வீட்டை சுருட்டி சென்றார்களா? சேகரித்த பணத்தை அள்ளி சென்றார்களா? வாங்கிய சொத்துகளை அவர்கள் செல்லும் மறுமை உலகத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு பயணத்தை ஆரம்பித்தார்களா? குவியல் குவியலாக குவித்துவைத்திருந்த தங்கம் வெள்ளிகளை மூட்டை முடிச்சுகளில் கட்டி முதுகில் சுமந்து சென்றார்களா?

காசை கண்டு கண்களை உயர்த்தினார்களே, பல் இளித்தார்களே, எழுந்து நின்றார்களே, அதன் பின்னால் ஓடினார்களே, அதற்காக கழுதையாக உழைத்தார்களே, படைத்த ரப்பையே அந்த பணத்திற்காக மறந்தார்களே, அவனது கட்டளையை புறந்தள்ளினார்களே, வணக்க வழிபாடுகளை ஓரங்கட்டிவிட்டு இரவையும் பகலையும் செல்வத்தை தனதாக்குவதில் குறிக்கோளாக இருந்தார்களே, அவர்கள் எல்லாம் இப்போது எங்கே? எங்கே?

பணம் பணம், காசு காசு, செல்வம், தங்கம், வெள்ளி, மாணிக்கம், மரகதம், முத்து, பவளம், ஆடம்பர மாட மாளிகை, உயர் ரக வாகனம், என உலகமே வாழ்க்கை என்று வாழ்ந்த தீனார், திர்ஹமின் அடிமைகள் எங்கே? எல்லோரும் மண்ணறையில் தங்கள் அமல்களோடு தனித்துவிட்டார்கள். தங்கள் செல்வத்தோடு அல்ல. சொந்தமாக்கிய அனைத்தையும் விட்டுவிட்டு, சொந்தங்களை விட்டு தூரமாகி, அந்த சொந்தங்களால் சந்தூக் பெட்டியில் சுமக்கப்பட்டு கப்ரு குழியில் தள்ளப்பட்டு மண் போட்டு நிரப்பப்பட்டுவிட்டார்கள்!

அங்கிருந்து அவர்களின் புதிய வாழ்க்கை தொடங்கியது. அமல்களின் மதிப்பு மட்டும் உள்ள உலகம் அது. நன்மைகளும் புண்ணியங்களும் பலனளிக்கும் உலகம் அது. பணமும் பதவியும் பயனற்று போய்விடும் உலகம் அது. அங்கு வானவர்கள் உன்னை அரசனா, ஆண்டியா, படித்தவனா, பாமரனா, செல்வந்தனா, ஏழையா, எஜமானனா, அடிமையா என்று அடையாளம் கண்டு அதற்கு ஏற்றாற்போல் நடத்த மாட்டார்கள். அங்கு உன்னை உன்னுடைய அமல் மட்டுமே பாதுகாக்கும். நீ செய்த புண்ணியம் மட்டுமே உன்னை சுற்றி நிற்கும். நீ புரிந்த நல்லறம் உன்னை விட்டு பிரியாமல் உன்னை மகிழ்விக்க காத்திருக்கும்.

மனிதனே! இப்போது நீ சிந்தித்துப்பார்! உன் கையில் உள்ள காசு உன்னை எப்படி மயக்கி வைத்திருக்கிறது என்று சற்று சிந்தித்துப்பார்! இந்த உலகமே காசுதான், காசு இல்லை என்றால் உலகத்தில் வாழ்ந்து என்ன பலன், பணத்தை வைத்து பத்தும் செய்யலாம், பணம் என்றால் பிணமும் வாயைப் பிளக்கும், பணத்தை வைத்து எதையும் செய்யலாம், யாரையும் விலைக்கு வாங்கலாம், பணம்தான் எல்லாம் என்று அந்த பணத்தை வணங்கியவனே! சற்று சிந்தித்துப்பார்! பணத்தை வைத்து மனிதர்களுக்கு மார்க் போட்டாயே, செல்வத்தை வைத்து மக்களின் மதிப்பை நிர்ணயித்தாயே, உன் அற்ப புத்தியை என்னவென்று சொல்வேன்!! அந்தோ பரிதாபம் உன் நிலை!

ஒன்றை நன்றாக புரிந்துகொள்! நீ காசு பணத்தால் கண்ணியவானாக உலகத்தில் வலம் வரலாம் என்று கனவுகண்டாய் அல்லவா? அந்த காசை வைத்தே உன் கதையை அல்லாஹ் முடித்துவிடுவான். அந்த பணமே உன்னை ஒரு நாள் தெரு நாயைவிட கேவலமான நிலைக்கு கொண்டு வந்துவிடும்.

இந்த பணம் பொல்லாதது, புரிந்து நட. நல்ல பாம்பு என்று மக்கள் சொல்வதால் அதை பிடித்து சொக்காய் பைக்குள் திணித்துவிடுவாயா? இந்த பணம் விசுவாசமற்ற ஒரு நடனக்காரி. நாளொரு வண்ணமாக தனது கணவனை மாற்றும் உடல் வியாபாரியை விட மோசமானது இந்த பொன்னும் பொருளும்.

உனது பார்வை இந்த செல்வத்தின் மீது எப்படி என்று உன்னிப்பாக கவனித்துக்கொள்! நீ இந்த செல்வத்தை தலையில் தூக்கிவைத்து ஆடவும் வேண்டாம், காலில் போட்டு மிதிக்கவும் வேண்டாம். இதுதான் உலகம் என்று இதன் பின்னால் பித்து பிடித்தவனாய் அலையவும் வேண்டாம்! இது எனக்கு ஏன் என்று முற்றும் துறந்த துறவியாய் இதை நீ உதறி தள்ளிவிடவும் வேண்டாம்.

நீ செல்வத்தின் மீது ஆட்சி செய்! செல்வம் உன் உள்ளத்தில் ஆட்சி செய்யும்படி விட்டுவிடாதே!

பணம் உன்னை ஏமாற்றுமளவு, மறுமையிலிருந்து உன்னை திருப்பிவிடுமளவு நீ அதன் போதையில் மயங்கி விடாதே!

உனது கண்ணியம் உன் மார்க்கத்தில் இருக்கிறது, உனது பொருளாதாரத்தில் இல்லை!

உனது உண்மையான உயர்வு உனது இறையச்சத்தில் இருக்கிறது, உனது செல்வ செழிப்பில் இல்லை.

உன்னை உன் தீனாரும், திர்ஹமும் பாதுகாக்கும் என்று நீ தப்புக் கணக்கு போட்டுவிடாதே! நீதான் அதை பாதுகாக்க வேண்டும். அது உன்னை ஒருபோதும் பாதுகாக்காது.

பலரின் கொலைக்கு அவர்களின் செல்வமே காரணமாக இருந்தது என்ற வரலாற்றை ஒரு முறை படித்துப் பார்!

உன் உள்ளத்தை காசுப் பணத்தின் மோகத்தால் நிரப்பாதே! உனது கல்புக்குள் ஒதுங்க அதற்கு இடம் கொடுக்காதே!

நீ சேகரித்து வைத்திருக்கும் செல்வத்தை நினைத்து பெருமைப்படாதே! நீ உன் மறுமை வாழ்க்கைக்காக முன்கூட்டியே அனுப்பி வைத்ததை நினைத்து மகிழ்வுறு!

உன்னிடம் மீதம் தங்கி இருக்கும் தங்கம் வெள்ளியை, சொத்துபத்துகளை, திர்ஹம் தீனார்களை எண்ணி எண்ணிப்பார்த்து ஆனந்தப்படாதே! அவற்றிலிருந்து உன் மண்ணறைக்கும் மறுமைக்கும் நீ என்ன செய்து வைத்திருக்கிறாய் என்பதை நினைத்து ஆனந்தப்படு!

இந்த செல்வம் உன் அறிவினால், உன் திறமையினால், உன் புத்திக்கூர்மையினால், உன் வியாபார யுக்தியால், உன் அனுபவத் திறமையால் உனக்கு கிடைத்தது என்று காரூனைப் போன்று கர்வமுடன் அலையாதே!

உன் ரப்பு நாடவில்லை என்றால் உன்னால் ஒரு பைசாவைக் கூட சொந்தமாக்கி இருக்க முடியாது!

எல்லாம் உன் ரப்பு உனக்கு கொடுத்தது! உன் கையில் உள்ளது உன் ரப்பு உனக்கு கொடுத்தது. அவன் நாடி இருக்கவில்லை என்றால் நீயும் தெருவில் பிச்சை எடுப்போரில் ஒருவனாகத்தான் இருந்திருப்பாய்.

செல்வம் வந்தவுடன் ரப்பை மறந்தாயா?

செல்வம் வந்தவுடன் இபாதத்தை விட்டு விலகினாயா?

செல்வம் வந்தவுடன் உறவுகளை விட்டு தூரமானாயா?

செல்வம் வந்தவுடன் உனக்குள் செருக்கு வந்ததா?

செல்வம் வந்தவுடன் உனக்குள் நீ பெரியவன் என்ற கர்வம் வந்ததா?

உன் செல்வத்தைப் பார்த்து அது இல்லாதோரை இழிவாக பார்த்தாயா, பேசினாயா?

செல்வத்தை ஆடம்பரமாக செலவழிக்க வழிகளை தேடினாயே! உன்னை நரகத்தில் இருந்து பாதுகாக்க சில தர்மங்களை செய்ய மறந்துவிட்டாயே!

உனது செல்வத்தால் உன்னை இவ்வுலகில் கண்ணியவான் என்று மக்கள் போற்றுவார்கள் என்று ஆசைப்பட்டாயே! உன் ரப்பு உன்னை மதிப்பது நீ அந்த செல்வத்தை அவனது பாதையில் செலவழிக்கும்போதுதான் என்பதை மறந்துவிட்டாயே!

உன்னையும் என்னையும் போன்ற சிற்றறிவுடையோரைப் பார்த்துதான் இமாம் ஹசன் ﷺ கூறுகிறார்கள், கண்ணியவான் அல்லாஹ் தனது அடியார்களின் கண்ணியத்தை மார்க்கத்தில், நல்லமல்களில், தக்வாவில், நற்குணத்தில், நற்பண்புகளில் வைத்திருக்கின்றான். செல்வத்தில் அல்ல.

நீ அல்லாஹ்வின் கட்டளையை மீறி காசுதான் எனக்கு முக்கியம், பணமே என் பலம், செல்வமே எனக்கு துணை, பணக்காரர்கள்தான் என் நண்பர்கள், ஏழைகள் எனக்கு வேண்டாதவர்கள், செல்வந்தர்கள் மட்டுமே என் உறவினர்கள், வறியவர்கள், என் உறவுகளாக இருந்தாலும் அவர்கள் எனக்கு வெறுப்பானவர்கள் என்று இந்த செல்வத்தை நீ அளவுகடந்து மதித்துவிடாதே! உனக்கு மேல் இருக்கும் உன் ரப்பை நீ மறந்துவிடாதே! கஜானாக்களின் சாவிகளை சுமக்கவே பெரும் கூட்டத்தை வைத்திருந்த காரூனை விடவா உன்னிடம் செல்வம் இருக்கிறது? அவனது இறுதி நிலை என்னவானது என்பதை குர்ஆன் கூறும் வரலாற்றில் படித்துப்பார்! உன் புத்தியை சரி செய்! உன் அறிவை சீர் செய்!

இதோ சில நபிமொழிகளை எடுத்துக் கூறி இந்த அமர்வை நிறைவு செய்வோம்.

عَنْ عَطَاءٍ قَالَ سَمِعْتُ ابْنَ عَبَّاسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ يَقُولُ سَمِعْتُ النَّبِيَّ ﷺ يَقُولُ لَوْ كَانَ لِابْنِ آدَمَ وَادِيَانِ مِنْ مَالٍ لَابْتَغَى ثَالِثًا وَلَا يَمْلَأُ جَوْفَ ابْنِ آدَمَ إِلَّا التُّرَابُ وَيَتُوبُ اللَّهُ عَلَى مَنْ تَابَ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மனிதனுக்கு செல்வத்தின் இரு பள்ளத்தாக்கு இருந்தால் மூன்றாவது ஒன்றை அவன் தேடுவான். மனிதனின் வயிறை மண்ணைத் தவிர வேறொன்றும் நிரப்பாது. யார் திருந்துகிறார்களோ அல்லாஹ் அவர்களை திருத்துகிறான்.[39]

عَنْ حَكِيمِ بْنِ حِزَامٍ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ قَالَ لِي النبي ﷺ يَا حَكِيمُ إِنَّ هٰذَا الْمَالَ خَضِرَةٌ حُلْوَةٌ فَمَنْ أَخَذَهُ بِطِيبِ نَفْسٍ بُورِكَ لَهُ فِيهِ وَمَنْ أَخَذَهُ بِإِشْرَافِ نَفْسٍ لَمْ يُبَارَكْ لَهُ فِيهِ وَكَانَ كَالَّذِي يَأْكُلُ وَلَا يَشْبَعُ وَالْيَدُ الْعُلْيَا خَيْرٌ مِنَ الْيَدِ السُّفْلَى

எனக்கு நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: ஹகீமே! இந்த செல்வம் பசுமையானது (கவர்ச்சியானது), இனிப்பானது. யார் இதை நல்ல உள்ளத்துடன் எடுப்பாரோ அவருக்கு அதில் பரகத் (-இறைஅருள், அபிவிருத்தி) செய்யப்படும். யார் அதை அதிக ஆசையோடு எடுப்பாரோ அவருக்கு அதில் பரகத் செய்யப்படாது. இன்னும், அவருக்கு உவமை யாரென்றால், அவர் சாப்பிட்டுக்கொண்டே இருக்கிறார். ஆனால், அவர் வயிறு நிரம்புவதில்லை. உயர்வான கை தாழ்ந்த கையைவிட சிறந்ததாகும்.[40]

இன்னும் இந்த அற்ப செல்வத்தை குறித்து எச்சரிக்கை செய்கின்ற குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் ஏராளம் உள்ளன.

அவை நமக்கு உணர்த்தும் பாடங்களைத்தான் இமாம் ஹசன் رحمه الله இன்றைய அமர்வில் அழகாக சொன்னார்கள்:

செல்வத்தை உன் கையில் வை! உன் கல்பில் வைக்காதே! அப்போதுதான் தேவையுடையோருக்கும் மார்க்கத் தேவைகளுக்கும் அதை நீ உடனே எடுத்துக் கொடுக்க முடியும்.

39. அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 5956.
40. அறிவிப்பாளர்: ஹகீம் இப்னு ஹிஸாம் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 5960.

செல்வம், அது உன்னை கண்ணியப்படுத்தட்டும் நீ அதை இறைப் பொருத்தத்திற்கு ஏற்ப செலவு செய்வதன் மூலம்.

உனது கண்ணியம் செல்வத்தை நீ அதிகம் சேகரித்து சேமித்து வைப்பதில் இருக்கிறது என்று நீ எண்ணினால் உனக்குள்ள நரகம் ஹுதமா என்பதை நினைவில் வை! அங்கு உனக்கு உணவு கிஸ்லீனும் கஸ்ஸாக்கும் என்பதை மறந்துவிடாதே!

உனக்கு ரப்பு செல்வத்தைக் கொடுத்தான். ஏன் தெரியுமா? உனது உலகத்தை ஆடம்பரமாக்க அல்ல. உன் சொர்க்கத்தில் நீ மாளிகைகளை கட்டி எழுப்ப.

உனது ரப்பு உன்னை செல்வந்தனாக ஆக்கினான். ஏன் தெரியுமா? உன்னை சுற்றியுள்ள ஏழைகளுக்கு நீ கொடுத்து உதவுவதற்காக; அடியார்கள் தங்கள் ரப்பை வணங்க நீ அவர்களுக்கு ஒரு மஸ்ஜிதை கட்டித் தரவேண்டும் என்பதற்காக; அல்லாஹ்வின் மார்க்கக் கல்வியை மக்கள் கற்க அவர்களுக்கு ஒரு மத்ரசாவை நீ கட்டித் தரவேண்டும் என்பதற்காக; அதன் மூலம் அல்லாஹ்வின் மார்க்கத்தை நீ பரப்ப வேண்டும் என்பதற்காக.

அல்லாஹ்வே! எங்களை மன்னித்துவிடு! செல்வத்தால் செருக்குண்டு மதி மயங்கியவர்களில் எங்களை ஆக்கிவிடாதே! நீ கொடுத்ததை எல்லாம் நீ விரும்புகின்ற புண்ணியமான வழிகளில் செலவழித்துவிட்டு உன்னை சந்திக்க எங்களுக்கு அருள் புரிவாயாக! கஞ்சத்தனம், கருமித்தனத்திலிருந்து எங்களை பாதுகாத்துக் கொள்! நீ நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன். ஆமீன்!

• • •

**சான்றோர் பாடசாலை அமர்வு 25, கூற்று 1537**

## ஒவ்வொரு செயலும் ஒரு காரணத்திற்காகத்தான்

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَلِيٌّ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا مِسْمَعُ بْنُ عَاصِمٍ حَدَّثَنَا الْوَلِيدُ الْمِسْمَعِيُّ قَالَ: سَمِعْتُ الْـحَسَنَ يَقُولُ ابْنَ آدَمَ السِّكِّينُ تُحَدُّ وَالْكَبْشُ يُعْلَفُ وَالتَّنُّورُ يُسْجَرُ

இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்கள்: ஆதமின் மகனே! கத்தி தீட்டப்படுகிறது, கிடாய்க்கு தீனி கொடுக்கப்படுகிறது. அடுப்பில் தீ மூட்டப்படுகிறது.

**கருத்து:** எல்லாம் ஒரு உண்மையான காரணத்திற்காகத்தான் செய்யப்படுகிறது. கத்தி தீட்டப்படுவதும் கிடாய் கொழுக்க வைக்கப்படுவதும் அடுப்பில் தீ மூட்டப்படுவதும் வீணுக்கு அல்ல. ஒவ்வொன்றையும் தனித்தனியாக பார்த்தால் மனிதன் இதை ஏன் செய்கிறான் என்று கேட்க தோணும். இவை மூன்றையும் ஒன்று சேர்த்துப் பார்த்தால் இந்த செயல்களின் நோக்கம் புரியவரும். இப்படித்தான் இவ்வுலகமும் இதில் நிகழும் ஒவ்வொரு காரியத்திற்கு பின்னாலும் ஒரு நோக்கம் இருக்கும்.

**விளக்கம்:** இமாம் ஹசன் ﵀ அவர்கள் மீது அல்லாஹ்வின் கருணை நிலவட்டும். நமது அன்றாட வாழ்க்கையில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்வை எடுத்துக் கூறி இந்த பிரபஞ்சம் படைக்கப்பட்டதின் தத்துவத்தையும் இதில் நிகழ்கின்ற நிகழ்வுகளுக்கு பின்னால் இருக்கின்ற தத்துவத்தையும் விளக்குகிறார்கள்.

அவற்றை சற்று விரிவாக பார்ப்போம்.

இந்த உலகத்தை அல்லாஹ் வீணாக படைக்கவில்லை. உலகமும் உலகத்தில் படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளும் ஒரு உண்மையான நோக்கத்தை அடிப்படையாக வைத்தே உருவாக்கப்பட்டுள்ளது. மனிதனின்

அறிவு ஓர் எல்லைக்கு உட்பட்டது. எவ்வளவுதான் அறிவில் அவன் முன்னேறிவிட்டாலும் அல்லாஹ்வின் அறிவிலிருந்து ஒரு சிறிய அளவை மட்டுமே அவனால் புரிய முடியும். அதுவும் அல்லாஹ் நாடினால் மட்டுமே. அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ ○

அவனுடைய அறிவில் இருந்து எதையும் அவர்கள் சூழ்ந்து அறிய முடியாது அவன் நாடியதை தவிர. (அல்குர்ஆன் 2 : 255)

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا أُوتِيتُمْ مِنَ الْعِلْمِ إِلَّا قَلِيلًا ○

கல்வியில் இருந்து உங்களுக்கு கொடுக்கப்படவில்லை, குறைவாகவே தவிர. (அல்குர்ஆன் 17 : 85)

மனிதன் அறிவாளிதான். ஆனால், அல்லாஹ் வெளிப்படுத்தியதை மட்டுமே அவனால் அறிய முடியும். இன்னும் எதை மனிதன் அறிந்து பயன் பெற வேண்டும் என்று அல்லாஹ் நாடினானோ அதை மட்டுமே மனிதனால் அறிய முடியும். இந்த உலகத்தின் அறிவே தோண்ட தோண்ட வந்த வண்ணம் இருக்கும்போது மனிதனுடைய அறிவை விட்டும் முற்றிலும் மறைக்கப்பட்ட மறுமை சம்பந்தமான அறிவை மனிதன் எப்படி அறிய முடியும்? அல்லாஹ் கூறினாலே தவிர அதை மனிதன் தனது அறிவால் எட்டிவிட முடியாது. ஆகவே, மறுமையை உருவாக்கியவன் கூறுவதை அப்படியே நம்பிக்கைத்தான் கொள்ள முடியுமே தவிர மனிதனுக்கு அது விஷயத்தில் வேறு வழியில்லை. மறுமையை நம்புவது அறிவாகும். மறுமையை மறுப்பது அறியாமையாகும்.

இந்த உலகத்திலேயே எத்தனை கோடி படைப்புகள், எத்தனை கோடி பொருள்கள், எத்தனை கோடி உயிரினங்கள், மனிதன் அவற்றில் எதையும் முழுமையாக அறியவில்லையே! தன்னைப் பற்றியும் தன் உடல் அமைப்பை பற்றியும் மனிதன் அறிந்தது சிறு துளிதான் என்றால் அது மிகையாகாது.

மனிதனின் ஆராய்ச்சிகள் இந்த உலக பொருட்களை பற்றி மிகப் பெரிய அளவில் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. எத்தனையோ வல்லுனர்களும்

நிபுணர்களும் ஒவ்வொரு துறையிலும் தங்கள் ஆராய்ச்சியை தொடர்ந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் இறந்துவிட்டால் இன்னொருவர் அந்த இடத்தை நிரப்புகிறார். அவர்களில் யாரும் தங்கள் துறைகளில் நாங்கள் கரை கண்டுவிட்டோம் என்று மார்தட்டியதில்லை.

இப்படியெல்லாம் உலகத்தை புரிந்த மனிதன் அல்லாஹ்வின் கூற்றை நம்பிக்கை கொண்டு, அல்லாஹ்வின் மார்க்கத்தை ஏற்று, மறுமையை புரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அல்லாஹ்வின் வேதத்தில் இந்த உலகத்தை பற்றி சொல்லப்பட்ட ஏதாவது மனித அறிவியலுக்கு முரணாக நிரூபணமாகி உள்ளதா? இல்லையே? ஆயிரத்தி நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் உலகம் அறிந்திராத கல்வி அறிவுகளை இந்த வேதம் ஒவ்வொன்றாக புட்டு புட்டு வைக்கிறது என்றால் இதை அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்தான் இறக்கினான் என்பதில் ஐயம் ஏதும் உண்டாக முடியுமா? ஆகவே, இந்த குர்ஆன் பேசுகின்ற மரணத்திற்கு பின்னர் உள்ள வாழ்க்கைப் பற்றி மனிதன் எப்படி சந்தேகிக்க முடியும்?

மனிதனே! இந்த குர்ஆனில் உலகம் சார்ந்த ஒரு செய்தியையாவது அது பொய் என்று உன்னால் நிரூபிக்க முடியுமா? அது உனக்கு அறவே சாத்தியமே இல்லை. அப்படி என்றால் இந்த குர்ஆன் பேசுகின்ற மறுமையும் மார்க்கமும் மட்டும் எப்படி பொய்யாக, தவறாக இருக்க முடியும்? சிந்திக்க மாட்டாயா?

உனக்கு முன் இருக்கின்ற இந்த தெளிவான குர்ஆனை ஒரு முறை படித்துப் பார்? இந்த குர்ஆன் முற்றிலும் உண்மையை மட்டுமே கூறக்கூடியதாகும். இதில் பொய்யுக்கும் புரட்டுக்கும் இடமே இல்லை.

இந்த வேதத்தை இறக்கிய, அகில உலகங்களின் அதிபதியான அல்லாஹ் உண்மையானவன். அவனது சொல்லும் கூற்றும் மிக மிக உண்மையானதாகும். அவன் இறக்கிய வேதம் முற்றிலும் உண்மையானதாகும். அதில் உண்மையான ஆதாரங்கள், உண்மையான வழிகாட்டல்கள், உண்மையான தத்துவங்கள், உண்மையான ஞான உபதேசங்கள் மட்டுமே உள்ளன. அவன் அனுப்பிய தூதர் உண்மையானவர். அவரின் சொற்களும் போதனைகளும் உண்மையானவை ஆகும். இப்படி சத்தியமிட்டும் சவால் செய்தும் அழுத்தம் திருத்தமாக அல்லாஹ் எடுத்துக் கூறும்போது மனிதன் ஏன் தடுமாறுகிறான், தயங்குகிறான், சத்தியத்தை விட்டு விலகி வழிகேட்டில் வெகுதூரம் செல்கிறான்?

உனக்கு முன் குர்ஆனிலிருந்து சில வசனங்களை எடுத்து எழுதுகிறேன். அவற்றை வாசி, கவனி, சிந்தி, புரி, நேர்வழி பெறு!

அல்லாஹ் உண்மையானவன். அவனை நம்புவது உண்மையை ஏற்பதாகும். அவனை நிராகரிப்பது உண்மையை நிராகரிப்பதாகும். நீ ஒன்றை கண்ணால் பார்த்து, சிந்தித்து, புரிந்து அதை சரியாக அறிவதற்குரிய ஆற்றல் உள்ளவன் என்றால் அல்லாஹ்வை நீ நம்பிக்கை கொள்வாய். அவன்தான் நீ வணங்க வேண்டியவன் என்பதில் நீ சந்தேகிக்க மாட்டாய்.

அல்லாஹ் தன்னைப் பற்றி கூறுகிறான்:

فَذٰلِكُمُ اللّٰهُ رَبُّكُمُ الْحَقُّ فَمَاذَا بَعْدَ الْحَقِّ إِلَّا الضَّلَالُ فَأَنّٰى تُصْرَفُونَ ○

ஆக, "அந்த அல்லாஹ்தான் உங்கள் உண்மையான இறைவன். ஆக, (இந்தளவு தெளிவான) உண்மைக்குப் பின்னர் வழிகேட்டைத் தவிர (வேறு) என்ன இருக்கிறது? நீங்கள் (உண்மையிலிருந்து) எவ்வாறு திருப்பப்படுகிறீர்கள்?" (அல்குர்ஆன் 10 : 32)

ذٰلِكَ بِأَنَّ اللّٰهَ هُوَ الْحَقُّ وَأَنَّ مَا يَدْعُونَ مِنْ دُونِهِ الْبَاطِلُ وَأَنَّ اللّٰهَ هُوَ الْعَلِيُّ الْكَبِيرُ ○

அது, (மேற்கூறப்பட்ட அனைத்தும்) நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மையானவன், இன்னும் நிச்சயமாக அவனை அன்றி அவர்கள் அழைக்கின்றவை (-வணங்குகின்றவை) பொய்யானவை, இன்னும் நிச்சயமாக அல்லாஹ்தான் மிக உயர்ந்தவன், மிகப் பெரியவன் என்ற காரணத்தால் ஆகும். (அல்குர்ஆன் 31 : 30)

அல்லாஹ் கூறுவதெல்லாம் உண்மையே! அவனிடமிருந்து வந்த வேதம் உண்மையானது. அவன் நமக்கு உண்மையை தெளிவாக விவரித்து கூறுகிறான். அவன் நமக்கு உண்மையின் பக்கம் வழிகாட்டுகிறான்.

قُلْ هَلْ مِنْ شُرَكَائِكُمْ مَنْ يَهْدِي إِلَى الْحَقِّ قُلِ اللّٰهُ يَهْدِي لِلْحَقِّ أَفَمَنْ يَهْدِي إِلَى الْحَقِّ أَحَقُّ أَنْ يُتَّبَعَ أَمَّنْ لَا يَهِدِّي إِلَّا أَنْ يُهْدٰى فَمَا لَكُمْ

كَيْفَ تَحْكُمُونَ○وَمَا يَتَّبِعُ أَكْثَرُهُمْ إِلَّا ظَنًّا إِنَّ الظَّنَّ لَا يُغْنِي مِنَ الْحَقِّ
شَيْئًا إِنَّ اللهَ عَلِيمٌ بِمَا يَفْعَلُونَ○

சத்தியத்தின் பக்கம் நேர்வழி காட்டுபவர் உங்கள் தெய்வங்களில் யாரும் உண்டா? என்று கூறுவீராக! "அல்லாஹ்தான் சத்தியத்திற்கு நேர்வழி காட்டுகிறான். சத்தியத்தின் பக்கம் நேர்வழி காட்டுபவன் பின்பற்றப்படுவதற்கு மிகத் தகுதியானவனா? அல்லது தான் நேர்வழி காட்டப்பட்டால் தவிர நேர்வழி அடையாதவ(ன் பின்பற்ற தகுதியானவ)னா? உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் எவ்வாறு தீர்ப்பளிக்கிறீர்கள்" என்று (நபியே) கூறுவீராக! அவர்களில் பெரும்பாலானவர்கள் சந்தேகத்தையே தவிர (வேறு எதையும்) பின்பற்றுவதில்லை. நிச்சயமாக சந்தேகம் உண்மையை விட்டும் ஒரு சிறிதும் பலன்தராது. நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கறிந்தவன். (அல்குர்ஆன் 10 : 35, 36)

يَقُصُّ الْحَقَّ وَهُوَ خَيْرُ الْفَاصِلِينَ○

அவன் உண்மையை விரிவாக எடுத்துக் கூறுகிறான். தீர்ப்பாளர்களில் அவன் மிகச் சிறந்தவன் ஆவான். (அல்குர்ஆன் 6 : 57)

وَاللهُ يَقُولُ الْحَقَّ وَهُوَ يَهْدِي السَّبِيلَ○

அல்லாஹ் உண்மையை கூறுகின்றான். அவன்தான் நல்ல பாதைக்கு வழிகாட்டுகின்றான். (அல்குர்ஆன் 33 : 4)

الْحَقُّ مِنْ رَبِّكَ فَلَا تَكُونَنَّ مِنَ الْمُمْتَرِينَ○

உண்மை உமது இறைவனிடமிருந்து வந்துவிட்டது. ஆகவே, சந்தேகிப்பவர்களில் நீர் ஒருபோதும் ஆகிவிடாதீர்! (அல்குர்ஆன் 2 : 147)

وَقُلِ الْحَقُّ مِنْ رَبِّكُمْ فَمَنْ شَاءَ فَلْيُؤْمِنْ وَمَنْ شَاءَ فَلْيَكْفُرْ○

(நபியே!) உங்கள் இறைவனிடமிருந்து உண்மை(யான இந்த வேதம்) வந்துவிட்டது. விரும்பியவர்கள் (இதை) நம்பிக்கை கொள்ளலாம். விரும்பியவர்கள் (இதை) நிராகரித்து விடலாம். (அல்குர்ஆன் 18 : 29)

قُلْ يَاأَيُّهَا النَّاسُ قَدْ جَاءَكُمُ الْحَقُّ مِنْ رَبِّكُمْ فَمَنِ اهْتَدَىٰ فَإِنَّمَا يَهْتَدِي لِنَفْسِهِ وَمَنْ ضَلَّ فَإِنَّمَا يَضِلُّ عَلَيْهَا وَمَا أَنَا عَلَيْكُمْ بِوَكِيلٍ

(நபியே!) கூறுவீராக! “மக்களே! உங்கள் இறைவனிடமிருந்து உண்மை (வேதம்) உங்களுக்கு வந்துவிட்டது. எவர் (அதன் படி) நேர்வழி நடப்பாரோ அவர் நேர்வழி நடப்பதெல்லாம் தன் நன்மைக்காகவே. எவர் வழிகெட்டாரோ அவர் வழிகெடுவதெல்லாம் தனக்குக் கேடாகத்தான். நான் உங்கள் மீது பொறுப்பாளனாக இல்லை.” (அல்குர்ஆன் 10 : 108)

وَالَّذِي أُنْزِلَ إِلَيْكَ مِنْ رَبِّكَ الْحَقُّ وَلَٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يُؤْمِنُونَ

(நபியே!) உம் இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டது உண்மைதான். என்றாலும் மக்களில் அதிகமானவர்கள் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். (அல்குர்ஆன் 13 : 2)

أَفَمَنْ يَعْلَمُ أَنَّمَا أُنْزِلَ إِلَيْكَ مِنْ رَبِّكَ الْحَقُّ كَمَنْ هُوَ أَعْمَىٰ إِنَّمَا يَتَذَكَّرُ أُولُو الْأَلْبَابِ

உம் இறைவனால் உமக்கு இறக்கப்பட்டதெல்லாம் உண்மைதான் என்று அறிகின்றவர் குருடரைப் போன்று ஆவாரா? (ஆகவே மாட்டார்.) நல்லுபதேசம் பெறுவதெல்லாம் அறிவுடையவர்கள்தான்.

(அல்குர்ஆன் 13 : 19)

ذَٰلِكَ بِأَنَّ اللَّهَ نَزَّلَ الْكِتَابَ بِالْحَقِّ وَإِنَّ الَّذِينَ اخْتَلَفُوا فِي الْكِتَابِ لَفِي شِقَاقٍ بَعِيدٍ

அது, நிச்சயமாக அல்லாஹ் உண்மையுடன் வேதத்தை இறக்கியிருக்கும் காரணத்தினாலாகும். நிச்சயமாக வேதத்தில் முரண்பட்டவர்கள் (வெகு) தூரமான பகைமையில்தான் இருக்கிறார்கள். (அல்குர்ஆன் 2 : 176)

அல்லாஹ் அனுப்பிய தூதர் உண்மையானவர். அவர் நமக்கு உண்மையை எடுத்துரைத்தார்.

هُوَ الَّذِي أَرْسَلَ رَسُولَهُ بِالْهُدَىٰ وَدِينِ الْحَقِّ○

அவன் எத்தகையவன் என்றால் தனது ரஸூலை நேர்வழி இன்னும் உண்மையான மார்க்கத்துடன் அனுப்பினான். (அல்குர்ஆன் 9 : 33)

فَتَوَكَّلْ عَلَى اللَّهِ إِنَّكَ عَلَى الْحَقِّ الْمُبِينِ○

ஆகவே, (நபியே!) அல்லாஹ்வின் மீது நம்பிக்கை (தவக்குல்) வைப்பீராக! நிச்சயமாக நீர் தெளிவான சத்தியத்தின் மீது இருக்கின்றீர்.
(அல்குர்ஆன் 27 : 79)

إِنَّا أَرْسَلْنَاكَ بِالْحَقِّ بَشِيرًا وَنَذِيرًا وَلَا تُسْأَلُ عَنْ أَصْحَابِ الْجَحِيمِ○

(நபியே!) நிச்சயமாக நாம் உம்மை நற்செய்தி கூறுபவராகவும், எச்சரிப்பவராகவும் உண்மையைக் கொண்டு அனுப்பினோம். நரகவாசிகளைப் பற்றி (நீர்) விசாரிக்கப்பட மாட்டீர். (அல்குர்ஆன் 2 : 119)

يَاأَيُّهَا النَّاسُ قَدْ جَاءَكُمُ الرَّسُولُ بِالْحَقِّ مِنْ رَبِّكُمْ فَآمِنُوا خَيْرًا لَكُمْ وَإِنْ تَكْفُرُوا فَإِنَّ لِلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَكَانَ اللَّهُ عَلِيمًا حَكِيمًا○

மக்களே! இத்தூதர் உங்களிடம் உங்கள் இறைவனிடமிருந்து சத்தியத்தைக் கொண்டு வந்துவிட்டார். ஆகவே, நம்பிக்கை கொள்ளுங்கள். (அது) உங்களுக்கு மிக்க நன்று. நீங்கள் (அவரை) நிராகரித்தால், வானங்களிலும், பூமியிலுமுள்ளவை நிச்சயமாக அல்லாஹ்விற்குரியனவே! அல்லாஹ் நன்கறிந்தவனாக, மகா ஞானவானாக இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 170)

وَهُوَ الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ بِالْحَقِّ وَيَوْمَ يَقُولُ كُنْ فَيَكُونُ قَوْلُهُ الْحَقُّ وَلَهُ الْمُلْكُ يَوْمَ يُنْفَخُ فِي الصُّورِ عَالِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ وَهُوَ الْحَكِيمُ الْخَبِيرُ○

அவன்தான் உண்மையில் வானங்களையும், பூமியையும் படைத்தான். ‘ஆகுக!’ என அவன் கூறும் நாளில் உடனே (அது) ஆகிவிடும். அவனுடைய

சொல்தான் உண்மை. சூரில் ஊதப்படும் நாளில், அவனுக்கே ஆட்சி இருக்கும். மறைவானதையும், வெளிப்படையானதையும் அவன் அறிந்தவன். அவன்தான் ஞானவான், ஆழ்ந்தறிபவன். (அல்குர்ஆன் 6 : 73)

وَمَا خَلَقْنَا السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَمَا بَيْنَهُمَا إِلَّا بِالْحَقِّ وَإِنَّ السَّاعَةَ لَآتِيَةٌ فَاصْفَحِ الصَّفْحَ الْجَمِيلَ ○

வானங்களையும் பூமியையும், அவை இரண்டிற்கு மத்தியிலுள்ளவற்றையும் உண்மையான நோக்கத்திற்கே தவிர நாம் படைக்கவில்லை. நிச்சயம் (குறிப்பிட்ட) மறுமை வரக்கூடியதே! ஆகவே, அழகிய புறக்கணிப்பாக (அவர்களை) புறக்கணிப்பீராக. (அல்குர்ஆன் 15 : 85)

மேற்கண்ட வசனங்களை புரியும்போது பல உண்மைகள் நமக்கு தெரியவரும். இத்துடன் இமாம் அவர்கள் சாடையாக கூறிய தத்துவத்தையும் மனதில் இருத்திக்கொள்ளுங்கள்!

“ஆதமின் மகனே! கத்தி தீட்டப்படுகிறது, கிடாய்க்கு தீனி கொடுக்கப்படுகிறது. அடுப்பில் தீ மூட்டப்படுகிறது.”

பாவிகளுக்கு இவ்வுலக வாழ்க்கையில் எல்லா வசதிகளும் கொடுக்கப்படுகின்றன. குற்றவாளிகள், நிராகரிப்பாளர்கள் செல்வத்திலும் ஆட்சி அதிகாரத்திலும் உலக இன்பங்களிலும் புரளுகின்றனர். இது எப்படி என்றால் கிடாய்க்கு தீனி கொடுக்கப்படுவது போன்றதாகும். கிடாய்க்கு தீனி ஏன் கொடுக்கப்படுகின்றது? அதை இறுதியில் அறுப்பதற்காக. அப்படித்தான் இந்த பாவிகளுக்கு அல்லாஹ் வசதிகளை கொடுப்பது அவர்களை இறுதியில் அழிப்பதற்காக ஆகும்.

கத்தி தீட்டப்படுவது என்றால் கிடாயை அறுப்பதற்கு கத்தி தீட்டப்படுவது போன்று இந்த பாவிகளை தண்டிக்க அல்லாஹ்வின் தண்டனைகளும் தயாராக இருக்கின்றன. அல்லாஹ் நாடினால் மழையால் அழிப்பான். நாடினால் நில நடுக்கத்தால் அழிப்பான். அல்லாஹ் நாடினால் நோயினால் அழிப்பான். அல்லாஹ் நாடினால் காற்றால் அழிப்பான். இப்படி அவனது இராணுவம் நமது கற்பனைக்கு அப்பாற்பட்டது. கொழுத்த கிடாய், தான் கொழுத்துவிட்டதை நினைத்து பெருமைப் பட வேண்டாம். அப்படித்தான் இந்த பாவிகள் தாங்கள் அனுபவிக்கின்ற சுகபோக வாழ்க்கையை நினைத்து பெருமைப் பட வேண்டாம்.

அடுப்பில் தீ மூட்டப்படுகிறது என்பதை பாவிகளுக்கு நரக நெருப்பு எரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை இமாம் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆம், சுகபோகமான வாழ்க்கையில் அல்லாஹ்வை மறந்து அவனை நிராகரித்து, அல்லது அவனது கட்டளைகளை மீறி, பாவங்களில் வாழ்க்கையை கழித்த மக்கள் அந்த நரக நெருப்பிலே பல வகையான தண்டனைகளில் துன்பப்படுவார்கள். நரக நெருப்பின் வேதனை மிக கடுமையாக இருக்கும்.

ஆகவே, பாவிகளுக்கு அல்லாஹ் கால அவகாசம் அளிப்பதை யாரும் தவறாக எண்ணிவிட வேண்டாம். அல்லாஹ் அவர்களின் செயல்களை கவனிக்காமலும் இல்லை. மறக்காமலும் இல்லை. அவனிடமிருந்து அவர்கள் தப்பிக்க முடியாது.

அல்லாஹ் கூறுவதை கேளுங்கள்!

لَا يَغُرَّنَّكَ تَقَلُّبُ الَّذِينَ كَفَرُوا فِي الْبِلَادِ۝مَتَاعٌ قَلِيلٌ ثُمَّ مَأْوَاهُمْ جَهَنَّمُ وَبِئْسَ الْمِهَادُ۝

(நபியே!) நிராகரிப்பவர்கள் (ஆடம்பரமாக) நகரங்களில் சுற்றித்திரிவது உம்மை நிச்சயம் மயக்கிடவேண்டாம். (இது) ஓர் அற்ப இன்பமாகும். பிறகு, அவர்களுடைய தங்குமிடம் ஜஹன்னம் (நரகம்)தான். (அந்த) தங்குமிடம் கெட்டுவிட்டது. (அல்குர்ஆன் 3 : 196, 197)

وَلَا تَحْسَبَنَّ اللَّهَ غَافِلًا عَمَّا يَعْمَلُ الظَّالِمُونَ۝إِنَّمَا يُؤَخِّرُهُمْ لِيَوْمٍ تَشْخَصُ فِيهِ الْأَبْصَارُ مُهْطِعِينَ مُقْنِعِي رُءُوسِهِمْ لَا يَرْتَدُّ إِلَيْهِمْ طَرْفُهُمْ وَأَفْئِدَتُهُمْ هَوَاءٌ۝

(நபியே!) அக்கிரமக்காரர்கள் செய்வதைப் பற்றி கவனிக்காதவனாக அல்லாஹ்வை எண்ணி விடாதீர்! அவன் அவர்களை பிற்படுத்துவதெல்லாம், பார்வைகள் அதில் கூர்ந்து விழித்திடும் ஒரு நாளுக்காகத்தான். (அந்நாளில்) விரைந்தவர்களாக, தங்கள் தலைகளை உயர்த்தியவர்களாக (வருவர்). அவர்களின் பார்வை அவர்களிடம் திரும்பாது; அவர்களுடைய உள்ளங்கள் (பயத்தால்) வெற்றிடமாக ஆகிவிடும். (அல்குர்ஆன் 14 : 42, 43)

وَتَرَى الْمُجْرِمِينَ يَوْمَئِذٍ مُقَرَّنِينَ فِي الْأَصْفَادِ ۝ سَرَابِيلُهُمْ مِنْ قَطِرَانٍ وَتَغْشَىٰ وُجُوهَهُمُ النَّارُ

அந்நாளில் குற்றவாளிகளை விலங்குகளில் பிணைக்கப்பட்டவர்களாக காண்பீர் அவர்களுடைய சட்டைகள் தாரினால் ஆனவை. அவர்களுடைய முகங்களை நெருப்பு சூழும். (அல்குர்ஆன் 14 : 49, 50)

فَلَمَّا نَسُوا مَا ذُكِّرُوا بِهِ فَتَحْنَا عَلَيْهِمْ أَبْوَابَ كُلِّ شَيْءٍ حَتَّىٰ إِذَا فَرِحُوا بِمَا أُوتُوا أَخَذْنَاهُمْ بَغْتَةً فَإِذَا هُمْ مُبْلِسُونَ ۝ فَقُطِعَ دَابِرُ الْقَوْمِ الَّذِينَ ظَلَمُوا وَالْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ ۝

தாங்கள் உபதேசிக்கப்பட்டதை அவர்கள் மறந்தபோது (செல்வங்கள்) எல்லாவற்றின் வாசல்களை அவர்களுக்குத் திறந்தோம். முடிவாக, தாங்கள் கொடுக்கப்பட்டதைக் கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடைந்தபோது அவர்களைத் திடீரெனப் பிடித்தோம். அப்போது, அவர்கள் நம்பிக்கையிழந்து விடுகிறார்கள். ஆகவே, அநியாயமிழைத்த கூட்டத்தின் வேர் அறுக்கப்பட்டது. புகழ் (அனைத்தும்) அகிலத்தார்களின் இறைவன் அல்லாஹ்வுக்கே! (அல்குர்ஆன் 6 : 44, 45)

மனிதனே! உன்னை மறந்து விடாதே! நீ ஏன் இந்த உலகத்தில் படைக்கப்பட்டாய் என்பதை மறந்துவிடாதே! உன் இறைவனை நம்பிக்கைக் கொண்டு அவனது மார்க்கத்தை ஏற்று, உனது மறுமை வாழ்க்கைக்காக நல்லமல்களை அதிகமதிகம் தேடிக்கொள்! உன் பாவங்களுக்காக மன்னிப்பு கேட்டுக்கொள்! உன் இறைவன் பக்கம் முற்றிலும் திரும்பிடு. உன்னை அவனுக்காக அர்ப்பணித்து விடு!

அவன் உனக்கு ஆகுமாக்கிய சுகத்தை தவிர அவன் உனக்கு ஹராமாக்கிய சுகத்தை தேடிவிடாதே! பாவங்களில் இன்பம் கண்டு விடாதே! உலக களியாட்டங்களில் உன்னை பறிகொடுத்து விடாதே! எரியும் நெருப்பில் கொதிக்கும் எண்ணெயில் பொறிக்கப்படும் கிடாயின் நிலைமை உனக்கு வர வேண்டாம். உலகத்தில் மரணத்தோடு எல்லாம் முடிந்து விடும். மறுமையில் அப்படி அல்ல. அங்கு மரணமே இல்லை. நரகம் சென்ற பாவிகளுக்கு அங்கு மரணம் இல்லை.

அல்லாஹ்வே! எங்களை காப்பாற்று! எங்களுக்கு நல்லறிவை, நேர்வழியை, நற்பாக்கியத்தை தா! பாவங்களில் இருந்து எங்களை பாதுகாத்துக் கொள்! எங்களின் இருப்பிடத்தை சொர்க்கத்தில் ஏற்படுத்து. நரக நெருப்பை விட்டு எங்களை பாதுகாத்துக் கொள்! நீயே மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன். ஆமீன்!

• • •

## சுகபோக வாழ்க்கை வாழ்வதற்காக அல்ல செல்வம்!!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا حَوْشَبٌ عَنِ الْحَسَنِ قَالَ سَأَلْتُهُ فَقُلْتُ يَا أَبَا سَعِيدٍ رَجُلٌ آتَاهُ اللهُ مَالًا فَهُوَ يَحُجُّ مِنْهُ وَيَصِلُ مِنْهُ أَلَهُ أَنْ يَتَنَعَّمَ فِيهِ؟ فَقَالَ الْحَسَنُ: «لَا لَوْ كَانَتِ الدُّنْيَا لَهُ مَا كَانَ لَهُ إِلَّا الْكَفَافُ وَيُقَدِّمُ فَضْلَ ذٰلِكَ لِيَوْمِ فَقْرِهِ وَفَاقَتِهِ إِنَّمَا كَانَ الْمُتَمَسِّكُ مِنْ أَصْحَابِ رَسُولِ اللهِ وَمَنْ أَخَذَ عَنْهُمْ مِنَ التَّابِعِينَ كَانُوا يَكْرَهُونَ أَنْ يَتَّخِذُوا الْعُقْرَ وَالْأَمْوَالَ فِي الدُّنْيَا لِيَرْكَنُوا إِلَيْهَا ولِتَشْتَدَّ ظُهُورُهُمْ فَكَانُوا مَا آتَاهُمْ اللهُ مِنْ رِزْقٍ أَخَذُوا مِنْهُ الْكَفَافَ وَقَدَّمُوا فَضْلَ ذٰلِكَ لِيَوْمِ فَقْرِهِمْ وَفَاقَتِهِمْ ثُمَّ حَوَائِجِهِمْ بَعْدُ فِي أَمْرِ دِينِهِمْ وَدُنْيَاهُمْ فِيمَا بَيْنَهُمْ وَبَيْنَ اللهِ عَزَّ وَجَلَّ

ஹவ்ஷப் ﵀ கூறுகிறார், நான் ஹசன் பஸரி ﵀ அவர்களிடம் கேட்டேன். அபூ சயீது அவர்களே! ஒரு மனிதருக்கு அல்லாஹ் செல்வத்தை கொடுத்தான். அவர் அதிலிருந்து ஹஜ் செய்கிறார். இன்னும், அதிலிருந்து உறவுகளுக்கு கொடுக்கிறார், அவர்களை சேர்த்து வாழ்கிறார். இத்தகையவர் தனது அந்த செல்வத்தில் வசதியாக இன்பமாக சுகபோகமாக வாழலாமா? அதற்கு, ஹசன் பஸரி ﵀ கூறினார்: இல்லை, உலகமெல்லாம் அவருக்கு சொந்தமானதாக இருந்தாலும் அதிலிருந்து அவருக்கு அவசியமான, தேவையான அளவு மட்டுமே அனுமதிக்கப்பட்டதாகும். அது போக மேல் மிச்சமானதை தேவைகள் நிறைந்த தனது மறுமை நாளுக்காக அவர் முற்படுத்தி வைக்க வேண்டும்.

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களின் மார்க்கப் பற்றுள்ள தோழர்கள், இன்னும் அந்த தோழர்களிடம் கல்வி கற்ற தாபியீன்கள் இந்த உலகத்தில் நிலங்கள் இன்னும் செல்வங்களை - அவற்றின் பக்கம் சாய்வதற்காகவும் அவற்றின் மூலம் தங்கள் பின்புலம் வலுப்பெறுவதற்காகவும் - ஏற்படுத்திக் கொள்வதை வெறுப்பவர்களாக இருந்தார்கள். ஆக, அல்லாஹ் அவர்களுக்கு கொடுத்த வாழ்வாதாரத்தில் அவசியத் தேவைகளுக்கு உரியதை மட்டும் எடுத்துக் கொள்வார்கள். அதுபோக மேல் மிச்சமானதை கடும் தேவைகள் நிறைந்த மறுமை நாளுக்காக முற்படுத்தி வைப்பார்கள். பிறகு, அல்லாஹ்விற்கும் தங்களுக்கும் இடையில் இருக்கின்ற தங்களது தீன், துன்யா உடைய தேவைகளுக்காக அந்த செல்வத்தை வைத்திருப்பார்கள்.

**கருத்து:** அல்லாஹ்வே! அந்த சான்றோர் மீது கருணை புரிவாயாக! அவர்கள் எங்கே! நாம் எங்கே! உலகத்தை புரிந்தவர்கள் அதில் ஏமாற மாட்டார்கள். மனிதன் இந்த உலகத்தில் பிறக்கும்போது தான் யார் என்பதே அறியாதவனாக இருந்தான். இந்த உலகத்தில் எதற்கும் உரிமை இல்லாதவனாக இருந்தான்.

பிறகு, அவனது வாழ்க்கையில் இந்த செல்வம் புகுந்து அவனை மயக்கி விடுகிறது. இந்த உலகத்தின் அலங்காரமான செல்வங்கள், கவர்ச்சியான பொருள்கள், கண்ணை கவருகின்ற இல்லங்கள், மனதை பறிக்கின்ற பல தோட்டங்கள், ஆடம்பரமான வஸ்துக்கள் இப்படியாக பலவற்றில் மனிதன் நாட்டம் கொள்கிறான்.

மனிதன் இந்த உலகத்தில் மூழ்க ஆரம்பிக்கும்போது மறுமையை மறக்க ஆரம்பிக்கிறான்.

மனிதன் இந்த உலகத்தை நேசிக்க ஆரம்பிக்கும்போது மறுமையை மறக்கவும் மரணத்தை வெறுக்கவும் ஆரம்பிக்கிறான்.

மனிதன் இந்த உலகத்தில் செல்வத்தையும் சொத்தையும் தோட்டம் துரவுகளையும் அதிகம் அதிகம் தனக்கு சொந்தமாக்க வேண்டும் என்று ஆசைப்படும்போது வணக்க வழிபாட்டில் அவனது மனம் நாட்டம் கொள்ளாது.

உலகத்தில் பல விதமான செல்வங்கள் உள்ளன. தங்கம், வெள்ளி, விலை உயர்ந்த மாணிக்க மரகத கற்கள், முத்து பவளங்கள், ஆடம்பரமான ஆடை அணிகலன்கள், வாழ்வதற்கு மிக மிக வசதியான விசாலமான நவீன வீடுகள், பழம் தரும் மரங்களையும் நிழல் தரும் அழகிய தோட்டங்கள், இப்படியாக

உலக வாழ்க்கையில் எண்ணற்ற செல்வங்கள் உள்ளன. அவை எல்லாம் அழிந்துபோகக் கூடியவை ஆகும்.

இந்த உலகமோ அதில் உள்ள செல்வமோ பொருளோ வசதியோ எதுவுமே அதில் நிரந்தரமல்ல.

நமக்கு இந்த உலகம் நிரந்தரமல்ல. இந்த உலகத்திற்கு நாமும் நிரந்தரமல்ல. எல்லாமே தற்காலிகம்தான். நாமும் தற்காலிகம், நமக்குள்ளவையும் தற்காலிகம்தான்.

நமது வாழ்க்கையும் மாறக்கூடியதே, நாமும் மாறக்கூடியவர்களே!

நமக்கு முன் வாழ்ந்து சென்றவர்கள் விட்டு சென்ற மிச்சத்தைத்தான் நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம். இந்த உலகத்தில் புதிது எதுவும் புதிதல்ல. இந்த உலகத்தில் எதுவும் நிரந்தரமல்ல. யாரும் இந்த உலகத்தில் நிரந்தரமானவர் அல்ல.

எத்தனை ஆயிரம் ஆண்டுகள் உருண்டோடிவிட்டன இந்த உலகத்தை அல்லாஹ் படைத்ததிலிருந்து.

நமது தந்தை ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களில் இருந்து எத்தனை நபிமார்கள் வந்து சென்றுவிட்டார்கள். எத்தனை சமுதாயம் வந்து சென்று விட்டன. எத்தனை மன்னர்கள் இந்த மண்ணுக்காக சண்டையிட்டு மாண்டுவிட்டார்கள். எத்தனை இராணுவங்கள் அழிந்து விட்டன. கோட்டைகளும் அரண்மனைகளும் கோபுரங்களும் பாழடைந்து கிடக்கின்றன.

பகட்டாக உடுத்திய உடைகள், ருசியாக உண்ட உணவுகள், பகட்டாக அணிந்து பெருமைப்பட்ட அணிகலன்கள், இப்படி எதுவும் மனிதனோடு செல்லவில்லை அவன் மண்ணுக்குள் சென்றபோது. அப்படி இருக்க நாம் ஏன் இந்த செல்வங்களுக்கு பின்னால் மனதை பறிகொடுக்க வேண்டும்? நாம் ஏன் இவற்றுக்குப் பின்னால் அலைய வேண்டும்? இந்த செல்வங்களை சேர்ப்பது, அவற்றை கட்டிக் காப்பது, அவற்றை எடுத்துக் கூறி பெருமை பேசுவது, உன்னிடம் அதிகமா என்னிடம் அதிகமா என்று போட்டி போடுவது... இதற்காகவா நாம் படைக்கப்பட்டோம்?

மறுமையை கொஞ்சம் எண்ணிப் பார்த்தோமா?

அல்லாஹ்விற்கு முன்னால் நிற்கும் அந்த நாளை கொஞ்சம் நினைத்துப் பார்த்தோமா?

பெற்றோரும் பிள்ளைகளும் உடன் பிறந்தோரும் கட்டியவளும் உதவமுடியாத விசாரணை நாளை மறந்து விட்டோமே?

இந்த உலகத்தில் வந்தவர் கண்டிப்பாக திரும்பி சென்றே ஆக வேண்டும். அந்த மறுமைக்கு சென்றவரோ அங்கிருந்து வேறு எங்கும் செல்ல முடியாதே! தப்பிக்க இடம் இருக்காது, ஒதுங்க இடம் இருக்காது. சொர்க்கம் நரகம் என்ற இரு இல்லங்களைத் தவிர வேறு இல்லம் அங்கு இல்லை. அமல்கள் மட்டுமே பலனளிக்கும். பிள்ளைக் குட்டியோ தங்கமோ வெள்ளியோ செல்வமோ பதவியோ எதுவும் பலன் அளிக்காத நாளல்லவோ?

மனிதனே! உன்னிடமுள்ளதெல்லாம் உன் அறிவால் கிடைத்தவை என்று எண்ணாதே! உன் திறமை என்று ஏதும் இல்லை. எல்லாம் இறைவன் உனக்கு கொடுத்ததே! அறிவும் அவன் கொடுத்ததுதான். திறமையும் அவன் கொடுத்ததுதான். உன்னிடம் உள்ள எல்லாம் அவன் கொடுத்தவையே! உன்னை சோதிப்பதற்காக கொடுத்திருக்கின்றான். உனக்கு சோதனையாக கொடுத்திருக்கிறான் என்பதை புரிந்து கொள்!

மனிதனே! உன் ஆசைகளை எல்லாம் இவ்வுலகில் அடைந்து விடலாம் என்ற ஏமாற்றத்தில் இருக்கிறாயா?

அல்லது அடைந்து விட வேண்டும் என்ற வெறியில் இருக்கிறாயா?

நீ வாலிபனா? வயோதிகமடைந்த உன் தந்தையை நீ நினைத்துப் பார்க்கவில்லையா?

நோயுற்று தள்ளாடும் வயதில் உண்ணவும் உறங்கவும் அவதிப்படும் உனது பாட்டனை நீ பார்க்கவில்லையா?

இந்த உலகத்தில் வாழ நீ ஆசைப்படுகிறாயா? இந்த வாழ்க்கையின் சுகங்களை அனுபவிக்க நீ விரும்புகிறாயா? உன் வாழ்க்கைக்கு மரணம் என்ற எல்லை உண்டு! உன் ஆசைகளை அனுபவிக்க உடல் ஆரோக்கியம் என்ற எல்லை உண்டு! மறந்துவிடாதே!

நீ விரும்புகின்ற, நீ ஆசைப்படுகின்ற பல இன்பங்களுக்கு பின்னால் ஆபத்து மறைந்திருக்கிறது! மயங்கி விடாதே! விரிக்கப்பட்ட வலையை கவனிக்காமல் அதில் தெறிக்கப்பட்ட தானியங்களை பொருக்கி பிறகு சிக்கி தவிக்கும் பறவைகளை பார்த்து நீ படிப்பினை பெற மாட்டாயா?

மனிதனே! உனக்கு முன் வாழ்ந்த நல்லோரைப் பார்! அவர்கள்தான் புத்திசாலிகள்! இறைவன் கொடுத்ததை இறைவனுக்காக கொடுத்துவிட்டார்கள்.

இறைவன் எங்கே, யாருக்கு கொடுக்க சொன்னானோ அங்கே அவர்களுக்காக கொடுத்து விட்டார்கள். அவர்கள் கொடுத்தவற்றை அவர்கள் தங்கள் இறைவனிடம் பத்திரப்படுத்திக்கொண்டார்கள். அவர்களிடம் இருந்த உலக செல்வங்கள் ஏராளம். அவர்கள் ஏழைகளாக இருக்கவில்லை. மாபெரும் செல்வ சீமான்களாக வாழ்ந்தார்கள். ஆனால், அந்த செல்வங்களைக் கொண்டு இறை அன்பைத் தேடினார்கள், மறுமையின் சொர்க்கலோக வீட்டை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள். இந்த உலகத்தில் அவர்கள் விட்டுச் சென்றதை விட மறுமைக்கு அவர்கள் அனுப்பியது அதிகம்.

உனக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். நீ உனது நிரந்தரமான மறுமை வாழ்க்கைக்கு கொஞ்சமாக எடுத்து செல்கிறாய்! நீ பிரிந்து செல்லும் இந்த உலகத்தில் அதிகமாக விட்டுச் செல்கிறாய். அவர்களோ மறுமையின் நிரந்தரமான வாழ்க்கைக்கு அதிகம் அதிகம் அனுப்பிவிட்டு சென்றார்கள்.

இதைத்தான் நமது ஆசிரியர் இமாம் ஹசன் ﵀ நமக்கு இப்படி உபதேசம் செய்கிறார்கள். உனது செல்வத்தைக் கொண்டு வணக்க வழிபாடுகளை நிறைவேற்றிய பின்னரும், உறவுகளுக்கு ஏழை எளியவர்களுக்கு நீ கொடுத்த பின்னரும், நீ உனது சுகபோக ஆடம்பர வாழ்க்கைக்கு நீ செலவு செய்வது உனக்கு ஆகுமானதல்ல.

ஆம், ஏன் தெரியுமா? ஆடம்பரத்திற்கு அளவு இல்லை, அனாவசியமான தேவைகளுக்கு எல்லை இல்லை. மனிதனின் ஆசைகளுக்கு வரம்பு இல்லை. நீ அவற்றில் இறங்க ஆரம்பித்தால் கடலின் ஆழத்தில் நீ இறங்கியது போன்றுதான். எந்த ஆசையும் ஓர் அளவோடு நிற்காது. ஆகவே! நீ ஆசைப்பட வேண்டியதை மறுமையில் ஆசைப்படு! அங்கே உனது ரப்பு உனக்காக ஏற்படுத்தி இருக்கும் எல்லை அற்ற சுகபோக வாழ்க்கைக்காக, கற்பனையே செய்து பார்க்க முடியாத வசதியான, இன்பமான, இனிமையான, கண் குளிர்ச்சியான, மனது மிக மிக விருப்பமான வாழ்க்கைக்காக உன்னிடம் இருக்கும் செல்வங்களை செலவழித்துக் கொண்டே இரு! வாரி வழங்கிக் கொண்டே இரு! கொடுத்துக் கொண்டே இரு! நீ உனது மறுமைக்காக முற்படுத்தியது நீ இவ்வுலகில் விட்டுச் செல்வதை விட அதிகமாக இருக்கட்டும்! அல்லாஹ் உனக்கு அருள் புரிவானாக! நன்மைகளுக்கு வாய்ப்பளிப்பானாக! ஆமீன்.

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَأَقْرِضُوا اللَّهَ قَرْضًا حَسَنًا وَمَا تُقَدِّمُوا

لِأَنْفُسِكُمْ مِنْ خَيْرٍ تَجِدُوهُ عِنْدَ اللهِ هُوَ خَيْرًا وَأَعْظَمَ أَجْرًا وَاسْتَغْفِرُوا اللَّهَ إِنَّ اللَّهَ غَفُورٌ رَحِيمٌ

தொழுகையை நிலை நிறுத்துங்கள்! ஸகாத்தை கொடுங்கள்! அல்லாஹ்விற்கு அழகிய கடன் கொடுங்கள்! உங்களுக்காக நன்மையில் எதை நீங்கள் முற்படுத்துகிறீர்களோ அதை அல்லாஹ்விடம் (நீங்கள் செய்ததை விட) மிகச் சிறப்பாகவும் கூலியால் மிகப் பெரியதாகவும் நீங்கள் பெறுவீர்கள். அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன் ஆவான். (அல்குர்ஆன் 73 : 20)

அல்லாஹ்வே! உலக செல்வத்தை எங்களுக்கு சோதனையாக ஆக்கிவிடாதே! இந்த செல்வத்தைக் கொண்டு உனது பொருத்தத்தையும் சொர்க்கத்தையும் வாங்கிய வெற்றியாளர்களில் எங்களை ஆக்குவாயாக. உலக செல்வத்தில் மூழ்கி மறுமையையும் உனது நினைவையும் மறந்த நஷ்டவாளிகளில் எங்களை ஆக்கிவிடாதே! நீ எங்களுக்கு கொடுத்த செல்வத்தை உனக்கு பிரியமான எல்லா நல்ல வழிகளிலும் செலவு செய்ய எங்களுக்கு வாய்ப்பை தருவாயாக! எங்கள் உள்ளத்தில் கருமித்தனத்தை ஏற்படுத்தி விடாதே! சொர்க்கத்திற்கான செல்வத்தை கொடுப்பாயாக! நரகத்தின் செல்வத்திலிருந்து எங்களை பாதுகாப்பாயாக. ஆமீன்!

• • •

## உண்மைக்கு உரைகல் ஆதாரமே தவிர பெரும்பான்மை அல்ல

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبُو يَعْقُوبَ الدَّوْرَقِيُّ قَالَ: أَخْبَرَنَا عَبْدُ الرَّحْمٰنِ حَدَّثَنِي بَكْرُ بْنُ حُمْرَانَ عَنْ أَبِي عَامِرٍ الْخَزَّازِ قَالَ: سَمِعْتُ الْـحَسَنَ يَقُولُ: «يَرْحَمُ اللهُ رَجُلًا لَمْ يُغْرِهِ مَا يَرَىٰ مِنْ كَثْرَةِ النَّاسِ ابْنَ آدَمَ تَمُوتُ وَحْدَكَ وَتَدْخُلُ الْقَبْرَ وَحْدَكَ وَتُبْعَثُ وَحْدَكَ وَتُحَاسَبُ وَحْدَكَ ابْنَ آدَمَ أَنْتَ الْمَعْنِيُّ وَإِيَّاكَ يُرَادُ» قَالَ يَعْقُوبُ فِي حَدِيثِهِ عَنْ صَالِحٍ أَبِي عَامِرٍ الْخَزَّازِ

அபூ ஆமிர் ﵀ கூறுகிறார்: ஹசன் பஸரி ﵀ கூற நான் செவியுற்றேன், "அல்லாஹ் ஒரு மனிதருக்கு கருணை புரிவானாக! மக்கள் (ஒரு கருத்தில், அல்லது ஒரு கொள்கையில்) அதிகமாக இருப்பதை அவர் பார்ப்பது அவரை மயக்கி விடாமல், ஏமாற்றி விடாமல் இருக்கிறது." ஆதமின் மகனே! (நன்கு புரிந்துகொள்!) நீ தனியாகத்தான் மரணிக்கப் போகிறாய். இன்னும், நீ தனியாகத்தான் கப்ர் - மண்ணறையில் நுழையப் போகிறாய். இன்னும், நீ தனியாகத்தான் எழுப்பப்படுவாய். இன்னும், நீ தனியாகத்தான் விசாரிக்கப்படுவாய். நீதான் நோக்கம். உன்னைத்தான் கருத்தில் கொள்ளப்படுகிறது.

**கருத்து:** இமாம் அவர்கள், மிகப் பெரிய ஓர் அடிப்படையை நமக்கு இங்கு உணர்த்துகிறார்கள். ஆம், சத்தியத்தையும் உண்மையையும் நாம் பார்க்க வேண்டும். சரியான ஆதாரம் எதற்கு துணை நிற்கிறதோ அதுதான் சத்தியம். அங்கீகரிக்கப்பட்ட சான்று எதை உறுதிப்படுத்துகிறதோ அதுதான் உண்மை.

ஆதாரமின்றி மக்கள் பின்பற்றுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. பின்பற்றக் கூடியவர்கள் அதிகமாக இருப்பதால் ஒரு கொள்கை, அல்லது ஒரு அமல் சரியானதாக ஆகிவிடாது.

இன்று பெரும்பாலான மக்களிடம் உண்மை எடுத்து சொல்லப்பட்டால், அவர்கள் சத்தியத்தின் பக்கம் அழைக்கப்பட்டால் அதை புறக்கணித்து விலகி செல்வதையும் அதை நிராகரிப்பதையும் பார்க்கிறோம். அவர்கள் கூறுகின்ற காரணம் இதுதான். அதாவது, மக்கள் அதிகமானவர்கள் இதைத்தானே செய்கிறார்கள். மக்கள் அதிகமானவர்கள் இதைத்தானே பின்பற்றுகிறார்கள். இப்படி, பெரும்பான்மையை பார்த்தே பலர் வழிகேட்டில் சென்று விட்டனர். இன்னும், பலர் தமது வழிகேட்டில் பிடிவாதமாக நீடித்து இருக்கின்றனர்.

இறைத்தூதர்கள் அனுப்பப்பட்ட காலத்தில் இருந்தே மக்களுக்கு இந்த குழப்பம் நீடித்து வருகிறது. பெரும்பான்மையை பார்த்து உண்மையை, சத்தியத்தை முடிவு செய்வது மக்களின் வழக்கமாக இருக்கிறது.

இத்தகைய தவறான முடிவால் மக்களில் பலர் சத்தியத்தை தவறவிட்டனர்; உண்மையை பகைத்துக் கொண்டனர்; நேர்வழியை விட்டு வெருண்டோடினர். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! ஆமீன்.

இந்த கொள்கை தவறு என்பதை இமாம் அவர்கள் மிக அழகாக நமக்கு புரிய வைக்கிறார்கள்.

அதாவது, மனிதனே! நீ உண்மையை பார்க்காமல், சத்தியத்தை சிந்திக்காமல் அவர் என்ன கொள்கையில் இருக்கிறார், இவர் என்ன கொள்கையில் இருக்கிறார் என்று பார்த்தே நீ வழிகெட்டு விடுகிறாய்.

நீ இறைவனுக்கு முன்னால் நாளை மறுமை நாளில் தனியாக வந்து நிற்பாய். சிந்தித்துப் பார்த்தாயா? உனது மண்ணறைக்கு யாரும் வரமாட்டார்கள். நீ விசாரிக்கப்படும்போது யாரும் உனக்காக வந்து அல்லாஹ்வின் முன்னிலையில் வாதிட மாட்டார்கள்.

அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளையும் உன்னை நேரடியாக முன்னோக்குகிறது. உனக்கு பயமில்லையா? உனக்கு அறிவில்லையா? உனக்கு சுய சிந்தனை இல்லையா? உனக்கு இறைவன் ஏன் அறிவை கொடுத்தான்? அதைக் கொண்டு நன்மை எது தீமை எது என்று ஆராய மாட்டாயா? சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிய மாட்டாயா?

இறைவன் பெரியவனா? மக்களின் பெரும்பான்மை பெரிதா? இறைவனின் தூதர்கள் பின்பற்ற தகுதியானவர்களா அல்லது பெரும்பான்மை மக்களா?

மனிதனை வழிகெடுக்க சபதம் ஏற்றுள்ள இப்லீஸ் விரிக்கும் வலைகளில் ஒன்றுதான் இந்த பெரும்பான்மை. இதைப் பார்த்து ஏமாந்து போகும் பலர் இம்மை மறுமையின் நேர்வழியை தவற விட்டுவிட்டு பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி விடுகின்றனர்.

மனிதன் நம்பிக்கை வைத்த பெரும்பான்மையோ, படை பலமோ, குலம் கோத்திரமோ நாளை மறுமை நாளில் யாரும் அவனுடன் வந்து நிற்க மாட்டார்கள்; அவனுக்கு உதவ முன் வர மாட்டார்கள். எல்லோரும் ஓடி ஒளிந்து கொள்வார்கள். அந்த மறுமை நாளில் யார் யாருக்காக பரிந்து பேச முடியும்? யார் யாருக்காக உதவ ஓடி வர முடியும்?

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا أَدْرَاكَ مَا يَوْمُ الدِّينِ○ثُمَّ مَا أَدْرَاكَ مَا يَوْمُ الدِّينِ○يَوْمَ لَا تَمْلِكُ نَفْسٌ لِنَفْسٍ شَيْئًا وَالْأَمْرُ يَوْمَئِذٍ لِلَّهِ○

இன்னும் (நபியே!) கூலி நாள் (விசாரணை நாள், தீர்ப்பு நாள்) என்ன(வென்று) உமக்கு அறிவித்தது எது? பிறகு, கூலி நாள் என்ன(வென்று) உமக்கு அறிவித்தது எது? ஓர் ஆன்மா, (வேறு) ஓர் ஆன்மாவுக்கு எதையும் உரிமை பெறாத நாள் (அது). அதிகாரம் அந்நாளில் அல்லாஹ்விற்கே!

(அல்குர்ஆன் 82 : 17-19)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمْ وَاخْشَوْا يَوْمًا لَا يَجْزِي وَالِدٌ عَنْ وَلَدِهِ وَلَا مَوْلُودٌ هُوَ جَازٍ عَنْ وَالِدِهِ شَيْئًا إِنَّ وَعْدَ اللهِ حَقٌّ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيَاةُ الدُّنْيَا وَلَا يَغُرَّنَّكُمْ بِاللهِ الْغَرُورُ○

மக்களே! உங்கள் இறைவனை பயந்து கொள்ளுங்கள்! இன்னும், ஒரு நாளை பயந்துகொள்ளுங்கள்! (அந்நாளில்) தந்தை தன் மகனை விட்டும் (வேதனையை) தடுக்கமாட்டார். பிள்ளையும் தனது தகப்பனை விட்டும் (வேதனையை) தடுக்கக் கூடியவராக இல்லை. நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்கு உண்மையானது. ஆகவே, உலக வாழ்க்கை உங்களை ஏமாற்றிவிட வேண்டாம். ஏமாற்றக் கூடியவன் அல்லாஹ்வின் விஷயத்தில் உங்களை ஏமாற்றி விடவேண்டாம். (அல்குர்ஆன் 31 : 33)

فَإِذَا جَاءَتِ الصَّاخَّةُ ۝ يَوْمَ يَفِرُّ الْمَرْءُ مِنْ أَخِيهِ ۝ وَأُمِّهِ وَأَبِيهِ ۝
وَصَاحِبَتِهِ وَبَنِيهِ ۝ لِكُلِّ امْرِئٍ مِنْهُمْ يَوْمَئِذٍ شَأْنٌ يُغْنِيهِ ۝

ஆகவே, (ஒரு நாளில் மறுமையின்) செவிடாக்கும் சப்தம் வந்தால், அந்நாளில், மனிதன் தனது சகோதரனை விட்டும் விரண்டோடுவான். இன்னும் தனது தாயை விட்டும், தனது தந்தையை விட்டும் (விரண்டோடுவான்). இன்னும், தன் மனைவியை விட்டும், தன் பிள்ளைகளை விட்டும் (விரண்டோடுவான்). அந்நாளில், அவர்களில் ஒவ்வொரு மனிதனுக்கும், (மற்றவர்களை விட்டு) அவனைத் திருப்பிவிடுகின்ற நிலைமை இருக்கும்.

(அல்குர்ஆன் 80 : 33-37)

இப்படி மறுமை நாளை குறித்து அச்சுறுத்துகின்ற பல வசனங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் உள்ளங்களை நடுங்க வைக்கும் வசனமாகும். உண்மைக்கும், சத்தியத்திற்கும், சன்மார்க்கத்திற்கும் செவி சாய்க்காத மனிதன் நாளை மறுமையில் கத்தி கதறி அழுது பிரலாபித்து கூக்குரலிடுவான். ஆனால், அவை ஏதும் பலனளிக்காது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَيَوْمَ يَعَضُّ الظَّالِمُ عَلَىٰ يَدَيْهِ يَقُولُ يَالَيْتَنِي اتَّخَذْتُ مَعَ الرَّسُولِ
سَبِيلًا ۝ يَاوَيْلَتَا لَيْتَنِي لَمْ أَتَّخِذْ فُلَانًا خَلِيلًا ۝ لَقَدْ أَضَلَّنِي عَنِ الذِّكْرِ
بَعْدَ إِذْ جَاءَنِي وَكَانَ الشَّيْطَانُ لِلْإِنْسَانِ خَذُولًا ۝

அந்நாளில் அநியாயக்காரன் தன் இரு கைகளையும் கடித்துக் கொண்டு "நம் தூதருடன் நானும் நேரான வழியைப் பின்பற்றிச் சென்றிருக்க வேண்டாமா?" என்று கூறுவான். (அன்றி) "என்னுடைய துக்கமே! (பாவம் செய்யும்படித் தூண்டிய) இன்னவனை நான் என்னுடைய நண்பனாக ஆக்கிக் கொள்ளாமல் இருந்திருக்க வேண்டாமா? நல்லுபதேசம் என்னிடம் வந்ததன் பின்னரும் அதிலிருந்து அவன் என்னைத் திருப்பி விட்டானே! அந்த ஷைத்தான் மனிதனுக்குப் பெரும் சதிகாரனாக இருந்தானே!" (என்றும் புலம்புவான்.)

(அல்குர்ஆன் 25 : 27-29)

يَوْمَ تُقَلَّبُ وُجُوهُهُمْ فِي النَّارِ يَقُولُونَ يَالَيْتَنَا أَطَعْنَا اللَّهَ وَأَطَعْنَا الرَّسُولَا

وَقَالُوا رَبَّنَا إِنَّا أَطَعْنَا سَادَتَنَا وَكُبَرَاءَنَا فَأَضَلُّونَا السَّبِيلَا ۝ رَبَّنَا آتِهِمْ ضِعْفَيْنِ مِنَ الْعَذَابِ وَالْعَنْهُمْ لَعْنًا كَبِيرًا ۝

நரகத்தில் அவர்களுடைய முகங்களை புரட்டிப் புரட்டிப் பொசுக்கும் நாளில் "எங்களுடைய கேடே! நாங்கள் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டிருக்க வேண்டாமா?" என்று கதறுவார்கள். அன்றி "எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் எங்கள் தலைவர்களுக்கும், எங்கள் பெரியவர்களுக்கும் வழிப்பட்டோம். நாங்கள் தப்பான வழியில் செல்லும்படி அவர்கள் செய்து விட்டார்கள். (ஆகவே) எங்கள் இறைவனே! நீ அவர்களுக்கு இரு மடங்கு வேதனையைக் கொடுத்து, அவர்கள் மீது பெரிய சாபத்தைப் போடு" என்று கூறுவார்கள். (அல்குர்ஆன் 33 : 66-68)

وَقَالَ الَّذِينَ كَفَرُوا رَبَّنَا أَرِنَا اللَّذَيْنِ أَضَلَّانَا مِنَ الْجِنِّ وَالْإِنْسِ نَجْعَلْهُمَا تَحْتَ أَقْدَامِنَا لِيَكُونَا مِنَ الْأَسْفَلِينَ ۝

நிராகரித்தவர்கள் அந்நாளில் (இறைவனை நோக்கி,) "எங்கள் இறைவனே! எங்களை வழிகெடுத்த மனிதர்களையும், ஜின்களையும் எங்களுக்கு நீ காண்பி. அவர்கள் இழிவுக்குள்ளாகும் பொருட்டு, நாங்கள் அவர்களை எங்கள் கால்களுக்குக் கீழாக்கி மிதிப்போம்" என்று கூறுவார்கள்.

(அல்குர்ஆன் 41 : 29)

மனிதனே! இதுதான் உண்மை நிலை. யார் பேச்சைக் கேட்டு நீ வழிகேட்டில் சென்றாயோ, தூதரை பகைத்தாயோ, வேதத்தை நம்ப மறுத்தாயோ அவர்கள் யாரும் உனக்கு உதவ முடியாது.

அல்லாஹ்வின் மார்க்கத்தில் அனாச்சாரம் செய்பவர்களே! நபி ﷺ அவர்கள் கொண்டு வந்த பரிசுத்தமான தீனுல் இஸ்லாமில் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் புகுத்தி தாமும் வழிகெட்டு மக்களையும் வழிகேட்டில் தள்ளுகின்ற பண்டிதர்களே!

உலகத்தில் உங்கள் அனாச்சாரங்களை பின்பற்றுகின்ற மக்கள் அதிகமாக இருக்கலாம். உங்கள் வழிகேடுகளை ஆதரிக்கும் வீணர்கள் ஏராளம் இருக்கலாம். நீங்களும் உங்களை பின்பற்றுகின்ற மார்க்க அறிவற்றவர்களும் பல்லாயிரக்கணக்கில் இருக்கலாம்.

அந்த எண்ணிக்கைதான் உங்களை மயக்கி இருக்கிறது. உங்களின் பெரும்பான்மை அல்லாஹ்விடம் உங்களுக்கு எந்த பலனையும் தராது.

அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து எதையும் உங்களுக்கு தடுக்காது.

ஏமாந்து விடாதீர்கள்! சத்திய ஆதாரத்தை புறக்கணித்து விட்டு மார்க்கத்தில் மஜூசிகளின் துறவறக் கொள்கைகளையும், சிலை வணங்கிகளின் அத்வைத கொள்கைகளையும், மூட நம்பிக்கைகளையும் அல்லாஹ்வின் ஏகத்துவ மார்க்கத்தில் புகுத்தி மக்களை ஷிர்க்கில் தள்ளுகின்ற சூஃபி கொள்கை பேசுவோரே!

அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்! உங்களை ஆதரிக்கின்ற அரசாங்கமோ மன்னர்களோ அதிகாரிகளோ செல்வந்தர்களோ உங்களுடன் மண்ணறைக்கு வர மாட்டார்கள். நீங்கள் விசாரணைக்கு உள்ளாக்கப்படும்போது உங்களுக்கு அவர்கள் துணை நிற்க முடியாது.

மக்களே! அல்லாஹ்வின் தீன் உங்களுக்கு முன்னால் தெளிவாக குழப்பமின்றி எவ்வித இணைவைத்தலின் சடங்குகள் இன்றி வந்து விட்டது! நீங்கள் யாரைப் பின்பற்றப் போகிறீர்கள்? ஆதாரத்தையா? நபி ﷺ அவர்களின் வழிமுறையையா? அதை பின்பற்றுவோர் குறைவாக இருந்தாலும் சரி.

அல்லது வழிகேட்டையும் அனாச்சாரத்தையும் ஷிர்க்கான சடங்குகளையும் பின்பற்றுவோர் அதிகமாக இருக்கிறார்கள் என்று அவற்றை பின்பற்ற போகிறீர்களா? அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள்!!

இமாம் ஹசனுக்கு ﵀ அல்லாஹ் அருள் புரிவானாக! எத்தகைய ஆழமான கருத்தை தெளிவாக நமக்கு விளக்கி தந்துள்ளார்கள். வெற்றி வேண்டும், அல்லாஹ்வின் சொர்க்கம் வேண்டும், நரகத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்று ஆசைப்படுவோர் அல்லாஹ்வின் நேர்வழியை பின்பற்றட்டும். அதை ஏற்பவர்கள் குறைவாக இருந்தாலும் சரி. யார் அதிகத்தை பின்பற்ற நினைக்கிறார்களோ அது சரியா தவறா என்று சிந்திக்காமல் அவர்கள் நரகத்திற்கான ஏற்பாட்டை செய்து கொள்கிறார்கள்.

அல்லாஹ்வே! எங்களுக்கு ஈமானிய உறுதியைத் தா! தெளிவான உண்மையான ஆதாரத்தை பின்பற்றுகின்ற மனநிலையைத் தா! தடுமாறாத குழப்பமடையாத சந்தேகம் வராத நம்பிக்கையைத் தா! அலங்கரிக்கப்பட்ட வழிகேடுகளில் ஏமாறுவதிலிருந்தும் பின்பற்றுவோர் அதிகமாக இருப்பதை பார்த்து தடம் புரள்வதிலிருந்தும் எங்களை காப்பாற்று! ஆமீன்!

## உள்ளத்தை கேட்டு பேசு!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا عَبْدُ الرَّحْمٰنِ حَدَّثَنَا أَبُو الْأَشْهَبِ عَنِ الْـحَسَنِ قَالَ كَانُوا يَقُولُونَ: لِسَانُ الْحَكِيمِ وَرَاءَ قَلْبِهِ فَإِذَا أَرَادَ أَنْ يَقُولَ رَجَعَ إِلَىٰ قَلْبِهِ فَإِنْ كَانَ لَهُ قَالَ وَإِنْ كَانَ عَلَيْهِ أَمْسَكَ وَإِنَّ الْجَاهِلَ قَلْبُهُ فِي طَرَفِ لِسَانِهِ لَا يَرْجِعُ إِلَىٰ قَلْبِهِ مَا جَرَىٰ عَلَىٰ لِسَانِهِ تَكَلَّمَ بِهِ قَالَ أَبُو الْأَشْهَبِ: كَانُوا يَقُولُونَ: مَا عَقَلَ دِينَهُ مَنْ لَمْ يَحْفَظْ لِسَانَهُ

ஹசன் பஸரி ﷺ கூறினார்கள்: அறிஞர்கள் கூறுவார்கள்; ஞானியின் நாவு அவரது உள்ளத்திற்கு பின்னால் இருக்கும். ஆக, அவர் பேச நினைத்தால் தனது உள்ளத்தை திரும்பிப் பார்ப்பார். அது அவருக்கு பயனுள்ள பேச்சாக இருந்தால் அவர் பேசுவார். அவருக்கு பாதகமாக இருந்தால் அவர் பேசாமல் தடுத்துக் கொள்வார். நிச்சயமாக ஜாஹில் - அறியாதவரோ அவருடைய உள்ளம் அவரது நாவின் ஓரத்தில் இருக்கும். அவர் தனது நாவினால் என்ன பேசப் போகிறார் என்பதை தனது உள்ளத்தில் சிந்தித்து பார்க்காமல் பேசிவிடுவார். அபுல் அஷ்ஹப் ﷺ கூறுகிறார்: யார் தனது நாவை பாதுகாக்க வில்லையோ அவர் தனது மார்க்கத்தை புரியவில்லை என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

**கருத்து:** நமது நிலையை யாரிடம் முறையிடுவதோ! நாமோ நம்மை அறிவாளிகளாக எண்ணிக் கொண்டு இருக்கிறோம். ஆனால், அறிவாளிகளுக்கான எந்த இலக்கணமும் நமக்குள் இல்லை. புத்திசாலிகளாக நாம் நம்மை நினைத்து பெருமைப் படுகிறோம். ஆனால், நமது புத்தியை பார்த்து புத்திமான்கள் சிரிக்கத்தான் செய்வார்களே தவிர அதை மெச்ச மாட்டார்கள்.

அதிகம் பேசுவோரை ஞானிகளாக தத்துவவாதிகளாக பலர் எண்ணுவதுண்டு. பேச்சாளர்கள் எல்லாம் அறிஞர்களாக ஞானிகளாக போற்றப்படுகின்ற காலத்தில் நாம் இருக்கிறோம்.

பலர் பேசும்போது தாம் என்ன பேசுகிறோம், எங்கே பேசுகிறோம், எப்படி பேசுகிறோம் என்பதை சிந்திக்காமலேயே பேசி விடுகிறார்கள்.

வளவள என்று பேசுவது, தொணதொண என்று பேசுவது, நைய்நைய்னு பேசுவது, இப்படி பல வகையான பேச்சுகள் இருக்கின்றன.

நாம் நமது பேச்சை சிந்தித்து பேச வேண்டும், யோசித்து பேச வேண்டும், நன்கு சோதித்து பேச வேண்டும், நிதானமாக பேச வேண்டும், ஆராய்ந்து பேச வேண்டும், அமைதியாக பேச வேண்டும், அடக்கமாக பேச வேண்டும், அறிவாக பேச வேண்டும், அளவாக பேச வேண்டும்.

நமது பேச்சை மக்கள் ரசிக்கின்ற வரை மட்டுமே பேச வேண்டும். மக்கள் உற்சாகத்துடன் இருந்து கேட்கும் வரை மட்டுமே பேச வேண்டும். பேச வேண்டிய அவசியம் இருக்கும் வரை மட்டுமே பேச வேண்டும். பேச வேண்டும் என்பதற்காக எதையாவது பேசி விடக் கூடாது.

பலரின் மானம் பறிபோகி இருக்கிறது அவர் பேச ஆரம்பித்தபோது. பலரின் அறிவு இவ்வளவுதான் என்று மக்களுக்கு தெரிய வந்தது அவர்கள் வாய் திறந்தபோது. அறிவாளிகளாக கருதப்பட்ட பலர், கண்ணியவான்களாக மதிக்கப்பட்ட பலர் முட்டாள்கள் என்றும் இழிவானவர்கள் என்றும் நிரூபணமானது அவர்கள் சபையில் பேச்சை ஆரம்பித்தபோது.

நபி ﷺ அவர்கள் மக்களில் மிகவும் குறைவாக பேசுபவர்களாக இருந்தார்கள். அவசியம் ஏற்பட்டாலே பேசுவார்கள். அவசியத்தின் அளவுக்கு மட்டுமே பேசுவார்கள். கண்ணியமாக பேசுவார்கள். யாரையும் காயப்படுத்தாமல் பேசுவார்கள். அழகாக பேசுவார்கள். அசிங்கமான ஆபாசமான பேச்சுகளை ஒருபோதும் பேச மாட்டார்கள்.

தெரிந்ததை மட்டுமே பேசுவார்கள். தெரியவில்லை என்றால் தெரிந்தது போல் காட்டிக் கொள்ள மாட்டார்கள். சபைக்கு என்ன தேவையோ அதை மட்டுமே பேசுவார்கள். அவசியம் ஏற்பட்டால் மட்டுமே கேள்விக்கு மேல் விளக்கம் சொல்வார்கள். இல்லை என்றால் சுருக்கமாக பேசி நிறுத்திக் கொள்வார்கள்.

வேகமாக, புரியாதபடி பேச மாட்டார்கள். நிறுத்தி நிதானமாக பேசுவார்கள். புரியும்படி விளங்கும்படி நினைவில் நிற்கும்படி, சிந்திக்கத் தூண்டும்படி பேசுவார்கள்.

வசனமாக பேசுவதற்கு சிரமம் எடுக்க மாட்டார்கள். அடுக்கு மொழியில் உரை நிகழ்த்த வேண்டும் என்று அலட்டிக் கொள்ள மாட்டார்கள். இறை நம்பிக்கையாளர் பேணவேண்டிய நற்குணங்களில் ஒன்று அவர் நல்லதை, சிறந்ததை மட்டுமே பேச வேண்டும். இல்லை என்றால் வாய் மூடி மௌனமாக இருக்க வேண்டும் என்று உன்னதமான வழிகாட்டலை நபி ﷺ நமக்கு காண்பித்து இருக்கிறார்கள்.

பேச்சினாலும் நரகம் செல்லும் நிலை வந்துவிடும் என்று பேச்சின் விபரீதத்தை குறித்து எச்சரித்துள்ளார்கள். சிரிக்க வைக்க பேசுவது, ஆதாரமில்லாததை பேசுவது, அவதூறு பேசுவது, புறம் பேசுவது, கோள் பேசுவது, குத்திப் பேசுவது, குறைப் பேசுவது, இட்டுக்கட்டி பேசுவது, கல்வி அறிவின்றி அல்லாஹ்வின் விஷயத்தில், மார்க்க சட்டத்தில் பேசுவது, பொய் பேசுவது, பிறர் மீது பழி சுமத்தி பேசுவது இப்படிப்பட்ட பேச்சுகள் மனிதர்களை நரகத்தில் தள்ளுகின்ற காரணிகள் என்று வன்மையாக கண்டித்துள்ளார்கள்.

“நரம்பில்லா நாக்கு நாலுவிதமாகப் பேசும்... எலும்பில்லா நாக்கு எப்படி வேண்டுமானாலும் வளையும்...” இரட்டை நாக்கு நேரத்துக்கு ஏற்றபடி மாறி மாறி பேசும் என்று முன்னோர் கூறுவார்கள்.

அமைதியாக இருப்பது, வாய்மூடி மௌனமாக இருப்பது, மிகக் குறைவாக பேசுவது, தேவையை மட்டும் பேசுவது ஒரு மனிதனுக்கு கண்ணியத்தை கொடுக்கும் பண்பாகும்.

ஞானிகள் அதிகம் மௌனமாக இருப்பார்கள். தேவை இல்லாததை அறவே பேச மாட்டார்கள். தேவையானதையும் அதிகமாக பேச மாட்டார்கள். ஒரு சபையில் தங்களை விட கல்வியில் மூத்தவர்கள் இருந்தால் அவர்களின் கல்வியைக் கொண்டும் அனுபவத்தைக் கொண்டும் பயன் பெற வேண்டும் என்பதற்காக தாம் வாய்மூடி இருந்து அந்த மூத்தவர்களை பேச முற்படுத்துவார்கள்.

தங்களுக்கு பேச வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மட்டுமே பேசுவார்கள். தமக்கு பேச அனுமதிக்க வேண்டும் என்று அலைய மாட்டார்கள்.

தெரிந்ததையே தமக்கு சரியாக தெரியாது, எங்களை விட அறிந்தவர்களிடம் கேளுங்கள் என்று சொல்லிவிடுகின்ற ஞானிகளிடம் தெரியாததை தெரிந்ததுபோல் காட்டிக் கொள்கின்ற பகட்டுப் போக்கு அறவே இருக்காது. உனது பேச்சு அல்லாஹ்விடம் பதியப்படுகிறது.

அல்லாஹ் கூறுகிறான்:

مَا يَلْفِظُ مِنْ قَوْلٍ إِلَّا لَدَيْهِ رَقِيبٌ عَتِيدٌ ۝

பேச்சில் எதையும் அவன் பேச மாட்டான், அவனிடம் கண்காணிப்பாளர், ஆஜராகி இருப்பவர் (ஆகிய இரு வானவர்கள்) இருந்தே தவிர.

(அல்குர்ஆன் 50 : 18)

உனது சொல் உனது மறுமையை நிர்ணயிக்கக்கூடியதாகும். உனது சொல் ஒன்று சொர்க்கத்தின் சாவியாக இருக்கும். அல்லது நரகத்திற்கான சாவியாக இருக்கும்.

உனது ரப்பு உன்னை திருப்தி படுவான், அல்லது கோபப்படுவான் நீ பேசி முடித்தபோது. ஆகவே, யோசித்துவிட்டு பேசு. மறுமையை பயந்து பேசு. மக்களுக்காக, அதாவது மக்களை திருப்தி படுத்த வேண்டும் என்பதற்காக பேசி உனது மறுமையை அழித்துக் கொள்ளாதே!

மக்களில் பலருக்கு சத்தியம் பிடிக்காது. பலருக்கு உண்மை பிடிக்காது. பலருக்கு நேர்மையான பேச்சு பிடிக்காது. பலருக்கு பகட்டற்ற பேச்சு பிடிக்காது. பலருக்கு எதார்த்தமான நடுநிலையான பேச்சு பிடிக்காது. குறைகளை சுட்டிக்காட்டுவது பலருக்கு பிடிக்காது. பலருக்கு மறுமையின் பேச்சுகள் பிடிக்காது. இறையச்சத்தை தூண்டும் பேச்சுகள் பலருக்கு பிடிக்காது. சொர்க்க நரகத்தைப் பற்றி பேசினால் பலருக்கு பிடிக்காது.

ஆகவே, அவர்களை நீ எப்படி திருப்திபடுத்த முடியும்? மக்களை மகிழ்விக்க நினைத்தால் பொய் பேச வேண்டும், புறம் பேச வேண்டும், கோள் சொல்ல வேண்டும், பிறரை நையாண்டி செய்ய வேண்டும், எளியோரை கேலி செய்து பேச வேண்டும், பிறரை கிண்டல் செய்ய வேண்டும். தகுதி இல்லாதவர்களையும் புகழ்ந்து பேச வேண்டும். ரசனையாக இருக்க வேண்டும் என்பதால் எக்ஸ்ட்ரா ஃபிட்டிங் போட்டு பேச வேண்டும். தலைவர்களை வரம்பு மீறி புகழ்ந்து பேச வேண்டும்.

மக்களின் தவறுகளை சுட்டிக் காட்டி பேசாமல் மக்களை சிரிக்க வைக்க, அவர்களின் நேரத்தை மகிழ்ச்சியாக கழிக்கவைக்க பொய்யான கதைகளை, நடக்காத சம்பவங்களை, இல்லாத செய்திகளை இட்டுக்கட்டி பேச வேண்டும்.

குர்ஆனும் சுன்னாவும் நாவின் ஒழுக்கங்கள், நாவின் நன்மை தீமைகள், நாவின் பலன்கள், விபரீதங்கள் குறித்து மிக விளக்கமாக பேசி இருக்கின்றன.

அவற்றில் மிக முக்கியமானது முஆது ﵁ அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் ஒன்றாகும்.

பல நன்மைகளை முஆதுக்கு சொல்லிக் கொடுத்துவிட்டு இவை அனைத்திலும் மிக முக்கியமான அடிப்படை அம்சம் என்னவென்றால் நாவுதான் என்று நபி ﷺ அவர்கள் கூற, நாவினால் பேசுவதற்கும் நாம் குற்றம் பிடிக்கப்படுவோமா என்று முஆத் ؓ கேட்க, உமது தாய் உன்னை இழக்கட்டும், மக்களை நரகத்தில் முகம் குப்புற தள்ளுவது அவர்களின் நாவுகள் செய்த அறுவடைகளே அன்றி வேறு என்ன என்று கேட்டார்கள்.41

நமது அறிஞர்கள் பலரும் நாவின் விபரீதங்கள் குறித்து பல்லாயிரம் அறிவுரைகளை வழங்கி இருக்கிறார்கள். அவற்றில் முக்கியமானதுதான் இமாம் ஹசன் ؒ கூறி இருக்கின்ற இந்த அறிவுரை.

அதன் சுருக்கம் என்னவென்றால், நாவு உள்ளத்தின் கட்டுப்பாட்டில் இருக்கட்டும். உள்ளம் நாவின் கட்டுப்பாட்டில் சென்று விட வேண்டாம். உள்ளம் சொல்வதை நாவு கேட்கட்டும். உள்ளத்தை மீறி நாவு செயல்பட வேண்டாம்.

உள்ளத்தின் வழிகாட்டல், ஆலோசனையின் படியே நாவு பேசட்டும். நாவின் மீது உள்ளம் ஆட்சி செய்யட்டும். உள்ளத்தின் மீது நாவு ஆட்சி செய்ய வேண்டாம். உள்ளத்திடம் கேட்டுவிட்டு நாவு பேசட்டும். உள்ளத்தை புறந்தள்ளிவிட்டு நாவு பேசி விட வேண்டாம். உள்ளத்தின் வழிகாட்டலை கேட்டு நாவு பேசட்டும். உள்ளம் செத்து விடாதபடி நாவு நடந்து கொள்ளட்டும்.

எதையும் ஆசைப்பட்டு பேசிவிடாதே! எதையும் பயந்தும் பேசிவிடாதே! அல்லாஹ்வின் பொருத்தத்தையும் சொர்க்கத்தையும் மட்டுமே ஆசைப்பட்டு பேசு! அல்லாஹ்வின் கோபத்தையும் நரகத்தின் தண்டனையையும் பயந்து மட்டுமே பேசு!

பேச்சினால் செல்வம் கிடைக்கலாம். பேச்சினால் பதவி கிடைக்கலாம். பேச்சினால் புகழ் கிடைக்கலாம். பேச்சினால் பிரபல்யமாகலாம். பேச்சினால் வரவேற்பு கிடைக்கலாம். பேச்சினால் கை தட்டல் கிடைக்கலாம்.

அதுவெல்லாம் இருக்கட்டும். உனது பேச்சினால் உனது மறுமையை நீ வீணடிக்காமல் பார்த்துக் கொள்! உனது பேச்சினால் சொர்க்கம் கிடைக்குமா என்று யோசித்துக் கொள்!

மறுமையை விற்று உலகத்தை வாங்கிவிடாதே! சொர்க்கத்தை விற்று புகழை விரும்பி விடாதே! எதை பேசினாலும் மறுமைக்காக பேசு! உனது ரப்புக்கு

41. அறிவிப்பாளர்: முஆது ؓ, நூல்: திர்மிதி, எண்: 2616, தரம்: ஸஹீஹ் (அல்பானி).

முன்னால் நின்று பதில் சொல்ல வேண்டும் என்பதை நினைவில் நிறுத்தி பேசு.

பேசிவிட்டு வருத்த படும்படி பேசிவிடாதே! மார்க்கத்தை கற்று கல்வி அறிவோடு பேசு! உனக்கு கல்வி அறிவு இல்லாத விஷயங்களில் பேசாதே! ஆதாரமின்றி பேசாதே!

ஆணவத்துடன், இறுமாப்புடன், எல்லாம் தெரியும் என்ற ஏமாற்றத்தில் பேசாதே! யாரையும் எடுத்தெறிந்து பேசாதே! யாரையும் காயப்படுத்தி பேசாதே! யாரையும் குத்திப் பேசாதே! குற்றவாளிகளுக்கு வக்காலத்து வாங்கி பேசாதே! அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கும் உரிமைகள் பறிக்கப்பட்டவர்களுக்கும் ஆதரவாக பேசாமல் இருக்காதே!

உனது ஆதாயத்தை மட்டும் குறிக்கோளாக வைத்து பேசாதே! பிறர் நன்மைக்காகவும் உரிமைக்காகவும் பேசாமல் இருந்து விடாதே! சீர்திருத்தம் செய்கிறோம் என்று கூறி சீர்கெட்டு பேசாதே! கண்டிக்கிறோம் என்று கூறி காழ்ப்புணர்ச்சியோடு எல்லை மீறி பேசாதே!

சத்தியம் என்பது பிறரை திட்டுவது அல்ல. உண்மை என்பது பிறரை இழிவுப்படுத்துவது அல்ல. எல்லோருக்கும் அவரவரின் கண்ணியத்தை அறிந்து பேசு!

அரசன், அதிகாரி, தாய் தந்தை, மூத்தவர்கள், முக்கியமானவர்கள், தலைவர்கள், கல்விமான்கள் என்று எல்லோரின் தரம் அறிந்து பேசு! பொதுவாக எல்லோரையும் மதித்து பேசு!

தமது நாவினால் சொர்க்கத்தை சம்பாதித்த நல்லோரில் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! நாவினால் நரகத்தில் முகம் குப்புற விழுந்தவர்களில் நாம் ஆகிவிடாமல் இருக்க அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

அல்லாஹ்வே! தமது நாவினால் சொர்க்கத்தை சம்பாதித்த நல்லோரில் எங்களை ஆக்குவாயாக! நாவினால் நரகத்தில் முகம் குப்புற விழுந்தவர்களில் எங்களை ஆக்கி விடாதே! ஆமீன்!

## உன்னோடு எந்நேரமும் இருக்கும் வானவர்களை மறந்து விடாதே! மறுமையின் தயாரிப்பில் சோர்ந்து விடாதே!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي أَبِي حَدَّثَنَا عَبْدُ الرَّحْمَنِ عَنْ زِيَادٍ أَبِي عُمَرَ عَنِ الْـحَسَنِ قَالَ قَدْ عَلِمَ كُلُّ مُؤْمِنٍ أَنَّهُ مُوَكَّلٌ بِهِ مَلَكَانِ يَحْفَظَانِ عَلَيْهِ قَوْلَهُ وَعَمَلَهُ فَهُوَ يَتَعَاهَدُهُمَا لَا يَمْنَعُهُ جَدُّ اللَّيْلِ جَدَّ النَّهَارِ وَلَا جَدُّ النَّهَارِ جَدَّ اللَّيْلِ

ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்: ஒவ்வொரு நம்பிக்கையாளரும் நன்கு அறிந்து வைத்திருப்பார், அதாவது, நிச்சயமாக இரு வானவர்கள் அவருடன் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று. அவர்கள் இருவரும் அவருடன் இருந்து அவரின் சொல்லையும் செயலையும் கண்காணித்து பதிவு செய்கிறார்கள். ஆகவே, அவர் அந்த இருவரையும் கவனித்து நடந்து கொள்வார். இரவில் அவர் செய்கின்ற முயற்சி பகலில் அவர் செய்ய வேண்டிய முயற்சியை விட்டும் அவரை தடுக்காது. இன்னும், பகலில் அவர் செய்கின்ற முயற்சி இரவில் அவர் செய்யவேண்டிய முயற்சியை விட்டும் அவரை தடுக்காது.

**கருத்து:** நல்லோர், சான்றோர் எப்போதும் அல்லாஹ்வை பயந்தவர்களாக, தங்கள் முடிவை பற்றி அஞ்சியவர்களாக இருப்பார்கள். தங்களது ஒவ்வொரு செயலையும் விசாரணை நாளை பயந்து செய்வார்கள். அல்லாஹ்வின் கூற்றை முழுமையாக நம்பிக்கைக் கொண்டிருப்பார்கள். குர்ஆன் கூறுகின்ற ஒவ்வொரு உண்மையையும் கண்களால் காண்பதுபோல் உறுதிகொண்டிருப்பார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَإِنَّ عَلَيْكُمْ لَحَافِظِينَ۝ كِرَامًا كَاتِبِينَ۝ يَعْلَمُونَ مَا تَفْعَلُونَ۝

நிச்சயமாக காவலர்கள் உங்கள் மீது இருக்கின்றனர். (அவர்கள்,) கண்ணியமான எழுத்தாளர்கள். நீங்கள் செய்வதை அவர்கள் அறிகிறார்கள் (பிறகு அதைப் பதிகிறார்கள்). (அல்குர்ஆன் 82 : 10-12)

மேலும், அல்லாஹ் கூறுகிறான்:

إِذْ يَتَلَقَّى الْمُتَلَقِّيَانِ عَنِ الْيَمِينِ وَعَنِ الشِّمَالِ قَعِيدٌ۝ مَا يَلْفِظُ مِنْ قَوْلٍ إِلَّا لَدَيْهِ رَقِيبٌ عَتِيدٌ۝

சந்திக்கின்ற இரு வானவர்கள் சந்திக்கின்ற போது (நாம் மனிதனுக்கு மிக அருகில் இருக்கின்றோம்). வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் (ஒவ்வொரு பக்கத்திலும்) கண்காணிப்பவர் இருப்பார். பேச்சில் எதையும் அவன் பேச மாட்டான், அவனிடம் கண்காணிப்பாளர், ஆஜராகி இருப்பவர் (ஆகிய இரு வானவர்கள்) இருந்தே தவிர. (அல்குர்ஆன் 50 : 17, 18)

மேலும், அல்லாஹ் கூறுகிறான்:

وَكُلُّ شَيْءٍ فَعَلُوهُ فِي الزُّبُرِ۝ وَكُلُّ صَغِيرٍ وَكَبِيرٍ مُسْتَطَرٌ۝

அவர்கள் செய்த எல்லா விஷயங்களும் (வானவர்கள் எழுதிய செயல்) ஏடுகளில் (பதியப்பட்டு) உள்ளன. எல்லா சிறியவையும் பெரியவையும் எழுதப்பட்டு உள்ளது. (அதற்கேற்ப அவர்களுக்கு கூலி கொடுக்கப்படும்.) (அல்குர்ஆன் 54 : 52, 53)

மேலும், அல்லாஹ் கூறுகிறான்:

وَكُلَّ إِنْسَانٍ أَلْزَمْنَاهُ طَائِرَهُ فِي عُنُقِهِ وَنُخْرِجُ لَهُ يَوْمَ الْقِيَامَةِ كِتَابًا يَلْقَاهُ مَنْشُورًا۝ اقْرَأْ كِتَابَكَ كَفَىٰ بِنَفْسِكَ الْيَوْمَ عَلَيْكَ حَسِيبًا۝

எல்லா மனிதனுக்கும் அவனுடைய செய(ல்கள் பதிவு செய்யப்படும் ஓர் ஓ)லை(யை) அவனுடைய கழுத்தில் இணைத்தோம். அவனுக்கு மறுமை நாளில் (அதை) ஒரு புத்தகமாக வெளிப்படுத்துவோம். அதை அவன்

(தனக்கு முன்) விரிக்கப்பட்டதாக சந்திப்பான். உன் (குறிப்புப்) புத்தகத்தை நீ படி!; இன்று உனக்கெதிராக விசாரிக்க நீயே போதுமானவன்.

(அல்குர்ஆன் 17 : 13, 14)

மேலும், அல்லாஹ் கூறுகிறான்:

وَوُضِعَ الْكِتَابُ فَتَرَى الْمُجْرِمِينَ مُشْفِقِينَ مِمَّا فِيهِ وَيَقُولُونَ يَاوَيْلَتَنَا مَالِ هٰذَا الْكِتَابِ لَا يُغَادِرُ صَغِيرَةً وَلَا كَبِيرَةً إِلَّا أَحْصَاهَا وَوَجَدُوا مَا عَمِلُوا حَاضِرًا وَلَا يَظْلِمُ رَبُّكَ أَحَدًا۝

(செயல்கள் பதியப்பட்ட) புத்தகம் (மக்கள் முன்) வைக்கப்படும். அதில் உள்ளவற்றினால் பயந்தவர்களாக (அந்த) குற்றவாளிகளைப் பார்ப்பீர். எங்கள் நாசமே! இந்த புத்தகத்திற்கு என்ன? (குற்றங்களில்) சிறியதையும் பெரியதையும் அவற்றைக் கணக்கிட்டே தவிர (-அவற்றைப் பதிவு செய்து வைக்காமல்) அது விடவில்லையே! எனக் கூறுவார்கள். அவர்கள் செய்ததை (அவர்களுக்கு) முன்னால் காண்பார்கள். உம் இறைவன் ஒருவருக்கும் தீங்கிழைக்க மாட்டான். (அல்குர்ஆன் 18 : 49)

இப்படி அல்லாஹ்வின் வேத வசனங்கள் சான்றோரின் செவிகளில் சதா ஒலித்துக் கொண்டே இருக்கும். அவர்களின் நெஞ்சங்கள் இத்தகைய குர்ஆனிய போதனைகளால் எப்போதும் இறை பயத்தாலும் விசாரணை நாளில் நடைபெறும் அமல்களுக்கான கேள்வி கணக்கை நினைத்தும் அச்சம் கொண்டிருக்கும்.

தங்கள் மீது நியமிக்கப்பட்ட இருவானவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் நம்மை விட்டு பிரிய மாட்டார்களே, அவர்கள் அல்லாஹ்விற்கு மாறு செய்யாத அல்லாஹ்வின் பரிசுத்தமான அடியார்கள் ஆயிற்றே, நாம் செய்வதை எல்லாம் நம்முடன் இருந்து கவனித்து எழுதி அல்லாஹ்விற்கு முன் சமர்ப்பிப்பார்களே என்ற பயமும் வெட்கமும் அச்சமும் அந்த நல்லோரை விட்டு பிரியாமல் இருக்கும்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَكَفَىٰ بِرَبِّكَ بِذُنُوبِ عِبَادِهِ خَبِيرًا بَصِيرًا۝

தன் அடியார்களின் பாவங்களை ஆழ்ந்தறிய, உற்று நோக்க உம் இறைவனே போதுமானவன். (அல்குர்ஆன் 17 : 17)

அல்லாஹ் பார்ப்பதே போதும், அல்லாஹ்வின் கண்காணிப்பே போதும், அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாக இருப்பதே போதும் அடியார்கள் தமது குற்றங்களை விட்டுவிடுவதற்கும், அவற்றிலிருந்து தூர விலகி செல்வதற்கும்.

இருந்தும் அடியான் அல்லாஹ்வை தூரமாக இருக்கிறான் என்று எண்ணி அல்லாஹ்வை மறந்து விடக்கூடாது என்பதற்காக அவனுக்கருகில் எப்போதும் இருக்கின்ற இரு வானவர்களை அல்லாஹ் ஏற்படுத்தி இருக்கிறான்.

அடியான் தனக்கு மேல், ஏழு வானங்களுக்கு மேல், அர்ஷுக்கு மேல் தனது ரப்பு இருக்கிறான் என்று நம்பிக்கை கொள்வதுடன், அந்த ரப்பு தனது பார்வையாலும் செவியாலும் ஆற்றலாலும் தனக்கு அருகில் இருக்கிறான் என்றும் நம்பிக்கை கொள்வான்.

அத்துடன் அல்லாஹ்வின் வானவர்கள் தம்முடன் இருக்கிறார்கள், அவர்கள் அடியார்களின் செயல்களை எழுதி பாதுகாத்து வைப்பார்கள். அந்த எழுதப்பட்ட ஏடுகள் நாளை தமக்கு முன்னால் விரிக்கப்படும், தாம் அதை படிக்க வேண்டும், அதன் அடிப்படையில்தான் விசாரணை நடைபெறும், அதை வைத்தே கேள்வி கணக்கு கேட்கப்படும்.

பிறகு, சொர்க்கமா நரகமா என்பதும் அதை வைத்தே முடிவு செய்யப்படும். அப்படி இருக்க அந்த நல்லடியார்கள் எப்படி அந்த வானவர்களை மறப்பார்கள். அல்லாஹ்வின் இல்மை நம்பிக்கை கொள்வதுடன் மலக்குகள் உடன் இருப்பதை நம்பிக்கை கொள்கின்ற அடியான் கண்டிப்பாக மிக கவனமாக எச்சரிக்கையாக பயந்தவனாக இருப்பான். அதைத்தான் இமாம் ஹஸன் ﵀ இங்கே இப்படி கூறுகிறார்,

“ஒவ்வொரு நம்பிக்கையாளரும் நன்கு அறிந்து வைத்திருப்பார், அதாவது, நிச்சயமாக இரு வானவர்கள் அவனுடன் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் அவருடன் இருந்து அவரின் சொல்லையும் செயலையும் கண்காணித்து பதிவு செய்கிறார்கள். ஆகவே, அவர் அந்த இருவரையும் கவனித்து நடந்து கொள்வார்.”

இப்படி உயர்வான ஈமானிய நிலையைப் பெற்ற நல்லடியார்கள் பாவத்தை விட்டு விலகி, குற்றங்களை விட்டு விலகி, அல்லாஹ்விற்கும் அவனது

தூதருக்கும் மாறு செய்வதை விட்டும் விலகி இருப்பதுடன் தமது வாழ்நாளை ஒரு கணமும் வீணாக்காமல் தமது மறுமையின் மகத்தான மாபெரும் வெற்றிக்கான, சொர்க்கத்தின் உயர்ந்த பதவிகளுக்கான, அல்லாஹ்விற்கு அருகில் வீற்றிருப்பதற்கான நல்லமல்களை செய்வதில் சோர்வின்றி இடைவிடாது முன்னேறிக் கொண்டே இருப்பார்கள்.

பகலில் நிறைய அமல்கள் செய்தோம் என்று இரவில் தூங்கி விட மாட்டார். பகலில் அதிகமாக மார்க்கத்திற்காக உழைத்தோம், அழைப்புப் பணியில் அங்கும் இங்கும் அலைந்தோம். ஆகவே, இரவில் ஓய்வெடுத்துக் கொள்வோம் என்று இருந்து விடமாட்டார். அல்லது இரவில் இபாதத் செய்கிறோம், தொழுகிறோம், குர்ஆன் ஓதுகிறோம் என்று பகலை வீணடித்து விடமாட்டார்.

பகலில் என்னென்ன அமல்களை அல்லாஹ்வும் ரஸூலும் தனக்கு கற்பித்தார்களோ அதை முழு ஈடுபாட்டுடன், கண்ணும் கருத்துமாக, கவனமாக, உள்ளச்சத்துடன் நிறைவேற்றுவார். அவ்வாறே இரவு வந்துவிட்டால் அந்த இரவிற்கான அமல்களை எவ்வித சடைவுமின்றி, தனது பகல் வேலைகளினால் ஏற்பட்ட சோர்வை களைப்பை பொருட்படுத்தாமல் தனது ரப்புக்கு முன்னால் நின்று வணங்குவதில் இன்பம் காணுவார். ஆக, பகலையும் இரவையும் -அவை ஒவ்வொன்றுக்கான நல்லமல்களை முழு மனதுடன் மிகுந்த ஆசையுடன், அல்லாஹ்வின் சந்திப்பை ஆசைப்பட்டு செய்வதில் - அந்த நல்லடியான் கழித்துக் கொண்டே இருப்பான்.

இதுதான் இறை அடியானின் வாழ்க்கை. அல்லாஹ்வை சந்திக்கின்ற வரை அந்த அடியான் ஒரு நன்மையிலிருந்து இன்னொரு நன்மையின் பக்கம் என்று தன் வாழ்நாளை அர்த்தமுள்ளதாக மறுமைக்கான ஆயத்தமாக கழித்துக் கொண்டே இருப்பான்.

ரப்பை வணங்கவும் அவனை திருப்தி படுத்துகின்ற நன்மைகளையும் நல்லறங்களையும் செய்வதற்குத்தானே இந்த உலகத்திற்கு வந்தோம் என்பதை அந்த அடியான் தனது நினைவில் மறக்காமல் வைத்திருப்பான்.

தனது ரப்பின் கூற்று அவனை நன்மைகளை நோக்கி எப்போதும் ஓடச்செய்து கொண்டே இருக்கும்.

அல்லாஹ் கூறுகிறான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا ارْكَعُوا وَاسْجُدُوا وَاعْبُدُوا رَبَّكُمْ وَافْعَلُوا الْخَيْرَ لَعَلَّكُمْ تُفْلِحُونَ ۝ وَجَاهِدُوا فِي اللهِ حَقَّ جِهَادِهِ هُوَ اجْتَبَاكُمْ وَمَا جَعَلَ عَلَيْكُمْ فِي الدِّينِ مِنْ حَرَجٍ مِلَّةَ أَبِيكُمْ إِبْرَاهِيمَ هُوَ سَمَّاكُمُ الْمُسْلِمِينَ مِنْ قَبْلُ وَفِي هٰذَا لِيَكُونَ الرَّسُولُ شَهِيدًا عَلَيْكُمْ وَتَكُونُوا شُهَدَاءَ عَلَى النَّاسِ فَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَاعْتَصِمُوا بِاللهِ هُوَ مَوْلَاكُمْ فَنِعْمَ الْمَوْلَىٰ وَنِعْمَ النَّصِيرُ ۝

நம்பிக்கையாளர்களே! குனியுங்கள்! சிரம்பணியுங்கள்! உங்கள் இறைவனை வணங்குங்கள்! நன்மை செய்யுங்கள். நீங்கள் (அவற்றின் மூலம்) வெற்றி அடைவதற்காக. அல்லாஹ்வின் பாதையில் (இணை வைப்பவர்களிடம்) முழுமையாக போரிடுங்கள். அவன்தான் உங்களைத் தேர்ந்தெடுத்தான். உங்கள் மீது (உங்கள்) மார்க்கத்தில் எவ்வித நெருக்கடியையும் அவன் வைக்கவில்லை. உங்கள் தந்தை இப்றாஹீமுடைய மார்க்கத்தைப் பற்றிப் பிடியுங்கள். அவன் (-அல்லாஹ்) இதற்கு முன்னரும் (முந்தைய வேதங்களிலும்) இதிலும் (-குர்ஆனிலும்) உங்களுக்கு ‘முஸ்லிம்கள்’ என்று பெயர் வைத்தான். தூதர் (-முஹம்மது) உங்கள் மீது சாட்சியாளராக இருப்பதற்காகவும் நீங்கள் மக்கள் மீது சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும் (அல்லாஹ் உங்களை தேர்ந்தெடுத்து, முஸ்லிம்கள் என்று பெயரிட்டான்). ஆகவே, தொழுகையை நிலைநிறுத்துங்கள், ஸகாத்தைக் கொடுங்கள், அல்லாஹ்வை உறுதியாக நம்புங்கள். அவன்தான் உங்கள் பொறுப்பாளன். அவன் சிறந்த பொறுப்பாளன். அவன் சிறந்த உதவியாளன்.

(அல்குர்ஆன் 22 : 77, 78)

மேலும், அல்லாஹ் கூறுகிறான்:

فَمَنْ كَانَ يَرْجُو لِقَاءَ رَبِّهِ فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّهِ أَحَدًا ۝

ஆகவே, எவர் தன் இறைவனின் சந்திப்பை ஆதரவு வைப்பாரோ அவர் நல்ல செயலைச் செய்யட்டும்! தன் இறைவனை வணங்குவதில் ஒருவரையும் (அவனுக்கு) இணையாக்க வேண்டாம்! (அல்குர்ஆன் 18 : 110)

இமாம் ஹசன் ﷺ அவர்கள் இந்த வசனங்களை நமக்கு நினைவூட்டியவராக கூறுகின்ற அறிவுரைதான் இது.

என் தோழனே! உன் வாழ்நாள் மிக மிகக் குறைவு! நீ இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் நீ கணக்கு கொடுக்க வேண்டும். நீ அனுபவிக்கின்ற ஒவ்வொரு சுகத்திற்கும் வசதிக்கும் உன்னிடம் விசாரிக்கப்படும். நீ சம்பாதித்த செல்வங்களுக்கு நீ பதில் சொல்லியாக வேண்டும்.

நீ இங்கு இந்த உலக வாழ்க்கையை கட்டியமைக்க அனுப்பப்படவில்லை. இந்த உலக அலங்காரத்தில் மூழ்கி உனது வாழ்க்கையின் நோக்கத்தை மறந்து விடாதே!

நீ சொர்க்கத்திற்காக படைக்கப்பட்டிருக்கிறாய். சொர்க்கம் உனக்காக படைக்கப்பட்டிருக்கிறது. அது ஒவ்வொரு ரமழானிலும் உனக்காக அலங்கரிக்கப்படுகிறது. உனது வருகையை அது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

அங்கு வானவர்கள் உன்னை வரவேற்க நின்று கொண்டிருக்கிறார்கள். உனக்காக தன்னை அலங்கரித்தவளாக உனது ஹூர் மனைவி ஏங்கிக் கொண்டிருக்கிறாள். உனக்காக அங்கே சொர்க்கத்து கனிகளும் கன்னிகளும் எதிர்பார்ப்பில் இருக்கிறார்கள். சொர்க்கத்து தோட்டங்களும் அரண்மனைகளும் உனக்காக உருவாக்கப்பட்டுள்ளன.

இன்னும் உண்டு களிக்கவும், உடுத்தி களிக்கவும், எண்ணற்ற வர்ணிக்க முடியாத உணவுகளும், உடைகளும், அனுபவித்து மகிழ எல்லையற்ற இன்பங்களும் உனது சொர்க்கத்தில் ஏராளம் இருக்கின்றன.

ஆகையால், அமல்களை செய்! அமல்களை செய்து கொண்டே இரு! அமல்களை அதிகப்படுத்திக் கொண்டே இரு! எந்த ஒரு நல்லமலையும் விட்டு விடாதே! பாவத்தை செய்து விடாதே! செய்து விட்டால் உடனே அதை விட்டு விலகி தவ்பா கேட்காமல் இருந்து விடாதே!

நன்மையை செய்யாமல் இருந்து விடாதே! அமல்களை இங்கு விட்டுவிட்டால் கப்ரில் சென்றா உன்னால் செய்ய முடியும்? இன்னொரு வாழ்க்கை உனக்கு இருக்கிறதா? இப்போது விட்டதை அப்போது செய்வதற்கு?

உனது நல்ல முன்னோரை பற்றி நீ படிக்கவில்லையா? குர்ஆன் கூறும் சான்றோர் வரலாற்றை நீ கேட்டதில்லையா? நபிமொழி இயம்பும் தூயோர் வணக்க வழிபாடுகள் உனது காதுக்கு எட்டவில்லையா?

நீ நல்லவனாக, வணக்கசாலியாக, கல்விமானாக, நல்லொழுக்க சீலனாக, இறைவனுக்கு உகப்பானவனாக, நன்மைகளில் முன்னேறி செல்பவனாக பாவத்தை விட்டு விரண்டோடியவனாக நீ வாழ்வதிலிருந்து உன்னை எது தடுக்கிறது? எது தடுக்கிறதோ அதை உனது வாழ்க்கையை விட்டு நீ அகற்றி விடு. உனது ரப்பை நீ சந்திக்கும் நாள் இப்படி அமைய அயராது உழைத்துக் கொண்டே இரு!

அல்லாஹ் கூறுகிறான்:

فَأَمَّا مَنْ أُوتِيَ كِتَابَهُ بِيَمِينِهِ فَيَقُولُ هَاؤُمُ اقْرَءُوا كِتَابِيَهْ○إِنِّي ظَنَنْتُ
أَنِّي مُلَاقٍ حِسَابِيَهْ○فَهُوَ فِي عِيشَةٍ رَاضِيَةٍ ○فِي جَنَّةٍ عَالِيَةٍ○قُطُوفُهَا
دَانِيَةٌ○كُلُوا وَاشْرَبُوا هَنِيئًا بِمَا أَسْلَفْتُمْ فِي الْأَيَّامِ الْخَالِيَةِ○

ஆக, யார் தனது செயலேடு தனது வலது கரத்தில் கொடுக்கப்பட்டாரோ அவர் கூறுவார்: வாருங்கள்! (இதோ) எனது செயலேட்டை (எடுத்து) ப் படியுங்கள்! நிச்சயமாக நான் எனது விசாரணையை சந்திப்பேன் என்று நம்பினேன். ஆகவே, அவர் மகிழ்ச்சியான வாழ்க்கையில் இருப்பார், (அவர்) உயர்ந்த சொர்க்கத்தில் இருப்பார் அதன் கனிகள் மிக சமீபமாக இருக்கும். நீங்கள் கடந்த காலங்களில் (-நீங்கள் உலகத்தில் இருந்தபோது உங்கள் மறுமை வாழ்க்கைக்காக) முற்படுத்தியவற்றின் (-நன்மைகளின்) காரணமாக இன்பமாக உண்ணுங்கள்! பருகுங்கள்! (அல்குர்ஆன் 69 : 19-24)

அல்லாஹ் உனக்கும் எனக்கும் அருள் புரிவானாக!

அல்லாஹ்வே! எங்கள் பலவீனத்தையும் குறைகளையும் உன்னிடமே முறையிடுகிறோம். நீ எங்களின் உச்சி முடிகளை பிடித்து நன்மையின் பக்கம் இழுத்துச் செல்! உலக வாழ்க்கையில் மூழ்கி மறுமையை மறந்தவர்களில் எங்களை ஆக்கி விடாதே! ஆமீன்!

## நீ யாருக்காக அமல் செய்கிறாய்?

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا ابْنُ مَهْدِيٍّ عَنْ أَبِي الْأَشْهَبِ عَنِ الْـحَسَنِ قَالَ لَا يَذْكُرُونَ اللهَ إِلَّا قَلِيلًا قَالَ إِنَّمَا قَلَّ لِأَنَّهُ لِغَيْرِ اللهِ عَزَّ وَجَلَّ

ஹசன் ﷀ கூறினார்:

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَا يَذْكُرُونَ اللهَ إِلَّا قَلِيلًا○

அவர்கள் அல்லாஹ்வை மிகக் குறைவாகவே தவிர நினைவு கூர மாட்டார்கள். (அல்குர்ஆன் 4 : 142)

இந்த வசனத்தில் நயவஞ்சகர்கள் மிகக் குறைவாகவே அல்லாஹ்வை நினைவு கூர்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அது ஏனெனில், அவர்கள் கண்ணியத்திற்கும் கம்பீரத்திற்கும் உரிய அல்லாஹ்விற்காக அல்லாமல், அல்லாஹ் அல்லாதவருக்காக திக்ரு செய்வார்கள்.

**கருத்து:** வணக்க வழிபாடுகளை முஃமின்களும் செய்வார்கள், முஃமின் அல்லாத நயவஞ்சகர்களும் செய்வார்கள். இவ்விருவர்களின் வணக்க வழிபாடுகளுக்கும் நடுவில் உள்ள வேறுபாடு என்ன என்பதை இந்த இறை வசனம் நமக்கு தெளிவுப்படுத்துகிறது. அதாவது, முஃமின்கள் அல்லாஹ்வை அதிகம் திக்ரு செய்வார்கள். நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை மிகக் குறைவாக திக்ரு செய்வார்கள்.

இதற்குதான் இமாம் ஹசன் ﷀ அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள். முஃமின்கள் அல்லாஹ்வை மனத்தூய்மையுடன் வணங்குவார்கள். அல்லாஹ்வின்

திருமுகத்தை நாடி மட்டும் எந்த ஒரு அமலையும் செய்வார்கள். மறுமைக்காக மட்டுமே மார்க்க கடமைகளை நிறைவேற்றுவார்கள். சொர்க்கத்தை ஆசைவைத்தும் நரகத்தை பயந்தும் இபாதத்துகளை செய்து பாவங்களை விட்டு விலகி இருப்பார்கள்.

அல்லாஹ்வின் அன்புக்காக அவனுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிந்து நடப்பார்கள்.

இப்படி உயர்ந்த நோக்கம் உள்ளவர்களாக இருப்பதால், அவர்கள் வணக்க வழிபாடுகளை, நல்லமல்களை அதிகமதிகம் செய்வார்கள். மறுமையின் மீதான நம்பிக்கை, சொர்க்கத்தின் மீதான ஆசை, நரகத்தின் மீதான பயம் அந்த முஃமின்களை தொடர்ந்து நன்மைகளை செய்து கொண்டிருக்க தூண்டும்.

இரவு பகல் பார்க்காது அல்லாஹ்வின் வணக்க வழிபாட்டில் அவர்கள் முன்னேறிக் கொண்டே இருப்பார்கள். அல்லாஹ்விற்காக அவர்கள் நன்மைகளை செய்வதால் குறைவான அமல்களைக் கொண்டு அவர்கள் திருப்தி பெறவே மாட்டார்கள்.

தங்களை படைத்து பரிபாலிக்கின்ற, தங்கள் மீது எல்லை இல்லா கருணை புரிகின்ற, அளவில்லா அருள் பாலிக்கின்ற தங்கள் ரப்புக்காக அவர்கள் இபாதத்துகள் செய்வதில் இன்பம் காணுவார்கள்.

எல்லா இபாதத்துகளையும் மாறி மாறி செய்வார்கள். தொழுவார்கள், தான தர்மம் செய்வார்கள், ஹஜ் உம்ரா செய்வார்கள், குர்ஆன் ஓதுவார்கள், திக்ரு செய்வார்கள். அல்லாஹ்வின் வணக்க வழிபாட்டில் சோர்வே அடைய மாட்டார்கள்.

ஐந்து நேரத் தொழுகைகள், இரவுத் தொழுகைகள், அல்லாஹ்வின் தீனை கற்றல் கற்பித்தல், அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்தல், ஏழை எளியோருக்கு உதவுதல் என்று தொடர்ந்து அவர்கள் மறுமையின் அமல்களில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார்கள்.

இது அல்லாஹ்விற்காக அமல்களை செய்கின்ற முஃமின்களின் நிலையாகும்.

இன்னொரு பக்கம் அல்லாஹ்வையும் மறுமையையும் நம்பிக்கை கொள்ளாத அல்லது நம்பிக்கையில் சந்தேகமுள்ள நயவஞ்சகர்கள் இவர்களும் இஸ்லாம் கூறுகின்ற வெளிப்படையான அமல்களை செய்வார்கள். தொழுகையில் கலந்து கொள்வார்கள். இன்னும் பல அமல்களில் முஸ்லிம்களோடு சேர்ந்து கொள்வார்கள்.

ஆனால், அவர்களது உள்ளம் சந்தேகத்தாலும் வெறுப்பாலும் நிரம்பி இருக்கும். முகஸ்துதியே அவர்களின் நோக்கமாக இருக்கும். பிறருக்கு காண்பிப்பதே அவர்களின் திட்டமாக இருக்கும். ஆகவே, அந்த நயவஞ்சகர்கள் வணக்க வழிபாட்டில் எப்போதும் சோம்பேறிகளாக இருப்பார்கள்.

அவர்கள் அல்லாஹ்விற்காக அமல் செய்யாத காரணத்தால், மக்களுக்கு காண்பிப்பதற்காக மட்டுமே அமல் செய்பவர்களாக இருக்கின்ற காரணத்தால் எவ்வளவு குறைவாக அமல்கள் செய்ய முடியுமோ அவ்வளவு குறைவாக மட்டுமே அமல் செய்வார்கள்.

அவர்கள் உள்ளத்தில் மறுமையை நம்பாதவர்களாக இருப்பதால் இந்த உலகத்தில் தங்களை முஸ்லிம் என்று காண்பித்துக் கொள்ள எந்தளவு தேவையோ அந்தளவு மட்டுமே அமல் செய்வார்கள். அல்லாஹ்வின் திருமுகத்தை நாடாதவர்கள், மறுமையின் வெற்றியை தேடாதவர்கள், சொர்க்கத்தின் மீது ஆசை இல்லாதவர்கள், நரக நெருப்பின் மீது பயமில்லாதவர்கள் எப்படி அமல்களை அதிகமாக செய்வார்கள். அவர்கள் அமல்களில் இருந்து வெருண்டோடவே முயற்சிப்பார்கள். மார்க்கத்திற்காக எந்த தியாகத்தையும் செய்ய மாட்டார்கள். வணக்க வழிபாட்டில் ஆர்வம் காட்ட மாட்டார்கள்.

ஒருவர் அல்லாஹ்விற்காக அமல்களை செய்யும்போது மட்டும்தான் அவரால் அந்த அமல்களை சரியாகவும் கவனமாகவும் முழு ஈடுபாட்டுடனும் செய்ய முடியும். இன்னும் அவரால் மட்டுமே அதிகமதிகம் அமல்களை செய்ய முடியும்.

யார் அல்லாஹ் அல்லாத மற்றவர்களுக்காக ஒரு அமலை செய்வாரோ அவர் அந்த அமலை சரியாக செய்ய மாட்டார், தொடர்ச்சியாக செய்ய மாட்டார். செய்கின்ற அமலையும் நிறைவாக செய்ய மாட்டார். இதுதான் நயவஞ்சகம்! இதுதான் நயவஞ்சகத்தின் உண்மை முகம். அல்லாஹ் பாதுகாப்பானாக!

சரி! இமாம் ஹசன் ﵀ அவர்களின் விளக்கத்திலிருந்து நாம் பெற வேண்டிய படிப்பினைகள் என்ன என்பதை இப்போது பார்ப்போம்.

ஈமான்தான் ஈருலக வெற்றிக்கான காரணமாகும். ஈமான் இல்லாமல் வெற்றி இல்லை. ஈமான் என்பது பல உயர்ந்த தன்மைகளால் கட்டியமைக்கப்படும் ஓர் உறுதியான வலிமை மிக்க கட்டிடமாகும். அந்த தன்மைகளில் ஒன்றுதான் மனத்தூய்மை. அதாவது, எந்த ஒரு அமலையும் அல்லாஹ்விற்காக மட்டுமே

செய்வது. ஒவ்வொரு அமலிலும் அல்லாஹ்வின் திரு முகத்தை மட்டுமே நாடி ஈடுபடுவது, மறுமையின் அமல்களை மறுமையின் வெற்றிக்காக மட்டுமே செய்வது, இதுதான் இக்லாஸ் -மனத்தூய்மை ஆகும். இது இல்லை என்றால் ஈமான் இருக்காது.

பிறரிடம் நற்பெயர் வாங்குவது, மக்கள் தன்னை புகழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது, படைப்புகளிடம் பிரதிபலனை எதிர்பார்ப்பது, மறுமையின் அமல்களைக் கொண்டு உலக ஆதாயத்தை தேடுவது, படைப்புகளின் நன்மதிப்பை பெறுவதற்காக ஒரு நல்ல காரியத்தை செய்வது, தன்னை பற்றி மக்கள் பெருமையாக பேச வேண்டும் என்று எதிர்பார்ப்பது இவை எல்லாம் ரியா - முகஸ்துதியாகும். இது எதில் கலக்கிறதோ அதை அது பாழாக்கி விடும். ஈமானில் கலந்தால் ஈமானை நாசமாக்கி விடும். ஒரு அமலில் கலந்தால் அந்த அமலை அழித்து விடும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

இம்மை மறுமையில் மிகக் கைசேதமான ஒரு நிலை இருக்கிறது என்றால் இந்த முகஸ்துதிக்காரர்களின் நிலைதான். இவர்கள் பாவங்கள் செய்து நரகத்திற்கு செல்லவில்லை. மாறாக நன்மைகள் செய்து நரகம் செல்கிறார்கள். காரணம் அந்த நன்மைகளை அல்லாஹ்விற்காக செய்யவில்லை.

இவர்கள் தொழுது என்ன பலன்? நோன்பு வைத்து என்ன பலன்? ஹஜ் உம்ரா செய்து என்ன பலன்? தான தர்மங்கள் செய்து என்ன பலன்? இன்னும் பல நன்மைகளை செய்தும் அவற்றால் அவர்கள் சொர்க்கம் செல்ல முடியாமல் போய்விட்டது.

காரணம், அல்லாஹ்விற்காக அவர்கள் அவற்றை செய்யவில்லை. அமல்கள் குறைவாக செய்திருந்தாலும் அல்லாஹ்விற்காக செய்திருந்தால் அவர்கள் மகத்தான நன்மையை அடைந்திருப்பார்கள். இந்த துர்ப்பாக்கியவான்கள் அமல்கள் செய்தும் நஷ்டவாளிகளாக ஆகிவிட்டார்கள். அல்லாஹ்வே! எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்.

இங்கே நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான ஒரு செய்தி இருக்கிறது.

நம்மில் பலருக்கு அமல்களில் நாட்டம் அதிகம் இல்லாமல் இருக்கும்.

வணக்க வழிபாடுகளை அவர் செய்தாலும் மிகக் குறைவாக மட்டுமே செய்வார்.

உலக சுகங்களை அதிகமாக தேடும் அவர் மறுமையின் இன்பங்களை அடைய ஆர்வமில்லாமல் இருப்பார்.

பெரிய செல்வந்தராக ஆக வேண்டும் என்ற ஆசை இல்லை, வெறியே இருக்கும்.

ஆனால், பெரிய வணக்கசாலியாக ஆக வேண்டும் என்ற ஆசையே இருக்காது. ஆசை ஒரு பக்கம் இருக்கட்டும். குறைந்த பட்சம் நானும் அல்லாஹ்வை அதிகம் வணங்க வேண்டுமே என்ற எண்ணமே இருக்காது.

உலக வாழ்க்கையில் அதிக சொத்து சுகங்களை வாங்கி குவிக்க வேண்டும் என்ற பேராசையும் பெரும் முயற்சியும் இருக்கும். தோட்டம் துரவுகளை, விசாலமான இல்லங்களை, வருமானம் கொழிக்கும் வணிக வளாகங்களை உரிமையாக்க வேண்டும் என்ற வேட்கை இருக்கும்.

இப்படியெல்லாம் ஆசைகள் இருக்கின்ற இவருக்கு, தனது மறுமைக்காக என்ன ஆசை வைத்திருக்கிறார் என்று பார்த்தால் மறுமையின் ஆசையும் இருக்காது, மறுமையின் பயமும் இருக்காது. தான் மரணித்த உடனேயே ஃபிர்தவ்ஸ் சொர்க்கத்திற்கு கேள்வி கணக்கின்றி உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டு விடுவோம் என்ற எண்ணத்தில் அவர் இருப்பது போன்று இருக்கும் அவரின் மறுமையின் அமல்களை பார்க்கும்போது.

மறதியில், பாவத்தில் மூழ்கிக் கொண்டு மறுமையின் நற்பேறுகளை அடைவதில் கற்பனை செய்துகொண்டு இருப்பார்.

மறுமையின் அமல்கள் என்று வந்துவிட்டால் எவ்வளவு குறைவான அமல்களை கொண்டு போதுமாக்கிக் கொள்ள முடியுமோ அந்தளவு மட்டுமே அமல்களை செய்வார். ஃபர்ழுகளையே அரைகுறையாக செய்கின்ற அவர் உபரியான, விரும்பத்தக்க நஃபில் அமல்களை செய்வதில் எப்படி அவர் நாட்டம் கொள்வார்.

எந்த வணக்கத்தில் அவர் சென்றாலும் அவரால் அதை சிறப்பாக செய்ய முடியாது, அதில் கவனமாக ஈடுபட முடியாது, அதை அதிகமாக செய்ய முடியாது. இப்படி நம்மில் பலர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவராக நான் இருக்கிறேனா என்று சுயபரிசோதனை செய்ய வேண்டிய நேரத்தில் நாம் இருக்கிறோம். இப்போது சோதனை செய்து நம்மை நாம் திருத்திக் கொள்ளவில்லை என்றால் கப்ரில் சென்றா நம்மை நாம் திருத்த முடியும்? அல்லது மறுமையில் அல்லாஹ்விற்கு முன் நிற்கும்போதா நாம் நம்மை திருத்திக்கொள்ள முடியும்.

இங்கு அமல், அங்கு கூலி. இன்று அமல், நாளை விசாரணை. இதுதான் உலக வாழ்க்கையும் மறுமை வாழ்க்கையும்.

இங்கு செல்வத்தால் அதிகமானவர், இங்கு ஆட்சியால் அதிகமானவர், இங்கு சொத்து சுகத்தால் அதிகமானவர், மறுமையிலும் பதவிகளால் அதிகமானவராக இருப்பார் என்ற உறுதிமானம் இருக்கிறதா? அப்படி இருக்க உனக்கு என்ன மமதை, அல்லது உனக்கு என்ன மெத்தனம் மறுமையின் அமல்களில் இந்தளவு அலட்சியமாக இருக்கிறாயே?

ஆம், இந்த உனது நிலையில் இருந்து நீ மாற வேண்டுமா?

உனது இந்த மறதியிலிருந்தும் அலட்சியத்திலிருந்தும் நீ திருந்த வேண்டுமா?

அமல்களில் உனக்கு இருக்கின்ற சோம்பேறித்தனத்திலிருந்து நீ விடுபட்டு சுறுசுறுப்பாக வணக்க வழிபாட்டில் ஈடுபட வேண்டுமா?

இந்தளவு அமல் போதும் என்று குறைவான அமல்களைக் கொண்டு பெரிய நிறைவடைந்து கொண்டிருந்த நீ எவ்வளவு அமல்கள் செய்தாலும் இன்னும் அமல்கள் அதிகம் செய்ய வேண்டுமே என்ற சான்றோரின் உயர்வான பேராசை உனக்கு வரவேண்டுமா?

ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவன் பின்னால் வருபவனை பார்த்து ஓட மாட்டான். தனக்கு முன்னால் ஓடுபவனை முந்த வேண்டுமே என்று முன்னால் உள்ளவனிடம் போட்டி போட்டுத்தான் ஓடுவான்.

அல்லாஹ்வின் மன்னிப்பையும் சொர்க்கத்தையும் அடைய உங்களுக்குள் போட்டிப் போட்டு ஓடுங்கள், ஒருவரை விட ஒருவர் வேகமாக அமல்களை செய்வதில் விரைந்து செல்லுங்கள் என்று அல்லாஹ் ஆர்வமூட்டி இருப்பதைப் போன்று நீயும் அமல்களின் பந்தயத்தில் முதலில் ஓடுபவனைப் போன்று விரைந்தும் முந்தியும் வேகமாகவும் ஓட ஆசைப்படுகிறாயா?

அதற்குதான் இமாம் ஹசன் ﵀ அவர்கள் மேற்கண்ட வசனத்தின் விளக்கத்தில் நமக்கு அறிவுரை பகர்ந்தார்கள்.

இமாம் ஹசன் ﵀ கூற வரும் அறிவுரையின் சுருக்கம் இதுதான்.

உன்னை நீ நயவஞ்சகத்தை விட்டும் சுத்தப்படுத்து!

உன்னை நீ முகஸ்துதியை விட்டும் சுத்தப்படுத்து!

உன்னை நீ உனது அமல்களைக் கொண்டு அல்லாஹ் அல்லாதவரின் பொருத்தத்தை தேடுவதை விட்டும் சுத்தப்படுத்து!

பிறருக்காக அமல்களை செய்வதை நிறுத்து!

எந்த அமலையும் அல்லாஹ்விற்காக செய்பவனாக மாறு!

உனது ரப்பாகிய அல்லாஹ்வின் கண்ணியத்தையும் மகத்துவத்தையும் உயர்வையும் அவன் உனக்கு செய்திருக்கின்ற அருள்களையும் உன் மீது அவன் பொழிந்துள்ள அருட்கொடைகளையும் புரிந்து வணக்க வழிபாட்டில் ஈடுபடு!

அல்லாஹ்வை அவனது தன்மைகளுடன் நீ அறியாத வரை அவன் மீது உனக்கு அன்பும் வராது. அவனைப் பற்றி உன் உள்ளத்தில் பயமும் வராது.

உனது ரப்பின் மீது உனக்கு அன்பும் இல்லை, பயமும் இல்லை, உனது ரப்பின் சொர்க்கத்தின் மீது உனக்கு ஆசையும் இல்லை, உனது ரப்பின் நரக நெருப்பின் மீது உனக்கு அச்சமும் இல்லை. இப்படி இருக்கும்போது நீ எப்படி அமல்களை அதிகமாக செய்வாய்?

ஆகவே! எதையும் அல்லாஹ்விற்காக செய்! அப்போது அதை அதிகமாகவும் சிறப்பாகவும் தொடர்ச்சியாகவும் செய்வாய். உனது ரப்பின் பொருத்தம் வேண்டும், உனது ரப்பு உன் மீது திருப்திபட வேண்டும், உனது ரப்பு உன்னைப் பற்றி மகிழ்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணம் உன்னிடம் வந்துவிட்டால் உனது உயிரை நீ அவனுக்காக அர்ப்பணித்து விடுவாய். உனது சொத்து சுகங்களை அவனுக்காக நீ அள்ளிக் கொடுத்து விடுவாய். அவனை வணங்குவதிலிருந்து உனது கவனத்தை உலக வஸ்துக்களின் பக்கம், அற்ப இன்பங்களின் பக்கம், வீண் விளையாட்டுகளின் பக்கம் நீ திருப்பிவிட மாட்டாய்.

அல்லாஹ் உனக்கும் எனக்கும் அந்த நற்பாக்கியத்தை தருவானாக! நல்லமல்களை அதிகமதிகம் சேர்த்துக்கொண்ட நல்லோரில் என்னையும் உன்னையும் ஆக்கி அருள்வானாக! நன்மைகளில் ஆர்வத்தையும் ஆசையையும் அதிகம் ஏற்படுத்துவானாக! ஆமீன்!

• • •

சான்றோர் பாடசாலை அமர்வு 31, கூற்று 1543

## இறை வணக்கத்திற்காக வாழ்வோம்!

حَدَّثَنَا هَارُونُ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا نُوحُ بْنُ قَيْسٍ حَدَّثَنَا الْمُعَلَّى بْنُ زِيَادٍ الْقُرْدُوسِيُّ قَالَ قُلْتُ لِلْحَسَنِ رَجُلَانِ تَفَرَّغَ أَحَدُهُمَا لِلْعِبَادَةِ وَالْآخَرُ يَسْعَى عَلَى عِيَالِهِ أَيُّهُمَا أَفْضَلُ قَالَ الَّذِي تَفَرَّغَ لِلْعِبَادَةِ أَفْضَلُ

அல்முஅல்லா இப்னு ஸியாத் ﵀ கூறுகிறார், நான் ஹசன் ﵀ அவர்களிடம் கேட்டேன், இரு மனிதர்கள் இருக்கிறார்கள். அவ்விருவரில் ஒருவர் இபாதத்திற்காக - அல்லாஹ்வின் வணக்க வழிபாட்டுக்காக முழுமையாக (முழு நேரம்) ஒதுங்கிக் கொண்டார், மற்றவர் தனது குடும்பத்திற்காக உழைக்கிறார். இந்த இருவரில் மிகச் சிறந்தவர்கள் யார். அதற்கு, ஹசன் ﵀ கூறினார்: இபாதத்திற்காக (முழு நேரம்) ஒதுங்கியவர்தான் மிகச் சிறந்தவர் ஆவார்.

**கருத்து:** அல்லாஹ் இமாம் ஹசனுக்கு ﵀ அருள் புரிவானாக!

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ○

ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காக அன்றி நான் படைக்க வில்லை. (அல்குர்ஆன் 51 : 56)

என்று அல்லாஹ் கூறுவதை இமாம் ஹசன் ﵀ அவர்கள் புரிந்தார்கள்.

أَفَحَسِبْتُمْ أَنَّمَا خَلَقْنَاكُمْ عَبَثًا وَأَنَّكُمْ إِلَيْنَا لَا تُرْجَعُونَ○

உங்களை நாம் வீணாக படைத்தோம் என்றும் நிச்சயமாக நீங்கள் எங்களிடம் திரும்ப கொண்டுவரப்பட மாட்டீர்கள் என்றும் நீங்கள் எண்ணிக் கொண்டீர்களா? (அல்குர்ஆன் 23 : 115)

என்று அல்லாஹ் கேட்பதை இமாம் ஹசன் ﵀ அவர்கள் புரிந்தார்கள்.

يَاعِبَادِيَ الَّذِينَ آمَنُوا إِنَّ أَرْضِي وَاسِعَةٌ فَإِيَّايَ فَاعْبُدُونِ ○

நம்பிக்கை கொண்ட என் அடியார்களே! நிச்சயமாக எனது பூமி விசாலமானது, ஆகவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்! (அல்குர்ஆன் 29 : 56)

என்று அல்லாஹ் கூறியதை இமாம் ஹசன் ﵀ அவர்கள் புரிந்தார்கள்.

قُلْ إِنِّي أُمِرْتُ أَنْ أَعْبُدَ اللهَ مُخْلِصًا لَهُ الدِّينَ ○

நிச்சயமாக நான் அல்லாஹ்வை - தீனை அவனுக்கு பரிசுத்தமாக்கியவனாக - வணங்க வேண்டும் என்று ஏவப்பட்டுள்ளேன் என்று கூறுவீராக. (அல்குர்ஆன் 39 : 11)

என்ற இறை வசனத்தை இமாம் ஹசன் ﵀ அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

فَابْتَغُوا عِنْدَ اللهِ الرِّزْقَ وَاعْبُدُوهُ وَاشْكُرُوا لَهُ إِلَيْهِ تُرْجَعُونَ ○

ஆகவே அல்லாஹ்விடம் ரிஸ்க்கை - உணவை தேடுங்கள்! அவனை வணங்குங்கள்! அவனுக்கு நன்றி செலுத்துங்கள்! அவன் பக்கமே நீங்கள் திரும்ப கொண்டு வரப்படுவீர்கள். (அல்குர்ஆன் 29 : 17)

என்ற இறை வசனத்தை இமாம் அவர்கள் விளங்கிக் கொண்டார்கள்.

ஆம், நாம் இந்த உலகத்திற்கு அல்லாஹ்வை வணங்கத்தான் வந்தோம். அதற்காகவே நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். அதற்காகவே நமக்கு இந்த உலகத்தில் வாழ்வாதாரமும், வாழ்க்கை வசதிகளும், இந்த பிரபஞ்ச படைப்புகளின் பணிவிடைகளும் கொடுக்கப்பட்டன.

இந்த பிரபஞ்சத்தின் ஒவ்வொரு சிருஷ்டியும் நமக்காக, நமது தேவைகளை எளிதாக்கித் தர, நமக்கு பயன் தர உருவாக்கப்பட்டது. நாமோ நமது ரப்பை வணங்க, அவனது வணக்க வழிபாட்டில் ஈடுபட்டு அவனை திருப்திப்படுத்த, அவனுக்கு நன்றி செலுத்த உருவாக்கப்பட்டிருக்கிறோம்.

அவனோ நமது அரசன், நமது எஜமானன், நமது உரிமையாளன், நமது வணக்க வழிபாடுகளுக்கு தனித்தே தகுதியான மஅபூத் ஆவான். அவன் நம்மை படைத்தான், நமக்கு தேவையான அனைத்தையும் வழங்கினான். நாம் அனுபவிக்கின்ற எல்லா சுகங்களையும் அவனே நமக்கு கொடுத்தான்.

அவன் நமக்கு ஈமானையும் இஸ்லாமையும் கொடுத்து சிறப்பித்தான். ஆகவே, அவனை வணங்குவதை விட நமக்கு வேறு ஒரு சிறப்பு உண்டோ!?

அடிமை, அடிமையாக இருப்பதை விட வேறு என்ன உயர்வு இருக்க முடியும். அடிமைகளில் சிறப்பான அடிமை அல்லாஹ்விற்கு அடிமையாக ஆகிவிட்டவர் ஆவார். அல்லாஹ்வும் அவரை தன் அடிமையாக ஏற்றுக் கொண்டால் அதை விட உயர்ந்த தகுதி இவ்வுலகத்தில் இருக்கவே முடியாது.

வானவர்களும் நபிமார்களும் ரஸூல்மார்களும் முதலில் அல்லாஹ்விற்கு அடிமைகள் ஆவார்கள். பிறகுதான் அவர்கள் வானவர்கள், நபிமார்கள், ரஸூல்மார்கள் ஆவார்கள். மலக்குகளை அல்லாஹ் தன் அடிமைகள் என்று வர்ணிக்கிறான். எல்லா நபிமார்களையும் ரஸூல்மார்களையும் அவர்கள் எல்லாம் என் அடியார்கள் என்றே புகழ்கிறான்.

அடிமை - அப்த் என்ற பதம் அபத - வணங்கினான் என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். ஆபித் - வணங்குபவன், பணிந்து கட்டுப்பட்டு நடப்பவன் என்ற சொல்லிலிருந்து வந்ததுதான் அப்த் - அடிமை என்ற பதம். அதாவது ஆபித் - கட்டுப்பட்டு பணிந்து நடப்பவர் தன் விருப்பத்தை எல்லாம் விட்டுவிட்டு தனது எஜமானனின் விருப்பத்தின் படியும் அவரின் கட்டளையின் படியும் நடக்கும்போது அவரை அப்த் - இன்னாருக்கு இவர் அடிமை என்று அழைக்கப்படுகிறது.

ஆகவே, நாம் அல்லாஹ்விற்கு அப்த் - அடிமைகள், அவன் நமது உண்மையான முழுமையான நிரந்தரமான எஜமானன் என்பது உண்மை என்றால் நாம் அவனை வணங்குவதைத் தவிர வேறு நோக்கத்தை நமது வாழ்க்கைக்கு ஆக்காமல் இருக்க வேண்டும்.

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ ۝ لَا شَرِيكَ لَهُ
وَبِذَٰلِكَ أُمِرْتُ وَأَنَا أَوَّلُ الْمُسْلِمِينَ ۝

நபியே! கூறுவீராக! நிச்சயமாக எனது தொழுகை, எனது குர்பானி, எனது வாழ்க்கை, எனது மரணம் எல்லாம் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்விற்கே உரியவை ஆகும். அவனுக்கு இணையானவர் அறவே இல்லை. இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன். நான் முஸ்லிம்களில் முதலாமவன் ஆவேன். (அல்குர்ஆன் 6 : 162, 163)

ஆம், அல்லாஹ்வை பணிவுடனும் பயத்துடனும் வணங்கி வழிபட்டு, அவனது மார்க்கத்தின் படி வழி நடக்கின்ற மனிதன்தான் முஸ்லிம் ஆவான்.

இந்த உலகத்தில் தோன்றிய எல்லா இறைத்தூதர்களும் தமது மக்களை பார்த்து முதன் முதலாக கூறிய உபதேசமே, மக்களே! அல்லாஹ்வை வணங்குங்கள் என்பதுதான்.

அல்லாஹ்வை வணங்குவதின் பக்கம் மக்களை அழைக்கவும் வணக்க வழிபாடுகள் எப்படி செய்ய வேண்டும் என்பதை போதிக்கவுமே நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள்.

قُلْ إِنَّمَا أُمِرْتُ أَنْ أَعْبُدَ اللهَ وَلَا أُشْرِكَ بِهِ إِلَيْهِ أَدْعُو وَإِلَيْهِ مَآبِ○

நபியே! கூறுவீராக! நான் ஏவப்பட்டதெல்லாம் நான் அல்லாஹ்வை வணங்க வேண்டும், அவனுக்கு நான் இணைவைக்கக் கூடாது என்பதற்குத்தான். நான் அவன் பக்கமே அழைக்கிறேன். அவன் பக்கமே மீளுமிடம் இருக்கிறது.

(அல்குர்ஆன் 13 : 36)

இந்த பிரபஞ்சத்தில் அல்லாஹ் வணங்கப்படாவிட்டால் இந்த அகிலத்தை அல்லாஹ் அழித்து விடுவான். அல்லாஹ்வை மக்கள் வணங்குகின்ற வரைதான் இந்த சூரியனும் சந்திரனும் இயங்கும்படி அல்லாஹ் வைத்திருப்பான்.

அல்லாஹ்வை வணங்குபவரை விட்டு இந்த உலகம் நீங்கி விட்டால், அல்லாஹ்வை வணங்கி வழிபடுபவர் இந்த உலகத்தில் இல்லாமல் போய்விட்டால், இந்த பூமியில் அல்லாஹ்வின் வணக்க வழிபாடுகள் நடைபெறா விட்டால் பிறகு இந்த பூமியை அல்லாஹ் அடியோடு புரட்டி விடுவான். காற்றுகள் இங்கும் அங்கும் பெரும் பேய் புயலாக வீச ஆரம்பித்து விடும். மலைகள் பெயர்க்கப்பட்டு பூமியில் அடிக்கப்பட்டு தூள்தூளாக நொறுக்கப்பட்டு விடும். வானங்கள் நொறுக்கப்பட்டு விடும்.

வணக்க வழிபாடுகள் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே நடக்க வேண்டும், மக்கள் அல்லாஹ்வை வணங்குவதில் தங்கள் வாழ்க்கையை கழிக்க வேண்டும், மறுமையில் சொர்க்க வாழ்க்கை கிடைக்க வேண்டுமென்றால் அல்லாஹ்வை வணங்க வேண்டும், அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும், அல்லாஹ்வை வணங்குவதே வாழ்க்கையின் நோக்கமாக இருக்க வேண்டும், எல்லா வணக்க வழிபாடுகளும் அல்லாஹ் ஒருவனுக்கே செய்யப்பட

வேண்டும், இப்படி அல்லாஹ்வின் பக்கம், அவனை வணங்குவதின் பக்கம், அவனுக்கு அடிமையாகுவதின் பக்கம் அல்லாஹ்வின் அடியார்களை அழைப்பதற்காக நபிமார்கள் அனுப்பப்பட்டார்கள்.

இந்த உலகத்தில் மனிதன் என்ன நிரந்தரமாக இருக்கப்போகிறானா? இந்த உலகம் என்ன மனிதன் நிரந்தரமாக வாழ படைக்கப்பட்டதா?

வாழ்ந்தவர்கள் இறந்திருக்கவில்லை என்றால் நாம் இங்கு வாழ முடியுமா?

வந்தவர்கள் எல்லாம் நிரந்தரமாக இருந்திருந்தால் வருபவர்களுக்கு இடம் இருந்திருக்குமா?

இறப்பவர் இல்லை என்றால் பிறப்பவர் எங்கு வாழ்வார்?

மூதாதைகள் மண்ணறைக்கு செல்லவில்லை என்றால் குழந்தைகளுக்கு ஏது தொட்டில்?

இறக்காமல் வாழ முடியும் என்றிருந்தால் மன்னர்கள் யாரும் இறந்திருப்பார்களா?

செல்வத்தால் நிரந்தர வாழ்க்கையை வாங்கி விட முடியும் என்றிருந்தால் செல்வந்தர்கள் எல்லாம் நிரந்தரமாக வாழ்ந்திருப்பார்களே!!

மரணத்திலிருந்து மனிதனை காப்பாற்ற சக்தி பெற்ற மருத்துவர் இருந்திருந்தால் மருத்துவர் யாரும் மரணித்திருக்க மாட்டாரே!!

இந்த பூமியில் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும், எத்தனை கோடிகளை சொந்தமாக்கினாலும், இந்த பூமியில் எந்த திசையில் சென்றாலும் மரணமில்லா வாழ்க்கை இல்லை.

மனிதன் மண்ணறைக்கு சென்றே ஆக வேண்டும். மறுமையின் பயணத்தில் பயணித்தே ஆக வேண்டும்.

அந்த மறுமை வாழ்க்கையில் மனிதன் வெற்றிபெற வேண்டுமென்றால் அல்லாஹ்வின் பரிசுத்தமான வணக்க வழிபாடுகள் மட்டுமே உதவும். எவ்வளவு அல்லாஹ்வை வணங்கினானோ அந்தளவு வெற்றியாளனாக அவன் இருப்பான்.

மறுமையில் உனக்கு வெற்றி வேண்டுமா?

உன் நன்மையின் தட்டு கனக்க வேண்டுமா?

உனது அமல்களின் ஏடுகள் உனது வலது கையில் கொடுக்கப்பட வேண்டுமா?

சிராத் - பாலத்தை மின்னல் வேகத்தில் கடக்க வேண்டுமா?

உயர்ந்த சொர்க்கம் வேண்டுமா?

சொர்க்கத்தில் உயர்ந்த பதவி வேண்டுமா?

நபிமார்கள், சித்தீக்குகள், ஷஹீதுகள், சாலிஹீன்கள் உடன் சொர்க்கத்தில் வீற்றிருக்க வேண்டுமா?

அல்லாஹ்விற்கு மிக அருகில் இருக்க வேண்டுமா?

அல்லாஹ்வை பார்க்க வேண்டுமா?

அல்லாஹ்வை சொர்க்கத்தில் ஒவ்வொரு நாளும் பார்க்க வேண்டுமா?

அல்லாஹ்வின் பொருத்தம் வேண்டுமா?

இதற்கெல்லாம் நீ செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதுதான் அல்லாஹ்வின் வணக்க வழிபாடுகள். வணக்க வழிபாடுகளை செய்! வணக்க வழிபாடுகளை அதிகம் செய்! நீ உற்சாகமாக இருக்கும்போதும் செய்! நீ சோர்வாக இருக்கும்போதும் செய்! நீ ஏழையாக இருக்கும்போதும் செய்! நீ செல்வந்தனாக இருக்கும்போதும் செய்! நீ உள்ளூரில் இருந்தாலும் செய்! நீ பயணத்தில் இருந்தாலும் செய்! நீ சிறுவனாக இருந்தாலும் செய்! நீ வாலிபனாக இருந்தாலும் செய்! நீ வயோதிகனாக இருந்தாலும் செய்!

நீ சுகமாக இருந்தாலும் அல்லாஹ்வை வணங்கு! நீ நோயாளியாக இருந்தாலும் அல்லாஹ்வை வணங்கு! வணங்கு! வணங்கு! நீ மரணிக்கும் வரை உன் இறைவனை வணங்கு! வணங்கிக் கொண்டே இரு! உனக்கு மரணம் வரும் வரை வணங்கு! நீ வணக்க வழிபாட்டில் இருக்கும் நிலையில் மரணம் வரவேண்டும் என்பதற்காக வணங்கிக்கொண்டே இரு!!

فَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ وَكُنْ مِنَ السَّاجِدِينَ ۝ وَاعْبُدْ رَبَّكَ حَتَّىٰ يَأْتِيَكَ الْيَقِينُ ۝

ஆகவே, உனது இறைவனை புகழ்ந்து துதிப்பீராக! சிரம்பணிந்து வணங்குவோரில் நீர் ஆகிவிடு! உமது இறைவனை வணங்குவீராக உமக்கு மரணம் வருகின்ற வரை. (அல்குர்ஆன் 15 : 98, 99)

அல்லாஹ்வை வணங்குவதை விட ஓர் இன்பம் இவ்வுலகில் இருக்க முடியுமோ?

எல்லா இன்பங்களும் அலுத்துப் போய் விடும், வணக்க வழிபாட்டின் இன்பத்தைத் தவிர!

எல்லா சுகங்களும் துக்கமாக ஆகிவிடும், வணக்க வழிபாட்டின் சுகத்தைத் தவிர. எல்லாம் ஒரு நாள் நம்மை விட்டு விலகிப்போய் விடும், வணக்க வழிபாட்டைத் தவிர.

கணவன், மனைவி, பெற்றோர், பிள்ளைகள், நண்பர்கள், உற்றார் உறவினர் இப்படி எல்லோரும் நமக்கு கொடுக்க முடியாத தருணத்தில் நமக்கு கொடுத்து கரை சேர்ப்பது அல்லாஹ்விற்காக அல்லாஹ்விற்கு நாம் செய்த வணக்க வழிபாடுகள்தான்.

இபாதத்தில் அல்லாஹ்வின் அச்சத்தால் அழுது இந்த கண்கள் குருடானால் நமது முன்னோருக்கும் அப்படி ஆகி இருக்கிறது. இபாதத்துகளில் இந்த உடல் இளைத்து களைத்துப்போனால் நமது முன்னோர் நம்மை விட பன்மடங்கு இறை இபாதத்திற்காக இளைத்து களைத்துப் போய் இருக்கிறார்கள்.

முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட மாநபியே கால் வீங்க வணங்கினார்களே!

நபியின் பரிசுத்த மனைவியர், நமது அன்னையர் தூங்கி விழாமல் இருக்க கயிறுகளை கட்டிக் கொண்டு வணங்கினார்களே! ஃபஜ்ரு தொழுததிலிருந்து இடம் மாறாமல் முற்பகல் வரை அந்த அன்னையர் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டு இருந்தார்களே! சொர்க்கம் வாக்களிக்கப்பட்ட தோழர்கள் அனைவரும் கடமையான வழிபாடுகள் மட்டுமல்லாமல் உபரியான இபாதத்துகளையும் போட்டிப் போட்டு செய்தார்களே!

தொழுகையா, நோன்பா, தர்மமா, ஜிஹாதா, திக்ரா, திலாவத்தா, கல்வி கற்பதா, பிறருக்கு உதவுவதா… இப்படி எல்லா வகையான இபாதத்துகளையும் இன்முகத்துடன், சோர்வு பாராமல், சடைவடையாமல், சலிப்புத் தட்டாமல், சாக்குப்போக்கு கூறாமல், மிகச் சிறப்பாக செய்தார்களே! அவர்களின் வழி வந்த அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றி நடந்த தாபியீன்களோ செய்த வணக்க வழிபாடுகளை படித்துப் பார்க்கும்போது அவர்கள் ஸஹாபாக்களுக்கு சற்றும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை அறிய முடியும்!

ஆம், இமாம் ஹசன் ﵀ கூறியதுபோன்று யார் அல்லாஹ்வை வணங்க முழுமையாக, முழு நேரமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டாரோ அவரே சிறந்தவர். அவரே புத்திசாலி! அவரே ஞானவான்! அவரே வெற்றியாளர்! அவரே மாபெரும் நற்பாக்கியசாலி! அவரே இம்மையின் பிறப்பை சரியாக

பயன்படுத்திக் கொண்டவர்! அவரே வாழ்க்கையின் இலட்சியத்தை அடைந்தவர்! அவரே அல்லாஹ்விற்கு மிகப் பிரியமானவர்.

இந்த உலகத்தில் ஒருவர் எதை இழந்தாலும் மறுமையின் வெற்றியை இழந்து விடுவார் என்ற நிலை இல்லை, ஆனால் இபாதத்தை தவிர. இபாதத்தை இழந்தவன் இவ்வுலகில் எல்லாம் பெற்றிருந்தாலும் அவன்தான் மிகப் பெரிய துர்பாக்கியசாலி. அவன்தான் மறுமையில் மிகப் பெரிய நஷ்டவாளி! நரகமே அவனது நிரந்தர தங்குமிடம்!! அல்லாஹ் பாதுகாப்பானாக!

உலக வாழ்க்கையின் வெற்றியின் இரகசியமே அல்லாஹ்வை வணங்குவதுதான்!

நபிமார்கள் அனுப்பப்பட்டதும் வேதங்கள் இறக்கப்பட்டதும் அல்லாஹ்வை நாம் வணங்க வேண்டும் என்பதற்காகத்தான்.

ஆகவேதான் இபாதத்திற்காக முழுமையாக தன்னை உலகத்திலிருந்து விடுவித்துக் கொண்டவர்தான் சிறந்தவர்! உலகத்தின் அவசியத் தேவைகளை போதுமாக்கிக் கொண்டு தன்னை தனது ரப்பை வணங்குவதில் மூழ்கடித்தவரே சிறந்தவர் என்று இமாம் ஹசன் ﷺ அவர்கள் பதில் கூறினார்கள்.

அல்லாஹ்வே! அந்த நல்லோர் புரிந்ததை எங்களுக்கு புரிய வைப்பாயாக! அந்த சான்றோர் பாதையில் எங்களை வழிநடத்துவாயாக! இபாதத்துகளால் நிரம்பிய வாழ்க்கையைத் தா! வணக்க வழிபாட்டில் எங்களை இன்பம் காண வை! வணக்க வழிபாட்டின் சுவையை எங்களை விட்டும் பறித்து விடாதே! உன்னை வணங்குவோரில், உன்னை புகழ்வோரில், உன்னை துதிப்போரில், உனக்கு முன் குனிவோரில், உன் சமூகத்தில் சிரம்பணிவோரில், உனக்கு முன் நின்று உன் வேதத்தை ஓதி உன்னை தொழுவோரில் எங்களையும் எங்கள் சந்ததிகளையும் ஆக்கி வைப்பாயாக! ஆமீன்!

• • •

## ஈமானுக்கான உரைகல்

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا هَارُونُ حَدَّثَنَا سَيَّارُ حَدَّثَنَا جَعْفَرُ حَدَّثَنَا مَالِكُ بْنُ دِينَارٍ عَنِ الْـحَسَنِ قَالَ الْإِيمَانُ إِيمَانُ مَنْ خَشِيَ اللهَ عَزَّ وَجَلَّ بِالْغَيْبِ وَرَغِبَ فِيمَا رَغَّبَ اللهُ فِيهِ وَتَرَكَ مَا يَسْخَطُ اللهُ ثُمَّ تَلَا الْـحَسَنُ ﷀ كَذٰلِكَ إِنَّمَا يَخْشَى اللهَ مِنْ عِبَادِهِ الْعُلَمَاءُ

ஹசன் ﷀ கூறினார்: யார் அல்லாஹ்வை மறைவில் பயந்தாரோ, இன்னும், அல்லாஹ் எதில் ஆர்வமூட்டினானோ அதில் ஆர்வப்பட்டாரோ, இன்னும், அல்லாஹ் வெறுக்கின்ற அதிருப்தி படுகின்ற காரியங்களை விட்டுவிடுகிறாரோ அத்தகையவருடைய ஈமான்தான் (உண்மையான, உறுதியான, முழுமையான) ஈமான் - இறை நம்பிக்கையாகும். பிறகு, ஹசன் ﷀ ஓதினார்கள்:

إِنَّمَا يَخْشَى اللهَ مِنْ عِبَادِهِ الْعُلَمَاءُ ۝

அல்லாஹ்வை அவனது அடியார்களில் பயப்படக்கூடியவர் யார் என்றால் (அல்லாஹ்வை அறிந்த) அறிஞர்கள்தான். (அல்குர்ஆன் 35 : 28)

**கருத்து:** ஈமான், இதுதான் இந்த உலகத்தின் மாபெரும் கொடுப்பினையாகும். இது உலகத்தில் உள்ள வெளிச்சத்தில் எல்லாம் மாபெரும் வெளிச்சமாகும். ஞானங்களின் உண்மையான இறுதி எல்லை ஈமான் ஆகும். ஈமானை விட பெரிய சத்தியம் இவ்வுலகில் இல்லை. அல்லாஹ்வின் சாட்சியத்தை பெற்ற மிகப் பெரிய காரியம் ஈமான் மட்டுமே.

அல்லாஹ் கூறுகிறான்:

شَهِدَ اللهُ أَنَّهُ لَا إِلٰهَ إِلَّا هُوَ وَالْمَلَائِكَةُ وَأُولُو الْعِلْمِ قَائِمًا بِالْقِسْطِ لَا

إِلَٰهَ إِلَّا هُوَ الْعَزِيزُ الْحَكِيمُ۝

நீதத்தை நிலைநிறுத்துபவனாக அல்லாஹ் சாட்சி கூறுகிறான்: "நிச்சயமாக அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை." இன்னும் வானவர்கள், கல்விமான்கள் (இதற்கு சாட்சி கூறுகின்றனர்). மிகைத்தவன், ஞானவான் அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் அறவே இல்லை. (அல்குர்ஆன் 3 : 18)

இந்த ஈமான்தான் சொர்க்கத்தின் திறவுகோல். மனிதன் செய்கின்ற எல்லா புண்ணியங்களையும் அல்லாஹ்விடம் செல்லத்தக்கதாக ஆக்கக்கூடியது இந்த ஈமான்தான்.

وَمَنْ أَرَادَ الْآخِرَةَ وَسَعَىٰ لَهَا سَعْيَهَا وَهُوَ مُؤْمِنٌ فَأُولَٰئِكَ كَانَ سَعْيُهُمْ مَشْكُورًا۝

எவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்து, மறுமையை நாடி அதற்குரிய முயற்சி செய்வார்களோ, அவர்களுடைய முயற்சி நன்றி செலுத்தப்பட்(டு நற்கூலி கொடுக்கப்பட்)டதாக இருக்கும். (அல்குர்ஆன் 17 : 19)

فَمَنْ يَعْمَلْ مِنَ الصَّالِحَاتِ وَهُوَ مُؤْمِنٌ فَلَا كُفْرَانَ لِسَعْيِهِ وَإِنَّا لَهُ كَاتِبُونَ۝

(இவர்களில்) யார் தான் நம்பிக்கையாளராக இருந்து, நற்காரியங்களை (-உண்மையான வணக்க வழிபாடுகளை) செய்வாரோ அவருடைய (நல்ல) முயற்சியை (-செயலை) மறுக்கப்படாது. (அதற்கு நற்கூலி உண்டு.) நிச்சயமாக நாம் அதை பதிவு செய்(து பாதுகாக்)கிறோம். (அல்குர்ஆன் 21 : 94)

ஈமான் இன்றி செய்யப்பட்ட கோடிக்கணக்கான நன்மைகளும் புண்ணியங்களும் அல்லாஹ்விடம் கூலி அற்றதாக ஆகிவிடும்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَقَدِمْنَا إِلَىٰ مَا عَمِلُوا مِنْ عَمَلٍ فَجَعَلْنَاهُ هَبَاءً مَنْثُورًا۝

செயல்களில் அவர்கள் செய்ததை நாம் (அதற்கு கூலி கொடுப்பதற்காக)

நாடுவோம். பிறகு, அதை பரத்தப்பட்ட புழுதியாக ஆக்கிவிடுவோம். (அல்குர்ஆன் 25 : 23)

وَالَّذِينَ كَفَرُوا أَعْمَالُهُمْ كَسَرَابٍ بِقِيعَةٍ يَحْسَبُهُ الظَّمْآنُ مَاءً حَتَّىٰ إِذَا جَاءَهُ لَمْ يَجِدْهُ شَيْئًا وَوَجَدَ اللَّهَ عِنْدَهُ فَوَفَّاهُ حِسَابَهُ وَاللَّهُ سَرِيعُ الْحِسَابِ○

நிராகரிப்பாளர்கள் அவர்களுடைய செயல்கள் வெட்டவெளியில் இருக்கும் கானல் நீரைப் போலாகும். அதை (தாகித்தவர்) தண்ணீராக எண்ணுகிறார். இறுதியாக, அதனிடம் அவர் வந்தால் அதை ஏதும் காணமாட்டார். அல்லாஹ்வைத்தான் அதனிடம் காண்பார். அவன் அவருடைய கணக்கை அவருக்கு (முழுமையாக) நிறைவேற்றுவான். கேள்வி கணக்கு கேட்பதில் அல்லாஹ் மிகத் தீவிரமானவன். (அல்குர்ஆன் 24 : 39)

ஈமான் நேர்வழியின் வாசலாகும். நேர்வழிக்கு அல்லாஹ் விதிக்கும் முதல் நிபந்தனை ஈமான் ஆகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَمَنْ يُؤْمِنْ بِاللَّهِ يَهْدِ قَلْبَهُ وَاللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ○

யார் அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வாரோ அவரின் உள்ளத்திற்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவான். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தவன் ஆவான். (அல்குர்ஆன் 64 : 11)

அல்லாஹ்வின் பொருத்தம், அல்லாஹ்வின் அன்பு, அல்லாஹ்வின் கருணை, அல்லாஹ்வின் சொர்க்கம் அடியானுக்கு கிடைக்க வேண்டுமென்றால் அதன் முதல் நிபந்தனை ஈமான் அடியானிடம் இருக்க வேண்டும். ஈமானுடன் செய்யப்பட்ட நற்காரியங்களுக்கு மட்டுமே அல்லாஹ்விடம் நன்மைகளும் வெகுமதிகளும் உண்டு.

அல்லாஹ் கூறுகிறான்:

هُوَ الَّذِي يُصَلِّي عَلَيْكُمْ وَمَلَائِكَتُهُ لِيُخْرِجَكُمْ مِنَ الظُّلُمَاتِ إِلَى النُّورِ وَكَانَ بِالْمُؤْمِنِينَ رَحِيمًا○

அவன்தான் உங்கள் மீது அருள் புரிவான், இருள்களில் இருந்து வெளிச்சத்தின் பக்கம் உங்களை அவன் வெளியேற்றுவதற்காக. இன்னும், அவனது வானவர்கள் (உங்களுக்காக அல்லாஹ்விடம்) பிரார்த்திப்பார்கள். அவன் நம்பிக்கையாளர்கள் மீது மகா கருணையுள்ளவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 33 : 43)

وَيَتُوبَ اللّٰهُ عَلَى الْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ وَكَانَ اللّٰهُ غَفُورًا رَحِيمًا○

நம்பிக்கை கொண்ட ஆண்களையும் நம்பிக்கை கொண்ட பெண்களையும் அல்லாஹ் மன்னிப்பதற்காகவும் (அல்லாஹ் அவனது கட்டளைகளை கொடுத்து சோதிக்கின்றான்). அல்லாஹ் மகா மன்னிப்பாளனாக பெரும் கருணையாளனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 33 : 73)

وَمَنْ عَمِلَ صَالِحًا مِنْ ذَكَرٍ أَوْ أُنْثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَأُولَئِكَ يَدْخُلُونَ الْجَنَّةَ
يُرْزَقُونَ فِيهَا بِغَيْرِ حِسَابٍ○

ஆண்கள் அல்லது பெண்களில் யார் ஒருவர் அவர் நம்பிக்கையாளராக இருக்கின்ற நிலையில் நன்மையை செய்வாரோ அவர்கள் சொர்க்கத்தில் நுழைக்கப்படுவார்கள். அதில் அவர்கள் கணக்கின்றி உணவளிக்கப்படுவார்கள். (அல்குர்ஆன் 40 : 40)

مَنْ عَمِلَ صَالِحًا مِنْ ذَكَرٍ أَوْ أُنْثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهُ حَيَاةً طَيِّبَةً
وَلَنَجْزِيَنَّهُمْ أَجْرَهُمْ بِأَحْسَنِ مَا كَانُوا يَعْمَلُونَ○

ஆண் அல்லது பெண்களில் எவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக நல்லதை செய்வாரோ நிச்சயம் நாம் அவர்களை நல்ல வாழ்க்கை வாழச் செய்வோம். அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றை விட மிக அழகிய முறையில் அவர்களின் கூலியை நிச்சயம் அவர்களுக்குக் கொடுப்போம். (அல்குர்ஆன் 16 : 97)

இப்படி ஈமானின் பெருமதிப்பையும் உயர்வையும் மகத்துவத்தையும் விளக்குகின்ற பல வசனங்கள் அல்குர்ஆனில் உள்ளன.

நபி ﷺ அவர்களின் பொன்மொழிகளோ அவற்றை சொல்லி முடிக்க முடியாது. அந்தளவு ஈமானின் மகத்துவத்தை விவரிக்கின்ற நபிமொழிகள் உள்ளன.

ஈமான் உள்ளத்திற்கான ஒளியாகும். ஈமான் மனிதனுக்கு சுவாசிக்கும் காற்றை விட, சூரியனின் வெளிச்சத்தை விட, குடிக்கும் தண்ணீரை விட, உண்ணும் உணவை விட மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

ஈமான் இல்லாதவரின் வாழ்க்கை இருண்ட, ஆபத்துகள் நிறைந்த காட்டை விட மிக மோசமானதாகும்.

ஈமான் உள்ளவர் அவர் ஏழையாக இருந்தாலும், மிக மிக வறிய நிலையில் இருந்தாலும், உடல் ஊனமுற்றவராக இருந்தாலும், இவ்வுலகில் பொருளாதாரத்தினால் சமூகத்தில் மிகவும் பரிதாபமான நிலையில் இருந்தாலும், அவர் ஈமான் அற்ற ஒருவரை கவனித்துப் பார்க்கும்போது மிகவும் விசாலமான, சுபிட்சமான மன நிலையில், மகிழ்ச்சியான, திருப்தியான மன நிலையில், தன் இறைவன் மீது திருப்தி அடைந்த நிலையில் இருப்பார்.

மேலும், தன்னை தானே இகழ்ந்து கொள்வதிலிருந்தும், தாழ்த்திக் கொள்வதிலிருந்தும் தனது விதியை குறை கூறுவதிலிருந்தும் வெகுதூரம் விலகி இருப்பார். தன்னை விட கீழ் நிலையில் உள்ள பலரை கவனித்து பார்த்து தன் இறைவனுக்கு நன்றி செலுத்தியவராக இருப்பார்.

அருள்கள் கிடைக்கும்போது நன்றி செலுத்துவார். சோதனைகளும் நெருக்கடிகளும் இழப்புகளும் ஏற்பட்டால் பொறுமையாக இருப்பார்.

ஆக, அவர் எந்த நிலையில் இருந்தாலும் இறைவனுக்கு மிக உவப்பான நிலையில் இருப்பார்.

அவர் தன் இறைவன் மீது திருப்தி அடைந்தவராக இருப்பதால் அவரின் இறைவனும் அவர் மீது திருப்தியுடன் இருப்பான். தன் ரப்பை அவர் குறை கூற மாட்டார். ஆகவே, அவரின் இறைவனும் அவன் மீது கோபப்பட மாட்டான். தன் இறைவனை எல்லா நிலைகளிலும் புகழ்ந்தவராக துதித்தவராக இருப்பதால் அவனும் அவர் மீது தன் அருளை பொழிந்தவண்ணம் இருப்பான்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَإِذْ تَأَذَّنَ رَبُّكُمْ لَئِنْ شَكَرْتُمْ لَأَزِيدَنَّكُمْ وَلَئِنْ كَفَرْتُمْ إِنَّ عَذَابِي لَشَدِيدٌ○

நீங்கள் நன்றி செலுத்தினால் (என் அருளை) உங்களுக்கு அதிகப்படுத்துவேன்;

நீங்கள் நிராகரித்தால் நிச்சயமாக என் வேதனை கடுமையானதுதான் என்று உங்கள் இறைவன் அறிவித்த சமயத்தை நினைவு கூர்வீராக!

(அல்குர்ஆன் 14 : 7)

وَإِنْ تَشْكُرُوا يَرْضَهُ لَكُمْ ۝

நீங்கள் நன்றி செலுத்தினால் அவன் உங்களுக்கு அதை விரும்புவான்.

(அல்குர்ஆன் 39 : 7)

சரி, இது வரை ஈமானின் மதிப்பை புரிந்துகொண்டோம். இப்போது நாம் கொஞ்சம் ஈமான் தொடர்பான சில செய்திகளை புரிய முயற்சிப்போம்.

ஈமான் எப்படி இருக்க வேண்டும்?

எத்தகைய ஈமான் அல்லாஹ்வின் வெகுமதிகளுக்கு தகுதியானது?

எத்தகைய ஈமான் உள்ளவருக்கு அல்லாஹ்வின் நற்செய்திகளின் வாக்குகள் பொருந்தும்?

ஒவ்வொன்றுக்கும் ஓர் உண்மை நிலை இருக்கும். ஈமானின் உண்மை நிலை என்ன?

உன்னிடம் ஈமான் இருக்கிறது என்று எதை வைத்து நீ முடிவு செய்ய முடியும்?

முஃமின்கள் யார் என்று அறிவதற்கு ஆதாரமாக இருக்கின்ற அவர்களின் தன்மைகள், இன்னும் செயல்கள் என்னென்ன?

இப்படியாக ஈமானைப் பற்றி உன்னிடம் பல கேள்விகள் இருக்கலாம்.

இதோ மேற்கண்ட கேள்விகளுக்காக உனக்கு சில முக்கியமான பதில்கள். இவற்றை நீ நன்கு புரிந்துகொண்டால் இமாம் ஹசன் ﷀ அவர்கள் “ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈமானுக்கு” கூறக்கூடிய நிபந்தனைகளை அல்லது தன்மைகளை நீ புரிந்து கொள்ளலாம்.

இமாம் ஹசன் ﷀ அவர்கள் என்ன சொன்னார்கள்?

மறைவில் இருக்கும்போது அல்லாஹ்வின் அச்சம் இருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் வாக்குகளில் ஆசையும் ஆர்வமும் இருக்க வேண்டும்.

அல்லாஹ் வெறுப்பதை விட்டுவிட வேண்டும்.

ஆம், இந்த மூன்றும் ஈமானின் அடிப்படைகளாக, ஈமானின் மிக முக்கிய

தன்மைகளாக, உண்மையான முழுமையான முஃமினின் குணமாக அல்குர்ஆனும் அல்ஹதீஸும் வர்ணிக்கின்றன.

பயத்தைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّمَا تُنْذِرُ مَنِ اتَّبَعَ الذِّكْرَ وَخَشِيَ الرَّحْمَنَ بِالْغَيْبِ فَبَشِّرْهُ بِمَغْفِرَةٍ وَأَجْرٍ كَرِيمٍ○

நீர் எச்சரிப்பதெல்லாம் இந்த வேதத்தை பின்பற்றி மறைவில் ரஹ்மானை பயந்தவரைத்தான். ஆகவே, அவருக்கு மன்னிப்பைக் கொண்டும் கண்ணியமான கூலியைக் கொண்டும் நற்செய்தி கூறுவீராக!

(அல்குர்ஆன் 36 : 11)

وَأُزْلِفَتِ الْجَنَّةُ لِلْمُتَّقِينَ غَيْرَ بَعِيدٍ○هَٰذَا مَا تُوعَدُونَ لِكُلِّ أَوَّابٍ حَفِيظٍ○مَنْ خَشِيَ الرَّحْمَنَ بِالْغَيْبِ وَجَاءَ بِقَلْبٍ مُنِيبٍ○

இறையச்சமுள்ளவர்களுக்கு சொர்க்கம் தூரமின்றி சமீபமாகக் கொண்டு வரப்படும். அல்லாஹ்வின் பக்கம் முற்றிலும் திரும்பக்கூடிய, (அல்லாஹ்வின் கட்டளைகளை) பேணக்கூடிய எல்லோருக்கும் இது (-சொர்க்கம்) வாக்களிக்கப்படுகிறது. ரஹ்மானை எவர் மறைவில் பயந்து (பாவங்களை விட்டு விலகி,) அல்லாஹ்வின் பக்கம் முற்றிலும் திரும்பிய உள்ளத்துடன் வந்தாரோ அவருக்காக (சொர்க்கம் வாக்களிக்கப்படுகிறது) .

(அல்குர்ஆன் 50 : 31-33)

إِنَّ الَّذِينَ يَخْشَوْنَ رَبَّهُمْ بِالْغَيْبِ لَهُمْ مَغْفِرَةٌ وَأَجْرٌ كَبِيرٌ○

நிச்சயமாக மறைவில் தங்கள் இறைவனை பயப்படுகின்றவர்கள், அவர்களுக்கு மன்னிப்பும் பெரிய கூலியும் உண்டு. (அல்குர்ஆன் 67 : 12)

ஆசைப்படுவதைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ الْأَبْرَارَ لَفِي نَعِيمٍ○عَلَى الْأَرَائِكِ يَنْظُرُونَ○تَعْرِفُ فِي وُجُوهِهِمْ نَضْرَةَ النَّعِيمِ○يُسْقَوْنَ مِنْ رَحِيقٍ مَخْتُومٍ○خِتَامُهُ مِسْكٌ وَفِي ذَٰلِكَ

فَلْيَتَنَافَسِ الْمُتَنَافِسُونَ۝وَمِزَاجُهُ مِنْ تَسْنِيمٍ۝عَيْنًا يَشْرَبُ بِهَا الْمُقَرَّبُونَ۝

நிச்சயமாக நல்லோர் “நயீம்” என்ற சொர்க்கத்தில்தான் இருப்பார்கள். கட்டில்கள் மீது (அமர்ந்தவாறு) பார்ப்பார்கள். அவர்களின் முகங்களில் இன்பத்தின் செழிப்பை (நபியே! நீர்) அறிவீர். முத்திரையிடப்பட்ட மதுவிலிருந்து புகட்டப்படுவார்கள். அதன் முத்திரை கஸ்தூரியாகும். ஆகவே, ஆசை வைப்போர் அதில் ஆசை வைக்கவும். இன்னும் அதன் கலவை “தஸ்னீம்” லிருந்து (இருக்கும்). (தஸ்னீம் அது) ஒரு நீரூற்று, நெருக்கமாக்கப்பட்டவர்கள் அதில் பருகுவார்கள்.

(அல்குர்ஆன் 83 : 22-26)

إِنَّ هٰذَا لَهُوَ الْفَوْزُ الْعَظِيمُ۝لِمِثْلِ هٰذَا فَلْيَعْمَلِ الْعَامِلُونَ۝

நிச்சயமாக இதுதான் மகத்தான வெற்றியாகும். அமல் செய்பவர்கள் இது போன்றதற்காக (-இதுபோன்ற நன்மைகளை பெறுவதற்காக) அமல் செய்யட்டும். (அல்குர்ஆன் 37 : 60, 61)

سَابِقُوا إِلَىٰ مَغْفِرَةٍ مِنْ رَبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا كَعَرْضِ السَّمَاءِ وَالْأَرْضِ أُعِدَّتْ لِلَّذِينَ آمَنُوا بِاللَّهِ وَرُسُلِهِ ذٰلِكَ فَضْلُ اللَّهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ وَاللَّهُ ذُو الْفَضْلِ الْعَظِيمِ۝

உங்கள் இறைவனின் மன்னிப்பின் பக்கமும் சொர்க்கத்தின் பக்கமும் முந்துங்கள். அதன் அகலம் வானம், பூமியின் அகலத்தைப் போலாகும். அது அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்பிக்கை கொண்டவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது அல்லாஹ்வின் சிறப்பா(ன அருளா)கும். அவன் நாடுகின்றவர்களுக்கு அதை அவன் கொடுக்கின்றான். அல்லாஹ் மகத்தான சிறப்புடையவன் ஆவான். (அல்குர்ஆன் 57 : 21)

பாவங்களை விட்டு விலகுவதைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

وَالَّذِينَ يَجْتَنِبُونَ كَبَائِرَ الْإِثْمِ وَالْفَوَاحِشَ وَإِذَا مَا غَضِبُوا هُمْ يَغْفِرُونَ۝

இன்னும் அவர்கள் பெரும் பாவங்களை விட்டும், மானக்கேடான விஷயங்களை விட்டும் விலகி விடுவார்கள். அவர்கள் கோபப்படும் போது மன்னித்து விடுவார்கள். (அல்குர்ஆன் 42 : 37)

وَلِلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ لِيَجْزِيَ الَّذِينَ أَسَاءُوا بِمَا عَمِلُوا وَيَجْزِيَ الَّذِينَ أَحْسَنُوا بِالْحُسْنَى○الَّذِينَ يَجْتَنِبُونَ كَبَائِرَ الْإِثْمِ وَالْفَوَاحِشَ إِلَّا اللَّمَمَ إِنَّ رَبَّكَ وَاسِعُ الْمَغْفِرَةِ○

வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அல்லாஹ்விற்கே உரியன. இறுதியில், தீமை செய்தவர்களுக்கு அவர்கள் செய்தவற்றுக்கு (தகுந்த தண்டனையை) அவன் கூலி(யாகக்) கொடுப்பான்; நன்மை செய்தவர்களுக்கு சொர்க்கத்தை அவன் கூலி(யாகக்) கொடுப்பான். அவர்கள் பெரும் பாவங்கள், இன்னும் மானக்கேடான செயல்களை விட்டும் விலகி இருப்பார்கள், சிறு தவறுகளைத் தவிர. (அந்த சிறு தவறுகளை அல்லாஹ் அவர்களுக்கு மன்னித்து விடுவான்.) நிச்சயமாக உமது இறைவன் விசாலமான மன்னிப்புடையவன். (அல்குர்ஆன் 53 : 31, 32)

இன்னும் இந்த மூன்றையும் விவரிக்கக்கூடிய பல நூறு வசனங்களும் பல்லாயிரம் ஹதீஸுகளும் உள்ளன.

இந்த மூன்றை ஈமானுக்கு இவ்வளவு அவசியமாக இமாம் ஹசன் ﵀ கூறி இருப்பதில் உள்ள தாத்பரியம் என்ன என்பதை இனி வரும் வரிகளில் பார்ப்போம்.

1. தனிமையில் அல்லாஹ்வின் பயம்.

2 சொர்க்கத்தின் ஆசை.

3. பாவத்தை விடுதல்.

ஆம், இவை மூன்றும் ஈமானின் மிக முக்கிய வெளிப்பாடாகும். அல்லாஹ் ஒருவன் இருக்கிறான், அவன் என் இறைவன், அவன் என் வணக்கத்திற்குரியவன். அவன் எனது அந்தரங்கத்தையும் வெளிப்படையையும் மிகவும் அறிந்தவன். அவன் அறியாமல் எதுவும் இவ்வையகத்தில் இல்லை. ஓர் இலை விழுந்தாலும் அவன் அறியாமல் அது விழுவதில்லை.

நாளை நான் அவனை சந்திக்க வேண்டும். எனது ஒவ்வொரு செயலையும்

அவனது வானவர்கள் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். எனக்கு அவனிடம் யாரும் பரிந்து பேச முடியாது, அவனது அனுமதி இல்லாமல். உலகத்தின் எந்த பொருளும் அங்கு பயனளிக்காது. நன்மைகளால் மட்டுமே மனிதன் அங்கு கரை சேர முடியும். என் இறைவனை எந்த சக்தியும் பலவீனப்படுத்த முடியாது. அவனிடமிருந்து யாரும் தப்பிக்க முடியாது. அவனது பிடி கடுமையானது. அவன் மகா பேரரசன்.

இப்படி அல்லாஹ்வை ஓர் அடியான் ஈமான் கொள்ளும்போது அந்த அடியான் உடனே இரண்டு காரியங்களை செய்கிறான். ஒன்று தன் ரப்பை திருப்திபடுத்த, அவனை மகிழ்விக்க முயல்கிறான். அதை தொடர்ந்து அல்லாஹ்விற்கு பிடித்தமான அமல்களை அதிகம் அதிகம் செய்கிறான். அமல்கள் செய்வதற்கு தேவையான மிகப் பெரிய உந்து சக்தி ஆசையாகும்.

ஆம், மனிதனுக்கு ஆசை பிறந்தால்தான் ஒரு காரியத்தில் இறங்குவான். அல்லாஹ் வாக்களித்த சொர்க்க இன்பங்களில் அவனுக்கு உண்மையான கட்டுகடங்காத ஆசை வந்துவிட்டால் அதற்கு பிறகு அல்லாஹ் ஏவிய எந்த ஒரு அமலையும் விடமாட்டான்.

நபி ﷺ அவர்கள் போதித்த எந்த ஒரு நற்காரியத்தையும் அலட்சியம் செய்ய மாட்டான். ஆசையும் ஆர்வமும் அவனுக்கு பின்புலமாக இருந்து நன்மைகளை நோக்கி அவனை தள்ளிக் கொண்டே இருக்கும். அல்லது அவனை நன்மையை நோக்கி இழுத்துக் கொண்டே இருக்கும்.

அவ்வாறே, சொர்க்கத்தின் மீது இருக்கின்ற ஆசை மனிதனை பாவங்களை விட்டு தடுக்கும். நன்மைகள் சொர்க்கத்திற்கு வழியாக இருப்பதைப் போல், பாவங்கள் சொர்க்கத்திற்கு தடைகளாகும்.

ஒரு மனிதனின் பாவத்தை பொறுத்து அவன் சொர்க்கத்திலிருந்து தூரமாக ஆகிவிடுகிறான். அல்லது மொத்தமாக சொர்க்கத்தை இழந்து விடுகிறான். இறை நிராகரிப்புடைய வகையை சேர்ந்த பாவமாக இருந்தால் மொத்தமாக சொர்க்கத்தை இழந்து விடுகிறான். வேறு பெரும் பாவமாகவோ சிறு பாவமாகவோ இருந்தால் அவன் நரகத்தில் இருக்க வேண்டிய காலம் அளவு சொர்க்கத்தை விட்டு தூரமாக இருப்பான். அல்லாஹ் பாதுகாப்பானாக!

மனிதனுக்கு தேவை பாதுகாப்பும், இன்பமும், சுகமும், நிம்மதியான வாழ்க்கையும். அது உலகத்தில் கிடைக்காமல் போனாலும் ஒரு பெரிய பிரச்சனை இல்லை. காரணம் எல்லோருக்கும் மரணம் நிச்சயம் உண்டு.

மரணத்தோடு ஏழை, பணக்காரன், அரசன், ஆண்டி எல்லோரின் வாழ்க்கையும் முடிந்து விடப்போகிறது. ஆனால், ஈமான் சரியாக இருந்தால் மறுமையில் நிரந்தரமாக இவை எல்லாம் கிடைத்து விடும். ஈமான் சரியாக இல்லை என்றால் மறுமையில் இவை எல்லாம் நிரந்தரமாக மனிதனுக்கு இல்லாமல் போய் விடும்.

இப்போது சொல்லுங்கள்!

தற்காலிக வாழ்க்கையில் ஏற்படும் இழப்பு பெரியதா, அல்லது நிரந்தரமான வாழ்க்கையில் ஏற்படுகின்ற இழப்பு பெரியதா! சிந்தித்துக் கொள்ளுங்கள்!

அல்லாஹ்வே! உண்மையான, உறுதியான, முழுமையான, தூய்மையான, நிறைவான, வலிமையான ஈமானை எங்களுக்கும் எங்கள் சந்ததிகளுக்கும் தருவாயாக! உன்னை சந்திக்கின்ற நாளை எங்களுக்கு மிக மகிழ்ச்சியான நாளாக ஆக்குவாயாக! உனது பயத்தையும் உனது அன்பையும் எங்களுக்கு அதிகப்படுத்துவாயாக! ஆமீன்!

## வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்!!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي وَحَدَّثَنِي يَعْنِي ابْنَ مَهْدِيٍّ عَنْ أَبِي الْأَشْهَبِ عَنِ الْحَسَنِ قَالَ وَهُوَ الَّذِي جَعَلَ اللَّيْلَ وَالنَّهَارَ خِلْفَةً لِمَنْ أَرَادَ أَنْ يَذَّكَّرَ أَوْ أَرَادَ شُكُورًا قَالَ مَنْ عَجَزَ بِاللَّيْلِ فَإِنَّ لَهُ فِي النَّهَارِ مُسْتَعْتَبُ وَمَنْ عَجَزَ فِي النَّهَارِ كَانَ لَهُ فِي اللَّيْلِ مُسْتَعْتَبٌ قَالَ: وَلَا يَزَالُ الْعَبْدُ بِخَيْرٍ مَا إِذَا قَالَ قَالَ لِلَّهِ وَإِذَا عَمِلَ عَمِلَ لِلَّهِ عَزَّ وَجَلَّ

ஹசன் ﷀ கூறினார்:

وَهُوَ الَّذِي جَعَلَ اللَّيْلَ وَالنَّهَارَ خِلْفَةً لِمَنْ أَرَادَ أَنْ يَذَّكَّرَ أَوْ أَرَادَ شُكُورًا ۝

அவன்தான் இரவையும் பகலையும் (ஒன்றுக்கு ஒன்று) பகரமாக அமைத்தான், நல்லறிவு பெற நாடுபவருக்கு அல்லது நன்றி செய்ய நாடுபவருக்கு. (அல்குர்ஆன் 25 : 62)

யார் இரவில் அமல் செய்ய இயலாமல் ஆகிவிட்டாரோ நிச்சயமாக அவருக்கு பகலில் அதை நிவர்த்தி செய்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. இன்னும், யார் பகலில் அமல் செய்ய இயலாமல் ஆகிவிட்டாரோ அவருக்கு இரவில் அதை நிவர்த்தி செய்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. தொடர்ந்து ஹசன் ﷀ கூறினார்: அடியான் எதுவரை - எதை சொன்னாலும் அல்லாஹ்விற்காக சொல்பவனாக இருப்பானோ; இன்னும் எதை செய்தாலும் அல்லாஹ்விற்காக செய்பவனாக இருப்பானோ - அதுவரை அவன் நன்மையில் இருப்பான்.

**கருத்து:** அல்லாஹு தஆலா நமக்கு இந்த உலக வாழ்க்கையில் மறுமைக்காக நாம் அமல் செய்வதற்கான வாய்ப்புகளை வழங்கிக் கொண்டே இருக்கிறான். ஒரு வாய்ப்பு தவறினால் மறு வாய்ப்பு என்று தொடர்ந்து நன்மைகள் செய்வதற்கான வாய்ப்புகள் அடியானுக்கு கிடைத்துக் கொண்டிருக்கும்படி அல்லாஹ் செய்திருக்கிறான். இது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும்.

நாம் இந்த உலக வாழ்க்கைக்கு இங்கு சுகமாக இன்பமாக வாழ்வதற்காக வரவில்லை. இந்த வாழ்க்கை நமக்கு தற்காலிகமானதாகும். இதன் இன்பங்களும் சுகங்களும் செல்வங்களும் ஆட்சி அதிகாரமும் தற்காலிகமானதாகும்.

மனிதன் அவனுக்கு விதிக்கப்பட்ட விதியின் படி அவனது வாழ்வாதாரத்தை அடைந்தே தீருவான். சோம்பேறியின் சோம்பேறித் தனத்தால் அவனது வாழ்வாதாரம் குறைந்தும் விடாது. சுறுசுறுப்பாளனின் சுறுசுறுப்பால் வாழ்வாதாரம் கூடியும் விடாது.

புத்திசாலிக்கு அதிகம், அதி புத்திசாலிக்கு மிக அதிகம், மக்குக்கு குறைவு, மிக மக்குக்கு மிகக் குறைவு என்று இல்லை. அல்லாஹ்வின் விதி நமது அறிவால் புரிய முடியாத ஒன்றாகும். அந்த விதியின் படி உலகத்தில் நமக்கு நிர்ணயிக்கப்பட்டதை நாம் அடைந்து விடுவோம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَكَأَيِّنْ مِنْ دَابَّةٍ لَا تَحْمِلُ رِزْقَهَا اللّٰهُ يَرْزُقُهَا وَإِيَّاكُمْ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ○

எத்தனையோ கால்நடைகள் தனது உணவை சுமப்பதில்லை. அல்லாஹ் தான் அவற்றுக்கும் உங்களுக்கும் உணவளிக்கிறான். அவன்தான் நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன். (அல்குர்ஆன் 29 : 60)

وَمَا مِنْ دَابَّةٍ فِي الْأَرْضِ إِلَّا عَلَى اللّٰهِ رِزْقُهَا وَيَعْلَمُ مُسْتَقَرَّهَا وَمُسْتَوْدَعَهَا كُلٌّ فِي كِتَابٍ مُبِينٍ○

எந்த ஓர் உயிரினமும் பூமியில் இல்லை அதற்கு உணவளிப்பது அல்லாஹ்வின் மீது (கடமையாக) இருந்தே தவிர. அவற்றின் தங்குமிடத்தையும், (அவை இறந்த பிறகு) அவற்றின் அடங்குமிடத்தையும் அவன் அறிகின்றான். எல்லாம் தெளிவான பதிவேட்டில் (பதிவாகி) உள்ளன.

(அல்குர்ஆன் 11 : 6)

விதியைப் பற்றி மேலும் விளக்கமாக அல்லாஹ் கூறுகிறான்:

مَا أَصَابَ مِنْ مُصِيبَةٍ فِي الْأَرْضِ وَلَا فِي أَنْفُسِكُمْ إِلَّا فِي كِتَابٍ مِنْ قَبْلِ أَنْ نَبْرَأَهَا إِنَّ ذٰلِكَ عَلَى اللهِ يَسِيرٌO لِكَيْلَا تَأْسَوْا عَلَىٰ مَا فَاتَكُمْ وَلَا تَفْرَحُوا بِمَا آتَاكُمْ وَاللهُ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍO

பூமியிலும் உங்களிலும் ஒரு சோதனை ஏற்படுவதில்லை, நாம் (பூமியில், அல்லது உங்களில்) அதை உருவாக்குவதற்கு முன்னர் அது விதியில் இருந்தே தவிர. நிச்சயமாக இது அல்லாஹ்விற்கு மிக எளிதானதாகும். (இதை நாம் உங்களுக்கு அறிவித்தோம்.) ஏனெனில், உங்களுக்கு தவறிவிட்டதற்காக நீங்கள் துக்கப்படாமல் இருப்பதற்காகவும், அவன் உங்களுக்கு கொடுத்ததைக் கொண்டு நீங்கள் பெருமைப்படாமல் இருப்பதற்காகவும் ஆகும். அல்லாஹ் அகம்பாவக்காரர்கள், பெருமையடிப்பவர்கள் எல்லோரையும் நேசிக்க மாட்டான். (அல்குர்ஆன் 57 : 22, 23)

ஆகவே, முடிவு செய்யப்பட்ட இந்த உலக வாழ்க்கைக்காக மனிதன் பெரும் முயற்சி எடுக்கிறான். முயற்சி செய்தால்தானே எதுவும் கிடைக்கும் என்று தத்துவமும் பேசுகிறான். ஆனால், மறுமை என்று வந்து விட்டால், நன்மை செய்வது என்று வந்துவிட்டால் அல்லாஹ் நாடினால் நானும் நல்லவர்களில் ஒருவனாக ஆகிவிடுவேன் என்று ஞானம் பேசுகிறான்.

உலக வாழ்க்கைக்காக அவன் எப்போதும் தனக்கு கிடைக்கும் வாய்ப்புகளை தவற விடுவதில்லை. அப்படி ஒரு வாய்ப்பு தவறி விட்டாலும் அடுத்து வருகின்ற வாய்ப்பு தனக்கு தவறி விடாமல் கவனமாக பார்த்துக் கொள்கிறான். முந்திய வாய்ப்பு தவறி விட்டதை நினைத்து பெரிதும் வருத்தப் படுவான், புலம்பிக் கொண்டே இருப்பான்.

ஆனால், மறுமைக்கான அமல்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, பல நூறு தவறினாலும் கவலைப்படாத மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

உண்மையில் நாம் கவலைப்படுவது என்றால் மறுமையை நினைத்துதான் கவலைப்பட வேண்டும்.

அழிந்து விடும் உலகத்தில் எல்லா செல்வமும் அழிந்து விடும். அழியாத மறுமை நாளில் தீர்ந்து விடாமல் இருக்கும் இன்பங்களுக்கான விலையாகிய நல்லறங்கள் நமக்கு தவறிவிட்டால் அதை எண்ணித்தான் நாம் உண்மையில் கவலைப்பட வேண்டும்.

விமானம் தவறி விடலாம், இரயில் வண்டி தவறி விடலாம், பேருந்து தவறி விடலாம், நல்ல வருவாய்க்கான வியாபாரமோ, அதிக ஊதியத்திற்கான வேலையோ தவறி விடலாம். அதனால் ஏற்படுகின்ற நஷ்டம் இந்த உலகத்தோடு முடிவடைந்து விடும்.

ஆனால், நல்லமல்கள் நமக்கு தவறி விடக்கூடாது. அதனால் ஏற்படுகின்ற நஷ்டமோ நிரந்தர வாழ்க்கையாகிய மறுமையில் நமக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். நாம் ஆசைப்பட வேண்டியதும் ஆர்வப்பட வேண்டியதும் எப்போதும் நல்லமல்களும் அவற்றுக்கான வாய்ப்புகளும்தான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

لَا يَغُرَّنَّكَ تَقَلُّبُ الَّذِينَ كَفَرُوا فِي الْبِلَادِ○مَتَاعٌ قَلِيلٌ ثُمَّ مَأْوَاهُمْ جَهَنَّمُ وَبِئْسَ الْمِهَادُ○لَكِنِ الَّذِينَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ جَنَّاتٌ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا نُزُلًا مِنْ عِنْدِ اللهِ وَمَا عِنْدَ اللهِ خَيْرٌ لِلْأَبْرَارِ○

(நபியே!) நிராகரிப்பவர்கள் (ஆடம்பரமாக) நகரங்களில் சுற்றித்திரிவது உம்மை நிச்சயம் மயக்கிடவேண்டாம். (இது) ஓர் அற்ப இன்பமாகும். பிறகு, அவர்களுடைய தங்குமிடம் ஜஹன்னம் (நரகம்)தான். (அந்த) தங்குமிடம் கெட்டுவிட்டது. எனினும், தங்கள் இறைவனை அஞ்சியவர்கள், அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து விருந்தோம்பலாக நதிகள் ஓடும் சொர்க்கங்கள் உண்டு. அவற்றில் (அவர்கள்) நிரந்தரமானவர்கள். அல்லாஹ்விடம் உள்ளது நல்லோருக்கு மிகச் சிறந்ததாகும். (அல்குர்ஆன் 3 : 196-198)

قُلْ مَتَاعُ الدُّنْيَا قَلِيلٌ وَالْآخِرَةُ خَيْرٌ لِمَنِ اتَّقَىٰ وَلَا تُظْلَمُونَ فَتِيلًا○

(நபியே!) கூறுவீராக: "உலகத்தின் இன்பம் அற்பமானது! அல்லாஹ்வை அஞ்சியவருக்கு மறுமை மேலானது. (அங்கு நீங்கள்) ஒரு நூலும் (அதன் அளவுகூட) அநீதி இழைக்கப்படமாட்டீர்கள்." (அல்குர்ஆன் 4 : 77)

وَمَا الْحَيَاةُ الدُّنْيَا إِلَّا لَعِبٌ وَلَهْوٌ وَلَلدَّارُ الْآخِرَةُ خَيْرٌ لِلَّذِينَ يَتَّقُونَ أَفَلَا تَعْقِلُونَ○

உலக வாழ்வு விளையாட்டும் கேளிக்கையும் தவிர வேறில்லை! (அல்லாஹ்வை) அஞ்சுபவர்களுக்கு மறுமை வீடுதான் மிக மேலானது. நீங்கள் (சிந்தித்துப்) புரியவேண்டாமா? (அல்குர்ஆன் 6 : 32)

قُلْ بِفَضْلِ اللهِ وَبِرَحْمَتِهِ فَبِذٰلِكَ فَلْيَفْرَحُوا هُوَ خَيْرٌ مِمَّا يَجْمَعُونَ○

“(இந்த குர்ஆன்) அல்லாஹ்வின் அருளைக் கொண்டும் அவனுடைய கருணையைக் கொண்டும் (இறக்கப்பட்டது). ஆகவே, இதைக் கொண்டே அவர்கள் மகிழ்ச்சியடையட்டும். இது அவர்கள் சேகரிப்பவற்றை விட மிக மேலானது” என்று (நபியே) கூறுவீராக! (அல்குர்ஆன் 10 : 58)

وَلَأَجْرُ الْآخِرَةِ خَيْرٌ لِلَّذِينَ آمَنُوا وَكَانُوا يَتَّقُونَ○

நம்பிக்கை கொண்டு அல்லாஹ்வை அஞ்சுகின்றவர்களாக இருந்தவர்களுக்கு திட்டமாக மறுமையின் கூலிதான் மேலானது. (அல்குர்ஆன் 12 : 57)

لِلَّذِينَ أَحْسَنُوا فِي هٰذِهِ الدُّنْيَا حَسَنَةٌ وَلَدَارُ الْآخِرَةِ خَيْرٌ وَلَنِعْمَ دَارُ الْمُتَّقِينَ○

நல்லறம் புரிந்தவர்களுக்கு இந்த உலகில் நன்மை உண்டு. (அவர்களுக்குரிய) மறுமையின் வீடுதான் (இம்மையை விட அவர்களுக்கு) மிக மேலானது. (அல்லாஹ்வை) அஞ்சுபவர்களின் (மறுமை) வீடு மிகச் சிறந்தது. (அல்குர்ஆன் 16 : 30)

اَلْمَالُ وَالْبَنُونَ زِينَةُ الْحَيَاةِ الدُّنْيَا وَالْبَاقِيَاتُ الصَّالِحَاتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَخَيْرٌ أَمَلًا○

செல்வமும் ஆண்பிள்ளைகளும் உலக வாழ்க்கையின் அலங்காரமாகும். என்றும் நிலையாக இருக்கும் நற்செயல்கள் உம் இறைவனிடம் நன்மையிலும் சிறந்தவை, ஆசையிலும் சிறந்தவை. (அல்குர்ஆன் 18 : 46)

وَيَزِيدُ اللهُ الَّذِينَ اهْتَدَوْا هُدًى وَالْبَاقِيَاتُ الصَّالِحَاتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَخَيْرٌ مَرَدًّا○

நேர்வழி நடப்போருக்கு நேர்வழியை அல்லாஹ் அதிகப்படுத்துவான். உங்கள் இறைவனிடம் நிரந்தரமான நன்மைகள்தான் நற்கூலியால் மிகச் சிறந்ததும் முடிவால் மிகச் சிறந்ததும் ஆகும். (அல்குர்ஆன் 19 : 76)

وَمَا أُوتِيتُمْ مِنْ شَيْءٍ فَمَتَاعُ الْحَيَاةِ الدُّنْيَا وَزِينَتُهَا وَمَا عِنْدَ اللهِ خَيْرٌ وَأَبْقَى أَفَلَا تَعْقِلُونَ○

நீங்கள் (உலக) பொருளில் எது கொடுக்கப்பட்டீர்களோ அது உலக வாழ்க்கையின் இன்பமும் அதன் அலங்காரமும் ஆகும். அல்லாஹ்விடம் உள்ளதுதான் சிறந்ததும் நிலையானதும் ஆகும். நீங்கள் சிந்தித்து புரியமாட்டீர்களா? (அல்குர்ஆன் 28 : 60)

மேற்கூறப்பட்ட வசனங்களை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவை எல்லாவற்றிலும் ஹைர் என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளதை நாம் சிந்திக்க வேண்டும். ஆம், ஹைர் என்றால் மிகச் சிறந்தது என்று பொருள். மறுமைதான் எல்லா வகையிலும் மிகச் சிறந்ததாகும். மறுமையை கவனித்து இந்த உலகத்தின் பாக்கியங்கள் எல்லாம் தாழ்ந்தவையாகும்.

இந்த உலகத்தின் ஆட்சி அதிகாரம், செல்வம், இன்பம், சுகம், ஆடம்பரம், வசதிகள், பெருமை, புகழ், தங்கம், வெள்ளி, பெண்கள், பிள்ளைகள், தோட்டம் துரவுகள், கால்நடைகள் இப்படி எல்லாம் இவ்வுலகில் மனிதனை மயக்கக்கூடியதாக இருக்கின்றதே தவிர உண்மையில் இவை சிறந்தவை அல்ல.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَاأَيُّهَا النَّاسُ إِنَّ وَعْدَ اللهِ حَقٌّ فَلَا تَغُرَّنَّكُمُ الْحَيَاةُ الدُّنْيَا وَلَا يَغُرَّنَّكُمْ بِاللهِ الْغَرُورُ○

மக்களே! நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்கு உண்மையானதே! ஆகவே, உலக வாழ்க்கை உங்களை மயக்கிவிட வேண்டாம். ஏமாற்றக்கூடியவனும் (ஷைத்தானும்) அல்லாஹ்வின் விஷயத்தில் உங்களை மயக்கிவிட வேண்டாம். (அல்குர்ஆன் 35 : 5)

زُيِّنَ لِلنَّاسِ حُبُّ الشَّهَوَاتِ مِنَ النِّسَاءِ وَالْبَنِينَ وَالْقَنَاطِيرِ الْمُقَنْطَرَةِ

مِنَ الذَّهَبِ وَالْفِضَّةِ وَالْخَيْلِ الْمُسَوَّمَةِ وَالْأَنْعَامِ وَالْحَرْثِ ذٰلِكَ مَتَاعُ الْحَيَاةِ الدُّنْيَا وَاللّٰهُ عِنْدَهُ حُسْنُ الْمَآبِ○قُلْ أَؤُنَبِّئُكُمْ بِخَيْرٍ مِنْ ذٰلِكُمْ لِلَّذِينَ اتَّقَوْا عِنْدَ رَبِّهِمْ جَنَّاتٌ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا وَأَزْوَاجٌ مُطَهَّرَةٌ وَرِضْوَانٌ مِنَ اللّٰهِ

وَاللّٰهُ بَصِيرٌ بِالْعِبَادِ○

பெண்கள், ஆண் பிள்ளைகள், தங்கம், வெள்ளியின் குவிக்கப்பட்ட (பெரும்) குவியல்கள், அடையாளமிடப்பட்ட (அழகிய) குதிரைகள், கால்நடைகள், விளைநிலம் ஆகிய விருப்பங்களை நேசிப்பது மக்களுக்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவை (அனைத்தும் அற்ப) உலக வாழ்வின் (சொற்ப) இன்பமாகும்! அல்லாஹ், அவனிடம்தான் (நிலையான) அழகிய தங்குமிடமுண்டு. (நபியே!) கூறுவீராக: “இவற்றைவிட சிறந்ததை நான் உங்களுக்கு அறிவிக்கவா? அல்லாஹ்வை அஞ்சுகிறவர்களுக்கு தங்கள் இறைவனிடம் சொர்க்கங்கள் உண்டு. அவற்றின் கீழ் ஆறுகள் ஓடும். அவற்றில் (அவர்கள்) நிரந்தரமானவர்கள். பரிசுத்தமான மனைவிகளும் அல்லாஹ்வின் பொருத்தமும் உண்டு. அல்லாஹ் அடியார்களை உற்று நோக்குபவன் ஆவான்.” (அல்குர்ஆன் 3 : 14, 15)

நமது சான்றோர் இப்படித்தான் மறுமையை நினைத்து கவலைப்படுபவர்களாகவும் மறுமையின் அமல்களில் மட்டும் அதிகம் ஆர்வப்படுபவர்களாகவும் பெரும் முயற்சி செய்பவர்களாகவும் போட்டிபோடுபவர்களாகவும் மறுமையின் சிறு சிறு அமல்களைக் கூட கண்ணும் கருத்துமாக மிகக் கவனமாக முக்கியத்துவத்துடன் நிறைவேற்றுவார்கள். உபரியான சுன்னத்தான, முஸ்தஹப்பான அமல்களைக் கூட மிகப் பேணுதலாக அவற்றை எதிர்பார்த்திருந்து நிறைவேற்றுவார்கள்.

சான்றோரின் வாழ்க்கையிலிருந்து சில நிகழ்வுகளை பார்ப்போம்.

عَنْ عَائِشَةَ ؓ أَنَّ رَسُولَ اللّٰهِ ﷺ كَانَ إِذَا فَاتَتْهُ الصَّلَاةُ مِنَ اللَّيْلِ مِن وَجَعٍ أَوْ غيرِهِ صَلَّى مِنَ النَّهَارِ ثِنْتَيْ عَشْرَةَ رَكْعَةً

ஆயிஷா ؓ அவர்கள் கூறுகிறார்கள்: ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கு வலி அல்லது வேறு ஒரு காரணத்தால் இரவில் (அவர்கள் தொழவேண்டிய)

தொழுகை தவறிவிட்டால் பகலில் பன்னிரண்டு ரக்அத்துகள் தொழுது விடுவார்கள்.[42]

مَنْ نَامَ عَنْ حِزْبِهِ أَوْ عَنْ شَيْءٍ مِنْهُ فَقَرَأَهُ فِيمَا بَيْنَ صَلَاةِ الْفَجْرِ وَصَلَاةِ الظُّهْرِ كُتِبَ لَهُ كَأَنَّمَا قَرَأَهُ مِنَ اللَّيْلِ

மேலும், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் தனது வழமையான ஓதுதலை நிறைவேற்ற முடியாமல் அல்லது அதில் சிலவற்றை செய்ய முடியாமல் தூங்கி விடுவாரோ அவர் அதை ஃபஜ்ருக்கும் ளுஹ்ருக்கும் இடையில் ஓதிவிட்டால் அவருக்கு அவர் இரவில் ஓதியதுபோன்றே நன்மை பதியப்படும்.[43]

وَرُوِيَ أَنَّ عُمَرَ بْنَ الْـخَطَّابِ رضي الله عنه فَاتَتْهُ صَلَاةُ الْعَصْرِ مَعَ جَمَاعَةٍ فَتَصَدَّقَ بِأَرْضٍ قِيمَتُهَا مِائَةُ أَلْفِ دِرْهَمٍ

உமர் இப்னுல் கத்தாப் رضي الله عنه அவர்களுக்கு ஒரு நாள் ஜமாஅத்துடன் அஸ்ர் தொழுகை தவறி விட்டது. ஆகவே, அதற்காக ஒரு லட்சம் திர்ஹம் பெறுமானமுள்ள ஒரு நிலத்தை தர்மம் செய்துவிட்டார்கள்.

قَالَ أَبُو إِسْحَاقَ رحمه الله ذَهَبَتْ مِنِّي الصَّلَاةُ وَضَعُفْتُ وَإِنِّي لَأُصَلِّي فَمَا أَقْرَأُ وَأَنَا قَائِمٌ إِلَّا الْبَقَرَةَ وَآلَ عِمْرَانَ

அபூ இஸ்ஹாக் رحمه الله கூறுகிறார்: இப்போது என்னால் சரியாக தொழ முடியாமல் போய்விட்டது. நான் பலவீனமடைந்து விட்டேன். நான் இப்போது தொழுகிறேன். ஆனால், நின்றவனாக சூரா பகரா இன்னும் சூரா ஆலு இம்ரானை மட்டுமே என்னால் ஓத முடிகிறது.

عَنْ نَافِعٍ أَنَّ ابْنَ عُمَرَ رضي الله عنهما كَانَ إِذَا فَاتَتْهُ الْعِشَاءُ فِي جَـمَاعَةٍ أَحْيَا بَقِيَّةَ لَيْلَتِهِ

இமாம் நாஃபிஉ رحمه الله கூறுகிறார்: இப்னு உமர் رضي الله عنهما அவர்களுக்கு ஜமாஅத்துடன்

42. அறிவிப்பாளர்: ஆயிஷா رضي الله عنها, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 746.
43. அறிவிப்பாளர்: உமர் رضي الله عنه, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 747.

இஷா தொழுகை தவறிவிட்டால் அன்றைய இரவெல்லாம் விழித்திருந்து வணங்குவார்கள்.

دَخَلَ إِبْرَاهِيمُ بْنُ أَدْهَمَ أَحَدُ الْعُبَّادِ الزُّهَّادِ عَلَى أَحَدِ إِخْوَانِهِ يَعُودُهُ كَانَ مَرِيضًا فَوَجَدَهُ يَتَأَفَّفُ وَيَتَأَسَّفُ فَقَالَ لَهُ عَلَامَ تَتَأَفَّفُ وَتَتَأَسَّفُ قَالَ مَا تَأَسُّفِي عَلَى الْبَقَاءِ فِي الدُّنْيَا وَلٰكِنْ تَأَسُّفِي عَلَى لَيْلَةٍ نِمْتُهَا وَعَلَى يَوْمٍ أَفْطَرْتُهُ وَعَلَىٰ سَاعَةٍ غَفَلْتُ فِيهَا عَنْ ذِكْرِ اللهِ

இப்றாஹீம் இப்னு அத்ஹம் தனது சகோதரர்களில் ஒருவரை அவர் நோயாளியாக இருக்கும்போது நலம் விசாரிக்க சென்றார். அந்த சகோதரர் மிகவும் வருத்தமும் கவலையும் அடைந்தவராக இருந்தார். நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள், கவலைப்படுகிறீர்கள் என்று அவரிடம் இப்றாஹீம் கேட்டார். அவர் கூறினார்: நான் உலகத்தில் நீண்ட காலம் இருப்பதற்காக கவலைப்படவில்லை. மாறாக தொழாமல் தூங்கி விட்ட இரவை நினைத்தும், நோன்பு நோற்காமல் இருந்த நாளை நினைத்தும், அல்லாஹ்வை மறந்து இருந்த நேரத்தை நினைத்தும் நான் கவலைப்படுகிறேன் என்று கூறினார்.

இன்னும் இதுபோன்ற ஏராளமான நிகழ்வுகள் உள்ளன. முடிந்தால் அவற்றை ஒரு தனிப் பிரிவில் பார்ப்போம்.

அந்த சான்றோர் மறுமைக்காக வாழ்ந்தார்கள். அல்லாஹ்வின் அன்பையும் மன்னிப்பையும் மறுமையின் மகத்தான வெற்றியையும் பெற்றவர்களாக இந்த உலகத்தை விட்டு பிரிந்து சென்றார்கள்.

அல்லாஹ்வே! எங்களையும் அந்த நல்லோரின் வழியில் நடக்க வைப்பாயாக! எங்கள் வாழ்க்கையை மறுமைக்காக ஏற்றுக்கொள்வாயாக! அமல்களில் ஆர்வத்தையும் ஆசையையும் ஈடுபாட்டையும் எங்களுக்கு ஏற்படுத்துவாயாக! ஆமீன்!

# ஆலிம்களின் அடையாளம் வழிபாடும் பேணுதலும்

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا فَيَّاضُ بْنُ مُحَمَّدٍ حَدَّثَنَا بَعْضُ أَصْحَابِنَا يُكَنَّىٰ أَبَا أَيُّوبَ قَالَ: دَخَلَ الْـحَسَنُ الْمَسْجِدَ وَمَعَهُ فَرْقَدٌ فَقَعَدَ إِلَىٰ جَنْبِ حَلْقَةٍ يَتَكَلَّمُونَ فَنَصَتَ لِحَدِيثِهِمْ قَالَ ثُمَّ أَقْبَلَ عَلَىٰ فَرْقَدٍ فَقَالَ: يَا فَرْقَدُ وَاللهِ مَا هَؤُلَاءِ إِلَّا قَوْمٌ مَلُّوا الْعِبَادَةَ وَوَجَدُوا الْكَلَامَ أَهْوَنَ عَلَيْهِمْ مِنَ الْعَمَلِ وَقَلَّ وَرَعُهُمْ فَتَكَلَّمُوا

அபூ அய்யூப் ﵀ கூறுகிறார்: ஹசன் பஸரி ﵀ அவர்கள் மஸ்ஜிதுக்குள் வந்தார்கள். அவர்களுடன் ஃபர்கதும் இருந்தார். (அங்கு அமர்ந்திருந்த) ஒரு கூட்டத்திற்கு அருகில் அவரும் அமர்ந்து கொண்டார். அந்த கூட்டத்தவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களின் பேச்சை ஹசன் ﵀ அவர்கள் அமைதியாக கேட்டார். பிறகு, ஃபர்கதை நோக்கி வந்து கூறினார்: ஃபர்கதே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! இவர்கள் வணக்க வழிபாட்டில் ஆர்வமில்லாத அதில் சடைவை கண்ட மக்கள் ஆவார்கள். அமல்களில் ஈடுபடுவதை விட பேச்சில் ஈடுபடுவது இவர்களுக்கு மிக இலகுவாக இருக்கிறது. இவர்களின் பேணுதல் குறைந்துவிட்டதால் வெறும் பேச்சில் இப்போது இறங்கி விட்டனர்.

**கருத்து:** வணக்க வழிபாட்டில் ஆர்வமில்லாதவர்கள் உடைய ஒரு குணமாவது, அவர்களுக்கு பேசுவது அதிகம் பிடிக்கும் அமல் செய்வதை விட. சொல்லில் மார்க்கத்தை பேசுகிற அளவிற்கு செயலில் மார்க்கத்தை பின்பற்ற மாட்டார்கள். ஆகவே, இறையச்சம் குறைந்து இருக்கும். ஹலால் ஹராம் சட்டங்களைப் பற்றி மணிக் கணக்காக விவாதிப்பார்கள். ஆனால்,

தங்கள் வாழ்க்கையில் ஹராமை விட்டு விலகி இருக்க மாட்டார்கள். செல்வம் எவ்வழியில் வந்தாலும் அதை அனுபவித்துக் கொள்வார்கள்.

**விளக்கம்:** இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களின் சிந்தனையே வித்தியாசமானது. அவர்களின் மார்க்கப் புரிதல் எப்போதும் இறையச்சம், மறுமை பயம், சொர்க்கம், நரகம், மறுமை விசாரணை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இருக்கும்.

அல்லாஹ், நம்மை படைத்தது, இந்த மார்க்கத்தை நமக்கு வழங்கியது எல்லாம் நாம் அவனை எப்படி வணங்க வேண்டும் என்று அறிந்து அவனை அதிகம் வணங்க வேண்டும் என்பதற்காகத்தான். மார்க்க சட்டங்களை அவன் நமக்கு வழங்கி அவற்றை கற்கும் படி நமக்கு கட்டளை இட்டது அந்த சட்டங்கள் படி நாம் செயல்படுவதற்கும் அவற்றைப் பின்பற்றி நடந்து, அல்லாஹ்வின் அன்பை அடைவதற்கும்தான்.

தீன் - மார்க்கம் என்பது பேசுவதற்காக அல்ல. மாறாக, அமல் செய்வதற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் மார்க்கத்தை எவ்வளவு அறிந்திருக்கிறார் என்பதை விட அவர் அறிந்ததின் படி எந்தளவு அமல் செய்கிறார் என்பதுவே முதல் முக்கியம் ஆகும்.

மார்க்கப் பேச்சுகள் என்பதும் பல நோக்கங்களுக்காக இன்று பேசப்படுகின்றன. சிலர், தமது அறிவு திறமையை காண்பிக்க பேசுகின்றனர். சிலர், தம்மை நல்லவர் என்று காட்டிக் கொள்வதற்காக பேசுகின்றனர். சிலர், பிறரை விட தம்மை உயர்த்துவதற்காக பேசுகின்றனர்.

ஒரு சிலர், சம்பாத்தியத்திற்காக பேசுகின்றனர். பேசுவதை தொழிலாக எடுத்துக் கொண்டவர்களும் இருக்கின்றனர். சிலர், மக்களுக்கு மட்டும் சொல்வார்கள். அவர்களுக்கும் அவர்களின் பேச்சுக்கும் எவ்வித தொடர்பும் இருக்காது.

சிலர், தம்மை பெரிய பேச்சாளர் என்று தமது புகழுக்காக, பெயருக்காக மட்டுமே பேசுவார்கள். சிலருக்கு ஈமானை அதிகரிக்க செய்கிற பேச்சுகளை விட, மறுமையை நினைவு கூர வைக்கிற பேச்சுகளை விட, இது கூடுமா, அது கூடாதா என்று தர்க்க விவாதம் செய்வது ரொம்பப் பிடிக்கும்.

ஆதாரங்களை தோண்டி துருவி அலசி, அவை சரியா தவறா என்று தர்க்கம் செய்துவிட்டு அத்தோடு நிறுத்திக் கொள்வார்கள். ஆதாரம் சரியானதுதான் என்று உறுதியாக அறிந்த பின்னர் அவற்றை வாழ்க்கையில் அமலில் கொண்டு வர மாட்டார்கள். செய்ய வேண்டியதை செய்ய மாட்டார்கள். விட வேண்டியதை விட மாட்டார்கள். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أَتَأْمُرُونَ النَّاسَ بِالْبِرِّ وَتَنْسَوْنَ أَنْفُسَكُمْ وَأَنْتُمْ تَتْلُونَ الْكِتَابَ أَفَلَا تَعْقِلُونَ○

நீங்களோ வேதத்தை ஓதுபவர்களாக இருக்கும் நிலையில் உங்களை நீங்கள் மறந்துவிட்டு, மக்களுக்கு (மட்டும்) நன்மையை ஏவுகிறீர்களா? நீங்கள் சிந்தித்து புரியமாட்டீர்களா? (அல்குர்ஆன் 2 : 44)

இது இஸ்ரவேலர்களுக்கு மட்டும் சொல்லப்பட்ட எச்சரிக்கை அல்ல. நமக்கும்தான்.

நோக்கம், குறிக்கோள், இலட்சியம் இவைதான் அடிப்படையானதும் மிக முக்கியமானதும் ஆகும். இஸ்லாமிய மார்க்கத்தின் குறிக்கோள் நோக்கம் இலட்சியம் அல்லாஹ்வை வணங்குவதாகும்.

அல்லாஹ்வை வணங்குவதற்காகவே நாம் படைக்கப்பட்டோம். இங்கு வணங்க வேண்டும். மறுமையில் இன்பமாக சுகமாக வாழ வேண்டும். இங்கு ஹலால் அடிப்படையில் வாழ வேண்டும். ஹராமான இன்பத்தை விட்டு விலகி வாழவேண்டும். மறுமையில் சொர்க்கத்தில் எல்லாமே ஹலால். அங்கு ஹராமே இருக்காது.

உலகத்தில் எல்லாம் அளவோடுதான். மனைவி வைத்துக் கொள்வதற்கு அளவு உண்டு. எப்படி சம்பாதிக்க வேண்டும் என்பதற்கு அளவு உண்டு. உண்ண உடுத்த இன்புற எல்லாம் அளவோடு இருக்க வேண்டும். எல்லை மீறக் கூடாது.

மொத்தத்தில் உலக வாழ்க்கைக்கே அளவும் எல்லையும் உண்டு. அளவும் எல்லையும் இல்லா வாழ்க்கை மறுமை வாழ்க்கைதான். சொர்க்க வாழ்க்கையே உண்மையில் சுகமான இன்பமான வாழ்க்கை. அங்கு சுகமும் இன்பமும் வாழ்க்கையும் முடிவற்றவை.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

نَحْنُ أَوْلِيَاؤُكُمْ فِي الْحَيَاةِ الدُّنْيَا وَفِي الْآخِرَةِ وَلَكُمْ فِيهَا مَا تَشْتَهِي أَنْفُسُكُمْ وَلَكُمْ فِيهَا مَا تَدَّعُونَ○

“நாங்கள் இந்த உலக வாழ்க்கையிலும் மறுமையிலும் உங்கள் நேசர்கள் ஆவோம். அ(ந்த சொர்க்கத்)தில் உங்கள் மனங்கள் விரும்புவதும் உங்களுக்கு உண்டு. இன்னும், அதில் நீங்கள் (வாய்விட்டு) கேட்பதும் உங்களுக்கு உண்டு.” (அல்குர்ஆன் 41 : 31)

يُطَافُ عَلَيْهِمْ بِصِحَافٍ مِنْ ذَهَبٍ وَأَكْوَابٍ وَفِيهَا مَا تَشْتَهِيهِ الْأَنْفُسُ وَتَلَذُّ الْأَعْيُنُ وَأَنْتُمْ فِيهَا خَالِدُونَ ○

தங்கத்தினால் ஆன தட்டுகளுடனும், குவளைகளுடனும் அவர்களை சுற்றி வரப்படும். இன்னும், அதில் (அவர்களது) மனங்கள் விரும்புகின்றவையும் கண்கள் இன்புறுகின்றவையும் அவர்களுக்கு உண்டு. (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் அதில் நிரந்தரமாக தங்கி இருப்பீர்கள். (அல்குர்ஆன் 43 : 71)

இப்படியாக நமக்கு சொர்க்கத்தை ஆசையூட்டும் ஆயிரம் வர்ணிப்புகளை அதை படைத்த ரப்பு நமக்கு விளக்கிக் கூறுகிறான்.

உலகில் வருகை தந்த பல ஆயிரம் நபிமார்கள் எல்லோரும் மக்களுக்கு போதித்த நற்போதனை அல்லாஹ்வை வணங்குங்கள், மறுமையை பயப்படுங்கள் என்பதுதான்.

وَإِلَى مَدْيَنَ أَخَاهُمْ شُعَيْبًا فَقَالَ يَا قَوْمِ اعْبُدُوا اللَّهَ وَارْجُوا الْيَوْمَ الْآخِرَ وَلَا تَعْثَوْا فِي الْأَرْضِ مُفْسِدِينَ ○

இன்னும், ‘மத்யன்’ நகரவாசிகளுக்கு அவர்களுடைய சகோதரர் ஷுஐபை (நாம் அனுப்பினோம்). ஆக, அவர் கூறினார்: என் மக்களே! அல்லாஹ்வை வணங்குங்கள்! இன்னும், மறுமை நாளை பயந்து கொள்ளுங்கள்! இன்னும், இந்த பூமியில் கெட்டதை செய்கின்ற தீயவர்களாக அளவு கடந்து அழிச்சாட்டியம் செய்யாதீர்கள். (அல்குர்ஆன் 29 : 36)

மனிதன் அல்லாஹ்வை சடைவில்லாமல் வணங்க வேண்டும் என்பதற்காகவே பல வகையான வணக்க வழிபாடுகளை, பல வகையான நேரங்களில், பல அமைப்புகளில், பல தோற்றங்களில், பல இடங்களில் அல்லாஹ் நமக்கு வகைப்படுத்தி வழங்கி இருக்கிறான்.

மேலும், அல்லாஹ்வின் கட்டளையைப் பின்பற்றியும் நபி ﷺ அவர்களின்

சுன்னாவைப் பின்பற்றியும் நமது வாழ்க்கையை நாம் அமைத்துக் கொண்டால் நமது செயல்கள் எல்லாமே நற்கூலிக்கு உரியவையாக ஆகும்படி அல்லாஹ் அமைத்து கொடுத்திருக்கிறான்.

இந்த நற்பாக்கியம் முஸ்லிமுக்கே தவிர பிறருக்கு கிடைக்காத ஒன்று.

இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் மஸ்ஜிதுக்குள் வந்தபோது, அங்கு ஒன்று கூடி பேசிக்கொண்டிருந்த அந்த மக்கள் சாதாரண மக்கள் அல்லர். அவர்கள் அறிஞர்கள் ஆவார்கள். அறிஞர்கள் மக்களுக்கு முன்னோடிகள், வழிகாட்டிகள், முன்மாதிரிகள், நபிமார்களின் வாரிசுகள் ஆவார்கள்.

அறிஞர்களின் வேலை பேசுவது மட்டுமல்ல. மாறாக, பேச்சுடன் அமலும் இருக்க வேண்டும். சொல்லுடன் செயலும் இருக்க வேண்டும். பிரச்சாரத்துடன் இபாதத்தும் இருக்க வேண்டும்.

விவாதிப்பது, அலசி ஆராய்வது, ஆதாரங்களில் எது சரியானது, எது பலவீனமானது என்று விவாதம் செய்வது, யாருடைய மத்ஹப் சரியானது என்று முனாளரா - விவாதம் செய்வது இவை எல்லாம் அடிப்படை இலட்சியம் அல்ல.

உளு செய்து கொண்டே ஒருவன் இருக்கிறான். ஆனால், தொழுகைக்கு வரவில்லை. ஹஜ்ஜுக்கு செல்ல காசு தேவை, ஒருவன் காசு சம்பாதிப்பதில் மட்டும் இருக்கிறான். ஆனால், ஹஜ்ஜுக்கு செல்லவில்லை. இப்படித்தான் நிலை இருக்கும் யார் பேசுவதில் மட்டும் கவனம் செலுத்திவிட்டு அமலில் ஈடுபடவில்லையோ அவருடைய நிலை.

வணக்க வழிபாடு செய்வதற்கும் ஹராமை விட்டு விலகி பேணுதலாக வாழ்வதற்கும் தக்வாவும் மறுமை பயமும் மிக அவசியமாகும். மறுமைக்காக கல்வி கற்கும்போதுதான் இந்த நற்பண்பு கிடைக்கப் பெறும். உலகாதாயத்திற்காக கல்வி கற்கப்படும்போது உலக நோக்கங்கள் மட்டுமே உள்ளத்தில் இருக்கும். அப்போது அமலை விட பேசுவது மிக பிடித்தமாக இருக்கும்.

பேசி பேசி என்ன பலன், பேசுபவரிடம் அந்த பேச்சின் படி அமல் இல்லை என்றால்? ஓர் ஆலிம் மக்களுக்கு தக்வாவைப் பற்றி பாடம் நடத்திவிட்டு, அல்லாஹ்வை வணங்குவதின் சிறப்பை பயான் செய்துவிட்டு, அவரோ ஐந்து நேர தொழுகைகளை கூட தொழாமல், ஹராமான இன்பங்களில் மூழ்கி கிடந்தால் இது எத்தகைய கைசேதமான நிலை!

இத்தகைய இழிநிலையை அல்லாஹ் எச்சரிக்கிறான்:

مَثَلُ الَّذِينَ حُمِّلُوا التَّوْرَاةَ ثُمَّ لَمْ يَحْمِلُوهَا كَمَثَلِ الْحِمَارِ يَحْمِلُ أَسْفَارًا بِئْسَ مَثَلُ الْقَوْمِ الَّذِينَ كَذَّبُوا بِآيَاتِ اللَّهِ وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ الظَّالِمِينَ○

தவ்ராத்தின் படி அமல் செய்ய வேண்டும் என்று பணிக்கப்பட்டு பிறகு, அதன்படி அமல் செய்யாதவர்களின் உதாரணம் கழுதையின் உதாரணத்தைப் போலாகும். அது பல நூல்களை (தன் முதுகின் மீது) சுமக்கிறது. (ஆனால் அவற்றின் மூலம் அதற்கு எந்த நன்மையும் இல்லை. அவ்வாறே தவ்ராத் இவர்களுக்கு கொடுக்கப்பட்டும் அதன்படி இவர்கள் அமல் செய்யாததால் இவர்களும் எந்த நன்மையும் அடைய மாட்டார்கள்.) அல்லாஹ்வின் வசனங்களை பொய்ப்பித்த மக்களின் உதாரணம் மிகக் கெட்டது. இன்னும், அல்லாஹ் அநியாயக்கார மக்களை நேர்வழி செலுத்த மாட்டான்.

(அல்குர்ஆன் 62 : 5)

இஸ்ரவேலர்கள் கல்வி கொடுக்கப்பட்டு அதன் படி அமல் செய்யாத காரணத்தால் அவர்கள் சபிக்கப்பட்டார்கள், அல்லாஹ்வினால் கோபிக்கப்பட்டார்கள். அவர்களை அல்லாஹ் கைரில் மக்ழூபி அலைஹிம் என்று குறிப்பிடுகிறான்.

இன்னும், அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ هَلْ أُنَبِّئُكُمْ بِشَرٍّ مِنْ ذَٰلِكَ مَثُوبَةً عِنْدَ اللَّهِ مَنْ لَعَنَهُ اللَّهُ وَغَضِبَ عَلَيْهِ وَجَعَلَ مِنْهُمُ الْقِرَدَةَ وَالْخَنَازِيرَ وَعَبَدَ الطَّاغُوتَ أُولَٰئِكَ شَرٌّ مَكَانًا وَأَضَلُّ عَنْ سَوَاءِ السَّبِيلِ○

(நபியே!) கூறுவீராக: “அல்லாஹ்விடம் தண்டனையால் இதைவிட மிகக் கெட்டவனை நான் உங்களுக்கு அறிவிக்கவா? எவர்களை அல்லாஹ் சபித்தானோ; இன்னும், எவர்கள் மீது கோபித்தானோ; இன்னும், எவர்களில் சிலரைக் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் ஆக்கினானோ; இன்னும், எவர்கள் ஷைத்தானை வணங்கினார்களோ அவர்கள்தான் தகுதியால் மிகக் கெட்டவர்கள்; இன்னும், நேரான பாதையிலிருந்து மிகவும் வழிதவறியவர்கள் ஆவார்கள்.” (அல்குர்ஆன் 5 : 60)

ضُرِبَتْ عَلَيْهِمُ الذِّلَّةُ أَيْنَ مَا ثُقِفُوا إِلَّا بِحَبْلٍ مِنَ اللهِ وَحَبْلٍ مِنَ النَّاسِ وَبَاءُوا بِغَضَبٍ مِنَ اللهِ وَضُرِبَتْ عَلَيْهِمُ الْمَسْكَنَةُ ذٰلِكَ بِأَنَّهُمْ كَانُوا يَكْفُرُونَ بِآيَاتِ اللهِ وَيَقْتُلُونَ الْأَنْبِيَاءَ بِغَيْرِ حَقٍّ ذٰلِكَ بِمَا عَصَوْا وَكَانُوا يَعْتَدُونَ○

அவர்கள் எங்கு இருந்தாலும் அவர்கள் மீது இழிவு விதிக்கப்பட்டு விட்டது. எனினும், அல்லாஹ்வின் ஒப்பந்தம்; இன்னும், மக்களின் ஒப்பந்தத்தின் மூலமே தவிர அவர்கள் பாதுகாப்பாக இருக்க முடியாது. இன்னும், அவர்கள் அல்லாஹ்வின் கோபத்தை சுமந்துகொண்டார்கள். ஏழ்மையும் அவர்கள் மீது விதிக்கப்பட்டது. அதற்கு காரணம், நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை நிராகரிப்பவர்களாக இருந்ததும், நியாயமின்றி நபிமார்களைக் கொலை செய்பவர்களாக இருந்ததும் ஆகும். இன்னும், அதற்கு காரணம் அவர்கள் மாறுசெய்ததும், (இறைக் கட்டளையை) மீறுபவர்களாக இருந்ததும் ஆகும். (அல்குர்ஆன் 3 : 112)

إِنْ تُعَذِّبْهُمْ فَإِنَّهُمْ عِبَادُكَ وَإِنْ تَغْفِرْ لَهُمْ فَإِنَّكَ أَنْتَ الْعَزِيزُ الْحَكِيمُ○

“அவர்களை நீ தண்டித்தால் நிச்சயமாக அவர்கள் உன் அடியார்கள்! அவர்களை நீ மன்னித்தால் நிச்சயமாக நீதான் மிகைத்தவன், மகா ஞானவான்.” (அல்குர்ஆன் 5 : 118)

முஸ்லிம் உம்மத்தில் இப்படியும் சில அறிஞர்கள் வருவார்கள் என்று நபி ﷺ அவர்கள் எச்சரித்துவிட்டு சென்றுள்ளார்கள்.

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ مَرَرْتُ لَيْلَةَ أُسْرِيَ بِي عَلَى قَوْمٍ تُقْرَضُ شِفَاهُهُمْ بِمَقَارِيضَ مِنْ نَارٍ قَالَ قُلْتُ مَنْ هَؤُلَاءِ قَالُوا خُطَبَاءُ مِنْ أَهْلِ الدُّنْيَا كَانُوا يَأْمُرُونَ النَّاسَ بِالْبِرِّ وَيَنْسَوْنَ أَنْفُسَهُمْ وَهُمْ يَتْلُونَ الْكِتَابَ أَفَلَا يَعْقِلُونَ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: என்னை வானுலகத்திற்கு

அழைத்து செல்லப்பட்ட இரவில் சில மக்களைக் கடந்து சென்றேன். அவர்களின் உதடுகள் நெருப்பினால் ஆன கத்திரிகளால் வெட்டப்பட்டுக் கொண்டிருந்தன. இவர்கள் யார் என்று நான் கேட்டேன். இவர்கள் உலகமோகம் கொண்ட பிரசங்கிகள். இவர்கள் வேதத்தை ஓதி வந்தார்கள். இருந்தும் இவர்கள் மக்களுக்கு மட்டும் நன்மைகளை ஏவுபவர்களாகவும் தங்களை மறந்துவிடுபவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் சிந்தித்துப் புரிந்திருக்க வேண்டாமா? என்று அவர்கள் கூறினார்கள்.[44]

ஆம், மார்க்க அறிஞர் என்பவரே யார் என்றால் யாரிடம் இல்மும் அமலும் இருக்கிறதோ அவர்தான். மார்க்கக் கல்வி கற்றவர் என்பதற்கு அடையாளம் அவரின் உடையும் தோற்றமும் மட்டும் அல்ல. மாறாக, அவரின் செயல்பாடும் அவரின் தக்வாவும் அவரின் பேணுதலும்தான்.

உண்மையான அறிஞர் பேச்சை அழகுபடுத்துவதை விட அமலை அழகுபடுத்துவதற்கு முக்கியத்துவம் தருவார்.

உண்மையான அறிஞர் சொல்லில் வித்தகராக இருப்பதை விட செயலில் அழகிய முன்னோடியாக இருப்பார்.

உண்மையான அறிஞர் மக்களுக்கு உபதேசம் செய்வதற்கு முன் தனது நப்ஸூக்கு உபதேசம் செய்வார்.

உண்மையான அறிஞர் மக்களை கண்டிப்பதற்கு முன்னர் தன்னைத் தானே கண்டித்துக் கொள்வார்.

உண்மையான அறிஞர் மக்களின் குறையை சுட்டிக் காட்டுவதற்கு முன்னர் தனது குறையை திருத்திக் கொள்வார்.

உண்மையான அறிஞர் மக்களுக்கு முன் நிற்கும்போது முதலில் தனக்கு அறிவுரை கூறுவதாக நினைத்துக் கொள்வார்.

உண்மையான அறிஞர் உபதேசத்திற்கு மக்களை விட தான் மிகவும் தேவை உள்ளவர் என்று கருதுவார்.

உண்மையான அறிஞர் தனது சொல்லையும் செயலையும் சுய பரிசோதனை செய்து கொண்டே இருப்பார்.

உண்மையான அறிஞர் தானும் அல்லாஹ்வை அதிகம் அஞ்சுவார், மக்களுக்கு அல்லாஹ்வின் விஷயத்தில் நிராசையூட்டாமலும் துணிவு கொள்ள வைக்காமலும் நடுநிலையாக அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதுடன்,

44. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ﵁, நூல்: முஸ்னது அஹ்மது, எண்: 12856.

அல்லாஹ்வின் மீது அன்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவார்.

உண்மையான அறிஞர் ஹலால் ஹராமை பேணி நடப்பவராக இருப்பார்.

உண்மையான அறிஞர் அமல்களில் அதிகம் கவனம் செலுத்துவார்.

உண்மையான அறிஞர் இபாதத்துகளை அதிகமதிகம் செய்வார். இபாதத்துகளை செய்வதில் அவரிடம் அலட்சியமோ கவனக்குறைவோ சோர்வோ காணப்படாது.

அல்லாஹ்வின் பொருத்தத்தை பெற்றுத்தரும் நல்லமல்களில் அதிகம் கவனம் உள்ளவராக அதிகம் ஈடுபாடுள்ளவராக இருப்பார்.

உண்மையான அறிஞர் விவாதம் செய்வது, தர்க்கம் செய்வது, குதர்க்கம் செய்வது, பேச்சிலே மூழ்கி அமலை மறப்பது, இன்னும் இவை போன்ற இழி குணங்களில் இருந்து தூரமாக இருப்பார்.

ஆம், உண்மையான அறிஞர் நபி ﷺ அவர்களின் சொல்லுக்கும் கல்விக்கும் மட்டும் வாரிசாக இருக்க மாட்டார். மாறாக, நபி ﷺ அவர்களின் செயலுக்கும் குணத்திற்கும் வாரிசாகவும் இருப்பார்.

இத்தகைய ஓர் அறிஞராகத்தான் இமாம் ஹசன் ﷀ வாழ்ந்தார்கள். அத்தகைய அறிஞர்களோடு வாழ, அவர்களின் சபையில் அமர, அவர்களிடம் பேச பழக இமாம் அவர்கள் ஆசைப்பட்டார்கள்.

ஆம், அதன் மூலம் ஈமான் அதிகரிக்கும். தக்வா பெருகும். பேணுதல் கூடும். இந்த நல்லெண்ணத்தில் இமாம் ஹசன் ﷀ அவர்கள் மஸ்ஜிதில் நுழைந்து அங்கிருந்த அறிஞர்களின் கூட்டத்தில் உட்கார்ந்து அவர்கள் என்ன பேசுகிறார்கள், அவர்களின் பேச்சை செவியுற்று தமது தக்வாவையும் பேணுதலையும் அதிகப்படுத்தலாம் என்று எண்ணியபோது அந்த அறிஞர்களோ இறையச்சத்தை கூட்டுகிற எதையும் பேசவில்லை, பேணுதலை அதிகப்படுத்துகிற எதையும் அவர்கள் விவாதிக்கவில்லை.

அது மட்டுமல்ல, அமலில் ஆர்வமில்லாத மக்களின் பேச்சாக அவர்களின் பேச்சு இருந்தது. வெறும் பகட்டுக்காக கல்வியில் போட்டி போடுபவர்களாகவும் மறுமையின் நினைவற்ற பேச்சுகளை பேசுபவர்களாகவும் அவர்கள் இருப்பதை இமாம் அவர்கள் கண்டார்கள். ஆகவேதான், அவர்களைப் பற்றி இவர்களுக்கு இபாதத்தில் ஆர்வமில்லை, பேணுதல் குறைவு என்று கூறிவிட்டு எழுந்து விட்டார்கள்.

அல்லாஹ்வே! எங்களை பாதுகாப்பாயாக! கல்வியையும் அமலையும் எங்களுக்கு வழங்குவாயாக! அமல் இல்லாத கல்வியை விட்டு எங்களை பாதுகாப்பாயாக! அல்லாஹ்வே தக்வாவை அதிகப்படுத்தும் கல்வியை, பேணுதலை தருகிற கல்வியை எங்களுக்கு வழங்குவாயாக! உன் பக்கம் எங்களை சேர்த்து வைக்கிற கல்வியை எங்களுக்குத் தருவாயாக! மறுமையை அறிந்து கொள்கிற கல்வியை தருவாயாக!

அல்லாஹ்வே! எங்களுக்கு உன்னிடம் சாதகமான ஆதாரமாக அமைகிற கல்வியை தருவாயாக! எங்களுக்கு எதிரான ஆதாரமாக அமைந்துவிடுகிற கல்வியை விட்டு எங்களை பாதுகாப்பாயாக! அல்லாஹ்வே இறையச்சமிக்க, உண்மையான, ஒழுக்கமான, மார்க்க அறிஞர்களிடம் இருந்த கல்வியை எங்களுக்கு தருவாயாக!

அல்லாஹ்வே! சோதனையாகவும் வேதனையாகவும் குழப்பமாகவும் அமைந்துவிடுகிற கல்வியிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக! நல்லமல்களுக்கு உந்துசக்தியாக இருக்கிற கல்வியை எங்களுக்கு தருவாயாக! அல்லாஹ்வே நயவஞ்சகர்களின் கல்வியை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்!

• • •

## சிந்தனை ஞானத்தின் திறவுகோல்

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ فُضَيْلٍ عَنِ الْعَلَاءِ بْنِ الْمُسَيَّبِ عَنِ الْـحَسَنِ قَالَ: تَفَكُّرُ سَاعَةٍ خَيْرٌ مِنْ قِيَامِ لَيْلَةٍ

இமாம் ஹசன் பஸரி ﵀ கூறுகிறார்: சிறிது நேரம் சிந்திப்பது ஓர் இரவு நின்று வணங்குவதை விட சிறந்ததாகும்.

**கருத்து:** இரவு வணக்கம் அவசியம்தான். அது மார்க்கத்தில் மிகச் சிறந்த வழிபாடாகும். அல்லாஹ்விற்கு மிகப் பிடித்தமான செயலாகும். ஆம், அதே சமயம் அல்லாஹ்வைப் பற்றியும் மறுமையைப் பற்றியும் சிந்தித்து உள்ளச்சத்தைக் கொண்டு வருவதும் அல்லாஹ்வின் மீது நம்பிக்கையை அதிகப்படுத்துவதும் அதை விட சிறந்ததாகும்.

**விளக்கம்:** இமாம் ஹசன் ﵀ அவர்கள் சுருக்கமாக சொல்லிவிட்டார்கள், சிறிது நேரம் சிந்திப்பது சிறந்தது என்று.

ஆம், சிந்திப்பது என்றால் நிறைய இருக்கிறது. ஒவ்வொருவரும் ஏதாவது ஒன்றைப் பற்றி சிந்தித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆகவே, முதலில் நாம் அறிய வேண்டியதாவது, சிந்திப்பது என்றால் என்ன? எதைப் பற்றி சிந்திப்பது? என்று.

பிறகு, எப்படி சிந்திப்பது? சிந்திப்பது எப்படி வணக்கத்தை விட சிறப்பாக முடியும்? சிந்திப்பதை பற்றி குர்ஆனும் ஸுன்னாவும் என்ன கூறுகின்றன? இப்படியாக பல கேள்விகள் இங்கு இருக்கின்றன? அந்த கேள்விகளுக்கு விடை காணும்போது இமாம் அவர்களின் கூற்றை நாம் ஓரளவு சரியாக விளங்க முடியும் என்று நினைக்கிறேன்.

தஃபக்குர் என்ற சொல்லை அல்குர்ஆன் பல இடங்களில் பயன்படுத்துகிறது.

அது மட்டுமல்ல, அந்தப் பொருளில் உள்ள வேறு சொல்களும் அல்குர்ஆனில் அதிகம் காணப்படுகின்றன.

ஆக, சிந்தித்தல் என்பது அல்லாஹ்வினால் மிகவும் ஆர்வமூட்டப்பட்ட, அவசியமாக்கப்பட்ட, வலியுறுத்தப்பட்ட ஓர் நற்குணமாகும்.

சிந்தனை, ஞானத்தின் திறவுகோலாகும்.

சிந்தனை, நல்லறிவின் வாசலாகும்.

சிந்தனை, முன்னேற்றத்தின் தொடக்கமாகும்.

சிந்தனை, தெளிவுக்கான முதல் படியாகும்.

சிந்தனை, ஆன்மிகத்தின் முதுகெலும்பாகும்.

சிந்தனை, சீர்திருத்தவாதிகளின் தாரக மந்திரமாகும்.

சிந்தனை, நல்ல மாற்றத்திற்கான அடிப்படையாகும்.

சிந்தனை, உண்மையையும் பொய்யையும் பிரித்தறிவதற்கான உரைகல்லாகும்.

சிந்தனை, அறிவாளிகளுக்கு பிடித்தமான, அறிவிலிகளுக்கு பிடிக்காத ஒன்று.

ஆம், நபிமார்களின் நேர்வழிக்குப் பின்னர் அவர்களின் சிந்தனைதான் இருந்தது.

இப்றாஹீம் நபி சிந்தித்தார்கள். பிரபஞ்சத்தைப் படைத்தவன் யாராக இருக்க முடியும்? என்று சிந்தித்தார்கள். நாம் கண்ணால் பார்ப்பது, இறைவனாக முடியுமா? என்று யோசித்தார்கள். தமது சமுதாயம் செய்கிற சிலை வணக்கமும் வழிபாடுகளும் உண்மையானவையா? என்று சிந்தித்தார்கள். இந்த கற்சிலைகள் உண்ணுமா? பருகுமா? பார்க்குமா? பேசுமா? நாம் பேசினால் அவை செவியுறுமா? என்று சிந்தித்தார்கள். அந்தக் கேள்விகளை சிலை வணக்கம் செய்கிற மக்களிடம் கேட்டார்கள்.

நமது நபி ﷺ அவர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். சத்தியத்தைத் தேட ஆரம்பித்தார்கள். தமது சமுதாயம் செய்கிற மூட பழக்கங்களை தவறு என்று அறிந்து அவற்றை எதிர்த்தார்கள். விக்ரகங்களின் ஆராதனைகளையும் அவற்றின் பெயரால் நடக்கிற மூட பழக்க வழக்கங்களையும் வெறுத்து ஒதுக்கி, அவற்றுக்கு எதிராக மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டினார்கள்.

மனிதன், தனக்கு இறைவன் கொடுத்த நல்லறிவைக் கொண்டு சிந்திக்கும்போது அவனுக்குள் நல்ல மாற்றங்கள் உருவாகின்றன. அவன் தன்னைச் சுற்றி

நடக்கிற நல்லது கெட்டதை அடையாளம் கண்டு கொள்கிறான். எதை செய்ய வேண்டும்? எதை செய்யக் கூடாது? என்ற தெளிவைப் பெறுகிறான்.

மனிதனை சிந்திக்கச் சொல்லி, எப்படி சிந்திக்க வேண்டும், எதைப் பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும், சிந்தித்து எப்படி செயல்பட வேண்டும் என்று இஸ்லாம் மனிதனுக்கு வழிகாட்டுகிறது, பயிற்றுவிக்கிறது, எப்படி ஒரு தாய் தனது குழந்தைக்கு அதன் கையைப் பிடித்து அதற்கு கால்களினால் எப்படி நடக்க வேண்டும் என்பதை கற்றுக் கொடுப்பாளோ அதுபோன்று.

மனிதன் முதலில் சிந்திக்க வேண்டியது, தன்னையும் தான் வாழ்கிற இந்த பிரபஞ்சத்தையும் படைத்தவன் யார் என்பதை பற்றித்தான்.

பிறகு, அந்த இறைவனை எப்படி வணங்க வேண்டும்? அவனை எப்படி திருப்தி படுத்த வேண்டும்? அவனது வல்லமைகளை எப்படி அறிய வேண்டும்? அவனது பண்புகளை எப்படி அறிய வேண்டும்? இந்த வாழ்க்கை நமக்கு ஏன் கொடுக்கப்பட்டது? நாம் எங்கிருந்து இந்த உலகத்திற்கு வந்தோம்? நாம் மரணித்தப் பின்னர் நமக்கு என்ன நடக்கும்? இப்படியாக பல கேள்விகளுக்கு விடையை சிந்திக்க வேண்டும்.

இப்பிரபஞ்ச படைப்புகளை சிந்தித்து அவற்றை படைத்த இறைவனையும் அவனது வல்லமைகளையும் புரிய வேண்டும்.

இந்த பிரபஞ்ச படைப்புகளைப் படைத்த இறைவன் உயிரோடு இருக்க எதையும் படைக்காத, படைக்க சக்தி இல்லாத கற்சிலைகளை எப்படி தெய்வங்களாக எடுத்துக் கொள்ள முடியும்? என்று சிந்திக்க வேண்டும்.

குர்ஆனின் உண்மைத் தன்மையைப் பற்றி சிந்தித்து அதன் மீது நம்பிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

நபியவர்கள் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட நபிதான் என்பதற்கு அத்தாட்சிகள் பல உள்ளனவே அவற்றை சிந்தித்து அவர்கள் மீது நம்பிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

இஸ்லாம் மார்க்கத்தின் சட்டங்கள், ஒழுக்கங்கள், நம்பிக்கைகள் ஒவ்வொன்றையும் சிந்திக்கும்போதுதான் அவை மற்ற மதங்களில் உள்ள சட்டங்கள், ஒழுக்கங்கள், நம்பிக்கைகளிலிருந்து எப்படி வேறுபடுகின்றன, அவற்றில் எது உண்மை, எது சத்தியம், எது நேர்வழி, எது மனித குலத்திற்கு நன்மை தரக்கூடியது, எது நீதமானது, நேர்மையானது, எது எல்லா மக்களுக்கும் பொதுவானது, எது இறைவனால் அருளப்பட்டது, எது மக்களால் உருவாக்கப்பட்டது என்பதை எல்லாம் தெளிவாக புரிய முடியும்!

அல்லாஹு தஆலா இறைவணக்கத்தைப் பற்றி கூறும்போது இறை சிந்தனையுடன் கூடிய வணக்கத்தைப் பற்றிதான் கூறுகிறான். ஆம், அப்போதுதான் அந்த வணக்கம் இறைவன் விரும்புகிற நல்ல மாற்றங்களை கொடுக்கும்.

சிந்திக்கவும் வேண்டும், வணங்கவும் வேண்டும். வணங்கவும் வேண்டும், சிந்திக்கவும் வேண்டும். வணக்கமில்லா சிந்தனையும் வீணானது. சிந்தனை இல்லா வணக்கமும் பலனற்றது.

இறைவணக்கத்தில் பகலிலோ இரவிலோ ஈடுபடுபவர், தான் எத்தகைய மகத்துவமிக்க, கம்பீரமான, பரிசுத்தமான, வல்லமைமிக்க இறைவனை வணங்குகிறேன் என்ற புரிதலோடு வணங்க வேண்டும். அத்தகைய வணங்குதலுக்கு சிந்தனை மிக அவசியம். அபோதுதான் அந்த வணக்க வழிபாட்டில் உள்ளத்தில் இறைவனின் பயமும் அன்பும் பீறிட்டு ஓடும்; மனம் அந்த வழிபாட்டில் லயித்திருக்கும்; அதிக நேரம் நிலையிலும் குனிவிலும் தலைவணங்குவதிலும் இருப்பதற்கு ஆசை வரும். தொழுகை எனக்கு கண் குளிர்ச்சி என்ற நிலையை இறை சிந்தனையுடன் கூடிய வணக்கத்தில்தான் அடைய முடியும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

الَّذِينَ يَذْكُرُونَ اللَّهَ قِيَامًا وَقُعُودًا وَعَلَىٰ جُنُوبِهِمْ وَيَتَفَكَّرُونَ فِي خَلْقِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ رَبَّنَا مَا خَلَقْتَ هَٰذَا بَاطِلًا سُبْحَانَكَ فَقِنَا عَذَابَ النَّارِ○رَبَّنَا إِنَّكَ مَنْ تُدْخِلِ النَّارَ فَقَدْ أَخْزَيْتَهُ وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنْصَارٍ○

அவர்கள் நின்றவர்களாகவும், உட்கார்ந்தவர்களாகவும், தங்கள் விலாக்கள் மீது (படுத்தவர்களாகவு)ம் அல்லாஹ்வை (துதித்துப் புகழ்ந்து தொழுது) நினைவு கூர்வார்கள். இன்னும், வானங்கள், பூமி படைக்கப்பட்டிருப்பதில் அவர்கள் சிந்திப்பார்கள். (இன்னும், அவர்கள் பிரார்த்திப்பார்கள்:) “எங்கள் இறைவா! நீ இதை வீணாக படைக்கவில்லை. உன்னைத் தூய்மைப்படுத்துகிறோம். ஆகவே, (நரக) நெருப்பின் தண்டனையிலிருந்து எங்களைக் காப்பாற்று! எங்கள் இறைவா! நிச்சயமாக நீ எவரை நரக நெருப்பில் நுழைக்கிறாயோ

அவரை திட்டமாக இழிவுபடுத்தி விட்டாய். உதவியாளர்கள் யாரும் அநியாயக்காரர்களுக்கு இல்லை.”

(அல்குர்ஆன் 3 : 191, 192)

இதுபோன்று இருக்கக்கூடிய பல வசனங்கள் கூறுகிற உபதேசம் இதுதான், அல்லாஹ்வையும் அவனது ஆற்றலையும் சிந்தித்து புரிந்த முஃமினாக, முஸ்லிமாக, ஆபிதாக - வணக்கசாலியாக இரு.

அல்லாஹ்வின் படைப்புகளை சிந்தித்து அவனது வல்லமைகளை புரியும்போது ஈமான் உறுதி அடைகிறது.

நபி மூஸாவின் அற்புதத்தைப் பார்த்து, சிந்தித்து புரிந்து நம்பிக்கை கொண்டு வந்த மந்திரவாதிகள் தங்கள் ஈமானில் உறுதியாக இருந்தார்கள். அவர்களை ஃபிர்அவ்ன் அச்சுறுத்தியும் அவர்கள் பயப்படவில்லை, ஈமானிலிருந்து பின்வாங்கவில்லை. அவர்களை ஃபிர்அவ்ன் ஈட்டியில் குத்தி கழுமரத்தில் ஏற்றியபோது கூட அவர்கள் உறுதியுடன் பொறுமையாக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தவர்களாக, பாவமன்னிப்பு கேட்டவர்களாக இருந்தார்கள்.

அதே நிலையில் பசித்தவர்களாகவும் தாகித்தவர்களாகவும் மாறு கை மாறு கால் வெட்டப்பட்டவர்களாகவும் வீர மரணம் எய்தினார்கள். அவர்களில் யாரும் ஈமானிலிருந்து விலகவில்லை. இதுதான் சிந்தித்து புரிந்த ஈமானுக்கும் சிந்திக்காமல் நம்பிக்கை கொண்டிருந்த சில இஸ்ரவேலர்களின் ஈமானுக்கும் உள்ள வித்தியாசம்.

பிலாலையும், அம்மாரையும், யாசிரையும், சுமைய்யாவையும், கப்பாபையும், குபைபையும் நாம் நினைவு கூராமல் இருக்க முடியுமா? இன்னும் பல நபித்தோழர்களைப் பற்றி பேசாமல் செல்ல முடியுமா?

அவர்களைப் போன்றோரை இந்த வசனத்தில் இறைவன் இப்படி புகழ்கிறான்:

رَبَّنَا إِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُنَادِي لِلْإِيمَانِ أَنْ آمِنُوا بِرَبِّكُمْ فَآمَنَّا
رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّئَاتِنَا وَتَوَفَّنَا مَعَ الْأَبْرَارِ ○ رَبَّنَا
وَآتِنَا مَا وَعَدْتَنَا عَلَىٰ رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيَامَةِ إِنَّكَ لَا تُخْلِفُ
الْمِيعَادَ ○ فَاسْتَجَابَ لَهُمْ رَبُّهُمْ أَنِّي لَا أُضِيعُ عَمَلَ عَامِلٍ مِنْكُمْ مِنْ
ذَكَرٍ أَوْ أُنْثَىٰ بَعْضُكُمْ مِنْ بَعْضٍ فَالَّذِينَ هَاجَرُوا وَأُخْرِجُوا مِنْ دِيَارِهِمْ

وَأُوذُوا فِي سَبِيلِي وَقَاتَلُوا وَقُتِلُوا لَأُكَفِّرَنَّ عَنْهُمْ سَيِّئَاتِهِمْ وَلَأُدْخِلَنَّهُمْ جَنَّاتٍ تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ ثَوَابًا مِنْ عِنْدِ اللَّهِ وَاللَّهُ عِنْدَهُ حُسْنُ الثَّوَابِ۝

"எங்கள் இறைவா! ஓர் அழைப்பாளர், உங்கள் இறைவனை நம்பிக்கை கொள்ளுங்கள் என்று நம்பிக்கையின் பக்கம் (எங்களை) அழைப்பதை நிச்சயமாக நாங்கள் செவிமடுத்தோம். ஆகவே, (உன்னையும் அவரையும்) நம்பிக்கை கொண்டோம். எங்கள் இறைவா! ஆகவே, எங்களுக்கு எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! இன்னும், எங்கள் குற்றங்களை எங்களை விட்டு அகற்றிவிடுவாயாக! இன்னும், (நீ எங்களுக்கு மரணத்தை கொடுக்கும்போது) அப்ரார் என்ற நல்லோருடன் எங்களுக்கு மரணத்தைத் தருவாயாக! (எங்களையும் அவர்களில் சேர்த்து, அவர்களுடன் எங்களை எழுப்புவாயாக!)"

"எங்கள் இறைவா! இன்னும், உன் தூதர்கள் மூலம் எங்களுக்கு நீ வாக்களித்ததை எங்களுக்குத் தருவாயாக! இன்னும், மறுமை நாளில் எங்களை இழிவுபடுத்தாதே! நிச்சயமாக நீ வாக்குறுதியை மீற மாட்டாய்" (என்றும் அவர்கள் பிரார்த்தித்தார்கள்.) ஆகவே, "உங்களில் ஆண் அல்லது பெண்களில் (நற்)செயல் செய்பவரின் (நற்)செயலை நிச்சயம் நான் வீணாக்க மாட்டேன். உங்களில் சிலர், சிலரைச் சேர்ந்தவர்கள்தான். ஹிஜ்ரத் சென்றவர்கள், தங்கள் ஊர்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள், என் பாதையில் துன்புறுத்தப்பட்டவர்கள், போர் செய்தவர்கள், (அதில்) கொல்லப்பட்டவர்கள், அவர்களுடைய குற்றங்களை அவர்களை விட்டும் நிச்சயம் நான் அகற்றி விடுவேன். அவற்றின் கீழ் நதிகள் ஓடும் சொர்க்கங்களில் நிச்சயம் அவர்களை பிரவேசிக்கச் செய்வேன்." என்று அவர்களுடைய இறைவன் அவர்களுக்கு பதிலளி(த்து அவர்களின் பிரார்த்தனைகளை அங்கீகரி)த்தான். அல்லாஹ்விடமிருந்து நற்கூலியாக (இவை அவர்களுக்கு வழங்கப்படும்). இன்னும் அல்லாஹ், அவனிடத்தில்தான் அழகிய நற்கூலி உண்டு.

(அல்குர்ஆன் 3 : 193-195)

ஆம், அந்த சான்றோர்கள் இறைத்தூதரையும் அவரின் உண்மையையும் சிந்தித்துப் புரிந்து இறைவனை நம்பிக்கை கொண்டார்கள். அவர் மீது இறக்கப்பட்ட வசனங்களை ஆராய்ந்தார்கள். அவை மனிதனின் சொல்

அல்ல என்பதை விளங்கிக் கொண்டார்கள். பிறகு, அவற்றை நம்பிக்கை கொண்டார்கள். இஸ்லாமை தழுவினார்கள். அந்த வசனங்களை சிந்தித்துப் புரிந்து தொழுகையில் ஓதினார்கள்.

ஆகையால், அவர்களின் தொழுகை அவர்களுக்கு ராஹத்தாக - ஓய்வாக, குர்ரத்துல் ஐன் - கண் குளிர்ச்சியாக, ஸகீனா - மனதிற்கு அமைதியாக, துமஃனீனா - உள்ளத்திற்கு நிம்மதியாக, முனாஜாத் - இறை உரையாடலாக, குர்ப் - இறை நெருக்கமாக அமைந்திருந்தது.

பல முறை வில்லால் குத்தப்பட்டு ரத்தம் பீறிட்ட நிலையில் தொடர்ந்து தொழுத அன்ஸாரி தோழரை நினைவு கூருங்கள்! சில நிமிட புழுக்கத்தையும் வியர்வையையும் கொசுக்கடியையும் தாங்க முடியாமல் அவசர அவசரமாக தொழுது முடிக்கும் நமது ஈமானிய பலவீனத்தையும் நினைவு கூருங்கள்!

கால் கடுக்க, கால் வீங்க தொழுத நபி ﷺ அவர்களை நினைவு கூருங்கள்! இரவில் மூன்றில் இரண்டு பகுதிகள், அல்லது இரவில் பாதி, அல்லது இரவில் மூன்றில் ஒரு பகுதி தொழுத நபியவர்களையும் ஸஹாபாக்களையும் சான்றோரையும் நினைவு கூருங்கள்!

நபி ﷺ அவர்கள் கண்டிக்கிற வரை இஷா தொழுகையில் தொடர்ந்து பகராவையும் நிசாவையும் ஓதி வந்த முஆத் இப்னு ஜபலை நினைவு கூருங்கள்! ஃபஜ்ர் தொழுகையிலும் பெருநாள் தொழுகைகளிலும் சூரா பகராவை ஓதிவந்த அபூ பக்ரை நினைவு கூருங்கள்!

அதிகாலை தொழுகையில் யூஸுஃபையும், யூனுசையும், இஸ்ராவையும், கஹ்ஃபையும், ஹூதையும், ஹஜ்ஜையும், இன்னும் பல பெரிய சூராக்களையும் ஓதிவந்த உமருல் ஃபாரூக்கை நினைவு கூருங்கள்! ஓர் இரவில் முழு குர்ஆனை ஓதி தொழுத உஸ்மானை நினைவு கூருங்கள்!

ஆம், அவர்கள் இம்மை மறுமையை சிந்தித்தார்கள். இம்மை அழியக்கூடியது, மறுமை நிரந்தரமானது என்பதை புரிந்து கொண்டார்கள். அல்லாஹ்வின் வாக்குகளை சிந்தித்தார்கள். அவை உண்மை என்பதை புரிந்து கொண்டார்கள். குர்ஆனை சிந்தித்தார்கள். அதன் உண்மையை புரிந்து கொண்டார்கள். இஸ்லாமிய மார்க்கத்தின் சட்டங்களையும் தத்துவங்களையும் சிந்தித்தார்கள். அவற்றில் உள்ள நீதத்தையும், நேர்மையையும், நன்மைகளையும், பலன்களையும் புரிந்து கொண்டார்கள். ஆகவே அவற்றை உயிரை விட மேலாக மதித்தார்கள், பின்பற்றினார்கள்.

இன்று, பல வணக்கசாலிகளை பார்க்கிறோம். அவர்களின் வழிபாடுகளால் அவர்களிடம் எவ்வித மாற்றத்தையும் பார்க்க முடிவதில்லை. பலர் காக்கைகள் கொத்துவதைப் போல் தங்கள் தொழுகைகளை கொத்துவதையும் அவசர அவசரமாக முடிப்பதையும் பார்க்கிறோம்.

இன்று, முஸ்லிம்கள் வணக்க வழிபாடுகள் செய்கிறார்கள். ஹஜ் உம்ரா செய்கிறார்கள். உபரியான நோன்புகள் நோற்கிறார்கள். ஆனால், இறை சிந்தனையுடன் அந்த வழிபாடுகள் இருப்பதில்லை. ஆகவே, அந்த வழிபாடுகள் அவர்களுக்கு ஈமானையும் தக்வாவையும் அதிகப்படுத்தவில்லை. அந்த வழிபாடுகள் சடங்குகளாகவும் சம்பிரதாயங்களாகவும் மட்டுமே அவர்களிடம் காணப்படுகின்றன. அவர்களிடம் அல்லாஹ்வின் அருளுக்கு நன்றியையோ, சோதனைகளில் பொறுமையையோ, எல்லா நிலைமைகளிலும் அல்லாஹ்வை புகழ்வதையோ நீங்கள் காண முடியாது.

சிந்தனை இல்லாத வணக்கத்தை விட, மார்க்கத்தை சிந்தித்து புரிந்து, அல்லாஹ்வின் வல்லமையை, ஆற்றலை சிந்தித்து புரிந்து ஈமானையும் தக்வாவையும் அதிகப்படுத்திக் கொண்டு இபாதத்துகளில் ஈடுபடுவது மிகச் சிறந்ததாகும். உபரியான வழிபாடுகளை அதிகம் செய்ய வேண்டும். அவற்றில் அல்லாஹ்வை அதிகம் சிந்திக்க வேண்டும்.

சிந்தனை இல்லா இபாதத்துகள் ருசி இல்லா பழத்தைப் போலாகும்.

சிந்தனை இல்லா இபாதத்துகள் குடிக்க முடியாத கடல் நீர் போலாகும்.

சிந்தனை இல்லா இபாதத்துகள் நிழல் தராத மரத்தைப் போலாகும்.

சிந்தனை இல்லா இபாதத்துகள் இலாபமில்லா வர்த்தகத்தைப் போலாகும்.

இதைத்தான் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள், வெறும் வணக்க வழிபாட்டில் ஈடுபடுவதை விட ஈமானையும் தக்வாவையும் ஞானத்தையும் அதிகப்படுத்துகிற சிந்தனை மிக சிறந்தது என்று கூறுகிறார்கள். சிந்தனை இல்லா இபாதத்தை விட சிந்தித்து, ஈமானை யக்கீனை அதிகப்படுத்திக் கொண்டு, இபாதத் செய்வது மிக சிறந்தது என்று கூறுகிறார்கள்.

அல்லாஹ்வே! ஈமானை அதிகரிக்க செய்கிற சிந்தனையை தா! சிந்தனையுடன் கூடிய இபாதத்தை தா! உள்ளச்சத்தை அதிகப்படுத்துகிற, யக்கீனை கூட்டுகிற, ஈமானிய ஞானங்களை உதித்தோடச் செய்கிற சிந்தனையை தா! உன் அத்தாட்சிகளை சிந்தித்து உனது வல்லமையை புரிகிற நல்லறிவை தா! கெட்டதை சிந்திப்பதை விட்டும், ஷைத்தானிய சிந்தனையை விட்டும்,

மட்டமான சிந்தனையை விட்டும், பயனற்றதில் சிந்திப்பதை விட்டும், உலக சிந்தனைகளை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! மறுமை சிந்தனையை சொர்க்க சிந்தனையை நல்லமல்களைப் பற்றிய சிந்தனையை எங்களுக்கு தா!

அல்லாஹ்வே! உண்மையை உண்மையாக பொய்யை பொய்யாக புரிய வைக்கிற நேரிய சிந்தனையை தா! உனது சன்மார்க்கத்தின் சட்டங்களை சத்தியமென புரியவைக்கிற சிந்தனையை தா! உண்மையை உணர்ந்த ஞானிகளுக்கு நீ வழங்கிய நல்ல சிந்தனையை தா! வழிகேட்டிலிருந்து நேர்வழியைப் பிரித்து புரிய வைக்கிற சிந்தனையை தா! நீதான் எங்கள் பிரார்த்தனைகளை நன்கு செவியுறுபவன், நன்கறிந்தவன். ஆமீன்!

• • •

## நல்லமல்களின் எல்லை இறுதி மூச்சு வரை

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا وَهْبُ بْنُ جَرِيرٍ حَدَّثَنَا أَبِي سَمِعْتُ الْـحَسَنَ يَقُولُ: «أَبَىٰ قَوْمٌ الْمُدَاوَمَةَ وَاللهِ مَا الْمُؤْمِنُ الَّذِي يَعْمَلُ شَهْرًا أَوْ شَهْرَيْنِ أَوْ عَامًا أَوْ عَامَيْنِ لَا وَاللهِ مَا جَعَلَ اللهُ لِعَمَلِ الْمُؤْمِنِ أَجَلًا دُونَ الْمَوْتِ»

இமாம் ஹசன் ﷀ கூறுகிறார்கள்: சிலர், நல்லமல்களை தொடர்ச்சியாக செய்வதை விட்டு விடுகின்றனர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் அல்லது ஓர் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் அமல் செய்(து விட்டு பிறகு விட்டுவிடு)பவர் உண்மையான நம்பிக்கையாளர் அல்ல. இல்லை, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நம்பிக்கையாளரின் அமலுக்கு மரணத்திற்கு முன்பு (அதைத் தவிர) வேறு ஒரு தவணையை அல்லாஹ் ஏற்படுத்தி இருக்கவில்லை.

**கருத்து:** சிலர், ஆர்வத்தில் சில காலம் அமல் செய்துவிட்டு பிறகு அந்த அமலை விட்டு விடுகின்றனர். ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் ஆர்வம் அல்லாஹ்வை சந்திக்கிற வரை குறையக் கூடாது. மாறாக, அது கூடிக் கொண்டே இருக்க வேண்டும். ஆகவே, அல்லாஹ்விற்காக தான் செய்ய ஆரம்பித்த எந்த ஒரு அமலையும் அது சிறியதாக இருந்தாலும் சரி, பெரியதாக இருந்தாலும் சரி, குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரி அந்த அமலை தொடர்ந்து செய்ய வேண்டும். நமது நல்லமல்களின் முடிவு மரணத்தைக் கொண்டுதான் இருக்க வேண்டும். அதற்கு முன்பு வரை எந்த ஒரு அமலையும் நிறுத்தி விடக்கூடாது.

**விளக்கம்:** வணக்க வழிபாட்டில், நல்லமல்களை செய்வதில் இமாம் ஹசன்

பஸரி ﷺ அவர்களின் கடின உழைப்பும் விடா முயற்சியும் அறிஞர்களுக்கு மத்தியில் மிகப் பிரபலமானதாகும்.

ஆம், யார் மறுமையை அறிந்தாரோ அவர் அமல் செய்வதில் எப்படி சோர்வடைவார்? அல்லாஹ்வின் பொருளான சொர்க்கத்தின் பெருமதிப்பை உணர்ந்தவர் அதற்கான அமல் இல்லாமல் நாளை மறுமையில் அல்லாஹ்விற்கு முன் செல்வதற்கு எப்படி வெட்கப்படாமல் இருக்க முடியும்? அளவில்லா அருட்கொடைகள் புரிந்த அல்லாஹ்விற்கு நன்றிகளாக நல்லமல்களை செய்யாமல், நன்றி கெட்டவராக வாழ ஓர் உண்மையான அடியானால் எப்படி இருக்க முடியும்?

பல பாவங்களை செய்து, அவற்றை மறந்துவிடுகிறோம். எத்தனையோ சிறு பாவங்களை வாழ்க்கையில் தொடர்ச்சியாக செய்கிறோம். அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக! ஆனால், சிறு சிறு அமல்களை கூட தொடர்ச்சியாக இறுதி வரை செய்வதில் நாம் சோர்ந்து விடுகிறோம்; ஷைத்தானிடம் தோற்று விடுகிறோம்.

அல்லாஹு தஆலா நம்மை படைத்ததே அவனை வணங்குவதற்குத்தான். இந்த உலக வாழ்க்கை நமக்கு கொடுக்கப்பட்டதே மறுமைக்காகத்தான். உலக வசதிகள் நமக்கு வழங்கப்பட்டதே சொர்க்கத்தை தேடுவதற்குத்தான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَابْتَغِ فِيمَا آتَاكَ اللهُ الدَّارَ الْآخِرَةَ وَلَا تَنْسَ نَصِيبَكَ مِنَ الدُّنْيَا وَأَحْسِنْ كَمَا أَحْسَنَ اللهُ إِلَيْكَ○

இன்னும், அல்லாஹ் உமக்கு வழங்கியவற்றில் மறுமை வீட்டை தேடிக்கொள்! இன்னும், உலகத்திலிருந்து (மறுமைக்கு நீ எடுத்துச் செல்லவேண்டிய) உனது பங்கை மறந்து விடாதே! இன்னும், அல்லாஹ் உனக்கு உபகாரம் செய்தது போன்று நீ (மக்களுக்கு) உபகாரம் செய்! (அல்குர்ஆன் 28 : 77)

நமது செல்வம் நமது நேரம் எல்லாம் மறுமைக்காக நமக்கு கொடுக்கப்பட்ட முதல்கள் ஆகும். இவற்றைக் கொண்டு நாம் சொர்க்கத்தை தேட வேண்டும். அதற்கு அல்லாஹ்வை அதிகம் வணங்குவதிலும், அல்லாஹ்விற்கு பிடித்தமான நல்லமல்களை அதிகம் செய்வதிலும், நற்கருமங்களை செய்வதிலும் நமது நேரத்தையும் செல்வத்தையும் செலவிட வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ الَّذِينَ يَتْلُونَ كِتَابَ اللهِ وَأَقَامُوا الصَّلَاةَ وَأَنْفَقُوا مِمَّا رَزَقْنَاهُمْ سِرًّا وَعَلَانِيَةً يَرْجُونَ تِجَارَةً لَنْ تَبُورَ ○

நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை ஓதுகிறார்களோ, இன்னும் தொழுகையை நிலைநிறுத்தி, நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து இரகசியமாகவும் வெளிப்படையாகவும் தர்மம் செய்தார்களோ அவர்கள் அறவே அழிந்து போகாத வியாபாரத்தை ஆசைப்படுகிறார்கள். (அல்குர்ஆன் 35 : 29)

இந்த வசனம் நமக்கு உணர்த்தக் கூடிய படிப்பினை இதுதான். ஒரு நம்பிக்கையாளர் மறுமையின் அழியாத இன்பத்தை, முடிவற்ற, தடுக்கப்படாத அருட்கொடைகளை, நல்லோரின் தங்குமிடமான, இறைவனின் விருந்தோம்பலைக் கொண்டு கண்ணியப்படுத்தப்படும் சொர்க்க வாழ்க்கையை ஆசைவைத்து இந்த உலக வாழ்க்கையை இறை வணக்கத்தில் ஈடுபடுத்தி விடுவார். ஒவ்வொரு நொடியையும் கணக்கிட்டு, வாழ்க்கையின் எந்த ஒரு பகுதியும் வீணாகி விடாமல் அதை மறுமையின் சம்பாத்தியத்தில் கழிப்பார்.

ஆம், அத்தகையவர்கள்தான் அல்லாஹ்விற்கு உரியவர்கள், அல்லாஹ்வின் அன்பர்கள், அல்லாஹ்வின் நேசர்கள், அல்லாஹ்வின் அண்டை வீட்டார்கள், அல்லாஹ்வின் அடியார்கள். அவர்களைப் பற்றி அல்குர்ஆனில் அவன் வர்ணிக்கிற சில வர்ணிப்புகளை வாசித்துப் பாருங்கள்!

إِنَّ الَّذِينَ آمَنُواْ وَالَّذِينَ هَاجَرُواْ وَجَاهَدُواْ فِي سَبِيلِ اللهِ أُوْلَـئِكَ يَرْجُونَ رَحْمَتَ اللهِ وَاللهُ غَفُورٌ رَّحِيمٌ ○

நிச்சயமாக எவர்கள் நம்பிக்கை கொண்டார்களோ, இன்னும் எவர்கள் ஹிஜ்ரத் செய்து, அல்லாஹ்வுடைய பாதையில் ஜிஹாது செய்தார்களோ அவர்கள் அல்லாஹ்வுடைய கருணையை ஆசை வைக்கிறார்கள். அல்லாஹ் மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன் ஆவான். (அல்குர்ஆன் 2 : 218)

أُولَئِكَ الَّذِينَ يَدْعُونَ يَبْتَغُونَ إِلَىٰ رَبِّهِمُ الْوَسِيلَةَ أَيُّهُمْ أَقْرَبُ وَيَرْجُونَ رَحْمَتَهُ وَيَخَافُونَ عَذَابَهُ إِنَّ عَذَابَ رَبِّكَ كَانَ مَحْذُورًا ○

(தூதர்கள், வானவர்கள், இன்னும் இறைநேசர்களில்) எவர்களை இவர்கள் (தங்கள் தேவைக்காக பிரார்த்தனை செய்து) அழைக்கிறார்களோ, - அவர்களோ தங்கள் இறைவன் பக்கம் தங்களில் மிக நெருங்கியவராக யார் ஆகுவது என்று (ஆர்வப்பட்டு) நன்மையை (அதிகம் செய்வதற்கு வழிகளை)த் தேடுகிறார்கள்; இன்னும், அவனுடைய கருணையை ஆதரவு வைக்கிறார்கள்; இன்னும், அவனுடைய தண்டனையைப் பயப்படுகிறார்கள். நிச்சயமாக உம் இறைவனின் தண்டனை பயத்திற்குரியதாக இருக்கிறது! (அல்குர்ஆன் 17 : 57)

إِنَّهُمْ كَانُوا يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَيَدْعُونَنَا رَغَبًا وَرَهَبًا وَكَانُوا لَنَا خَاشِعِينَ ۝

நிச்சயமாக அவர்கள் (எல்லோரும்) நன்மைகளில் விரைபவர்களாகவும் ஆர்வத்துடனும் பயத்துடனும் நம்மை அழைப்பவர்களாகவும் (-வணங்குபவர்களாகவும்) இருந்தனர். இன்னும், அவர்கள் நமக்கு (பயந்து) பணிந்தவர்களாக இருந்தனர். (அல்குர்ஆன் 21 : 90)

أُولَـٰئِكَ يُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَهُمْ لَهَا سَابِقُونَ ۝

அவர்கள்தான் நன்மைகளில் விரைந்து செல்கிறார்கள். இன்னும், அவர்கள் அவற்றை முந்தி செய்பவர்கள் ஆவார்கள். (ஆகவே, அவர்களுக்காக இறைவனிடம் நற்பாக்கியம் முந்திவிட்டது.) (அல்குர்ஆன் 23 : 61)

يُؤْمِنُونَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَيَأْمُرُونَ بِالْمَعْرُوفِ وَيَنْهَوْنَ عَنِ الْمُنكَرِ وَيُسَارِعُونَ فِي الْخَيْرَاتِ وَأُولَـٰئِكَ مِنَ الصَّالِحِينَ ۝

அவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொள்கிறார்கள்; இன்னும், நன்மையை (மக்களுக்கு) ஏவுகிறார்கள்; இன்னும், தீமையை விட்டும் (மக்களை) தடுக்கிறார்கள்; இன்னும், நன்மைகளில் விரைகிறார்கள். இவர்கள்தான் நல்லோரில் உள்ளவர்கள். (அல்குர்ஆன் 3 : 114)

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَأَقْرِضُوا اللَّهَ قَرْضًا حَسَنًا وَمَا تُقَدِّمُوا

لِأَنْفُسِكُمْ مِنْ خَيْرٍ تَجِدُوهُ عِنْدَ اللهِ هُوَ خَيْرًا وَأَعْظَمَ أَجْرًا وَاسْتَغْفِرُوا اللهَ إِنَّ اللهَ غَفُورٌ رَحِيمٌ○

தொழுகையை நிலை நிறுத்துங்கள்! ஸகாத்தை கொடுங்கள்! அல்லாஹ்விற்கு அழகிய கடன் கொடுங்கள்! உங்களுக்காக நன்மையில் எதை நீங்கள் முற்படுத்துகிறீர்களோ அதை அல்லாஹ்விடம் (நீங்கள் செய்ததை விட) மிகச் சிறப்பாகவும் கூலியால் மிகப் பெரியதாகவும் நீங்கள் பெறுவீர்கள். அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன் ஆவான். (அல்குர்ஆன் 73 : 20)

இந்த உலகத்தில் மாட மாளிகைகளில் வாழ்ந்தவர்கள் எங்கே!

கோபுரங்களிலும் கோட்டைகளிலும் வாழ்ந்தவர்கள் எங்கே!

அழகிகளோடு மணம் முடித்து, பிள்ளை குட்டிகளோடு வாழ்ந்தவர்கள் எங்கே!

எனக்கு போட்டியாக எந்த மன்னன் இருக்க முடியும் என்று கர்ஜித்த மன்னர்கள் எங்கே!

நாடுகளையும் அரசுகளையும் வீழ்த்தி வெற்றிகொண்ட அரசர்கள் எங்கே!

வீரர்களை வீழ்த்திய வீரன் எங்கே!

பெண்கள் எல்லாம் மயங்கி விழுந்த ஆணழகன் எங்கே!

பல்லாயிரக்கணக்கான பணியாளர்களோடு பவனி வந்த செல்வந்தன் எங்கே!

அரசனோடு நெருக்கமாக இருந்த மந்திரிகள் எங்கே!

என்னை விட அதிக சொத்துக்கு சொந்தக்காரன் யார் என்று மார்தட்டிய இருமாப்புக்காரன் எங்கே!

தங்கத்தையும் வெள்ளியையும் குவியலாக குவித்து வைத்த பேராசைக்காரன் எங்கே!

தனது சூழ்ச்சியாலும் மதியாலும் வஞ்சகத்தாலும் மன்னர்களை மண்ணை கவ்வ வைத்த தந்திரக்காரன் எங்கே!

இந்த மண்ணுக்காக, பொன்னுக்காக, பெண்ணுக்காக சண்டையிட்ட சண்டாளர்கள் எங்கே!

இந்த உலகம் தனக்கு நிரந்தர மனைவியாக, தான் இதற்கு நிரந்தர கணவனாக இருக்க வேண்டும் என்று வெறிபிடித்துப் போயிருந்தவர்கள் எங்கே!

நேற்று வரை மரணமா? எனக்கா? இந்த வயதிலா? என்று ஏமாந்து உலக இன்பத்தில் மூழ்கி இருந்த மதி மயங்கிய வாலிபனும் வாலிபப் பெண்ணும் எங்கே!

இப்படி அவன் எங்கே! அவள் எங்கே! என்று ஆயிரம் அவனைப் பற்றியும் ஆயிரம் அவளைப் பற்றியும் எங்கே எங்கே என்று நாம் கேள்வி தொடுக்கலாம்!

நான் எழுதியதை வாசிப்பவனே நீ கேட்பாய் நான் எங்கே என்று! அல்லது நான் கேட்பேன் நீ எங்கே என்று!

ஆம், நாம் எல்லோரும் உருண்டு கொண்டே இருக்கிறோம் நமது மண்ணறையை நோக்கி!

நாம் எல்லாம் நகர்ந்து கொண்டே இருக்கிறோம் நமது அடக்கஸ்தலத்தை நோக்கி!

இந்த உலகத்தில் ஒருவர் வேகமாக ஓடினாலும், மெதுவாக நடந்தாலும், இன்னும் பொறுமையாக தவழ்ந்து சென்றாலும் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட மரண நேரத்தை ஒரு நாள் ஒரு நேரம் அடைந்தே தீருவார். அந்த நாளுக்காக அவர் என்ன செய்தார், என்ன சேமித்தார் என்பதுதான் மிக முக்கியம். அதை பலர் மறந்து விட்டார்கள். நமது ரப்பு அல்லாஹ் கூறுவதைக் கேளுங்கள்!

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَا قَدَّمَتْ لِغَدٍ وَاتَّقُوا اللهَ
إِنَّ اللهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ ○

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! ஓர் ஆன்மா, அது (தனது) மறுமைக்காக எதை முற்படுத்தி இருக்கிறது என்று பார்த்துக் கொள்ளட்டும். இன்னும், அல்லாஹ்வை அஞ்சுங்கள்! நீங்கள் செய்பவற்றை நிச்சயமாக அல்லாஹ் ஆழ்ந்தறிபவன் ஆவான். (அல்குர்ஆன் 59 : 18)

அல்லாஹ்வை மறந்து, மறுமையை மறந்து, சொர்க்கத்தை மறந்து, நரகத்தை மறந்து, விசாரணையை மறந்து, தராசில் அமல்கள் நிறுக்கப்படுவதை மறந்து, ஸிராத் பாலத்தை மறந்து, அல்லாஹ்விற்கு முன்னர் நிற்க வேண்டிய நாளை மறந்து, உலக வாழ்க்கையில் மூழ்கிய நஷ்டவாளிகளைப் பற்றி அல்லாஹ் நமக்கு அல்குர்ஆனில் எச்சரிக்காமல் இல்லை.

அல்லாஹ் கூறுகிறான்:

وَلَا تَكُونُوا كَالَّذِينَ نَسُوا اللَّهَ فَأَنْسَاهُمْ أَنْفُسَهُمْ أُولَئِكَ هُمُ الْفَاسِقُونَ○

அல்லாஹ்வை மறந்தவர்களைப் போல் ஆகிவிடாதீர்கள். அதனால் அவர்களுக்கு அவர்களையே அவன் மறக்கச் செய்துவிட்டான். அவர்கள்தான் பாவிகள் ஆவார்கள். (அல்குர்ஆன் 59 : 19)

إِنَّ الَّذِينَ لَا يَرْجُونَ لِقَاءَنَا وَرَضُوا بِالْحَيَاةِ الدُّنْيَا وَاطْمَأَنُّوا بِهَا وَالَّذِينَ هُمْ عَنْ آيَاتِنَا غَافِلُونَ○أُولَئِكَ مَأْوَاهُمُ النَّارُ بِمَا كَانُوا يَكْسِبُونَ○

நிச்சயமாக எவர்கள் நம் சந்திப்பை பயப்படாமல் இருக்கிறார்களோ; இன்னும், இவ்வுலக வாழ்க்கையை விரும்புகிறார்களோ; இன்னும், அதைக் கொண்டு நிம்மதி அடைகிறார்களோ; இன்னும், நம் வசனங்களை எவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்களோ, அ(த்தகைய)வர்கள், அவர்கள் செய்து கொண்டிருந்த (தீய)வற்றின் காரணமாக அவர்களுடைய தங்குமிடம் நரகம்தான். (அல்குர்ஆன் 10 : 7, 8)

الَّذِينَ اتَّخَذُوا دِينَهُمْ لَهْوًا وَلَعِبًا وَغَرَّتْهُمُ الْحَيَاةُ الدُّنْيَا فَالْيَوْمَ نَنْسَاهُمْ كَمَا نَسُوا لِقَاءَ يَوْمِهِمْ هَٰذَا وَمَا كَانُوا بِآيَاتِنَا يَجْحَدُونَ○

(நிராகரித்த) அவர்கள் தங்கள் மார்க்கத்தை கேளிக்கையாகவும் விளையாட்டாகவும் எடுத்துக் கொண்டனர். இன்னும், அவர்களை உலக வாழ்க்கை மயக்கியது. அவர்களுடைய இந்நாளின் சந்திப்பை அவர்கள் மறந்து, நம் வசனங்களை மறுத்துக் கொண்டிருந்த காரணத்தால் இன்று அவர்களை (நாமும்) மறந்துவிடுவோம். (-அவர்களின் அழைப்பை ஏற்காமல் நரகத்தில் அவர்களை அப்படியே விட்டுவிடுவோம்) (அல்குர்ஆன் 7 : 51)

إِنَّ الَّذِينَ يَضِلُّونَ عَنْ سَبِيلِ اللَّهِ لَهُمْ عَذَابٌ شَدِيدٌ بِمَا نَسُوا يَوْمَ الْحِسَابِ○

நிச்சயமாக எவர்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தில் இருந்து (மக்களை) வழிகெடுப்பார்களோ - அவர்களுக்கு கடுமையான தண்டனை உண்டு, அவர்கள் விசாரணை நாளை மறந்த காரணத்தால். (அல்குர்ஆன் 38 : 26)

فَذُوقُوا بِمَا نَسِيتُمْ لِقَاءَ يَوْمِكُمْ هٰذَا إِنَّا نَسِينَاكُمْ وَذُوقُوا عَذَابَ الْخُلْدِ بِمَا كُنْتُمْ تَعْمَلُونَ۝

ஆக, நீங்கள் உங்கள் இந்த நாளின் சந்திப்பை மறந்த காரணத்தால் (நரக தண்டனையை) சுவையுங்கள்! நிச்சயமாக நாம் உங்களை (நரக தண்டனையில்) விட்டுவிடுவோம். இன்னும், நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றின் காரணமாக நிரந்தரமான தண்டனையை சுவையுங்கள்! (அல்குர்ஆன் 32 : 14)

وَقِيلَ الْيَوْمَ نَنْسَاكُمْ كَمَا نَسِيتُمْ لِقَاءَ يَوْمِكُمْ هٰذَا وَمَأْوَاكُمُ النَّارُ وَمَا لَكُمْ مِنْ نَاصِرِينَ۝

இன்னும், (அவர்களை நோக்கி) கூறப்படும்: “இன்று நாங்கள் உங்களை (தண்டனையில்) விட்டுவிடுவோம், நீங்கள் உங்களது இன்றைய தினத்தின் சந்திப்பை (மறந்து அதற்கு அமல் செய்வதை) நீங்கள் விட்டுவிட்டது போன்று. உங்கள் ஒதுங்குமிடம் நரகம்தான். உதவியாளர்கள் யாரும் உங்களுக்கு இல்லை.” (அல்குர்ஆன் 45 : 34)

இப்படியாக அல்லாஹ்வின் எச்சரிக்கை அல்குர்ஆனில் ஏராளம் உள்ளன.

உண்மையில் மறுமையை நினைத்து வாழ்பவர்தான் முஃமினாக இருக்க முடியும்!

மறுமைக்காக வாழ்பவர்தான் உண்மையான முஃமினாக இருக்க முடியும்!

உலக செல்வங்களை சேகரிப்பதில் இருக்கிற கவனத்தை விட மறுமைக்கான நன்மைகளை சேகரிப்பதில் அதிக கவனமுள்ளவரே உண்மையான முஃமினாக இருக்க முடியும்!

அழிந்து போகக்கூடிய வாழ்க்கையில் சுகமான வாழ்வை தேடுபவரை விட அழியாத நிரந்தரமான மறுமை வாழ்க்கையில் நிலையான சுகத்தைப் பெற ஆசைப்பட்டு, அதற்காக இடைவிடாது, சோர்வுராது, நிரந்தரமாக அமல் செய்பவரே உண்மையான முஃமினாக இருக்க முடியும்!

வறுமை, நோய், இன்பம், துன்பம், வசதி, நெருக்கடி, நிம்மதி, பயம் என எல்லாக் காலத்திலும் மறுமைக்கான அமல்களில் கவனம் குறைந்து விடாமல், அல்லாஹ்வை நோக்கி முன்னேறிக் கொண்டே இருப்பவர்தான் உண்மையான முஃமின்.

அத்தகைய முஃமின் எப்படி ஒரு நாள் தொழுதுவிட்டு இன்னொரு நாள் தொழாமல் இருப்பார். அல்லது சில காலம் ஒரு நல்லமலை செய்துவிட்டு பிறகு அதை விட்டுவிடுவார். கடமைகளை விடுவதற்கு என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை. உபரியான வணக்க வழிபாடுகளை பொருத்தவரை அவற்றை அதிகப்படுத்தும்போதும் அவற்றை தொடர்ந்து செய்யும்போதும் அடியான் அல்லாஹ்விற்கு மிக நெருக்கமாக ஆகிவிடுகிறான்.

அல்லாஹ் கூறுவதாக நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

وَمَا يَزَالُ عَبْدِي يَتَقَرَّبُ إِلَيَّ بِالنَّوَافِلِ حَتَّىٰ أُحِبَّهُ

எனது அடியான் உபரியான வழிபாடுகள் மூலம் என் பக்கம் நெருக்கமாகி கொண்டே இருப்பான், இறுதியாக நான் அவன் மீது அன்பு வைத்து விடுவேன்.[45]

மேலும், நபி ﷺ அவர்கள் நாம் செய்கிற அமல்களை அவை குறைவாக இருந்தாலும் அவற்றை தொடர்ச்சியாக செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்:

أَحَبُّ الْأَعْمَالِ إِلَى اللهِ أَدْوَمُهَا وَ إِنْ قَلَّ

அமல்களில் அல்லாஹ்விற்கு மிகப் பிரியமானது அவற்றில் தொடர்ச்சியாக இருக்கக்கூடியதாகும், அது குறைவாக இருந்தாலும் சரி.[46]

அல்லாஹ்வே! எங்களை மறதியாளர்களில் ஆக்கிவிடாதே! அமல்களில் சடைவடைகிற துர்பாக்கியவான்களில் ஆக்கிவிடாதே! நன்மைகளை சேகரிப்பதில் சோர்வுறக்கூடிய சோம்பேறிகளில் எங்களை ஆக்கிவிடாதே! உனக்கு பிரியமான, கடமையான, உபரியான நல்லமல்களை தொடர்ச்சியாக, நிலையாக, நிரந்தரமாக எங்கள் மரணம் வரை செய்வதற்கு எங்களுக்கு அருள் புரிவாயாக! ஆமீன்!

● ● ●

45. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6502.
46. அறிவிப்பாளர் ஆயிஷா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6465.

## இங்கு தற்காலிக தங்குதல்தான்! நிரந்தரம் இல்லை!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا هَارُونُ بْنُ عَبْدِ اللهِ حَدَّثَنَا سَيَّارٌ أَنْبَأَنَا جَعْفَرٌ حَدَّثَنَا هِشَامٌ قَالَ كَانَ الْحَسَنُ إِذَا أَصْبَحَ وَإِذَا أَمْسَى قَالَ لِأَهْلِهِ ثَلَاثَ مَرَّاتٍ يَا أَهْلَاهُ الثُّوِيُّ فِيكُمْ قَلِيلٌ

இமாம் ஹசன் பஸரி ﷺ அவர்கள் காலையிலும் மாலையிலும் தமது குடும்பத்தாரை நோக்கி மூன்று முறை இப்படி கூறுவார்கள்: உங்களில் நிலையான குடியிருப்பாளர் மிகக் குறைவுதான்.

**கருத்து:** இந்த உலகமும் அதில் உள்ள தங்குமிடங்களும் இல்லங்களும் உலகம் அழிகிற நாள் வரை நீடித்து இருக்கும். ஆனால், அவற்றில் வசிப்பவர்களாகிய நாம் அதில் நிலையாக குடியிருக்க முடியுமா என்றால் முடியாது. ஓர் இல்லத்திலிருந்து இன்னொரு இல்லத்திற்கு மாறுவோம். இறுதியாக நமது இல்லம் மண்ணறை இல்லமாக ஆகிவிடும். ஆம், இந்த உலகத்தில் எல்லாம் தற்காலிக குடியிருப்பாளர்களே! யாரும் நிலையானவர்கள் இல்லை.

**விளக்கம்:** அல்லாஹ் இமாம் ஹஸனுக்கு ﷺ அருள் புரியட்டும்! நம்பிக்கை கொண்டு நம்மை முந்திவிட்ட எல்லா சான்றோருக்கும் அவன் அருள் புரியட்டும்!

இந்த உலகம் யாருக்கும் நிரந்தரமல்ல. நிரந்தரம் இந்த உலகத்தில் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. மரணம் நம்மை சுற்றி வட்டமிட்டுக் கொண்டே இருக்கிறது. நாம் எங்கு சென்றாலும் எப்போது சென்றாலும் எவ்வளவு தூரம் சென்றாலும் எவ்வளவு உயரம் சென்றாலும் மரணத்தின் வாய்க்குள்தான் நாம் இருக்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம்.

அல்லாஹ் சொல்வதை கேளுங்கள்!

أَيْنَمَا تَكُونُوا يُدْرِكْكُمُ الْمَوْتُ وَلَوْ كُنْتُمْ فِي بُرُوجٍ مُشَيَّدَةٍ○

நீங்கள் எங்கிருந்தாலும் மரணம் உங்களை அடையும், பலமான கோபுரங்களில் நீங்கள் இருந்தாலும் சரியே! (அல்குர்ஆன் 4 : 78)

இன்னும், அல்லாஹ் எச்சரிக்கிறான்:

قُلْ إِنَّ الْمَوْتَ الَّذِي تَفِرُّونَ مِنْهُ فَإِنَّهُ مُلَاقِيكُمْ○

(நபியே!) கூறுவீராக! "நிச்சயமாக நீங்கள் அதிலிருந்து விரண்டு ஓடுகின்ற அந்த மரணம் உறுதியாக அது உங்களை சந்திக்கும்." (அல்குர்ஆன் 62 : 8)

நம்மை படைத்த இறைவன் நம்மீது கொண்டுள்ள அக்கறையினால் நமக்கு மரணத்தைக் குறித்து இப்படி எச்சரிக்கிறான்:

كُلُّ نَفْسٍ ذَائِقَةُ الْمَوْتِ○

ஒவ்வோர் ஆன்மாவும் மரணத்தை சுவைக்கக் கூடியதே. (அல்குர்ஆன் 3 : 185)

ஆம், அன்பானவர்களே! இந்த உலகத்தில் நாம் தற்காலிகமானவர்களே! இந்த உலகம் நமக்கு தற்காலிகமானதே! யாரும் நிரந்தரமானவர்கள் இல்லை. எதுவும் நிரந்தரமானவை இல்லை. இந்த உலகமும் இதில் உள்ள எல்லாமும் நீங்கி விடக்கூடிய நிழல்களே! மறைந்துவிடக் கூடிய வெளிச்சமே!

ஒருமுறை, போருக்கு நீங்கள் புறப்பட வேண்டும் என்று இறைக் கட்டளை இறங்கிய பின்னர் சில தோழர்கள் தயங்கினார்கள். அவர்களை எச்சரித்து அல்லாஹ் இப்படி வசனத்தை இறக்கினான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا مَا لَكُمْ إِذَا قِيلَ لَكُمُ انْفِرُوا فِي سَبِيلِ اللهِ اثَّاقَلْتُمْ إِلَى الْأَرْضِ أَرَضِيتُمْ بِالْحَيَاةِ الدُّنْيَا مِنَ الْآخِرَةِ فَمَا مَتَاعُ الْحَيَاةِ الدُّنْيَا فِي الْآخِرَةِ إِلَّا قَلِيلٌ○

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வின் பாதையில் (போருக்கு) புறப்படுங்கள் என்று உங்களுக்குக் கூறப்பட்டால் உங்களுக்கு என்ன ஆனது? உலகத்தின்

பக்கம் சாய்ந்து விட்டீர்கள்! மறுமையை பார்க்கிலும் உலக வாழ்க்கையைக் கொண்டு திருப்தி அடைந்தீர்களா? உலக வாழ்க்கையின் இன்பம் மறுமையில் அற்பமானதாகவே தவிர இல்லை! (அல்குர்ஆன் 9 : 38)

அவர்களுக்கே இந்த எச்சரிக்கை என்றால் நம்மை போன்ற வீணர்களுக்கு எத்தகைய எச்சரிக்கை இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்!

இதுபோன்று இன்னொரு முறை நிகழ்ந்தது.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أَلَمْ تَرَ إِلَى الَّذِينَ قِيلَ لَهُمْ كُفُّوا أَيْدِيَكُمْ وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ فَلَمَّا كُتِبَ عَلَيْهِمُ الْقِتَالُ إِذَا فَرِيقٌ مِنْهُمْ يَخْشَوْنَ النَّاسَ كَخَشْيَةِ اللَّهِ أَوْ أَشَدَّ خَشْيَةً وَقَالُوا رَبَّنَا لِمَ كَتَبْتَ عَلَيْنَا الْقِتَالَ لَوْلَا أَخَّرْتَنَا إِلَىٰ أَجَلٍ قَرِيبٍ قُلْ مَتَاعُ الدُّنْيَا قَلِيلٌ وَالْآخِرَةُ خَيْرٌ لِمَنِ اتَّقَىٰ وَلَا تُظْلَمُونَ فَتِيلًا ○

“உங்கள் கைகளை (போரிடுவதிலிருந்து) தடுத்துக் கொள்ளுங்கள், தொழுகையை நிலை நிறுத்துங்கள், ஸகாத்தை கொடுங்கள்” என்று எவர்களுக்கு கூறப்பட்டதோ அவர்களை நீர் பார்க்கவில்லையா? ஆக, போர் அவர்கள் மீது விதிக்கப்பட்டபோது, அப்போது அவர்களில் ஒரு பிரிவினர் அல்லாஹ்வை பயப்படுவதைப்போல் அல்லது பயத்தால் (அதைவிட) மிகக் கடுமையாக மக்களைப் பயப்படுகிறார்கள். “எங்கள் இறைவா! ஏன் எங்கள் மீது போரை விதித்தாய்? இன்னும் சமீபமான ஒரு தவணை வரை எங்களை நீ பிற்படுத்தி இருக்க வேண்டாமா?” என்று கூறினார்கள். (நபியே!) கூறுவீராக: “உலகத்தின் இன்பம் அற்பமானதாகும்! அல்லாஹ்வை அஞ்சியவருக்கு மறுமை மிக மேலானதாகும். (மறுமையில் நீங்கள்) ஒரு நூல் அளவு கூட அநீதி இழைக்கப்படமாட்டீர்கள்.” (அல்குர்ஆன் 4 : 77)

மேற்குறிப்பிட்ட இறைவசனங்களையும் அவை நமக்கு தருகிற பாடங்களையும் இமாம் ஹஸன் பஸரி ﵀ அவர்களின் இந்த வழமையோடு ஒப்பிட்டுப் பாருங்கள்!

ஆம், அந்த நல்லோர் இவ்வுலகத்தில் அப்படித்தான் வாழ்ந்தார்கள். நாம் நினைத்துக் கொண்டிருக்கிற உலக இன்பங்களை அவர்கள் மறந்தார்கள்.

நாம் மறந்துவிட்ட மரணத்தையும் மறுமையையும் அவர்கள் சதா நினைவு கூர்ந்துகொண்டே இருந்தார்கள். நமக்கு உலகத்தின் வறுமையும், பசியும் பட்டினியும், பொருளாதார நெருக்கடியும், நோய் நொடிகளும் கவலையாக பயமாக இருக்கின்றன. ஆனால், அந்த சான்றோருக்கு கப்ருடைய வேதனை, அங்குள்ள நெருக்கடி, அதன் தனிமை, அதன் புழு பூச்சிகள், அதன் வெருட்சி கவலையாகவும் பயமாகவும் இருந்தது.

இந்த உலகத்தின் சிரமங்கள் நமக்கு கவலை தருகிற பிரச்சனை என்றால் அவர்களுக்கு மறுமையின் சிரமங்கள் கவலை தரக்கூடிய பிரச்சனையாக இருந்தது.

தற்காலிகமான நிரந்தமற்ற இந்த உலக வாழ்க்கைக்கு நாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்றால் அவர்கள் நிரந்தரமான மறுமை வாழ்க்கைக்காக கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

நமக்கு அற்ப கால உலக இன்பங்கள் மீது மோகமும் பற்றும் பேராசையும் இருக்கிறது என்றால் அவர்களோ மறுமையின் சொர்க்க இன்பங்கள் மீது காதல் கொண்டிருந்தார்கள்.

நமக்கு சொற்ப கால உலகத்தின் நோய் நொடிகளும், வறுமையும், நெருக்கடியான வாழ்க்கையும் கவலை அளிக்கிறது என்றால், அவர்களுக்கு மறுமையின் விசாரணையும், நரகத்தின் நெருப்பும், சங்கிலிகளும், ஸக்கூம் மரமும், கஸ்ஸாக் குடிபானமும், கொடிய விஷக் காற்றும், மேலிருந்து ஊற்றப்படும் கடுமையான கொதி நீரும், நரகத்தின் தாகமும், பசியும், மலக்குகளின் சம்மட்டி அடியும் இன்னும் வகை வகையான தண்டனைகளும் கவலை அளித்துக் கொண்டிருந்தன.

பாழாய்ப்போகக்கூடிய மாட மாளிகைகள், பழையதாக ஆகி குப்பையில் வீசப்படும் கண்ணை கவரும் ஆடைகள், இன்று ஒருத்தியின் மேனி, நாளை இன்னொருத்தியின் மேனி என்று மாட்டப்பட்டு ஜொலிக்கிற நகை ஆபரணங்கள், மலமாய் மாறுகிற மிக ருசியான உணவுகள் நமக்கு முக்கியம் என்றால், அந்த சான்றோருக்கோ சொர்க்கத்தின் கோபுரங்களும், பட்டாடைகளும், ஆபரணங்களும், சுத்தமான உணவுகளும் முக்கியமாகவும் ஆசையாகவும் இருந்தன.

ஆம், அல்லாஹ் இப்படி சொல்கிறான்:

إِنَّ سَعْيَكُمْ لَشَتَّىٰ ۝

(மனிதர்களே!) நிச்சயமாக உங்கள் முயற்சி (-உழைப்பு) பலதரப்பட்டதாக இருக்கிறது. (அல்குர்ஆன் 92 : 4)

قُلْ كُلٌّ يَعْمَلُ عَلَىٰ شَاكِلَتِهِ۝

(நபியே!) கூறுவீராக! ஒவ்வொருவரும் தனது பாதையில் (தனது போக்கில்) செயல்படுகிறார். (அல்குர்ஆன் 17 : 84)

அவர்களுக்கு இருந்த கவலை வேறு, நமக்கு இருக்கிற கவலை வேறு!

அவர்களுக்கு இருந்த பிரச்சனை வேறு, நமக்கு இருக்கிற பிரச்சனை வேறு!

அவர்கள் வாழ்ந்த விதம் வேறு, நாம் வாழ்கிற விதம் வேறு!

அவர்கள் முயற்சி எடுத்ததும் சிரமப்பட்டதும் ஒன்றுக்காக, நாம் முயற்சி எடுப்பதும் சிரமப்படுவதும் வேறு ஒன்றுக்காக!

அவர்கள் வாழ்க்கையை பயன்படுத்தியது ஒரு நோக்கத்திற்காக, நாம் வாழ்க்கையை செலவழித்துக் கொண்டிருப்பது வேறு நோக்கத்திற்காக!

அவர்களது ஏக்கம் வேறு, நமது ஏக்கம் வேறு! அவர்களது ஆசை வேறு, நமது ஆசை வேறு! அவர்களது பயம் வேறு, நமது பயம் வேறு!

மொத்தத்தில் அவர்கள் வேறு, நாம் வேறு! நாம் என்று அவர்களாக மாறுவோமோ அன்றுதான் நமக்கு வெற்றியும் நற்பாக்கியமும். அல்லாஹ் கூறுகிறான்:

فَإِنْ آمَنُوا بِمِثْلِ مَا آمَنْتُمْ بِهِ فَقَدِ اهْتَدَوْا وَإِنْ تَوَلَّوْا فَإِنَّمَا هُمْ فِي شِقَاقٍ۝

ஆக, (நம்பிக்கையாளர்களே!) நீங்கள் எப்படி நம்பிக்கை கொண்டீர்களோ அது போன்றே அவர்கள் நம்பிக்கை கொண்டால் திட்டமாக அவர்கள் நேர்வழி பெறுவார்கள். (அல்குர்ஆன் 2 : 137)

இங்கே இன்னொரு முக்கியமான செய்தியை கவனிக்க வேண்டும்.

அதாவது, நாம் அல்லாஹ்வை மறுமையைப் பயப்படுவதோடு, மார்க்கத்தை பின்பற்றி நடப்பதோடு, நமது குடும்பத்தையும் நாம் அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும். அவர்களுக்கும் மறுமையை நினைவூட்ட வேண்டும். சொர்க்கத்தை ஆசையூட்ட வேண்டும். நரகத்தின் மீது பயத்தை ஏற்படுத்த வேண்டும்.

இதைத்தான் இமாம் ஹசன் பஸரி ﷬ அவர்கள் காலையிலும் மாலையிலும் செய்து வந்தார்கள். தமது குடும்பத்தாருக்கு உலகத்தின் நிலையற்ற தன்மையை நினைவூட்டினார்கள். அதன் மூலம் உலக ஆசை குறையும்; உலகத்தின் தேவைகளை சுருக்கிக்கொண்டு மறுமைக்காக அமலில் அதிகம் கவனம் செலுத்த நேரிடும். பாவங்களை விட்டு தவ்பா செய்ய நேரிடும். நன்மைகளை செய்வதில் உள்ள அலட்சியம் போகும். இப்படியாக தமது குடும்பத்தாருக்கு நாம் நினைவூட்டல் செய்வதில் ஏராளமான நற்பலன்கள் உள்ளன.

அல்லாஹ் நமக்கு இந்த கடமையை சுட்டிக் காட்டுகிறான். நபி ﷺ அவர்களுக்கு நபித்துவத்தின் தொடக்கத்தில் இது குறித்து அல்லாஹ் உபதேசம் செய்தான்.

وَأَنْذِرْ عَشِيرَتَكَ الْأَقْرَبِينَ ○

இன்னும், உமது நெருங்கிய உறவினர்களை எச்சரிப்பீராக!

(அல்குர்ஆன் 26 : 214)

وَأْمُرْ أَهْلَكَ بِالصَّلَاةِ وَاصْطَبِرْ عَلَيْهَا ○

இன்னும், உமது குடும்பத்திற்கு தொழுகையை ஏவுவீராக! இன்னும், அதன்மீது நீர் உறுதியாக இருப்பீராக! (அல்குர்ஆன் 20 : 132)

இதே கட்டளையை முஃமின்களாகிய நமக்கு அல்லாஹ் வலியுறுத்துகிறான்:

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلَائِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَا يَعْصُونَ اللهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ ○

நம்பிக்கையாளர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தார்களையும் நரகத்தை விட்டு பாதுகாத்துக் கொள்ளுங்கள்! அதன் எரிபொருள் மக்களும் கற்களும் ஆவார்கள். கடுமையானவர்களான மிகவும் வலிமைமிக்கவர்களான வானவர்கள் அவற்றின் மீது இருப்பார்கள். அல்லாஹ்விற்கு அவன் அவர்களுக்கு ஏவியதில் அவர்கள் மாறுசெய்ய மாட்டார்கள். அவர்கள் எதை ஏவப்பட்டார்களோ அதையே செய்வார்கள். (அல்குர்ஆன் 66 : 6)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும் நமக்கு இந்த பொறுப்பை நினைவூட்டி

அது நமது கடமை என்றும் அது குறித்து நமக்கு மறுமையில் விசாரணை உண்டு என்றும் கூறினார்கள்.

أَنَّهُ سَمِعَ رَسولَ اللهِ ﷺ يقولُ: كُلُّكُمْ رَاعٍ وَمَسْؤُولٌ عن رَعِيَّتِهِ فَالإِمَامُ رَاعٍ وهو مَسْؤُولٌ عن رَعِيَّتِهِ والرَّجُلُ في أَهْلِهِ رَاعٍ وهو مَسْؤُولٌ عن رَعِيَّتِهِ والمَرْأَةُ في بَيْتِ زَوْجِهَا رَاعِيَةٌ وهي مَسْؤُولَةٌ عن رَعِيَّتِهَا والخَادِمُ في مَالِ سَيِّدِهِ رَاعٍ وهو مَسْؤُولٌ عن رَعِيَّتِهِ. قالَ: فَسَمِعْتُ هَؤُلَاءِ مِن رَسولِ اللهِ ﷺ وأَحْسِبُ النَّبِيَّ ﷺ قالَ: والرَّجُلُ في مَالِ أَبِيهِ رَاعٍ وهو مَسْؤُولٌ عن رَعِيَّتِهِ فَكُلُّكُمْ رَاعٍ وكُلُّكُمْ مَسْؤُولٌ عن رَعِيَّتِهِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளரே. தமது பொறுப்புக்கு உட்பட்டவை பற்றி அவர் விசாரிக்கப்படுவார். ஆட்சித் தலைவரும் பொறுப்பாளரே. தம் குடிமக்கள் பற்றி அவர் விசாரிக்கப்படுவார். ஆண்மகன் (குடும்பத் தலைவன்) தன் மனைவி மக்களின் பொறுப்பாளன் ஆவான். தனது பொறுப்புக்கு உட்பட்டவர்கள் பற்றி அவன் விசாரிக்கப்படுவான். பெண் (மனைவி), தன் கணவனின் வீட்டிற்குப் பொறுப்பாளியாவாள். தன் பொறுப்புக்கு உட்பட்டவை குறித்து அவள் விசாரிக்கப்படுவாள். பணியாள், தன் உரிமையாளனின் உடமைகளுக்குப் பொறுப்பாளியாவான். அவனும் தனது பொறுப்புக்கு உட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவான்.

“இவையனைத்தையும் நபி ﷺ அவர்களிடமிருந்து நான் கேட்டேன்” என்று கூறிவிட்டு இப்னு உமர் ؓ அவர்கள் மேலும் கூறினார்கள்:

நபி ﷺ அவர்கள், “மனிதன் தன் தந்தையின் செல்வத்திற்குப் பொறுப்பாளன் ஆவான். அது குறித்தும் அவன் விசாரிக்கப்படுவான். ஆகவே, நீங்கள் ஒவ்வொருவரும் (ஏதேனும் ஒரு விஷயத்திற்குப்) பொறுப்பாளர்களே. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பொறுப்புக்கு உட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள்” என்றும் கூறியதாக நான் நினைக்கிறேன்.[47]

ஆம், இன்று நாம் நமது குடும்பத்தை மறந்து இருக்கிறோம் என்பது உண்மை.

47. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2409.

சிறு வயதிலிருந்து அவர்களுக்கு அழகிய உபதேசங்களையும் குர்ஆன், ஸுன்னாவின் அறிவுரைகளையும் நாம் கொடுத்து பழக்க வேண்டும். அவர்களின் சிந்தனைகளில் மறுமையை புகுத்த வேண்டும். அவர்களின் உள்ளங்களில் சொர்க்கத்தின் ஆசையையும் நரகத்தின் பயத்தையும் வளர்க்க வேண்டும். அவர்களின் இதயத்தில் அல்லாஹ்வின் மீதும் நபி ﷺ அவர்கள் மீதும் அன்பை வளர்க்க வேண்டும்.

உலகத்தின் போலியான முகத்தை அவர்களுக்கு விளக்கிக் காட்டிக்கொண்டே இருக்க வேண்டும். மறுமையை அது கண்ணுக்கு முன் இருப்பதை போன்று நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். மரணத்தைப் பற்றிய பேச்சை அவர்களுடன் பேசிக்கொண்டே இருக்க வேண்டும். இதன் மூலம் அவர்களின் உள்ளங்கள் மென்மையாக இருக்கும். அவர்களது உள்ளங்கள் இறுகிவிடுவதிலிருந்து இந்த உபதேசங்கள் அவர்களைப் பாதுகாக்கும்.

அல்லாஹ்வே! நாங்கள் எங்கள் மறதிக்காக, அலட்சியத்திற்காக, கவனக் குறைவுக்காக உன்னிடம் பாவமன்னிப்புத் தேடுகிறோம். நீ எங்களையும் எங்கள் குடும்பத்தையும் எங்கள் பிள்ளைகளையும் சீர்திருத்து, எங்களை மறுமையின் மக்களில், சொர்க்கத்திற்குரியவர்களில் ஆக்குவாயாக! ஆமீன்!

• • •

சான்றோர் பாடசாலை அமர்வு 38, கூற்று 1550

## நம்பிக்கையாளரும் நயவஞ்சகரும்

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا هَارُونُ بْنُ مَعْرُوفٍ حَدَّثَنَا ضَمْرَةُ عَنِ ابْنِ شَوْذَبٍ قَال قَالَ الْـحَسَنُ لَا تَلْقَى الْمُؤْمِنَ إِلَّا شَاحِبًا وَلَا تَلْقَى الْمُنَافِقَ إِلَّا وَابِصًا

இமாம் ஹசன் ﵀ கூறுகிறார்கள்: நம்பிக்கையாளரை மெலிந்தவராகவும் நிறம் வாடியவராகவுமே தவிர நீ சந்திக்க மாட்டாய். நயவஞ்சகனை ஜொலிப்பவனாகவே தவிர நீ சந்திக்க மாட்டாய்.

**கருத்து:** நம்பிக்கையாளர் தன்னை இறைவழிபாட்டிலும் நல்லறங்களிலும் முழுமையாக ஈடுபடுத்தி இருப்பதால் அவரால் தன்னை மிடுக்காக வைத்து கொள்வதற்கும் எப்போதும் ஜொலிக்கும்படி காட்சி தருவதற்கும் நேரம் இருக்காது. இரண்டாவது, மக்களிடம் அவருக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லாததால் அவர் சாதாரணமாக இருப்பார். நயவஞ்சகன் பகட்டுக்காகவே எல்லாவற்றையும் செய்பவனாக இருப்பான். மறுமை கவலை அவனுக்கு இருக்காது. பெரிதாக வணக்க வழிபாட்டில் அவனுக்கு ஈடுபாடு இருக்காது. அவன் பிறரிடம் பாராட்டையும், பிறர் தன்னை புகழ்வதையும் விரும்புவான். பிறர் தன்னை மதிப்பதை எதிர்பார்த்தவனாக அதற்கு ஆசைப்பட்டவனாக இருப்பான். ஆகையால், அவன் எப்போதும் தனது ஆடை, அழகு, ஆபரணம், முகத் தோற்றம் ஆகியவற்றில் கவனம் செலுத்தி மிக மிடுக்காக இருப்பான்.

**விளக்கம்:** இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களின் கூற்றை சிலர் தவறாக புரிந்து கொண்டு விதண்டாவாதம் செய்யலாம். இஸ்லாமின் கருத்துகளை மேலோட்டமாக விளங்கி வைத்திருப்பவர்கள் இந்த கூற்றை மறுத்துப் பேசலாம். ஆம், நபித்தோழர்களிடம் குர்ஆனையும் ஸுன்னாவையும்

கற்ற ஓர் அறிஞர் ஒன்றை கூறுகிறார் என்றால் எந்த அர்த்தத்தில், எந்த நோக்கத்தில், எந்த அடிப்படையில் கூறி இருப்பார் என்று சிந்திக்க வேண்டும். மார்க்க ஆதாரங்களில் விசாலமான பார்வை உடையவர்தான் இந்த கூற்றை சரியாக புரிய முடியும்.

நாம் ஓரளவு இதை புரிவதற்கு முயற்சி செய்வோம். அல்லாஹ் நமக்கு புரிய வைப்பானாக! ஆமீன்.

நம்பிக்கையாளர் ஷாஹிப் ஆக இருப்பார்.

நயவஞ்சகன் வாபிஸ் ஆக இருப்பான்.

ஷாஹிப் என்றால் உடல் மெலிந்தவர், உடல் இளைத்தவர், முகம் வாடியவர் என்று பொருள்.

வாபிஸ் என்றால் ஜொலிப்பவர், மிடுக்காக இருப்பவர், அலங்காரமாக இருப்பவர் என்று பொருள்.

முஃமின், உடல் இளைத்தவராக மெலிந்தவராக இருப்பார் என்றால் அது ஏன்? ஆம், அவர் வயிறு நிரம்ப உண்ண மாட்டார். அளவுக்கு அதிகமாக உணவு எடுக்க மாட்டார். பசித்தால் மட்டுமே உணவின் பக்கம் செல்வார். பசி இருக்கும்போதே, பாதி வயிறு நிறைந்தவுடனேயே அவர் உணவிலிருந்து எழுந்து விடுவார். அதிகப்படியாக மூன்றில் ஒரு பகுதி உண்பார், ஒரு பகுதி குடிப்பார், ஒரு பகுதி சுவாசிக்க வைத்துக் கொள்வார்.

மிகவும் ருசியான உணவுகளை தேடி அலைய மாட்டார். விலை உயர்ந்த உணவுகளுக்கு ஆசைப்பட மாட்டார். தனக்கு கிடைத்த சிறிய அளவு உணவையே இன்னொருவருடன் பகிர்ந்து சாப்பிட ஆசைப்படுவார். ஒரு நாள் சாப்பிட்டால் மறு நாள் நோன்பிருப்பார். இல்லை என்றால் வாரத்தில் இரண்டு நாட்களும் மாதத்தில் மூன்று நாட்களும் நோன்பு வைப்பார்.

இதுபோக அவ்வப்போது வருகிற உபரியான நோன்புகளையும் நோற்பார். ரமழான் மாதத்தை எதிர்பார்த்திருந்து நபி ﷺ அவர்கள் காட்டித்தந்த முறையில் ஸஹரையும் இஃப்தாரையும் அமைத்துக் கொண்டு ரமழான் நோன்புகளை நோற்பார். பிறகு ஆறு நோன்புகளை தொடர்வார்.

இப்படியாக அவர் தனது வாழ்க்கையை அமைத்திருக்கும்போது அவர் எப்படி உடல் கொழுத்தவராக, வயிறு பெருத்தவராக, இடை அதிகரித்தவராக இருப்பார்.

இங்கே ஒரு நிகழ்வை நாம் நினைவு கூர வேண்டும்.

كَانَ ابنُ عُمَرَ ﵁ لا يَأْكُلُ حتَّىٰ يُؤْتَىٰ بِمِسْكِينٍ يَأْكُلُ معهُ فأدْخَلْتُ رَجُلًا يَأْكُلُ معهُ فأكَلَ كَثِيرًا فَقالَ: يا نَافِعُ لا تُدْخِلْ هذا عَلَيَّ سَمِعْتُ النَّبِيَّ صلَّى اللهُ عليه وسلَّم يقولُ: المُؤْمِنُ يَأْكُلُ فِي مِعًى واحِدٍ والكَافِرُ يَأْكُلُ في سَبْعَةِ أمْعَاءٍ

இப்னு உமர் ﵁ அவர்கள் தன்னுடன் ஒரு ஏழை இல்லாமல் உணவருந்த மாட்டார்கள். ஏழை ஒருவர் வந்தவுடன் அவரோடு உணவருந்துவார்கள். அவருடன் உணவருந்த ஒருவரை நான் உள்ளே கொண்டு வந்தேன். ஆக, அவர் அதிகம் சாப்பிட்டார். ஆக, இப்னு உமர் ﵁ கூறினார், நாஃபியே! இவரை இனி என்னிடம் கொண்டு வராதே! நபி ﷺ அவர்கள் கூற நான் செவியுற்றேன்: முஃமின் ஒரு குடலிலும் காஃபிர் ஏழு குடல்களிலும் உணவருந்துவார்.[48]

இன்று நாம் உணவு சாப்பிடுவதை இப்னு உமர் ﵁ பார்த்தால் நம்மை எப்படி விரட்டி அடித்திருப்பார்களோ! நாம் அதிகமாகவே உண்டு பழகிவிட்டோம், அடிக்கடி உண்டு பழகிவிட்டோம், அளவுக்கு அதிகமாக தின்று பழகி விட்டோம். எவ்வளவு சாப்பிட்டாலும் இன்னும் திங்க முடியவில்லையே என்ற கவலையோடுதான் உணவு விரிப்பிலிருந்து எழுகிறோம். மிச்ச மீதியை அடுத்த வேளைக்காக சேமித்தும் வைத்துக் கொள்கிறோம். சுத்த தின்னிகளாக நாம் இருக்கிறோம் என்று கூறினால் அது உண்மைதான்.

நாம் குறைவாக தின்ன நினைத்தாலும் நம்மைச் சுற்றி உள்ளவர்கள் உங்களுக்கு என்ன நோயா? உடல் நலம் சரி இல்லையா? நன்றாக சாப்பிடுங்கள், இப்படி சாப்பிட்டால் உடல் என்னவாகும்? என்று நம்மை இழித்துக் கூறி நமது வயிறை டயராக ஆக்கிவிடுகின்றனர். இப்படியே அளவுக்கு அதிகம் தின்று தின்று நமது குடல்கள் பெருத்து விடுகின்றன. அதிக உணவை எதிர்பார்க்கின்றன. அல்லாஹ்விடமே நமது நிலையை முறையிட வேண்டும். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! ஆமீன்.

48. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 5393.

مَا مَلَأَ آدَمِيٌّ وِعَاءً شَرًّا مِنْ بَطْنٍ بِـحَسْبِ ابْنِ آدَمَ أُكُلَاتٌ يُقِمْنَ صُلْبَهُ فَإِنْ كَانَ لَا مَـحَالَةَ فَثُلُثٌ لِطَعَامِهِ وَثُلُثٌ لِشَرَابِهِ وَثُلُثٌ لِنَفَسِهِ

மனிதன், வயிறை விட கெட்ட பாத்திரத்தை நிரப்பவில்லை. தனது முதுகை நிமிர்த்துகிற அளவுக்கு சில கவளங்கள் ஆதமின் மகனுக்கு போதுமானதாகும். ஆக, மிக அவசியமாக இருந்தால் அவனுடைய உணவுக்கு மூன்றில் ஒன்றும் அவனது குடிபானத்திற்கு மூன்றில் ஒன்றும் அவனது சுவாசத்திற்கு மூன்றில் ஒன்றும் இருக்கட்டும்.[49]

இந்த ஹதீஸ், நமது மண்டைக்கு புரியுமா? நமக்கு இந்த ஹதீஸ்கள் எல்லாம் நினைவுக்கு வருமா? நினைவுக்கு வந்தாலும் நாம் இன்னொரு ஆதாரம் வைத்திருப்போம்.

وَكُلُوا وَاشْرَبُوا وَلَا تُسْرِفُوا۟

உண்ணுங்கள்! பருகுங்கள்! வீண் விரயம் செய்யாதீர்கள்!

(அல்குர்ஆன் 7 : 31)

வீண் விரயம்தான் செய்யக் கூடாது, உணவுகளை வீணாக்கத்தான் கூடாது, எவ்வளவு வேண்டுமானாலும் நாம் உணவு உண்ணலாம். உணவுகளை தூக்கி கொட்டத்தான் கூடாது, அப்படி இப்படி என்று நாம் வியாக்கியானம் கூறுவோம், விளக்கம் பேசுவோம். அல்லாஹுல் முஸ்தஆன்!! (நம்மை சீர்திருத்த அல்லாஹ்விடமே உதவி கோரப்படுகிறது)

சரி இந்த ஆயத்தை நாம் இங்கு இழுத்துவிட்டதால் இந்த ஆயத்தின் உண்மையான விளக்கத்தை சொல்லித்தான் ஆக வேண்டும்.

عَنْ ابْنِ عَبَّاسٍ ﵄ قَالَ أَحَلَّ اللهُ الْأَكْلَ وَالشُّرْبَ مَا لَمْ يَكُنْ سَرَفًا أَوْ مَـخِيلَةً

உண்பதையும் குடிப்பதையும் அல்லாஹ் அனுமதித்திருக்கிறான். ஆனால், அது அளவு கடந்து அல்லது பெருமையாக இருக்கக்கூடாது என்று இப்னு

49. அறிவிப்பாளர்: அல்மிக்தாம் இப்னு மஃதீ கரிப் ﵁, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 2380, தரம்: ஸஹீஹ்.

அப்பாஸ் ﷺ அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள்.[50]

அல்லாஹ் இந்த வசனத்தில் மருத்துவம் அனைத்தையும் ஒருங்கிணைத்து விட்டான் என்று அலீ இப்னு ஹுஸைன் இப்னு வாகித் ﷺ கூறுவதாக அறிஞர் பகவி ﷺ பதிவு செய்துள்ளார்கள். அதாவது உண்ணுங்கள், பருகுங்கள்! (உண்பதிலும் குடிப்பதிலும்) அளவு கடக்காதீர்கள். அதாவது, அதிகம் உண்பதை தவிர்த்துவிட்டாலே பல நோய்களில் இருந்து நமக்கு நிவாரணம் கிடைத்துவிடும் என்று கூற வருகிறார்கள்.

இமாம் குர்துபி ﷺ அவர்களும் வலா துஸ்ரிஃபூ என்பதன் பொருள்;

وَلَا تُسْرِفُوا أَيْ فِي كَثْرَةِ الْأَكْلِ

உண்பதில் அதிகம் அளவு கடக்காதீர்கள்! என்று கூறுகிறார்கள்.

عَنْ ابْنِ عُمَرَ ﷺ قَالَ تَـجَشَّأَ رَجُلٌ عِنْدَ النَّبِيِّ ﷺ فَقَالَ كُفَّ عَنَّا جُشَاءَكَ فَإِنَّ أَكْثَرَهُمْ شِبَعًا فِي الدُّنْيَا أَطْوَلُهُمْ جُوعًا يَوْمَ الْقِيَامَةِ

இப்னு உமர் ﷺ கூறினார்கள்: ஓர் ஆடவர் நபி ﷺ அவர்களிடம் ஏப்பம் விட்டார். அவருக்கு நபியவர்கள் கூறினார்கள்: உமது ஏப்பத்தை நமக்கு முன் தடுத்துக் கொள்! ஏனெனில், மக்களில் உலகத்தில் அதிகம் வயிறு நிரம்ப உண்பவர் மறுமையில் அவர்களில் நீண்ட பசியுடையவராக இருப்பார்.[51]

இந்த ஹதீஸ்களை நாம் படிக்க வேண்டாமா? இதன் மூலம் நாம் படிப்பினை பெற வேண்டாமா? இந்த உலகத்தில் எப்போதும் வயிறு நிரம்ப சாப்பிட்டு புளித்த ஏப்பம் விடுபவர்களை நபி ﷺ அவர்கள் எப்படி எச்சரிக்கிறார்கள் என்று சிந்திக்க வேண்டாமா?

சாப்பிடுவது என்ன குற்றமா என்று நாம் கேள்வி கேட்போம். அதுதான் நமக்கு தெரியும்! சாப்பிடுவதிலிருந்து அல்லாஹ்வும் ரஸூலும் நம்மை தடுக்கவில்லை. அளவோடு சாப்பிடுங்கள் என்று சொல்கிறார்கள். எப்படி அறவே சாப்பிடாமல் இருந்தால் உடல் பலவீனமாகி வணக்க வழிபாடுகள் செய்ய முடியாமல் ஆகிவிடுமோ அப்படித்தான் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டாலும் வணக்க வழிபாடுகள் செய்ய முடியாது.

50. நூல்: தபரி.

51. அறிவிப்பாளர்: இப்னு உமர் ﷺ, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 2478.

அது மட்டுமல்ல, எப்போதும் அதிகமாக வயிறு புடைக்க உண்பதால் உள்ளத்தில் நஃப்ஸ் உடைய குணமும் மாறிவிடுகிறது. ஹராமான ஆசைகளுக்கு மனிதனை இழுக்கிறது. இது அவனை நரகத்தில் தள்ளுவதற்கு ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. அல்லாஹ் பாதுகாப்பானாக! ஆமீன்.

உமருல் ஃபாரூக் ؓ கூறுவதாக அறிவிக்கப்படுகிறது: நான் விரும்பி இருந்தால் உங்களில் நல்ல உணவுகளை உண்பவனாகவும் மிருதுவான ஆடைகளை அணியக்கூடியவனாகவும் இருந்திருப்பேன். என்றாலும் நான் எனது நல்லவைகளை (மறுமையில்) நிரந்தரமாக்கிக் கொள்கிறேன். அதாவது, இந்த உலகத்தில் சுகமாக வாழ்ந்துவிடுவதால் எனது நன்மைகளுக்கு கூலி மறுமையில் கிடைக்காமல் போகலாம் என்பதற்காக, எனது சுகமான வாழ்க்கை மறுமையில் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் அழகிய வழிகாட்டுதல் நமக்கு அப்படித்தான். உண்ணலாம், பருகலாம். ஆனால், அளவு கடக்கக் கூடாது. அதாவது, அதிகம் சாப்பிடுவதையும் உணவே கதி என்று அதன் மீது பேராசைக் கொண்டு திரிவதையும் நமக்கு அல்லாஹ் உடைய நபி விரும்பவில்லை.

قَالَ رَسُولُ اللهِ ﷺ كُلُوا وَتَصَدَّقُوا وَالْبَسُوا فِي غَيْرِ إِسْرَافٍ وَلَا مَخِيلَةٍ

நபியுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உண்ணுங்கள்! தர்மம் கொடுங்கள்! இன்னும் ஆடைகள் அணியுங்கள்! எல்லைக் கடக்காமல், பெருமை இல்லாமல்.[52]

عَنْ أَبِي أُمَامَةَ ؓ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ سَيَكُونُ رِجَالٌ مِنْ أُمَّتِي يَأْكُلُونَ أَلْوَانَ الطَّعَامِ وَيَشْرَبُونَ أَلْوَانَ الشَّرَابِ وَيَلْبِسُونَ أَلْوَانَ اللِّبَاسِ وَيَتَشَدَّقُونَ فِي الْكَلَامِ أُولَئِكَ شِرَارُ أُمَّتِي

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: எனது உம்மத்தில் சில ஆடவர்கள் வருவார்கள். அவர்கள் வகைவகையான உணவுகளை உண்பார்கள். வகைவகையான பானங்களை குடிப்பார்கள். வகைவகையான ஆடைகளை அணிவார்கள். பேசுவதில் சிரமம் எடுத்து பகட்டாக பேசுவார்கள்.

52. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் ؓ, நூல்: ஸஹீஹுன் நசாயி, எண்: 2558.

அவர்கள்தான் எனது உம்மத்தில் மிகக் கெட்டவர்கள்.[53]

وَقِيلَ مِنَ الْإِسْرَافِ الْأَكْلُ بَعْدَ الشَّبْعِ وَكُلُّ ذٰلِكَ مَحْظُورٌ وَقَالَ لُقْمَانُ لِابْنِهِ يَا بُنَيَّ لَا تَأْكُلْ شَبْعًا فَوْقَ شَبْعٍ فَإِنَّكَ أَنْ تَنْبُذَهُ لِلْكَلْبِ خَيْـرٌ مِنْ أَنْ تَأْكُلَهُ

வயிறு நிரம்பிய பின்னரும் உண்பது வீண் விரயத்தில் அடங்கும் என்று கூறப்படுகிறது. இது தடுக்கப்பட்டதாகும். லுக்மான் அவர்கள் தமது மகனுக்கு கூறுவார்கள்: மகனே! வயிறு நிரம்பியதற்கு மேல் இன்னும் வயிறு நிரம்ப சாப்பிடாதே! நிச்சயமாக நீ அந்த உணவை நாய்க்கு போடுவது நீ அதை சாப்பிடுவதை விட மிக சிறந்ததாகும்.[54]

அறிஞர் கஸ்ஸாலி ﵀ கூறுவதாக ஷைக் முனஜ்ஜித் எழுதுகிறார்:

உணவின் மீது பேராசைப்படுவதும் அதிக ஆசையோடு உண்பதும் இழிவான குணங்களின் தாய்களில் உள்ளதாகும். ஏனெனில், குடல்தான் ஆசைகளின் பிறப்பிடமாகும். அதிலிருந்துதான் மர்மஸ்தானத்தின் இச்சைகள் உருவாகின்றன. உணவு ஆசையும் திருமண ஆசையும் அதிமாகும்போது பொருளாசை உருவாகும். ஏனெனில் முந்திய இரண்டு ஆசைகளையும் பொருள் இல்லாமல் நிறைவேற்ற முடியாது. பொருளாசை வந்தவுடன் பதவி ஆசை வரும். பொருளாசையும் பதவி ஆசையும் எல்லா ஆபத்துகளுக்கும் அடிப்படையாகும்.

பெருமை, ஆணவம், பொறாமை, அநீதி இழைத்தல், எல்லை மீறுதல், போன்ற ஆபத்தான தீய குணங்கள் பொருளாசை, பதவியாசையினால் உருவாகின்றன. யார் இத்தகைய குணங்களை தனக்குள் கொண்டு வருவாரோ அவர் இந்த உம்மத்தில் மிக கெட்டவர் ஆவார். நமது சான்றோர் மிக ருசியான உணவுகளை உண்பதையும் அதை பழக்கப்படுத்திக் கொள்வதையும் பயந்தார்கள். அதை துர்பாக்கியத்தின் அடையாளமாக நம்பினார்கள். அதை விட்டு தம்மை தடுத்துக் கொள்வதை நற்பாக்கியத்தின் எல்லையாக கருதினார்கள்.

நபி ﷺ அவர்களின் உணவைப் பற்றி நாம் பேசாமல் செல்ல முடியுமா? அவர்கள்தானே நமக்கு எல்லாவற்றுக்கும் அழகிய முன்மாதிரி.

53. அறிவிப்பாளர்: அபூ உமாமா அல்பாஹிலி ﵁, நூல்: அல்முஜமுத் தபரானி, எண்: 7389, ஸஹீஹுல் ஜாமிஃ, எண்: 3663, தரம்: ஸஹிஹ்.
54. நூல்: தஃப்ஸீர் குர்துபி.

عَنْ عَائِشَةَ ﵂ قَالَتْ إِنْ كُنَّا آلَ مُحَمَّدٍ ﷺ لَنَمْكُثُ شَهْرًا مَا نُوقِدُ فِيهِ بِنَارٍ مَا هُوَ إِلَّا التَّمْرُ وَالْمَاءُ

நிச்சயமாக முஹம்மத் ﷺ அவர்களின் குடும்பத்தார்களாகிய நாங்கள் ஒரு மாத காலம் கழித்து விடுவோம். அதில் நாங்கள் அடுப்புக்கு நெருப்பு மூட்டியதில்லை. அ(தில் எங்கள் உணவான)து பேரீத்தம் பழமும் தண்ணீரும் தவிர வேறு ஏதும் இருக்கவில்லை.[55]

عَنْ عَائِشَةَ ﵂ أَنَّهَا قَالَتْ لِعُرْوَةَ ابْنَ أُخْتِي إِنْ كُنَّا لَنَنْظُرُ إِلَى الْهِلَالِ ثُمَّ الْهِلَالِ ثَلَاثَةَ أَهِلَّةٍ فِي شَهْرَيْنِ وَمَا أُوقِدَتْ فِي أَبْيَاتِ رَسُولِ اللَّهِ ﷺ نَارٌ فَقُلْتُ يَا خَالَةُ مَا كَانَ يُعِيشُكُمْ قَالَتْ الْأَسْوَدَانِ التَّمْرُ وَالْمَاءُ إِلَّا أَنَّهُ قَدْ كَانَ لِرَسُولِ اللَّهِ ﷺ جِيرَانٌ مِنْ الْأَنْصَارِ كَانَتْ لَهُمْ مَنَائِحُ وَكَانُوا يَمْنَحُونَ رَسُولَ اللَّهِ ﷺ مِنْ أَلْبَانِهِمْ فَيَسْقِينَا

ஆயிஷா ﵂ அவர்கள் உர்வாவை நோக்கி கூறினார்கள்: என் சகோதரியின் மகனே! நிச்சயமாக நாங்கள் பிறையை பார்த்தோம், பிறகு, பிறையை பார்த்தோம், இரண்டு மாதங்களில் மூன்று பிறைகளை பார்த்தோம். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுடைய வீடுகளில் அடுப்புக்கு நெருப்பு எரிக்கப்பட்டதில்லை. நான் கேட்டேன், சிறிய தாயே! உங்களை எது வாழவைத்துக் கொண்டிருந்தது? ஆயிஷா ﵂ அவர்கள் கூறினார்கள்: அல் அஸ்வதான். அதாவது, பேரீத்தம் பழமும் நீரும்தான். என்றாலும், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களுக்கு சில அன்ஸாரி அண்டை வீட்டார்கள் இருந்தார்கள். அவர்களிடம் ஆடுகள் இருந்தன. அவர்கள் தங்கள் ஆட்டுப் பாலை ரஸூலுல்லாஹ் அவர்களுக்கு கொடுத்து அனுப்புவார்கள். நபியவர்கள் எங்களுக்கு அதை குடிக்கக் கொடுப்பார்கள்.[56]

இப்படி பல ஹதீஸ்கள் ஹதீஸ் நூல்களில் ஏராளம் உள்ளன.

55. அறிவிப்பாளர்: ஆயிஷா ﵂, ஸஹீஹ் இப்னு மாஜா, எண்: 3360, தரம்: ஸஹீஹ்.
56. அறிவிப்பாளர்: உம்முல் முஃமினீன் ஆயிஷா ﵂, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2567.

இத்தகைய நற்போதனைகளையும் சான்றோரின் வரலாறுகளையும் படித்து படிப்பினை பெறக்கூடிய ஒரு நம்பிக்கையாளர் எப்படி வாழ வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். கிடைத்த உணவைக் கொண்டு போதுமாக்கிக் கொண்டு, எளிமையான உணவுகளையே தமது வழமையாக ஆக்கிக் கொண்டு, ஆடம்பர, சொகுசு சுகவாசிகளின் வாழ்க்கைக்கு பின்னால் அலையாமல் உண்மை நம்பிக்கையாளர் இருப்பார்.

அல்லாஹ் கொடுத்த செல்வத்தை தான தர்மங்கள் செய்தும் அல்லாஹ்வுடைய பாதையில் செலவழித்தும் மறுமையின் மகத்தான வெற்றியை தேடவேண்டிய ஒரு முஃமினால் எப்படி தனது சுகபோக வாழ்க்கைக்காக, ஆடம்பர உணவுகளுக்காக கணக்கின்றி செலவு செய்து வரம்பு மீறுவார். உணவிலே கவனம் செலுத்தி, இபாதத்தை எப்படி மறப்பார். ஏழைகள் பல்லாயிரம் பேர் பசித்திருக்க தனக்கு வண்ண உணவுகளை சமைப்பதிலும் வாங்குவதிலும் அவர் எப்படி செலவு செய்ய மனம் நாடுவார்.

ஆகவே, அவர் மெலிந்துதான் இருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. ஒருவருக்கு இயற்கையாக குண்டு உடல் இருந்தால் அவர் பழிக்கப்பட்டவர் இல்லை. மாறாக, அளவு கடந்து உண்பதால், அதிகமாக தின்பதால் ஒருவருக்கு உடல் கொழுக்கிறது என்றால் அது கண்டிப்பாக கண்டிக்க வேண்டியதுதான் என்பதில் யாருக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியும்?

அதுபோக, மறுமையின் கவலை ஒரு முஃமினை விட்டு பிரியாமல் இருக்கும்போது, அவர் அன்றாடம் தொழுகையிலும் அதற்கு வெளியிலும் ஓதுகிற திருகுர்ஆன் வசனங்களும் மறுமையின் பல கவலைகளை அவருக்கு நினைவூட்டிக் கொண்டே இருப்பதால் அவர் மக்களோடு பழகும்போது புன்முறுவலாக சிரித்தவராக இருந்தாலும் அவருடைய உள்ளத்தில் உள்ள கவலைகள் அவரின் முகத்தை வாட வைத்துவிடும் என்பதில் ஐயமில்லை.

அதற்காக மக்கள் முன்பும் முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டு பகட்டு கவலையை வெளிப்படுத்துகிற சூஃபிக் கூட்டத்துடைய செயல் போன்று முஃமின் இருக்க மாட்டார். முஃமினிடம் சிரிப்பும் இருக்கும். கவலையும் இருக்கும். மகிழ்ச்சியும் இருக்கும். அழுகையும் இருக்கும். எல்லாம் உள்ளத்திலிருந்து உண்மையாக வெளிப்படக்கூடியவையாக இருக்கும்.

ஒவ்வொன்றிலும் நபி ﷺ அவர்களின் ஸுன்னாவை அவர் பின்பற்றுபவராக இருப்பார். எதிலும் வரம்பு மீறிவிடாமல் நடுநிலையை பேணுபவராக இருப்பார். உடல் பலவீனம் ஏற்பட்டு வணக்க வழிபாடு செய்ய முடியாத

அளவிற்கு ஆகிவிடவும் கூடாது. உடலால் உழைத்து சம்பாதிப்பதற்கும் வணக்க வழிபாட்டுக்கு தேவையான சக்தி உடலில் இருப்பதற்கும் ஏற்ற அளவு நல்ல உணவுகளை தனது வசதிக்கு ஏற்ப உண்ணுவதில் மார்க்கம் எந்த தடையையும் நமக்கு வைக்கவில்லை. எந்த ஓர் உணவையும் நம்மீது ஹராமாக்கி கொள்ளவும் நமக்கு அனுமதி இல்லை.

நபித்தோழர்களின் வாழ்க்கைதான் நமக்கு இது விஷயத்தில் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். அவர்கள் எப்படி நபி ﷺ அவர்களை பின்பற்றி நடந்தார்களோ நாமும் அப்படியே நடுநிலைப்பேணி நடக்க வேண்டும். முற்றிலும் உலக இன்பத்தில் மூழ்கி சொகுசு வாழ்க்கைக்கு அடிமையாகி சாப்பாடு சாப்பாடு என்ற ஹவா நஃப்ஸ் பிடித்து அலையவும் கூடாது. உணவே வேண்டாம், அல்லது நல்ல உணவுகளே வேண்டாம், அது வேண்டாம் இது வேண்டாம் என்று வறட்டு துறவறமும் கூடாது.

அடுத்து, நயவஞ்சகனைப் பற்றி பேச அதிக செய்திகள் இருந்தாலும் சுருக்கமாக சொல்வதென்றால் மறுமையை மறந்தவர்கள்தான் அவர்கள். உலக வாழ்க்கையின் ஆசையும் பயமும் அதிகம் உள்ளவர்கள் நயவஞ்சகர்கள். மிடுக்காக பகட்டாக பிறரின் பாராட்டையும் முகஸ்துதியையும் பெறுவதே அவர்களின் நோக்கமாக இருக்கும். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! அவர்களின் உடை, உணவு, இருப்பிடம் என அனைத்தும் மறுமையை மறந்தோரின் வழியில்தான் இருக்கும்.

ஆக, இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களின் இந்த கூற்று மிக நுணுக்கமாக புரிய வேண்டிய ஒன்றாகும். நம்பிக்கையாளருக்கும் நயவஞ்சகனுக்கும் இடையில் இருக்கிற வேறுபாட்டை மிக அழகாக இமாம் அவர்கள் இந்த கூற்றில் உணர்த்தி இருக்கிறார்கள்.

அல்லாஹ்வே! எங்களுக்கு ஈமானை கொடு! ஈமானின் தன்மைகளை கொடு! ஈமானின் குணங்களை கொடு! நயவஞ்சகத்தை விட்டும் அதன் தீமைகளை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்!

• • •

சான்றோர் பாடசாலை அமர்வு 39, கூற்று 1551

## அறிவை விட மார்க்கமே மேலானது!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا رَوْحُ حَدَّثَنَا عَوْنٌ عَنِ الْـحَسَنِ أَنَّهُ كَانَ يَقُولُ اتَّهِمُوا رَأْيَكُمْ وَأَهْوَاءَكُمْ عَلَىٰ دِينِ اللهِ وَانْتَصِحُوا كِتَابَ اللهِ عَلَىٰ أَنْفُسِكُمْ وَدِينِكُمْ

இமாம் ஹசன் ﵀ கூறுவார்கள்: அல்லாஹ் உடைய மார்க்கத்தில் உங்கள் சிந்தனைகளையும் யோசனைகளையும் உங்கள் விருப்பங்களையும் சந்தேகித்துக் கொள்ளுங்கள்! உங்கள் ஆன்மாக்களிலும் உங்கள் மார்க்கத்திலும் அல்லாஹ்வின் வேதத்தை உங்களுக்கு நல்லுபதேசியாக எடுத்துக் கொள்ளுங்கள்!

**கருத்து:** மார்க்கம் நமது அறிவுகளுக்கும் கருத்துகளுக்கும் மேலானதாகும். மார்க்கம் சொல்வதைத்தான் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும், ஏற்க வேண்டும். மார்க்கம் சொல்வதற்கு ஏற்ப நமது அறிவையும் சிந்தனையையும் மாற்ற வேண்டுமே தவிர, மார்க்கத்தையும் அதன் சட்டத்தையும் மாற்றவோ திருத்தவோ நினைக்கக் கூடாது. அல்லாஹ்வின் சட்டங்கள் மீது நமது அறிவைக் கொண்டு ஆட்சேபணை செய்யக் கூடாது.

**விளக்கம்:** இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் என்ன கூறவருகிறார்கள்? ஆம், அறிவும் புத்தியும் நேராக வேலை செய்ய வேண்டும்! நமது சிந்தனையும் ஆய்வும் சரியாக வேலை செய்ய வேண்டும்.

அறிவு, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் நாம் கீழ்ப்படிவதற்கு நமக்கு வழிகாட்ட வேண்டும். ஷைத்தானுக்கும் ஆசைக்கும் மாறு செய்ய வேண்டுமென்று நமக்கு சொல்லித் தர வேண்டும். அப்படி இல்லாமல் அல்லாஹ்வின் மீது ஆட்சேபணை செய்வதற்கும் அல்லாஹ்வின் மார்க்க

சட்டத்தை எதிர்ப்பதற்கும் அறிவு நம்மை தூண்டினால் அந்த அறிவை குப்பையில் போட வேண்டும். அந்த அறிவை பிஞ்ச செருப்பாலும் கட்ட விளக்குமாறாலும் அடிக்க வேண்டும். அறிவுக்கு அறிவு வருகிற வரை அந்த அறிவை தண்டித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

சண்டிக் குதிரையை, அது நமது கட்டளைகளுக்கு கீழ்ப்படியக் கூடியதாக மாற்றுவதற்கு எப்படி அதை தண்டிக்கிறோமோ, பயிற்றுவிக்கிறோமோ அதுபோன்று நமது அறிவையும் தண்டித்து, கண்டித்து, பயிற்றுவித்து அதை அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு கீழ்ப்படியக் கூடியதாக மாற்ற வேண்டும்.

அல்லாஹு தஆலா, அறிவையும் ஞானத்தையும் படைத்தவன். அவனது வேதமும் மார்க்கமும் அவனது நபியின் போதனைகளும் அறிவுகளுக்கு எல்லாம் மேலான அறிவாகும்.

அல்லாஹு தஆலா வீணாகவோ, விளையாட்டாகவோ, பொய்யாகவோ, உண்மைக்கு புறம்பாகவோ பேச மாட்டான். அப்படித்தான் அவனது தூதர்களும்.

அவனது வேதம்தான் கல்விகளுக்கு எல்லாம் தாயாகும். அவனது தூதர்களின் நற்போதனைகள் ஞானத்தின் ஊற்றுகளாகும்.

மனிதனும் மற்ற உயிரினங்களும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள பிறப்பிலேயே சில அறிவுகள் கொடுக்கப்பட்டுள்ளனர் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அந்த அறிவையும் திறமையையும் கொடுத்தவன் அல்லாஹ் ஆவான்.

ஆனால், மனிதன் அந்த அறிவுகளைக் கொண்டு எல்லாவற்றையும் என்னால் அறிய முடியும், என்னால் புரிய முடியும் என்று வாதிடுவதும், இறைவனின் மார்க்க சட்டங்கள் மீது ஆட்சேபணை செய்வதும் கடைந்தெடுத்த முட்டாள்தனமாகும்.

உண்மையான வேத அறிவும் இறைத்தூதர் வழிகாட்டலும் மனித வாழ்க்கைக்கு மிக அவசியமானதும் மிக முக்கியமானதும் ஆகும். கடிவாளம் போடப்படாத குதிரையைக் கொண்டு சவாரி செய்ய முடியாது என்பதைப் போல மார்க்கத்தைக் கொண்டு பக்குவப்படுத்தப்படாத, நேர்வழிகாட்டப்படாத அறிவைக் கொண்டு நேர்மையாகவும் நன்மையாகவும் செயல்பட முடியாது.

மனிதன் தனது அறிவைக் கொண்டு ஒரு காரியத்தின் ஒரு பகுதியை மட்டும்தான் புரிவான். அதன் இன்னொரு பகுதியை அவனால் உடனே புரிய

முடியாது. மனிதன் கடந்த காலத்தையும் தற்காலத்தையும் மட்டுமே அறிவான். அதுவும் முழுமையாக அல்ல. அதுவும் அவன் அறிந்ததில், அவன் மறந்ததும் குழம்பியதும் தவறு செய்ததும்தான் அதிகமாக இருக்கும். பல நேரங்களில் நமது அறிவு நமது ஆசைகளுக்கும், நமது உணர்ச்சிகளுக்கும், நமது எதிர்பார்ப்புகளுக்கும், நமது பயத்திற்கும் பணிந்து விடுகிறது என்பதில் அறிவாளிகள் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது.

தமது உணவுகளை தேடுவதும் அவற்றை உண்பதும் இனப்பெருக்கம் செய்வதும் இயற்கையாக பிறப்பிலேயே இறைவன் கொடுத்த அறிவைக் கொண்டு செய்துகொள்ள முடியும்! இந்த வகையான அறிவு எல்லா உயிரினங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

தனது உணவிலும் குடிப்பிலும் சுய தேவைகளிலும் கூட சில நுணுக்கங்கள் உள்ளன. மனிதன் அவற்றை சுயமாக புரிவது கடினமாகும். அவற்றை புரிந்து நல்லது கெட்டதை தெரிந்து அதன் படி செயல்பட இறைவேதத்தின் வழிகாட்டலும் தூதரின் வழிகாட்டலும் தேவை. இல்லை என்றால் பன்றியையும் உண்பேன் என்று சிலர் சொல்வார்கள். அல்லது மாட்டையும் ஆட்டையும் கூட நான் உண்ண மாட்டேன் என்று சிலர் சொல்வார்கள்.

சிலர் சொல்வார்கள், நான் திருமணமே முடிக்க மாட்டேன், அதுதான் கடவுள் பக்தி என்று. சிலர் சொல்வார்கள், நான் யாரோடு வேண்டுமானாலும் எத்தனை பேரோடு வேண்டுமானாலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் உறவு வைப்பேன், அதில் என்ன தவறு இருக்கிறது என்று. அது மட்டுமா? சுய புணர்ச்சியும் ஓரினப்புணர்ச்சியும் கூட செய்வேன், அது எங்கள் தனிப்பட்ட விருப்பம் என்று உரிமை பேசுவார்கள். இப்படி மிருகத்தை விட கீழ்த்தரமாக மாறுகிற மனிதர்களும் இருக்கிறார்கள்.

மிருகங்கள், அவற்றுக்குள் இறைவன் என்ன அறிவை வைத்திருக்கிறானோ அதைக் கொண்டு தமது அன்றாட தேவைகளை தேடிக்கொள்கின்றன, தமது வேலைகளை சுயமாக செய்து கொள்கின்றன. அதுபோக, அவற்றை நாம் நமது தேவைகளுக்கு பயன்படுத்த விரும்பினால் அவற்றை பயிற்றுவிக்க வேண்டும். நாம் எதை அவற்றுக்கு பயிற்றுவிக்கிறோமோ அதை அவை கற்றுக்கொள்ளும். பிறகு, அதை நாம் சொல்வது போன்று அவை செய்யும்.

மனிதன் அப்படி அல்ல. அவன் புதிய புதிய செய்திகளை அறிவதிலும் புதிய புதிய செயல்களை செய்வதிலும் ஆர்வமுள்ளவன். புதியதை தேடுவான், ஒன்றை வைத்து ஒன்றைக் கற்றுக் கொள்வான். ஒன்றிலிருந்து

ஒன்றை கண்டுபிடிப்பான். தான் கண்டுபிடித்ததை முன்னேற்றிக் கொண்டே இருப்பான். தமது தேவைகளை இலகுவாக்குவதிலும் அவற்றை அடைய புதிய வழிகளில் செல்வதிலும் அவன் ஆர்வமுள்ளவன்.

மனிதனை, அவனது அறிவுக்கு விட்டுவிட்டால், ஒன்று, கடவுளே இல்லை என்று கூறுவான். அல்லது, கல்லையும் கடவுள் என்பான். அல்லது, எல்லாவற்றிலும் கடவுள் இருக்கிறான் என்று உளறுவான். தனது கற்பனைகளுக்கு எல்லை வைக்க மாட்டான். கட்டுக் கதைகளை அள்ளி வீசி, தானும் முட்டாளாகி, மக்களையும் முட்டாளாக்குவான். அதுமட்டுமா? அவனுடன் இருக்கிற சாத்தான் அவனை சும்மா விட்டுவிடுவானா? மூடத்தனமான நம்பிக்கைகளையும், அரக்கத்தனமான செயல்களையும், பார்க்க சகிக்காத அசிங்கங்களையும், கீழ்த்தரமான காரியங்களையும் இறை வழிபாடுகளாக அலங்கரித்து காட்டுவான்.

சாத்தான் மனிதனை கெடுப்பதைப் பற்றி அல்லாஹ் நமக்கு எச்சரிக்கிறான். பெற்ற குழந்தைகளை வறுமைக்குப் பயந்து கொல்வதை அல்லது கடவுள் பக்தி என்று கூறி நரபலி கொடுப்பதை கூட ஷைத்தான் அவர்களுக்கு அலங்கரித்துவிடுவான்.

அல்லாஹ் கூறுகிறான்:

وَكَذٰلِكَ زَيَّنَ لِكَثِيرٍ مِنَ الْمُشْرِكِينَ قَتْلَ أَوْلَادِهِمْ شُرَكَاؤُهُمْ لِيُرْدُوهُمْ وَلِيَلْبِسُوا عَلَيْهِمْ دِينَهُمْ ۝

இவ்வாறே, இணைவைப்பவர்களில் அதிகமானோருக்கு அவர்களை அழிப்பதற்காகவும் அவர்கள் மீது அவர்களுடைய வணக்க வழிபாட்டை குழப்புவதற்காகவும் அவர்களின் குழந்தைகளைக் கொல்வதை அவர்களுடைய ஷைத்தான்கள் அலங்கரித்தன. அல்லாஹ் நாடியிருந்தால் அதை செய்திருக்க மாட்டார்கள். ஆகவே, (நபியே!) அவர்களை அவர்கள் பொய்யாக இட்டுக்கட்டி பேசுவதுடன் விட்டுவிடுங்கள்.

(அல்குர்ஆன் 6 : 137)

இன்னும், இதற்கு முந்திய வசனத்திலும், இதை தொடர்ந்து வருகிற வசனங்களிலும் இணைவைப்பாளர்களின் மூடப் பழக்கங்களை அல்லாஹ் கண்டிக்கிறான்.

ஷைத்தானுக்கு வேலையே பாவங்களையும் வழிகேடுகளையும் மனிதனுக்கு அலங்கரித்து காட்டுவதுதான். மிக மிக அசிங்கமான, அருவருப்பான, நேரிய அறிவால் சகிக்க முடியாத செயல்களை கூட மனிதர்கள் செய்வார்கள். இன்று மேற்கத்தியர்களின் கலாச்சார சீரழிவு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஷைத்தான் மனிதனுக்கு எப்படி தீமைகளை அலங்கரிப்பான் என்பதை அல்லாஹ் நமக்கு எச்சரிக்கிறான்.

وَزَيَّنَ لَهُمُ الشَّيْطَانُ أَعْمَالَهُمْ فَصَدَّهُمْ عَنِ السَّبِيلِ○

ஷைத்தான், அவர்களுக்கு அவர்களின் செயல்களை அலங்கரித்தான். ஆக, அவன் அவர்களை (நேரான) பாதையிலிருந்து தடுத்தான்.

(அல்குர்ஆன் 29 : 38)

ஷைத்தானின் சூழ்ச்சிகளைப் பற்றியும் அவனுடைய வழிகெடுத்தலைப் பற்றியும் மிகத் தெளிவாக அல்லாஹ் எச்சரிக்கிறான். இன்று, நமது கண் முன் இருக்கிற மூட நம்பிக்கைகள், மூடப் பழக்கங்கள் எல்லாம் அந்த ஷைத்தான் மனிதனுக்குள் தூண்டியவைதான் என்பதை அல்லாஹ் இப்படி நமக்கு விவரிக்கிறான்:

إِنْ يَدْعُونَ مِنْ دُونِهِ إِلَّا إِنَاثًا وَإِنْ يَدْعُونَ إِلَّا شَيْطَانًا مَرِيدًا○لَعَنَهُ اللهُ وَقَالَ لَأَتَّخِذَنَّ مِنْ عِبَادِكَ نَصِيبًا مَفْرُوضًا○وَلَأُضِلَّنَّهُمْ وَلَأُمَنِّيَنَّهُمْ وَلَآمُرَنَّهُمْ فَلَيُبَتِّكُنَّ آذَانَ الْأَنْعَامِ وَلَآمُرَنَّهُمْ فَلَيُغَيِّرُنَّ خَلْقَ اللهِ وَمَنْ يَتَّخِذِ الشَّيْطَانَ وَلِيًّا مِنْ دُونِ اللهِ فَقَدْ خَسِرَ خُسْرَانًا مُبِينًا○يَعِدُهُمْ وَيُمَنِّيهِمْ وَمَا يَعِدُهُمُ الشَّيْطَانُ إِلَّا غُرُورًا○أُولَئِكَ مَأْوَاهُمْ جَهَنَّمُ وَلَا يَجِدُونَ عَنْهَا مَحِيصًا○

அவர்கள் அவனையன்றி பெண் சிலைகளிடமே தவிர பிரார்த்திப்பதில்லை. இன்னும், (அல்லாஹ்விற்கு) கீழ்ப்படியாத ஷைத்தானிடமே தவிர அவர்கள் பிரார்த்திப்பதில்லை. அல்லாஹ் அவனை சபித்தான். அவன் கூறினான்: “உன் அடியார்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினரை நிச்சயமாக நான் எடுத்துக்கொள்வேன்.” “இன்னும், நிச்சயம் நான் அவர்களை வழி

கெடுப்பேன்; இன்னும், நிச்சயம் அவர்களுக்கு வீண் நம்பிக்கைகளை ஊட்டுவேன்; இன்னும், நிச்சயம் அவர்களுக்கு (தீமையை) ஏவுவேன். ஆகவே, (சிலைகளுக்கு நேர்ச்சை செய்யப்பட்ட) கால்நடைகளின் காதுகளை கட்டாயம் அவர்கள் அறுப்பார்கள். இன்னும், நிச்சயம் அவர்களுக்கு ஏவுவேன். ஆகவே, அல்லாஹ்வின் படைப்பு(களின் கோலங்)களை நிச்சயமாக அவர்கள் மாற்றுவார்கள்." (இவ்வாறு ஷைத்தான் கூறினான்.) எவன் அல்லாஹ்வையன்றி ஷைத்தானை நண்பனாக எடுத்துக் கொள்வானோ அவன் திட்டமாக வெளிப்படையான நஷ்டமடைந்தான். ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிக்கிறான்; இன்னும், அவர்களுக்கு வீண் நம்பிக்கை ஊட்டுகிறான். இன்னும், ஷைத்தான் அவர்களுக்கு ஏமாற்றத்தைத் தவிர (உண்மையை) வாக்களிக்க மாட்டான். அவர்களுடைய ஒதுங்குமிடம் நரகம்தான். இன்னும், அவர்கள் அதிலிருந்து (தப்பித்து செல்ல) ஒரு ஒதுங்குமிடத்தையும் காணமாட்டார்கள். (அல்குர்ஆன் 4 : 117-121)

قَالَ فَبِمَا أَغْوَيْتَنِي لَأَقْعُدَنَّ لَهُمْ صِرَاطَكَ الْمُسْتَقِيمَ○ثُمَّ لَآتِيَنَّهُمْ مِنْ بَيْنِ أَيْدِيهِمْ وَمِنْ خَلْفِهِمْ وَعَنْ أَيْمَانِهِمْ وَعَنْ شَمَائِلِهِمْ وَلَا تَجِدُ أَكْثَرَهُمْ شَاكِرِينَ○

(இப்லீஸ்) கூறினான்: "ஆக, நீ என்னை வழிகெடுத்ததின் காரணமாக அவர்களுக்காக உன் நேரான பாதையில் நிச்சயம் உட்காருவேன்." "பிறகு, அவர்களுக்கு முன் புறத்திலிருந்தும், அவர்களுக்கு பின் புறத்திலிருந்தும் அவர்களின் வலது புறத்திலிருந்தும், அவர்களின் இடது புறத்திலிருந்தும் நிச்சயம் அவர்களிடம் வருவேன். அவர்களில் அதிகமானவர்களை (உனக்கு) நன்றி செலுத்துபவர்களாக நீ காணமாட்டாய்." (அல்குர்ஆன் 7 : 16, 17)

சரி, இப்போது நாம் இமாம் அவர்களின் கூற்றின் மைய கருத்துக்குள் செல்வோம்!

பிற மக்கள் எப்படியோ! அவர்கள் எதை வேண்டுமானாலும் வணங்கட்டும், எதை வேண்டுமானாலும் செய்யட்டும்!

ஒரு வசனத்தை நினைவு கூர்ந்து விட்டு செல்வோம்:

قُلِ اللَّهَ أَعْبُدُ مُخْلِصًا لَهُ دِينِي○فَاعْبُدُوا مَا شِئْتُمْ مِنْ دُونِهِ قُلْ إِنَّ

الْخَاسِرِينَ الَّذِينَ خَسِرُوا أَنْفُسَهُمْ وَأَهْلِيهِمْ يَوْمَ الْقِيَامَةِ أَلَا ذَٰلِكَ هُوَ الْخُسْرَانُ الْمُبِينُ

(நபியே!) கூறுவீராக! "அல்லாஹ்வைத்தான் நான் வணங்குவேன், அவனுக்கு (மட்டும்) என் மார்க்கத்தை - வணக்க வழிபாட்டை தூய்மைப்படுத்தியவனாக இருக்கும் நிலையில்." ஆக, அவனை அன்றி நீங்கள் விரும்பியவர்களை நீங்கள் வணங்குங்கள். (நபியே!) கூறுவீராக! "நிச்சயமாக நஷ்டவாளிகள் (யாரென்றால்) தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் மறுமையில் நஷ்டமிழைத்தவர்கள்தான்." அறிந்து கொள்ளுங்கள்! "இதுதான் மிகத்தெளிவான நஷ்டமாகும்." (அல்குர்ஆன் 39 : 14, 15)

நாம், முஸ்லிம்கள்; அல் இஸ்லாம் என்ற மார்க்கம் வழங்கப்பட்டவர்கள்; அல்ஹுதா என்ற நேர்வழி காட்டப்பட்டவர்கள்; அல்ஃபுர்கான் - பகுத்தறிவு என்ற வேதம் கொடுக்கப்பட்டவர்கள்; அல்ஹாதி இலா சவாயிஸ் ஸபீல் என்ற நடுநிலையான பாதையின் பக்கம் நேர்வழி அழைத்து செல்கிற தூதர் அனுப்பப்பட்டவர்கள். ஆகவே, நமது இயற்கை தேவைகளை கூட, நமது விருப்பு வெறுப்புகளை கூட மார்க்க வழிகாட்டல் படி அமைத்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

இப்போது இருக்கிற எல்லா மதங்களோடும், சித்தாந்தங்களோடும், கொள்கை கோட்பாடுகளோடும், ஞான தத்துவங்களோடும் நமது மார்க்கத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் புரியவரும் அல்லாஹ் நம்மை எப்படி உயர்வாக ஆக்கி இருக்கிறான்; நமக்கு எத்தகைய கண்ணியத்தைக் கொண்டு கண்ணியப்படுத்தி இருக்கிறான் என்று.

நாம் அறிவை பயன்படுத்த ஆரம்பித்ததும், மூட நம்பிக்கைகளை அடையாளம் காண தொடங்கியதும், சத்திய பகுத்தறிவு பாதையில் நடக்க ஆரம்பித்ததும், வழிகேட்டிலிருந்து விலகி நேர்வழியில் செல்ல முற்பட்டதும் இந்த குர்ஆனும், நபி முஹம்மத் ﷺ அவர்களும் நமக்கு கிடைக்கப் பெற்ற பின்னர்தான்.

ஆகவே, நாம் மிக கவனமாக இருக்க வேண்டும். அல்குர்ஆன் பேசக்கூடிய தத்துவம் இதுவரை யாராலும் பொய்ப்பிக்க முடியாதது. அல்குர்ஆன் உடைய அறிவியல் எந்த ஆராய்ச்சியாளராலும் மறுக்க முடியாதது. சிந்திக்கவும், புரியவும், விளங்கவும், ஆழ்ந்து ஆராயவும் தூண்டுகிற ஒரே வேதம் அல்குர்ஆன் மட்டுமே.

நபி ﷺ அவர்களின் போதனைகள் ஒவ்வொன்றும் அதை படிப்போரை மெய்சிலிர்க்க வைத்து விடுகிறது. எத்தனை ஒழுக்க போதனைகள், எத்தனை அறிவியல் விளக்கங்கள், எத்தனை வழிபாட்டு ஒழுக்கங்களை நமது நபி ﷺ அவர்கள் நமக்கு விட்டு சென்றுள்ளார்கள். அவற்றை ஆராய்ந்து பாருங்கள், அவை எத்தகையவை என்பது புரியவரும். அவற்றை ஒப்பிட்டுப் பாருங்கள், உண்மை புரிய வரும். ஒப்பிட்டுப் பார்க்காமல் அசலும் போலியும் தெரியாது. உரசிப் பார்க்காமல் தங்கத்தை தங்கம் என்று உறுதி செய்ய முடியாது!

அல்லாஹ்வும் ரஸூலும் நமக்கு ஒவ்வொன்றாக சொல்லிக் கொடுத்தார்கள், உணவு உண்ணும் முறையிலிருந்து, கழிவறைக்கு செல்கிற ஒழுக்கம் வரை, திருமணத்திலிருந்து, குழந்தை பிறந்ததிலிருந்து மண்ணறைக்கு செல்கிற வரை, வீட்டிலிருந்து, கடைத்தெருவிலிருந்து பள்ளிவாசல் வரை, மரணிப்பதற்கு முன்னர், மரணித்த பின்னர் என்று எத்துணை அழகிய வழிகாட்டுதல்களை நமக்கு அல்லாஹ்வும் ரஸூலும் கற்பித்து வழிகாட்டி இருக்கிறார்கள். இத்தகைய தூய, சரியான, நேர்மையான, அழகான, அற்புதமான, இலகுவான, அமைப்பான ஒழுக்கத்தை படைத்த இறைவனும் அவனுடைய தூதரும் தவிர வேறு யார் நமக்கு சொல்லி கொடுக்க முடியும்.

அப்படி இருக்கும்போது அவர்கள் கூறுவதை இந்த ஐந்து பைசா அறிவு மறுக்கிறது என்றால், அதற்கு மாற்றமாக இந்த மழுங்கிபோகிற மறந்துபோகிற குழம்பிபோகிற அறிவு பேசுகிறது என்றால் கண்டிப்பாக அல்லாஹ்வும் ரஸூலும் கூறியதில் பிரச்சனை இல்லை. பிரச்சனை, அறிவில்தான் இருக்கிறது. அறிவுக்குத்தான் கேடு! அறிவைத்தான் திருத்த வேண்டுமே தவிர மார்க்கத்தை அல்ல. சிந்தனையைத்தான் மாற்ற வேண்டுமே தவிர குர்ஆனையோ ஸுன்னாவையோ அல்ல.

சில நிகழ்வுகளையும் நபித்தோழர்களின் போதனைகளையும் இங்கு நாம் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம்.

ஹுதைபிய்யா ஒப்பந்தத்தின்போது பல தோழர்கள் நபியவர்களின் ஆலோசனையை ஏற்க தயங்கினார்கள். உம்ரா செய்ய வந்துவிட்டு உம்ராவை நிறைவேற்றாமல் செல்வதா என்று கவலைப்பட்டனர். நபி ﷺ அவர்கள் உம்ராவை விட்டு வெளியேறுங்கள், உங்கள் தலைமுடியை சிரைத்துக் கொள்ளுங்கள், குர்பானிகளை பலியிடுங்கள் என்று கூறியும் தயக்கம் காட்டினார்கள்.

நாம் தான் நமக்கு மரணம் வந்தாலும் பின்வாங்க மாட்டோம் என்று

சத்திய வாக்கு கொடுத்துவிட்டோமே, ஏன் போர் செய்யாமல் அவர்களின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்து உடன்படிக்கை செய்ய வேண்டும் என்று கேள்விகள் கேட்டனர். அவை எல்லாவற்றுக்கும் நபியவர்களின் ஒரே பதில் நான் அல்லாஹ்வின் தூதர், அவனுக்கு மாறு செய்ய மாட்டேன் என்பதாகவே இருந்தது. அதுபற்றித்தான் ஸஹ்ல் இப்னு ஹுனைஃப் பின்வருகிற செய்தியை பதிவு செய்கிறார்கள்:

لَمَّا قَدِمَ سَهْلُ بنُ حُنَيْفٍ مِن صِفِّينَ أَتَيْنَاهُ نَسْتَخْبِرُهُ فَقَالَ: اتَّهِمُوا الرَّأْيَ فَلَقَدْ رَأَيْتُنِي يَومَ أَبِي جَنْدَلٍ وَلَوْ أَسْتَطِيعُ أَنْ أَرُدَّ علَىٰ رَسُولِ اللهِ أَمْرَهُ لَرَدَدْتُ وَاللهُ وَرَسُولُهُ أَعْلَمُ وَمَا وَضَعْنَا أَسْيَافَنَا علَىٰ عَوَاتِقِنَا لِأَمْرٍ يُفْظِعُنَا إِلَّا أَسْهَلْنَ بِنَا إِلَىٰ أَمْرٍ نَعْرِفُهُ قَبْلَ هٰذَا الْأَمْرِ مَا نَسُدُّ مِنْهَا خُصْمًا إِلَّا انْفَجَرَ عَلَيْنَا خُصْمٌ مَا نَدْرِي كَيْفَ نَأْتِي لَهُ

“ஸிஃப்பீன் சண்டையிலிருந்து சஹ்ல் பின் ஹுனைஃப் ﵁ அவர்கள் திரும்பி வந்தபோது நாங்கள் அவர்களிடம் (அவர் சண்டையில் ஈடுபாடு காட்டாதது பற்றி) செய்தி அறியச் சென்றோம். அப்போது அவர்கள், “(நான் இந்தப் போரில் ஈடுபாடு கொள்ளாதது குறித்து என்னைக் குற்றம் சாட்டாதீர்கள். உங்கள்) எண்ணத்தையே குற்றம் சாட்டுங்கள். அபூஜந்தல் (அபயம் தேடி வந்த ஹுதைபியா உடன்படிக்கையின்) நாளில், நபி ﷺ அவர்களின் கட்டளையை ஏற்க மறுப்பதற்கு என்னால் முடிந்திருந்தால் ஏற்க மறுத்திருப்பேன் - அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கறிந்தவர்கள் - (அத்தகைய மன நிலையில் அன்று நான் இருந்தேன். அன்று) எங்கள் தோள்களில் நாங்கள் எங்கள் வாட்களை (முடக்கி) வைத்துக்கொண்டது எங்களுக்குச் சிரமம் தரக்கூடிய விஷயமான போருக்கு அஞ்சியல்ல. நாங்கள் அறிந்த எளிய விஷயமான சமாதானத்தை அடைய (முடக்கப்பட்ட) அந்த வாட்களே வழி வகுத்தன.

ஆனால், இதுவெல்லாம் ஸிஃப்பீன் போருக்கு முன்னால்தான். (ஆனால், முஸ்லிம்களுக்கிடையிலேயே போர் மூண்டுவிட்ட இந்தச் சூழ்நிலையில்) நாங்கள் குழப்பத்தின் ஒரு மூலையை அடைக்கப்போனால் இன்னொரு மூலை பீறிட்டு வெடிக்கிறது. இதை எப்படிச் சமாளிப்பது என்று எங்களுக்குத்

தெரியவில்லை” என்று கூறினார்கள்.[57]

ஆகவே, அறிவு அறிவுதான் எதுவரை அது அல்லாஹ்விற்கும் ரஸூலுக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறதோ அதுவரை மட்டும். எப்போது அது இறை வசனத்தையோ, நபிமொழியையோ, மார்க்க சட்டத்தையோ எதிர்த்து பேசுகிறதோ அது அறிவல்ல. அது குப்பை ஆகும். அது புத்தியல்ல. இதுதான் ஒரு உண்மை முஃமின் உடைய நிலைப்பாடாக இருக்க வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّمَا كَانَ قَوْلَ الْمُؤْمِنِينَ إِذَا دُعُوا إِلَى اللهِ وَرَسُولِهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ أَنْ يَقُولُوا سَمِعْنَا وَأَطَعْنَا وَأُولَئِكَ هُمُ الْمُفْلِحُونَ ۝

அவர்களுக்கு மத்தியில் தூதர் தீர்ப்பளிப்பதற்காக அல்லாஹ் இன்னும் அவனது தூதர் பக்கம் நம்பிக்கையாளர்கள் அழைக்கப்பட்டால் அப்போது அந்த நம்பிக்கையாளர்களுடைய கூற்றாக இருப்பதெல்லாம், நாங்கள் செவியுற்றோம், கீழ்ப்படிந்தோம் என்று அவர்கள் கூறுவதுதான். இன்னும், அவர்கள்தான் வெற்றியாளர்கள் ஆவர். (அல்குர்ஆன் 24 : 51)

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللهُ وَرَسُولُهُ أَمْرًا أَنْ يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ وَمَنْ يَعْصِ اللهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُبِينًا ۝

நம்பிக்கை கொண்ட ஆணுக்கும் நம்பிக்கை கொண்ட பெண்ணுக்கும் தங்களது காரியத்தில் அவர்களுக்கு என்று ஒரு விருப்பம் இருப்பது ஆகுமானதல்ல, அல்லாஹ்வும் அவனது தூதரும் ஒரு காரியத்தை முடிவுசெய்துவிட்டால். ஆக, யார் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் மாறுசெய்வாரோ அவர் திட்டமாக தெளிவாக வழிகெட்டுவிட்டார். (அல்குர்ஆன் 33 : 36)

இதுபோல் இன்னொரு நிகழ்வை இங்கு நாம் நினைவுகூர வேண்டும்.

அதாவது,

إِنَّا نَجِدُ صَلَاةَ الْحَضَرِ وَصَلَاةَ الْخَوْفِ فِي الْقُرْآنِ وَلَا نَجِدُ صَلَاةَ السَّفَرِ فِي

57. அறிவிப்பாளர்: சஹ்ல் பின் ஹுனைஃப் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 4189.

الْقُرْآنِ فَقَالَ عَبْدُ اللهِ يَا ابْنَ أَخِي إِنَّ اللهَ بَعَثَ إِلَيْنَا مُحَمَّدًا ﷺ وَلَا نَعْلَمُ شَيْئًا فَإِنَّمَا نَفْعَلُ كَمَا رَأَيْنَا مُحَمَّدًا يَفْعَلُ

ஒருவர் இப்னு உமர் رضي الله عنه அவர்களிடம் கேட்டார், நிச்சயமாக நாம் உள்ளூரில் இருக்கும் நிலையிலும் பயத்தின் போதும் எப்படி தொழ வேண்டும் என்பதை குர்ஆனில் காண்கிறோம். ஆனால், பயணத் தொழுகையை குர்ஆனில் நாம் காணவில்லையே! அதற்கு அப்துல்லாஹ் இப்னு உமர் رضي الله عنه கூறினார்கள்: என் சகோதரனின் மகனே! நிச்சயமாக அல்லாஹ் எங்களுக்கு முஹம்மத் ﷺ அவர்களை அனுப்பினான். நாங்கள் எதையும் அறியாதவர்களாக இருந்தோம். ஆகவே, நாங்கள் செய்வதெல்லாம் எதுவென்றால் எதை முஹம்மத் ﷺ செய்வதாக நாம் பார்த்தோமோ அதைத்தான்.[58]

இப்படியாக பல உபதேசங்களை நாம் ஸஹாபாக்களின் வாழ்க்கையில் பார்க்கிறோம்.

لَوْ كَانَ الدِّينُ بِالرَّأْيِ لَكَانَ أَسْفَلُ الْـخُفِّ أَوْلَى بِالْـمَسْحِ مِنْ أَعْلَاهُ وَقَدْ رَأَيْتُ رَسُولَ اللهِ ﷺ يَمْسَحُ عَلَى ظَاهِرِ خُفَّيْهِ

அலீ رضي الله عنه அவர்கள் கூறினார்கள்: இந்த மார்க்கம் அறிவைக் கொண்டு சிந்தனையைக் கொண்டு இருந்திருப்பின் (உளூ செய்கிற போது) காலுறைக்கு கீழே தடவுவது அதற்கு மேலே தடவுவதை விட முக்கியமானதாக ஆகி இருக்கும். என்றாலும், ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் தமது காலுறைகளுக்கு மேல் மஸ்ஹ் - தடவுவதை நான் பார்த்தேன்.[59]

இன்று பல முட்டாள்கள் மார்க்கத்தில் குதர்க்கம் பேசுகிறார்கள்.

தங்களை குர்ஆன், ஸுன்னாவாதிகள் என்று கூறிக்கொண்டு சுத்த நாத்திகம் பேசுவார்கள்.

வஹ்யிதான் மார்க்கம் என்பார்கள். அந்த வஹ்யை தங்கள் சுய அறிவைக் கொண்டு மறுப்பார்கள்.

நாங்கள்தான் உண்மையான முஸ்லிம் என்று கூவுவார்கள். ஆனால்,

58. நூல்: ஹாகிம், எண்: 946.
59. அறிவிப்பாளர்: அலீ رضي الله عنه, நூல்: அபூதாவூத், எண்: 162.

அல்லாஹ்விற்கும் ரஸூலுக்கும் கீழ்ப்படிய மறுப்பார்கள். இவர்களின் உதாரணம் ஷைத்தானின் உதாரணத்தை ஒத்திருக்கிறது.

ஷைத்தான் அல்லாஹ்வை ரப்பு என்று ஏற்றுக் கொள்வானாம். ஆனால், அந்த அல்லாஹ் ஆதமுக்கு ஸஜ்தா செய்ய கூறியதை ஏற்க மறுப்பானாம். அப்படித்தான் இவர்கள் ரஸூலுல்லாஹ்வை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறுவார்கள். ஆனால், ரஸூலுடைய ஹதீஸ் அவர்களுக்கு முன்னால் வந்தால் ஏற்க மாட்டார்கள். கேட்டால் இது அறிவியலுக்கு முரண், அறிவுக்கு முரண், யதார்த்த உண்மைக்கு முரண் என்று கூறிவிட்டு ஒரு குண்டை தூக்கி போடுவார்கள். அதாவது, அது ஹதீஸே இல்லை, ரஸூல் இப்படி கூறி இருக்க மாட்டார்கள், எங்கோ குழப்பம் நடந்துள்ளது, யாரோ தப்பு செய்திருக்கிறார்கள்.

யாரும் தப்பு செய்யவில்லை, யாரும் குழப்பவில்லை. இந்த முட்டாள்கள்தான் தப்பு செய்கிறார்கள், இவர்களுக்குத்தான் குழப்பம். அல்லாஹ்வின் மார்க்கம் நம்பிக்கை கொள்வதிலும் கீழ்ப்படிவதிலும் தெளிவாக உள்ளது. முஃமின்களுக்கும் அல்லாஹ் இன்னும் ரஸூலுக்கு இதாஅத் செய்பவர்களுக்கும் (- முழுமையாக கீழ்ப்படிபவர்களுக்கு) எந்த முரண்பாடும் தெரியவில்லை. சந்தேக புத்தி உள்ளவர்களுக்குத்தான் முரண்பாடு தெரிகிறது. அது அவர்களின் ஈமானிய பலவீனம், அது அவர்களின் மனநோய். அவர்கள் தங்களுக்கு சிகிச்சை செய்ய வேண்டுமே தவிர குர்ஆன் ஹதீஸ் மீது விரல் நீட்டக் கூடாது. அவற்றை எதிர்த்து கேள்வி கேட்கக் கூடாது.

அல்லாஹ் கேட்கிறான்:

أَلَيْسَ اللّٰهُ بِأَحْكَمِ الْحَاكِمِينَ۝

தீர்ப்பளிப்பவர்களில் மிக மேலான தீர்ப்பளிப்பவனாக அல்லாஹ் இல்லையா? (அல்குர்ஆன் 95 : 8)

மேற்கூறப்பட்ட விளக்கங்களை நன்கு புரிந்த பின்னர் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களின் உபதேசத்தை கவனியுங்கள். அப்போது நன்கு புரிய வரும். ஆம், நமது அறிவு குழப்பமடையும். மார்க்கத்தில் குழப்பம் இல்லை. நமது அறிவு வழி தவறலாம். குர்ஆனும் ஸுன்னாவும் ஒருபோதும் தவறு செய்யாது.

உன்னால் ஒரு ஸஹீஹான ஹதீஸை புரிய முடியவில்லை எனில் என்ன செய்ய வேண்டும் என்று குர்ஆனிடம் உபதேசம் கேள். குர்ஆன் என்ன சொல்கிறது என்று பார்.

குர்ஆன் சொல்கிறது, அறிவை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடு! உனக்கு புரிந்ததை, புரிந்து, நம்பிக்கை கொள்! உனக்கு புரியாததை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள். அல்லாஹ்வும் ரஸூலும் உனக்கு நேர்வழி காட்டுவார்களே தவிர உன்னை வழிகெடுக்க மாட்டார்கள். உன்னை வழிகெடுப்பவர்கள் ஷைத்தானும் அவனது சொல்லை கேட்கிற அறிவும்தான்.

அல்லாஹ் கூறுகிற சில வசனங்களை நினைவுப்படுத்தி இந்த மஜ்லிஸை நிறைவு செய்வோம்.

அல்லாஹ் கூறுகிறான்:

آمَنَ الرَّسُولُ بِمَا أُنْزِلَ إِلَيْهِ مِنْ رَبِّهِ وَالْمُؤْمِنُونَ كُلٌّ آمَنَ بِاللَّهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ وَرُسُلِهِ لَا نُفَرِّقُ بَيْنَ أَحَدٍ مِنْ رُسُلِهِ وَقَالُوا سَمِعْنَا وَأَطَعْنَا غُفْرَانَكَ رَبَّنَا وَإِلَيْكَ الْمَصِيرُ ○

தூதரும் நம்பிக்கையாளர்களும் தமது இறைவனிடமிருந்து தமக்கு இறக்கப்பட்டதை நம்பிக்கை கொண்டார்கள். (அவர்கள்) எல்லோரும் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கை கொண்டார்கள். இன்னும், அவர்கள் கூறினார்கள்: "அவனுடைய தூதர்களில் யார் ஒருவருக்கு மத்தியிலும் பிரிவினை காட்டமாட்டோம். இன்னும், நாங்கள் செவியுற்றோம்; கட்டுப்பட்டோம். எங்கள் இறைவா! நாங்கள் உன் மன்னிப்பை வேண்டுகிறோம். உன் பக்கமே (எங்கள்) மீளுமிடம் இருக்கிறது." (அல்குர்ஆன் 2 : 285)

இன்னும் அல்லாஹ் கூறுகிறான்:

هُوَ الَّذِي أَنْزَلَ عَلَيْكَ الْكِتَابَ مِنْهُ آيَاتٌ مُحْكَمَاتٌ هُنَّ أُمُّ الْكِتَابِ وَأُخَرُ مُتَشَابِهَاتٌ فَأَمَّا الَّذِينَ فِي قُلُوبِهِمْ زَيْغٌ فَيَتَّبِعُونَ مَا تَشَابَهَ مِنْهُ ابْتِغَاءَ الْفِتْنَةِ وَابْتِغَاءَ تَأْوِيلِهِ وَمَا يَعْلَمُ تَأْوِيلَهُ إِلَّا اللَّهُ وَالرَّاسِخُونَ فِي الْعِلْمِ يَقُولُونَ آمَنَّا بِهِ كُلٌّ مِنْ عِنْدِ رَبِّنَا وَمَا يَذَّكَّرُ إِلَّا أُولُو الْأَلْبَابِ ○

(நபியே!) அவன் (இவ்)வேதத்தை உம்மீது இறக்கினான். அதில் பொருள் தெளிவான (முஹ்கம்) வசனங்கள் உள்ளன. அவைதான் வேதத்தின் அடிப்படையாகும். இன்னும், பொருள் தெரிய முடியாத வேறு (முதஷாபிஹ்) வசனங்களும் உள்ளன. ஆக, தங்கள் உள்ளங்களில் கோணல், (சந்தேகம்) உள்ளவர்கள் குழப்பத்தை தேடியும் (மறைக்கப்பட்ட) அதன் விளக்கத்தை தேடியும் அதில் பொருள் தெரியமுடியாதவற்றைப் பின்பற்றுகிறார்கள். அதன் விளக்கத்தை அல்லாஹ்வைத் தவிர (யாரும்) அறியமாட்டார். கல்வியில் தேர்ச்சியடைந்தவர்களோ, “அதை நாங்கள் நம்பிக்கை கொண்டோம். (முஹ்கம், முதஷாபிஹ்) எல்லாம் எங்கள் இறைவனிடமிருந்துதான் (இறக்கப்பட்டவை)” என்று கூறுவார்கள். நிறைவான அறிவுடையவர்களைத் தவிர (யாரும்) நல்லுபதேசம் பெறமாட்டார். (அல்குர்ஆன் 3 : 7)

உனக்கு குழப்பம் ஏற்பட்டால், உனக்கு சந்தேகம் வந்தால், உனக்கு அறிவு பேதலிப்பு ஏற்பட்டால், உனக்கு முரண்பாடு தெரிந்தால் குர்ஆன் சொல்வதைக் கேள்! குர்ஆனை உனக்கு உபதேசியாக, வழிகாட்டியாக, நஸீஹா செய்யக்கூடியதாக எடுத்துக்கொள்!

குர்ஆன் என்ன சொல்கிறது? குர்ஆன் உனக்கு என்ன வழிகாட்டுகிறது? இதோ இந்த வசனங்களை ஓதிப்பார்!

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ
وَاللهُ غَفُورٌ رَحِيمٌ قُلْ أَطِيعُوا اللهَ وَالرَّسُولَ فَإِنْ تَوَلَّوْا فَإِنَّ اللهَ لَا يُحِبُّ
الْكَافِرِينَ ○

(நபியே!) கூறுவீராக: “நீங்கள் அல்லாஹ்வின் மீது அன்பு வைப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்கள் மீது அன்பு வைப்பான்; இன்னும், உங்களுக்கு உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மகா மன்னிப்பாளன், மகா கருணையாளன் ஆவான்.” (நபியே!) கூறுவீராக: “அல்லாஹ்விற்கும் தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். ஆக, நீங்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பாளர்கள் மீது அன்பு வைக்கமாட்டான்.” (அல்குர்ஆன் 3 : 31, 32)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا ○ يُصْلِحْ لَكُمْ

أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا ۝

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். இன்னும், நேர்மையான பேச்சைப் பேசுங்கள். (அல்லாஹ்) உங்கள் அமல்களை உங்களுக்கு சீர்படுத்துவான். இன்னும், உங்களுக்கு உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் யார் கீழ்ப்படிவாரோ திட்டமாக அவர் மகத்தான வெற்றி பெறுவார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

مَنْ يُطِعِ الرَّسُولَ فَقَدْ أَطَاعَ اللَّهَ وَمَنْ تَوَلَّى فَمَا أَرْسَلْنَاكَ عَلَيْهِمْ حَفِيظًا ۝

எவர் தூதருக்கு கீழ்ப்படிகிறாரோ அவர் திட்டமாக அல்லாஹ்விற்கு கீழ்ப்படிந்தார். எவர்கள் புறக்கணித்தார்களோ அவர்களின் செயல்களை கவனிப்பவராக(வும் அவர்களை விசாரிப்பவராகவும்) நாம் உம்மை அனுப்பவில்லை. (அல்குர்ஆன் 4 : 80)

فَلْيَحْذَرِ الَّذِينَ يُخَالِفُونَ عَنْ أَمْرِهِ أَنْ تُصِيبَهُمْ فِتْنَةٌ أَوْ يُصِيبَهُمْ عَذَابٌ أَلِيمٌ ۝

ஆக, அவருடைய கட்டளைக்கு மாறுசெய்பவர்கள் (-உள்ளங்கள் இறுகி நிராகரிப்பு என்னும்) குழப்பம் தங்களை அடைந்துவிடுவதை; அல்லது, வலிதரும் (கடுமையான) தண்டனை தங்களை அடைந்துவிடுவதைப் பற்றி உஷாராக (பயந்தவர்களாக) இருக்கட்டும். (அல்குர்ஆன் 24 : 63)

இப்படி பல நூறு வசனங்களை படித்துப் பார்த்து நீ நேர்வழி பெறுவாயாக!

அல்லாஹ்வே! எங்களுக்கு உன் வேதம் மற்றும் ஸுன்னாவின் நல்லறிவை தா! அறிவினால் நாங்கள் வழிகெடாமல் எங்களை பாதுகாத்துக்கொள்! உன் அருளைக் கொண்டு எங்கள் மரணம் இஸ்லாமில் ஈமானில் நிகழ்கிற வரை எங்களை ஷைத்தானிடமிருந்தும் வழிகெடுக்கிற நஃப்ஸிடமிருந்தும் பாதுகாப்பாயாக! நிச்சயமாக நீதான் எங்கள் பாதுகாவலன், எங்கள் உரிமையாளன்.

அல்லாஹ்வே! நீ எங்களுக்கு நேர்வழி கொடுத்த பின்னர் எங்கள் உள்ளங்களை கோணலாக்கி விடாதே! உள்ளங்களை புரட்டக் கூடியவனே! எங்கள் உள்ளங்களை உனது மார்க்கத்தின் மீது உறுதிப்படுத்து! எங்களுக்கு நீ கொடுத்த அறிவையும் விளக்கத்தையும் எங்கள் நேர்வழிக்கும் நல்லறிவுக்கும் காரணமாக ஆக்கு! எங்களை கோணலான புத்தியிலிருந்தும், குதர்க்கத்தை தூண்டும் சிந்தனையிலிருந்தும், வழிகேட்டுக்கு தூண்டும் ஆசையிலிருந்தும், மார்க்கத்தை விட்டு பிறழச் செய்யும் குழப்பங்களிலிருந்தும், சந்தேகங்களை உண்டாக்கும் ஷைத்தானிடமிருந்தும் எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்!

• • •

சான்றோர் பாடசாலை அமர்வு 40, கூற்று 1552

## ஹலாலான உழைப்பே நிம்மதியான வாழ்க்கை!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا يَزِيدُ بْنُ إِبْرَاهِيمَ عَنِ الْـحَسَنِ قَالَ كَانَ يَقُولُ مَطْعَمَانِ طَيِّبَانِ رَجُلٌ يَعْمَلُ بِيَدِهِ وَآخَرُ يَحْمِلُ عَلَىٰ ظَهْرِهِ

ஹசன் ﵀ கூறுகிறார்கள்: இரண்டு வாழ்வாதாரங்கள் மிக சுத்தமான ஹலாலானவை ஆகும். ஒருவர் தமது கரத்தால் உழைக்கிறார். இன்னொருவர் தமது முதுகில் சுமக்கிறார்.

**கருத்து:** மனிதன் எவ்வளவு அதிகம் சம்பாதிக்கிறான், என்ன வேலை செய்கிறான் என்பது முக்கியமல்ல. மாறாக, மனிதன் தூய்மையாக, ஹலாலாக சம்பாதிக்கிறானா என்பதுதான் முக்கியம்! ஹலாலான வருமானமே நிலையானதும் நிம்மதியானதும் ஆகும்.

**விளக்கம்:** நல்லோர், சான்றோர் உடைய கவலைகள் எல்லாம் மறுமை விசாரணையாக இருக்கும்போது உலக செல்வத்திற்காக, உலக வாழ்க்கையின் தேவைகளுக்காக அவர்கள் எப்படி ஹராமான வழிகளை நாடக்கூடியவர்களாக இருப்பார்கள்?!

அல்லாஹ் நமக்கு இந்த மார்க்கத்தில் ஹலால் - ஆகுமானது, அனுமதிக்கப்பட்டது, ஹராம் - ஆகாதது, தடுக்கப்பட்டது என்று இரண்டை வைத்திருக்கிறான். நாம் ஹலாலை மட்டுமே தேட முடியும். நமக்கு விருப்பமானதும் ஹலாலாக இருக்க வேண்டும், அதை நாம் அடைகிற வழியும் ஹலாலாக இருக்க வேண்டும். ஹலாலிலும் எல்லை மீறக் கூடாது.

நமது இம்மை மறுமையின் நன்மைகளுக்காக இத்தகைய முறையான கட்டுப்பாடுகள் நமக்கு விதிக்கப்பட்டுள்ளன.

முதலில் ஒரு சில குர்ஆன் வசனங்களை பார்ப்போம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ وَاشْكُرُوا لِلَّهِ إِنْ كُنْتُمْ إِيَّاهُ تَعْبُدُونَ ○

நம்பிக்கையாளர்களே! நாம் உங்களுக்கு வழங்கிய நல்லவற்றில் இருந்து உண்ணுங்கள்! இன்னும், அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள், அவனையே (நீங்கள்) வணங்குபவர்களாக இருந்தால். (அல்குர்ஆன் 2 : 172)

وَكُلُوا مِمَّا رَزَقَكُمُ اللَّهُ حَلَالًا طَيِّبًا وَاتَّقُوا اللَّهَ الَّذِي أَنْتُمْ بِهِ مُؤْمِنُونَ ○

இன்னும், அல்லாஹ் உங்களுக்கு வழங்கியவற்றில் அனுமதிக்கப்பட்ட நல்லதை புசியுங்கள். இன்னும், நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிற அல்லாஹ்வை அஞ்சுங்கள். (அல்குர்ஆன் 5 : 88)

அல்லாஹு தஆலா நம்பிக்கை கொண்ட முஃமின்களை அழைக்கிறான். தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ், இறை தியானம் போன்ற நல்லறங்களுக்கு கட்டளை இடுவது போன்று அவர்களுக்கு ஹலாலான வழியில் உணவு உண்ணுங்கள்! ஹலாலான வழிகளில் பொருளீட்டுங்கள்! ஹலாலான உணவுகளே உங்கள் உடலுக்குள் செல்ல வேண்டும் என்று அல்லாஹ் கட்டளை இடுகிறான்.

இன்னும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

يَا أَيُّهَا النَّاسُ كُلُوا مِمَّا فِي الْأَرْضِ حَلَالًا طَيِّبًا وَلَا تَتَّبِعُوا خُطُوَاتِ الشَّيْطَانِ إِنَّهُ لَكُمْ عَدُوٌّ مُبِينٌ ○

மக்களே! பூமியிலுள்ளவற்றில் அனுமதிக்கப்பட்ட நல்லதையே உண்ணுங்கள். இன்னும், ஷைத்தானின் அடிச்சுவடுகளை (-அவன் உங்களை அழைக்கும் அவனது பாதைகளை)ப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான எதிரி ஆவான். (அல்குர்ஆன் 2 : 168)

அல்லாஹ்வின் இந்த கட்டளை மக்கள் எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தாலும் இதை ஏற்று நடப்பவர்கள் முஃமின்கள் மட்டும்தான். உலகத்தில் இன்று மனிதர்களுக்கு மத்தியில் தோன்றுகிற, இன்னும் இருக்கிற எல்லா குழப்பங்களுக்கும் பிரச்சனைகளுக்கும் காரணம், தகாத வருமானங்கள்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்று, உலகத்தையே அச்சுறுத்துகிற ஒரு காரியம் இருக்கிறது என்றால் மனிதன் செய்கிற சட்டவிரோதமான தொழில்களும் பண பரிவர்த்தனைகளும்தான். ஆம், போதைப் பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல், விபச்சாரம், மது வியாபாரம், பாலியல் தொழில், ஆடல், பாடல் நடக்கும் இரவு விடுதிகள், சினிமா தொழில் என்று பல உள்ளன. இவற்றில் சிலவற்றை மனிதன் தவறு என்று ஒப்புக்கொள்வான். சிலவற்றை நியாயப்படுத்துவான்.

நாட்டின் செல்வங்கள் தவறான வழியில் சில நபர்களிடம் குவிவது மிக ஆபத்தான ஒன்று என்பதை இன்றைய சமுதாயம் ஏற்க மறுக்கிறது. நாட்டின் மொத்த மக்கள் தொகையின் வருமானத்தின் அளவு ஒரு தனி நபர் உடைய வருமானம் இருக்கிறது என்றால் அவருடைய இந்த வளர்ச்சிக்கு பின்னால் தவறான பல வழிகள் இருக்கின்றன என்பதை இன்றைய பொருளாதார நிபுணர்கள் கூறுவதை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

ஆகவேதான், நமக்கு அனுப்பப்பட்ட நபி ﷺ அவர்களின் பணிகளில் முக்கியமான ஒன்றாக இது இருந்தது. அதாவது, ஹலாலான உணவுகளை, ஹலாலான வருவாய்களை, ஹலாலான தொழில்களை மக்களுக்கு காண்பித்துக் கொடுப்பது, தவறான உணவுகளை, தவறான வருவாய்களை, தவறான தொழில்களை விட்டு மக்களை தடுப்பது, இது நபி ﷺ அவர்கள் செய்த முக்கிய பணியாகும்.

இதன் மூலம்தான் சமுதாயம் சீர் பெற முடியும்; சமுதாயத்தில் பொருளாதார சீர்நிலை, சமநிலை ஏற்பட முடியும்; ஏழைகளின் செல்வம் சுரண்டப்படாமல், ஏழைகள் ஏமாற்றப்படாமல், ஏழைகள் மீது அநியாயமான வரிகள் விதிக்கப்படாமல் இருக்கும். அல்லாஹு தஆலா நபி ﷺ அவர்களின் அந்த பணி பற்றி கூறுகிறான்:

وَيُـحِلُّ لَهُمُ الطَّيِّبَاتِ وَيُحَرِّمُ عَلَيْهِمُ الْخَبَائِثَ ○

இன்னும், நல்லவற்றை அவர்களுக்கு ஆகுமாக்குவார்; இன்னும், கெட்டவற்றை அவர்களுக்கு தடை செய்வார். (அல்குர்ஆன் 7 : 157)

இஸ்லாமிய மார்க்கத்தை வாழ்வியலாக ஏற்று, ஓர் இறையை வழிபட்டு, மறுமைதான் நிரந்தரமான உண்மையான வாழ்க்கை, அங்கு விசாரணையும் கூலியும் உண்டு, இறை மார்க்கத்தைப் பின்பற்றி நேரிய வழியில் நடந்த நல்லோருக்கு சொர்க்கமும், இறைவனுக்கு மாறுசெய்த தீய கெட்ட வழிகளில் வாழ்ந்த தீயோருக்கு நரகமும் உண்டு என்ற நம்பிக்கை கொண்ட முஃமின்கள் கண்டிப்பாக இப்படித்தான் வாழவேண்டும், இப்படித்தான் பொருளீட்ட வேண்டும், இதைத்தான் அனுபவிக்க வேண்டும் என்று ஹலாலான வாழ்க்கையில் மட்டுமே இருப்பார்கள்.

முஃமின்கள் மனம் விரும்பியதை செய்ய மாட்டார்கள்.

முஃமின்கள் மக்களுக்கு பின்னால் செல்ல மாட்டார்கள்.

முஃமின்கள் மார்க்கத்தின் பின்னால் செல்வார்கள்.

முஃமின்கள் நபி ﷺ அவர்களுக்கு பின்னால் செல்வார்கள்.

முஃமின்கள் மக்களின் சரிகாணுதலை தங்கள் மார்க்கத்தின் அளவுகோலாக ஆக்கமாட்டார்கள்.

முஃமின்கள் மக்களின் அறிவையோ, உணர்வையோ, பண்பாட்டையோ, கலாச்சாரத்தையோ தங்கள் செயல்களுக்கு ஆதாரமாக ஆக்க மாட்டார்கள்.

முஃமின்களுக்கு ஒரே கவலை மறுமையாக இருக்கும்.

முஃமின்களுக்கு ஹலால் மீதுண்டான ஆசையை விட ஹராம் மீது பயம் அதிகமாக இருக்கும்.

முஃமின்கள் ஹலாலில் அளவு கடப்பதை பயப்படுவார்கள். ஹராமையோ அதை விட்டு வெகுதூரம் விலகி ஓடுவார்கள். அதற்குரிய காரணம் இதோ அலீ رضي الله عنه அவர்கள் கூறுகிறார்கள்:

قَالَ رَجُلٌ لِعَلِيِّ بْنِ أَبِي طَالِبٍ كَرَّمَ اللهُ وَجْهَهُ يَا أَمِيرَ الْمُؤْمِنِينَ صِفْ لَنَا الدُّنْيَا قَالَ مَا أَصِفُ مِنْ دَارٍ أَوَّلُهَا عَنَاءٌ وَآخِرُهَا فَنَاءٌ حَلَالُهَا حِسَابٌ وَحَرَامُهَا عِقَابٌ مَنِ اسْتَغْنَىٰ فِيهَا فُتِنَ وَمَنِ افْتَقَرَ فِيهَا حَزِنَ»

ஓர் ஆடவர் அலீ رضي الله عنه அவர்களிடம் கேட்டார், அமீருல் முஃமினீன் அவர்களே! எங்களுக்கு உலகத்தை விளக்கிக் கூறுங்கள்! அதற்கு அலீ رضي الله عنه கூறினார்கள்: ஓர் வீட்டை நான் என்ன வர்ணிப்பேன்! அதன் தொடக்கம்

களைப்பு, அதன் இறுதி அழிவு, அதன் ஹலால் விசாரணைக்கு உட்பட்டது, அதன் ஹராம் தண்டனைக்கு உரியது, யார் அதில் செல்வந்தராக இருப்பாரோ அவர் சோதனைக்கு ஆளாகிவிட்டார், அதில் யார் ஏழையாக இருப்பாரோ அவர் கவலைப்படுவார். (இதுதான் உலகத்தின் உண்மை நிலையாகும்.)

இன்று பலருக்கு ஹலால் என்றால் என்ன? ஹராம் என்றால் என்ன? நாம் ஏன் அதன் பக்கம் நெருங்கக் கூடாது? என்று தெரிவதும் இல்லை. அப்படியே தெரிந்தாலும் அதை பின்பற்றுவதுமில்லை. காரணம், ஒன்று, மார்க்கம் ஹராமை குறித்து எச்சரித்துள்ள எச்சரிக்கைகளை அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். அல்லது மறுமை நம்பிக்கையில் மிக பலவீனமாக இருக்கிறார்கள்.

ஹராமை குறித்து நபி ﷺ அவர்கள் கூறிய எச்சரிப்புகளில் ஒன்று பின்வருமாறு:

يَا أَيُّهَا النَّاسُ إِنَّ اللهَ طَيِّبٌ لَا يَقْبَلُ إِلَّا طَيِّبًا وَإِنَّ اللهَ أَمَرَ الْـمُؤْمِنِينَ بِمَا أَمَرَ بِهِ الْـمُرْسَلِينَ فَقَالَ يَا أَيُّهَا الرُّسُلُ كُلُوا مِنَ الطَّيِّبَاتِ وَاعْمَلُوا صَالِـحًا إِنِّي بِمَا تَعْمَلُونَ عَلِيمٌ وقالَ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُلُوا مِنْ طَيِّبَاتِ مَا رَزَقْنَاكُمْ قالَ وَذَكَرَ الرَّجلَ يُطِيلُ السَّفرَ أَشْعَثَ أَغْبَرَ يَمُدُّ يَدَهُ إِلَى السَّمَاءِ يَا رَبِّ يَا رَبِّ وَمَطْعَمُهُ حَرَامٌ وَمَشْرَبُهُ حَرَامٌ وَمَلْبَسُهُ حَرَامٌ وَغُذِيَ بِالْـحَرَامِ فَأَنَّىٰ يُسْتَجَابُ لِذٰلِكَ

மக்களே! நிச்சயமாக அல்லாஹ் தூயவன். அவன் ஏற்கமாட்டான், தூயதைத் தவிர. நிச்சயமாக அல்லாஹ் தூதர்களுக்கு ஏவியதை முஃமின்களுக்கு ஏவி இருக்கிறான். ஆக, அவன் கூறினான்: தூதர்களே! நல்லவற்றிலிருந்து உண்ணுங்கள்! நல்ல செயலை செய்யுங்கள்! நிச்சயமாக நான் நீங்கள் செய்வதை நன்கறிந்தவன். இன்னும் அவன் கூறினான்: நம்பிக்கையாளர்களே! உங்களுக்கு நாம் வழங்கிய நல்லவற்றிலிருந்து உண்ணுங்கள்! இன்னும், நபி ﷺ அவர்கள், அந்த ஆடவரை நினைவு கூர்ந்தார்கள், அவர் நீண்ட பயணம் செல்கிறார். முடியெல்லாம் பரட்டையாகி உடலெல்லாம் புழுதியாகிவிட்டது. அவர், என் இறைவா, என் இறைவா என்று கூறி, தன் கரத்தை வானத்தை

நோக்கி நீட்டுகிறார். அவருடைய உணவு ஹராமாக இருக்கிறது. அவரின் குடிப்பு ஹராமாக இருக்கிறது. அவரின் ஆடை ஹராமாக இருக்கிறது. அவர் ஹராமிலிருந்து உணவளிக்கப்பட்டிருக்கிறார். ஆக, அவருடைய துஆ எப்படி ஏற்கப்படும்?[60]

ஒரு மனிதன் ஹராமை செய்வதால், ஹராமில் உண்டு ஹராமில் உடுத்தி, ஹராமில் வாழ்வதால் அவனது இக்கட்டான நேரத்தில் அவன் கேட்கிற துஆக்கள் அங்கீகரிக்கப்படாமல் போய்விடுகிறது. துஆக்கள் அல்லாஹ்விடம் ஏற்கப்பட ஹலாலான வாழ்க்கை அவசியம். ஹலாலான வாழ்க்கை என்பது உணவு, உடை, உறைவிடம் ஹலாலாக இருப்பதன் மூலம்தான் பூர்த்தியாகிறது. வணக்க வழிபாடுகள் பலனற்று போய்விடும் ஹராமான உணவு உடலில் சென்றுவிட்டால்.

كَانَ لِأَبِي بَكْرٍ ﵁ غُلَامٌ يُخْرِجُ لَهُ الْخَرَاجَ وَكَانَ أَبُو بَكْرٍ يَأْكُلُ مِن خَرَاجِهِ فَجَاءَ يَوْمًا بِشَيْءٍ فَأَكَلَ مِنْهُ أَبُو بَكْرٍ فَقَالَ لَهُ الْغُلَامُ: أَتَدْرِي مَا هٰذَا فَقَالَ أَبُو بَكْرٍ وَمَا هُوَ قَالَ كُنْتُ تَكَهَّنْتُ لِإِنْسَانٍ فِي الْجَاهِلِيَّةِ وَمَا أُحْسِنُ الْكِهَانَةَ إِلَّا أَنِّي خَدَعْتُهُ فَلَقِيَنِي فَأَعْطَانِي بِذٰلِكَ فَهٰذَا الَّذِي أَكَلْتَ مِنْهُ فَأَدْخَلَ أَبُو بَكْرٍ يَدَهُ فَقَاءَ كُلَّ شَيْءٍ فِي بَطْنِهِ

அபூ பக்ர் ﵁ அவர்களுக்கு அடிமை ஒருவன் இருந்தான். அவன் (அடிமை என்ற முறையில் தன் எசமானாகிய) அபூ பக்ர் ﵁ அவர்களுக்கு(த் தனது சம்பாத்தியத்தில்) நிர்ணயிக்கப்பட்ட தொகையைச் செலுத்திவந்தான். அபூ பக்ர் ﵁ அவர்கள் அவன் செலுத்தும் தொகையிலிருந்து உண்டு வந்தார்கள். ஒருநாள் அவன் ஏதோ ஒரு பொருளைக் கொண்டு வந்தான். அதிலிருந்து அபூ பக்ர் ﵁ அவர்கள் சிறிது உண்டார்கள். அப்போது அவர்களிடம் அந்த அடிமை, “இது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டான். அபூ பக்ர் ﵁ அவர்கள், “இது என்ன?” என்று கேட்டார்கள்.

அவன், “நான் அறியாமைக் காலத்தில் ஒரு மனிதருக்குக் குறி சொல்லிவந்தேன்; எனக்கு நன்றாகக் குறி சொல்லத் தெரியாது. ஆயினும், (குறி சொல்லத் தெரிந்தவன் போல் நடித்து) அவரை நான் ஏமாற்றி விட்டேன். அவர் அதற்காக

60. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 2989.

எனக்குக் கூலி கொடுத்தார். நீங்கள் உண்டது (குறி சொன்னதற்காக) எனக்குக் கூலியாகக் கிடைத்த அந்தப் பொருளிலிருந்துதான்" என்று சொன்னான்.

உடனே அபூ பக்ர் ﵁ அவர்கள் தம் கையை (வாய்க்குள்) நுழைத்துத் தம் வயிற்றிலிருந்த அனைத்தையும் வாந்தி எடுத்துவிட்டார்கள்.[61]

يَا كَعْبُ بْنُ عُجْرةَ إِنَّهُ لَا يَدْخُلُ الْـجَنَّةَ لَـحْمٌ وَدَمٌ نَبَتَا عَلَىٰ سُحْتٍ اَلنَّارُ أَوْلَىٰ بِهِ يَا كَعْبُ بْنُ عُجْرةَ النَّاسُ غَادِيَانِ فَغَادٍ فِي فِكَاكِ نَفْسِهِ فَمُعْتِقُهَا وَغَادٍ مُوبِقُهَا يَا كَعْبُ بْنُ عُجْرةَ الصَّلَاةُ قُرْبَانٌ وَالصَّدَقَةُ بُرْهَانٌ وَالصَّوْمُ جُنَّةٌ وَالصَّدَقَةُ تُطْفِئُ الْـخَطِيئَةَ كَمَا يَذْهَبُ الْـجَلِيدُ عَلَى الصَّفَا

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: கஅபு இப்னு உஜ்ராவே! ஹராமான செல்வத்தில் வளர்ந்த சதையும் ரத்தமும் சொர்க்கத்தில் நுழையாது. அதற்கு நரகம்தான் தகுதியானதாகும். கஅபு இப்னு உஜ்ராவே! மக்கள் இருவகையாக காலையில் வெளியேறுகின்றனர். ஒருவர் தன்னை விடுவிப்பதற்காக காலையில் வெளியேறுகிறார். அவர் அதை விடுதலை செய்துவிடுகிறார். இன்னொருவர் காலையில் வெளியேறுகிறார், அவர் அதை அழித்துவிடுகிறார். கஅபு இப்னு உஜ்ராவே! தொழுகை ஒரு குர்பானியாகும். தர்மம் ஓர் சான்றாகும். நோன்பு கேடயமாகும். தர்மம் பாவத்தை அணைத்துவிடும் மலைப்பாறையின் மீது பனித்துளி விழுந்து சென்று விடுவதைப் போல.[62]

يَا كَعْبُ بْنُ عُجْرَةَ إِنَّهُ لَا يَرْبُو لَـحْمٌ نَبَتَ مِنْ سُحْتٍ إِلَّا كَانَتِ النَّارُ أَوْلَىٰ بِهِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: கஅபு இப்னு உஜ்ராவே! ஹராமினால் ஒரு சதை வளர்ந்தால் அதற்கு நரகமே மிகத் தகுதியாக இருக்கும்.[63]

இன்னும் இதுபோன்ற பல எச்சரிக்கைகள் இருக்கிற காரணத்தினால் நமது சான்றோர் மிக எச்சரிக்கையாக இருந்தார்கள். தங்களது உடலுக்குள் ஹராமான உணவு செல்வதை விட்டு மிக விலகியவர்களாகவும் அதை பயந்தவர்களாகவும் இருந்தார்கள்.

61. அறிவிப்பாளர்: ஆயிஷா ﵂, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 3842.
62. அறிவிப்பாளர்: கஅபு இப்னு உஜ்ரா ﵁, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 5567.
63. அறிவிப்பாளர்: கஅபு இப்னு உஜ்ரா ﵁, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 614.

ஆம், பேணுதலில் மிகப் பெரிய விஷயம் ஹராமான வருவாயை விட்டும் ஹராமான உணவை விட்டும் தவிர்ந்திருப்பதாகும்.

عَنْ أَنَسٍ ﵁ قَالَ مَرَّ النَّبِيُّ ﷺ بِتَمْرَةٍ مَسْقُوطَةٍ فَقَالَ لَوْلَا أَنْ تَكُونَ مِنْ صَدَقَةٍ لَأَكَلْتُهَا وَقَالَ هَمَّامٌ عَنْ أَبِي هُرَيْرَةَ ﵁ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ أَجِدُ تَمْرَةً سَاقِطَةً عَلَى فِرَاشِي

நபி ﷺ அவர்களுக்கு பசி அதிகமாக இருந்தும் தனது படுக்கையில் கிடந்த ஒரு பேரீத்தம் பழத்தை உண்ணாமல் விட்டார்கள். ஏனெனில், அது தர்மமாக கொடுக்கப்பட்டதாக இருக்குமோ என்ற ஐயம்தான்.[64]

சரி! மேற்கண்ட செய்திகளை நன்கு படித்து உணர்ந்துவிட்ட பிறகு இமாம் அவர்களின் கூற்றுக்குள் செல்வோம். இமாம் அவர்கள் இரு தொழில்களை மிக ஹலாலான வருமானமாக குறிப்பிடுகிறார்கள். இந்த இரண்டும் பார்ப்பதற்கு மக்கள் பார்வையில் கண்ணியமற்றதாக தெரியலாம். இது ஒரு கூலிவேலை என்று மக்கள் ஏளனமாக பேசலாம். ஆம், இன்றைய காலத்தில் மக்கள் அப்படித்தான். ஹலால் ஹராம் உடைய அச்சம், பேணுதலுக்கெல்லாம் விலை என்ன என்று கேட்கிற நிலையில்தான் இருக்கிறார்கள்.

لَيَأْتِيَنَّ عَلَى النَّاسِ زَمَانٌ لَا يُبَالِي الْمَرْءُ بِمَا أَخَذَ الْمَالَ أَمِنْ حَلَالٍ أَمْ مِنْ حَرَامٍ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மக்கள் மீது ஒரு காலம் வரும், மனிதன் செல்வத்தை ஹலாலிலிருந்து எடுத்தானா அல்லது ஹராமிலிருந்தா என்று பொருட்படுத்தமாட்டான்.[65]

நமது காலம் அப்படித்தான் இருக்கிறது என்றால் அது மிகையல்ல.

மக்களுக்கு பணம் வேண்டும், செல்வம் வேண்டும். இதற்காக எந்த லெவலுக்கும் இறங்கி செல்ல மக்களில் பலர் தயாராக இருக்கின்றனர்.

ஆனால், ஒரு முஸ்லிமால் அப்படி இருக்க முடியாது. அவர் உழைத்து உண்பார், ஹலாலான வருமானத்திற்காக உழைப்பதில் வெட்கப்பட மாட்டார்.

64. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2431.
65. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2083.

அவமானம் எதுவென்றால் ஹராமான முறையில் சம்பாதித்து உலகத்தில் செல்வத்தோடு வாழ்ந்துவிட்டு மறுமையில் நரகத்திற்கு செல்வதுதான்.

குர்ஆன் இப்படித்தான் நம்மை எச்சரிக்கிறது:

رَبَّنَا إِنَّكَ مَنْ تُدْخِلِ النَّارَ فَقَدْ أَخْزَيْتَهُ وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنْصَارٍ

“எங்கள் இறைவா! நிச்சயமாக நீ எவரை நரக நெருப்பில் நுழைக்கிறாயோ அவரை திட்டமாக இழிவுபடுத்தி விட்டாய். உதவியாளர்கள் யாரும் அநியாயக்காரர்களுக்கு இல்லை.” (அல்குர்ஆன் 3 : 192)

ஆகவே, பிறர் பார்ப்பார்களே, மக்கள் என்ன சொல்வார்கள், எனது சமூக அந்தஸ்து என்ன என்று ஒரு முஸ்லிம் பார்க்க மாட்டான். உழைத்து உண்பதில் வெட்கப்பட மாட்டான்.

உழைத்து உண்பதை அல்லாஹ்வும் ரஸூலும் போற்றுகிறார்கள். மனிதர்களிடம் உள்ள கண்ணியம் உண்மையான கண்ணியமல்ல. அல்லாஹ்விடம் நமக்குள்ள கண்ணியம்தான் உண்மையானதும் நிலையானதும் ஆகும்.

لَأَنْ يَأْخُذَ أَحَدُكُمْ حَبْلَهُ فَيَأْتِيَ بِحُزْمَةِ الحَطَبِ عَلَى ظَهْرِهِ فَيَبِيعَهَا فَيَكُفَّ اللهُ بِهَا وَجْهَهُ خَيْرٌ لَهُ مِنْ أَنْ يَسْأَلَ النَّاسَ أَعْطَوْهُ أَوْ مَنَعُوهُ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் கயிறை எடுத்துக்கொண்டு சென்று, தனது முதுகில் விறகுக்கட்டை சுமந்து வந்து, அதை விற்பதும், அதனால் அவரின் முகத்தை யாசகத்திலிருந்து அல்லாஹ் பாதுகாப்பதும் அவர் மக்களிடம் யாசகம் கேட்பதை விட அவருக்கு மிக சிறந்ததாகும். மக்கள் அவருக்கு கொடுத்தாலும் சரி, தடுத்தாலும் சரி.[66]

لَأَنْ يَحْتَطِبَ أَحَدُكُمْ حُزْمَةً عَلَى ظَهْرِهِ خَيْرٌ له مِن أَنْ يَسْأَلَ أَحَدًا فيُعْطِيَهُ أَوْ يَمْنَعَهُ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒருவர் தனது முதுகில் விறகுக்கட்டை சுமப்பது அவர் யாரிடமும் யாசிப்பதை விட மிக சிறந்ததாகும்.

66. அறிவிப்பாளர்: ஸுபைர் இப்னு அவ்வாம் ﷺ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 1471.

அவர், அவருக்கு கொடுக்கட்டும், அல்லது அவருக்கு அவர் தடுக்கட்டும்.[67]

رُوِيَ أَنَّ دَاوُدَ النَّبِيَّ ﷵ كَانَ لا يَأْكُلُ إِلَّا مِن عَمَلِ يَدِهِ.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: தாவூத் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது கரத்தின் உழைப்பினால் தான் உண்பவர்களாக இருந்தார்கள்.[68]

كَانَ زَكَرِيَّاءُ نَـجَّارًا

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அச்சு தொழில் செய்பவராக இருந்தார்கள்.[69]

مَا أَكَلَ أَحَدٌ طَعَامًا قَطُّ خَيْرًا مِن أَنْ يَأْكُلَ مِن عَمَلِ يَدِهِ وإِنَّ نَبِيَّ اللهِ دَاوُدَ عليه السَّلامُ كَانَ يَأْكُلُ مِنْ عَمَلِ يَدِهِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: தனது கரத்தால் உழைத்து உண்பவரை விட யாரும் சிறந்த உணவை உண்ண முடியாது. நிச்சயமாக நபியுல்லாஹ் தாவூத் அவர்கள் தமது கரத்தால் உழைத்து உண்பவராக இருந்தார்கள்.[70]

நமது சான்றோர் நமக்கு சிறந்த முன்மாதிரி ஆவார்கள். அவர்களே நமக்கு உண்மையான ஹீரோக்கள், அவர்கள்தான் நமக்கு நட்சத்திரங்கள், அவர்களே நமக்கு முன்னோடிகள்.

நமது ஒழுக்கம், கல்வி, பேணுதல், இறை நம்பிக்கை, இறையச்சம், இவைதான் அல்லாஹ்வின் அருளால் நிலைத்து நிற்கக்கூடியவை ஆகும்.

யாசித்து உண்பதை விட, பிறரை ஏமாற்றி வாழ்வதை விட, கலப்படம் செய்து சம்பாதிப்பதை விட, நிறுவையில் அளவையில் மோசடி செய்து பொருளீட்டுவதை விட, பொய் சொல்லி தொழில் செய்வதை விட, லஞ்சம் ஊழல் என்று ஹராமான வழியில் செல்வத்தை சேகரிப்பதை விட தனது கையால் உழைத்து வாழ்வதும் முதுகில் மூட்டையை சுமந்து கூலி வேலை

67. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2374.
68. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2073.
69. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 2379.
70. அறிவிப்பாளர்: அல்மிக்தாம் இப்னு மஃதீ கரிப் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2072.

செய்து வாழ்வதும் இம்மைக்கும் மறுமைக்கும் எவ்வளவோ மேல்.

அல்லாஹ்வே! எங்களுக்கு உனது பயத்தையும் மறுமை பயத்தையும் அதிகப்படுத்து! ஹலாலான வாழ்க்கையைத் தா! ஹராமான வருவாயிலிருந்தும் ஹராமான வாழ்க்கையிலிருந்தும் எங்களை பாதுகாப்பாயாக!

அல்லாஹ்வே! ஹராமிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக! ஹராமான உணவுகளை விட்டும், ஹராமான உடைகளை விட்டும், ஹராமான தொழில்களை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்!

• • •

## தேவைக்கு அதிகமான எதுவும் ஆபத்தானதே!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا هَارُونُ بْنُ مَعْرُوفٍ حَدَّثَنَا ضَمْرَةُ عَنِ ابْنِ شَوْذَبٍ قَالَ قَالَ الْـحَسَنُ: مَنْ بَنَىٰ فَوْقَ مَا يَكْفِيهِ طُوِّقَهُ يَوْمَ الْقِيَامَةِ مِنْ سَبْعِ أَرَضِينَ

இமாம் ஹசன் ﵀ கூறுகிறார்கள்: யார் தமக்கு போதுமான அளவிற்கு மேல் கட்டிடம் கட்டுவாரோ மறுமையில் ஏழு பூமியிலிருந்து அதை அவருடைய கழுத்தில் அரிகண்டமாக மாட்டப்படும்.

**கருத்து:** உலகத்தில் எதையும் நமது தேவைக்கு ஏற்பதான் நாம் செய்துகொள்ள வேண்டும். தேவைக்கு அதிகமாக நாம் தேடுகிற எதுவும் நமக்கு வேதனையாகத்தான் மாறும். உலக செல்வத்தில் நமது அவசிய தேவைக்கு அதிகமாக உள்ள எல்லாம் நாம் மறுமைக்கு முற்படுத்த வேண்டிய சொத்தாகும். அதை உலக வாழ்க்கையில் வீண்விரயம் செய்து அழித்து நாசமாக்கி விடக்கூடாது.

**விளக்கம்:** மனிதன் மிகப் பெரிய பேராசைக்காரன்!

சுகபோகத்தை தேடுவதில் அலாதியான பிரியமுடையவன்!

அதிகமாக சொத்துகளை சேமிப்பதிலும் விதவிதமான பொருட்களிலும் ஆடம்பர வஸ்துக்களிலும் மனதை பறிகொடுக்கும் பலவீனமானவன்!

இன்னொரு பக்கம் மனிதனிடம் செல்வம் குவியும்போது அவன் அதை வெளிப்படுத்த வேண்டுமென்று ஆசைப்படுவான். அந்த செல்வத்தை கொண்டு தனக்கு கண்ணியமும் பதவியும் கிடைக்க வேண்டும் என்று விரும்புவான். தன்னைப் போல் யாரும் இல்லை, தன்னிடம் இருப்பது போல் யாரிடமும் இல்லை என்று காண்பிக்க விரும்புவான்.

ஆகவே, அதற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வான், தன்னை மட்டுமல்ல, தன்னை சுற்றி உள்ளதையும், தனக்குள்ளதையும் விலை உயர்ந்ததாக, மதிப்பு மிக்கதாக, ஆடம்பரமாக, பிறர் பார்த்தால் அவர்களுக்கு பிரமிப்பு ஊட்டக்கூடியதாக மாற்றிக் கொள்ள பெரு முயற்சி செய்வான்.

உலகமே தனக்கு வேண்டும், உலகத்தில் எல்லாம் தனக்கு வேண்டும், நானே அரசன், நானே பெரியவன், நானே பெரிய செல்வந்தன், என்னிடம் இருப்பதுதான் பிறரிடம் இருப்பதை விட அதிகமாகவும் உயர்வானதாகவும் இருக்கிறது என்று தற்புகழ்ச்சி செய்வதில் மிகவும் வல்லவன் மனிதன். அல்லாஹ் பாதுகாப்பானாக!

நாம் இந்த உலகத்தில் எவ்வளவு காலம் வாழ்ந்துவிட போகிறோம்!

இந்த உலகம் நமக்கு எத்தனை காலம்?

நாமும் இந்த உலகத்தில் நிரந்தரமானவர்கள் இல்லை.

இந்த உலகமும் நமக்கு நிரந்தரமானது இல்லை.

நாமும் மாறக்கூடியவர்கள். நமது உலகமும் மாறக்கூடியதுதான்.

நாம் இல்லாமல் இருந்தோம். பிறகு பிறந்தோம். பிறகு, குழந்தையாகவும் சிறுவனாகவும் விளையாடினோம். பிறகு படித்து வாலிபனாக வளர்ந்து திருமணம் முடித்து பிள்ளைகள் பெற்று, பிறகு வயோதிகமடைந்து மரணத்தை நோக்கி நிற்காமல் பயணித்துக் கொண்டே இருப்போம். ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறிக்கொண்டே இருப்போம்.

ஓடி ஆடி, இறுதியாக மண்ணறையில் அடங்கி போய்விடுவோம். புழுக்களுக்கும் பூச்சிகளுக்கும் இரையாகி, இருட்டு அறையில் நிரந்தர நித்திரையில் தங்கிவிடப்போகிறோம்.

இந்த உலகமோ ஒருவரிடமிருந்து இன்னொருவரிடம் என்று இடம் மாறிக்கொண்டே இருக்கும். இந்த உலகம் தொடர்ந்து அதன் உரிமையாளரை மாற்றிக் கொண்டே இருக்கும்.

ஓர் அரசனின் உரிமையாக இருந்த நாடும் காடும் அவனுக்கே நிரந்தரமாக இருந்து விடாது. அவன் இறந்த பின்னர் அவனது மகனுக்கு அதன் உரிமை மாறிவிடும்.

சக்கரவர்த்தியாக இருந்த தனது தகப்பனையே கொன்றுவிட்டு அல்லது சிறை பிடித்துவிட்டு அரியணை ஏறிய இளவரசர்களும் இருக்கிறார்கள். ஒரு

மன்னனை வீழ்த்திவிட்டு அவனை அடிமையாக்கி அவனது பெண்ணுக்கும் பொன்னுக்கும் மண்ணுக்கும் உரிமையாளர்களாக ஆகிய அரசர்களின் கதைகள் உலகம் தோன்றிய நாளிலிருந்து இன்று வரை நிறைய உள்ளன.

ஆம், அப்படித்தான் இந்த உலகம்.

இதில் மதி மயங்கியவன் இதன் சதி வலையில் சிக்கி மாண்டு விடுவான்.

இந்த உலகத்தில் அதிகம் ஆசைப்பட்டவன் அல்லல்பட்டே சாவான்.

இந்த உலகம் எனக்கு கணக்கில்லாமல் வேண்டும் என்று அயராது உழைத்தவன் திடீர் மரணத்தால் செத்துப் போவான்.

நிற்காமல் உழைப்பேன், அயராமல் பாடுபடுவேன், உண்ணாமல், உறங்காமல், சலைக்காமல் சம்பாதிப்பேன் என்றெல்லாம் செல்வத்திற்கு பின்னால் ஓடியவர்கள் அந்த செல்வத்தினாலேயே உயிரை பறிகொடுத்திருக்கிறார்கள்.

இந்த உலகம் பட்டு கம்பளம் விரிக்கப்பட்ட சதுப்பு நிலமாகும். அதில் காலை வைத்தால்தான் தெரியும் அது மனிதனை காவு வாங்கும் மர்ம பூமி என்று.

இந்த உலகம் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் அவற்றின் தீனியோடு விரிக்கப்படுகிற வலைகள் போன்றது. அதற்குள் காலை வைக்கும்போதுதான் அந்த விலங்கிற்கு தெரியும், தான் மாட்டிக்கொண்டது. அப்படித்தான் இந்த உலகமும். இதில் அதிகத்தை தேடி அலைந்தவன் அந்த அதிகம் கிடைக்கப்பெற்ற பின்னர் எப்படி சிரமப்படுகிறான் என்று.

வஞ்சகம் செய்து, சூழ்ச்சிகள் பல செய்து, ஏமாற்று வேலைகள் பல பார்த்து, பொய்கள் பல கூறி, பித்தலாட்டங்கள் பல செய்து, பலபேரின் வயிற்றில் அடித்து, பலருடையதை அபகரித்து, உரிமைகளை கொடுக்காமல், கடன்களை அடைக்காமல் சொத்துகளை சேர்த்தோர் எல்லாம் அந்த சொத்துகளுக்கு நிரந்தர சொந்தக்காரர்களாக ஆகிவிட்டார்களா? எங்கள் சொத்து என்று பெயர் மாற்றி பத்திரம் போட்டுக் கொண்டார்கள்.

ஆனால், எத்தனை நாளைக்கு அல்லது எத்தனை ஆண்டுகளுக்கு அந்த பத்திரங்கள். ஒரு நாள் நீ அவற்றை இழப்பாய்! அல்லது கண்டிப்பாக உன்னை விட்டு அவை பறிபோகும், எப்படி பிறரிடமிருந்து உன்னிடம் வந்ததோ அதுபோலவே உன்னிடம் இருக்க வேண்டிய காலம் முடிந்த உடன் எழுதப்பட்ட விதியின் படி அது யாருக்கு செல்ல வேண்டுமோ அவர்களுக்கு கண்டிப்பாக சென்று விடும்.

இரவில் மதுவின் போதை ஏறியவன் பகலில் அதிலிருந்து தெளிவுபெறுவது போலவே இந்த உலக மோகம் என்ற போதையிலிருந்து அவனுக்கு ஒரு நாள் தெளிவு கிடைக்கும். அப்போது அவன் கைசேதப்படுவான், தனது முட்டாள்தனத்தை நினைத்து வருந்துவான், இறைவனிடம் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை கேட்டு அழுது பிரலாபிப்பான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَأَنفِقُوا مِن مَّا رَزَقْنَاكُم مِّن قَبْلِ أَن يَأْتِيَ أَحَدَكُمُ الْمَوْتُ فَيَقُولَ
رَبِّ لَوْلَا أَخَّرْتَنِي إِلَىٰ أَجَلٍ قَرِيبٍ فَأَصَّدَّقَ وَأَكُن مِّنَ الصَّالِحِينَ○

இன்னும், உங்களில் ஒருவருக்கு மரணம் வருவதற்கு முன்னர் நாம் உங்களுக்கு கொடுத்தவற்றில் இருந்து (நல்ல வழிகளில்) தர்மம் செய்யுங்கள். ஆக, (ஒருவருக்கு மரணம் வந்துவிட்டால்) அவர் கூறுவார்: "என் இறைவா! நீ என்னை (-என் மரணத்தை) கொஞ்சம் சமீபமான தவணை வரை (இவ்வுலகில்) பிற்படுத்தி வைக்கமாட்டாயா! (இன்னும் சிறிது காலம் வாழவைக்க மாட்டாயா!). நான் தர்மம் செய்வேனே, நல்லவர்களில் ஆகிவிடுவேனே."

(அல்குர்ஆன் 63 : 10)

قُلْ لِعِبَادِيَ الَّذِينَ آمَنُوا يُقِيمُوا الصَّلَاةَ وَيُنْفِقُوا مِمَّا رَزَقْنَاهُمْ سِرًّا
وَعَلَانِيَةً مِنْ قَبْلِ أَنْ يَأْتِيَ يَوْمٌ لَا بَيْعٌ فِيهِ وَلَا خِلَالٌ○

(நபியே! என் மீது) நம்பிக்கைகொண்ட என் அடியார்களுக்கு கூறுவீராக: "அவர்கள் தொழுகையை நிலை நிறுத்தட்டும்; இன்னும், நாம் அவர்களுக்கு கொடுத்தவற்றிலிருந்து இரகசியமாகவும், வெளிப்படையாகவும் தர்மம் செய்யட்டும் ஒரு நாள் வருவதற்கு முன்னதாக. அந்நாளில் கொடுக்கல் வாங்கலும் நட்பும் இருக்காது."

(அல்குர்ஆன் 14 : 31)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَنْفِقُوا مِمَّا رَزَقْنَاكُمْ مِنْ قَبْلِ أَنْ يَأْتِيَ يَوْمٌ لَا بَيْعٌ
فِيهِ وَلَا خُلَّةٌ وَلَا شَفَاعَةٌ وَالْكَافِرُونَ هُمُ الظَّالِمُونَ○

நம்பிக்கையாளர்களே! ஒரு நாள் வருவதற்கு முன்னர் நாம் உங்களுக்கு வழங்கியதிலிருந்து தர்மம் புரியுங்கள். அதில் வியாபாரமும் நட்பும்,

பரிந்துரையும் இருக்காது. (மறுமை நாளை) நிராகரிப்பவர்கள்தான் (பெரும்) அநியாயக்காரர்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 2 : 254)

وَلَوْ تَرَىٰ إِذِ الْمُجْرِمُونَ نَاكِسُو رُءُوسِهِمْ عِنْدَ رَبِّهِمْ رَبَّنَا أَبْصَرْنَا وَسَمِعْنَا فَارْجِعْنَا نَعْمَلْ صَالِحًا إِنَّا مُوقِنُونَ○

குற்றவாளிகள் தங்கள் இறைவனிடம் தங்கள் தலைகளை தாழ்த்தியவர்களாக, எங்கள் இறைவா! நாங்கள் (உனது தண்டனையை கண்கூடாகப்) பார்த்தோம்; இன்னும், (உனது தூதர்களை நீ உண்மைப்படுத்தியதையும்) நாங்கள் செவியுற்றோம். ஆகவே, எங்களை (உலகிற்கு) திரும்ப அனுப்பு! நாங்கள் நற்செயல்களைச் செய்வோம். (நீதான் வணக்கத்திற்குரியவன்; நீ கூறிய மறுமை, சொர்க்கம், நரகம் எல்லாம் உண்மை என்று இப்போது) நிச்சயமாக நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்று கூறுகிற சமயத்தை நீர் பார்த்தால் (அது திடுக்கம் மிகுந்த ஒரு காட்சியாக இருக்கும்). (அல்குர்ஆன் 32 : 12)

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு வசனமும் நமக்கு உணர்த்துகிற பாடம் என்ன?

அல்லாஹ் நமக்கு கொடுத்த செல்வம் மறுமையின் சொர்க்க வீட்டை தேடுவதற்காக ஆகும்.

அல்லாஹ்வின் அன்பையும் பொருத்தத்தையும் மன்னிப்பையும் பெற்றுக்கொள்வதற்காக அல்லாஹ் நமக்கு இந்த உலக வாழ்க்கையில் செல்வத்தை கொடுத்திருக்கிறான். அது எப்படி நமக்கு சாத்தியமாகும் என்றால் நமது அவசிய தேவைக்கு போக மீதமுள்ளதை குறிப்பிட்ட அளவு நமது வாரிசுகளுக்கு ஒதுக்கிய பின்னர் நமது மறுமைக்காக அந்த செல்வத்தை தர்ம காரியங்களில் செலவு செய்ய வேண்டும்.

அல்லாஹ்வின் இல்லங்களையும், மார்க்க கல்வி சாலைகளை, இலவச மருத்துவமனைகளை, ஏழைகள் எளியவர்களுக்கு தங்கும் விடுதிகளை கட்டி எழுப்புவதிலும், அல்லாஹ்வின் மார்க்கத்தை பரப்புவதற்காக, மார்க்க கல்வியை வளர்ப்பதற்காக, ஏழை எளியோரின் வாழ்க்கை மேம்படுவதற்காக, உறவுகளின் ஹலாலான தேவைகளுக்காக இப்படி நல்ல வழிகளை தேடி அவற்றில் கருமித்தனம் இல்லாமல் விசாலமான உள்ளத்துடன் இரவு பகலாக தர்மம் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَيَسْأَلُونَكَ مَاذَا يُنْفِقُونَ قُلِ الْعَفْوَ○

இன்னும், அவர்கள் எதைத் தர்மம் செய்யவேண்டுமென உம்மிடம் கேட்கிறார்கள். "(உங்கள் தேவைக்குப் போக) மீதமுள்ளதை (தர்மம் செய்யுங்கள்)" எனக் கூறுவீராக! (அல்குர்ஆன் 2 : 219)

الَّذِينَ يُنفِقُونَ أَمْوَالَهُم بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِندَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ○

எவர்கள் தங்கள் செல்வங்களை இரவிலும், பகலிலும் இரகசியமாகவும், வெளிப்படையாகவும் தர்மம் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு; அவர்கள் மீது பயமுமில்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 274)

لَيْسَ الْبِرَّ أَنْ تُوَلُّوا وُجُوهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ وَلَكِنَّ الْبِرَّ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَالْمَلَائِكَةِ وَالْكِتَابِ وَالنَّبِيِّينَ وَآتَى الْمَالَ عَلَىٰ حُبِّهِ ذَوِي الْقُرْبَىٰ وَالْيَتَامَىٰ وَالْمَسَاكِينَ وَابْنَ السَّبِيلِ وَالسَّائِلِينَ وَفِي الرِّقَابِ وَأَقَامَ الصَّلَاةَ وَآتَى الزَّكَاةَ وَالْمُوفُونَ بِعَهْدِهِمْ إِذَا عَاهَدُوا وَالصَّابِرِينَ فِي الْبَأْسَاءِ وَالضَّرَّاءِ وَحِينَ الْبَأْسِ أُولَئِكَ الَّذِينَ صَدَقُوا وَأُولَئِكَ هُمُ الْمُتَّقُونَ○

நன்மை என்பது மேற்கு, கிழக்கு நோக்கி உங்கள் முகங்களை நீங்கள் திருப்புவது அல்ல. எனினும், அல்லாஹ்வையும், இறுதிநாளையும், வானவர்களையும், வேதத்தையும், நபிமார்களையும் நம்பிக்கை கொண்டவர்கள்; இன்னும் செல்வத்தை அதன் விருப்பம் (தமக்கு) இருப்பதுடன் உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசகர்களுக்கும், அடிமைகளுக்கும் கொடுத்தவர்கள்; தொழுகையை நிலைநிறுத்தியவர்கள்; ஸகாத்தைக் கொடுத்தவர்கள்; மேலும், உடன்படிக்கை செய்தால் தங்கள் உடன்படிக்கையை நிறைவேற்றுபவர்கள்; கொடிய வறுமையிலும், நோயிலும், போர் சமயத்திலும் பொறுமையாக இருப்பவர்கள்

ஆகிய இவர்களுடைய செயல்கள்தான் நன்மை ஆகும். அவர்கள் எத்தகையோர் என்றால் (தங்கள் நம்பிக்கையை) உண்மைப்படுத்தினார்கள். இன்னும், அவர்கள்தான் அல்லாஹ்வை அஞ்சக் கூடியவர்கள் ஆவார்கள்! (அல்குர்ஆன் 2 : 177)

இதுபோன்ற வசனங்கள் உண்மையான நம்பிக்கையாளரை கண்டிப்பாக நல்ல வழியில் அதிகமதிகம் செலவு செய்வதற்கு தூண்டிக்கொண்டே இருக்கும். ஹராமான வழிகளில் செலவு செய்வதை விட்டும், தேவையற்ற அனாவசியமான காரியங்களில் செலவு செய்வதை விட்டும், ஆடம்பரமான தேவைகளில் செலவழிப்பதை விட்டும், அற்ப தேவைகளுக்கு அளவுக்கு அதிகமாக செலவு செய்வதை விட்டும், நிலையற்ற வாழ்க்கையின் சுகத்துக்காக மறுமையை மறந்து வீண் செலவுகள் செய்வதை விட்டும் தடுத்துக் கொண்டே இருக்கும்.

إِنَّ الْمُسْلِمَ لَيُؤْجَرُ فِي كُلِّ شَيْءٍ يُنْفِقُهُ إِلَّا فِي شَيْءٍ يَجْعَلُهُ فِي هَذَا التُّرَابِ

கப்பாப் ﵁ கூறுகிறார்கள்: நிச்சயமாக முஸ்லிம் செலவு செய்கிற எல்லாவற்றுக்கும் அவருக்கு நற்கூலி கொடுக்கப்படும். ஆனால், அவர் இந்த மண்ணில் செலவு செய்த செல்வத்தை தவிர.[71]

عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﵁ أَنَّ رَسُولَ اللهِ ﷺ خَرَجَ فَرَأَى قُبَّةً مُشْرِفَةً فَقَالَ مَا هَذِهِ قَالَ لَهُ أَصْحَابُهُ هَذِهِ لِفُلَانٍ رَجُلٍ مِنَ الْأَنْصَارِ قَالَ فَسَكَتَ وَحَمَلَهَا فِي نَفْسِهِ حَتَّى إِذَا جَاءَ صَاحِبُهَا رَسُولَ اللهِ ﷺ يُسَلِّمُ عَلَيْهِ فِي النَّاسِ أَعْرَضَ عَنْهُ صَنَعَ ذَلِكَ مِرَارًا حَتَّى عَرَفَ الرَّجُلُ الْغَضَبَ فِيهِ وَالْإِعْرَاضَ عَنْهُ فَشَكَا ذَلِكَ إِلَى أَصْحَابِهِ فَقَالَ وَاللهِ إِنِّي لَأُنْكِرُ رَسُولَ اللهِ ﷺ قَالُوا خَرَجَ فَرَأَى قُبَّتَكَ قَالَ فَرَجَعَ الرَّجُلُ إِلَى قُبَّتِهِ فَهَدَمَهَا حَتَّى سَوَّاهَا بِالْأَرْضِ فَخَرَجَ رَسُولُ اللهِ ﷺ ذَاتَ يَوْمٍ فَلَمْ يَرَهَا قَالَ مَا فَعَلَتْ

71. அறிவிப்பாளர்: கப்பாப் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 5672.

الْقُبَّةُ قَالُوا شَكَا إِلَيْنَا صَاحِبُهَا إِعْرَاضَكَ عَنْهُ فَأَخْبَرْنَاهُ فَهَدَمَهَا فَقَالَ أَمَا إِنَّ كُلَّ بِنَاءٍ وَبَالٌ عَلَى صَاحِبِهِ إِلَّا مَا لَا إِلَّا مَا لَا يَعْنِي مَا لَا بُدَّ مِنْهُ

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் (ஒரு முறை மதீனாவின் தெருக்களில்) வெளியே சென்றார்கள். அங்கு உயரமான ஒரு கோபுரத்தை பார்த்தார்கள். இது என்ன என்று கேட்டார்கள். நபியவர்களின் தோழர்கள், இது இன்ன அன்ஸாரி நபருக்கு சொந்தமானதாகும் என்று கூறினார்கள். நபியவர்கள் அமைதியாகி விட்டார்கள். அதை தமது மனதில் நிறுத்திக்கொண்டார்கள். அந்த கட்டிடத்தின் உரிமையாளர் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் மக்களுக்கு மத்தியில் இருக்கும்போது வந்து நபியவர்களுக்கு ஸலாம் கூறினார். நபியவர்கள் பதில் கூறாமல் அவரை புறக்கணித்தார்கள். நபியவர்கள் கோபத்தில் இருப்பதை அந்த மனிதர் அறிந்து கொண்டார். அவர் இதை தமது தோழர்களிடம் முறையிட்டார். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் வெறுப்பாக இருப்பதாக நான் கருதுகிறேன் என்று கூறினார். அதற்கு தோழர்கள் கூறினார்கள்: நபியவர்கள் ஒரு முறை வெளியே சென்றபோது உமது கோபுரத்தை பார்த்தார்கள். உடனே அந்த மனிதர் திரும்ப சென்று அந்த கோபுரத்தை இடித்து தரைமட்டமாக ஆக்கிவிட்டார். ஆக, மற்றொரு நாள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் வெளியே சென்றபோது அந்த கோபுரத்தை அவர்கள் பார்க்க முடியவில்லை. இங்கிருந்த கோபுரம் என்ன ஆனது என்று கேட்டார்கள். தோழர்கள் கூறினார்கள்: அதன் உரிமையாளர் நீங்கள் அவரை பார்க்காமல் புறக்கணித்ததைப் பற்றி எங்களிடம் முறையிட்டார். நாங்கள் அவருக்கு நடந்த செய்தியை கூறினோம். ஆகவே, அவர் அதை இடித்துவிட்டார். அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: எல்லா கட்டிடமும் அதன் உரிமையாளருக்கு நாசமாகவே அமையும். மிக அவசியமானதை தவிர.[72]

இறைவசனங்கள், நபியவர்களின் நற்போதனைகள், சான்றோரின் அறிவுரைகள் மூலம் படிப்பினை பெறாமல், உலக வாழ்க்கையை சுகபோகத்தை தேடுவதில் நாசமாக்கிய, மறதியில் மயங்கி கிடந்த மனிதன் மறுமையில் என்ன நிலையில் இருப்பான் என்பதை அல்லாஹ் வர்ணிக்கிறான்:

72. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: அபூதாவூத், எண்: 5237.

وَلَوْ تَرَىٰ إِذْ وُقِفُوا عَلَىٰ رَبِّهِمْ قَالَ أَلَيْسَ هَٰذَا بِالْحَقِّ قَالُوا بَلَىٰ وَرَبِّنَا قَالَ فَذُوقُوا الْعَذَابَ بِمَا كُنْتُمْ تَكْفُرُونَ○

இன்னும், (அவர்கள்) தங்கள் இறைவனுக்கு முன் நிறுத்தப்படும்போது நீர் (அவர்களைப்) பார்த்தால், (அப்போது இறைவன், விசாரணை நாளாகிய) இது உண்மை இல்லையா? என்று கூறுவான். அவர்கள், “எங்கள் இறைவன் மீது சத்தியமாக! ஏனில்லை (உண்மைதான்)” எனக் கூறுவர். “ஆகவே, நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்த காரணத்தால் இந்த தண்டனையை சுவையுங்கள்” என்று (இறைவன்) கூறுவான். (அல்குர்ஆன் 6 : 30)

وَلَوْ تَرَىٰ إِذْ وُقِفُوا عَلَى النَّارِ فَقَالُوا يَا لَيْتَنَا نُرَدُّ وَلَا نُكَذِّبَ بِآيَاتِ رَبِّنَا وَنَكُونَ مِنَ الْمُؤْمِنِينَ○

நரகத்தின் முன் அவர்கள் நிறுத்தப்படும் போது, (நபியே! நீர் அவர்களைப்) பார்த்தால், (அப்போது) அவர்கள் கூறுவார்கள்: “நாங்கள் (உலகத்திற்கு) திருப்பி அனுப்பப்பட வேண்டுமே! இன்னும், எங்கள் இறைவனின் வசனங்களை நாங்கள் பொய்ப்பிக்க மாட்டோமே; இன்னும், நம்பிக்கையாளர்களில் ஆகிவிடுவோமே!” (அல்குர்ஆன் 6 : 27)

وَلَوْ تَرَىٰ إِذْ فَزِعُوا فَلَا فَوْتَ وَأُخِذُوا مِنْ مَكَانٍ قَرِيبٍ○

“(நமது பிடி வரும்போது) அவர்கள் திடுக்கிடுவார்கள். ஆனால், (அவர்கள் அதிலிருந்து) தப்பிக்கவே முடியாது. இன்னும், வெகு சமீபமான இடத்திலிருந்து அவர்கள் பிடிக்கப்பட்டுவிடுவார்கள். (பின்னர் தண்டிக்கப்பட்டு அழிக்கப்படுவார்கள்.)” (நபியே!) இதை நீர் பார்த்தால் மிக ஆச்சரியமான ஒரு காரியத்தை பார்ப்பீர். (அல்குர்ஆன் 34 : 51)

இத்தகைய ஒரு நிலை நமக்கு வந்து விடாமல் இருக்க நாம் இம்மையை விட மறுமையை தேர்ந்தெடுக்க வேண்டும். உலக ஆசைகளை விட மறுமை ஆசையை முற்படுத்த வேண்டும். சொர்க்க வீட்டை வாங்குவதற்கு நமது செல்வத்தை அதிகமதிகம் அல்லாஹ் உடைய பாதையில் செலவழித்துக் கொண்டே இருக்க வேண்டும். எல்லா வகையான வீண் விரயங்களில் இருந்து நம்மை பாதுகாக்க வேண்டும். உலக தேவைக்காக உழைப்பது,

சம்பாதிப்பது தவறல்ல, பாவமல்ல. ஆனால், பாவம் என்பது அல்லாஹ்வை மறப்பதும் மறுமையை மறப்பதும்தான். அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

அல்லாஹ்வே! எங்களையும் எங்களுக்கு நீ கொடுத்த செல்வத்தையும் குடும்பத்தையும் உனக்காக உனது மார்க்கத்திற்காக நீ அங்கீகரித்துக் கொள்வாயாக! ஷைத்தானின் மாய வலைகளில் சிக்கி உலக ஆசாபாசங்களில் மூழ்கி அழிவதை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! நீ மகா கருணையாளன், மகா மன்னிப்பாளன், நீதான் எங்கள் எஜமானனும் பாதுகாவலனும் ஆவாய்.

அல்லாஹ்வே! நாங்கள் உன் பக்கமே மீளுகிறோம்! இந்த உலகத்தில் நீ எங்களுக்கு கொடுத்ததைக் கொண்டு மறுமையைத் தேடிக்கொள்கிற நற்பாக்கியத்தை எங்களுக்குத் தா! உலக மோகத்தில் மூழ்கிவிடாமல், அற்ப ஆசாபாசங்களில் சிக்கிவிடாமல், அழியும் உலகத்தில் மயங்கிவிடாமல், நீ கொடுத்த செல்வத்தை ஆடம்பரங்களிலும் வீண் செலவுகளிலும் செலவு செய்து மறுமையின் தண்டனைக்கு ஆளாகிவிடாமல் எங்களைப் பாதுகாத்துக்கொள்! ஆமீன்!

• • •

## செல்வம், ஆபத்துகள் நிறைந்தது!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَبْدُ الصَّمَدِ وَرَوْحٌ قَالَا حَدَّثَنَا الْأَسْوَدُ بْنُ شَيْبَانَ حَدَّثَنِي الْفَضْلُ حَدَّثَنَا رَوْحُ بْنُ ثَوْرٍ قَالَ: قُلْتُ لِلْحَسَنِ رَجُلَانِ طَلَبَ أَحَدُهُمَا الدُّنْيَا بِحَلَالِهَا فَأَصَابَهَا وَوَصَلَ مِنْهَا الرَّحِمَ وَقَدَّمَ مِنْهَا لِنَفْسِهِ وَجَانَبَ الْآخَرُ الدُّنْيَا قَالَ: أَحَبُّهُمَا إِلَيَّ الَّذِي جَانَبَ الدُّنْيَا قَالَ قُلْتُ يَا أَبَا سَعِيدٍ طَلَبَهَا بِحَلَالِهَا فَأَصَابَهَا فَوَصَلَ مِنْهَا رَحِمَهُ وَقَدَّمَ مِنْهَا لِنَفْسِهِ قَالَ أَحَبُّهُمَا إِلَيَّ الَّذِي جَانَبَ الدُّنْيَا

ரவ்ஹு இப்னு ஸவ்ர் ﵀ கூறுகிறார்: நான் இமாம் ஹசன் ﵀ அவர்களிடம் கேட்டேன், இரு நபர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் உலகத்தை அதற்குரிய ஹலாலான முறையில் தேடி, அதை அடைந்து கொள்கிறார். அதன் மூலம் தனது உறவுகளுக்கு கொடுத்து உதவுகிறார். இன்னும், தனது மறுமைக்காகவும் அதிலிருந்து முற்படுத்திக் கொள்கிறார். இன்னொருவர் உலகத்தை விட்டு ஒதுங்கி இருக்கிறார். (இந்த இருவரில் சிறந்தவர் யார் என்று கேட்கப்பட்டது?) அந்த இருவரில் எனக்கு பிரியமானவர் உலகத்தை விட்டு ஒதுங்கி இருப்பவர் என்று இமாம் ஹசன் ﵀ கூறினார்கள். நான் கேட்டேன், அபூ ஸயீத் அவர்களே! அவர் அதை அதற்குறிய ஹலாலான முறையில் தேடி அடைந்து அதன் மூலம் உறவுகளுக்கு கொடுத்து உதவினார். இன்னும் தனது மறுமைக்காக அதிலிருந்து முற்படுத்தியும் கொண்டார். ஹசன் ﵀ கூறினார்: அந்த இருவர்களில் எனக்கு பிரியமானவர் உலகத்தை விட்டு ஒதுங்கி இருப்பவர்தான்.

**கருத்து:** உலக செல்வம், பிரச்சனைகளை விட்டு நீங்கியதல்ல. எவ்வளவு

அதில் நன்மை இருக்கிறதோ அவ்வளவு அதில் தீமைகளும் குழப்பங்களும் ஆபத்துகளும் நிறையவே உள்ளன. ஆகவே, முடிந்தளவு அதிலிருந்து விலகி இருப்பதே நல்லது. நல்லது செய்யப் போகிறோம் என்று அந்த உலக செல்வங்களை தேடி அடைந்த பின்னர், மனம் மாறி குழப்பங்களுக்கு ஆளாகிவிட்டால் எத்தகைய நஷ்டம் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்! ஆகவே, தேவையான அளவிற்கு அள்ளிக் கொண்டு மற்றதை அப்படியே நீர் ஓடையில் ஓடுவதை போன்று விட்டுவிட வேண்டும். அல்லாஹ் அதை யாருக்கு எழுதி இருக்கிறானோ அது அவர்களுக்கு கிடைக்கும். அதிக செல்வம் வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதன் பின்னால் அலையக் கூடாது.

**விளக்கம்:** மதி மயங்க செய்கிற இந்த உலகத்தை என்னவென்று சொல்வது!

இந்த உலகம், குப்பைதான். ஆனால், யாருக்கு அது புரிகிறது!

இந்த உலகம், அற்பமானதுதான்! ஆனால், எல்லோருக்கும் அதன் மேலே ஒரு கண்.

இந்த உலகம், தற்காலிகமானதுதான். ஆனால், உள்ளமெல்லாம் அதுதான் நிரம்பி இருக்கிறது.

ஆயிரம் படிப்பினைகள் பெற்றாலும் அற்ப உலகத்தின் ஆசை உள்ளத்தை ஆட்டிப்படைக்கிறதே!

உலக ஆசையால் அழிந்துபோனவர்கள் கண்ணுக்கு ஆயிரம் பேர் தெரிந்தாலும் தாம் மட்டும் தப்பித்துக் கொள்வோம் என்று தமக்கு தாமே ஆறுதல் கூறி உலகத்துக்குள் விழுந்து, அதிலிருந்து மீள முடியாமல், அல்லாஹ்வை மறந்து, மார்க்கத்தை விட்டு தூரமாக சென்று விடுகிறான் மனிதன். அவனது வணக்க வழிபாடுகளும் குறைந்து விடுகின்றன. கடைசியில் திடீர் மரணத்தால் மண்ணறைக்குள் ஒடுங்கி அடங்கி விடுகின்றன மனிதனுடன் அவனது ஆசைகளும்.

உலகம், பல நிறங்களுடையது,

உலகம், பல வண்ணங்களுடையது.

உலகத்தில் மனிதனுக்கு பிடித்தமான பொருட்கள் பல உண்டு.

எல்லோருக்கும் எல்லாம் பிடிக்கும் என்று கூறிவிட முடியாது.

ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட ஒன்றின் மீது ஒரு கண் இருக்கும்.

உலக ஆசைகள் பலவிதம்.

சிலருக்கு நாற்காலி பிடிக்கும்.

சிலருக்கு தங்கம் வெள்ளி பிடிக்கும்.

சிலருக்கு மண் பிடிக்கும்.

சிலருக்கு பெண் பிடிக்கும்.

சிலருக்கு புகழ் பிடிக்கும்.

சிலருக்கு இவை எல்லாமே பிடிக்கும்.

பொதுவாக ராஜாக்கள் இப்படித்தான் இருப்பார்கள். ராஜாக்களுக்கு ஆசை அதிகமாக இருக்கும் என்பது மட்டுமல்ல. அளவுக்கு அதிகமாகவே இருக்கும். அதனால்தான் பல ராஜாக்கள் தங்களையே கடவுள் என்று சொல்லிக் கொண்டார்கள். பலருக்கு தானும் ராஜாவாக ஆக வேண்டுமென்று ஆசை.

சரி! எல்லாம் கிடைக்கப்பெற்ற ராஜாவுக்கு அவற்றை அனுபவிக்க வாழ்க்கை கிடைக்க வேண்டுமே! நீண்ட வாலிபம் கிடைக்க வேண்டுமே! வாலிபம் வயோதிகமாக மாற, அந்த வயோதிகம் தன்னுடன் பல நோய்களையும் கொண்டு வந்து அவரது உடலில் கூடாரம் போட்டுவிடுகிறது. வயோதிகத்திற்கு பிறகு வேறு என்ன வரும்? எதுவும் இருக்கிறதா என்றால் ஒன்றுமில்லை. மீதம் மரணம் மட்டும்தான்.

ஆக, எல்லாமே ஒரு தற்காலிகம்தானே!

ஒரு நாள் வரும் ராஜா தூங்குவார், தனது சொகுசு ஆடம்பர பஞ்சணையில், தனது அரண்மனையின் அழகிய அறையில், அன்பு ராணியின் அருகில், சகல பாதுகாப்புடன், ஒரு கொசு கூட பறக்க முடியாத, ஒரு ஈ கூட சுற்ற முடியாத அளவு சுகாதார வசதிகள் செய்யப்பட்ட நிலையில் தூங்குவார்.

ஆனால், இத்தகைய நிலையில் அவருக்கு ஓர் இரவு வரும். அந்த இரவு விடியும்போது காலையில் அவர் தானாகவும் எழ மாட்டார், பிறரால் அவர் எழுப்பப்பட்டாலும் எழ மாட்டார்.

இறுதியில் அவர் மண்ணறையில் துயில் கொள்ள சகல மரியாதையுடன் சுமந்து செல்லப்படுவார். அந்த அறையில் அரசருடன் ராணியும் இருக்க மாட்டார், பணி செய்ய சேவகர்களும் இருக்க மாட்டார்கள். ராஜாவுக்கு விசிறி வீச அடிமைப் பெண்களும் இருக்க மாட்டார்கள்.

உள்ளே அவருக்கு என்ன நடக்கிறது என்பதை அவர் யாரிடமும் முறையிட முடியாது. யாரும் உள்ளே சென்று நமது ராஜாவாயிற்றே, அவருக்கு அங்கே என்ன நடக்கிறது, அவருக்கு என்ன தேவை என்று கேட்க முன்வர முடியுமா?

இதுதான் உலகம். நமது உடலில் உயிர் ஊசலாடுகிற வரைதான் பட்டமும் பதவியும் பேரும் புகழும்.

மனிதன் உடலுக்குள் உயிர் இருக்கும் வரைதான் அவனது ஆட்டமும் பாட்டமும். அதற்கு பிறகு அவனுக்கு ஒன்றுமில்லை, அவனும் ஒன்றுமில்லை. அவன் சொர்க்கவாசி என்று அல்லாஹ்விடம் முடிவு செய்யப்பட்டிருந்தாலே தவிர.

உலக ஆசைகளில் இமாம் அவர்களிடம் குறிப்பாக இங்கு செல்வத்தை பற்றி கேட்கப்பட்டதற்கு, அவர்கள் எனக்கு இந்த உலக செல்வத்தை விட்டு விலகியவர்தான் பிரியமானவர் என்று ஒரே பதிலை திரும்ப திரும்ப கூறிவிட்டார்கள்.

அதைப் பற்றி நாம் சிந்திக்க கடமைப் பட்டுள்ளோம். அதாவது,

மனிதன் பேராசையினாலும் மறதியினாலும் அலட்சியத்தினாலும் சூழப்பட்டவனாக இருக்கிறான்.

உலக மோகத்தை இவனால் குறைக்க முடியுமா என்றால் அது மிக சிரமம்.

ஒரு ஹதீஸிலே வருகிறது:

قَلْبُ الشَّيْخِ شَابٌّ عَلَىٰ حُبِّ اثْنَتَيْنِ: حُبِّ العَيْشِ وَالْمَالِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: வயோதிகனின் உள்ளம் இரண்டு விஷயங்களை விரும்புவதில் வாலிபமாகவே இருக்கிறது. வாழ்க்கையை விரும்புவது, செல்வத்தை விரும்புவது.[73]

இன்னுமொரு ஹதீஸிலே வருகிறது:

يَكْبَرُ ابنُ آدَمَ ويَكْبَرُ مَعَهُ اثْنَانِ حُبُّ المَالِ وَطُولُ العُمُرِ

73. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6420.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மனிதன் பெரியவனாக ஆகிறான். அவனுடன் இரண்டு விஷயங்கள் பெரிதடைகின்றன. செல்வத்தை விரும்புதல், நீண்ட வாழ்க்கையை விரும்புதல்.[74]

இந்த இரு ஹதீஸ்களும் மனிதன் தனது ஆசையை கட்டுப்படுத்துவதில் மிக பலவீனமாக இருப்பான் என்பதை அழகாக தெளிவுப்படுத்துகின்றன. வயோதிகம் வந்த பின்னர்தான் ஆசையும் அதிகமாகிறது.

நரையை தலையில் பார்த்த பின்னர்தான் மனிதனுக்கு ஆசை கூடுகிறது.

தோல்கள் சுருங்கி கண் பார்வை மங்கி, கால்கள் நடக்க பலவீனப்பட்ட பிறகும் மனிதனுக்கு செல்வத்தின் மீது ஆசை கூடுகிறது என்றால் இவன் எத்தகைய முட்டாள் என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

மரணம் நெருங்கிய பின்னரும், பல நோய்கள் உடலுக்குள் குடிகொண்ட பின்னரும், மனிதன் மறுமைக்காக தனது செல்வத்தை செலவு செய்ய யோசிக்கிறான், அந்த நிரந்தர வாழ்க்கைக்காக செல்வத்தை முற்படுத்த தயங்குகிறான், அல்லாஹ் கொடுத்த செல்வத்தை அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்வதிலிருந்து பின்வாங்குகிறான் என்றால் இவன் ஒரு முட்டாள் இல்லையா? அதைத்தான் அல்லாஹ் இப்படி விவரிக்கிறான்:

إِنَّهُ كَانَ ظَلُومًا جَهُولًا ○

நிச்சயமாக அவன் அநியாயக்காரனாக அறியாதவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 33 : 72)

ஆம், நிச்சயமாக மனிதன் அப்படித்தான் இருக்கிறான், அல்லாஹ் நேர்வழிகாட்டிய நல்லோரை தவிர.

மனிதனுக்கு புத்தி அதிகமாக இருந்தாலும் அவன் படிப்பினை பெறுவது மிகக் குறைவுதான்.

எத்தனை முறை பட்டாலும் அதன் மூலம் பாடம் பெறுபவர்கள் சில பேர்தான்.

செல்வம் அழகானதும் கூட, அசிங்கமானதும் கூட.

செல்வம் நன்மையானதும் கூட, தீமையானதும் கூட.

செல்வம் பலனுள்ளதும் கூட, கெடுதியானதும் கூட.

74. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6421.

செல்வம் தேவையானதும் கூட, தேவையில்லாததும் கூட.

செல்வத்தின் தீங்கைப் பற்றி அறிஞர்கள் பல அறிவுரைகளை நமக்கு கூறி இருப்பதை இங்கு நினைவு கூர்ந்துவிட்டு இமாம் ஹசன் ﷀ அவர்கள் கூறிய கூற்றின் யதார்த்தத்தை புரிவோம்.

قَالَ أَبُو مُوسَى الْأَشْعَرِيُّ ﵁ إِنَّ هذَا الدِّينَارَ وَالدِّرْهَمَ أَهْلَكَا مَنْ كَانَ قَبْلَكُمْ وَإِنِّي مَا أُرَاهُمَا إِلَّا مُهْلِكَيْكُمْ

அபூ மூஸா அல்அஷ்அரி ﵁ கூறினார்கள்: நிச்சயமாக இந்த தீனார், திர்ஹம் இரண்டும் உங்களுக்கு முன்னுள்ளோரை அழித்துவிட்டது. அவை இரண்டும் உங்களையும் அழித்துவிடும் என்றே நான் கருதுகிறேன்.

قَالَ خَالِدُ بْنُ مَعْدَانَ ﵀ شَرُّ أَمْوَالِكُمْ مَا لَا تَرَاهُ وَلَا يَرَاكَ وَحِسَابُهُ عَلَيْكَ وَنَفْعُهُ لِغَيْرِكَ

காலித் இப்னு மஅதான்[75] ﵀ கூறினார்கள்: உங்கள் செல்வங்களில் மிகத் தீயது எதை நீ பார்க்கவில்லையோ, அதுவும் உன்னை பார்க்கவில்லையோ, அதைப் பற்றிய கேள்வி கணக்கு உன்மீதும் அதன் பலன் உன்னல்லாத மற்றவர்களுக்கும் இருக்கிறதோ அதுதான்.

قَالَ عَلِيُّ بْنُ أَبِي طَالِبٍ ﵁ يَا ابْنَ آدَمَ أَعْلَمُ أَنَّكَ لَا تَكْسِبُ مِنَ الْمَالِ شَيْئًا فَوْقَ قُوَّتِكَ إِلَّا كُنْتَ فِيهِ خَازِنًا لِغَيْرِكَ

அலீ இப்னு தாலிப் ﵁ கூறுகிறார்கள்: மனிதனே! உனது சக்திக்கு மேல் நீ சம்பாதிக்கிற செல்வமெல்லாம் அதை நீ பிறருக்காகத்தான் சேமிக்கிறாய்.

قَالَ الْإِمَامُ الْغَزَّالِي ﵀ اِعْلَمْ أَنَّ الْمَالَ مِثْلُ حَيَّةٍ فِيهَا سِمٌّ وَتِرْيَاقٌ فَفَوَائِدُهُ تِرْيَاقُهُ وَغَوَائِلُهُ سُمُومُهُ فَمَنْ عَرَفَ غَوَائِلَهُ وَفَوَائِدَهُ أَمْكَنَهُ أَنْ يَحْتَرِزَ مِنْ شَرِّهِ وَيَسْتَدِرَّ مِنْ خَيْرِهِ

75. இவர் தாபியீ, எழுபது ஸஹாபாக்களிடம் கல்வி கற்றவர், ஹிஜ்ரி 103ல் இறப்பெய்தினார்.

அறிஞர் கஸ்ஸாலி ﷺ கூறுகிறார்: அறிந்துகொள்! நிச்சயமாக செல்வம் ஒரு பாம்பை போன்றதாகும். அதில் விஷமும் மருந்தும் சேர்ந்தே இருக்கிறது. அதனால் ஏற்படும் பலன்கள் அதன் மருந்தாகும். அதனால் விளையும் ஆபத்துகள் அதன் விஷமாகும். ஆக, யார் அதன் ஆபத்துகளையும் அதன் பலன்களையும் அறிந்தாரோ அவர் அதன் தீமையிலிருந்து விலகி, அதன் பலனைக் கொண்டு பயன்பெறுவார்.

இன்னும் பல சான்றோர் இந்த செல்வத்தை பற்றி கூறியவை நமது முன்னோர் நூலில் ஏராளம் உள்ளன.

இமாம் ஹசன் ﷺ அவர்களின் கூடுதல் பயம்தான் அவர்களின் இந்தக் கூற்றுக்கு காரணம் ஆகும். ஹலாலான முறையில் சம்பாதித்து அதை சரியான வழிகளில் செலவுசெய்து மிக விரும்பத்தக்க செயலாக இருந்தாலும் அது எல்லோராலும் முடியுமா என்றால் அது மிக சிரமம்தான். சில நபித்தோழர்கள் செல்வத்தை விட்டு ஓடினார்கள், உலக பற்றற்ற வாழ்க்கையை தேர்ந்தெடுத்தார்கள், பல தாபியீன்கள் அரசர்களிடம் ஊழியம் செய்வதையும் நீதிபதி பதவிகள் வகிப்பதையும் விட்டு தூரமாகவே இருந்தார்கள், பதவிகளை மறுத்த காரணத்தால் பல துன்பங்களை சந்தித்தார்கள் என்பதை எல்லாம் நாம் பார்க்கிறோம்.

இதற்கு என்ன காரணம் என்றால் எங்கே இந்த உலக மோகத்தில் சிக்கி, அல்லாஹ்வை மறந்துவிடுவோமோ என்ற பயம்தான்.

பலரை இந்த செல்வம் மாற்றி இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

பல நல்லவர்களை பாவங்களின் படுகுழியில் தள்ளியிருக்கிறது இந்த செல்வம்.

நல்லா இருந்த பலரை தீயோரின் கூடா நட்புக்கு ஆளாக்கி, இறுதியில் அவர்களின் மானம் போய், மரியாதை போய், இறுதியில் உயிரே போய்விட்டது. இவற்றுக்கு மேலாக அவரின் இறுதி முடிவு கெட்டதாக அல்லவா ஆகிவிட்டது.

ஆகவேதான், தனக்கு போதுமான செல்வத்தை ஹலாலான முறையில் தேடிக்கொண்டு, அதன் பிறகு மறுமையை சம்பாதிப்பதில் ஈடுபடுவதுதான் புத்திசாலித்தனமாகும்.

நமது பசியை போக்குவதற்கும் உடலை மறைப்பதற்கும் படுத்து உறங்குவதற்கும் போதுமான அளவு செல்வம் இருந்தால் கடன் இல்லாத வாழ்க்கை இருந்தால் அதற்கு மேல் நாம் தேடி அலைந்து வாழ்க்கையை

வீணடித்துவிடாமல் மறுமைக்காக அமல்கள் செய்து சொர்க்கத்தின் உயர்ந்த பதவிகளை பெறுவதற்கு முயற்சி செய்வதுதான் புத்திசாலித்தனம்.

இங்கு ஏழையாக வாழ்ந்து மறுமையில் செல்வந்தனாக வாழ்வது சிறந்ததுதானே!

இங்கு சீமானாக வாழ்ந்துவிட்டு மறுமையில் கேள்வி கணக்கில் சிக்கி சீரழிந்து நரகப் படுகுழியில் ஒருவன் தள்ளப்பட்டால் அவனது இந்த உலக வாழ்க்கையின் செல்வத்தால் என்ன பலன்?!

பலர், தான் செல்வந்தனாக ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டு பல நூறு பேரை நடுத்தெருவில் நிற்கவிட்ட வரலாறும் இருக்கிறது.

தனது அளவையிலும் நிறுத்தலிலும் கொஞ்சம் மோசடி செய்தவர்களையே குர்ஆன் இப்படி எச்சரிக்கிறது:

وَيْلٌ لِلْمُطَفِّفِينَ ○ الَّذِينَ إِذَا اكْتَالُوا عَلَى النَّاسِ يَسْتَوْفُونَ ○ وَإِذَا كَالُوهُمْ أَوْ وَزَنُوهُمْ يُخْسِرُونَ ○ أَلَا يَظُنُّ أُولَئِكَ أَنَّهُمْ مَبْعُوثُونَ ○ لِيَوْمٍ عَظِيمٍ ○ يَوْمَ يَقُومُ النَّاسُ لِرَبِّ الْعَالَمِينَ ○

அளவில் மோசடி செய்பவர்களுக்குக் கேடுதான். அவர்கள் மனிதர்களிடம் அளந்து வாங்கினால், நிறைய அளந்து கொள்கின்றனர். மற்றவர்களுக்கு அவர்கள் அளந்து கொடுத்தாலும் அல்லது நிறுத்துக் கொடுத்தாலும் குறைத்து (அவர்களை நஷ்டப்படுத்தி) விடுகின்றனர். மகத்தான ஒரு நாளில், நிச்சயமாக அவர்கள் (உயிர் கொடுத்து) எழுப்பப்படுவார்கள் என்பதை அவர்கள் நம்பவில்லையா? அந்நாளில், மனிதர்கள் அனைவருமே உலகத்தாரின் இறைவன் முன் (விசாரணைக்காக) நின்று கொண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் 83 : 1-6)

ஆகவேதான் புத்திசாலிகள் இந்த உலகத்தில் எப்படி வாழ்வார்கள் என்றால் மறுமைக்கு பாதிப்பை ஏற்படுத்துகிற எதையும் அவர்கள் செய்ய மாட்டார்கள், அதில் ஈடுபட மாட்டார்கள். எதன் முடிவு ஆபத்தாக இருக்குமோ அதிலும் இறங்க மாட்டார்கள்.

உலகத்தை விற்று மறுமையை வாங்குபவர்கள்தான் புத்திசாலிகள். மறுமையை விற்று உலகத்தை வாங்குபவர்கள் அறிவீனர்கள்.

நெருப்போடு விளையாடுவது ஆபத்தானது என்று சொல்வார்கள். அப்படித்தான் இந்த செல்வத்தின் நிலையும்.

ஆகவே, அல்லாஹ் கொடுத்ததைக் கொண்டு திருப்தி அடைந்து, மறுமைக்கான அமல்களை அதிகப்படுத்துவதில் நாம் மும்முரமாக ஈடுபட வேண்டும். இந்த குறுகிய கால வாழ்க்கையில் நீண்ட நெடிய முடிவற்ற மறுமை வாழ்க்கைக்காக நாம் நன்மைகளை சேகரிக்க வேண்டியது இருக்கிறது. அதற்காகவே, இமாம் ஹசன் ﵀ அவர்கள் உலகத்தை விட்டு ஒதுங்கி மறுமையின் அமல்களில் ஈடுபடுபவர்தான் எனக்கு மிக விருப்பமானவர் என்று கூறுகிறார்கள்.

அல்லாஹ்வே! உண்மை முஃமின்களான அந்த நல்லோருக்கு புரிந்ததை எங்களுக்கு புரிய வைப்பாயாக! எங்களை உலக வாழ்க்கை மயக்கி விடாமல், அதன் சுக போகத்தில் மூழ்கடித்து விடாமல் எங்களை நீ உனது பாதுகாப்பால் பாதுகாத்து அருள்வாயாக! மறுமையில் எங்களை வெற்றியாளர்களில் ஆக்குவாயாக! ஆமீன்!

• • •

சான்றோர் பாடசாலை அமர்வு 43, கூற்று 1555

## நம்பிக்கையாளர் உலகத்திற்காக அலட்டிக் கொள்ள மாட்டார்

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا عَبْدُ الصَّمَدِ حَدَّثَنَا أَبُو كَعْبٍ عَبْدُ رَبِّهِ صَاحِبُ الْجُرَيْرِيِّ قَالَ: سَمِعْتُ الْـحَسَنَ يَقُولُ إِنَّ الْمُؤْمِنَ فِي الدُّنْيَا غَرِيبٌ لَا يَـجْزَعُ مِنْ ذُلِّهَا وَلَا يُنَافِسُ أَهْلَهَا فِي عِزِّهَا النَّاسُ مِنْهُ فِي رَاحَةٍ وَنَفْسُهُ مِنْهُ فِي شُغْلٍ فَطُوبَىٰ لِعَبْدٍ كَسَبَ طَيِّبًا وَقَدَّمَ الْفَضْلَ لِيَوْمِ فَقْرِهِ وَفَاقَتِهِ وَجِّهُوا هٰذَا الْفَضْلَ حَيْثُ وَجَّهَهُ اللهُ وَلَا تُلْقُوهَا هَاهُنَا فِيمَا يَضُرُّكُمْ

இமாம் ஹசன் ﵀ கூறுகிறார்கள்: நிச்சயமாக முஃமின் உலகத்தில் அன்னியராக இருப்பார். அதன் இழிவைக் கண்டு கலங்க மாட்டார். அதன் கண்ணியத்தில் உலகவாசிகளோடு போட்டி போட மாட்டார். மக்கள் அவரைப் பற்றி நிம்மதியாக இருப்பார்கள். அவரின் ஆன்மா அவர் சம்பந்தப்பட்ட காரியத்தில் ஈடுபட்டதாக இருக்கும். ஆகுமானதை சம்பாதித்து, தன(து அவசிய செலவு) க்கு போக மீதமுள்ளதை தனது வறுமை இன்னும் ஏழ்மையான நாளுக்காக முற்படுத்தி விட்டாரோ அவருக்கு நற்செய்தி உண்டாகட்டும். இந்த மீதமுள்ள செல்வத்தை அல்லாஹ் எங்கு அதை கொடுக்க வேண்டுமென்று கூறினானோ அங்கு கொடுத்து விடுங்கள்! இங்கேயே உங்களுக்கு பாதிப்பளிக்கும் காரியங்களில் போட்டு விடாதீர்கள்.

**கருத்து:** நம்பிக்கையாளர் எப்போதும் மறுமையை முன்னோக்கி இருப்பதால் இந்த உலகத்தை பற்றி கவலை அற்றவராக இருப்பார். உலக செல்வத்திற்காக போட்டி போடுகிற மக்களோடு இவர் போட்டி போடாமல் அல்லாஹ் தனக்கு

விதித்த செல்வத்தைக் கொண்டு திருப்தி அடைந்தவராக இருப்பார். உலகத்தில் ஏழையாக இருப்பதால் செல்வந்தர்களுக்கு முன்னால் மதிப்பில்லாமல் இருப்பதை நினைத்து கவலைப்பட மாட்டார். தான் சம்பாதித்த செல்வங்களை அனாவசியமாக செலவு செய்து வீணாக்காமல் தனது செலவுகளை சுருக்கிக் கொண்டு அல்லாஹ்விற்கு விருப்பமான காரியங்களில் தர்மம் செய்து தனது மறுமையை சிறப்பாக்கிக் கொள்வார்.

**விளக்கம்:** இமாம் ஹசன் ﵀ அவர்கள் என்ன சொல்கிறார்கள்! நம்பிக்கையாளருடைய ஈமான் பக்குவமடைந்திருக்கும். ஈமானை ஏற்பது என்பது வேறு! ஈமான் உள்ளத்தில் இறங்கி இருப்பது என்பது வேறு! ஈமானை மொழிவது என்பது வேறு! ஈமான் நெஞ்சத்தில் பதிவது என்பது வேறு! ஈமானை பேசுவது என்பது வேறு! ஈமானை செயல்படுத்துவது என்பது வேறு! ஈமானின் வெளிப்படையான அடையாளங்கள் வேறு! உள்ளத்தில் ஊறிய ஈமானின் பண்புகள் என்பது வேறு! தோலும் சதையும் ஒன்றல்ல. தொளியும் பருப்பும் ஒன்றல்ல. பழத்தின் சதையும் தோலும் ஒன்றல்ல.

அப்படித்தான் இதுவும். ஈமான் உள்ளத்தின் ஆழத்தில் ஊடுறுவி மாற்றங்களை வெளியில் கொண்டுவர வேண்டும். ஈமானின் உயர் பண்புகள் உள்ளத்தில் வேர்பிடித்து அதன் செயல்பாடுகள் உடலின் உறுப்புகளில் விருட்சமாக கிளைகளாக வெளிப்பட வேண்டும்.

சொல்வது மிக இலகுவாக இருக்கும். ஆனால், செய்வது சிரமமாக இருக்கும்.

பேசுவது மிக சுலபமாக இருக்கும். ஆனால், செயல்படுத்துவது கடினமாக இருக்கும்.

வாயால் மொழிவது பெரிய காரியமல்ல. உறுப்புகளால் ஒவ்வொரு நன்மையான காரியத்தை செயல்படுத்துவதும் அந்தந்த நேரத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நற்குணத்தை கடைப்பிடிப்பதும்தான் மிக பெரிய காரியமாகும்.

சாதனை என்பது உலகப் புகழ்களை குவிப்பதல்ல. உண்மையான சாதனை முஃமினாக வாழ்ந்து காட்டுவதாகும். அறிவு என்பது உலக பட்டங்களை வெல்வதல்ல. அறிவு என்பது இந்த உலகம் இன்னும் மறுமையின் உண்மையை புரிவதாகும்.

பல கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தவர்கள் அனுபவசாலிகள், திறமைசாலிகள் என்று வேண்டுமானால் இருக்கலாம். அவர்கள் எல்லாம் அறிவாளிகள் என்று சொல்ல முடியாது. அறிவாளி யார் என்றால்

உண்மையான நம்பிக்கையாளர்தான் அறிவாளி ஆவார். தான் யாரை வணங்க வேண்டும் என்று அறிந்து, தன் இறைவனின் மார்க்கத்தை அறிந்து, இந்த உலகத்தின் அழியும் தன்மையை அறிந்து, மறுமையின் நிரந்தரத்தை அறிந்து செயல்படுபவரே அறிவாளி ஆவார்.

அத்தகைய நம்பிக்கையாளரைப் பற்றித்தான் இமாம் ஹசன் ﵀ அவர்கள் இங்கு குறிப்பிடுகிறார்கள்.

அதாவது, மக்கள் எல்லாம் அல்லாஹ்வை மறந்திருக்கும்போது இவர் அல்லாஹ்வை நினைவு கூர்ந்துகொண்டிருப்பார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் உலகத்திற்கு பின்னால் ஓடும்போது இவர் மறுமைக்கு பின்னால் ஓடுவார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் சம்பாதித்த செல்வத்தை பெருக்க வேண்டும், பெருக்கிய செல்வத்தை சேமிக்க வேண்டும் என்று வெறியில் இருக்கும்போது இவர் தான் சம்பாதித்த கொஞ்சத்தை தனக்கு போக மீதியை அல்லாஹ்வின் பாதையில் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருப்பார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் மறுமையை மறந்து எப்படி வேண்டுமானாலும் பொருளீட்டலாம், செல்வத்தை எப்படி வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம் என்று மார்க்கத்தை அலட்சியம் செய்த நிலையில் இருக்கும்போது இவர் மட்டும் மார்க்கம் எப்படி சொல்கிறதோ அப்படித்தான் பொருளீட்டுவார். ஹலால், ஹராம் சட்டங்களை பின்பற்றித்தான் இவர் சம்பாதிப்பார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் அழிந்து போகிற உலகத்தில் செல்வத்தை சேமிக்க பெரிதும் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கும் அதே வேளையில் இவர் அழியாத மறுமையில் பாதுகாப்பாக இருப்பதற்காகவும் தனக்கு சொர்க்கத்தின் விலையாக இருப்பதற்காகவும் தனது செல்வத்தை மறுமைக்கு அனுப்பிக்கொண்டிருப்பார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் பிறர் எப்படி சம்பாதிக்கிறார், பிறர் என்ன தொழில் செய்கிறார், பிறருக்கு செல்வம் எப்படி வருகிறது என்று பிறர் மீது பொறாமைபட்டு, பிறருடன் போட்டி போட்டுக் கொண்டிருக்க இவர் மட்டும் நிம்மதியாக தான்

உண்டு, தனது தொழில் உண்டு, எது கிடைக்கிறதோ அது அல்லாஹ்வின் அருளினால் கிடைத்தது, எது கிடைக்கவில்லையோ அது அல்லாஹ்வின் நாட்டத்தால் கிடைக்கவில்லை, மனிதன் முயற்சி என்பது எறியப்படுகிற அம்பைப் போன்றுதான், அது இலக்கை நோக்கி சரியாக பாயவும் செய்யலாம், அல்லது குறி தவறவும் செய்யலாம் என்று நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் விதியை பொருந்தி கொண்டு பேராசைப் படாமல் இருப்பார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

பொய், பித்தலாட்டம், ஏமாற்றுதல், வஞ்சகம் செய்தல், நிறுவையில் அளவையில் குறைத்தல், கொடுக்கல் வாங்களில் மோசடி செய்தல், கடன் வாங்கி ஏமாற்றுதல், தொழில் செய்து கவுத்துதல், கை நீட்டி வாங்கிவிட்டு பிறகு கொடுக்க மறுத்தல், இழுத்தடித்தல், பொய் கணக்கு எழுதுதல், லஞ்சம் வாங்குதல், ஊழல் செய்தல், ஸகாத் கொடுக்காமல் இருத்தல், ஸதகா செய்யாமல் இருத்தல், விலை பேசுவது உயர்ந்த ஒன்றுக்கு, கொடுப்பது மட்டமான வேறு ஒன்றை, இப்படியாக எப்படியும் சம்பாதிக்கலாம், எந்த வழியிலும் செல்வந்தனாக ஆகலாம் என்று மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்க நம்பிக்கையாளர் அல்லாஹ்வையும், மறுமையையும் பயந்து ஹலாலான வழிகளில் மட்டும் சம்பாதிப்பார். குழப்பமானதை விட்டு விலகி இருப்பார். ஹராமின் பக்கம் அறவே செல்ல மாட்டார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் உலகத்தில் சொத்துகளை சேர்ப்பதிலும், கட்டிடங்களை கட்டுவதிலும், கோபுரங்களை உயர்த்துவதிலும், வங்கிகளில் செல்வத்தை சேமிப்பதிலும், தொழில்களை பெருக்குவதிலும், இங்கு அங்கு என்று நிலங்களை வாங்குவதிலும் பேராசையுடன் அலைந்துகொண்டிருக்க நம்பிக்கையாளரோ தன் செல்வத்தை நல்ல வழியில் செலவழிக்க, ஏழை எளியோருக்கு கொடுக்க, அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அள்ளிக் கொடுக்க, மார்க்கத்தை பரப்புவதற்காக கணக்கின்றி செல்வத்தை தர்மம் செய்ய யோசிக்க மாட்டார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் கண்ணியம், பதவி, ஆட்சி, ஆடம்பரம் என்று ஆசைப்பட்டு அதற்காக கவலைப்படுவார்கள். உலக சுகம் கிடைத்தால், உலக செல்வம் கிடைத்தால், உலக ஆட்சி கிடைத்தால் மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். ஆட்சியாலும் செல்வ செழிப்பாலும் மக்கள் கண்ணியத்தை மரியாதையை தேடுவார்கள். ஏழைகளையும் எளியோரையும் சாமானியரையும் குறைத்தே மதிப்பிடுவார்கள்.

உண்மை நம்பிக்கையாளரோ தான் ஏழை என்பதால், தான் எளியவன் இல்லாதவன் என்பதால் சபைகளில் புறக்கணிக்கப்பட்டாலோ, கூட்டங்களில் ஒதுக்கப்பட்டாலோ, தன்னுடன் உறவாட மக்கள் தயங்கினாலோ, இப்படி எத்தகைய இழிவுகளையும் புறக்கணிப்புகளையும் நம்பிக்கையாளர் சந்தித்தாலும் அவர் கலங்க மாட்டார், மனம் சோர்வடைய மாட்டார், விரக்தி அடைய மாட்டார், தன்னையும் தன் விதியையும் நொந்து கொள்ள மாட்டார். மறுமையின் கண்ணியத்தை அல்லாஹ்விடம் வேண்டி மிகவும் தன்னம்பிக்கை உள்ளவராகவும் வீரராகவும் துணிவுமிக்கவராகவும் முகம் மலர்ந்தவராகவும் இருப்பார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் உலக செல்வங்கள் அனைத்தும் எனக்கு வேண்டும் என்று வெறிபிடித்து அலைந்துகொண்டிருப்பார்கள். அவர்கள் மறுமைக்கு செய்தது மிகக் குறைவாக இருக்கும். அவர்கள் மரணிக்கும்போது உலகத்தில் விட்டு செல்வது கணக்கற்றதாக ஏராளமாக இருக்கும். மறுமைக்கு செய்ததையும் உலகத்தில் விட்டுச் செல்வதையும் ஒப்பிட்டு பார்த்தால் உலகத்தில் விட்டுச் செல்வது மலை என்றால் மறுமைக்கு செய்தது சிறு துரும்பாக மட்டுமே இருக்கும்.

நம்பிக்கையாளரோ தன்னிடம் இருக்கிற செல்வத்தையும் மறுமைக்கு முற்படுத்துவதில் முனைப்பாக இருப்பார். தான் விட்டுவிட்டு செல்வதை விட மறுமைக்கு அனுப்பிவிட்டு செல்வது அதிகமாக இருக்கும்படி பார்த்துக் கொள்வார். வாழ்நாளில் மார்க்கத்திற்காகவும் ஏழை மக்களுக்குக்காகவும் அவர் செலவு செய்தது மிக மகத்தானதாக மிக அதிகமாக இருந்தும் மரண நேரத்திலும் தான் உலகத்தில் விட்டுச் செல்வதில் மூன்றில் ஒன்றை அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு வக்ஃப் செய்துவிட்டு நிரந்தர தர்மமாக எடுத்துச் செல்வார். ஆகவே இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

மக்கள் எல்லாம் பிறர் குறைகளை சிந்தித்துக் கொண்டிருக்க, பிறர் தவறுகளை கண்காணித்துக்கொண்டிருக்க, தமது குறைகளை மறந்துவிட்டிருக்க, நம்பிக்கையாளரோ தனது குறைகளை ஆராய்வதிலும், அவற்றை சரி செய்வதிலும், தனது ஈமானை, தனது வணக்க வழிபாட்டை அதிகரிக்க செய்வதிலும், அல்லாஹ்வுடன் நெருக்கத்தையும் அவனது அன்பையும் பொருத்தத்தையும் மன்னிப்பையும் அடைவதிலும் முழுமையாக ஈடுபட்டு இருப்பார். ஆகவே, இவர் அவர்களுக்கு மத்தியில் அன்னியராக இருப்பார்.

குர்ஆனும் ஸுன்னாவும் வர்ணிக்கக் கூடிய நம்பிக்கையாளர் இப்படித்தான் இருப்பார். அவரது ஈமான் நாவிலும் இருக்கும், உள்ளத்திலும் இருக்கும். அவரது ஈமான் சொல்லிலும் இருக்கும், செயலிலும் இருக்கும். அவரது ஈமான் இபாதத்திலும் இருக்கும், குணத்திலும் இருக்கும், கொடுக்கல் வாங்கலிலும் இருக்கும். அவரது ஈமான் மஸ்ஜிதிலும் இருக்கும், வீட்டிலும் கடைத்தெருவிலும் இருக்கும்.

அவர் ஆட்சியாளராக இருந்தால் ஒரு உமர் இப்னு அப்துல் அஸீஸாக இருப்பார், அல்லது சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபியாக இருப்பார். அவருடைய ஈமான் உடையிலும் இருக்கும், தோற்றத்திலும் இருக்கும். செயல்பாட்டிலும் இருக்கும், சபையிலும் இருக்கும். தனிமையிலும் இருக்கும். முஃமினுடைய ஈமான் அல்லாஹ்வும் அவனுடைய ரஸூல் ﷺ அவர்களும் வர்ணிப்பது போன்று இருக்கும்.

ஒரு ஹதீஸை இங்கு நினைவூட்டி இந்த மஜ்லிஸை நிறைவு செய்வோம்.

عَنْ سَهْلِ بْنِ سَعْدٍ السَّاعِدِيِّ رضي الله عنه أَنَّهُ قَالَ مَرَّ رَجُلٌ عَلَىٰ رَسُولِ اللهِ ﷺ فَقَالَ لرَجُلٍ عِنْدَهُ جَالِسٍ مَا رَأْيُكَ فِي هٰذَا فَقَالَ رَجُلٌ مِنْ أَشْرَافِ النَّاسِ هٰذَا وَاللهِ حَرِيٌّ إِنْ خَطَبَ أَنْ يُنْكَحَ وَإِنْ شَفَعَ أَنْ يُشَفَّعَ قَالَ فَسَكَتَ رَسُولُ اللهِ ﷺ ثُمَّ مَرَّ رَجُلٌ آخَرُ فَقَالَ لَهُ رَسُولُ اللهِ ﷺ مَا رَأْيُكَ فِي هٰذَا فَقَالَ يَا رَسُولَ اللهِ هٰذَا رَجُلٌ مِنْ فُقَرَاءِ الْمُسْلِمِينَ هٰذَا حَرِيٌّ إِنْ خَطَبَ أَنْ لاَ يُنْكَحَ وَإِنْ شَفَعَ أَنْ لاَ يُشَفَّعَ وَإِنْ قَالَ أَنْ لاَ يُسْمَعَ لِقَوْلِهِ فَقَالَ رَسُولُ اللهِ ﷺ هٰذَا خَيْرٌ مِنْ مِلْءِ الأَرْضِ مِثْلَ هٰذَا

ஒருவர் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களை கடந்து சென்றார். ஆக, தனக்கு அருகில் இருந்த ஒரு மனிதரிடம் இவரைப் பற்றி உங்கள் எண்ணம் என்ன? என்று கேட்டார்கள். ஆக, அவர் கூறினார்: இவர் மனிதர்களில் உயர்ந்தோரில் உள்ள ஒரு மனிதர். இவர் பெண் பேசினால் மணம் முடித்து கொடுக்கப்பட தகுதியானவர். இவர் சிபாரிசு செய்தால் அந்த சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்பட தகுதியானவர். நபி ﷺ அமைதியாக இருந்தார்கள். பிறகு இன்னொரு மனிதர்

கடந்து சென்றார். ஆக, அவரிடம் ரஸூலுல்லாஹ் - அவர்கள் இவரைப் பற்றி உங்கள் எண்ணம் என்ன என்று கேட்டார்கள். ஆக, அவர் கூறினார், ரஸூலுல்லாஹ்வே! இவர் முஸ்லிம்களில் உள்ள ஏழைகளில் ஒருவர். இவர் திருமணம் முடிக்க பெண் கேட்டால் கொடுக்கப்படாமல் இருப்பதற்கும் சிபாரிசு செய்தால் அது ஏற்கப்படாமல் இருப்பதற்கும் இவர் பேசினால் அதற்கு செவிசாய்க்கப்படாமல் இருப்பதற்கும்தான் தகுதியானவர். ஆக, ரஸூலுல்லாஹ் - அவர்கள் கூறினார்கள்: இவரோ சிறந்தவர் பூமி நிரம்ப இவர்கள் இருப்பதை விட.[76]

عَنْ أَبِي ذَرٍّ ﵁ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ يَا أَبَا ذَرٍّ ارْفَعْ بَصَرَكَ فَانْظُرْ أَرْفَعَ رَجُلٍ تَرَاهُ فِي الْمَسْجِدِ قَالَ فَنَظَرْتُ فَإِذَا رَجُلٌ جَالِسٌ عَلَيْهِ حُلَّةٌ قَالَ فَقُلْتُ هٰذَا قَالَ فَقَالَ يَا أَبَا ذَرٍّ ارْفَعْ بَصَرَكَ فَانْظُرْ أَوْضَعَ رَجُلٍ تَرَاهُ فِي الْمَسْجِدِ قَالَ فَنَظَرْتُ فَإِذَا رَجُلٌ ضَعِيفٌ عَلَيْهِ أَخْلَاقٌ قَالَ فَقُلْتُ هٰذَا قَالَ فَقَالَ رَسُولُ اللهِ ﷺ وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَهٰذَا أَفْضَلُ عِنْدَ اللهِ يَوْمَ الْقِيَامَةِ مِنْ قُرَابِ الْأَرْضِ مِثْلِ هٰذَا

ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: அபூ தர்ரே! உன் பார்வையை உயர்த்து, இந்த மஸ்ஜிதில் நீ பார்க்கும் உயர்வான மனிதனை நீ பார்! நான் பார்த்தேன். ஆக, அப்போது ஒரு மனிதர் அமர்ந்திருந்தார். அவர் மீது ஒரு முழு ஆடை இருந்தது. நான் இவர் என்று கூறினேன். அபூ தர்ரே! உன் பார்வையை உயர்த்து, இந்த மஸ்ஜிதில் நீ பார்க்கும் மிக தாழ்ந்த மனிதனை நீ பார்! ஆக, நான் பார்த்தேன். ஆக, அப்போது ஒரு மனிதர் அமர்ந்திருந்தார். அவர் மீது பழைய கந்தல் ஆடைகள் இருந்தன. நான் இவர் என்று கூறினேன். ஆக, ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: என் உயிர் யார் கை வசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நிச்சயமாக இவர் அல்லாஹ்விடம் மறுமை நாளில் மிக சிறப்பானவர் பூமி நிரம்ப இவர்கள் போன்றவர்கள் இருப்பதை விட.[77]

76. அறிவிப்பாளர்: ஸஹ்ல் இப்னு ஸஅத் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6447.
77. அறிவிப்பாளர்: அபூ தர் ﵁, நூல்: முஸ்னத் அஹ்மத், எண்: 21493.

இமாம் ஹசன் ﷺ அவர்கள் கூறியது கொஞ்சம் புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

அல்லாஹ்வே! எங்களை நீ உனக்காக தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களில் ஆக்கிவிடுவாயாக! மறுமையின் மகத்தான வெற்றியை பெற்ற உனது முகர்ரபீன் என்ற நெருக்கமானவர்களில் எங்களை ஆக்குவாயாக!

அல்லாஹ்வே, எங்கள் உள்ளங்களை உன் பக்கம் திருப்பு! எங்கள் நாட்டங்களை மறுமையின் பக்கம் திருப்பு! எங்கள் முயற்சிகளை சொர்க்கத்தின் பக்கம் திருப்பு! எங்களை மறுமையின் பிள்ளைகளாக ஆக்கிவிடு! உலகத்தின் பிள்ளைகளில் எங்களை ஆக்கிவிடாதே! ஆமீன்!

• • •

## நயவஞ்சகனின் போலியான தோற்றத்தின் உண்மை நிலை

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا رَوْحُ حَدَّثَنَا هَاشِمُ عَنِ الْحَسَنِ فِي قَوْلِهِ عَزَّ وَجَلَّ الَّذِينَ هُمْ يُرَاءُونَ قَالَ إِنْ صَلَّاهَا صَلَّاهَا رِيَاءً وَإِنْ لَمْ يُصَلِّهَا لَمْ يُبَالِهَا

الَّذِينَ هُمْ يُرَاءُونَ

பொருள்: "அவர்கள் தங்கள் வழிபாடுகளை மக்களுக்கு காண்பிப்பதற்காக செய்வார்கள்."

என்ற வசனத்திற்கு இமாம் ஹசன் ﵀ அவர்கள் விளக்கம் கூறுகையில் நயவஞ்சகன் எப்படிப்பட்டவன் என்றால் தொழுகையை தொழுதால் பிறருக்கு காட்டுவதற்காக, முகஸ்துதிக்காக தொழுவான். அவன் அதை தொழாமல் விட்டுவிட்டாலும் அதைப் பற்றி அவன் பொருட்படுத்த மாட்டான். (-கவலைப்பட மாட்டான், அலட்டிக் கொள்ள மாட்டான்.)

**கருத்து:** நயவஞ்சகன் வெளிப்படையாக நம்பிக்கை கொண்டிருப்பான். அவனது உள்ளத்தில் ஈமான் இருக்காது. ஆகவே, அவன் அல்லாஹ்விற்காக, தனது மறுமைக்காக எந்த நல்லமலையும் செய்ய மாட்டான். நயவஞ்சகன் எதை செய்தாலும் உலக ஆதாயத்திற்காக மட்டுமே செய்வான்.

உலகத்தில் தனக்கு புகழ்ச்சி கிடைத்தால், மக்கள் தன்னைப் பார்த்து தன்னைப் பற்றி பேசுவார்கள் என்று இருந்தால் மட்டுமே அவன் ஒரு அமலை செய்வான். அப்படி இல்லை என்றால் அவன் எந்த ஒரு அமலையும் செய்ய மாட்டான். தான் செய்யாமல் விடுகிற அமல் எத்தகைய கட்டாய அமலாக இருந்தாலும் அதைப் பற்றி நயவஞ்சகன் கவலைப்பட மாட்டான்.

**விளக்கம்:** அல்லாஹ்வே! எங்களுக்கு உண்மையான ஈமானை தா! எங்களை முழுமையான முஃமின்களாக ஈமானில் உண்மையானவர்களாக உறுதியானவர்களாக ஆக்குவாயாக! ஈமானின் பலவீனத்தை விட்டும் நயவஞ்சகத்தை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! ஒவ்வொரு அமலையும் உனக்காக, உனது அன்புக்காக, உனது மகிழ்ச்சிக்காக செய்பவர்களாக எங்களை ஆக்குவாயாக! ஆமீன்.

இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் உண்மையான முஃமினுக்கும் நயவஞ் சகனுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை இங்கு தெளிவுப்படுத்துகிறார்கள்.

உண்மையான முஃமின் இக்லாஸ் எனும் மனத்தூய்மை உடையவராக இருப்பார். அவருடைய உள்ளம் கலப்படமற்றதாக களங்கமற்றதாக இருக்கும். அவர் நம்பிக்கை கொண்டதும் அல்லாஹ்விற்காக மட்டுமே. அவர் வாழ்வதும் அல்லாஹ்விற்காக மட்டுமே. அவர் இறந்தாலும் அதுவும் அல்லாஹ்விற்காகவே இருக்கும். அவர் செய்கிற அமலும் அல்லாஹ்விற்காகவே இருக்கும். அவர் ஒரு பாவத்தை விட்டு விலகினால் அதுவும் அல்லாஹ்விற்காகவே இருக்கும். அவர் ஒன்றை செய்வதும் ஒன்றை விடுவதும் அல்லாஹ்வின் பொருத்தத்திற்காக மட்டுமே இருக்கும்.

நம்பிக்கையாளரின் நிலையைப் பற்றி அல்லாஹ் இப்படி வர்ணிக்கிறான்:

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ ○

நபியே! கூறுவீராக! நிச்சயமாக எனது தொழுகையும் எனது பலியும் எனது வாழ்க்கையும் எனது மரணமும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்விற்கே உரியதாகும். (அல்குர்ஆன் 6 : 162)

ஈமானின் ருசியை உணர்வதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறிய மூன்று பண்புகள் நாம் இங்கு நினைவு கூர்வதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவை ஆகும்.

**عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ؓ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ ثَلَاثٌ مَنْ كُنَّ فِيهِ وَجَدَ حَلَاوَةَ الْإِيمَانِ أَنْ يَكُونَ اللهُ وَرَسُولُهُ أَحَبَّ إِلَيْهِ مِمَّا سِوَاهُمَا وَأَنْ يُحِبَّ الْمَرْءَ لَا يُحِبُّهُ إِلَّا لِلّٰهِ وَأَنْ يَكْرَهَ أَنْ يَعُودَ فِي الْكُفْرِ كَمَا يَكْرَهُ أَنْ يُقْذَفَ فِي النَّارِ**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: மூன்று பண்புகள் யாரிடம் இருக்குமோ அவர் ஈமானின் இனிமையை உணர்வார். (அந்த மூன்று தன்மைகளில் முதலாவது:) அல்லாஹ்வும் அவனது தூதரும் மற்றவர்களை விட அவருக்கு மிக விருப்பமானவர்களாக இருப்பது. இன்னும், (இரண்டாவது) அவர் எந்த மனிதரை விரும்பினாலும் அல்லாஹ்விற்காகவே தவிர அவரை விரும்பாமல் இருப்பது. இன்னும், (மூன்றாவது) குஃப்ர் - நிராகரிப்பில் தான் மீண்டுவிடுவதை அவர் வெறுப்பது, நெருப்பில் தான் எறியப்படுவதை அவர் வெறுப்பது போன்று.[78]

**مَنْ أَحَبَّ لِلّٰهِ وَأَبْغَضَ لِلّٰهِ وَأَعْطٰى لِلّٰهِ وَمَنَعَ لِلّٰهِ فَقَدْ اسْتَكْمَلَ الْإِيمَانَ**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: யார் அல்லாஹ்விற்காக அன்பு வைப்பாரோ, அல்லாஹ்விற்காக வெறுப்பாரோ, அல்லாஹ்விற்காக கொடுப்பாரோ, அல்லாஹ்விற்காக தடுப்பாரோ அவர் ஈமானை நிறைவு செய்துவிட்டார்.[79]

**حَدَّثَنَا سُوَيْدُ بْنُ نَصْرٍ أَخْبَرَنَا عَبْدُ اللهِ بْنُ الْمُبَارَكِ أَخْبَرَنَا حَيْوَةُ بْنُ شُرَيْحٍ أَخْبَرَنِي الْوَلِيدُ بْنُ أَبِي الْوَلِيدِ أَبُو عُثْمَانَ الْمَدَائِنِيُّ أَنَّ عُقْبَةَ بْنَ مُسْلِمٍ حَدَّثَهُ أَنَّ شُفَيًّا الْأَصْبَحِيَّ حَدَّثَهُ أَنَّهُ دَخَلَ الْمَدِينَةَ فَإِذَا هُوَ بِرَجُلٍ قَدْ اجْتَمَعَ عَلَيْهِ النَّاسُ فَقَالَ مَنْ هَذَا فَقَالُوا أَبُو هُرَيْرَةَ فَدَنَوْتُ مِنْهُ حَتَّى قَعَدْتُ بَيْنَ يَدَيْهِ وَهُوَ يُحَدِّثُ النَّاسَ فَلَمَّا سَكَتَ وَخَلَا قُلْتُ لَهُ أَنْشُدُكَ بِحَقٍّ وَبِحَقٍّ لَمَا حَدَّثْتَنِي حَدِيثًا سَمِعْتَهُ مِنْ رَسُولِ اللهِ ﷺ عَقَلْتَهُ وَعَلِمْتَهُ فَقَالَ أَبُو هُرَيْرَةَ أَفْعَلُ لَأُحَدِّثَنَّكَ حَدِيثًا حَدَّثَنِيهِ رَسُولُ اللهِ ﷺ عَقَلْتُهُ وَعَلِمْتُهُ ثُمَّ نَشَغَ أَبُو هُرَيْرَةَ نَشْغَةً فَمَكَثَ قَلِيلًا ثُمَّ أَفَاقَ فَقَالَ لَأُحَدِّثَنَّكَ حَدِيثًا حَدَّثَنِيهِ رَسُولُ اللهِ ﷺ فِي هَذَا الْبَيْتِ مَا مَعَنَا أَحَدٌ غَيْرِي وَغَيْرُهُ ثُمَّ نَشَغَ أَبُو هُرَيْرَةَ نَشْغَةً أُخْرَى ثُمَّ أَفَاقَ فَمَسَحَ وَجْهَهُ فَقَالَ لَأُحَدِّثَنَّكَ حَدِيثًا حَدَّثَنِيهِ رَسُولُ اللهِ ﷺ وَأَنَا وَهُوَ فِي هَذَا الْبَيْتِ مَا مَعَنَا أَحَدٌ غَيْرِي وَغَيْرُهُ**

78. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் رضي الله عنه, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 16, 6941.
79. அறிவிப்பாளர்: அபூ உமாமா رضي الله عنه, நூல்: அபூதாவூத், எண்: 4681.

ثُمَّ نَشَغَ أَبُو هُرَيْرَةَ نَشْغَةً أُخْرَى ثُمَّ أَفَاقَ وَمَسَحَ وَجْهَهُ فَقَالَ أَفْعَلُ لَأُحَدِّثَنَّكَ حَدِيثًا حَدَّثَنِيهِ رَسُولُ اللهِ ﷺ وَأَنَا مَعَهُ فِي هَذَا الْبَيْتِ مَا مَعَهُ أَحَدٌ غَيْرِي وَغَيْرُهُ ثُمَّ نَشَغَ أَبُو هُرَيْرَةَ نَشْغَةً شَدِيدَةً ثُمَّ مَالَ خَارًّا عَلَى وَجْهِهِ فَأَسْنَدْتُهُ عَلَيَّ طَوِيلًا ثُمَّ أَفَاقَ فَقَالَ حَدَّثَنِي رَسُولُ اللهِ ﷺ أَنَّ اللهَ تَبَارَكَ وَتَعَالَى إِذَا كَانَ يَوْمُ الْقِيَامَةِ يَنْزِلُ إِلَى الْعِبَادِ لِيَقْضِيَ بَيْنَهُمْ وَكُلُّ أُمَّةٍ جَاثِيَةٌ فَأَوَّلُ مَنْ يَدْعُو بِهِ رَجُلٌ جَمَعَ الْقُرْآنَ وَرَجُلٌ يَقْتَتِلُ فِي سَبِيلِ اللهِ وَرَجُلٌ كَثِيرُ الْمَالِ فَيَقُولُ اللهُ لِلْقَارِئِ أَلَمْ أُعَلِّمْكَ مَا أَنْزَلْتُ عَلَى رَسُولِي قَالَ بَلَى يَا رَبِّ قَالَ فَمَاذَا عَمِلْتَ فِيمَا عُلِّمْتَ قَالَ كُنْتُ أَقُومُ بِهِ آنَاءَ اللَّيْلِ وَآنَاءَ النَّهَارِ فَيَقُولُ اللهُ لَهُ كَذَبْتَ وَتَقُولُ لَهُ الْمَلَائِكَةُ كَذَبْتَ وَيَقُولُ اللهُ بَلْ أَرَدْتَ أَنْ يُقَالَ إِنَّ فُلَانًا قَارِئٌ فَقَدْ قِيلَ ذَاكَ وَيُؤْتَى بِصَاحِبِ الْمَالِ فَيَقُولُ اللهُ لَهُ أَلَمْ أُوَسِّعْ عَلَيْكَ حَتَّى لَمْ أَدَعْكَ تَحْتَاجُ إِلَى أَحَدٍ قَالَ بَلَى يَا رَبِّ قَالَ فَمَاذَا عَمِلْتَ فِيمَا آتَيْتُكَ قَالَ كُنْتُ أَصِلُ الرَّحِمَ وَأَتَصَدَّقُ فَيَقُولُ اللهُ لَهُ كَذَبْتَ وَتَقُولُ لَهُ الْمَلَائِكَةُ كَذَبْتَ وَيَقُولُ اللهُ تَعَالَى بَلْ أَرَدْتَ أَنْ يُقَالَ فُلَانٌ جَوَادٌ فَقَدْ قِيلَ ذَاكَ وَيُؤْتَى بِالَّذِي قُتِلَ فِي سَبِيلِ اللهِ فَيَقُولُ اللهُ لَهُ فِي مَاذَا قُتِلْتَ فَيَقُولُ أُمِرْتُ بِالْجِهَادِ فِي سَبِيلِكَ فَقَاتَلْتُ حَتَّى قُتِلْتُ فَيَقُولُ اللهُ تَعَالَى لَهُ كَذَبْتَ وَتَقُولُ لَهُ الْمَلَائِكَةُ كَذَبْتَ وَيَقُولُ اللهُ بَلْ أَرَدْتَ أَنْ يُقَالَ فُلَانٌ جَرِيءٌ فَقَدْ قِيلَ ذَاكَ ثُمَّ ضَرَبَ رَسُولُ اللهِ ﷺ عَلَى رُكْبَتِي فَقَالَ يَا أَبَا هُرَيْرَةَ أُولَئِكَ الثَّلَاثَةُ أَوَّلُ خَلْقِ اللهِ تُسَعَّرُ بِهِمُ النَّارُ يَوْمَ الْقِيَامَةِ

ஷுஃபை கூறுகிறார்: நான் மதீனாவிற்குள் நுழைந்தேன். அங்கே ஒரு மனிதனை சுற்றி மக்கள் குழுமி இருந்தார்கள். இவர் யார் என்று நான் கேட்டேன். அபூஹுரைரா ؓ என்று மக்கள் கூறினார்கள். நான் அவருக்கு அருகில் சென்று அவருக்கு முன்னால் அமர்ந்தேன். அவர் மக்களுக்கு

ஹதீஸ் அறிவித்துக் கொண்டிருந்தார். அவர் அதை முடித்துவிட்டு அமைதியாகி, தனிமையில் சென்றபோது எனக்கு நீங்கள் ஒரு ஹதீஸை அறிவிக்க வேண்டும். அதை நீங்கள் ரஸூலுல்லாஹ் ﷺ அவர்களிடமிருந்து செவியுற்றிருக்க வேண்டும். அதை நீங்கள் நன்கு புரிந்திருக்க வேண்டும். அதை நீங்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆக, அபூஹுரைரா ؓ கூறினார், அப்படியே செய்கிறேன். ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எனக்கு அறிவித்த ஒரு ஹதீஸ் இருக்கிறது, அதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். அதை உங்களுக்கு அறிவிக்கிறேன். இதை கூறிவிட்டு அபூஹுரைரா ؓ சத்தமாக மூச்சு வாங்கிவிட்டு மயக்கமுற்று விட்டார். பிறகு சிறிது நேரம் கழித்து தெளிவுற்றவுடன் கூறினார், நான் உனக்கு ஒரு ஹதீஸை அறிவிக்கிறேன். அதை இந்த வீட்டில் நபியவர்கள் எனக்கு அறிவித்தார்கள். அப்போது அவர்களைத் தவிர, என்னைத் தவிர இந்த வீட்டில் எங்களுடன் வேறு யாரும் இல்லை. பிறகு மற்றொரு முறை அபூஹுரைரா ؓ கடுமையாக சத்தமாக மூச்சு வாங்கிவிட்டு மயக்கமுற்று விட்டார். பிறகு நீண்ட நேரம் தனது முகத்தின் மீது விழுந்தவராக இருந்தார். நான் அவரை என் பக்கம் சாய்த்திருந்தேன். அவர் கூறினார், நான் உனக்கு ஒரு ஹதீஸை அறிவிக்கிறேன். நிச்சயமாக அல்லாஹ் தபாரக வதஆலா மறுமை நாளில் அடியார்கள் பக்கம் அவர்களுக்கு நடுவில் தீர்ப்பளிப்பதற்காக இறங்கி வருவான். எல்லா சமுதாயமும் முழங்காலிட்டவர்களாக இருப்பார்கள். அவன் அழைக்கிற முதல் மனிதர்கள் குர்ஆனை மனனம் செய்தவர், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர், அதிகமான செல்வத்தை உடையவர் ஆவார்கள். குர்ஆனை கற்ற அறிஞரிடம் அவன் கூறுவான், நான் எனது ரஸூலுக்கு இறக்கியதை உனக்கு கற்றுக் கொடுக்கவில்லையா? அவன் கூறுவான், ஏன் இல்லை, என் இறைவா! நீ கற்பிக்கப்பட்டதில் என்ன செய்தாய் என்று அவன் கேட்பான். அவன் கூறுவான், நான் இரவின் நடுவிலும் பகலின் ஓரங்களிலும் அதை ஓதி தொழுதேன். அவனுக்கு அல்லாஹ் கூறுவான், நீ பொய் சொல்கிறாய். மலக்குகளும் சொல்வார்கள், நீ பொய் சொல்கிறாய். அல்லாஹ் கூறுவான், இன்னவர் கற்ற அறிஞர் என்று சொல்லப்படவேண்டும் என்பது உனது எண்ணமாக இருந்தது. அவ்வாறே சொல்லப்பட்டுவிட்டது. அடுத்து, செல்வந்தனை கொண்டு வரப்படும். அல்லாஹ் கூறுவான், உனக்கு நான் வசதி அளிக்கவில்லையா? நீ யாரிடமும் தேவையாகும்படி உன்னை நான் விடவில்லையே? அவன் கூறுவான், ஆம், உனக்கு நான் கொடுத்ததில் நீ என்ன அமல் செய்தாய் என்று அல்லாஹ்

கூறுவான். அவன் கூறுவான், நான் உறவுகளுக்கு கொடுத்து வந்தேன். தர்மம் செய்து வந்தேன். அல்லாஹ் கூறுவான், நீ பொய் சொல்கிறாய். மலக்குகளும் சொல்வார்கள், நீ பொய் சொல்கிறாய். ஆக, அல்லாஹ் கூறுவான், இன்னவர் கொடைவள்ளல் என்று சொல்லப்பட வேண்டும் என்பது உனது எண்ணமாக இருந்தது. அது அவ்வாறே சொல்லப்பட்டுவிட்டது. பிறகு, அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவரை கொண்டு வரப்படும். நீ ஏன் கொல்லப்பட்டாய் என்று அவரிடம் கூறப்படும். அவர் கூறுவார், உனது பாதையில் போர் புரிய வேண்டும் என்று நீ ஏவினாய். ஆகவே, நான் போரிட்டேன். இறுதியில் நான் கொல்லப்பட்டேன். ஆக, அல்லாஹ் கூறுவான், நீ பொய் சொல்கிறாய். மலக்குகளும் சொல்வார்கள், நீ பொய் சொல்கிறாய். ஆக, அல்லாஹ் கூறுவான், இன்னவர் துணிவானவர் என்று சொல்லப்பட வேண்டும் என்பது உனது எண்ணமாக இருந்தது. அது அவ்வாறே கூறப்பட்டு விட்டது. பிறகு, ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் எனது இரு முட்டுக்கால்கள் மீது அடித்தார்கள். ஆக, கூறினார்கள், அபூஹுரைராவே! இந்த மூன்று நபர்களைக் கொண்டுதான் மறுமை நாளில் முதலாவதாக நரகம் சூடாக்கப்படும்.[80]

இத்தகைய ஹதீஸ்களின் எச்சரிக்கைகளை செவியுற்று பண்பட்டு வாழ்கிற நம்பிக்கையாளர் தனது ஈமானையும் அமலையும் முகஸ்துதியிலிருந்து பாதுகாப்பதில் பெரிதும் கவனமாக இருப்பார். அல்லாஹ்வை எப்போதும் அஞ்சிக்கொண்டு இருப்பார். மக்களின் புகழ்ச்சியிலிருந்தும் தனக்கு கொடுக்கப்படும் கண்ணியத்திலிருந்தும் மரியாதையிலிருந்தும் விரண்டு ஓடிக்கொண்டே இருப்பார்.

அல்லாஹ் தன்னை பார்க்கிறான், கண்காணிக்கிறான் என்ற பயம் இருப்பதாலும் மறுமை நம்பிக்கை உறுதியாக இருப்பதாலும் அவர் அமல்களில் அதிகம் கவனமுள்ளவராக இருப்பதுடன் அமல்களை கொண்டு தனது நோக்கம் என்ன என்பதிலும் கவனமாக இருப்பார். ஆகவே, எல்லா அமல்களையும் அல்லாஹ்விற்காக மட்டுமே பரிசுத்தமாக செய்வார். அல்லாஹ் கடமையாக்கிய எந்த ஒரு அமலையும் தவறவிடாமல் பேணிக்கையாக நிறைவேற்றுவார். அத்துடன் உபரியான அமல்களை சரிவர முழுமையாக செய்ய முயற்சிப்பார்.

இதற்கு மாற்றமாக, ஒரு நயவஞ்சகன் அவனுக்கு அல்லாஹ்வை பற்றிய நம்பிக்கையும் சரியாக இருக்காது. சந்தேகத்தில்தான் இருப்பான். அத்துடன் மறுமை நம்பிக்கையோ சுத்தமாக இருக்காது. எதை செய்தாலும் பிறருக்காகவே

80. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸுனனுத் திர்மிதி, எண்: 2304.

செய்வான். ஒரு செயலை விட்டால் பிறர் பார்த்து குறை கூறிவிடுவார்கள் என்பதற்காக அதை செய்வான். அல்லது, இந்த செயலை செய்தால் பிறர் தன்னைப் பார்த்து புகழ்வார்கள் என்பதற்காக அதை செய்வான். யாரும் பார்க்க மாட்டார்கள் என்றால் கட்டாயக் கடமைகளையும் அலட்சியமாக விட்டுவிடுவான். அதைப் பற்றி அவனுக்கு அறவே கவலை இருக்காது. மறுமை நம்பிக்கையும் அங்கு விசாரணை உண்டு என்ற நம்பிக்கையும் பிறகு நன்மைக்கு கூலியாக சொர்க்கமும் பாவத்திற்கு கூலியாக நரகமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இருந்தால்தானே அந்த நயவஞ்சகன் கவலைப்படுவான். அந்த நம்பிக்கை இல்லாதவன் எதைப்பற்றி அலட்டிக் கொள்ளப் போகிறான். அவனுக்கு எல்லாமே இவ்வுலகத்தில் வேண்டும். இந்த உலகத்தில் பலன் கிடைக்காத எதையும் அவன் செய்ய மாட்டான். இந்த உலகத்திற்கு பாதிப்பாக, நஷ்டமாக அமையும் எதையும் அவன் திரும்பிக்கூட பார்க்க மாட்டான்.

நபி ﷺ அவர்கள் காலத்தில் ஜிஹாதுக்கு செல்லாமல் பின்வாங்கிய நயவஞ்சகர்களை பற்றி நாம் படித்திருப்போம். அதற்கு என்ன காரனம்? ஜிஹாதிலே சென்றால் மரணம் நிகழ்ந்துவிடும், கொல்லப்பட்டு விடுவோம் என்ற பயம் அவர்களுக்கு. ஆனால், கனீமத்தில் பங்கு மட்டும் வேண்டும்.

நயவஞ்சகர்கள் மிக மோசமானவர்கள். காஃபிர்கள், முஷ்ரிக்குகளை விட கெட்டவர்கள் நயவஞ்சகர்கள். அவர்களின் குணம் மிக கெட்டதாக இருக்கும் என்று ஹதீஸும் எச்சரிக்கிறது, குர்ஆனும் எச்சரிக்கிறது.

அல்லாஹு தஆலா அவர்களைப் பற்றி கூறுகிறான்:

إِنَّ الْمُنَافِقِينَ يُخَادِعُونَ اللَّهَ وَهُوَ خَادِعُهُمْ وَإِذَا قَامُوا إِلَى الصَّلَاةِ قَامُوا
كُسَالَىٰ يُرَاءُونَ النَّاسَ وَلَا يَذْكُرُونَ اللَّهَ إِلَّا قَلِيلًا ○

நிச்சயமாக நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்றுகிறார்கள் (என்று நினைக்கிறார்கள்). அவனோ அவர்களை ஏமாற்றக் கூடியவன் ஆவான். இன்னும், அவர்கள் தொழுகைக்கு நின்றால் சோம்பேறிகளாக மனிதர்களுக்குக் காண்பித்தவர்களாக (முகஸ்துதியை விரும்பியவர்களாக) நிற்கிறார்கள்; இன்னும், குறைவாகவே தவிர அல்லாஹ்வை அவர்கள் நினைவு கூரமாட்டார்கள். (அல்குர்ஆன் 4 : 142)

இவர்களின் மட்டமான பண்புகளை எச்சரித்து ஒரு முழு அத்தியாயத்தையே அல்லாஹு தஆலா குர்ஆனில் இறக்கி இருக்கிறான்.

இவர்களைப் பற்றி நபி ﷺ அவர்கள் கூறிய ஒரு ஹதீஸை நினைவு கூர்வது இங்கு மிக அவசியம் என்று கருதுகிறோம்.

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ ﷺ قَالَ آيَةُ الْمُنَافِقِ ثَلَاثٌ إِذَا حَدَّثَ كَذَبَ وَإِذَا وَعَدَ أَخْلَفَ وَإِذَا اؤْتُمِنَ خَانَ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும். அவன் செய்தி சொன்னால் பொய் (செய்தி) சொல்வான். அவன் வாக்கு கொடுத்தால் (அதை) மீறுவான். அவன் மீது நம்பிக்கை வைக்கப்ப(ட்டு அவனிடம் ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்ப)ட்டால் மோசடி செய்வான்.[81]

இத்தகைய இழி குணங்களை உடைய நயவஞ்சகர்கள் எப்படி அல்லாஹ்வின் பொருத்தத்தை தேடுவார்கள்!? ஆகவேதான் இவர்களின் தண்டனையும் மற்ற காஃபிர்களுக்கு உரிய தண்டனையை விட கடுமையாக இருக்கும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

إِنَّ الْمُنَافِقِينَ فِي الدَّرْكِ الْأَسْفَلِ مِنَ النَّارِ وَلَنْ تَجِدَ لَهُمْ نَصِيرًا ۝

நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகக் கீழ் அடுக்கில் இருப்பார்கள். (நபியே!) அவர்களுக்கு உதவியாளர் எவரையும் நீர் காணமாட்டீர். (அல்குர்ஆன் 4 : 145)

ஒரு நல்ல நம்பிக்கையாளர் கண்டிப்பாக நயவஞ்சகம் தனது ஈமானில் கலந்துவிடாமல் கவனமாக இருப்பார். மேலும் நயவஞ்சகத்தன்மை உள்ளத்தில் எட்டிப் பார்க்காமல் உள்ளத்தை பாதுகாப்பார். நயவஞ்சகம் குறித்து எப்போதும் அச்ச உணர்வில் இருப்பார்.

இதோ ஒரு தாபியி கூறுவதை கேட்போம்:

وَقَالَ ابْنُ أَبِي مُلَيْكَةَ أَدْرَكْتُ ثَلَاثِينَ مِنْ أَصْحَابِ النَّبِيِّ ﷺ كُلُّهُمْ يَخَافُ النِّفَاقَ عَلَىٰ نَفْسِهِ مَا مِنْهُمْ أَحَدٌ يَقُولُ إِنَّهُ عَلَىٰ إِيمَانِ جِبْرِيلَ وَمِيكَائِيلَ

இன்னும், இப்னு அபீ முலைகா ؓ கூறுகிறார்: நபி ﷺ அவர்களின் தோழர்களில்

81. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 33.

முப்பது நபர்களை நான் நெருக்கமாக இருந்து பார்த்திருக்கிறேன். அவர்களில் ஒவ்வொருவரும் தனது ஆன்மாவின் மீது நயவஞ்சகத்தை பயந்தவராக இருந்தார். அவர்களில் எவரும் தன்னைப் பற்றி தான் ஜிப்ரீல் இன்னும் மீகாயீல் உடைய ஈமானில் இருக்கிறேன் என்று கூறுபவராக இருக்கவில்லை.

وَقَالَ إِبْرَاهِيمُ التَّيْمِيُّ مَا عَرَضْتُ قَوْلِي عَلَى عَمَلِي إِلَّا خَشِيتُ أَنْ أَكُونَ مُكَذِّبًا

இன்னும், இப்ராஹீம் அத்தைமி ﵀ கூறுகிறார்: நான் எனது சொல்லை எனது செயலுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோதெல்லாம் நான் பொய்யனாக இருப்பேனோ என்று பயப்படாமல் இருந்ததில்லை.

وَيُذْكَرُ عَنْ الْحَسَنِ مَا خَافَهُ إِلَّا مُؤْمِنٌ وَلَا أَمِنَهُ إِلَّا مُنَافِقٌ

ஹசன் பஸரி ﵀ அவர்களின் வாயிலாக கூறப்படுகிறது: அதைப் பற்றி அச்சப்பட மாட்டார் நம்பிக்கையாளரைத் தவிர. அதைப் பற்றி நிம்மதி அடைய மாட்டார் நயவஞ்சகரைத் தவிர. (நயவஞ்சகத்தைப் பற்றி பயப்படுபவர் முஃமினாக இருப்பார். அதைப் பயப்படாமல் இருப்பவர் முனாஃபிக்காக இருப்பார்.)

இப்போது நாம் ஒவ்வொருவரும் ஈமானிலும் அமலிலும் எப்படி இருக்கிறோம் என்பதை சுயபரிசோதனை செய்ய வேண்டும்.

நம்மிடத்தில் ஈமானின் பண்புகள் இருக்கின்றனவா? அல்லது நயவஞ் சகத்தின் இழி குணங்கள் இருக்கின்றனவா?

நாம் அமல்களை யாருக்காக செய்கிறோம்?

நாம் நன்மைகளை எதற்காக செய்கிறோம்?

நமது நோக்கம் உலகமா, மறுமையா?

நமது இலட்சியம் அல்லாஹ்வின் அன்பா? அல்லது பேரும் புகழுமா?

நமது உள்ளத்தில் என்ன ஆசை இருக்கிறது? உலகத்தின் சுக வாழ்க்கையா? அல்லது சொர்க்கமா?

அமல்களில் உற்சாகமாக, முழு ஈடுபாட்டுடன் இருக்கிறோமா? அல்லது கவனக்குறைவாக அலட்சியமாக இருக்கிறோமா?

அமல்களில் அதிகம் ஆசை இருக்கிறதா? அல்லது உலக வாழ்க்கையிலும் வீண் விளையாட்டிலுமா?

பாவங்களை செய்துவிட்டால் உள்ளத்தில் கவலை வருகிறதா இல்லையா?

நன்மைகளை தவறவிட்டால் மனம் பதட்டப்படுகிறதா இல்லையா?

இப்படியாக நாம் நம்மை சுயபரிசோதனை செய்து உண்மையான ஈமானை அல்லாஹ்விடம் வேண்டுவோமாக!

அல்லாஹ்வே! எங்களை உலாயிக ஹுமுல் முஃமினூன ஹக்கன் என்று நீ வர்ணிக்கிற முஃமின்களில் ஆக்குவாயாக! நயவஞ்சகத்தை விட்டும் அதன் குணங்கள், பண்புகள், அடையாளங்களை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்!

• • •

## ஸஹாபாக்களின் சிறப்பும் தகுதியும்

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا عَبْدُ الْمُؤْمِنِ بْنُ أَبِي شُرَاعَةَ عَنِ الْـحَسَنِ قَالَ اعْرَفُوا الْمُهَاجِرِينَ بِفَضْلِهِمْ وَاتَّبِعُوا آثَارَهُمْ وَإِيَّاكُمْ وَمَا أَحْدَثَ النَّاسُ فِي دِينِهِمْ فَإِنَّ شَرَّ الْأُمُورِ الْمُحْدَثَاتُ

இமாம் ஹசன் ﵁ கூறுகிறார்கள்: முஹாஜிர்களை அவர்களின் சிறப்புகளுடன் அறிந்து கொள்ளுங்கள்! அவர்களின் வழிகாட்டல்களை பின்பற்றுங்கள்! மக்கள் தங்கள் மார்க்கத்தில் புதிதாக உருவாக்கியதை விட்டு விலகி எச்சரிக்கையாக இருங்கள்! ஏனெனில், காரியங்களில் மிகக் கெட்டது புதிதாக உருவாக்கப்பட்டவை ஆகும்.

**கருத்து:** இந்த மார்க்கத்தில் முதல் முன்னோடிகள் மக்காவை சேர்ந்த ஸஹாபாக்கள் ஆவார்கள். அவர்கள் சிரமமான காலத்தில் நபிக்கு துணை நின்றார்கள். நபியோடு ஹிஜ்ரத் செய்தார்கள். தீனுக்காக பெரிய தியாகங்களை செய்தார்கள். அவர்களின் தியாகத்தினாலும் கலப்பற்ற உறுதியான மார்க்கப் பற்றினாலும் அல்லாஹ்விடமும் ரஸூலிடமும் உயர்வான தகுதிகள் அவர்களுக்கு இருந்தன. ஆகவே, அவர்கள் செய்யாத காரியத்தை யார் செய்தாலும் அது மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத புதுமையான அனாச்சாரமாகும். நாம் அவற்றை விட்டு விலகி இருக்க வேண்டும்.

**விளக்கம்:** அல்லாஹ்வே! எங்கள் முஹாஜிர் நபித்தோழர்களை நீ பொருந்திக் கொள்வாயாக! அவர்களுக்கு உயர்ந்த ஜன்னத்துல் ஃபிர்தவ்ஸை தருவாயாக! எங்களை அவர்களின் பாதையில் வழி நடத்துவாயாக! ஆமீன்!

அல்லாஹு தஆலா நமக்கு மிக உயர்வான மிக சிறப்பான தூதரை கொடுத்தது போன்று மிக சிறப்பான ஸஹாபாக்களை கொடுத்திருக்கிறான். நபி முஹம்மத்

ﷺ அவர்கள் இறுதி நபியாக தேர்ந்தெடுக்கப்பட்டது போன்று அவருக்கு தோழர்களாக இருப்பதற்கு ஸஹாபாக்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் அவரவரின் தகுதிக்கு ஏற்ப நபியின் நட்புக்கும் தோழமைக்கும் மார்க்கப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மனிதர்களில் மிகச் சிறந்தவர்களை நபிமார்களாகவும் நபிமார்களில் மிகச் சிறந்தவரை இறுதி நபியாகவும் அல்லாஹ் ஆக்கினான். பிறகு சமுதாயங்களில் மிகச் சிறந்ததை ஸஹாபாக்கள் சமுதாயமாக அல்லாஹ் தேர்ந்தெடுத்தான்.

நபித்தோழர்களை பார்த்து அல்லாஹ் கூறுகிறான்:

كُنتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ ○

நீங்கள் மக்களுக்காக வெளியாக்கப்பட்ட சமுதாயத்தில் மிகச்சிறந்த சமுதாயமாக இருக்கிறீர்கள். (அல்குர்ஆன் 3 : 110)

அல்குர்ஆனில் பல நூறு முறை யா அய்யுஹல்லதீன ஆமனூ என்று அல்லாஹ் அழைக்கிற அந்த அன்பான கண்ணியமான அங்கீகாரமான அழைப்புக்கு முதல் தகுதி பெற்றவர்கள் அந்த ஸஹாபாக்கள்.

முஃமின்கள் என்று அல்லாஹ் வாழ்த்துகிற அந்த உயர்வான வாழ்த்துகளுக்கு முதன்மையான உரிமை பெற்றவர்கள் அந்த ஸஹாபாக்கள்.

ஒரு சமுதாயத்தின் நன்மைகளும் தியாகங்களும் உடனடியாக அங்கீகரிக்கப்பட்டு போற்றப்பட்டு வேதத்தில் நினைவு கூரப்பட்டவர்கள் அந்த ஸஹாபாக்கள்.

தவறுகள் உடனடியாக கண்டிக்கப்பட்டு, பாவங்கள் உடனடியாக மன்னிக்கப்பட்டு, உள்ளங்களும் செயல்களும் உடனுக்குடன் தூய்மைப் படுத்தப்பட்டவர்கள் அந்த ஸஹாபாக்கள்.

சொர்க்கவாசிகள், அல்லாஹ்வின் அன்பையும் பொருத்தத்தையும் பெற்றவர்கள் என்று நன்மாராயம் கூறப்பட்டு பூமியில் நடமாடிய சான்றோர்கள் ஸஹாபாக்கள்.

வானத்தில் மலக்குகள் இருப்பதுபோல் பூமியில் மலக்குகளாக வலம் வந்தவர்கள் அந்த ஸஹாபாக்கள்.

உள்ளங்களில் அல்லாஹ்வின் அன்பையும் ரஸூலின் அன்பையும் தவிர வேறொன்றுக்கும் முன்னுரிமை கொடுக்காத உண்மையான தியாகிகள் ஸஹாபாக்கள்.

அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட வேண்டும் என்று மரணத்தை நேசித்த மாமனிதர்கள் ஸஹாபாக்கள்.

வானத்திலிருந்து இறைவேதத்தின் வஹ்யி இறங்கி கொண்டிருந்த மகத்தான காலத்தில் வாழ்ந்து, ஒவ்வொரு முறை ஜிப்ரீல் இறங்கும்போதும் அவருடன் இறங்கிய சகீனாவில் நனைந்தவர்கள் ஸஹாபாக்கள்.

அர்ஷுடைய இறைவனாலும் வானலோக தலைவர்களாலும் ஏனைய வானவர்களாலும் வாழ்த்தப்பட்டு இறைவனின் விசேஷமான ஸலவாத் பொழியப்பட்ட பாக்கியவான்கள் ஸஹாபாக்கள்.

இன்று உலகமே இஸ்லாமின் தென்றலை அனுபவிக்கிறது என்றால், நேர்வழியின் வெளிச்சத்தை பார்க்கிறது என்றால், நேர்மை, நீதம், மனிதநேயம் இன்று உலகத்தில் இருக்கிறது என்றால், நீதமான ஆட்சிக்கு முன்னுதாரணம் வேண்டுமென்றால், இத்தனை கேள்விகளுக்கு ஒரே பதிலாக கூறப்பட தகுதியானவர்கள் ஸஹாபாக்கள்.

அல்லாஹ்வின் வேதத்திற்கும் நபியின் ஸுன்னாவிற்கும் முழுமையாக செயல் வடிவமாக விளங்கிய உண்மையான முஃமின்கள், முஸ்லிம்கள் ஸஹாபாக்கள்.

மார்க்கத்திற்காக உயிரையும், மனைவியையும், கணவனையும், பிள்ளைகளையும், பெற்றோரையும், ஊரையும், நாட்டையும், செல்வத்தையும், சொத்தையும், உடமைகளையும் அர்ப்பணம் செய்துவிட்டு கூலியாக சொர்க்கத்தை மட்டும் ஆசைப்பட்ட உத்தமர்கள் அந்த ஸஹாபாக்கள்.

முந்திய வேதங்களாகிய தவ்ராத்திலும் இன்ஜீலிலும் போற்றப்பட்டு சம காலத்து வேதக்காரர்களால் கண்ணியவான்களாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் ஸஹாபாக்கள்.

ஊழியம் செய்துவிட்டு உலகாதாயத்தை எதிர்பார்க்கும் மனிதனுக்கு மத்தியில், நபியே! உங்களோடு சொர்க்கத்தில் ஒன்றாக இருக்க வேண்டும் என எனக்காக ஏக இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள் என்று கேட்டவர்கள் ஸஹாபாக்கள்.

அன்றாட உணவை நினைத்து, சிரமமான வாழ்வாதாரத்தை எண்ணி கவலைப்படுகிற மக்களுக்கு நடுவில் நாளை மறுமையில் நாம் நேசிக்கிற நபியோடு சொர்க்கத்தில் இருப்போம் என்பதை நினைத்து மகிழ்ந்தவர்கள் அந்த ஸஹாபாக்கள்.

இரவில் இறை வணக்கம், பகலில் ஜிஹாத், இவைபோக நேரம் மிஞ்சினால் தொழில் என்று வாழ்ந்த மறுமையின் புருஷர்கள் அந்த ஸஹாபாக்கள்.

நபியின் மரணத்திற்கு பின்னர் உலக வாழ்க்கைக்கு திரும்பி விடாமல், சொகுசு வாழ்க்கையை தேடிச் செல்லாமல், கிடைத்த கனீமத்துகளை கொண்டு வாழ்க்கையை மேம்படுத்தலாம் என்று நினைக்காமல் தொடர்ந்து அல்லாஹ்வின் மார்க்கத்தை பரப்புவதற்காக பாதுகாப்பதற்காக உயிரை தியாகம் செய்த உண்மையாளர்கள் ஸஹாபாக்கள்.

ஆட்சியாளருக்கு அருகில் இருந்து உலகத்தை அனுபவிக்கலாம், ஆட்சியாளராக இருந்து சொகுசாக ஆடம்பரமாக வாழலாம் என்று ஆசைப்படாமல் அல்லாஹ்வின் பாதையில் போர் வீரனாக வாழ்ந்து போரில் வீரமரணம் அடைய வேண்டும் என்று பேராசைப்பட்டவர்கள் அந்த ஸஹாபாக்கள்.

எவ்வித சமரசமும் இல்லாமல் அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபியின் கட்டளைக்கும் கீழ்ப்படிந்து நடப்பதில் உலக இறுதி நாள் வரை வருகிற மக்களுக்கு முன்னுதாரணமாக திகழ்பவர்கள் ஸஹாபாக்கள்.

மறைவில் செய்த தப்புகளுக்கே பரிகாரம் வேண்டி, நபியின் சன்னிதானத்தில் ஆஜராகி, மறுமையின் தண்டனையிலிருந்து தப்பிக்க உலக தண்டனையை வேண்டி விரும்பி சகித்துக் கொண்டவர்கள் ஸஹாபாக்கள்.

தங்கள் நாடுகளை வென்று, தங்களை அடிமைகளாக ஆக்கியவர்கள் மீது வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் கொள்வது இயல்பு. ஆனால், ஸஹாபாக்களின் அடிமைகள் அப்படி அல்ல. சிறந்த நற்குணங்களால், உயர்ந்த ஈகை குணங்களால், நீதமான நேர்மையான ஆட்சியாலும் தீர்ப்பாலும் தங்கள் அடிமைகளையும் தாங்கள் வெற்றி கொண்ட நாட்டின் மக்களையும் கவர்ந்து அவர்கள் எல்லாம் இஸ்லாமை தழுவ காரணமாக இருந்த அழைப்பாளர்கள் அந்த ஸஹாபாக்கள்.

அவர்களில் முஹாஜிர்கள், அன்ஸாரிகள் என்று இரு பிரிவினர் இருக்கின்றனர். அவர்களில் முஹாஜிர்களுக்கு மார்க்கத்தில் தனி சிறப்புகளும் தகுதிகளும் உண்டு.

நான்கு கலீஃபாக்களும் முஹாஜிர்கள், அல் அஷரத்துல் முபஷ்ஷரா என்று அறியப்படும் சொர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் வழங்கப்பட்டவர்களும் முஹாஜிர்கள் ஆவார்கள். முஹாஜிர்களுக்கு இன்னும் பல சிறப்புகளும் தகுதிகளும் உண்டு.

ஆகவே, நமது ஈமானின் தேட்டம் நாம் அவர்களை அறிவதும் அவர்களை மதிப்பதும் அவர்களை பின்பற்றுவதும் ஆகும்.

இன்று மக்கள் உருவாக்கி வைத்திருக்கும் பல நூறு பித்அத்துகளை நாம் பித்அத்துகள் என்று அடையாளம் காண அந்த ஸஹாபாக்களின் வழிமுறைதான் நமக்கு ஆதாரமாக இருக்கிறது.

பலர் பித்அத்துகளுக்கு ஆதாரமாக குர்ஆன் வசனங்களை ஓதிகாட்டுகிறார்கள். நபியின் ஹதீஸை முன்வைக்கிறார்கள். கேவலமான அனாச்சாரங்களுக்கும் அற்பமான புதுமைகளுக்கும் குர்ஆன் ஸுன்னாவிலிருந்து மேற்கோள் காட்டுகிறார்கள். பொய்யை சத்தியமாக, அனாச்சாரத்தை நல்லமலாக சித்தரிப்பதற்கே உலகாசை பிடித்த, உலகத்திற்காக மறுமையை விற்ற சில மார்க்க அறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களின் வழிகேட்டிலிருந்து நாம் நம்மை பாதுகாத்துக் கொள்வதற்கும் மார்க்கத்தை மக்களுக்கு தெளிவுப்படுத்துவதற்கும் நமக்கு உரைகல் ஸஹாபாக்கள்தான்.

உலகத்தில் இன்னும் எத்தனை குழப்பமான காலங்கள் வந்தாலும் எல்லா குழப்பங்களிலிருந்தும் நாம் நம்மை பாதுகாத்து கொள்வதற்கு நமக்கு மார்க்கத்தின் அழகிய வழிகாட்டிகள் ஸஹாபாக்கள்தான்.

ஸுன்னாவில் உறுதியானவர்களாகவும் பித்அத்துகளில் கடுமையானவர்களாகவும் அனாச்சாரங்களை துணிவோடு எதிர்ப்பவர்களாகவும் இருந்தார்கள் அந்த ஸஹாபாக்கள்.

இத்தகைய காரணங்களை முன்னிட்டுதான் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் நமக்கு இப்படி ஒரு உபதேசத்தை கூறி சென்றிருக்கிறார்கள்.

ஆம், இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் அந்த ஸஹாபாக்களின் மாணவர் ஆயிற்றே! அந்த ஸஹாபாக்களின் இபாதத்தையும் இல்மையும் கண்ணால் கண்டவராயிற்றே! அவர்களோடு பழகி, ஒன்றாக அமர்ந்து, அவர்களின் சபையில் கல்வி ஞானம் கற்றவராயிற்றே! ஆகவேதான் நமக்கு இத்தகைய அழகிய சிறப்பான ஓர் உபதேசத்தை வழங்கினார்கள்.

முதலில் ஸஹாபாக்களின் மதிப்பை அறிய வேண்டும். பிறகு மார்க்கத்தில் அவர்களை முன்னோடிகளாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். மார்க்கத்தில் அவர்கள் செய்யாதது நமக்கு ஒருபோதும் மார்க்கமாக ஆகாது என்பதை விளங்க வேண்டும்.

ஸஹாபாக்கள் குறித்து குர்ஆனும் ஸுன்னாவும் பல சிறப்புகளை நமக்கு

கூறியுள்ளன. ஸஹாபாக்களை பின்பற்றும் விஷயத்தில் நமது சான்றோர்களும் நமக்கு உன்னதமான பல அறிவுரைகளை வழங்கி இருக்கிறார்கள். ஆகவே, அல்லாஹ்விடம் தனது ஈமானும் அமலும் ஏற்கப்பட வேண்டும் என்று ஆசை வைப்பவர்கள் ஸஹாபாக்களை பின்பற்றட்டும். மக்கள் உருவாக்கிய புதுமையான அமல்களை விட்டு விலகி இருக்கட்டும்.

இங்கு ஸஹாபாக்கள் குறித்து ஒரு வசனத்தையும் ஒரு ஹதீஸையும் சான்றோரின் ஒரு கூற்றையும் பதிவு செய்து இந்த அமர்வை நிறைவு செய்வோம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَالسَّابِقُونَ الْأَوَّلُونَ مِنَ الْمُهَاجِرِينَ وَالْأَنْصَارِ وَالَّذِينَ اتَّبَعُوهُمْ بِإِحْسَانٍ رَضِيَ اللهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ وَأَعَدَّ لَهُمْ جَنَّاتٍ تَجْرِي تَحْتَهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا أَبَدًا ذٰلِكَ الْفَوْزُ الْعَظِيمُ○

(இஸ்லாமை ஏற்பதில்) முதலாமவர்களாகவும் முந்தியவர்களாகவும் இருந்த முஹாஜிர்கள்; இன்னும், அன்ஸாரிகள்; இன்னும், இவர்க(ளுக்கு பின்னர் வந்து இவர்க)ளை நன்மையில் பின்பற்றிய(மற்ற)வர்க(ள் ஆகிய இவர்க)ளைப் பற்றி அல்லாஹ் திருப்தியடைந்தான். இன்னும், இவர்களும் அவனைப் பற்றி திருப்தியடைந்தனர். இன்னும், சொர்க்கங்களை இவர்களுக்கு (அவன்) தயார் செய்து வைத்திருக்கிறான். அவற்றின் கீழ் நதிகள் ஓடும். அவற்றில் எப்போதும் (அவர்கள்) நிரந்தரமாக தங்கி இருப்பார்கள். இதுதான் மகத்தான வெற்றியாகும். (அல்குர்ஆன் 9 : 100)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

خَيْرُكُمْ قَرْنِي ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ قالَ عِمْرانُ لَا أدْرِي ذَكَرَ ثِنْتَيْنِ أَوْ ثَلَاثًا بَعْدَ قَرْنِهِ ثُمَّ يَجِيءُ قَوْمٌ يَنْذِرُونَ ولا يَفُونَ ويَخُونُونَ ولَا يُؤْتَمَنُونَ ويَشْهَدُونَ ولَا يُسْتَشْهَدُونَ ويَظْهَرُ فِيهِمُ السِّمَنُ

உங்களில் சிறந்தவர்கள் எனது தலைமுறையினர் ஆவார்கள். பிறகு அவர்களை தொடர்ந்து வருபவர்கள், பிறகு அவர்களை தொடர்ந்து வருபவர்கள் ஆவார்கள். பிறகு ஒரு சமுதாயம் தோன்றுவார்கள். அவர்கள்

நேர்ச்சை செய்வார்கள். ஆனால், நிறைவேற்ற மாட்டார்கள். மோசடி, நம்பிக்கை துரோகம் செய்வார்கள். அவர்கள் மீது நம்பிக்கை வைக்க முடியாது. அவர்கள் சாட்சி பகர அழைக்கப்படாமல் சாட்சி கூற வருவார்கள். அவர்களில் உடல் பருமன் வெளிப்படும்.[82]

இமாம் அவ்சாயி ﵀ அவர்கள் கூறுகிறார்கள்:

**عَلَيْكَ بِآثَارِ مَنْ سَلَفَ وَإِنْ رَفَضَكَ النَّاسُ وَإِيَّاكَ وَآرَاءَ الرِّجَالِ وَإِنْ زَخْرَفُوهُ لَكَ بِالْقَوْلِ**

முன் சென்ற சான்றோரின் நற்போதனைகளை நீ பற்றிப் பிடித்துக்கொள்! மக்கள் உன்னை கைவிட்டாலும் சரியே! (மார்க்கத்தில் புதுமைகளை செய்த) இந்த மனிதர்களின் கருத்துகளை விட்டு உன்னை நான் எச்சரிக்கிறேன். அவர்கள் தங்கள் சொல்லால் அதை உனக்கு அலங்கரித்தாலும் சரியே!

இறுதியாக ஸஹாபாக்களை நேசிப்பதால் அவர்கள் மீது அன்பு வைப்பதால் மார்க்கத்தில் அவர்களை முன்னோடிகளாக எடுத்துக் கொள்வதால் நமக்கு கிடைக்கும் சில பலன்களை கூறிவிடுவோம்.

அல்லாஹ்வையும் ரஸூலையும் நேசித்த, அல்லாஹ்வும் ரஸூலும் நேசித்த அந்த ஸஹாபாக்களை நீ நேசிப்பதால் அல்லாஹ்வையும் ரஸூலையும் நேசிப்பதற்குரிய நற்பாக்கியம் உனக்கு கிடைக்கும். அல்லாஹ் இன்னும் ரஸூலுடைய நேசம் உனக்கு கிடைக்கப் பெறும்.

அல்லாஹ் உனது உள்ளத்தில் ஈமானை பதிவு செய்துவிடுவான். நயவஞ்சக குணத்திலிருந்து உன்னை அல்லாஹ் பாதுகாப்பான்.

உனது உள்ளமும் முகமும் எப்போதும் ஈமானிய ஒளியினால் தெளிவு பெற்றதாகவும் விசாலமானதாகவும் அருள் நிறைந்ததாகவும் நீடித்திருக்கும்.

இந்த மார்க்கத்தின் ஞானமும் விளக்கமும் உமக்கு கிடைக்க பெறுவதோடு வழிகேடுகளை விட்டு நீ பாதுகாப்பாக இருப்பாய்.

யாருடைய நல்லமல்களுக்கு அல்லாஹ்வும் ரஸூலும் சான்று வழங்கினார்களோ அந்த ஸஹாபாக்களை நீ நேசிப்பதால், அவர்களை நீ பின்பற்றுவதால் அவர்களைப் போன்று நல்லமல்களை நீ செய்வதற்கு அல்லாஹ் உனக்கும் நல்லருள் பாலிப்பான்.

82. அறிவிப்பாளர்: இம்ரான் இப்னு அல்ஹுசைன் ﵁, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 6695.

அல்லாஹ்வே! எங்களை நபித்தோழர்கள் சென்ற பாதையில் செலுத்துவாயாக! அவர்களோடு சொர்க்க சோலைகளில் எங்களையும் சேர்த்து வைப்பாயாக! அவர்கள் மீது நீ பொழிந்த அன்பையும் கருணையையும் எங்கள் மீதும் பொழிவாயாக!

رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِإِخْوَانِنَا الَّذِينَ سَبَقُونَا بِالْإِيمَانِ وَلَا تَجْعَلْ فِي قُلُوبِنَا غِلًّا لِلَّذِينَ آمَنُوا رَبَّنَا إِنَّكَ رَءُوفٌ رَحِيمٌ ۝

“எங்கள் இறைவா! எங்களையும் ஈமானில் எங்களை முந்திய எங்கள் (முஹாஜிர், அன்ஸாரி) சகோதரர்களையும் மன்னிப்பாயாக! நம்பிக்கை கொண்டவர்கள் மீது குரோதத்தை (-பொறாமையை) எங்கள் உள்ளங்களில் ஏற்படுத்திவிடாதே! எங்கள் இறைவா! நிச்சயமாக நீதான் மகா இரக்கமுள்ளவன், மகா கருணையாளன்.”[83] ஆமீன்!

• • •

---

83. அல்குர்ஆன் 59 : 10.

## சான்றோர் பாடசாலை அமர்வு 46, கூற்று 1558

# பகட்டு அழுகை வேண்டாம்

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا أَبِي حَدَّثَنَا رَوْحٌ حَدَّثَنَا السَّرِيُّ بْنُ يَحْيَىٰ حَدَّثَنَا عَبْدُ الْكَرِيمِ بْنُ رُشَيْدٍ قَالَ: كُنْتُ فِي حَلْقَةِ الْـحَسَنِ فَجَعَلَ رَجُلٌ يَبْكِي وَارْتَفَعَ صَوْتُهُ فَقَالَ الْـحَسَنُ إِنَّ الشَّيْطَانَ لَيُبْكِي هٰذَا الْآنَ

அப்துல் கரீம் இப்னு ரஷீத் ﵀ கூறுகிறார்: நான் இமாம் ஹசன் ﵀ அவர்களின் சபையில் இருந்தேன். அப்போது ஒருவர் அழ ஆரம்பித்தார். அவரது அழுகை சத்தம் கூடிக்கொண்டே போனது. உடனே, இமாம் ஹசன் ﵀ கூறினார்கள் "நிச்சயமாக ஷைத்தான் இப்போது இவரை அழ வைக்கிறான்."

**கருத்து:** இப்படி அழுதவரைப் பற்றி அவர் எப்படிப்பட்டவர் என்று இமாம் ஹசன் ﵀ அவர்கள் முன்பே அறிந்திருந்தார்கள் போலும். சிலர், முகஸ்துதியைக் கொண்டு அறியப்பட்டவர்களாக இருப்பார்கள். மக்கள் பார்க்கும்போது தன்னை பக்திமானாக அவர்கள் காட்டிக் கொள்வார்கள். உண்மையில் அவர்களிடம் தக்வா இருக்காது. ஒருவர் ஓர் அமலை முகஸ்துதிக்காக செய்தால் அது ஷைத்தானின் கெட்ட தூண்டுதலினால் அவர் அதை செய்கிறார். அல்லாஹ்விற்காக அழுபவர் தனது அழுகையை மறைக்க முயற்சிப்பார். எல்லோருக்கும் தெரியும்படி தனது அழுகையை காட்டிக் கொள்ள மாட்டார்.

**விளக்கம்:** அல்லாஹ்வே! எங்களை மனத்தூய்மை உள்ளவர்களாக, முகஸ்துதியிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களாக ஆக்குவாயாக!

இமாம் ஹசன் ﵀ அவர்களின் சபை இறையச்சம் நிறைந்த உபதேசங்கள், மறுமையின் நினைவூட்டல் உடையதாகவும் இருக்கும். இத்தகைய சபைகளில் கண்கள் கலங்குவதும் கண்ணீர் வருவதும் சகஜமானதுதான்.

இருந்தாலும், இமாம் அவர்கள் பேச ஆரம்பிப்பதற்கு முன்பே சபையில் ஒருவர் அழ ஆரம்பித்தால் அவரைப் பற்றி என்ன சொல்வது?

அழ வேண்டிய இடம் வரும்போது அழ வேண்டும். அழ வேண்டிய செய்திகள் சொல்லப்படும்போது வலுக்கட்டாயமாக அல்லாமல், இயற்கையாக அழுகை வர வேண்டும். சபைகளில் அழுகை வரும்போது அந்த அழுகையை முடிந்தளவு அடக்க வேண்டும். அழுகையை வெளிப்படுத்தாமல் சமாளிக்க வேண்டும். முடிந்த வரை கண்களை துடைத்துக் கொண்டு, தன் பக்கம் யாருடைய கவனமும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அழுகை என்பது தானாக வர வேண்டும். வலுக்கட்டாயமாக அழக் கூடாது. பகட்டுக்காக அழக் கூடாது. அழுவதைப் போன்று வேஷம் போடக்கூடாது.

அல்லாஹ்வைப் பற்றி, மறுமையைப் பற்றி நினைவு கூரப்படும்போது உள்ளம் பயப்பட வேண்டும். அதைத் தொடர்ந்து கண்களில் கண்ணீர் வெளிப்படும்.

தனிமையில் நாம் அதிகம் அழ வேண்டும். இரவின் நடுநிசியில் அழ வேண்டும். யாரும் இல்லாதபோது அல்லாஹ்வை நினைத்து அழ வேண்டும்.

அல்லாஹ்வின் வேதம் உள்ளங்களை பரிசுத்தப்படுத்த அல்லாஹ் இறக்கிய குர்ஆனை ஓதி, அதன் பொருள்களை உணர்ந்து அல்லாஹ்வின் பயமும் அச்சமும் ஏற்பட்டு அழ வேண்டும்.

இரவின் ஓரத்தில் அதிகாலை (ஸஹர்) நேரத்தில் பாவமன்னிப்புடைய துஆ கேட்கும்போது அழ வேண்டும்.

ரஸூல் ﷺ அவர்களின் ஹதீஸ்களையும் அவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் படிக்கும்போது அழுகை வர வேண்டும்.

நமது சான்றோரின் வரலாறுகளை படிக்கும்போது அழுகை வர வேண்டும்.

தனிமையில் மறுமையின் நினைவு மேலோங்கி, மஹ்ஷரின் நிகழ்வுகளை நினைத்து, விசாரணையையும் பாலத்தையும் செயலேட்டையும் நினைத்து அழ வேண்டும்.

மக்களோடு மக்களாக இருக்கும்போது அழுகை என்பது கண்களின் கண்ணீர் கசிவாக மட்டும் இருக்க வேண்டும். சத்தம் போட்டு கத்தி அழுவதோ, ஓ வென்று ஒப்பாரி வைத்து அழுவதோ விரும்பத்தக்கதல்ல.

காரணம், எந்த ஓர் அமலும் இக்லாஸ் என்ற மனத்தூய்மையுடன் இருக்கிற வரைதான் அது வணக்கமாகவும் நன்மைக்கு உரியதாகவும் இருக்கும்.

வணக்க வழிபாடு மனத்தூய்மையை விட்டு நீங்கி விட்டால் அது பார்ப்பதற்கு மட்டும்தான் நல்லமலாக இருக்கும்.

முகஸ்துதி கலந்த வணக்க வழிபாடுகள் ஒரு மனிதனின் அழிவுக்கு போதுமானதாகும். இஸ்லாமிய மார்க்கத்தின் உறுப்பினர்கள், வணக்க வழிபாடுகள் அனைத்தையும் மனத்தூய்மையுடன் நிறைவேற்ற வேண்டும் என்று அல்குர்ஆன் வழிகாட்டுகிறது.

அல்லாஹு தஆலா குர்ஆனின் பல இடங்களில் இதை வலியுறுத்துகிறான். அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَمَا أُمِرُوا إِلَّا لِيَعْبُدُوا اللَّهَ مُخْلِصِينَ لَهُ الدِّينَ حُنَفَاءَ وَيُقِيمُوا الصَّلَاةَ وَيُؤْتُوا الزَّكَاةَ وَذَٰلِكَ دِينُ الْقَيِّمَةِ ○

அவர்கள் வழிபாட்டை அவனுக்கு மட்டும் தூய்மைப்படுத்தியவர்களாக, இணைவைப்பை விட்டு விலகியவர்களாக இருக்கும் நிலையில் அல்லாஹ்வை வணங்குவதற்கும், தொழுகையை நிலைநிறுத்துவதற்கும் ஸகாத்தைக் கொடுப்பதற்கும் தவிர ஏவப்படவில்லை. இன்னும், இதுதான் நேரான (நீதியான, சரியான சட்டங்களுடைய) மார்க்கமாகும்.

(அல்குர்ஆன் 98 : 5)

மேலும், அல்லாஹு தஆலா கூறுகிறான்:

أَلَا لِلَّهِ الدِّينُ الْخَالِصُ ○

அறிந்து கொள்ளுங்கள்! பரிசுத்தமான வணக்க வழிபாடுகள் எல்லாம் அல்லாஹ்விற்கே உரியன. (அல்குர்ஆன் 39 : 3)

இப்படியாக பல வசனங்கள் அல்குர்ஆனில் உள்ளன. அவை ஒவ்வொன்றும் இக்லாஸை வலியுறுத்துகின்றன. சிறிய பெரிய ஒவ்வொரு அமலையும் அல்லாஹ்வின் திருமுகம் நாடி மட்டுமே செய்ய வேண்டும் என்பதை கற்றுத் தருகின்றன.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இக்லாஸ் என்ற மனத்தூய்மையை வலியுறுத்தியும், ரியா என்ற முகஸ்துதியை எச்சரித்தும் பல ஹதீஸ்களை நமக்கு கூறி இருக்கிறார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عَنْ مَحْمُودِ بْنِ لَبِيدٍ

أَنَّ رَسُولَ اللهِ ﷺ قَالَ إِنَّ أَخْوَفَ مَا أَخَافُ عَلَيْكُمْ الشِّرْكُ الْأَصْغَرُ قَالُوا وَمَا الشِّرْكُ الْأَصْغَرُ يَا رَسُولَ اللهِ قَالَ الرِّيَاءُ يَقُولُ اللهُ عَزَّ وَجَلَّ لَهُمْ يَوْمَ الْقِيَامَةِ إِذَا جُزِيَ النَّاسُ بِأَعْمَالِهِمْ اذْهَبُوا إِلَى الَّذِينَ كُنْتُمْ تُرَاءُونَ فِي الدُّنْيَا فَانْظُرُوا هَلْ تَجِدُونَ عِنْدَهُمْ جَزَاءً

நான் உங்கள் மீது அதிகம் பயப்படுவது சிறிய ஷிர்க்கைத்தான். அல்லாஹ்வின் தூதரே! சிறிய ஷிர்க் என்றால் என்ன என்று தோழர்கள் கேட்டார்கள். நபியவர்கள், முகஸ்துதி என்று பதில் கூறிவிட்டு, மேலும் கூறினார்கள்: மக்கள், அவர்களின் அமல்களுக்கு ஏற்ப கூலி கொடுக்கப்படும்போது கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ் மறுமையில் (முகஸ்துதிக்காக அமல் செய்த) அவர்களுக்கு (பின்வருமாறு) கூறுவான்: “நீங்கள் உலகத்தில் யாருக்கு காண்பிப்பதற்காக அமல் செய்து கொண்டிருந்தீர்களோ அவர்களிடம் சென்று விடுங்கள். ஆக, அவர்களிடம் ஏதும் கூலியை பெறுகிறீர்களா என்று கவனியுங்கள்!”[84]

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ قَالَ رَسُولُ اللهِ ﷺ قَالَ اللهُ تَبَارَكَ وَتَعَالَى أَنَا أَغْنَى الشُّرَكَاءِ عَنْ الشِّرْكِ مَنْ عَمِلَ عَمَلًا أَشْرَكَ فِيهِ مَعِيَ غَيْرِي تَرَكْتُهُ وَشِرْكَهُ

அல்லாஹு தஆலா கூறுவதாக ரஸூலுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்: நான் (பிறரோடு) கூட்டு சேர்வதை விட்டும் மிகவும் தேவை அற்றவன். யார் ஒருவர் ஒரு அமலை செய்து, அதில் என் அல்லாதவரை கூட்டாக்குவாரோ நான் அவரையும் அவர் கூட்டாக்கியதையும் விட்டு விடுவேன்.[85]

عن جُنْدَبٍ قَالَ قَالَ النَّبِيُّ ﷺ مَنْ سَمَّعَ سَمَّعَ اللهُ بِهِ وَمَنْ يُرَائِي يُرَائِي اللهُ بِهِ

84. அறிவிப்பாளர்: மஹ்மூத் இப்னு லபீத் அல் அன்ஸாரி ؓ, நூல்: முஸ்னத் அஹ்மத், எண்: 23630.

85. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ؓ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 2985.

யார், பிறர் தன்னை புகழ்வதை தான் கேட்க வேண்டும் என்று அமல் செய்வாரோ அல்லாஹ்வும் (நாளை மறுமையில் அவரின் தண்டனையை) அவருக்கு கேட்கும்படி செய்வான். யார், பிறர் பார்த்து மெச்ச வேண்டும் என்பதற்காக அமல் செய்வாரோ அல்லாஹ்வும் (நாளை மறுமையில்) அவரின் தண்டனையை அவருக்கு காண்பிப்பான்.[86]

எந்த ஒரு செயலையும் நாம் எளிதாக கடந்து செல்ல முடியாது. ஏனெனில், அதற்கு மறுமையில் தகுந்த கூலி இல்லாமல் நமது செயல்கள் ஏதும் இல்லை.

அழுகையாக இருக்கட்டும், சிரிப்பாக இருக்கட்டும், ஜாடையாக இருக்கட்டும், பேச்சாக இருக்கட்டும், அமைதியாக இருக்கட்டும். இம்மையின் ஒவ்வொரு காரியத்திற்கும் மறுமையில் கூலி உண்டு.

அந்த அடிப்படையில்தான் இமாம் அவர்கள் உபதேசம் செய்கிறார்கள்.

உலகத்தில் பல வகையான மக்கள் இருக்கிறார்கள்.

இந்த உலகத்தில் நல்லோரும் உண்டு, தீயோரும் உண்டு.

தூய்மையானவர்களும் உண்டு, அசுத்தமானவர்களும் உண்டு.

அல்லாஹ்விற்காக வாழ்பவர்களும் உண்டு. ஷைத்தானுக்காக வாழ்பவர்களும் உண்டு. எதையும் மறுமைக்காகவே செய்பவர்களும் உண்டு. உலக செல்வத்திற்காகவும் உலகாதாயத்திற்காகவும் மட்டுமே அமல் செய்பவர்களும் உண்டு.

உலகில் முஃமின்களும் உண்டு, காஃபிர்களும் உண்டு.

முஸ்லிம்களும் உண்டு, முஷ்ரிக்குகளும் உண்டு.

நபியவர்களின் காலத்திலேயே இப்படி எல்லா வகையான மக்களும் இருந்தார்கள். யார் எப்படி இருந்தார்களோ அவர்களுடன் அதற்கேற்ப நபியவர்கள் பழகினார்கள்.

முகஸ்துதியும் நயவஞ்சகமும் உள்ளத்தில் குடிகொண்ட முனாஃபிக்குகள் பலர் பற்றி அல்குர்ஆன் நமக்கு தெளிவுப்படுத்துகிறது.

வெளிப்படையான காஃபிரை விட உள்ரங்கத்தில் நயவஞ்சகத்தை மறைத்து வைத்திருக்கும் முனாஃபிக் மிக ஆபத்தானவன்.

86. அறிவிப்பாளர்: ஜுன்துப் இப்னு அப்தில்லாஹ் ﷺ, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 6499.

அவர்கள் ஷைத்தானின் ஏஜெண்டுகளாக இந்த உம்மத்தில் செயல்படுவார்கள். இந்த உம்மத்தின் அப்பாவி மக்களை வழிகெடுக்க ஷைத்தான் அவர்களையே தனது வலையாக பயன்படுத்துவான்.

வெளி உலகத்தில் மகா தூயவர்களாகவும், நல்லெண்ணம் உள்ளவர்களாகவும், சுத்தமான செயல்களை உடையவர்களாகவும் காட்டிக் கொள்வார்கள்.

ஆனால், அவர்களின் உள்ளங்களோ அழுக்குகளும், அசுத்தங்களும், கெட்ட எண்ணங்களும், ஆபத்தான ஆசைகளும், விபரீதங்களும் நிறைந்தவையாக இருக்கும்.

இவர்களை நாம் அறிந்து அவர்களின் தொடர்பை விட்டு விலகி தூரமாக இருக்க வேண்டும்.

இந்த கூற்றில் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் அத்தகைய மனிதர்களில் ஒருவரை பற்றித்தான் எடுத்தியம்புகிறார்கள்.

சபையின் நாகரீகம் தெரியாமல், மக்கள் யாரும் அழாமல் இருக்கும்போது, தான் மட்டும் வீறிட்டு அழுதால் மக்கள் என்ன நினைப்பார்கள்?

உண்மையை புரிந்தவர்கள், அத்தகைய நபரை பார்த்து, அழுது நடிக்காதே என்று சொல்வார்கள்.

அழுகை மிக உயர்ந்த வணக்கமாகும். அதை அல்லாஹ்வுக்கு மட்டுமே செய்ய வேண்டும்.

பகட்டுக்காக புகழுக்காக அழுவதும், அழ வைப்பதும் இந்த உம்மத்தின் ஒரு கேவலமான செயலாகும்.

அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

அல்லாஹ்வே, எங்களை மனத்தூய்மையுடன் வாழவைப்பாயாக!

உன்னையே நினைவு கூர்ந்து உன் தண்டனையை பயந்து, சொர்க்கலோகத்தில் வாழவைப்பாயாக! ஆமீன்!

சான்றோர் பாடசாலை அமர்வு 47, கூற்று 1559

## சொல்லை விட செயலைக் கொண்டு உபதேசம் செய்யுங்கள்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا هَارُونُ حَدَّثَنَا ضَمْرَةُ عَنِ ابْنِ أَبِي حَمَّادِ بْنِ كَيْسَانَ عَنِ الْـحَسَنِ قَالَ عِظِ النَّاسَ بِفِعْلِكَ وَلَا تَعِظْهُمْ بِقَوْلِكَ

இமாம் ஹசன் ﷀ கூறுகிறார்கள்: நீ உனது செயலால் மக்களுக்கு உபதேசம் செய்! உனது சொல்லால் அவர்களுக்கு உபதேசம் செய்யாதே!

**கருத்து:** சொல்லால் உபதேசிப்பதை விட செயலால் உபதேசிப்பது மிக அதிகம் பலன் தரக்கூடியதாகும். அதாவது, நாம் நல்லதை எடுத்து நடக்க வேண்டும். பிறகு, அதை பிறருக்கு நாம் உபதேசம் செய்ய வேண்டும். நாம் பிறருக்கு உபதேசம் செய்வதற்கு முன்னர் நாம் அந்த நல்லதை நமக்குள் கொண்டு வர வேண்டும். பிறகு, அதை பிறருக்கு நாம் உபதேசிக்க வேண்டும். அது நல்ல மாற்றத்தை விரைவாக உண்டாக்கும்.

**விளக்கம்:** அல்லாஹ் இமாம் ஹசனுக்கு அருள் புரிவானாக! நமது சான்றோர் காட்டிய நல்வழியில் நம்மை வழி நடத்துவானாக! ஆமீன்.

உபதேசம் மக்களுக்கு தேவை. அறிவுரைகள் மக்களுக்கு சென்று சேர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அவர்களின் காலை, மாலை, இரவு, பகல், தொழில், வியாபாரம், வழிபாடு, குடும்ப வாழ்க்கை என எல்லாவற்றிலும் அவர்களுக்கு அறிவுரையும் நல்லுபதேசமும் அழகிய வழிகாட்டலும் தேவைப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

ஆம், அந்த உபதேசமும் அறிவுரையும் ஆழமாகவும், அழுத்தமாகவும், நல்ல தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

அத்தகைய நல்ல அறிவுரைகளை வழங்க தகுதியானவர்கள், சிறந்த உபதேசத்தை கொடுக்க அருகதை உள்ளவர்கள் யாரென்றால் அந்த

அறிவுரைகளையும் உபதேசங்களையும் தங்கள் வாழ்வில் எடுத்து நடப்பவர்கள்தான்.

இங்கு, இமாம் அவர்கள் அறிவுரை வழங்கக் கூடியவர்களுக்கு அறிவுரை வழங்குகிறார்கள்; உபதேசம் செய்யக் கூடியவர்களுக்கு உபதேசம் செய்கிறார்கள்.

ஆம், மக்களுக்கு பிரசங்கம் நிகழ்த்தக் கூடிய, அறிவுரை சொல்லக் கூடிய, உபதேசம் செய்யக் கூடிய எல்லோரும் சிந்தித்து புரிய வேண்டிய ஓர் ஞானமாகும் இது.

இஸ்ரவேலர்களுடைய அறிஞர்கள் செய்த பெரும் தவறுகளில் இதுவும் ஒன்றாகும். அவர்கள் மக்களுக்கு உபதேசம் செய்வார்கள். ஆனால், அவர்கள் அதை பின்பற்றி நடக்க மாட்டார்கள். இதை பற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் இப்படி கண்டிக்கிறான்:

أَتَأْمُرُونَ النَّاسَ بِالْبِرِّ وَتَنْسَوْنَ أَنْفُسَكُمْ وَأَنْتُمْ تَتْلُونَ الْكِتَابَ أَفَلَا تَعْقِلُونَ○

நீங்களோ வேதத்தை ஓதுபவர்களாக இருக்கும் நிலையில் உங்களை நீங்கள் மறந்துவிட்டு, மக்களுக்கு (மட்டும்) நன்மையை ஏவுகிறீர்களா? நீங்கள் சிந்தித்து புரியமாட்டீர்களா? (அல்குர்ஆன் 2 : 44)

இது குறித்து மிக மிக எச்சரிக்கை ஒன்று நபிமொழியில் வந்திருப்பதை பார்க்கிறோம்.

**مَرَرْتُ لَيْلَةَ أُسْرِيَ بِي بِأَقْوَامٍ تُقْرَضُ شِفَاهُهُمْ بِمَقَارِيضَ مِنْ نَارٍ قُلْتُ مَنْ هٰؤُلَاءِ يَا جِبْرِيلُ قَالَ خُطَبَاءُ أُمَّتِكَ الَّذِينَ يَقُولُونَ مَا لَا يَفْعَلُونَ وَيَقْرَؤُونَ كِتَابَ اللّٰهِ وَلَا يَعْمَلُونَ بِهِ**

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: என்னை வானுலகம் அழைத்துச் செல்லப்பட்ட இரவில் நான் சில மக்களை கடந்து சென்றேன். அவர்களின் உதடுகள் நெருப்பினால் ஆன கத்திரிகளால் வெட்டப்பட்டுக் கொண்டிருந்தன. ஜிப்ரீலே இவர்கள் யார் என்று நான் கேட்டேன். அவர் கூறினார்: இவர்கள் உமது உம்மத்தின் பிரசங்கிகள் - பேச்சாளார்கள். இவர்கள் தாங்கள் செய்யாததை

(மக்களுக்கு) சொல்வார்கள். இவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை படிப்பார்கள். அதன்படி அமல் செய்ய மாட்டார்கள்.[87]

يُـجَاءُ بالرَّجُلِ يَومَ الْقِيَامَةِ فَيُلْقَىٰ فِي النَّارِ فَتَنْدَلِقُ أَقْتَابُهُ فِي النَّارِ فَيَدُورُ كَمَا يَدُورُ الْـحِمَارُ بِرَحَاهُ فَيَجْتَمِعُ أَهْلُ النَّارِ عَلَيْهِ فَيَقُولُونَ أيْ فُلَانُ مَا شَأْنُكَ أَلَيْسَ كُنْتَ تَأْمُرُنَا بِالْمَعْرُوفِ وَتَنْهَانَا عَنِ الْمُنْكَرِ قَالَ كُنْتُ آمُرُكُمْ بِالْمَعْرُوفِ وَلَا آتِيهِ وَأَنْهَاكُمْ عَنِ الْمُنْكَرِ وَآتِيهِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: அந்த மனிதனை மறுமையில் கொண்டு வரப்பட்டு நரகத்தில் எறியப்படும். அவனது குடல்கள் நரகத்தில் பிதுங்கி தொங்கி கொண்டிருக்கும். நரகவாசிகள் அவனை சுற்றிக்கொண்டு அவனிடம் கேட்பார்கள், இன்னவனே! உனது காரியம் என்ன? நீ எங்களுக்கு நன்மையை ஏவிக்கொண்டு இருந்தாயே! எங்களை கெட்டதை விட்டு தடுத்துக் கொண்டிருந்தாயே! இப்படி அவர்கள் கேட்பார்கள். அவன் கூறுவான், நான் உங்களுக்கு நன்மையை ஏவிக்கொண்டிருந்தேன். நான் அதை செய்ய மாட்டேன். நான் உங்களை கெட்டதிலிருந்து தடுத்துக்கொண்டிருந்தேன். அதை நான் செய்துவந்தேன்.[88]

அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! நமது அறிஞர்களை, நமது பேச்சாளர்களை பாதுகாப்பானாக!

உண்மையில் ஒரு பேச்சாளருடைய இக்லாஸ் அவரது பேச்சில் மட்டும் இல்லை. அவரது பேச்சில் இக்லாஸும் அல்லாஹ்வின் பயமும் இருந்தால் அவர் கண்டிப்பாக பிறருக்கு அறிவுரை கூறும் முன்பாக அவர் அதைக் கொண்டு அமல் செய்வார். தன்னை முதலில் திருத்திக்கொண்டு மக்களுக்கு உபதேசம் செய்ய முன்வருவார்.

யார் பேச்சை தொழிலாக ஆக்கிக் கொண்டார்களோ, உபதேசத்தை பிழைப்பாக வைத்துக் கொண்டார்களோ, பிரசங்கத்தை வருமானமாக மாற்றிக் கொண்டார்களோ அவர்கள் மக்களுக்கு நல்லதை சொல்வார்கள். ஆனால், அவர்கள் அதை எடுத்து நடக்க மாட்டார்கள். கெட்டதை குறித்து மக்களை எச்சரிப்பார்கள். ஆனால், அவர்கள் அதை செய்து கொண்டிருப்பார்கள்.

87. அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் ؓ, நூல்: ஸஹீஹுத் தர்கீப், எண்: 125.
88. அறிவிப்பாளர்: உஸாமா இப்னு ஸைத் ؓ, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 3267.

மறுமை நம்பிக்கை இல்லாதவர்கள், படைத்தவனாகிய உயிருள்ள இறைவனை வணங்காமல், உயிரற்ற பொருள்களை வணங்குபவர்களில் உள்ள பண்டிதர்கள் இப்படி இருப்பது ஆச்சரியமல்ல. அல்லாஹ்வையும் மறுமை நாளையும் உறுதியாக நம்பிக்கை கொள்ளக்கூடிய முஸ்லிம் சமுதாயத்தின் அறிஞர்கள் அப்படி இருக்கக் கூடாது.

அவர்கள் நபிமார்களின் வாரிசுகள். முதலில் தக்வாவை நல்லமல்களை தங்கள் வாழ்க்கையில் கொண்டு வரவேண்டும். பிறகு மக்களுக்கு மார்க்கத்தை போதிக்க வேண்டும். இல்லை என்றால் இவர் யாரிடம் மார்க்கத்தை போதிக்கிறாரோ அவர்கள் மார்க்கத்தை விளையாட்டாக எடுத்துக் கொள்வார்கள், இஸ்ரவேலர்கள் எடுத்துக்கொண்டது போன்று.

ஓர் ஆலிம், தான் செய்யாததை மக்களுக்கு சொல்லும்போதும் மக்களை தீமையிலிருந்து தடுத்துவிட்டு அதை தானே செய்கிறபோதும் அந்த அறிஞருடைய மதிப்பும் மரியாதையும் மக்களின் பார்வையில் விழுந்து விடுகிறது. அது மட்டுமல்ல. மார்க்கத்தின் மதிப்பும் அந்த மக்களின் பார்வையில் குறைந்து விடுகிறது.

இங்கே அபுல் அஸ்வத் (இறப்பு ஹிஜ்ரி 69) என்ற தாபியி உடைய கவிதையை பதிவு செய்வது மிக முக்கியமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

لَا تَنْهَ عَنْ خُلُقٍ وَتَأْتِيَ مِثْلَهُ *** عَارٌ عَلَيْكَ إِذَا فَعَلْتَ عَظِيمُ

اِبْدَأْ بِنَفْسِكَ وَانْهَ عَن غيِّها *** فَإِذَا انْتَهَتْ عَنْهُ فَأَنْتَ حَكِيمُ

فَهُناكَ يُقبَل مَا وَعَظْتَ وَيُقتَدىٰ *** بِالْعِلْمِ مِنْكَ وَيَنْفَعُ التَّعْلِيمُ

ஒரு குணத்தை விட்டு (மக்களை) தடுக்காதே! அதுபோன்றதை நீ செய்துகொண்டிருக்கும் நிலையில்!

நீ இப்படி செய்தால் அது உனக்கு பெரிய இழிவாகும்.

உன் ஆன்மாவிலிருந்து (சீர்திருத்தத்தை) நீ தொடங்கு! அதை நீ அதன் வழிகேட்டிலிருந்து தடு! ஆக, அது அதிலிருந்து விலகிக்கொண்டால் நீ ஞானியாக இருக்கிறாய்.

ஆக, அப்போதுதான் நீ செய்த உபதேசம் ஏற்றுக்கொள்ளப்படும். உன்னிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வி பின்பற்றப்படும். கற்பிப்பதும் நற்பலனளிக்கும்.

நமது சான்றோர் சொல்லால் பேசியதை விட அவர்களின் செயலால் பேசியதுதான் அதிகம். அதாவது, அவர்கள் வாய் பேசியதை விட அவர்களின் செயல்கள் பேசியதுதான் அதிகம். அந்த நல்லோரின் தோழமை கிடைக்கப்பெற்றோர் இறையச்சத்தையும் நற்பாக்கியங்களையும் அடையப் பெற்றார்கள்.

அப்படித்தான் நபி ﷺ அவர்கள் தங்கள் தோழர்களை தமது செயலால் உருவாக்கினார்கள். அறிவுரை கூறவும் செய்தார்கள் தேவையான இடங்களில். ஆனால், பல நேரங்களில் அவர்களின் செயல்களைக் கொண்டே ஸஹாபாக்கள் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான உபதேசங்களை பெறக் கூடியவர்களாக இருந்தார்கள். இப்படித்தான் சிறப்பிற்குரிய அந்த மூன்று தலைமுறையினர்களும் இருந்தார்கள்.

இது குறித்து பல அறிஞர்கள் வழிகாட்டி இருக்கிறார்கள். அதாவது நாம் ஒழுக்கமாக இருந்து, ஒழுக்கத்தை மக்களுக்கு ஏவ வேண்டும்.

நாம் உண்மை பேசுபவர்களாக இருந்து, உண்மையை மக்களுக்கு ஏவ வேண்டும்.

நாம் நேர்மையாளர்களாக இருந்து கொண்டு, மக்களுக்கு நேர்மையை ஏவ வேண்டும்.

நாம் வழிபாடுகளை சரிவர பேணுதலுடன் செய்து கொண்டு, வழிபாடுகளை சரிவர செய்யுங்கள் என்று மக்களுக்கு ஏவ வேண்டும்.

இப்படி நற்குணமாக இருக்கட்டும், நல்லமலாக இருக்கட்டும், நாம் முதலில் அதை வாழ்க்கையில் பின்பற்றி செயல்பட வேண்டும். பிறகு அதை மக்களுக்கு சொல்ல வேண்டும். மக்கள் நமது சொல்லும் செயலும் ஒத்திருப்பதை பார்த்து அவர்களும் ஆர்வத்தோடு நமது போதனையை பின்பற்றி நடப்பார்கள்.

வீட்டில் பெற்றோர், பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். குடும்பத்தில் பெரியவர்கள், சிறியவர்களுக்கு முன்மாதிரியாக நடக்க வேண்டும். அறிஞர்களும் அதிகாரிகளும் பொதுமக்களுக்கு முன்மாதிரியாக திகழ வேண்டும். இப்படி நம்மில் ஒவ்வொருவரும் நமக்கு கீழ் உள்ளவர்களுக்கு அழகிய முன்மாதிரியாக திகழ வேண்டும். அப்போதுதான் நாம் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்கிறபோது அந்த உபதேசம் அவர்களுக்குள் நல்ல மாற்றத்தை கொண்டு வரும். அவர்கள் ஆர்வத்தோடு நமது வழிகாட்டலை ஏற்று நடப்பார்கள்.

அல்லாஹ்வே! எங்கள் ஆன்மாவை அதன் அகத்தையும் புறத்தையும் பரிசுத்தப்படுத்துவாயாக! எங்கள் ஆன்மாக்களை கெட்ட குணத்திலிருந்தும் தீய பண்புகளிலிருந்தும் தூய்மைப்படுத்துவாயாக! செயல்படாமல் சொல்வதிலிருந்தும், எடுத்து நடக்காமல் ஏவுவதிலிருந்தும் எங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்.

● ● ●

**சான்றோர் பாடசாலை அமர்வு 48, கூற்று 1560**

## சிக்கனமான செலவே சீரான வாழ்க்கை!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنِي هَارُونُ حَدَّثَنَا سَيَّارٌ حَدَّثَنَا جَعْفَرٌ حَدَّثَنَا الْمُعَلَّى بْنُ زِيَادٍ قَالَ سَمِعْتُ الْـحَسَنَ يَحْلِفُ بِاللهِ مَا عَالَ مُقْتَصِدٌ قَطُّ

இமாம் ஹசன் ﵀ அவர்கள் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டு கூறுகிறார்கள்: சிக்கனமாக செலவு செய்பவர் ஏழ்மை அடைய மாட்டார்.

**கருத்து:** செல்வத்தை சம்பாதிப்பது நமது தேவைகளுக்கு செலவு செய்வதற்காகத்தான். ஆனால், செலவு செய்கிறபோது கவனம் இருக்க வேண்டும். நடுத்தரமாக, நிதானமாக, சிக்கனமாக செலவு செய்ய வேண்டும். அப்படி செலவு செய்தால் நமது நாளைய அவசிய தேவைகளுக்கு நாம் பிறரிடம் தேவையாகக்கூடிய நிலை ஏற்படாது.

இல்லை என்றால் ஒரு நாள் நமக்கு முக்கிய தேவை ஒன்று வரும். அப்போது அதற்கு செலவு செய்ய நம்மிடம் கையில் செல்வம் இருக்காது. பிறரிடம் கடன் கேட்கவோ அல்லது யாசகம் கேட்கவோ கையேந்தும் நிலை உண்டாகிவிடும்.

**விளக்கம்:** இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்களின் கூற்று ஒவ்வொன்றும் குர்ஆன், ஸுன்னாவின் ஊற்றுகளில் இருந்து ஊறிய மதுரமாகும்.

மனிதனின் கையில் நாலு காசு வந்துவிட்டால் அவன் ஆடுகிற ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. வசதி வரவர வாழ்க்கையின் பாதை பலருக்கு மாறிவிடுகிறது. செல்வம் கூடிவிட்டால் பலருக்கு ஆடம்பரமும் அனாவசிய செலவும் தொற்றிக் கொள்கிறது. வருமானம் பெருகிவிட்டால் ஊதாரித்தனமாக செலவு செய்வதில் பலருக்கு நாட்டம் செல்கிறது.

பல செல்வந்தர்கள் உடைய வேலையே என்னவென்றால், தேவையற்றதை வாங்குவது, போதுமான அளவு வசதியாக இருக்கும் வீட்டையே இடித்து

விட்டு மிகப் பெரிய வீட்டை பிரமாண்டமாக கட்டுவது, ஆடம்பர பொருட்களை அளவுக்கு அதிகமாக வாங்கி குவிப்பது. இப்படியாக செல்வத்தை செலவழிப்பதை வழக்கமாக ஆக்கிக் கொண்டிருப்பதை நாம் அன்றாட வாழ்க்கையில் கண்கூடாக பார்க்கிறோம்.

செல்வத்தை அல்லாஹ் நமக்கு ஏன் கொடுத்திருக்கிறான் என்பதை நாம் முதலில் புரிய வேண்டும்.

செல்வம் இந்த உலக வாழ்க்கை நகர்வதற்கு மிக மிக முக்கியமான ஒரு மையப்பொருளாக இருக்கிறது. மனிதன் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதும், விமானங்களில் பறப்பதும், கப்பல்களில் மிதப்பதும், ஊர்திகளில் இங்கும் அங்கும் நீண்ட தூரங்களை கடப்பதும், மனிதன் தனது முதுகில் சுமப்பதும், படிப்பதும், பணி செய்வதும் இந்த செல்வத்தை பெறுவதற்காகத்தான்.

மக்களின் வாழ்க்கையை நிறுத்தி நிலையாக்கக் கூடியது இந்த செல்வம் என்று அல்லாஹ் இந்த செல்வத்தை பற்றி கூறுகிறான்.

ஒருவேளை உணவு சாப்பிடுவதற்கு கூட இந்த செல்வம் தேவை. இன்றோ நல்ல தண்ணீர் குடிப்பதற்கு கூட இந்த செல்வம் தேவை என்றாகி விட்டது. சில இடங்களில் சுவாசிக்க நல்ல சுத்தமான ஆக்ஸிஜன் காற்றுக்கு கூட காசு கொடுத்தாக வேண்டும்.

காசு இல்லை என்றால் நோய்க்கு மருத்துவம் இல்லை. பசித்தவனுக்கு உணவில்லை. குடி இருக்க வீடில்லை என்கிற அளவிற்கு செல்வத்தை வைத்தே உலகத்தின் இயக்கம் இருப்பதை எந்த அறிவாளியும் மறுக்க மாட்டான். நாலு பேருக்கு தர்மம் கொடுக்க, நாலு ஏழைகளுக்கு உணவளிக்க, அனாதைகளை ஆதரிக்க, அல்லாஹ்வின் இல்லத்தை கட்டி எழுப்ப, இப்படி எந்த நல்ல காரியத்தையும் கூட செல்வம் இன்றி செய்ய முடியாது.

ஆகவேதான், இஸ்லாமிய மார்க்கத்தில் செல்வத்தை சம்பாதிக்கவும் அதை செலவழிக்கவும் பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன.

மனிதன் ஹலாலான வழிகளில்தான் செல்வத்தை ஈட்ட வேண்டும். ஹலாலான வழிகளில்தான் அதை பெருக்க வேண்டும். ஹராம் -என்ற தடுக்கப்பட்ட வழிகளில் செல்வத்தை சேகரிப்பது மிகப் பெரிய குற்றமும் பாவமும் ஆகும். தொழுகையை விடுவது, அல்லது அதை அலட்சியம் செய்வது எத்தகைய பெரிய பாவமோ அதுபோன்றுதான் ஹராமான தொழில் செய்வதும்,

ஹலாலான தொழிலை ஹராமான முறையில் செய்வதும், ஹலாலான தொழிலில் ஹராமை கலப்பதும் அந்தளவு பெரிய பாவமாகும்.

பெரும்பாலான முஸ்லிம்களுக்கு இந்த அறிவு இருப்பதில்லை. வட்டிக்கு விடுவதை மட்டும் குற்றமாக பார்க்கின்றனர். மது விற்பனை செய்வதை மட்டும் பாவமாக கருதுகின்றனர். பன்றிப்பண்ணை வைப்பதை பாவமாக எண்ணுகின்றனர். ஆனால், நிறுவையில் அளவையில் குறைப்பதை, வாக்கு மீறுவதை, கலப்படம் செய்வதை, போலி பொருளை விற்பனை செய்வதை, ஒப்பந்தங்களை மீறுவதை, பிறர் தொழிலில் குறுக்கீடு செய்வதை, குறைகளை மறைப்பதை, இன்னும் இப்படியாக இஸ்லாமிய மார்க்கத்தில் வியாபார பாடத்தில் தடுக்கப்பட்டுள்ள பல ஹராமான செயல்களை தங்களது ஹலாலான பொருட்களின் விற்பனையில் கலந்து விடுகிறார்கள். இதனால் அவர்களின் வருமானம் ஹராமாக, சந்தேகத்திற்கு இடமானதாக ஆகிவிடுகிறது.

சரி, ஹலால் ஹராம் பார்த்து பேணுதலாக சம்பாதித்து விட்டாலும் நமது பொறுப்பு நீங்கிவிடாது. மாறாக, அந்த செல்வத்திற்கு ஸகாத் கொடுக்க வேண்டும். பிறகு உபரியான தானதர்மங்கள் கொடுக்க வேண்டும். தாய் தந்தை, பிள்ளைகள், மனைவிகள், சகோதர சகோதரிகள் இப்படியாக நெருங்கிய, தூரமான ரத்த உறவுகள், பிறகு ஏழைகள், அனாதைகள், மார்க்கத் தேவைகள் என்று பல நல்ல வழிகளில் அந்த செல்வத்தை நாம் செலவு செய்ய வேண்டும்.

நமது மறுமைக்காக நாம் இறந்த பின்னரும் நன்மைகள் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதற்காக சதகா ஜாரியா - நிலையான தர்மமாகவும் செல்வத்தின் ஒரு பகுதியை ஆக்க வேண்டும். போதுமான அளவு வாரிசுகளுக்கும் செல்வத்தை விட்டு செல்ல வேண்டும். இவை போக நமது ஹலாலான ஆசைகளுக்கும் தேவைகளுக்கும் நாம் வரம்பு மீறாமல் செலவு செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறோம்.

அல்குர்ஆனில் இது குறித்து சொல்லப்பட்டுள்ள இரு வசனங்கள் மிக முக்கியமானவை ஆகும்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

وَالَّذِينَ إِذَا أَنْفَقُوا لَمْ يُسْرِفُوا وَلَمْ يَقْتُرُوا وَكَانَ بَيْنَ ذٰلِكَ قَوَامًا

அவர்கள் தர்மம் (அல்லது செலவு) செய்தால் அளவு கடந்துவிட மாட்டார்கள்;

கஞ்சத்தனமும் செய்யமாட்டார்கள். இதற்கு மத்திய தரத்தில் செய்வார்கள். (அல்குர்ஆன் 25 : 67)

وَلَا تَجْعَلْ يَدَكَ مَغْلُولَةً إِلَىٰ عُنُقِكَ وَلَا تَبْسُطْهَا كُلَّ الْبَسْطِ
فَتَقْعُدَ مَلُومًا مَّحْسُورًا

(உமது பொருள்களில் ஒன்றையுமே செலவு செய்யாது) உமது கைகளைக் கழுத்தில் மாட்டிக் கொள்ளாதீர்! (உம்மிடம் இருப்பதை எல்லாம் கொடுத்து) உமது கையை முற்றிலும் விரித்து விடாதீர்! அதனால் நீர் நிந்திக்கப்பட்டவராகவும் முடைப்பட்டவராகவும் தங்கிவிடுவீர். (அல்குர்ஆன் 17 : 29)

இத்தகைய தெளிவான வழிகாட்டல் நமக்கு கொடுக்கப்பட்ட பின்னர் ஒருவர் வாழ்க்கையில் சிரமப்பட்டால் அதற்கு அவர்தான் பொறுப்பு.

வாழ்க்கை என்பது ஒரு கடலில் பயணம் செய்கிற ஓர் ஓடத்தை போன்றுதான். திடீரென கடலில் கொந்தளிப்பு ஏற்படலாம், எதிர்பாராமல் கடும் புயல் வீசலாம். இப்படியாக குழப்பங்கள் வருவதும் திசைகள் மாறுவதும் கடல் பயணத்தில் சகஜமாக இருப்பதுபோன்றே வாழ்க்கை என்கிற பயணத்திலும் வறுமையும் செல்வமும் ஒட்டிப் பிறந்தவை. வசதியும் நெருக்கடியும் இணைபிரியா நண்பர்கள்.

ஒருவர் ஏழையாக பிறந்ததால் அவர் வாழ்நாள் எல்லாம் ஏழையாக இருப்பார் என்று அர்த்தமல்ல. ஒருவர் செல்வந்தராக பிறந்ததால் அவர் வாழ்நாள் எல்லாம் செல்வந்தராக இருப்பார் என்று அர்த்தமல்ல.

ஏழையை செல்வந்தனாக ஆக்குவதும் செல்வந்தனை ஏழையாக்குவதும் அல்லாஹ் தனது ஞானத்தின் படி செய்து முடிக்கிறான். எல்லாம் இந்த உலகத்தில் ஒரு சோதனைதான்.

ஆகவே, வறுமையில் துவண்டு விடவும் கூடாது. செல்வத்தில் துடிக்கவும் கூடாது. நெருக்கடியான வாழ்க்கையில் இருப்பதால் கூனிக்குருகிவிடவும் கூடாது. வசதியான வாழ்க்கையில் இருப்பதால் ரொம்ப ஆடவும் கூடாது.

வறுமைக்கு பின்னர் வருமானம் அதிகரித்தால் வாயும் கையும் அளவு கடந்து நீளவும் கூடாது. வீடும் வாகனமும் மாறவேண்டும் என்ற அவசியம் கிடையாது.

தனது வருங்கால தேவைகளை கவனத்தில் வைக்க வேண்டும். தனது குடும்பம்,

பிள்ளைகளின் எதிர்கால தேவைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். ஓரளவிற்கு நல்ல சேமிப்பு இருப்பதை மார்க்கம் குறை சொல்லவில்லை. ஸகாத்தை நாம் சரியாக கொடுத்துவிட்டால் நாம் செல்வத்தை சேமிப்பதில் மார்க்கம் நம்மை குற்றம் பிடிக்காது.

ஆகவே, செல்வத்தின் ஆரம்ப படியில் இருப்பவர்களும் செல்வத்தின் நடுப்படியில் இருப்பவர்களும் செல்வத்தின் உச்சத்தில் இருப்பவர்களும் கால சூழ்நிலைகள் மாறக்கூடியவை என்பதை மறந்து விடக்கூடாது. காலத்தை சக்கரத்திற்கு ஒப்பிடுவார்கள். காரணம், சக்கரம் சுற்றுவதை போன்று காலம் சுற்றிக் கொண்டே இருக்கும். கீழே இருப்பவர் மேலே வருவார். மேலே இருப்பவர் கீழே வருவார். ஆகவே, எப்போதும் நிதானம் வேண்டும். தலைகால் புரியாமல் ஆடக்கூடாது. எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செலவு செய்யக் கூடாது. ஓர் இடத்தில் செலவு செய்யும் முன்பாக நன்கு யோசித்து ஆலோசித்து செலவு செய்ய வேண்டும். மார்க்க அறிஞர்களின் ஆலோசனை படி செலவு செய்ய வேண்டும்.

மனம் விரும்பிய படி மனம்போன போக்கில் செலவு செய்யக் கூடாது. எதிலும் நடுத்தரம் என்பது அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் மிக விருப்பமானது என்பதை மறந்து விடக்கூடாது. பிறர் கஞ்சன் என்று திட்டும் அளவிற்கு கருமியாகவும் இருக்கக் கூடாது. அல்லது, இவனா, இவன் ஓர் ஊதாரி என்று குறை சொல்கிற அளவிற்கு அளவு கடந்து செலவு செய்பவனாகவும் இருக்கக் கூடாது.

இடம், பொருள், ஏவல் அறிந்து அதற்கேற்ப செலவு செய்ய வேண்டும். முன்னுரிமை கொடுக்க வேண்டியவை, உடனே செய்ய வேண்டியவை, அவசியமாக செய்ய வேண்டியவை, பிறகு, அடுத்தது, பிறகு அடுத்தது என்று தராதரம் அறிந்து நாம் நமது செல்வத்தை செலவு செய்ய வேண்டும்.

நமது சொந்த தேவைக்காக இருந்தாலும் எதில் அதிகம் செலவு செய்ய வேண்டும், எதில் அதிகம் செலவு செய்யக் கூடாது என்பதை அறிந்து புரிந்து செலவு செய்ய வேண்டும்.

நிலையான தேவை, தற்காலிகமான தேவை, அவசியமான தேவை, உபரியான தேவை, முக்கியமான தேவை, அதிகப்படியான தேவை என்று பல வகையான தேவைகள் உள்ளன. ஒவ்வொரு தேவைக்கும் அதற்குரிய அளவைதான் கொடுக்க வேண்டும். இல்லை என்றால் வாழ்க்கை குழப்பமாகிவிடும்.

இதைத்தான் இமாம் ஹசன் பஸரி ﵀ அவர்கள் அழகாக சுருக்கமாக சொன்னார்கள், சிக்கனமாக செலவு செய்கிறவர் ஒருபோதும் பிறரிடம் தேவையாக மாட்டார் என்று.

கருமித்தனமில்லா சிக்கனத்தை கடைப்பிடிப்போமாக! கஞ்சத்தனமில்லா நடுத்தரத்தை பின்பற்றுவோமாக! ஊதாரியாகவும் இல்லாமல், பகட்டுக்கு செலவு செய்கிற பெருமைக்காரனாகவும் இல்லாமல் ஒவ்வொரு தேவையின் தரத்தையும் அதற்கு செலவு செய்ய வேண்டிய அளவையும் அறிந்து அதன்படி செலவு செய்வோமாக! அல்லாஹ் நமக்கு கொடுத்த செல்வத்தின் அருமையை அறிவோமாக!

நமக்கு அல்லாஹ் கொடுத்த செல்வத்தின் மூலம் நாமும் தேவையான அளவு ஆகுமான வழிகளில் பயன் பெற்று, இன்புற்று, சுகமாக வாழ்ந்து, பிற மக்களுக்கும் அந்த செல்வத்தை பகிர்ந்தளித்து, மனமுவந்து அள்ளிக் கொடுத்து, தான தர்மம் செய்து ஈகை குணத்தோடு வாழ்வோமாக! வீண்விரயம் செய்வதையும் கருமித்தனத்தையும் தவிர்ப்போமாக!

அல்லாஹ்வே! எங்களை உன் கட்டளைப்படி நடக்கிற நல்லோரில் ஆக்குவாயாக! அல்லாஹ்வே உனது மார்க்கத்திற்காகவும் தேவை உடையோருக்காகவும் செலவு செய்கிற உள்ளத்தை எங்களுக்குத் தா! கருமித்தனம். உலோபித்தனம், கஞ்சத்தனம் ஆகியவற்றிலிருந்து எங்கள் உள்ளங்களை பாதுகாப்பாயாக! ஆமீன்!

• • •

## நபித்தோழர்களின் ஈகை குணம்!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا الْـحَسَنُ بْنُ عِيسَىٰ أَنْبَأَنَا عَبْدُ اللهِ بْنُ الْمُبَارَكِ أَنْبَأَنَا مُحَمَّدُ بْنُ مُطَرِّفٍ أَنْبَأَنَا أَبُو حَازِمٍ عَنْ عَبْدِ الرَّحْمٰنِ بْنِ سَعِيدِ بْنِ يَرْبُوعٍ عَنْ مَالِكٍ الدَّارِيّ أَنَّ عُمَرَ بْنَ الْخَطَّابِ رَضِيَ اللهُ عَنْهُ أَخَذَ أَرْبَعَمِائَةِ دِينَارٍ فَجَعَلَهَا فِي صُرَّةٍ فَقَالَ لِلْغُلَامِ اذْهَبْ بِهَا إِلَىٰ أَبِي عُبَيْدَةَ بْنِ الْجَرَّاحِ ثُمَّ تَلَبَّثْ سَاعَةً فِي الْبَيْتِ حَتَّىٰ تَنْظُرَ مَا يَصْنَعُ فَذَهَبَ الْغُلَامُ إِلَيْهِ وَقَالَ يَقُولُ لَكَ أَمِيرُ الْمُؤْمِنِينَ اجْعَلْ هٰذَا فِي بَعْضِ حَاجَتِكَ قَالَ وَصَلَهُ اللهُ وَرَحِمَهُ ثُمَّ قَالَ تَعَالَيْ يَا جَارِيَةُ اذْهَبِي بِهٰذِهِ السَّبْعَةِ وَبِهٰذِهِ الْخَمْسَةِ إِلَىٰ فُلَانٍ وَبِهٰذِهِ الْخَمْسَةِ إِلَىٰ فُلَانٍ حَتَّىٰ أَنْفَذَهَا فَرَجَعَ الْغُلَامُ إِلَىٰ عُمَرَ فَأَخْبَرَهُ فَوَجَدَهُ قَدْ أَعَدَّ مِثْلَهَا لِمُعَاذِ بْنِ جَبَلٍ فَقَالَ اذْهَبْ بِهَا إِلَىٰ مُعَاذِ بْنِ جَبَلٍ وَتَلَبَّثْ فِي الْبَيْتِ حَتَّىٰ تَنْظُرَ مَا يَصْنَعُ فَذَهَبَ بِهَا إِلَىٰ مُعَاذِ بْنِ جَبَلٍ فَقَالَ يَقُولُ لَكَ أَمِيرُ الْمُؤْمِنِينَ اجْعَلْ هٰذِهِ فِي بَعْضِ حَاجَتِكَ فَقَالَ رَحِمَهُ اللهُ وَوَصَلَهُ تَعَالَيْ يَا جَارِيَةُ اذْهَبِي إِلَىٰ بَيْتِ فُلَانٍ بِكَذَا فَاطَّلَعَتْ امْرَأَةُ مُعَاذٍ فَقَالَتْ وَاللهِ نَحْنُ مَسَاكِينُ فَأَعْطِنَا وَلَمْ يَبْقَ فِي الْخِرْقَةِ إِلَّا دِينَارَانِ فَرَمَىٰ بِهِمَا إِلَيْهَا وَرَجَعَ الْغُلَامُ إِلَىٰ عُمَرَ رَضِيَ اللهُ عَنْهُ فَأَخْبَرَهُ فَسُرَّ بِذٰلِكَ وَقَالَ إِنَّهُمْ أُخْوَةٌ بَعْضُهُمْ مِنْ بَعْضٍ رَضِيَ اللهُ عَنْهُمْ

உமர் இப்னுல் கத்தாப் ﷺ நானூறு தீனார்களை எடுத்து அதை ஒரு பையில் வைத்து அடிமையிடம் கொடுத்து அபூ உபைதாவிடம் கொடுக்க கூறினார்கள். பிறகு, அங்கேயே சிறிது நேரம் தங்கி இரு! அவர் என்ன செய்கிறார் என்று பார். அவ்வாறே அடிமை அவரிடம் சென்று, இதை உமது தேவைக்கு பயன்படுத்தி கொள்ளுமாறு அமீருல் முஃமினீன் கூறினார் என்றார். அதற்கு அபூ உபைதா ﷺ கூறினார், அல்லாஹ் அவருக்கும் கொடை கொடுப்பானாக! அவருக்கு கருணை புரிவானாக! பிறகு அவர் தனது அடிமைப் பெண்ணை அழைத்து, இந்த ஏழு தீனார்களை இன்னவரிடம் கொடுத்து வா, இந்த ஐந்தை இன்னவரிடம் கொடுத்து வா என்று அனைத்தையும் கொடுத்து தீர்த்து விட்டார். அடிமை திரும்ப வந்து அமீருல் முஃமினீன் அவர்களிடம் நடந்ததை கூறினார். அதற்குள் அதே அளவு தீனார்களை முஆத் இப்னு ஜபலுக்கு கொடுத்து அனுப்புவதற்காக அவர் தயார் செய்து வைத்திருந்தார். ஆக, அவர் தனது அடிமையிடம் இதை முஆத் இப்னு ஜபல் ﷺ அவர்களிடம் எடுத்து சென்று கொடுத்துவிட்டு அவர் என்ன செய்கிறார் என்று தங்கியிருந்து பார்த்துவிட்டு வா என்று கூறினார். அவரும் அதை முஆத் இப்னு ஜபலிடம் எடுத்து சென்று கொடுத்து விட்டு, இதை உமது தேவைகளுக்கு பயன்படுத்தி கொள்ளுமாறு அமீருல் முஃமினீன் கூறுகிறார் என்றார். ஆக, முஆத் ﷺ கூறினார்: அல்லாஹ் அமீருல் முஃமினீனுக்கு கருணை புரிவானாக! அவருக்கு கொடை கொடுப்பானாக! பிறகு அடிமைப் பெண்ணை அழைத்து இன்னார் இன்னார் வீட்டுக்கு இவ்வளவு இவ்வளவு எடுத்து சென்று கொடுத்து விடு என்று கூறினார். அப்போது முஆத் உடைய மனைவி எட்டிப்பார்த்து அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நாங்கள் ஏழைகள், ஆகவே, எங்களுக்கு கொடுப்பீராக என்று கூறினார். அந்த சின்ன பையில் இரண்டு தீனார்களை தவிர மீதம் இருக்கவில்லை. அதை தனது மனைவியின் பக்கம் அவர் எறிந்தார். அடிமை, உமர் ﷺ அவர்களிடம் திரும்ப வந்து தான் பார்த்ததை கூறினார். உமர் ﷺ அவர்கள் சந்தோஷப்பட்டு கூறினார்கள்: அவர்கள் சகோதரர்கள், அவர்களில் சிலர் சிலரை சேர்ந்தவர்களே! அல்லாஹ் அவர்களை பொருந்தி கொள்வானாக!

**கருத்து:** கண்ணியமிகு ஸஹாபாக்கள் உள்ளத்தால் மிக தூய்மையானவர்களாக இருந்தார்கள். அவர்களின் உள்ளத்திலிருந்து அல்லாஹ் உலக மோகத்தையும் செல்வத்தின் மீதுண்டான நாட்டத்தையும் எடுத்து விட்டிருந்தான். அல்லாஹ்வின் பாதையில் ஏழைகளுக்கு அள்ளிக் கொடுப்பது அவர்களின் சுபாவமாக இருந்தது. தனக்கு இல்லை என்றாலும் அல்லது தனது தேவையை

மறந்து பிறருக்கு கொடுக்கிற பழக்கம் அவர்களுக்கு இருந்தது. அவர்களின் ஏழ்மை அவர்களின் கொடையை தடுக்கவில்லை.

அவர்கள் ஏழைகளாக இருக்கிறபோதும் அல்லாஹ்வின் பாதையில் செலவழித்தார்கள். அவர்கள் செல்வந்தர்களாக, ஆட்சியாளர்களாக ஆகிவிட்டபோதும் அல்லாஹ்வின் பாதையில் செலவழித்தார்கள். இத்தகைய உயர்ந்த குணத்தின் சிறந்த முன்னோடிகளாக அவர்கள் திகழ்ந்தார்கள். அல்லாஹ்வின் பொருத்தமும் அன்பும் அவர்களுக்கு கிடைக்கட்டுமாக!

**விளக்கம்:** அல்லாஹ்வின் அருளும் மன்னிப்பும் நபித்தோழர்கள் மீது நிலவட்டும். உண்மையில் அவர்கள் அல்குர்ஆனின் மூலமும் ஸுன்னாவின் மூலமும் உருவாக்கப்பட்டார்கள். அவர்களின் குணங்களை குர்ஆனும் ஸுன்னாவும் செதுக்கி எடுத்தன. அவர்களின் வணக்க வழிபாடுகள், குணாதிசயங்கள், பண்புகள் என அனைத்தும் மறுமைக்காக மட்டுமே இருந்தன. அவர்கள் இந்த உலகத்தை அறவே நாடாதவர்களாக இருந்தார்கள். உலகத்தின் செல்வங்கள் மீது பேராசை அவர்களின் உள்ளங்களில் இருக்கவில்லை.

எப்படி நபி ﷺ அவர்களின் காலத்தில் அவர்களின் குணங்கள் இருந்தனவோ அப்படியே அவர்களின் குணங்கள் நபியவர்களின் இறப்பிற்கு பின்னரும் இருந்தன. யார், அவர்களின் குணங்கள் நபி ﷺ அவர்களின் இறப்பிற்கு பின்னர் மாறிவிட்டன என்று சொல்வாரோ அவர்தான் குஃப்ரிலும் நிஃபாக்கிலும் தன்னை தள்ளிக்கொள்கிறார்.

அந்த தோழர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. அத்தகைய பலவீனமான தர்பியாவை அவர்களுக்கு நபி ﷺ அவர்கள் செய்யவில்லை. நபி ﷺ அவர்கள் உருவாக்கிய அந்த மேன்மைமிக்க சமுதாயம் உலகத்திற்காக தங்கள் ஈமானையோ அமலையோ நற்குணத்தையோ மாற்றிக் கொள்ளும் அளவிற்கு மட்டமானவர்கள் அல்ல.

மேற்கண்ட சம்பவத்திலிருந்து பல படிப்பினைகளை நாம் பெற வேண்டியதிருக்கிறது.

உமர் رضي الله عنه அவர்கள் தங்கள் தோழர்களின் மார்க்க நிலைமையை சோதித்துக் கொண்டே இருந்தார்கள். அவர்களிடம் மார்க்க விஷயத்தில் மாற்றம் வருவதை அவர்கள் அறவே விரும்பவில்லை.

பொதுவாக உமர் رضي الله عنه அவர்கள் தங்கள் ஈமானை குறித்து மிகவும்

பயந்தவர்களாக இருந்தார்கள். அத்தோடு தங்கள் தோழர்களுடன் சேர்ந்து ஈமானை பற்றி கவலைப்படுகிறவர்களாக இருந்தார்கள்.

உமர் ﵁ அவர்கள் தங்கள் தோழர்களை அவ்வப்போது உலக மோகத்தை குறித்தும் உலக இன்பத்தில் மூழ்குவதை குறித்தும் எச்சரித்து வந்தார்கள்.

ஸஹாபாக்கள் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமுதாயமாக இருந்தார்கள். அவர்களைப் போன்ற ஒரு சமுதாயம் இந்த உலகத்தில் இனி பிறக்க முடியாது. அவர்களின் ஈமான், அமல், குணம் என அனைத்தும் அல்லாஹ்வும் ரஸூலும் விரும்புகிற அந்த உயர்ந்த தரத்தில் இருந்தது.

குர்ஆனின் ஒவ்வொரு வசனங்களும் ஸுன்னாவின் ஒவ்வொரு வாக்கியமும் அவர்களின் வாழ்க்கையில் யதார்த்த உண்மையாக வெளிப்பட்டது.

உலக செல்வமும் அதன் வளமும் இந்த உலகத்தில் ஒரு சமுதாயத்தை தடம்புரள செய்ய முடியவில்லை என்றால் அது அந்த ஸஹாபாக்கள் சமுதாயம்தான்.

அவர்கள் நபி ﷺ அவர்களின் காலத்தில் எப்படி வாழ்ந்தார்களோ அப்படியே வாழ்ந்தார்கள் ஆட்சி அதிகாரம் வந்த பின்னரும்.

அல்லாஹ்வின் பாதையில் போருக்கு செல்வதாக இருக்கட்டும், அமீருக்கு கீழ்ப்படிவதாக இருக்கட்டும், ஈமானை உறுதிப்படுத்துவதாக இருக்கட்டும், அமலை அதிகப்படுத்துவதாக இருக்கட்டும், குணங்களை உயர்த்துவதாக இருக்கட்டும், அந்த தோழர்கள் இஸ்லாமில் முன்னேறிக் கொண்டே இருந்தார்களே தவிர ஒருபோதும் அவர்கள் அதில் பின் வாங்கவுமில்லை, பின் தங்கவுமில்லை.

குர்ஆனை உடையவர்கள், ஸுன்னாவை உடையவர்கள், மறுமைக்காரர்கள், உலக பற்றில்லாதவர்கள் என்று நாம் அடையாளம் காட்டுவதற்கு முழு தகுதியானவர்கள் அந்த ஸஹாபாக்கள்.

இப்படியாக பல சிறப்புகளை ஸஹாபாக்கள் பற்றி நாம் சொல்லிக்கொண்டே போகலாம்.

இவை போக இந்த நிகழ்வில் நாம் சிந்திக்க வேண்டிய இன்னொரு பக்கமும் இருக்கிறது. ஆம், அதுதான் தர்மம்.

அந்த தர்மத்தை குறித்து கொஞ்சம் பார்ப்போம்.

தர்மம், கொடை, தானம், ஈகை, பெருந்தன்மை, வள்ளல்தனம் இப்படியாக

இன்னும் பல பெயர்களை உடைய இந்த சிறப்பு பண்பு அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் மிகப் பிடித்தமான ஒன்றாகும்.

அல்குர்ஆன் போதிக்கிற ஆயிரத்திற்கும் அதிகமான நற்பண்புகளில் மிக ஹைலைட்டான ஒன்று தர்மம் கொடுப்பதாகும்.

முஃமின்களின் அடிப்படை பண்புகளில் ஒன்றாக தர்மத்தை அல்குர்ஆன் கூறுகிறது.

செல்வந்தர்களுக்கு மட்டும் செல்வம் என்றில்லாமல் அது ஏழை எளியோர், நலிந்தோர், அனாதைகள், வழிப்போக்கர், கடனாளிகள், அடிமைகள் என எல்லோருக்கும் அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வாரி வழங்கப்பட வேண்டிய ஒன்றுதான் செல்வம் என்று குர்ஆன் மிகவும் வலியுறுத்தி கூறுகிறது.

ஒருவர் முஸ்லிமாக இருக்க வேண்டுமென்றால் அவரிடம் வசதியான அளவிற்கு செல்வம் இருப்பின் அவர் கட்டாயம் தனது செல்வத்திலிருந்து 2.5 சதவீதம் ஸகாத் என்ற தர்மத்தை கொடுத்தே ஆகவேண்டும். அதுபோக உபரியான தர்மங்களை அவ்வப்போது தனது செல்வத்திலிருந்து வெளியேற்றி கொடுத்து கொண்டே இருக்க வேண்டும். இதுதான் இஸ்லாம், முஸ்லிம்களுக்கு போதிக்கிற நற்பண்பாகும்.

தர்மத்தை வலியுறுத்துகிற பல நூறு குர்ஆன் வசனங்களும் பல ஆயிரம் நபிமொழிகளும் உள்ளன.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

الَّذِينَ يُنفِقُونَ أَمْوَالَهُم بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِندَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ○

எவர்கள் தங்கள் செல்வங்களை இரவிலும், பகலிலும் இரகசியமாகவும், வெளிப்படையாகவும் தர்மம் செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு; அவர்கள் மீது பயமுமில்லை; அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 274)

إِنَّ الْمُصَّدِّقِينَ وَالْمُصَّدِّقَاتِ وَأَقْرَضُوا اللَّـهَ قَرْضًا حَسَنًا يُضَاعَفُ لَهُمْ وَلَهُمْ أَجْرٌ كَرِيمٌ ○

நிச்சயமாக (அல்லாஹ்வின் பாதையில்) தர்மம் செய்த ஆண்கள், தர்மம் செய்த பெண்கள், இன்னும், அல்லாஹ்விற்கு அழகிய கடனாக கடன் கொடுத்தவர்கள் அவர்களுக்கு (நற்கூலிகள்) பன்மடங்காக்கப்படும். இன்னும், அவர்களுக்கு கண்ணியமான வெகுமதி(யாகிய சொர்க்கம்) உண்டு. (அல்குர்ஆன் 57 : 18)

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتَّىٰ تُنْفِقُوا مِمَّا تُحِبُّونَ وَمَا تُنْفِقُوا مِنْ شَيْءٍ فَإِنَّ اللَّهَ بِهِ عَلِيمٌ ○

நீங்கள் விரும்புகின்ற (செல்வத்)திலிருந்து தர்மம் செய்யும் வரை நன்மையை அறவே அடைய மாட்டீர்கள். இன்னும், பொருளில் எதை (நீங்கள்) தர்மம் செய்தாலும் நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவன் ஆவான். (அல்குர்ஆன் 3 : 92)

وَمَا أَدْرَاكَ مَا الْعَقَبَةُ ○ فَكُّ رَقَبَةٍ ○ أَوْ إِطْعَامٌ فِي يَوْمٍ ذِي مَسْغَبَةٍ ○ يَتِيمًا ذَا مَقْرَبَةٍ ○ أَوْ مِسْكِينًا ذَا مَتْرَبَةٍ ○ ثُمَّ كَانَ مِنَ الَّذِينَ آمَنُوا وَتَوَاصَوْا بِالصَّبْرِ وَتَوَاصَوْا بِالْمَرْحَمَةِ ○ أُولَٰئِكَ أَصْحَابُ الْمَيْمَنَةِ ○

(நபியே!) அகபா என்றால் என்னவென்று உமக்கு அறிவித்தது எது? (அது,) ஓர் அடிமையை விடுதலை செய்தல், அல்லது, கடுமையான பசியுடைய நாளில் உணவளித்தல், (யாருக்கு என்றால்) உறவினரான ஓர் அனாதைக்கு, அல்லது, மிக வறியவரான ஓர் ஏழைக்கு உணவளித்தல் (அகபாவை கடப்பதாகும்). (இத்தகைய புண்ணியத்தை செய்த) பிறகு, (அத்துடன்) அவர் நம்பிக்கையைக் கொண்டவர்களிலும், பொறுமையைக் கொண்டு உபதேசித்துக் கொண்டவர்களிலும், கருணையைக் கொண்டு உபதேசித்துக் கொண்டவர்களிலும் ஆகிவிட வேண்டும். இ(த்தகைய நன்மைகளை செய்த)வர்கள் வலப்பக்கமுடையவர்கள் (-சொர்க்கவாசிகள்) ஆவார்கள். (அல்குர்ஆன் 90 : 12-18)

இப்படியாக பல வசனங்கள் தர்மத்தை சிறப்பித்தும் வலியுறுத்தியும் கூறுகின்றன. இன்னும் பல வசனங்கள் ஸஹாபாக்கள் உடைய தர்ம மனப்பான்மையை விவரித்தும் பேசுகின்றன.

إِنَّ الَّذِينَ آمَنُوا وَهَاجَرُوا وَجَاهَدُوا بِأَمْوَالِهِمْ وَأَنْفُسِهِمْ فِي سَبِيلِ اللَّهِ
وَالَّذِينَ آوَوْا وَنَصَرُوا أُولَٰئِكَ بَعْضُهُمْ أَوْلِيَاءُ بَعْضٍ ۚ وَالَّذِينَ آمَنُوا
وَلَمْ يُهَاجِرُوا مَا لَكُمْ مِنْ وَلَايَتِهِمْ مِنْ شَيْءٍ حَتَّىٰ يُهَاجِرُوا ۚ وَإِنِ
اسْتَنْصَرُوكُمْ فِي الدِّينِ فَعَلَيْكُمُ النَّصْرُ إِلَّا عَلَىٰ قَوْمٍ بَيْنَكُمْ وَبَيْنَهُمْ
مِيثَاقٌ ۗ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ ۝

நிச்சயமாக நம்பிக்கை கொண்டு, (தங்கள் ஊரை விட்டு வெளியேறி) ஹிஜ்ரத் சென்று, அல்லாஹ்வின் பாதையில் தங்கள் பொருள்களாலும் தங்கள் உயிர்களாலும் போர் புரிந்தவர்கள்; இன்னும், (இவர்களை) அரவணைத்து, உதவியவர்கள் இவர்கள், - இவர்களில் சிலர் சிலருக்கு பொறுப்பாளர்கள் ஆவர். இன்னும், எவர்கள் நம்பிக்கை கொண்டு; ஆனால், ஹிஜ்ரத் செல்லவில்லையோ அவர்கள் ஹிஜ்ரத் செல்லும் வரை எந்த ஒரு காரியத்திற்கும் அவர்களுக்காக பொறுப்பேற்பது உங்களுக்கு ஆகுமானதல்ல. இன்னும், மார்க்க விஷயத்தில் அவர்கள் உங்களிடம் உதவி தேடினால் (அவர்களுக்கு) உதவுவது உங்கள் மீது கடமையாகும். (எனினும்,) உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் உடன்படிக்கை உள்ள ஒரு சமுதாயத்திற்கு எதிராக தவிர. (உடன்படிக்கை செய்தவர்களுக்கு எதிராக உதவுவது ஆகுமானதல்ல.) அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை உற்று நோக்குபவன் ஆவான். (அல்குர்ஆன் 8 : 72)

அல் அன்ஃபாலுடைய இறுதி வசனங்களில் உள்ள இவ்விரண்டும் ஸஹாபாக்களை பற்றியே பேசுகின்றன.

பொதுவாக தர்மத்தை பற்றி வந்துள்ள ஹதீஸ்களும் குறிப்பாக ஸஹாபாக்கள் உடைய ஈகை குணத்தை பற்றி வந்துள்ள ஹதீஸ்களும் ஏராளம் உள்ளன.

என்னை பொறுத்தவரை நான் ஸஹாபாக்களை எப்படி பார்க்கிறேன் என்றால் அல்லாஹு தஆலா அந்த ஸஹாபாக்களை இஸ்லாமிற்காகவும் மறுமைக்காகவும் மிக விசேஷமாக படைத்திருக்கிறான் போலும். ஆம், அவர்கள் அப்படித்தான் வாழ்ந்து சென்றார்கள். உலக வரலாற்றில் அத்தகைய உன்னதமான ஒரு சமுதாயம் அவர்கள்தான் முதலாமவர்களாகவும் இறுதியானவர்களாகவும் இருப்பார்கள்.

அல்லாஹ்வின் வேதத்தின் ஒவ்வொரு வசனமும் நபி ﷺ அவர்களின் ஒவ்வொரு ஹதீஸும் அந்த ஸஹாபாக்களின் உள்ளத்தின் ஆழத்திலே இறங்கியது. அவர்களை இஸ்லாமை ஏற்ற பின்னர், ஷஹாதாவை மொழிந்த பின்னர் தங்களை முழுமையாக அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் ஒப்படைத்து விட்டனர். அல்லாஹ்வும் ரஸூலும் கிழித்த கோட்டை அவர்கள் தாண்டுவது என்ன அதை நெருங்க கூட இல்லை. சத்தியமும் நீதமும் அவர்களின் இதயத்தின் அனைத்து இடங்களையும் ஆக்கிரமித்தன. இறை வணக்க வழிபாடுகளுடன் தர்மமும் ஈகை குணமும் உலக பற்றின்மையும் அவர்களின் அடையாளமாக இருந்தன.

அல்லாஹ்வின் மகிழ்ச்சிக்காகவும், நபி ﷺ அவர்களின் மகிழ்ச்சிக்காகவும், மார்க்கத்தின் வளர்ச்சிக்காகவும், ஏழைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவும் செலவழிப்பதும், தான தர்மம் செய்வதும் அவர்களுக்கு மிகப் பிரியமான ஒரு அமலாக இருந்தது. தங்களுடைய சொந்த தேவைகளுக்கு செலவு செய்வதை விட அல்லாஹ்வின் பாதையிலும் தர்மத்திலும் செலவு செய்வதுதான் அவர்களுக்கு மிக விருப்பமாக இருந்தது.

சொத்துகளை சேகரித்து உலகத்தில் விட்டு செல்வதை விட அவற்றை தர்மம் செய்து மறுமைக்கு எடுத்து செல்வதில் அவர்கள் முனைப்பாக இருந்தார்கள். மறுமை வாழ்க்கையும் சொர்க்க வாழ்க்கையும் அவர்களின் கண்களுக்கு முன்னே இருந்தனவே தவிர தற்காலிக உலகத்தின் அற்ப தேவைகளோ ஆசைகளோ அல்ல.

இந்த அமர்வில் பதிவான நிகழ்வை கொஞ்சம் ஆழமாக சிந்தித்து பாருங்கள். உங்களுக்கு பல உண்மைகள் புரியவரும்.

அல்லாஹு தஆலா அந்த தோழர்களை பற்றி கூறும்போது,

مِنَ الْمُؤْمِنِينَ رِجَالٌ صَدَقُوا مَا عَاهَدُوا اللَّهَ عَلَيْهِ فَمِنْهُم مَّنْ قَضَىٰ
نَحْبَهُ وَمِنْهُم مَّن يَنتَظِرُ وَمَا بَدَّلُوا تَبْدِيلًا ○

அல்லாஹ்விடம் எதை ஒப்பந்தம் செய்தார்களோ அதை உண்மைப்படுத்திய ஆண்களும் நம்பிக்கையாளர்களில் இருக்கிறார்கள். (வீர மரணம் அடைய வேண்டும் என்ற) தனது நேர்ச்சையை நிறைவேற்றியவரும் அவர்களில் உண்டு. (வீர மரணத்தை) எதிர்பார்த்து இருப்பவரும் அவர்களில் உண்டு.

அவர்கள் (தங்கள் ஒப்பந்தத்தை) மாற்றிவிடவில்லை.

(அல்குர்ஆன் 33 : 23)

என்று வர்ணிக்கிறான்.

ஆம், உண்மையில் அவர்களின் குணங்களோ பண்புகளோ வழிபாடுகளோ மாறவே இல்லை. அவர்கள் நபி ﷺ அவர்களின் காலத்தில் சிரமத்தில், நெருக்கடியில், பலவிதமான இன்னல்களில், வகை வகையான துன்பங்களில், வறுமையில் சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹு தஆலா பிறகு அவர்களுக்கு இவற்றை எல்லாம் போக்கி வசதியை, ஆட்சி அதிகாரத்தை, செல்வ செழிப்பை ஏற்படுத்தி கொடுத்தான். இருந்தாலும் அவர்களோ அந்த செல்வத்தையும் வசதியையும் அல்லாஹ்வின் பாதையிலேயே திருப்பினார்கள். தங்களுடைய தேவைகளுக்கு மிக மிக குறைந்த அளவை வைத்துக் கொண்டு மீதம் அனைத்தையும் அல்லாஹ்வின் பாதையிலும் ஏழைகளின் தேவையிலும் வைத்தார்கள்.

நாமோ ஸகாத்தாக நூறில் இருந்து வெறும் (2.5) இரண்டரை சதவீதத்தை தர்மமாக கொடுக்க யோசிக்கிறோம். அந்த சான்றோர்களின் தான தர்மங்களை நாம் ஆராய்ந்தால் அவர்களோ (2.5) இரண்டரை சதவீதத்தை மட்டும் தமக்காக வைத்துக்கொண்டு மீதம் 97.5 சதவீதத்தை அல்லாஹ்வின் பாதையில் செலவழித்திருப்பார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்!

தர்மம் கொடுப்பது ஈமானின் பண்பும் அடையாளமும் ஆகும்.

ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் தேவை உள்ளோருக்கும் கொடுத்துதவுவது அல்லாஹ்விற்கு மிகப் பிரியமான அமலாகும்.

தர்மம் நரகத்தை விட்டு பாதுகாக்கும் கேடயமாகும்.

தேவை உள்ளவர்களின் தேவையில் உதவுவது முஸீபத்துகளை போக்கக்கூடியதும் பரக்கத்துகளை திறக்கக் கூடியதுமாகும்.

தர்மம் நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும் இலகுவாக நாம் சொர்க்கம் செல்வதற்கும் உள்ள சிறந்த வழியாகும்.

தர்மம் அதிகம் செய்தவர்களிடம் அல்லாஹ் மிக இலகுவாகவே விசாரணை செய்வான். அவர்களுக்கு தன் மன்னிப்பை மிக விசாலமாக ஆக்கிவிடுவான்.

அது மட்டுமல்ல, தர்மம் கொடுத்து கொண்டே இருப்பது நாம் உலக

மோகத்தில் சிக்கி சீரழிந்து விடாமல் நம்மை பாதுகாக்கிறது. கருமித்தனத்தின் கெடுதிகளிலிருந்து நம்மை பாதுகாக்கிறது.

அல்லாஹு தஆலா நமக்கு இந்த உண்மைகளை புரிவதற்கும் உணர்வதற்கும் நல்லருள் புரிவானாக! நாம் அந்த சான்றோரை நேசித்து, அவர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடக்க நமக்கு நல்லருள் புரிவானாக!

அல்லாஹ்வே! எங்கள் உள்ளங்களில் இருந்து கருமித்தனத்தை நீக்கி விடுவாயாக! உன் பாதையில் செலவழிக்கவும் ஏழைகளுக்கு உதவவும் எங்களுக்கு அருள் புரிவாயாக! ஆமீன்.

## உண்மையாளனை நண்பனாக்கு!

حَدَّثَنَا عَبْدُ اللهِ حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ عُمَرَ بْنِ مُحَمَّدِ بْنِ أَبَانَ بْنِ صَالِحِ بْنِ عُمَرَ حَدَّثَنَا ابْنُ الْمُبَارَكِ عَنْ عَاصِمٍ الْأَحْوَلِ عَنْ رَجُلٍ مِنْ سَدُوسٍ عَنْ أَبِي مُوسَىٰ قَالَ جَلِيسُ الصِّدْقِ مِثْلُ الْعَطَّارِ إِنْ لَمْ يُصِبْكَ عَبَقَكَ مِنْ رِيحِهِ

உண்மையான நண்பன் நறுமண வியாபாரியைப் போலாவான். அவர் உனக்கு (நறுமணத்தை) கொடுக்கவில்லை என்றாலும் அவருடைய நறுமணத்தால் அவர் உன்னை நறுமணப்படுத்தி விடுவார்.

**கருத்து:** நாம் யாரோடு நட்பு வைக்கிறோம் என்பது மிக முக்கியம். நல்ல நண்பர்களோடு நாம் நட்பு வைக்கும்போது அவர்களின் நற்பண்புகளாலும் நல்லமல்களாலும் நமக்குள் நல்ல மாற்றங்கள் வரும். கெட்டவர்களோடு நட்பு வைப்பவர் கண்டிப்பாக அவர்களின் கெட்ட குணத்தால் அல்லது கெட்ட அமல்களால் ஒரு நாள் பாதிக்கப்படுவார். இவரிடமும் அவர்களின் கெட்ட குணத்தில் ஒரு சில குடிகொள்ள வாய்ப்பிருக்கிறது. அல்லது அவர்களை பின்பற்றி அவரும் கெட்ட செயல்களை செய்பவராக மாறிவிடலாம்.

**விளக்கம்:** அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஆலா இவ்வுலக வாழ்க்கையில் மனிதனை, பழகக் கூடியவனாகவும் நட்புறவு கொள்பவனாகவும் தோழமையை தேடுபவனாகவும் படைத்திருக்கிறான்.

வாழ்க்கையில் நட்பு என்பது ஓர் உறவாகும். வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நட்பு இல்லாமல் நல்லது நடக்காது. அந்தளவு அவசியமான ஓர் உறவுதான் நட்பினால் ஏற்படுகிற உறவு. இரத்த உறவு, சம்பந்த உறவு என்று பல உறவுகளுக்கு இடையில் நட்பு என்பதும் அல்லாஹ் ஏற்படுத்திய உறவுகளில்

ஒன்றாகும். இந்த உலகத்தில் மனிதனுக்கு வெளி பழக்க வழக்கங்களில் நட்பு வட்டாரம் இருப்பது அவசியமானது என்றும், தவிர்க்க முடியாதது என்றும் கூட சொல்லலாம்.

நட்பினால் நமக்கு நமது தேவைகள் எளிதாகின்றன. நண்பர்களினால் தூரமான காரியங்கள் சமீபமாகி விடுகின்றன. சிரமமான தேவைகள் இலகுவாகி விடுகின்றன. நம்மால் செய்ய முடியாத காரியங்களை நமது நண்பர்கள் நமக்கு செய்து தருகிறார்கள்.

பல நேரங்களில், பல இக்கட்டான தருணங்களில், பல சோதனைகளில் நாம் சிக்கி இருக்கும்போது நமது உறவுகள் கூட நமக்கு தயங்குவார்கள். அந்த நேரத்தில் நண்பர்கள் பலர் எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் நமக்கு உதவுவதையும் ஒத்துழைப்பு தருவதையும் நம்மில் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் பார்த்திருக்கிறோம்.

நமது மார்க்கம் பரவியதும், வளர்ந்ததும், உறுதிபெற்றதும் நபி ﷺ அவர்களின் நல்ல நண்பர்கள் மூலமகாத்தான்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

هُوَ الَّذِي أَيَّدَكَ بِنَصْرِهِ وَبِالْمُؤْمِنِينَ ○

அவன், தன் உதவியைக் கொண்டும் நம்பிக்கையாளர்களைக் கொண்டும் உம்மை பலப்படுத்தி இருக்கிறான். (அல்குர்ஆன் 8 : 62)

நபியின் அந்த நல்ல நண்பர்கள் இந்த மார்க்கத்தை தமது வாழ்க்கையிலும் பாதுகாத்து உலகமெங்கும் இந்த மார்க்கம் பரவ காரணமாக திகழ்ந்தார்கள்.

நபி ﷺ அவர்களோடு நட்பு பாராட்டி, அவர்களின் நல்ல நட்பில் அல்லாஹ்வின் நல்லடியார்களாக, உலக இறுதி நாள் வரை வரக்கூடிய முஸ்லிம்களுக்கு நல்ல அழகிய முன்மாதிரிகளாக விளங்கினார்கள். அந்த தோழர்கள் தங்கள் நபியை உயிருக்கு உயிராக நேசித்தது மட்டுமல்லாமல் அந்த நபிகளுடைய ஒவ்வொரு சிறிய பெரிய கட்டளைகளை பின்பற்றி நடந்தார்கள். இந்த உம்மத்திற்கு நபியை தேர்ந்தெடுத்து அனுப்பிய ரப்பாகிய அல்லாஹு தஆலா அந்த தோழர்களின் சமுதாயத்தை சிறந்த சமுதாயம் என்று வாழ்த்தி கூறுகிற அளவிற்கு அந்த மக்கள் நபி ﷺ அவர்களின் நட்பினால் உயர்வும் மேன்மையும் சிறப்பும் பெற்றார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

كُنتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ ۝

(நம்பிக்கையாளர்களே!) மக்களுக்காக உருவாக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (அல்குர்ஆன் 3 : 110)

هُوَ اجْتَبَاكُمْ وَمَا جَعَلَ عَلَيْكُمْ فِي الدِّينِ مِنْ حَرَجٍ مِلَّةَ أَبِيكُمْ إِبْرَاهِيمَ هُوَ سَمَّاكُمُ الْمُسْلِمِينَ مِنْ قَبْلُ وَفِي هٰذَا لِيَكُونَ الرَّسُولُ شَهِيدًا عَلَيْكُمْ وَتَكُونُوا شُهَدَاءَ عَلَى النَّاسِ فَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَاعْتَصِمُوا بِاللهِ هُوَ مَوْلَاكُمْ فَنِعْمَ الْمَوْلَىٰ وَنِعْمَ النَّصِيرِ

அவன்தான் உங்களைத் தேர்ந்தெடுத்தான். இன்னும், உங்கள் மீது (உங்கள்) மார்க்கத்தில் எவ்வித நெருக்கடியையும் அவன் வைக்கவில்லை. உங்கள் தந்தை இப்ராஹீமுடைய மார்க்கத்தைப் பற்றிப் பிடியுங்கள். அவன் இதற்கு முன்னரும் (-முந்தைய வேதங்களிலும்) இதிலும் (-குர்ஆனிலும்) உங்களுக்கு 'முஸ்லிம்கள்' என்று பெயர் வைத்தான். காரணம், தூதர் (-முஹம்மத்) உங்கள் மீது சாட்சியாளராக இருப்பதற்காகவும் நீங்கள் மக்கள் மீது சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும் (அல்லாஹ் உங்களை தேர்ந்தெடுத்து, முஸ்லிம்கள் என்று பெயரிட்டான்). ஆக, தொழுகையை நிலைநிறுத்துங்கள்! இன்னும், ஸகாத்தைக் கொடுங்கள்! இன்னும், அல்லாஹ்வை உறுதியாக பற்றிப்பிடிங்கள்! அவன்தான் உங்கள் பொறுப்பாளன் ஆவான். ஆக, அவனே சிறந்த பொறுப்பாளன். இன்னும், அவனே சிறந்த உதவியாளன் ஆவான். (அல்குர்ஆன் 22 : 78)

இப்படியாக பல வசனங்கள் உள்ளன. அதாவது, அந்த அரபுகள் அல்லாஹ்வின் தூதரை நம்பிக்கை கொண்டு, அந்த நபி ﷺ அவர்களின் நல்ல நட்பையும் உயர்வான தோழமையையும் தேர்ந்தெடுத்தார்கள். அல்லாஹ்வின் தூதரை தங்கள் உற்ற நண்பராகவும், தோழராகவும், வழிகாட்டியாகவும், தலைவராகவும் ஆக்கி கொண்டார்கள்.

அந்த அழகிய நட்பை விட்டு அவர்கள் பிரியவில்லை. உள்ளூர், வெளியூர், பயணம், வழிபாடு, போர், சமாதானம், கல்வி சபைகள், மார்க்க பிரச்சாரங்கள், சொற்பொழிவுகள் என அனைத்திலும் அந்த நபியோடு தங்களை ஐக்கியமாக்கி கொண்டார்கள்.

உலக வரலாற்றில் உயர்ந்த நண்பருக்கும் அந்த உயர்ந்த நண்பரின் சிறப்பான தோழர்களுக்கும் உதாரணம் கூறுவது என்றால் நபி ﷺ அவர்களையும் அவர்களின் தோழர்களையும்தான் நாம் கூற முடியும்.

அரேபிய பாலைவனத்தில் ஆடுகளையும் ஒட்டகங்களையும் மேய்த்துக்கொண்டிருந்த, ஆடலும் பாடலும், மதுவும் மங்கையும் தான் வாழ்க்கை என்றிருந்த, வேட்டையாடுவதும், கொள்ளையடிப்பதும்தான் வாழ்வாதாரமும் பொழுதுபோக்கும் என்றிருந்த, கல்லிலும் மரத்திலும் செதுக்கப்பட்ட சிலைகளை ஆராதனை செய்து கொண்டிருந்த, அறிவாளிகளாக இருந்தும் சிலை வணக்க மூட நம்பிக்கைகளால் கடும் முட்டாள்களாக, மூடர்களாக, முரடர்களாக, உலக மக்களுக்கு முன்னால் நாகரீகம் அற்ற காட்டுவாசிகள் என்று அறியப்பட்டிருந்த அந்த அரேபிய சமுதாயத்தை உலகத்திலேயே நம்பர் ஒன் சமுதாயம் என்று சிறப்பின் உச்சத்திற்கு கொண்டு சென்றது அந்த உண்மையான நட்புதான்.

ஆம், அந்த உண்மையாளருடன் உண்மையான நட்பினால் அல்லாஹ் அவர்களை அப்படி மாற்றினான். அல்லாஹ்வின் பயம், உண்மை, நீதம், நேர்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, இறை வழிபாடு, குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை என அனைத்திலும் சிறப்பான முன்மாதிரியாக அந்த சமுதாயம் உலக அரங்கில் திகழ்கிறது என்றால் அதற்கு காரணம் நபி ﷺ அவர்களின் அந்த சிறப்பான நட்புதான்.

புத்தகங்களும் எழுத்துகளும் மனிதனுக்கு அறிவை கொடுக்க முடியுமே தவிர, ஒரு மனிதனை உருவாக்கவோ மாற்றவோ முடியாது. ஒரு மனிதனை மாற்றுகிற ஆற்றலை ஒரு மனிதனுக்குத்தான் அல்லாஹ் தந்திருக்கிறான். புத்தகங்களோடு சேர்த்து நல்ல ஆசிரியரும் தேவை. ஆகவேதான் அல்லாஹு தஆலா வேதங்களையும் இறக்கினான், தூதர்களையும் அனுப்பினான்.

நல்ல நூல்களும் தேவை, சிறந்த ஆசிரியரும் தேவை.

நூல்களிலேயே மிக உயர்வான நூல் குர்ஆன், ஆசிரியர்களின் மிக சிறந்த ஆசிரியர் நபி ﷺ அவர்கள். இந்த இரண்டையும் கிடைக்கப்பெற்ற ஸஹாபாக்கள் அந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி கொண்டார்கள். குர்ஆனை ஓதுவதும், மனனமிடுவதும், அதை சிந்திப்பதும், ஆராய்வதும், அதனைக் கொண்டு படிப்பினை பெறுவதும் அவர்களின் வாழ்க்கையில் முக்கிய வேலையாக இருந்தது.

பிறகு, தங்கள் உயிரினும் மேலான நண்பராகிய நபி ﷺ அவர்களின் தோழமையில் இருந்து அவர்களின் ஒவ்வொரு அமைதியையும் அசைவுகளையும் உன்னிப்பாக கவனித்து அதற்கேற்ப தங்களை மாற்றிக் கொண்டார்கள் அந்த தோழர்கள்.

நபி ﷺ அவர்களுக்கும் அவர்களின் தோழர்களாகிய ஸஹாபாக்களுக்கும் இருந்த அந்த நட்பை பற்றி பல ஆயிரம் பக்கங்கள் எழுதினாலும் அது குறைவுதான்.

இதை பற்றி சிந்தித்து அறிய இந்த ஒரு வசனம் போதுமானதாக இருக்கும். அல்லாஹு தஆலா கூறுகிறான்:

مُحَمَّدٌ رَسُولُ اللهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاءُ عَلَى الْكُفَّارِ رُحَمَاءُ بَيْنَهُمْ تَرَاهُمْ رُكَّعًا سُجَّدًا يَبْتَغُونَ فَضْلًا مِنَ اللهِ وَرِضْوَانًا سِيمَاهُمْ فِي وُجُوهِهِمْ مِنْ أَثَرِ السُّجُودِ ذٰلِكَ مَثَلُهُمْ فِي التَّوْرَاةِ وَمَثَلُهُمْ فِي الْإِنْجِيلِ كَزَرْعٍ أَخْرَجَ شَطْأَهُ فَآزَرَهُ فَاسْتَغْلَظَ فَاسْتَوَىٰ عَلَىٰ سُوقِهِ يُعْجِبُ الزُّرَّاعَ لِيَغِيظَ بِهِمُ الْكُفَّارَ وَعَدَ اللهُ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ مِنْهُمْ مَغْفِرَةً وَأَجْرًا عَظِيمًا ○

முஹம்மத் (அவர் மீது அல்லாஹ்வின் அருள் நிலவுக!) அல்லாஹ்வின் தூதர் ஆவார். அவருடன் இருப்பவர்கள் நிராகரிப்பாளர்கள் மீது கடினமானவர்கள், தங்களுக்கு மத்தியில் கருணையாளர்கள் ஆவர். (தொழுகையில் குனிந்து) ருகூஃ செய்தவர்களாக; (சிரம் பணிந்து) சுஜூது செய்தவர்களாக அவர்களை நீர் காண்பீர். அவர்கள் அல்லாஹ்வின் அருளையும் பொருத்தத்தையும் விரும்புகிறார்கள். அவர்களின் தோற்றம் அவர்களின் முகங்களில் சுஜூது (-சிரம் பணிந்து வணங்குவது) உடைய அடையாளமாக இருக்கும். இது தவ்ராத்தில் கூறப்பட்ட அவர்களின் தன்மையாகும். இன்னும், இன்ஜீலில் கூறப்பட்ட அவர்களின் தன்மையாவது, (நெல், கோதுமை போன்ற) ஒரு விளைச்சலைப் போலாகும். அது (-அந்த விளைச்சல்) தனது (செடியின்) காம்பை வெளியாக்கியது. இன்னும், அதைப் பலப்படுத்தியது. பிறகு அது தடிப்பமாக ஆனது. அது தனது தண்டின் மீது உயர்ந்து நின்று,

விவசாயிகளை கவர்கிறது. (இப்படித்தான் நம்பிக்கையாளர்களை) அவர்கள் மூலமாக நிராகரிப்பாளர்களுக்கு ரோஷமூட்டுவதற்காக (அல்லாஹ் ஓங்கி உயரச் செய்வான்). நம்பிக்கை கொண்டு நன்மைகளை செய்த அவர்களுக்கு அல்லாஹ் (தனது) மன்னிப்பையும் மகத்தான கூலியையும் வாக்களித்தான். (அல்குர்ஆன் 48 : 29)

அப்படித்தான் தாபியீன்கள், ஸஹாபாக்களின் நட்பையும் தோழமையையும் பெற்று உயர்வடைந்தார்கள். உலக வரலாற்றில் யாரெல்லாம் சிறந்த முன்னோடிகளாக உருவானார்களோ அவர்களின் உருவாக்கத்தில் அவர்களின் ஆசிரியர் முக்கிய பங்கு வகிப்பார். அதாவது அந்த ஆசிரியரின் நட்பினால் அல்லாஹ் அவர்களை அப்படி உருவாக்கினான். அப்படித்தான் அல்லாஹ் உலக நியதியை ஆக்கி இருக்கிறான்.

கண்டிப்பாக நல்ல நட்பு சிறந்த பலனை கொடுக்கும்.

நல்ல நட்பு நம்மை உருவாக்கும்.

நல்ல நட்பு நம்மிடம் நல்ல பழக்கங்கள் உருவாகவும் வளரவும் காரணமாக இருக்கும்.

நல்ல நட்பினால் நாம் நம்மில் நிறைய நல்ல மாற்றங்களை கொண்டு வரலாம்.

நல்ல நண்பர்கள் மூலம் நமக்கு நல்ல ஆலோசனைகள் கிடைக்கலாம். நமது தேவைகளுக்கு நல்ல உதவிகளை அவர்கள் மூலம் நாம் அடைய பெறலாம். நாம் சோர்வுறும்போது அவர்கள் நம்மை உற்சாகப்படுத்துவார்கள். நாம் கவலையுறும்போது அவர்கள் நமக்கு ஆறுதல் சொல்வார்கள். நாம் வழி பிசகும்போது அவர்கள் நம்மை நல்வழிபடுத்துவார்கள். நமக்கு நெருக்கடிகள் ஏற்படுகிறபோது அவர்கள் நமக்கு உதவுவார்கள்.

நல்ல நண்பர்கள் நமது அறியாமையை போக்குவார்கள்!

நல்ல நண்பர்கள் நமக்கு நல்லொழுக்கத்தை சொல்லி தருவார்கள்.

நல்ல நண்பர்கள் நாம் அல்லாஹ்வை மறக்கும்போது நமக்கு அல்லாஹ்வை நினைவூட்டுவார்கள்.

நல்ல நண்பர்கள் நாம் நீதம் தவறும்போது நமக்கு நீதத்தை ஏவுவார்கள்.

நல்ல நண்பர்கள் நாம் மார்க்கத்தை மீறும்போது நம்மை கரம்பிடித்து தடுத்து நேர்வழியின் பக்கம் அழைத்து செல்வார்கள்.

நல்ல நண்பர்களின் நட்பு நம்மை கெட்ட பழக்கங்களில் இருந்து தடுக்கிறது.

நல்ல நண்பர்களின் நட்பு நம்மை அனாச்சாரங்களில் இருந்தும் பாவங்களில் இருந்தும் தடுக்கிறது.

நல்ல நண்பர்களின் நட்பு நமக்கு அமல்களில் உற்சாகத்தையும் மார்க்கத்தில் பற்றையும் ஸுன்னாவில் பிடிப்பையும் ஏற்படுத்துகிறது.

மேற்கூறப்பட்ட நன்மைகளுக்கு எதிராக என்னென்ன தீமைகள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் தீய நட்பின் விளைவுகளாகும் என்பதை மறந்து விட வேண்டாம்.

நட்பை பற்றி அல்லாஹ் கூறுகிற ஒரு வசனத்தையும், ஒரு நபிமொழியையும், இமாம் ஷாஃபியி அவர்களின் ஒரு கவிதையையும் எடுத்துக் கூறி இந்த அமர்வை நிறைவு செய்வோம்.

அல்லாஹு தஆலா கூறுகிறான்:

الْأَخِلَّاءُ يَوْمَئِذٍ بَعْضُهُمْ لِبَعْضٍ عَدُوٌّ إِلَّا الْمُتَّقِينَ ○

இறையச்சமுள்ளவர்களைத் தவிர நண்பர்கள் எல்லாம் அந்நாளில் அவர்களில் சிலர், சிலருக்கு எதிரிகளாக இருப்பார்கள்.

(அல்குர்ஆன் 43 : 67)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

مَثَلُ الْـجَلِيسِ الصَّالِحِ والْـجَلِيسِ السَّوْءِ كَمَثَلِ صَاحِبِ الْمِسْكِ وكِيرِ الْـحَدَّادِ لَا يَعْدَمُكَ مِنْ صَاحِبِ الْمِسْكِ إِمَّا تَشْتَرِيهِ أَوْ تَـجِدُ رِيحَهُ وَكِيرُ الْـحَدَّادِ يُـحْرِقُ بَدَنَكَ أَوْ ثَوْبَكَ أَوْ تَجِدُ مِنْهُ رِيحًا خَبِيثَةً

நல்ல நண்பனுக்கும் கெட்ட நண்பனுக்கும் உதாரணமாவது, கஸ்தூரி வியாபாரி இன்னும் கொல்லனின் துருத்தியின் உதாரணமாகும். கஸ்தூரி வியாபாரியிடமிருந்து உனக்கு இழப்பு இல்லை. நீ அவனிடமிருந்து அ(ந்த நறுமணத்)தை வாங்கலாம். அல்லது அதன் நறுமணத்தை நீ அடையலாம். கொல்லனின் துருத்தியோ உனது உடலை அல்லது உனது ஆடையை எரித்து விடும். அல்லது கெட்ட துருவாடையை நீ அவனிடமிருந்து அடைவாய்.[89]

இமாம் ஷாஃபியி ரஹ் கூறுகிறார்கள்:

89. அறிவிப்பாளர்: அபூ மூஸா அல் அஷ்அரீ ரழி, நூல்: ஸஹீஹுல் புகாரி, எண்: 2101.

أُحِبُّ الصَّالِـحِينَ وَلَسْتُ مِنْهُم *** لَعَلِّي أَنْ أَنَالَ بِهِمْ شَفَاعَةً

وَأَكْرَهُ مَنْ تِـجَارَتُهُ الْمَعَاصِي *** وَلَوْ كُنَّا سَوَاءً فِي الْبِضَاعَةِ

நான் நல்லவர்களோடு இருக்க விரும்புகிறேன். நான் அவர்களில் உள்ளவன் இல்லை என்றாலும். அவர்களின் வாயிலாக நான் சிபாரிசை அடையலாம். யாருடைய வியாபாரம் பாவங்களாக இருக்கிறதோ அவரோடு இருப்பதை நான் வெறுக்கிறேன். நாங்கள் எல்லாம் சாமான்களில் சமமானவர்களாக இருந்தாலும் சரியே.

அல்லாஹ்வே! எங்களுக்கு நல்லோர், உண்மையாளர்கள், வணக்கசாலிகள், தக்வா உடையோர், மார்க்க பற்றுடையவர்கள், ஸுன்னாவின் நேசர்கள் உடைய நல்ல நட்பை தா! எங்களையும் நல்லவர்களாக ஆக்கி வை! எங்களை நல்லவர்களுடன் ஆக்கிவை! ஆமீன்!

# தாருல் ஹுதாவின் வெளியீடுகள்.

## அல்குர்ஆன்

1. அல்குர்ஆன் அரபி 15 lines (Executive Hard bound,Paper 40gsm, Size 14x21cm) 275
2. அல்குர்ஆன் அரபி 15 lines (Executive Hard bound, Paper 60gsm, Size 18x24cm)400
3. அல்குர்ஆன் அரபி Mushaf Uthmani Print 15 lines (Executive Hard bound, Paper 60gsm,Size 18x24cm) ........ 350
4. அல்குர்ஆன் அரபி 13 lines (Executive Hard bound, Paper 60gsm, Size 18x24cm) 500

## தமிழ் புத்தகங்கள்

1. தொழுகை முறை ........ 15
2. நோன்பு ........ 15
3. இறைவனுக்கு உருவம் கொடுக்க முடியுமா? ........ 10
4. ஹிஜாப் - முஸ்லிம் மங்கையரின் மேன்மை ........ 15
5. திருமண வாழ்த்து, காலை மாலை திக்ருகள், இஸ்திகாரா துஆ ........ 15
6. ஸகாத் - வழிமுறைகள், சட்டதிட்டங்கள் ........ 20
7. இறைமார்க்கம் இறைவேதம் ஓர் அறிமுகம் ........ 30
8. இயேசுவின் அழைப்பு ........ 20
9. அல்குர்ஆன் துஆக்கள் ........ 20
10. இஸ்லாமியக் கொள்கை. வினா - விடைகள் ........ 30
11. தடுக்கப்பட்டவை ........ 20
12. இறைநெறி கூறும் இயற்கைக் கடமைகள் ........ 20
13. இறுதிப் பேருரை (முழுத் தொகுப்பு) ........ 30
14. நம்பிக்கையின் அடிப்படைகள் ........ 30
15. குர்ஆன் ஹதீஸ் கூறும் பிரார்த்தனை ........ 30
16. தூய திருகலிமா ........ 30
17. ஒரு தெய்வமா? பல தெய்வமா? ........ 40
18. இல்லங்களை அச்சுறுத்தும் அபாயங்கள் ........ 40
19. அழைப்புப்பணி - அழைப்பாளர் ........ 40
20. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ கொள்கைகள் ........ 40
21. இஸ்லாமிய ஒளியில் குழந்தை வளர்ப்பு ........ 40
22. மூன்று அடிப்படைகள் ........ 40

23. அலட்சியமாகக் கருதப்படும் ஆபத்தான குற்றங்கள் ........................ 60
24. அன்றாடம் கடைப்பிடிக்க 1000 சுன்னத்துகள் ........................ 40
25. வஸிய்யத்தீ ........................ 40
26. உம்ரா வழிகாட்டி (ஆர்ட் பேப்பர் 18x12 cm) ........................ 40
27. குர்ஆன் ஹதீஸ் கூறும் துஆக்கள் ருக்யாக்கள் (10.5x14 cm) ........................ 40
28. கண்ணியமிகு குர்ஆன் சூரா 39 முதல் இறுதி வரை ........................ 40
29. கவலைப்படாதே! ........................ 50
30. லும்அத்துல் இஃத்திகாத் ........................ 50
31. ஹதீஸ் கலை இமாம்களின் கொள்கை ........................ 50
32. அத்தவ்ஹீத் ........................ 60
33. ஸகாத் - ஃபிக்ஹ் ........................ 60
34. இயற்கை மதம் ........................ 60
35. ஹிஸ்னுல் முஸ்லிம் (மஸ்னூன் துஆக்கள்) ........................ 60
36. இஸ்லாமின் இறைக்கோட்பாடு ........................ 60
37. மீளாப்பயணம் (ஜனாஸாவின் சட்டங்கள்) ........................ 60
38. இப்னு தைமிய்யா வாழ்க்கை வரலாறு ........................ 80
39. தஃலீமுல் குர்ஆன் (தஜ்வீது வழிகாட்டி) ........................ 80
40. நபியவர்களின் சரியான தொழுகை முறை ........................ 60
41. வெற்றிக்கு வழி ........................ 60
42. முஸ்லிம் பெண்மனியின் நற்குணங்கள் ........................ 80
43. அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ உடைய அகீதா ........................ 70
44. ஹஜ். உம்ரா வழிகாட்டி ........................ 75
45. அழைப்புப் பணி கேள்வி-பதில் ........................ 80
46. முன்மாதிரி முஸ்லிம் குடும்பம் ........................ 80
47. ரஹ்மத்தான ரமழான் ........................ 80
48. அத்தஹாரா - தூய்மை - ஃபிக்ஹ் ........................ 80
49. நோன்பு - ஃபிக்ஹ் ........................ 80
50. ஹிஸ்னுல் முஸ்லிம் (21x14 cm) ........................ 80
51. அல்அகீதத்துல் வாஸிதிய்யா ........................ 80
52. முன்மாதிரி முஸ்லிமின் நற்குணங்கள் ........................ 80
53. இஸ்லாமின் பார்வையில் மத நல்லிணக்கம் ........................ 80
54. இரு ஸஹீஹிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்புமிகு நபிமொழிகள் ........
55. முன்மாதிரி முஸ்லிம் ........................ 100

56. சான்றோர்கள் பாடசாலை (பாகம் 1) .................................................. 100
57. ஹஜ் - ஃபிக்ஹ் .................................................. 100
58. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (21x14 cm Single Colour) .................. 100
59. இஸ்லாமில் சொத்துரிமை சட்டங்கள் .................................................. 100
60. அல்குர்ஆன் பாக்கியம் நிறைந்த வேதம் .................................................. 100
61. ஹாஇய்யாஹ் (கவிதை தொகுப்பு) இமாம் அபூ தாவூத் .................................................. 110
62. தப்சீர் முதல் ஜுஸ்வு .................................................. 120
63. இறைத்தூதரின் தூய வரலாறு .................................................. 150
64. அல்குர்ஆன் விரிவுரையின் சில அடிப்படைகள் - உஸைமீன் .................. 130
65. இஸ்லாம் நீங்கள் அறியவேண்டிய மார்க்கம் .................................................. 150
66. உலக முடிவு .................................................. 150
67. தொழுகை - ஃபிக்ஹ் .................................................. 150
68. ஷர்ஹுஸ் ஸுன்னா .................................................. 160
69. சான்றோர்கள் பாடசாலை (பாகம் 2) ..................................................
70. மகிழ்ச்சியான வாழ்க்கை அன்பான குடும்பம் .................................................. 100
71. இஸ்லாமிய சிறப்பு கல்வி வகுப்பு .................................................. 200
72. முன்மாதிரி முஸ்லிம் பெண்மணி .................................................. 230
73. இல்முத் தஜ்வீத் .................................................. 290
74. அழகிய துஆக்கள் மற்றும் ருக்யாக்கள் (14x21 cm Full Colour) .................. 250
75. அர்ரஹீக் அல்மக்தூம் (18x24 cm) .................................................. 350

# அல்குர்ஆன் தமிழாக்கங்கள்

1. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான் (Hard Bound 60 gsm) .............. 450
2. தர்ஜமதுல் குர்ஆன் பி அல்தஃபில் பயான் (Hard Bound 60 gsm) .............. 400
4. மகத்துவமிகு குர்ஆன் மாண்புமிகு தமிழாக்கம் (Hard Bound) .................. 500
5. தெளிவுமிகு குர்ஆன் தெவிட்டாத தமிழாக்கம் (HB 28 gsm, 18x12cm) ............ 260
6. மேன்மைமிகு குர்ஆன் எளிமைமிகு தமிழாக்கம் .................................. 300
7. இறைவேதம் அல்குர்ஆன் தமிழாக்கம் (Soft Bound) .................................. 250
8. சங்கைமிகு குர்ஆன் சிறப்புமிகு தமிழாக்கம் (Hard bound) ........................ 240
9. கண்ணியமிகு குர்ஆன் இனிமைமிகு தமிழாக்கம் (Soft Bound) .................. 250

10. உயர்வுமிகு குர்ஆன் உன்னத தமிழாக்கம் (Hard Bound 28 gsm)............... 150

11. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 1......................... 450
(அல் பாதிஹா (01) முதல் அத் தவ்பா (9) வரை)

12. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் - பாகம் 2 ...................... 450
(சூரா யூனுஸ் (10) முதல் அல் அன்கபூத் (29) வரை)

13. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் பாகம் 3 ....................... 450
(சூரா அர்ரூம் (30) முதல் அந்நாஸ் (114) வரை)

14. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (அம்ம ஜூஸ்வு) ............ 100

15. அல்குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கம் (ஆலு இம்ரான்)............... 30

# ENGLISH BOOKS

1. The Ideal Husband & The Ideal Wife........................................................ 70
2. 33 Ways Developing Inner Fear.................................................................. 40
3. 40 Guidelines & Dangers That Threaten..................................................... 50
4. Situations & Questions - Answers.............................................................. 25
5. Prohibited & Problems And Solutions........................................................ 45
6. Aqeeda Attawheed..................................................................................... 25
7. The True Message of Jesus Christ............................................................... 50
8. Fortification of The Muslim........................................................................ 100
9. Funeral Rites In Islaam .............................................................................. 60
11. Gateway To Arabic, Starter Book, (1-5 Parts) each book............... 120
12. Search for Happiness ................................................................................ 70
13. What Must Be Known About Islaam? ....................................................... 150
14. The Sunnah Out Spread Flags of... ........................................................... 90
16. The Ideal Muslim...................................................................................... 160
17. Ideal Muslimah ........................................................................................ 300
18. Noble Quran in The English Language ..................................................... 400
19. Arraheeq Al Makhtoom............................................................................. 300
20. About Islam............................................................................................... 100

21. Glorious Quran ........................................................................................ 200
22. Precious Invocations and Ruqyas (21x14 cm)................................... 250
23. Dua and Ruqya from Quran and Sunnah (10.5x14 cm)..................... 40
24. The Quran with English Meanings and Notes.................................. 400
25. English Meanings and Notes of The Quran ...................................... 250

## தமிழ் இஸ்லாமிய போஸ்டர்கள்

1. நல்லுறவு மலர ........................................................................................ 40
2. அல்குர்ஆன் கூறும் வாழ்வியல் அறிவுரை ................................................ 40
3. நாவைப் பேணுக ....................................................................................... 40
4. நீங்கள் வணங்கத் தகுதியான இறைவன் யார்? ......................................... 40
5. அல்லாஹ் நேசிக்காத கூட்டங்கள் ............................................................. 40
6. இறுதிப் பேருரை (சிறியது) ....................................................................... 40
7. மீளாப் பயணம் ......................................................................................... 50
8. இறுதிப் பேருரை (பெரியது) ...................................................................... 70

## ENGLISH ISLAMIC POSTERS

1. Mind your Tongue.............................................................................. 30
2. Journey of no Return ......................................................................... 40

## ARABIC SCHOOL BOOKS

1. LKG Text Book ................................................................................ 130
2. LKG Work Book ................................................................................ 90
3. UKG Text Book ................................................................................ 130
4. UKG Work Book ................................................................................ 90
5. 1st Text Book .................................................................................... 170
6. 1st Work Book .................................................................................... 90
7. Nafahaatul Eeman............................................................................. 170
8. Nafahaatul Eeman Work Book ........................................................... 30
9. 2nd Std Text Book ............................................................................. 250
10. Hand Writing Ruk'a ........................................................................... 40

11. Hand Writing Naskh New........ 60
12. Colouring Book........ 50

## AALIMA COURSE ENGLISH BOOK

1. A Concise Biography of the Prophet ﷺ And His Special Traits........ 125
2. An Introduction to Tajweed........ 130
3. Aqidah Quiz........ 90
4. Learn How to Read Al-Quran........ 185
5. Muhammad Truly is the Prophet ﷺ of Allah........ 215
6. My Prayer the 2nd Pillar of Islam........ 150
7. Qasasun-Nabi........ 525
8. Rights and Duties in Islam........ 150
9. Riyadhus Saliheen........ 735
10. Tafsir of Suratul Fatihah........ 120
11. Tafsir Juz Amma........ 310
12. Tawheed........ 215
13. Fortress of the Muslim........220
14. The Daily Traditions and Supplications of the Prophet ﷺ........240
15. The Pillars of Faith........100
16. The Tenets of Faith........170
17. The Three Fundamental Principles........ 90
18. Treasures of Arabic morphology........495
19. Your Tajweed Made Easy........100

Bank Account Details

**Indian Bank |** A/c Name: **DARUL HUDA** | Current A/c No. **6724227449 |** Branch: Mannady | IFS Code: IDIB000M016

**Gpay & Phonepe No. 98401 74121**